கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்

வைத்தியநாததேசிகர்

இயற்றிய

இலக்கணவிளக்கம்

மூலமும் உரையும்.

இஃது

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பலதேசப்பிரதிகளுபங்களைக்கொண்டு பரிசோதித்து

மதுரைஜில்லா போடிநாயக்கனூர் ஜமீன்தார்

ம - ரா - ரா - ஸ்ரீ

ருமவலபோடயகாமராசயபாண்டிய

நாயக்கர் துரையவர்களின்

காருண்யோபகாரதிரவியசகாயத்தினால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிஸ்ரு புரட்டாதிமீ.

இதன்விலை ரூபா-டு.

(*Copyright Registered.*)

ஆசிரியர் சிறப்பு.

“ஐம்பதின்மர்சங்கத்தாராகிவிடாரோநாற்பத
தொன்பதின்மரென்றேயுரைப்பாரோ— இமயப்புகழ்
வனமீகநாதனருள்வைத்தியநாதன்புடவி
நனமீதுநாடரிதக்கால்.”

கவிவீரராகவமுதலியார்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

உ

கணபதி துணை.

இலக்கணவிளக்கப்பதிப்புரை.

திங்கள் டங்கிய செஞ்சடை முடியினன் திருத்தாட்
பங்கயங்கயி லாயகா தனிமுனிப் பழிச்சிச்
சங்கமங்களத் தமிழ்முத்துக் குமாரன்றண் மலர்ப்பா
தங்கள் வங்கமாத் தமிழ்க்கட லிடைப்படி குவனே.

முத்தமிழ் வாணர்தம்
வித்தக வடியிணை
சித்தமெய் மொழிகளில்
வைத்து வாழ்குவனே.

பூமிசைத் தென்மலைப் புங்கவன் புகன்ற-சீர்மிகும் அக
த்தியம் பார்மிசை இறந்துபட்டதாதலின், அன்னோன்
மாணாக்கர் பன்னிருவருட் தலைமைபெற்ற திரணதூமாக்
கினியென்னும் இயற்பெயரினையுடைய தொல்காப்பியமகா
ரிஷி அவ்வகத்தியகத்தின்வழித் தந்தருளிய தொல்காப்பி
யமே மதுரைக்கடைச்சங்கத்தார் காலந்தொட்டு ஐயாயிரவ
ருஷமாகத் தமிழுக்கு ஆதாரமான பேரிலக்கணமாயுள்ளது.
அது மிக ஆழியதோர் கடலனையது. ஆதலாற் கற்றுவல்
லோர்க்கன்றி மற்றையோர் அறிதற்கு அரியதாயிற்று. அது
கொண்டு சிறுவர்முதலியோர் இலக்கணம்பயிறற்கு உபயோ
கமாகப் பவணந்தியாதியோர் பலரும் நன்னூல் சின்னூல்
காரிகையென்றின்னன சிற்றிலக்கணநூல்கள் பல செய்வா
ராயினர். அவை பெரும்பாலுந் தமிழ் நன்கறிதற்கு இன்றிய
மையாத ஐந்து இலக்கணங்களையும் முற்றக்கூறாது ஒன்
றொன்றை ஒன்றிரண்டு மாத்திரம் உணர்த்தாகின்றன. சிறு
பான்மை வீரசோழியம் போன்றன ஐந்தும் எடுத்துக்கூறின
வேனும் மிகச்சுருங்கியவாய்க் கற்போர்க்கு வேண்டிய அளவு

இலக்கணஞானங் கொடாமையிற் பெரும்பான்மை தருவனவல்லவாயின. இவ்விருதிறத்தனவும் போலாது பஞ்சலக்ஷணமும் மாணாக்கர்க்குப் போதுமான அளவு செறிந்தது இலக்கணவிளக்கமொன்றே. இதன்மகிமை இதற்குச் சான்றோரால் வழங்கிவருங் "குட்டித்தொல்காப்பியம்" என்னும் பெயரானே இனிது விளங்கும்.

இந்நூல் மூலமும் உரையுமாகச் செய்தவர், மன்னார்குடித் தாலூகாவிலுள்ள ஆதித்தேச்சரத்திற்கு அணித்தான திருக்களில இப்பொழுது அதிவயோதிபராயிருக்கின்ற ஸ்ரீமத் சூரியமூர்த்தி தேசிகரைத் தமக்கு ஆறுவது சந்ததியாக உடையவரும், இற்றைக்கு உரு0 வருஷத்தின்முன் சத்தவிடங்கத் திவ்வியக்ஷேத்திரங்களில் முதன்மையுடைத்தாகிய திருவாரூரின்கண், அவ்வூர் அபிஷேகத்தர் பரம்பரைச் சிறப்புற்றோங்கிய ஸ்ரீவன்மீகநாததேசிகர் குமாரருமாகிய வைத்தியநாததேசிகர். இராமநாதபுரத்தில் கஉ அரு-ம் ஆண்டுமுதல கஎஉ-ம் ஆண்டுவரையும் அரசுபுரிந்த இரகுநாத சேதுபதியின் சமஸ்தானவித்துவானை படிக்காசுப்புலவர் இக்நூலாசிரியரிடங் கல்விகற்றவராதலானும், சற்றேறக்குறைய கஅ0 வருஷத்தின்முன் நன்னூல விருத்தியுரை இயற்றிய சங்கரநமச்சிவாயபுலவரது இயற்றமிழாசிரியராகிய சாமிநாததேசிகர் இவர்காலத்துச் சிறுவயதினராயிருந்தமையானும், இவர்காலம் இற்றைக்கு உரு0 வருஷத்தின் முன்னென்பது போதரும்.

நூற்கு உரையும் பாயிரமும் அணியியலிற் சொல்லணிச்சூத்திரங்களும் வைத்தியநாததேசிகருடைய புதல்வர் ஐவருள் மூத்தவராகிய சதாசிவதேசிகரால் இயற்றப்பட்டன எனக் கூறுவாருமுளர். ஆயினும் ஆசிரியரை நேரிலே பார்த்து அறிந்தவரும் மகாவித்துவானுமாகிய ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ தேசிகசுவாமிகள் தமது இலக்கணக்கொத்தில் ஒருசூத்திரத்தினகத்தில் தாமே தமது நூற்கு உரைபெறுதற்கு மேற்கோளாக "என்கண் காணத்—திருவாரூரிற் றிருக்கூட்டத்திற்—றமிழ்க்கிலக்கா

கிய வைத்தியநாத—னிலக்கணவிளக்கம் வகுத்துரையெழு தினன்" எனக் கூறுமாற்றானும், "பொருளணி சொல்லணி யெனவலங் கார—மிருவகை தெரியா னியலு மென்ப." என நிறுத்திபபுகுந்து பொருளணி உணாததிய ஆசிரியா நிறுத்த முறையானே சொலலணியும ஒருவாறுவது உணர்த் தாதொழியாராகலானுஞ், சதாசிவதேசிகா சொலலணிச்சூ த்திரங்களுட சிலவும பாயிரமும மாததிரமே செய்தவென் றும இலக்கணவிளக்கம மூலமும உரையுமாகவே ஆசிரிய ரால இயற்றபபட்டதெனறுங் கொள்வதே தகுதி. சொலல ணியகத்துத் தநதையாரசூத்திரமிவை மைநதனரசூத்திர மிவையெனப பகுததறிய ஏதியாதுங் காணகிலேம.

இத்தூற் பாட்டியல வைத்தியநாததேசிகா இயற்றிய தன்று. யாபபிலக்கணஞ் செய்தார பிறரனேகர்போல இவ ரும அதனற் பெருமபயனின்றெனற கூறுதொழிநதனர போலும. ஆயினும அஃதிலைத்தாரா குறைவை அவரது இரணடாவது புத்திராகிய தியாகராசதேசிகா நிவிர்த்தி செய்தனரா பாட்டிபல செப்தாரதியாகராசதேசிகரென்பது தூற்பாயிரம புனைநதருளிய சதாசிவதேசிகர் குமாரரா தியா கராசதேசிகா எழுதிய பதிகச்செய்புளான் அறிக. இதனற் பாட்டியலுடையார தாமது தூலுக்குத் தாமே பதிகம்பாடின வரல்லரென்பதூஉம ஓரபெயரானாயினும இருவரும வே றென்பதூஉம பதிகத்தாற்ரு பாட்டியலுடையார் சிறிய தந்தையென்பதூஉம உணாக.

நமதாரியா வழிரய முன்னும பின்னும பலதலைமு றையாகப் பொபெற்ற வித்துவான்களாற் சிறப்புற்றதோர் வமிசமேயாம. வைத்தியாததேசிகா தநதையாகிய வன்மீ கநாத தெசிகா தமது பாலனமையாற் பரிசுபெற்றதூஉமும பேட்டை மாலியமும உப்பளமும நாளதுவரைக்கும் சுந்தரியார அனுபவித்துவருகினறனர்கள். வைத்தியநாததே சிகர் கல்வித்திறனமைக்கு இநநூலின் வேறு சான்று வேண டா. அவர் மலையாளத்திராசாவின் பேரிற் சிலபிரபந்தம

பாடி அவ்வரசனுற் கிராமங்களுஞ் சன்மானங்களும் அளிக்கப்பெற்றதும், அவை அரங்கேற்றிய ஞான்று

ஓதும்பிரபந்தங்களொருகோடிகுமிஷத்துரைக்குப்பிரசண்டவாக்கி
உத்தண்டவமிர்தரசசித்திரவித்தாரகவியுபயகவிராசராசன்
போதும்பசுந்தமிழ்ப்பலகையுங்குடிபுகப்புலமகளெனுங்குமாரி
புதுநலந்தனேதுகர்ந்தவனுயிராகிலுன்புலமையைவழுத்தவசமோ
காதுங்கடுங்கொலைப்பாகடுங்கடதடக்களியானையரசவெள்ளங்
களிகவைப்பரணிமடலந்தாதிதூதுலாக்காதல்செயவோதவல்லாய்
மோதுந்தனிக்கொற்றவாயிலாய்மூதண்டமுழுதுஞ்பரந்தகீர்த்தி
முருகுகமழ்தருகமலைவருவைத்தியநாதகுரு முத்தமிழ்க்கவிராசனே.

என அவ்வரசசபையாராற் துதிக்கப்பட்டதும் உலகறியாததல்ல. இந்நூலன்றிப் பல பிரபந்தங்களும் அவரால் இயற்றப்பட்டுள்ளன. மேலும் இவர்கல்வித்திறமையை அவாகாலத்து வித்துவான்களில் ஒருவராகிய கவிவீரராகவமுதலியார் சொல்லிய

"ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோகாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பாரோ—இப்பாபுகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதந் நாட்சரித்தக் கால்."

எனனும் வெண்பா நன்கு புலப்படுத்தும்.

அவர் மாணாக்கரில் ஒருவராகிய படிக்காசுப்புலவர் ஒருகாற் செம்மற்பட்டிக் காடுவழியாகத் தமது குருபுத்திரா சதாசிவநாவலரைக் காணவந்தபோது அச்சதாசிவதேசிகர் மாணாக்கரிலர் வனத்திற் தூதுளங்காய் பறிக்கையிற் காரிகையைப் பாராயணஞ் செய்து கொண்டிருந்த சத்தத்தைக் கேட்டு வியப்புற்று வந்து

"கூடுஞ்சபையிற் கவிவாரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ்சதாசிவ சற்குருவேமுன்னுன் றந்தைதம்மாற்
பாடும்புலவர்க ளாணைமின்றிச்செம்மற் பட்டியெங்கும்
காடுஞ்செடியுமென்னே தமிழ்க்காரிகை கற்றதுவே."

என்று கொண்டாடினர்.

பாட்டியல் செய்த தியாகராசதேசிகர் இன்னோர் இள வலென்பது முன்னர்ச் சொன்னேம். இவர் தம்பி சிதம்பர தேசிகர் சிவஞான சித்தியாருக்கு ஓர் சிறந்த பொழிப்புரை செய்திருக்கின்றனர்.

சதாசிவதேசிகர் மகன், பதிகச்செய்யுள் பாடிய தியாக ராசதேசிகர் திருமுல்லைவாயிற்புராணம், தேவையந்தாதி, காழியந்தாதி முதலியன இயற்றி இராமநாதபுரத்தில் மந்திரி யாயிருந்த தாமோதரம்பிள்ளையினுற் சூரியகோட்டைக்கிரா மம் பரிசுபெற்றும், விஜய அருணசல வணங்காமுடியார்பே ரிற் கோவையும் உலாவும் பாடித் தண்டிகைவரிசையும் மர வனேந்தல் முதலிய மூன்றுகிராமமும் பரிசு பெற்றும் மிகச் சிறப்புற்றிருந்தனர்.

இவர்குமாரர் சதாசிவதேசிகர் அவர்காலத்திற் ஸ்ரீகை லாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தில எழுந்தருளி யிருந்த மகாசந்நிதானத்தின்முன் கேட்டோர் யாவரும் அதி சயிப்ப ஒரு பெருமவித்வப்பிரசங்கஞ் செய்தபோது ஆண்டி ருந்த இலக்கணம் அம்பலவாணத்தம்பிரானுல்

> "வன்மீக நாதன் வரத்தா லவதரித்த
> வன்மீக நாதன் மரபினேன்—வன்மீகர்
> தாமோர் தமிழருவாய்ச் சார்ந்த சதாசிவனே
> யாமோ புகழவல்லே மீண்டு."

எனத்துதித்து மதிக்கப் பெற்றவர். இவர்புத்திரனுகிய வன்மீகநாததேசிகருடைய பிள்ளையே இப்பொழுது திருக்க ளரூரில் இருக்கும் ஸ்ரீமத் சூரியமூர்த்திதேசிகர். இவ்வரு ஷம் இவர்க்கு எஎ வயதும் இவர் தனயன் ஸ்ரீசண்முகதேசி கருக்கு ஈஎ வயதும் நடக்கின்றது. இவர்களும் இருபெய ரும் தமிழ்நன்குகற்ற வித்துவான்களாகவே இருக்கின்றூர் கள். ஒருகால் அவ்வூர் மிராசுதார் ஸ்ரீ சிங்காரசமுதலியார் பெருமையைக் குறிப்பிட்டுத்

> "தேடிநிதி யங்கொடுக்குஞ் செல்வரைப்பார்த் தெள்ளளவும்
> பாடிப் படிக்கப் படியாதே—நீடுபுகழ்

வாச மலர்த்தடஞ்சூழ் வண்களர்வாழ் வாஞ்சீ
வாச னெனச்சொன்ன வாய்.''

என்று துதித்தவர் இச்சூரியமூர்த்தி தேசிகரேயாம்.

படிக்காசுப்புலவர் இந்நூலாசிரியர்க்கு மாணாக்கராகவே, இராமநாதபுரத்தில் ககுஅடு-ம் ஆண்டுவரையும் அரசாண்ட சேதுபதிபேரால ஒருதுறைக்கோவை பாடிய அமிர்தகவி ராயருங் கவிவீரராகவமுதலியாரை ஒப்ப இந்நூலாசிரிய ரோடு ஒருகாலத்தவரென்று கொள்ளல் தவறுகாது.

முதலில் இவர் நன்னூலிற்குச் சைனமுனிவருரை தக்க உரையல்லவென்று கண்டு தாமோர் உரையெழுதுவா ராயினர். பின்னர் அதிற் பல இடங்களில் நன்னூலாரோடு தம்மதம் மாறுபட்டமையால் இந்நூலை இயற்றத் தொடங்கி னர். அவ்வாறியற்றுவான்புகுந்தவர் நன்னூல்போல எழுத் துச்சொல்லிரண்டோடும் முடியாது உலகிற்குப் பெருமப யன்பட ஐந்திலக்கணமும் முற்றுப்பெறச் செய்தனர். முற் றுப்பெற்றுமென்? அச்சின்வாய்த் தோற்றுமையாற் கற் போர்க்குக் கிடைத்தற்கரிதாகி அதனுலை அடையற்பால தாம் பயனை உலகம பெறுமற் போகத்தக்கதாய் வந்துவிட் டது. இதனை உணர்ந்தே அடியேன் இப்பொழுது அதனை அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யத் தலையிட்டனன்.

அச்சின்வாய்த்தோற்றுமலும் பரிபாலனம் அடையா மலும் இருக்கும் நூலகள் எத்துணைச்சீக்கிரம இறந்துவிடுகி ன்றனவென்பதற்குச், சொற்பகாலத்திற்கு முன்னர் உதித்த இந்நூலின் கடைசி இயல்களுக்குத் தமிழ்நாட்டிலே பிரதிகள் அகப்படாமையும், எங்கெங்குந்தேடியும் யாதுமுயற்சிசெய் தும் பாட்டியலுக்கு இரண்டுபிரதிமாத்திரம் அகப்பட்டதுஞ் சான்றுபகரும். சில சில இடங்களில் அகப்பட்ட பொருளதி காரப்பிரதிகள் அவிழ்த்துப்பார்ப்பதற்கும் உபயோகமில்லாத தசையடைந்துவிட்டன.

இந்நூல் உலகிற் தோற்றிய காலமுதல், நூற்றைம்பது இருநூறு வருஷமாக, நன்னூல் முதலிய ஏனைய சிறநிலக்

கணங்களெல்லாம் பயிற்சி குன்ற, இதுவே தலையெடுத்துவந் தது. பதினேழாஞ் சகாப்தம் முதல் இற்றைக்கு ஐம்பதறு பது வருஷத்திற்குமுன்வரைக்குஞ் சென்னை, காஞ்சி, புது வை, தஞ்சை, மதுரை, திருநெலவேலி, யாழ்ப்பாணமென் றின்னோரன்ன தமிழ்த்தேசங்களில் இலக்கணங்கற்போர் பெரும்பாலும ஒதிவந்ததும் இதுவே.

இஃது இவ்வாறு பிரசித்தியடைந்து வருகையில், ஸ்ரீகை லாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தார், சோழநாட் டிற் தமது ஆதீனமரபினையொத்ததுஞ் சுதந்தானகுரவாவழித் தோன்றியது மாயினும, பலகாலும பலவிஷயங்களில் தம் மோடு மூரணிய தருமபுராதீன சமபந்தம் இதற்கு ஒரோவ ழியுண்மைபற்றி இதன் மகிமையைக் குறைக்க நினைந்தோ, அல்லது நன்னூலின் பண்டைக்கொள்கையான் அதன்மேற் பச்சாத்தாபங்கொண்டோ, நன்னூலை மேன்மைப்படுத்த எண்ணி, அதற்குத் தமதாதீனத்துச் சங்கரநமச்சிவாயப்பு லவரால் ஒருவிருத்தியுரை எழுதுவித்தும, நன்னூலினகத் தும் அதன் சமணவுரையினகத்தும மூன்னில்லாத பலவிதி விலக்குகளை உரையிற்கோடலாற் புணர்ப்பித்தும், இன்னும் அவ்வுரை சிறக்குமபடி சமஸ்கிருத திரவிடக் கடல்கள் முழு துண்டு தேக்கிய ஸ்ரீ சிவஞானமுனிவராற் திருத்திப புத்தமபு த்துரை எழுதுவித்தும, அதுவுமபோதாதெனக்கண்டு அம்மு னிவராரால இலக்கணவிளக்கச் சூருவளியெனறு ஓர் அகியா யகணடனம இயற்றுவித்தும இதனூலை நசிக்க முயல்வாரா யினும், சமணகாலத்தின பின்னாத, தான தோன்றிய கால முதற் தென்னாடெங்கும தமிழ்க்கலவியை வித்திசெய்வதி லுஞ் சைவசமயகுரை வளரபபிலும முதனமை பெற்றே நிங்கிய இவ்வாதீனத்தாருக்கு இஃதெஞ்ஞான்றும ஒரு களங் கமேயாம். "திருவாரூரிறைவற்கட்டதிற்—தமிழ்க்கிலக் காகியவைத்தியாதன" என அரிசிபா தமிழ்வல்லமையைப் புகழ்ந்து ஈசனடிசிகரும "முனனூ லொழியப் பின்னூல பலவினு—ணன்னூ லாதமக் கோதா லரு—மிணையோ வென்னுங் துணிவே மன்னுக" என நன்னூலையே புகழ்ந்

தது தமதாதீனவைராக்கியமென்றே கோடற்பாலதோ, அன் றேல் அவர் வைத்தியநாத தேசிகர் இந்நூலை மூலமும் உரையுமாகச் செய்துகொண்டிருந்ததைக் கண்டது மாத்திர மன்றி நூலைப் பார்த்தறிந்தவரல்லரோ அறிகிலேம்.

ஸ்ரீகச்சியப்ப சுவாமிகள் திருத்தணிகையிற் கந்தப்பை யர் முதலியோருக்குத் தமிழ் கற்பிக்கையிற் தம்மாணாக்கர் கள் இலக்கியப்பயிற்சிக்காகச் சீவகசிந்தாமணியைப் பாராட் டியது கண்ணுற்றபோது தம்பாலெழுந்த சமயாபிமானத்தா னன்றே அதற்கிணையாகச் சைவ இலக்கியமொன்று நிலை பெறும்படி தணிகைப்புராணத்தைச் செய்தருளினர்!

பரசமயநூலை வாசித்தபோது அதிலோதிய பொருளை மெய்யென மயங்கி மகிழ்ந்த அநபாய சோழனை இடித்து ரைத்துக் கண்டித்த அருணமொழித்தேவர் போலாகாது சுவாமிகள் ஈண்டுச் சொற்சுவை பொருட்சுவைகளின்மேற் தம்மாணாக்கர் மனஞ் செலுத்திய இடத்தன்றே பரிதாபம டைந்தனர்? பின்னை அபிஷேகத்தர் மரபிலுதித்துச் சுத்தசி த்தாந்த சைவசமயியாய்ச் சைவசமயாசாரியராய் எழுந்தரு ளிய இந்நூலாசிரியர் இயற்றியநூலும் உரையுஞ் சிறப்புடை யனவாகவும், பஞ்சலக்ஷணமும் பொருந்திக் கற்போர்க்கு மிக்க பயன் தருவனவாகவும இருக்க, அதனை விரோதித்துப், பாற்கடலிலுள்ள மீன்கள் அபபாலைவிரும்பாது வேறுபல வற்றை இச்சித்தல போல, இரண்டிலக்கணமாத்திரமுடைத் தாய்ச் சமணரிபரரற் செய்யபபட்டுள்ள நன்னூலைச் சிறப் பிக்கமுயன்றது திருவாவடுதுறை யாதீனத்தார்க்குத் தகு ந்த செய்கையன்றென்பது சைவசமயாபிமானமுடையோர் அனைவராலும் ஒப்புக் கொள்ளற்பாலதேயாம்.

சகலசற்குணமும் எல்லாக்கல்விச்சிறப்புமுடையராய் வீற்றிருந்து இப்பொழுது அடைந்துபோன பரமதயாளுவா கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் இவ்வாறு தமது ஆதீனத்தார் செய்தது தபபென்று கேரிலே ஒத்துக் கொண்டதுமன்றி, இலக்கணவிளக்கம் அச்சில்வெளிப்படு

மாயின் மீளவும் முன்னேச்சிறப்பு அடையாமற்போகாதென் றுசொல்லி, அதனே எவ்வாற்றானும் அச்சிடுவிக்கவேண்டு மென்று அடியேற்குக் கட்டளேயிட்டருளியது.மேலுஞ் சிறு க்காப்பியங்களில் ஒன்றுகிய சூளாமணி இப்பொழுது எங் ஙனுங் கிடைத்தற்கு அரிதாகி இறந்துபோகுந் தசையடைந் திருத்தலால் அதையும் அச்சிடுவித்தல் உலகிற்குபயோக மாகுமென உத்தரவுசெய்தது. இஃது இலக்கணவிளக்கம் அச்சில் வெளிப்படும்போது நன்னூற்பயிற்சி சிதைவுறுமென்னும் கிச்சயத்தாற் சமணர்க்குச் செய்ததோர் கஷ்டபரிகாரம்போலும். யான் அப்பணிகளேச் சிரமேற்கொண்டு

"குறிப்பினுலரியகுரவரெண்ணமதுகூறுமுன்புரிகுணத்தினே ன்,பொறுப்பனேவடிகள்புலியிலெனேயொரு பொருளெனக்கொ புகன்றனூல், சிறப்புறப்பிழைதிருத்தியச்சில்வெளிசெய்தோரோர் பிரதிதேவரீர், நறைப்பெருஞ்சரணகளினசங்நியினல்கிடாதினியெ ன்னுளினே."

என விண்ணப்பஞ் செய்தனன். உடனே மடத்திலிருந்த இலக்கணவிளக்கப் பிரதிகள் யாவுஞ், சூளாமணி மகாலிங் கையர் பிரதியொன்று தமது மடத்திலிருந்ததும் என்கை வசம் அனுப்பி, வழக்கப்பிரகாரம் மடத்திற்காக வாங்கும் பிரதிகளின் கிரயத்தோடு இந்நூல் ஒவ்வொன்றிற்கு கoo ரூபா உபகாரமுங் கொடுப்பதாக அனுக்கிரகித்தது. சுவாமி களது சீவதசையில் இவை இரண்டன் பதிப்பும் முற்றுப்பெ றுதது அடியேற்கோர் பெரும் விசனமே. ஆயினும் இவை விரைவில் அச்சாகிவருவதைச் சுவாமிகள் அறிந்திருந்தது என் மனதிற்கு ஓர் ஆறுதலாம.

இந்நூல் அச்சில்வராமையே அதன் பயிற்சி இஞ்ஞான் றுக் குன்றுவதற்குக் காரணமென்பது முன்பே கலித்தொ கைப் பதிப்புரையிலும் "சூருவளி மாருய் மோதியென்? "சூத்திரசிருத்திவான் ஆர்த்ததிர்த் திடித்தென்? கன்னது "ரோண சமித்திரதர் என்னதுரோகம் இயைத்திடினுங் 'தே 'ரொன்று கிடையாத குறையன்றே களத்தவிந்தான் சி

"றுவன்"! அச்சுவாகனங் கிடையாத குறையன்றே இலக்க "ணவிளக்கம் மடங்கியது!" எனக் குறித்திருக்கின்றேன்.

இங்ஙனம் இதனைப் பாராட்டுதலாற் தவத்தாற் தூய ராய் முக்குணங்களையுங் கடந்து இறைவனருள்பெற்றுள்ளா ரது நூல்களோடொத்த பெருஞ்சிறப்பினையுடையதென்று சொல்கின்றேனல்லேன். சிற்றறிவினோர் இயற்றும் எந்தநூ லினுந் தப்பில்லாமற்போகாது. இலக்கணவிளக்கமுடையா மதங்களுள்ளுஞ் சில கற்றுவலோராற அங்கீகரிக்கத் தகா தனவுள. ஆயினுந் தாரதமமியச் சிறப்பானும ஐந்திலக்கண மும் உடைமையானும பின்னுலெவற்றினும் இதன்மாட்சி பெரிதெனக் கொள்க.

இலக்கணவிளக்கச் சூறாவளியை ஓர் அநியாயகண் டனமென்று யான் கூறியதை ஈண்டுத் தாபிக்கப்புகின் மிக விரியும். அஃது அன்ன இயலபினதென்பது நடுவு நிலைமை குன்றாது அதனைவாசிபபோர அனைவாக்கும புலப்படும். ஆயினும் அநியாயமெனறோ குற்றமேற்றியபின் அதற்குச் சில உதாரணமாவது காட்டாமற்போதல சரியன்றென்று உட்கொண்டு, அங்குமிங்குந்தேடியெடாமற் சூறாவளியில் முதன்முதற்சொலலியவற்றையே சொற்றமுறைப்பா எடுத் துக்கொண்டு அவை சிவஞானயோகீசுவரா உணர்த்திய வாறு நமதாசிரியாமேற் போந்த குற்றமல்லவென்பதை மாத் திரம் இங்ஙனங் காட்டுகின்றேன். காட்டுமுன் அடியேன் சொல்லவேண்டியதொன்று உளது.

அகத்திய முனிவர் வரத்தினாற் தோன்றித், தென் மொழி வடமொழிக்கடலகளின் நிலைகண்டுணர்ந்து, முன் னும் பின்னுந் தமக்கிணையினறி வீறித், தமிழிலுள்ளநூற்க ளுக்கெல்லாஞ் சிரோரத்தினமாய்ச் சொலியாநிற்கும் மகா பாடியத்தை அருளிச்செய்த யோகீஸ்வரரது பேரறிவு இம யாசலமொப்பது. எளியேன் சிற்றறிவு அதன்முனர ஒரு தூளிபோலவது. அன்னோ, தப்பை ஒப்பென்று தாபிக் கவும், ஒப்பைத்தப்பென்று வாதிக்கவும் வல்லர். அஃது

அவர் காஞ்சிபுரத்து வைஷ்ணவ வித்துவான்கள் கொண்ட இறுமாப்பை ஒழித்தற்பொருட்டு, அவர்கள் தலைமேற் கொண்ட இராமாயணத்து நாந்திச்செய்யுளை முதலிற் பங் கப் படித்திப், பின்னர் அதனையே அவர்கள் தலைவணங் கித் தம்பிழையைப் பொறுத்தருள்கவென்று வேண்டிய பொழுது சரியென்று நாட்டியதனன் விளங்கும. ஆதலால இன்னேரன்ன பெருஞ்சிறபபினரை எதிர்த்து இலக்கிய இலக்கணப் படைக்கலங்கள் தாங்கி அவா சூழ்வளியை மாழ்கயழிக்கப் புகுந்தேனென்றுகொள்ளனமின. அவரும அவா மாபினேரும உவந்துபாராட்டிய நன்னூற்கு இந்தூல இழிவுடையதன்றென்னும் மாத்திரையே யான் சொலல லாயினேனெனக.

க. "முன்னர்ப் பாயிரத்தை வைத்து இது பாயிரமென் "று உரைத்துப் பின்னா அது கேட்ட மாணாக்கர்க்கு நூலு "ரைப்பான் தொடங்கினா, இபபாயிரம் உரைக்க வேண "டுவதென்னை என்னுங் கடா நிகழ்தற்கு இடனுளதாய "வழி, இவ்விவ்வேதுக்களான் முன்னாப பாயிரம உரைக்க "வேண்டுமென்று இறுத்தல் அமையும. அவ்வாரே இயை "புமின்றித் 'திருவிளங்கிய மாநகரம்' முதலாக எடுத்து "ரைக்கும் உத்தரஞ் செப்புவழுவும் மற்றொன்று விரித்தல "மாய் முடியுமென்க." என்றா. "வலமபுரிமுத்திற் குலம புரிபிறப்பும்" எனறு தலையிட்ட ஆத்திரையன் பேராசிரியன் எத்தப் பாயிரத்தை முன்னா வைத்து இது பாயிரமென்று உரைத்துப் போநதனன்? ஆனை யாண்டைபோ கடா நிகழ்ந்தும் விடையிறுத்தும அமையப்பெற்றது?

"முகவுரை பதிகம்" என்றற்றொடக்கத்துப் பொதுப் பாயிரமுதலியன கூறிய நன்னூலார "மாடக்குச்சித்திர மும்" என நூற்சில கூறியதனை இந்தூலார் முதலிலே எடுத்து உரைத்ததுதானு ஒருதவறுயிற்று? இது குற்றமா மாயின் நன்னூலாரும் "முகவுரை பதிகம்" என்னுஞ் சூத் திரங் கூறற்குமுன்னர்த் தன்பாயிரத்தைவைத்து இஃதி பாதுஇதன்பெயரென்னை என்று கடாநிகழ்தற்கு இடனுயவ

ழியன்றே அச்சுத்திரஞ்செய்தல்வேண்டும்! அவ்வாறின்றி "முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்—புறவுரை தந் துரை புனைந்துரை பாயிரம்" எனச்சொற்றது செப்புவழு வும் மற்றொன்று விரித்தலுமாகுமே. இதனைக் குற்றமென்று தெரிக்கப்புகுந்ததே குற்றமாமென்றெழுதிக.

உ. "அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூல் "அடங்காதென்றார், அவற்றியல்பு உணராமையின்." என்ற னர். இதற்கு விடை "இன்னும் 'நூனுதல் பொருளைத் "தன்னகத்தடக்கி' என்பதனைத் தழீஇயினராகலின், நூலி "யல்புபாயிரத்துள் அடங்காதென்றல் அவர்க்குங் கருத்தன் "றென மறுக்க." என்னும் அவரது சொந்த வாய்மொழியே யாமெனக் கூறுக. நூல் குணியும் நூலியல்பு குணமுமாக லின், நூலவேறு நூலியலபுவேறென்றெழுதிக. ஆதலாற் பல அவயவங்களை உடையதோர் அவயவி அவற்றொன்றில் அ டங்காதாகுதல் பொருத்தமுடைத்தென்றும் அடங்குமென் பார் கூற்றிற்குப் பொருள் வேறென்றுங் கூறிவிடுக்க.

ஊ. "எழுத்ததிகாரம் என்பழி அதிகாரம் முறைமை "யென்றார். அதிகாரமென்னும வடசொற்கு அது பொரு "ளன்மை தொல்காப்பிய விருத்தியிற் கூறியவாற்றுண் அறிக." எனச்சொற்றனர். இதற்குவிடை "திகாரம் முறைமை" எனவே உச்சிமேற் புலவாகொள் நச்சி நார்க்கினி யார முதலியோர் கொண்டனரென்க. மேலும் பொருள் வடமொழியிலும் உணைம சம்ஸ்கிருத அதிகளிற் கூறிக்கிடத்தலான் அறிக.

எ. "மலைமக ளொருபான் மணந்துல கள "வனை வணங்கிச் சாற்றுவ னெழுத்தே." என்னு —தலை திகாரத் தற்சிறப்புப்பபாயிரத்தில் நான்கு குற்ற எழுத்த முதலாவது "மலைமகளென்பது மலையும் மகளென பாரித்து, "லப்பொருள்தந்து 'தொகையார் பொருள்பலவு அமங்க "ற்லின்" மலை தன் மங்கலப் "பயன் குறி தோன் யதிக." என்றார். நன்னூலார் எடுத்தாண்ட "ராமை "ழி" என்

பது இலெகிறைந்த என்றும் இடம் அகன்ற என்றும் பொருள் தரத்தக்கதாகலாற் "தொகையார் பொருள்பலவாய்த தோன்ற" இடமில்லையா? "நீடாழியுலகம்" என்று மங்கலம் வகுத்த வில்லிபுத்தூராழ்வாரை அது நீள் தாழி எனவும் பகுக்கக் கிடந்ததென்று குற்றப்படுத்தல் பொருந்துமா? அன்றியுந் தாமே ஒருகால் உவந்ததோர் மங்கலமொழியைப் பிறர் கொண்டக்காற் குற்றமென்றது பேரற்புதமே. மேலுந் தம்மரபினோர் அனைவருக்கும் அங்கீகாரமான சிவதரு மோத்தரத்தில்

> "மலெக்குமகள்பெற்றமகனெக்கயமுகத்தினைமனத்தெழுதியா
> னலற்பிணிபிறப்பறவணுக்கனையகத்தியமுனிக்கருளினு
> னுலப்பில்கருணைக்கடலுருத்திரனுருத்தனிலுதித்தகுமர
> னிலக்குடியலெக்கலியினைக்கவமுரைப்பலுலகிட்டமுறவே."

என மறைஞானசம்பந்தநாயனர் எடுத்தாண்ட மங்கலமொழியை அமங்கலப்படுத்தல் தன் தாயை வேசியென்று ஏசுதல்போலும். இரண்டாவது "மணந்து" என்றதும் ஒருகுற்றம்; என்னை! இஃது ஈண்டு "இந்நூல நின்று நிலவுதல "வேண்டியென்றார்க்கு" மறுதலையாகப் பொருளதிகாரத்தில "உமையுரு வுருமடுத்தென்றது இந்நூல் நின்று நிலவாது "இறுதல வேண்டி எனப் பொருள் தருதலின்." என்றார். "எனையவற்றிற்கும் ஏற்குமாறு பொருள் விரித்துரைக்க" என்று ஆசிரியர கூறினராக, இவரை ஏலாமாறு பொருள் கொள்ளச் சொன்னதுயாரோ? மூன்றாவது "உறுபொருள் "முதலிய எலலாவற்றிற்கும் உரிய வேந்தனே உல்குபொ "ருட்டு உரிய வேந்தனென்றல் அவன் இறைமைக்கு ஏலா "தவாறு போல ஐந்தொழிற்கும் உரிய தலைவனே உலகளித்த தலைவனென்பது தலையன்மையின்" உலகளித்த தலைவ னென்றது குற்றம் என்றார். எழுத்ததிகாரத்தில் "உலகளித் ததலைவன்" எனவுஞ் சொலலதிகாரத்தில "உலகு புரந்தரு ளும் அமைவன்" எனவும், பொருளதிகாரத்தில் "உலகி னோப்டெழிக்குப் இயையவன்" எனவும் ஆசிரியர் இறை வன் முத்தொழிலுங் கூறிய புகுந்தாராகலின் ஈண்டுப்பட்ட

சிவஞானமுனிவர் தெரித்த குற்றங்களின் இலக்ஷணம் எத்தன்மைய என்பதற்கு மேலே காட்டிய ஐந்து உதாரணமும் போதுமாதலின் இவ்வளவில் நிறுத்துதும்.

இன்னோரன்ன குதர்க்கங்களான் இலக்கணவிளக்கம் எட்டுணையுந் தாழ்வடையாது தமிழ்நாடெங்கும் பரவி வருகையிற், திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் நன்னூற் கோர் காண்டிகையுரை செய்து அச்சிற் பதிப்பித்தனர். பின்னர் அது மாணவர்கட்கு இலேசில் அகப்படற்பாலதாயினமையின் அதனையே யாவரும் வாங்கிப் படிப்பாராயினர். அதனல் அதன் விருத்தியுரையையும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்டு யாவர்கைக்கும் எளிதில் அகப்படச்செய்தார்கள். இனி ஐந்திலக்கணமுஞ் செறிந்த இலக்கணவிளக்கத்தையே தமிழ் மாணுக்கரனைவரும் ஆவலோடுவாங்கிப் படிப்பாரென்று நம்புகின்றேன்.

சூத்திரங்களைப் பாடம் பண்ணுவோர் ஒருபொருளிற் பலசூத்திரத்தை நெட்டுருப் பண்ணுதல் வீண்காலக் கழிவென்று கொண்டு இலக்கணசிரியாகள் தத்தம் முதனூற் சூத்திரங்களையே தமக்கு வேண்டிய விகற்பத்தோடு எடுத்தாளுதல் பெருவழக்காதலின், இந்நூலாரும் பெரும்பாலுங் கற்போர்க்கு உபகாரமாகத் தமது காலத்தின் முன்னுள்ள சூத்திரங்களையே கூடியவரையும வைத்துக்கொண்டனர்.

சுவித்தொகை வீரசோழியங்களின் பதிப்புரைகளிற் தமிழைக்குறித்து யான் எழுதியவற்றிற் சிலவிஷயங்களுக்கு மாறுகிக் கண்டனங்களெழுதினோர் இருவர் உளர். அக்கண்டனங்களை நிராகரிக்க வேண்டுமென்று எனது இஷ்டர்கள் பலர் கேட்டுக்கொண்டாலும் அவைகள் உலோகோபகாரங் கருதியும் உண்மையை ஆராய்ந்ததிய வேண்டுமென்று அவாவியும் எழுந்த வாதம்போல .எனக்குத் தோற்றுமையால் யான் அவற்றைக்குறித்து யாதும் எழுதிற்றிலேன்.

இவருள் ஒருவர் ஸ்ரீமத் சபாபதிநாவலருடைய ஞானமிர்தபத்திரிகாசிரியர். இவர் தாமோதரம்பிள்ளையெனத் தன்

பெயர் கைச்சாத்திட்டு அப்பத்திரிகையின் தமிழ்நடைக் கெல்லாந் தானே உத்தரவாதியென்று விக்கியாபனஞ் செய்தவர், பின்னர்க் கலியாணசுந்தரப்பெயர்கொண்டெழுந்து, யான் தாமோதரம்பிள்ளையென என்பெயரெழுதல் தவறென்றும் அது தாமோதரப்பிள்ளை என்றிருத்தல் வேண்டுமென்றுங் கிளம்புகின்றார். அப்படிப்பட்டவரோடு யாது வாதம் புரிவது? தன்பெயர் எழுதுதற்கே இன்னுங் கற்றுக் கொண்டிருக்கின்றார்போலும். இவரை எதிர்த்தல் "வெண்ணூலுந் தோற்றூலும் வசையேயன்றே"? இக்காலத்துப் புலவர் பெருமானென யாவருங் கொண்டாடுந் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள், இராமநாதபுரம் வித்துவான் பொன்னுசாமித்தேவரவர்கள், நவீனபவணந்தி எனச் சிறப்புப்பெயர் விளங்கிய ஐயம்பிள்ளை உபாத்தியாயரவர்கள், திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளையவர்களென்று இன்னோரெல்லாந் தம்பெயர் வல்லொற்றுமிகாமல் எழுதுபவராயின் யான் தாமோதரம்பிள்ளையென்று எழுதுதலும் விலக்காகுமன்றிக் குற்றமாகாது. விதிவிலக்கு இரண்டும் உணர்ந்தாரன்றே குற்றங் காட்டற்கு உரியராவர்? அப்பசுவாமிகளையும் அப்பச்சுவாமிகளாக்குவரென்றஞ்சுகின்றேன். யான் சாதித்த மௌனத்தை என் இஷ்டர்கள் மன்னிக்க.

மற்றவர் தஞ்சைஜனமித்திரனிற் றோன்றித் தூஷணப் படைகொண்டு ஒரு சிறுச்சண்டைசெய்ய முயன்றனர்போலும். இன்னோரன்னோரோடு சண்டைசெய்தற்கு யான் அருகனல்லேன். இவர் யான் வீரசோழியப்பதிப்புரையிற் தமிழ் என்னும் மொழி "எவ்வாருயினும ஆகுக." அது "தென்மொழிக்குத் தென்சொலலாகிய பெயரேயாமெனக்கொள்க" என்று கூறியதனை மொழியின் உற்பவத்தைக் குறித்து எனக்கு அதிக வாதமில்லையென்றும் அது திரவிடமென்னும் வடமொழியினின்று வாராதென்றார் தென்மொழியென்று சாதிப்பதே என் கருத்தென்றும் உணர்வாராக.

இன்னோர் போலாது ம-ஈ-ஈ-ஸ்ரீ கோ. ஸ்ரீநிவாசராகவாசாரியாரவர்கள் தாம் எழுதிய நாலடியார் மூலவுரையாற்

றில் "நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்—பால்கடு
கங் கோவை பழமொழி" என்பவற்றுள் "ஐந்திணை அகப்
பொருட்டுறைத்தாய் ஐம்பது செய்யுளான் மாறன்பொறைய
னார் இயற்றியது ஓர்நூலாகக், கீழ்க்கணக்குத்தொகை பதி
னெட்டாயதெவ்வாறோ?" என யான் கொண்ட * கொள்கை 5
மாற, "ஐந்திணை என்றது திணைகளைப் பற்றிச் சொல்லும்
ஐந்து நூல்கள்" எனக் கூறி, ஐந்திணையைம்பது ஐந்திணை
யெழுபது திணைமொழியைம்பது திணைமாலைநூற்றைம்பது
இங்ஙான்கும் அவ்வைந்திணையைச் சேர்ந்தனவென்றும் இ
வை போன்றது இன்னும் ஒன்று இருத்தல்வேண்டு மென் 10
றுஞ் சொற்றனர். கலித்தொகைப் பதிப்புரை எழுதியபின்
னர் மேற்கண்ட நான்குநூல்கள் எனக்கும் அகப்பட்டன.
ஐந்திணை விஷயத்தில் யான் கூறிய கூற்றுச் சரியென்றென்று
ஒத்துக்கொள்வதுமன்றி ஆசாரியாரவர்கட்கு என் வந்தன
மும் கூறுகின்றேன். பிறர் சிலரோப்பக் கோவையைத் 15
திருச்சிற்றம்பலக்கோவை என்று கொள்ளாது யான்சொல்
லியதுபோல ஆசாரக்கோவை என்று இவர்கள் உரையிட்
டது சாலவும் பொருத்தமுடைத்தேயாம்.

மூப்பால் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனரது
பொய்யாமொழித் தமிழ்வேதமாகிய திருக்குறளல்லவென் 2
பதற்கு யான் கூறிய நியாயங்களை மூற்றச் சீர்தூக்கி ஆரா
யாது "ஆலும் வேலும் பல்லுக் குறுதி—நாலு மிரண்டுஞ்
சொலுக் குறுதி" என்னும் பிற்றைநாண மொழியைச் சங்
கத்தார் காலத்து முதுமொழிபோற் கொண்டது ஆசாரி
யார் பால் ஒரு தவறென்றே இன்னும் வற்புறுத்துகின்றேன். 2
கோவை திருக்கோவையாராகாது ஆசாரக்கோவையாயினுற்
போல் மூப்பாலும் நாயனர் தமிழ்வேதமாகாது நமது கைக்கு
இன்னும் அகப்படாத பின்னொரு சிறு நூலேயாதல் வேண்
டுமென்பது எண்துணிவுமாத்திரமன்று. இதுவிஷயத்தில்
யான்கண்டு பேசிய பலமடாதிபதிகள் வித்துவான்கட்கும் 3
இஃதொப்பென்றறிக.

* கலித்தொகைப்பதிப்புரை கள-ம் டக்கம்.

இஃதெழுதியபின்னர், ஸ்ரீ. திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் தமக்கு அகப்பட்டதோர் மிகப் பழைய கீழ்க்கணக்குச் சுவடியில், "நாலடிநான்மணி" என்னுஞ் செய்யுள் அதிகஞ் சிதைவுபட்டுக் கிடப்பதில், ஐந்திணை என்பதற்கு ஐந்திணையைம்பது ஐந்திணையெழுபது திணைமொழியைம்பது திணைமாலைநூற்றைம்பது என்னும் நான்குமே உரையிற் குறிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், முப்பால் என்பதன் உரை நாயனர் திருக்குறளே ஒருவாற்றானுஞ் சுட்டாது முப்பாலென்றே கூறப்பட்டிருக்கின்றதென்றும், கைக்கிலையென்பது அப்பெயரான் உரையோடு உள்ளதோர் தனிநூலாகக் கண்டிருக்கிறதென்றும் எழுதியறிவித்தனர். இஃது என் கூற்றை நன்கு வற்புறுத்துகின்றது. இதனால் "நானற்பதைந்திணை" என்றதில நாலென்னும் அடையை நாற்பது ஐந்திணை என்னும் இரண்டனோடும் ஒட்டி நானற்பது நாலைந்திணையென்று கோடல்வேண்டுமென்றும், ஐந்திணை, யான் கூறியவாறு ஒருநூலுமன்று, ஆசாரியரவர்கள் கூறுமாறு ஐந்துநூலுமன்று ஐந்திணைப்பொருள் உணர்த்திய நான்கு நூல்களென்று கொள்ளத்தக்கதென்றுஞ் சொல்ல ஏதுவாகின்றது. அங்ஙனமாயின் முப்பாலென்றது ஒரேநூலாகவும், இன்னிலைசொல்லென்றது இன்னிலை இன்சொல்என இரண்டுநூல்களாகாது காஞ்சிக்கு விசேஷணமாகவுங், கைக்கிலையென்றது வேறொரு தனிநூலாகவுங் கொள்ளல் உகும். இவ்வாறு கொள்ளிற் "கைக்கிலையோடாங்கீழ்க் கணக்கு" என்று ஈற்றடிப்பாடந் திரிதல் வேண்டும். எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்குக்களுள் இன்னும் அச்சிற் றேறாற்றாதன தேடி வெளிப்படுத்தும நோக்கமாகச், சிலநாட்களுள், மதுரை திருநெல்வேலி கோயமுத்தூர் முதலிய தேசங்களுக்கு ஓர் யாத்திரை செய்ய உத்தேசித்திருக்கின்றேன். அவ்வாறு போய்த் திருமபியபின் இதுவிஷயத்தைப்பற்றி மறுபடியும் எழுதுவேன்.

மாணவர்கள் தமிழ் இலக்கணம் ஐந்தும் ஏவ்வாற்றானும் ஓதி உணர்தல் வேண்டுமென்னும் விருப்பம் மிகுளை

ஞதலானும், அவர்களுட் பெரும்பான்மையோர் அதிக செல்வரல்லராதலானும், வித்தியாசாலைகளிற் தமிழ்கற்கும் மாணாக்கர்கள் உரு பெயருக்குக் குறையாமல் ஒருங்கு சேர்ந்து தமது பாடசாலைத்தலைவர் மூலமாக நேரே என்னிடமிருந்து அழைப்பிப்பின் இப்புத்தகம் அவர்களுக்கு அரை விலையாகக் கொடுக்கப்படும்.

உலோகோபகாரமுந் தமிழ்ப்பரிபாலனமுங் கருதி இந்நூலை அச்சிடும்படி திரவியசகாயஞ்செய்து அடியேனை ஆதரித்த போடிநாயக்கனூர் ஜமீன்தார் ஸ்ரீ திருமலை போடைய காமராசபாண்டியநாயக்கர் துரையவர்களுக்குப் பெருங்கடமைப்பட்டுளேன். துரையவர்கள் வாய்மொழி தவறாது நிறைவேறச்செய்ய உடன்பட்டிருக்கும் அவர் தேவியாராதியானோர்க்கு மிகவும் வந்தனங் கூறுகின்றேன்.

எடுத்தமுயற்சியில் யான் தளர்வடையாவண்ணம் அடிக்கடி என்னை உற்சாகபடுத்திக்கொண்டிருக்குந் தொண்டமான் புதுக்கோட்டை இளவரசு ராஜா ஸ்ரீ பாலசுப்பிரமணிய ரகுநாததொண்டமான்துரையவர்கள், பிரதிகாவலர் கௌரவ அ. சேஷையசாஸ்திரிகள், மைசூர் நியாயாதிபதி கௌரவ அ இராமசந்திரையரவர்கள் முதலிய கனவான்களுக்கும் தென்றேசப்பிரதிகள் தேடியழைப்பித்துத் தருவதில் அதிக பிரயாசை வகித்துக்கொள்ளும் மாஜி திருநெல்வேலி நீதிபதி ம - ரா - ரா - ஸ்ரீ திரு கனகசபைமுதலியாரவர்கட்கும, இவ்வேலை விரைவில நடைபெறும்படி வேண்டிய ஏத்தாசைகள் செய்யும ஸ்ரீமத் ந. க. சதாசிவப்பிள்ளையவர்கள் ம - ரா - ரா - ஸ்ரீ திரு. த. கனகசுந்தரமபிள்ளையவர்களென்றிவாகளுக்கும நன்றிசொலுகின்றேன்.

என்முயற்சிக்கு ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சற்குருநாதசுவாமிகளாயிருந்து அடைந்து போன ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் செய்துவந்ததுபோலவும், இப்பொழுது ஷ சுவாமிகள் பட்டத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்தி

கள் செய்துவருவதுபோலவும், மற்றைத் தமிழ்நாட்டு ஆதீனங்களில் ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானங்கள் கைகொடுத்து வருவார்களாயின் இன்னும் பல பண்டீடக்காலத்துத் தமிழ்நூல்களை எடுத்துப் பரிசோதித்துப் பிரசுரிப்பதில் அதிக ஊக்கம் உடையவனுவேன்.

சென்னைப் பாடசாலைக் கிரந்த சுதேசபாஷாவித்தியா பரிபாலன சபையார் எனக்குச் செய்துவருஞ் சகாயம் யான் ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

தொண்டமான் புதுக்கோட்டை
விரோதிஹ்ரு ஐப்பசிமீ } சி. வை. தா.

வி ள ம் ப ர ம்.

☞ இதன் அடியிற் குறித்த புத்தகங்கள் சென்னபட்டணத்தில் வித்தியாநுபாலனயந்திரசாலையில் ந. க. சதாசிவப்பிள்ளையவர்களிடத்தும், கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் ஊ. புஷ்பரதச்செட்டியாரவர்களிடத்துஞ், சிதம்பரத்திற் சைவப்பிரகாசவித்தியாசாலை விசாரணைக்கருத்தர் க. பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்தும், யாழ்ப்பாணத்திற் சுன்னுகம் அ. குமாரசாமிப்பிள்ளையவர்களிடத்துந், தஞ்சாவூரிற் புத்தகவியாபாரம் தா. திருவேங்கடபிள்ளையவர்களிடத்தும் வாங்கிக்கொள்ளலாம்.

	ரூ.	அ.
தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனவரையம் ...	உ	0
ஷ பொருளதிகாரம், நச்சினர்க்கினியம்...	சு	0
நல்லந்துவனர் கலித்தொகை	ந	அ
தணிகைப்புராணம்	உ	0
வீரசோழியம்	க	அ
இறையனாரகப்பொருள்	க	அ
இலக்கணவிளக்கம்	ம	0
சூளாமணி	க	அ

3823
U.S.

கணபதி துணை.

இலக்கணவிளக்கம்

பாயிரம்.

பொதுப்பாயிரம்.

க-வது. பொதுப்பாயிரத்திலக்கணம்.

திரு விளங்கிய மாநகரந்திற்கு உரு விளங்கிய வாயின் மாடங்கள்போலவும், கற்றவல்ல கணவற்குக் கற்புடை மனையாள் போலவும், தலையமைந்த யானைக்கு வீணையமைந்த பாகன்போல வும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாகலானும்; கொழுச் சென்றவழித் தன்னூரி இனிது செல்லுமாறுபோலப் பருப்பொ ருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்குமென்பவாகலானும்; அது கேளாக்காற் குன்று மூட்டிய சூரிற்போலவும் குறிச்சி புக்க மான்போலவும் மாணாக் கன் இடர்ப்படுமாகலானும்; "ஆயிர முகத்தா னகன்ற தாயினும்— பாயிர மில்லது பனுவ லன்றே."என்பவாகலானும்;எந்நூல் உரைப் பினும் அந்நூற்குப் "பாயிரமுரைத் துரைக்க" என்பது மரபு.

அப்பாயிரம் பொதுவுஞ் சிறப்புமென இருவகைத்து, "பாயி ரம் பொ ச்சிறப் பெனவிரு பாற்றே." என்பவாகலின். சுவோன் றன்மை முதலியன தன்னுல் உரைக்கப்படும் நூற்கே உரியவன்றி எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுதலின் அவற்றை உணர்த்தும் பாயிரம் பொதுவெனவும், ஆக்கியோன்பெயர் முதலியன தன்னுல் உரைக்கப்படும் நூற்கே உரியவாய் அவ்வொரு நூன்முகத்துமே உரைக்கபடுதலின் அவற்றை உணர்த்தும் பாயிரஞ் சிறப்பெனவு மாயிற்றென்க.

அவற்றுட் பொதுப்பாயிரம் ஈவோன்றன்மையும் ஈதலியற்கையுங் கொள்வோன்றன்மையுங் கோடன்மரபுமென நான்குவகைத்து,"ஈவோன் றன்மை யீதலியற்கை—கொள்வோன் றன்மை கோடன் மரபென—வீரிரண் டென்ப பொதுவின் முறைகளே." என்பவாகலின். "நூலே நுவல்வோ னுவலுந் திறனே—கொள்வோன் கோடற் கூற்று மைந்து—மெல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்" என்பதோர் சூத்திரம்பற்றி ஐந்தென்பாருமுளர். அஃதி லக்கணமன்று. அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூல் அடங்காமையின். "நூலி னியல்பே நுவலி னேரிரு—பாயிரத் தோற்றம்" என்பவாகலானும் நூன்முகம் முதலிய குறிகளானும் அஃததற்கு அவயவமாதல் அறிக.

இனி ஈவோர் கற்கப்படுவோருங் கற்கப்படாதோருமென இருவகையர், "கற்கப் படுவோர் படாதோ ரென்று—வெனவிரு வகைய ரீவோ ரென்ப." என்பவாகலின். அவ்விருதிறத்தாரையுங் "குலனரு டெய்வங் கொள்கை மேன்மை—கலிபயி றெளிவு கட்டுரை வன்மை—நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியு—முலகிய லறிவோ டியார்முண மினையவு—மனமபவ னூலுரை யாசிரி யன்னே." எனவுந், "தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்—பருவ முயற்சி யளவிற் பயத்தலு—மருவிய நன்னில மாண்பாரும்மே." எனவும், "அளக்க லாகா வளவும் பொருளுந்—துளக்க லாகா நிலையுந் தோற்றமும்—வரப்பினும் வளக்தரும் வண்மையு மலைக்கே."எனவும், "ஐயந் திரிபொரீஇ யுணர்த்தலு—மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே." எனவும், "மங்கல மாகி யின்றியமை யா—தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்—பொழுகின் முகமலர் வுடையது பூவே." எனவும், ஓதிய இவற்றானும்;"மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பு—மழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்—கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை—மூடத்தெங் கொப்பென மூரண்கொள் சித்தையு—முடையோ நிலரா சிரிய ராகுதலே." எனவும்,"பெய்த முறையன்றிப் பிறழ வுடன்றருஞ்—செய்தி கழற்பெய் குடத்தின் சீரே." எனவுந், "தானே தரக்கொளினன்றித் தன்பான்—மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை." எனவும், "அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்—கெளிதி னில்லது பருத்திக் குண்டிகை." எனவும், "பல்லகை யுதவி வழிபடு பண்பி—னல்லோரொழித் தல்லோர்க் கரிக்குமூடத் தெங்கே." எனவும், ஓதிய இவற்றானும் முறையே கண்க.

இனி நூதலியற்கை; "நூத லியல்பே யியம்புங் காலைக்—காலமு மிடனும் வாலிதி னேக்கிச்—சிறந்தழி யிருந்துதன் றெய்வ வாழ்த்தி—யுரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்துப்—பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்—பழிப்பில் பல்லுரை பயின்ற காவினன்—விரையான் வெகுளான் விரும்பிமுக மலர்ந்து—கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்—கோட்ட மின் மனத்தினுல் கொடுத்த லென்ப." எனவும், "பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்—பழிப்பில் சூத்திரம் பன்ன னென்கே." எனவும், அவற்றுட் "பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை—நாடித் திரிபில வாருதல் பொழிப்பே." எனவுந், "தன்னூன் மருங் கினும் பிறனூன் மருங்கினுங்—தன்னிய கடாவின் புறந்தோன் றும் விகற்பம்—பன்னிய வகல மென்மனுர் புலவர்." எனவும், "ஏது வினுங்கவை துடைத்த னுட்பம்." எனவுந், "துடைத்துக் கொள் பொருளே யெச்ச மென்ப." எனவும், ஓதிய இவற்றுன் அறிக.

இனிக் கொள்வோருங் கற்பிக்கப்படுவோருங் கற்பிக்கப் டாதோருமென இருவகையர், "கற்பிக்கப் படுவோர் படாதோ ரென்ரு—லெனவிரு வகைய ரேற்போ ரென்ப." என்பவாகலின். அவ்விருதிறத்தாரையுங் "தன்மக னுசான் மகனே மன்மகன்—பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே—யுரைகோ ளாள னெனவெடுத் தோதிய—வறுவகை யவரு ளொருவ ராகிச்—செவ் விதிற் றெரிதன் மெய்யுறக் காண்ட—லுரைபல கேட்ட லுறுபெ ருங் காத—றெய்வத்தின் மதித்த றிரிபொன் றின்மை—யன்னங் கிளியே கன்னிற நெய்யரி—யாணை யானை றென்றிவை போற—லுடைய ராகி நடையறிந் தொழுகுநர்—கற்பிக் கப்படுங் கடப் பாட் டாரே." எனவும், "பாலு நீரும் பாற்படப் பிரித்த—லன்னத் தியல்பென வறிந்தனர் கொளலே." எனவுங், "இளத்தவா இளத்தல் கிளியின தியல்பே." எனவும், "எங்கிறக் தோய்தற்கு மேற்ப தாத—னன்னிறத் தியல்பென நாடினர் கொளலே." எனவும், "நல்லவை யகத்து நட்டு நவைபுறத் திடுவது—நெய்யரி மாண்பென நினைதல் வே ண்டும்." எனவுங், "குழுவுபடூஉப் புறந்தருதல் சூஞ்சரத் தியல்பே." எனவும், "பிறந்த வொலியின் பெற்றியோர்த் துணர்தல்—சிறந்த வானேற்றின் செய்தி யென்ப." எனவும், ஓதிய இவற்றுனுங்; "களி மடி மாஞி காமி கள்வன்—பிணிய னேழை பிணக்கன் னெத் தன்—றுயில்வோன் மந்தன் ரெண்ணூற் கஞ்சித்—தடுமா றுளத் தன் றறுகண் பாவி—படிறன் பொச்சாப்பன் பலகா னகு வோன்—மாழிவ துணராதான் மூன்னிருந்து காய்வோன்—

திருகு மனத்தோன் றீயதே யோர்ப்போன்—குரங்கெறி விளங்கா யெருமை யாடே—தோணி யன்ன கோணிலே யாளர்—கற்பிக் கப் படாக் கடப்பாட் டோரே.” எனவும், “கல்லா லெறிந்து கருது பயன் கொள்வோன்—குரங்கெறி விளங்கா யாமெனக் கூறுவர்.” எனவும், “விலங்கி வீழ்ந்து வெண்ணீ ருழக்கிக்—கலங்கல்செய் தருந்தல் காரா மேற்றே.” எனவும், “ஒன்றிடை யார வறினுங் குளகு—சென்றுசென் றருந்தல் யாட்டின் சீரே.” எனவும், “நீரிடை யன்றி நிலத்திடை யோடாச் சீருடையதுவே தோணி யென்ப.” எனவும், ஓதிய இவற்றானும் முறையே காண்க.

இனிக் கோடன் மரபு: “கோடன் மரபு கூறுங் காலைப்— பொழுதொடு சென்று வழிபடன் முனியான்—மூன்னும் பின்னு மிரவினும் பகலினு—மகலா னகி யன்பொடு கெழீஇக்—குணத் தொடு பழகிக் குறிப்பின் வழிநின்—முசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்—கிருவென விருந்தே டவிழென வவிழ்த்துச்—சொல்லெ னச் சொல்லிச் செல்லெனச் சென்று—பருகுவ னன்ன வார்வத்த னகிச்—சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்—செவிவா யாக நெஞ்சுகள னகக்—கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத் துப்—போற்றிக் கோட லதுவதன் பண்பே.” எனவும், “அழலி னீங்கா னணுகா னஞ்சி—நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமொ— டெத்திற மாசா னுவக்கு மத்திற—மறத்திற் றிரியாப் படர்ச்சி வழி பாடே.” எனவும், “தூல்போற் றுதலே நுவலின் வழக்கறிதல்— பாடம் போற்றல் கேட்டவை நினைத்த—லாசாற் சார்ந்தவை யமை வரக் கேட்ட—லம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்—வினு தல் வினுயவை விடுத்த லென்றிவை—கடனுக் கோட லென்மனார் புலவர்.” எனவும், “ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்— பெருக நூலிற் பிழைபா டிலனே—மூக்காற் கேட்பின் மூறையறிந் துரைக்கு—மாசா னுரைத்த தமைவரக் கொளினுங்—காற்கூ றல்ல தற்றல வாகு—மவ்வீனை யாளரொடு பயில்வகை யொரு பாற்—செவ்விதி னுரைப்ப வவ்விரு பாலு—மையற நிரம்பு மாண் பின வாகும்.” எனவும், ஓதிய இவற்றான் அறிக.

இன்னுங் கற்கப்படுவோர் கற்பிக்கப்படுவோரென்னும் அவ் விருதிறத்தாரையும் “வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்— வான்யா றன்ன நூய்மையும் வான்யாறு—நிலம்படர்ந் தன்ன கலம் பட சொழுக்கமும்—திங்க ளன்ன கல்வியுந் திங்களொடு—ஞாயி றன்ன வாய்மையும் யாவது—மஞ்சா வன்பும் வெஞ்சா வுள்ளமும்— துலோ வன்ன சமனிலை யுளப்பட—வெண்வகை யுறுப்பின ராகித்

திண்ணிதின்—வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையு—மூல
கிய லறிதலு நீலிய தோற்றமும்—பொறையு நிறையும் பொச்
சாப் பின்மையு—மறிவு மூருவு மாற்றலும் புகழுஞ்—சொற்பொரு
ளுணர்த்திஞ் சொல்ல் வன்மையும்—கற்போர் நெஞ்சங் காமுறப்
பகிதலு—மின்னே ரன்ன தொன்னெறி மரபினர்—பன்னருஞ் 5
கிறப்பினல்லாகிரிய—ரறனே பொருட்பய னின்பெ னூன்றின்—
நிறனறி பனுவல் செப்புங் காலை—மூன்னர்க் கூறிய வெண்வகை
யுறுப்பினு—ளேற்பன வுடைய ராகிப் பாற்படச்—சொல்லிய
பொருண்மை சொல்லியாங் குணர்தலுஞ்—சொல்லிய பொரு
ளொடு சூழ்ந்தாங் குணர்தலுக்—தன்னே ரன்னோர்க்குத் தான் 10
பயப் பகிதலுஞ்—செய்ந்நன்றி யறிதலுந் தீச்சார் பின்மையு—மடி
தடு மாற்ற மானம் பொச்சாப்புக்—கடுநோய் சீற்றங் களவே
காம—மென்றிவை யின்மையுஞ் சென்றுவழி பகிதலு—மறத்துறை
வழாமையுங் குறிப்பறிந் தொழுகலுங்—கேட்டவை நினைத்தலும்
பாடம் போற்றலு—மீட்டலை வினவலும் விகித்தலு மூரைத் 15
தலு—முடைய ராகி நடையறிந் தியலுநர்—நன்மா ணாக்க ரென்ப
மண்மிசைத்—தொன்னூற் புலமைத் துணிபுணர் வோரே." என்ப
தனுன் மூறையே காண்க.

இன்னும் இதன் எதிர்மறைமூகத்தாற் கற்கப்படாதோர் கற்பி
க்கப்படாதோரென்னும் அவ்விருநிறத்தாரையும் மூறையேகாண்க. ஆ

பொதுப்பாயிரத்திலக்கணம் மூற்றிற்று.

உ-வது. சிறப்புப்பாயிரத்திலக்கணம்.

இனிச், தன்னுல் உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாத
சிறப்புப்பாயிரம் ஆக்கியோன்பெயரும் வழியும் எல்லையும் நூற்பெ
யரும் யாப்பும் நுதலியபொருளுங் கேட்போரும் பயனுங் காலமுங் உ
களனுங் காரணமுமெனப் பகிஞெருவகைத்து, "ஆக்கியோன்
பெயரே வழியே யெல்லை—நூற்பெயர் யாப்பே நுதலிய பொரு
ளே—கேட்போர் பயனே யென்றிவை யெட்டொடுங்—காலங்
களனே காரண மென்றிம்—மூன்று மூளப்பட முடித்த பதி
ஞென்றுஞ்—சிறப்பின் மூகையெனத் தேறல் வேண்டும்." ஊ
என்பவாகலின்.

இனிச் சிறப்புப்பாயிரத்திலக்கணஞ் செப்புமாறு: "பாயிரத்
திலக்கணம் பகருங் காலை—நூனுதல் பொருளைத் தன்னகத்
தடக்கி—யாசிரிய மானும் வெண்பா வானு—மருவிய வகையா

னுவதல் வேண்டும்.'' இதனுன் அறிக. தூல்செய்தான் பாயிரஞ்செய் யிற் தன்னைப் புகழ்ந்தானும், ''தோன்ரு தோற்றித் துறைபல முடிப்பினுங்—தான்றற் புகழ்த றகுதி யன்றே.'' என்பவாகலின். அங்ஙனம் புகழ்தல் ஆகாமையின் அப்பாயிரஞ் செய்வார் இவ ரென்பதனுஉந் தன்னைப் புகழும் இடன் இவ்விடனென்பதனுஉங் ''தன்னு சிரியன் றன்னெடி கற்ரேன்— றன்மா ணுக்கன் றகு மூரை யாளனென்—றின்னேர் பாயிர மியம்புதல் கடனே.'' என வும், ''மன்னுடை மன்றத் தோலித் தூக்கினுங்—தன்னுடை யாற்ற லுணரா நிடையினு—மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதி னுந் தன்னை மறுதலே பழித்த காலையுங்—தன்னைப் புகழ்தலுக் தகும் பல வோர்க்கே.'' எனவும், வருவனவற்ரூன் முறையே காண்க.

அவருள் இத்தூற்பாயிரஞ்செய்தார் தன்மாணுக்கராகிய தன் புதல்வர் சதாசிவநாவலரென உணர்க.

சிறப்புப்பாயிரத்திலக்கணம் முற்றிற்று.

பொதுப்பாயிரம் முற்றுப்பெற்றது.

சி ற ப் பு ப் பா யி ர ம்.

கடல்வளிம் புடைத்த கண்ணகன் ஞாலத்
தடரும்வல் லிருநிரந் தனேத்தையும் விளக்கும்
பல்கதிர்ப் பரிதியிற் பரம்பர னருளா
லுள்ளகத் திருள்கடந் துறுபொரு ளெவற்றையும்
பாற்படத் தொகுத்த பதினெண் மொழியுளு
மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங் குமரி
யாகிய வெல்லேயு ளருந்தமிட் பௌவத்
தெழுத்துமுதன் மூன்றையும் யாவருந் தெரியுத
தொகைவகை விரியிற் பகருக வென்னு
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதைய ரதிபன் வரகுண மேரு
கல்விக் கெல்லே கருணைக் காகரம்
பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமா லுலகஞ் செவ்வியிற் புரக்கு

மேதகு புகழ்த்திரு வேங்கட நாத
னேதின னுக வுவகைமீ தூர
மூன்னோர் நூலின் முடிபு நோக்கிச்
சொல்லும பொருளு மொல்வன தழீஇப்
பல்சுவைக் கரும்பி னெருவட் டேய்ப்ப 5
விலக்கண வீளக்கமென் றெருபெயர் நிறீஇப்
புலப்படுத் தியலுறப் பொருளவிரித் துரைத்தனன்
பவத்தொகை யகற்றுந் தவத்தின் வரம்பானேன்
பன்மீ னுப்பட் பான்மதி போல
வன்மீக நாத மாதவன் வரத்தா 10
லந்த ணூரர் வந்தருள் செல்வன்
வலமபுரி யொருமுத் தன்ன
நலம்புரி வைத்திய நாத தேசிகனே.

இதன்பொருள். கடலினைத் தன்மருங்கிடத்தேசூழ்ந்த இடம் அகன்ற உலகின்கண்ணே செறிந்த கடிதாகிய இருளை ஓட்டி 15
நிலநீர்முதலிய எல்லாப் பொருளையும் விளக்கும் பலகிரணங்களு டைய ஞாயிறுபோல எவற்றிற்கும் மேலான இறைவன்றனது அருளினுலே உள்ளத்திடத்து அவிச்சையை அகற்றி உறுதி பயக் கும் அறமுதலிய பொருளெல்லாவற்றையும் பகுதிப்பட விளக்கிய பதினெட்டுமொழியுள்ளுங் குடகடலுங் குணகடலும் வடவேங்கட 2
மும் தென்குமரியுமாகிய நான்கெல்லைக்குள் வழங்கும் அரிய தமி ழாகிய கடலிடத்து உளவாகிய எழுத்துஞ் சொல்லும் பொருளுமா கிய மூன்றனையும் எல்லாரும் ஆராய்ந்தறியும்பொருட்டுத் தொகை யானும் வகையானும் விரியானுங் கூறுவாயாகவென்று அத்தண
ருட் டிலகம்போலச் சிறந்தோன் குறுகலர்க்கோர் சிங்கவேறுப் 2
பான் மாதையென்னும் மாநகரத்துள்ளார்க்குத் தலைவன் நற்குண ங்களெல்லாம் திரண்டதொரு மேருக்குன்றங் கல்வியாகிய கடலுக் கோர் வடம்பாயுள்ளான் அருளினுக்குப் பிறப்பிடமாயினேன் பெரு மாளென்னும் வேதியன் உண்மைத்தவத்தினுற் பெற்ற பேறென
உலகத்தார் வாழ்த்த உதயஞ்செய்த திருமால் உலகத்தையெல் 3
லாம் நீதிதோடாமற் காத்தருளுகின்ற தலைமையுண்ட புகழைப்பொ ருந்திய திருவேங்கடநாதனென்னும் இயற்பெயரினையுடையோன் அருளிச்செய்தனுக மகிழ்ச்சி மேன்மேற் கூர்ப்ப முன்னோர் கூறிய நூல்களினுடைய முடிபினை ஐயந்திரிபற ஆராய்ந்து அவ
சோதிய [illegible]த்திரத்துள்ளும் அவற்றின்பொருளுள்ளும் ஈண்டைக்குப் 3

பொருத்துவனவற்றை அணைத்துக்கொண்டு பலவாகிய சுவையை யுடைய கரும்பினின்றும் உளதாகிய ஒரு சருக்கரைக்கட்டிபோல இலக்கணவிளக்கமென்று ஒரு பெயரை நிலைநிறுத்தி விளக்கி உண்மையுற எழுத்துமுதலிய மூன்றுபொருளையுந் தெளியக்கூறினஞன் பிறவித்துன்பம் முழுதையும் போக்குந் தவத்திற்கோர் அணையாயிருளுன் தாரகாகணங்களின் கதிவண் விளங்கும் வெண்டிங்கள் போல வன்மீகநாதனென்னும் பெரிய தவத்தினையுடையோன் வரத்தினுற் திருவாரூரில் உதயஞ்செய்த திருவாளன் வலம்புரிச் சங்கம் ஈன்ற தனிமுத்தம் போன்ற நல்லொழுக்கங்களே மேற் கொண்டு செலுநதம் வைத்தியநாதனென்னும் இயற்பெயரை யுடைய குரவன் என்றவாறு.

வைத்தியநாதனெனவே அக்கியோன்பெயரும், முன்னூர் நூலின் முடிபு நோக்கியெனவே வழியும், மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங் குமரியாகிய எல்லையினெனவே எல்லையும், இலக்கண விளக்கமென்றொருபெயர் நிறீஇயெனவே நூற்பெயரும், தொகை வகைவிரியிற் பகருகவென்றலெனவே யாப்பும், எழுத்து முதன் மூன்றையுமெனவே நூதலியபொருளும், யாவருந் தெரியவெனவே பயனும், மேதகுபுகழ்த் திருவேங்கடநாதனேனினைவெனவே காரணமும், அவன்காலத்தெனவும் அவன் அவைக்களத்தெனவும் அவன் அவையுள்ளார் கேட்டாரெனவுங் காலமுங்களனும் கேட்டோருமாகிய பதினெருவகையும் இச்சிறப்புப்பாயிரத்துட் போந்தவாறுணர்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.



பாயிரம் முற்றுப் பெற்றது.



கணபதி துணை.

இலக்கணவிளக்கம்.

முதலாவது

எழுத்ததிகாரம்.

க-வது எழுத்தியல்.

க. மலைமக ளொருபான் மணந்துல களித்த
தலைவனை வணங்கிச் சாற்றுவ னெழுத்தே.

என்பது சூத்திரம். இவ்வதிகாரம் எழுத்துணர்த்தினமையான் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுத்தையுணர்த்திய அதிகாரமென விரிக்க. எழுத்தென்றது அதன் இலக்கணத்தை. அதிகாரமென்றது முறைமை. இவ்வதிகாரத்துள் ஐவகை ஒத்திருன் எழுத்திலக்கணம் உணர்த்துகின்றூர், அவற்றுள் இம்முதலோத்து மொழியாக்கமும் அம்மொழிகள் தம்மோடும் உருபோடும் புணர்வு ழித் தோன்றுந் செய்கையும்போலன்றித் தனித்தும் மொழிப்பதித்தும் எழுத்தின்கட் கிடப்பனவாகக கூறும் எண் பெயர் முதலிய பத்திலக்கணமும் உணர்த்திற்றுகலான் எழுத்தியலென்னும் பெயர்த்து இதனுள் இத்தலைச்சூத்திரம் கூறத்தொடங்கிய பொருள் இனிது முடியும்பொருட்டு வணக்கமும் அதனுன் முடிபெய்தும் பொருளும் உணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங்கூறுகின்றது.

இதன்பொருள். மலையரசன் மகளாகிய உமாதேவியைத் தனதொரு கூற்றின்கண்ணே கலத்து உலகத்தைப் படைத்த இறைவனைத்தொழுது யான்கூறுவன் எழுத்திலக்கணத்தை என்றவாறு.

மலையென்பது மங்கலமொழியாதலின் முதற்கண் மங்கலங் கூறுதன் முறைபெனக்கருதி மலையென்றும், இத்தூல் நின்று நிலவுதல்

வேண்டி மலைமகளொருபான் மணக்தென்றும், மலரோன்செயலும் இவன்செயலென்பார் உலகளித்தவென்றும், யாவர்க்கும் உயர்ந் தோனென்பார் தலைவனென்றும், "மனமொழி மெய்களின் வணங் குதி மகிழ்க்தே"என்பவாகலின் மனத்தாற் றணிவுதோன்ற நினைத் தலும் மொழியாற் பணிவுதோன்ற வாழ்த்தலுக் தலையாற் றணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்படவணங்கியென்றும், அவ்வாறு வணங்கியோனுல் யாதும் முடிபெய்துதலிற் சாற்றுவ னென்றும், ஆருபெயரான் எழுத்திலக்கணத்தை எழுத்தென்றுங் கூறினர். மகனேயென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் தொக் கது, சூத்திரமுஞ் செய்யுளாகலின். (க)

உ. எண்பெயர் முறைபிறப் புருவளவு முதலீ
றிடைநிலே போலியொடு பதம்புணர் புளப்பட
வாறிரு பகுதித் ததுவென மொழிப.

இது மேற்கூறுவலென்ற எழுத்திலக்கணம் இனைத்துவகை யான் உணர்த்தப்படுமென்று அதுபடும் பாருபாடு தொருத்தமொ ழியான் வருத்துக்கூறுகின்றது.

இ - ள். எழுத்து இனைத்தென்கின்ற எண்ணும் இன்னபெ யரினவென்கின்ற பெயரும் இன்னமுறையினவென்கின்ற முறை யும் இன்னபிறப்பினவென்கின்ற பிறப்பும் இன்னவடிவினவென் கின்ற வடிவும் இன்ன அளவினவென்கின்ற அளவும் மொழிக்கு முதனிற்பன இவையென்கின்ற முதனிலேயும் இறுதிகிற்பன இவை யென்கின்ற இறுதிகிலேயும் இடைகிற்பன இவையென்கின்ற மயக் கமுஞ் சிலவெழுத்துக்கள்கூடிச் சிலவெழுத்துக்கள்போல இசைக் குமது கொள்ளற்கவென விலக்கும் எழுத்துப்போலியுமகிய பத் தஞ்டு அவ்வெழுத்தாஞகிய மொழியும் அம்மொழி தம்மோடும் உருபோடும் புணரும் புணர்ச்சியுமாகிய இரண்டுங் கூடப் பன் னிருவகையினையுடைத்தாம் மேற்கூறுவலென்ற எழுத்திலக்கண மென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உருவென்றது ஈண்டு வரிவடிவை. அது மனத்தாணுணரும் நுண்ணுணர்வில்லோரும் உணர்தற்பொருட்டு வட்டஞ் சதுரம் முதலிய வடிவிற்றாக வேறுவேறெழுதப்பட்டுக் கட்புலனுயே நிற் பது. கட்புலனுகாது கருத்துப்பொருளாயே நிற்கும் எ னவடிவுக் தன்மையும் முதனூலாசிரியனே உணருமாகலின் ஏனையோரால் உணர்தலரிது. அவ்வடிவு ஆராயுங்காலத்துக் குழலகத்திற்கூறிற் சூழல்வடிவுங் குடத்தகத்திற் கூறிற் குடவடிவும் வெள்ளிடையிற்

கூறின் எல்லாத்திசையும் கீர்த்தரங்கம்போலவும் பெற்றபெற்றவடி வே தமக்கு வடிவாமென்றுணர்க. எழுத்துக்களது குறைவுங் கூட்டமும் பிரிவும் இனமும் ஒன்றுபலவாதலுந் திரிந்ததன்றிரிபு அதுவென்றலும் பிறிதென்றலும் அதுவும்பிறிதுமென்றலும் நிலையிற்றென்றலும் நிலையாதென்றலும் நிலையிற்றும்நிலையாதுமென்றலுமாகிய இன்னோரன்ன பலவகையான் உணர்த்துவாருமுளர். அவற்றுட் திரிந்ததன்றிரிபு அதுவும்பிறிதுமென்றலும் நிலையிற்றும்நிலையாதுமென்றலுமாகிய இக்ஙயம்பற்றி இவர் இலக்கணங்கூறுமையின் இவையொழித்து ஏனையவெல்லாம் இப்பன்னிருபகுதியுள் அடங்கும். அவையடங்குமிடத்து எழுத்துக்களது குறைவுங் கூடமும் பிரிவுஞ் சார்பிற்றோற்றத்தும் இனம் பெயருள்ளும் முறையுள்ளும் ஒழிந்தனவெல்லாம் புணர்ச்சிக்கண்ணும் அடங்கும். அஃது ஆங்காங்குணர்க. (உ)

கூ. மொழிக்கா ரணமா நாதகா ரியவொலி
யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

இது மேலெழுத்தென்றது இன்னதென்பதூஉம் அதன்பகுதியும் உணர்த்துகின்றது.

இ - ள். மொழிக்கு முதற்காரணமாகியும் நாதத்தினது காரியமாகியும் வரும் ஓசை எழுத்தெனப்படும். அவ்வெழுத்து முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென இருபகுதியையுடைத்தாம். எ - று. உ

எழுத்தோசை காரணமாமாறும் மொழி அதன் காரியமாமாறும் நாதங் காரணமாமாறும் எழுத்தோசை அதன்காரியமாமாறும் பதவியலுள்ளும் பிறப்பியலுள்ளும் முறையே காண்க. கடலொலி சங்கொலி முற்று வீணை இலதை முதலிய ஒலிகள் எழுத்தெனப்படா, அவை மொழிக்குக் காரணமாகாமையின். (கூ)

சு. உயிரு முடம்புமென முதலிரு வகைத்தவற்
றுயிரீ ராறுமெய் மூவா றென்ப
வம்மூப் பானு மதனது விரியே.

இது மேற் தொகையான் ஒன்றுகக் கூறிய முதலெழுத்திற்கு வகையும் விரியுங் கூறுகின்றது.

இ - ள். உயிரும் ஒற்றுமென முதலெழுத்து இருபகுதியையுடைத்தென்றும் அவ்விரண்டினுள் உயிர் பன்னிரண்டென்றும்

மெய் பதினெட்டென்றும் அவ்விரண்டன்பகுதியாகிய முப்பதெழுத்தும் முதலெழுத்தினது விரியாமென்றுங் கூறுவர் ஆசிரியர். எ-று.

ங. குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாயதமோ டியிர்மெ யீரள பையெள
மஃகான் குறுக்க முள்ளுறுத் தொன்பதுஞ்
சார்பின் பால வென்மனு ரவற்று
ளுயிர்மெய் யிரட்டுநூற் றெட்டியி ரளபே
ழொற்றளபு பதினெனன் றெள்ளெண் றேணைய
வாயிரு நூற்றெண் ணீங்குமதன் விரியே.

இது மேற் தொகையான் ஒன்றுகக் கூறிய சார்பெழுத்திற்கு வகையும் விரியுங் கூறுகின்றது.

இ-ள். குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமுமாகிய மூன்றினோடு உயிர்மெய்யும் உயிரளபெடையும் ஒற்றளபெடையும் ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும் மகரக்குறுக்கமுமாகிய ஆறனையுந் தலைப்பெய்தலான் அவ்வொன்பதெழுத்துஞ் சார்பெழுத்தின் நிறத்தவாயினவென்றும் அவ்வொன்பதனுள் உயிர்மெய் இருநூற்றெட்டுபத்தாறென்றும் உயிரளபெடை ஏழென்றும் ஒற்றளபெடை பதினெனன்றென்றும் ஒழிந்த ஆறும் ஒரோவொன்றென்றென்றும் அவ்வொன்பதன்பகுதியாகிய இருநூற்றுமூன்பதும் அச் சார்பெழுத்தினது விரியாமென்றுங் கூறுவர் ஆசிரியர். எ று.

இவை இங்ஙனமாதல் தத்தம் விதிச்சூத்திரங்களுட் காண்க. எனவே, எழுதெனத் தொகையான் ஒன்றும் முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென வகையான் இரண்டும் அவ்விரண்டன்பகுதியுங்கூட்ட விரியாற் றமிழெழுத்து இருநூற்றெழுபதுமாமென உய்த்துணர்க.

"எழுத்தெனப் படிப,வகரமுந்—னகர விறுவாய் முப்பஃதென்ப—சார்த்துவரன் மரபின் மூன்றலஞ் கடையே." "அவைதாங், குற்றிய லிகரங் குற்றிய லுகர—மாய்த மென்ற—முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன" என இவ்வாறு முதல்சார்பென வகுத்துக் கொண்டவற்றுள் இவைமூன்றுஞ் சார்பெழுத்தென்ற ஆசிரியர் தொல்காப்பியனுஞ் ஏனையாறனையும் பின்னரொருநூற்றுமூ தமுவதலானும் மூன்றுவகைதோர் பகுதியின்முதலானும் முதலெழுத்தாக்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

தன்மை இவற்றிற்கு இன்மையானுஞ் சார்பிற் தோன்றுதலானும் இவ்வாறனையும அவற்றொடி தூவைப்பெய்தது ஒன்பதனுஞ் சார்பின்பாலவென்றார் இந்நூலுடையாரென்றுணர்க.

அற்றேல் ஆசிரியர் செய்யுளியலுட்கூறிய ஒற்றளபெடையை இவர் ஈண்டுக்கூறியதென்னையெனின், அவர் எதிரதுபோற்றி ஐகாரக்குறுக்கம் முதலியவற்றை எழுத்தோத்தினுள் உரைத்தாங்கு உரைத்ததென்க.

ஆய்தக்குறுக்கமொன்று உளதென்றும் அதனைங்கூடச் சார்பெழுத்துப் பத்தாமென்றும் அதன்விரிதொகை முந்நூற்றறுபத்தொன்பதாமென்றுங் கூறுவாரும் உளராலோவெனின், "குறிய தன் முன்ன ராய்தப் புள்ளி—யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே." என ஒருமொழிக்கணவரும் ஆய்தங்கூறி "ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்." என நிலைமொழியீறு வருமொழிமுதலொடு புணர்ந்தடக்குமிடத்துங் கஃறீது மூஃடீது எனத் தன் அரைமாத்திரையே இசைசகுந்தன்மை தோன்றுமென ஆசிரியர்தொல்காப்பியனர் அதனைப் புணர்மொழிகணவரும் ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தகுறுக்கமொன்று இன்றெனவும் இன்முகவே சார்பெழுத்துப் பத்தாமென்றல பொருந்தாதெனவும் உயிர்மெய்யொழிதது ஏனையவெல்லாம் இடவேற்றுமையானன்றி எழுத்துவேற்றுமையான் அங்ஙனம் பல்காமையிற சார்பெழுத்து முந்நூற்றறுபத்தொன்பதாமென்றல் நிரமபாதெனவும் மறுக. இன்னும் இடையொற்றுக்கள் டகரறகரங்களோடு தொடராமைக்கு அவர் மெய்ம்மயக்கங் கூறிய சூத்திரங்களே கரியாகலிற் குற்றுகரக் குற்றுகரங்கட்கு அவ்விடவேற்றுமையுஞ் சாலாமையறிக.

சூ. அகர முதலவீ ராறுமுயி ரவற்றுளா
அஇ உள ஒக்குறில் ஆஈ
ஊஎ ஐஒ ஔநெடில அஇ
உஇலவை மொழிமுதல வரிற்சுட டெய்யா
முதலு மாவோ விறுதியு மேயிரு
வழியும வினுவென வழுங்கு மென்ப.

நிறுத்தமுறையானே பெயர்கூறுவனவற்றுள் இஃது உயிர்பெறும் பெயர்வேற்றுமை கூறுகின்றது.

இ-ள். அகரமாகிய முதலையுடைய பன்னிரெழுத்தும் உயிரென்றும் பன்னிரண்டுடன் அ இ உ எ ஒ என்கின்ற ஐந்தும்

குறிலென்றும் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்கின்ற ஏழும் நெடிலென்றுங் குற்றெழுத்துள் அ இ உ என்கின்ற இம்மூன்றும் மொழிமுதற்கட் சுட்டுப்பொருளுணர்த்திவரிற் சுட்டென்றும் எகரமும் யகரவாகாரமும் மொழிமுதற்கண்ணும் நெட்டெழுத்துள் ஆகார ஓகாரங்கள் ஈற்றின்கண்ணும் ஏகாரம் முதலினும் ஈற்றினும் வினுப்பொருளுணர்த்திவரின் வினுவென்றும் பெயர்பெற்று நடக்குமென்று கூறுவர் ஆசிரியர். எ – று.

இது தொகைவகைவிரிபடச் செய்கின்ற நூலாகலானும் பொருளொப்புமையானும் உயிர்மெய்யும் உடன்கூறினர்.

மொழிமுதலீறுகளின் வரினைனப் பொதுப்படக் கூறியவதனுன் இவை தத்தங்குறிப்பிற் பொருள்செய்த இடைச்சொற்களாய் ஒருமொழியைச் சார்ந்தும் அதற்குறுப்பாயும் ஏற்றபெற்றி வருமெனக் கொள்க.

வரலாறு; அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் அவன் இவன் உவன் எப்பொருள் எவன் யா யாவன் உண்கா உண்கோ உண்கே ஏவன் எனவரும். பிறவும் அன்ன.

மொழிமுதற்கட் தனித்துவரிற் சுட்டென்றுரும் உளராலெனின், "சுட்டுவகரம்" எனவுஞ், "சுட்டின்முன்னுய்தம்" எனவும, உறுப்பாய்வருவனவற்றையுஞ் சுட்டென்று அவர்தாமே ஆளுதலானும் ஆசிரியர் தொல்காப்பியனுரும் "அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு" எனப் பொதுப்படக்கூறிச் "சுட்டுமுதலகரம்" எனவுஞ், "சுட்டுமுத லாகிய வையெனிறுஞ்" எனவும், பிறுண்டும் உறுப்பாய் வருவனவற்றையுஞ் "சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்" எனவுஞ், "சுட்டி னியற்கை" எனவும், பிறுண்டுஞ் சார்ந்துவருவனவற்றையுஞ் சுட்டென்றுளுதலானும் அவர்க்கது கருத்தன்றென்க. (சு)

எ. கக ரமுதலமு வாறுமெய் யவற்றுட்
கசட தபற வல்லெழுத்து மெல்லெழுத்து
ஙஞண நமன விடையெழுத் துணரின்
யரல வழள வென்மனர் புலவர்.

இது மெய்பெறும் பெயர்வேற்றுமை கூறுகின்றது.

இ - ள். ககரமாகிய மூதலெயுடைய பதினெட்டெழுத்தினெயும் மெய்யென்றும் அப்பதினெட்டனுட் சகடதபறவென்னும் ஆறனெயும் வல்லெழுத்தென்றும் ஙஞணநமனவென்னும் ஆறனெயும் மெல்லெழுத்தென்றும் யரலவழளவென்னும் ஆறனெயும் இடையெழுத்தென்றும் பெயரிட்டு ஆள்வர் அறிவுடையோர் பெயர்நிலெமையை ஆராயுமிடத்து. எ - று.

உணரினென்றதனுன் முதல் சார்பு குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தமென்றற்றொடக்கத்துப் பெயர்களும் ஆவி உடம்பு உறப்பு ஒற்று உடல் புள்ளி அஃகேனக் தனிநிலெயென்றற்றொடக்கத்துப் பரியாயநாமங்களும் ஏகார ஓகாரக்கள் வினுப்பொருளுணர்த்திவரின் வினுவெனப் பெயர்பெறுதலெயன்றிப் பிரிநிலெ மூதலிய பொருளுணர்த்திவரிற் பிரிநிலெமூதலிய பெயர்பெறுதலும் ஒழியிசைமூதலியபொருளுணர்த்திவரின் ஒழியிசைமூதலியபெயர் பெறுதலும் இவைவருதல் பெரும்பான்மையும் ஈற்றின்கண்ணெயெனவுங் கொள்க. இன்னும் அஆமூதலிய அஆமூதலியபெயர் பெறுதலும் உயிர்மெய்யாகியகாலத்தும் உயிர்மெய்குறில் நெடில் வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்து எனப் பெயர்பெறுதலுந் தனியெழுத்திற்கேலாது வல்லினம் மெல்லினம் இடையினம் எனத் தொகுதிபற்றிவரும் பெயர்களுங் கொள்க.

இக்குறிகள் ஆட்சியுங் காரணமும் நோக்கி ஒன்றற்குரியவாயும் பலவற்றிற்குரியவாயும் வருமெனக்கொள்க. பலவற்றிற்குரியவாயும் வருமென்றலின் அப்பலவும் ஓரினமாதலும் பெற்றும். இவற்றையாஞமாறு ஆங்காங்குணர்க.

உயிர்போல மெய்களே இயக்குதலான் உயிரென்றுந், தமக்கினமாகி ஈரளபிசைக்கும் நெட்டெழுத்துக்களே நோக்கத் தாங்குறியவாய் ஓரளபிசைத்தலாற் குறிலென்றுந், தமக்கினமாகி ஓரளபிசைக்குங் குற்றெழுத்துக்களே நோக்கத் தாம் நெடியவாய் ஈரளபிசைத்தலான் நெடிலென்றுஞ், சுட்டுப்பொருளுணர்த்தலாற் சுட்டென்றும், வினுப்பொருளுணர்த்தலான் வினுவென்றும், மெய்போல உயிரான் இயங்குதலான் மெய்யென்றும், மெல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கத் தாம் வல்லென்றிசைத்தலானும் வல்லென்ற தலைவழியாற் பிறத்தலானும் வல்லெழுத்தென்றும், வல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கத் தாம் மெல்லென்றிசைத்தலானும் மெல்லென்ற மூக்குவழியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தென்றும், மெல்லெழுத்தையும் வல்லெழுத்

தையும் நோக்கத் தாம் இடைநிகரவாயொலித்தலானும் இடைநி
கர்த்தாய மிடற்றுவழியாற் பிறத்தலானும் இடையெழுத்தென்றுந்,
தம்மால் இயலுஞ் சார்பெழுத்திற்குக் காரணமாகி முதனிற்றலான்
முதலெழுத்தென்றும், அவையே தம்மொடு தாஞ்சார்ந்தும் இடஞ்
சார்ந்தும் பற்றுக்கோடசார்ந்தும் தோன்றலாற் சார்பெழுத்தென்
றும், ஓளபிசைக்கும் இகர உகரங்குறுகி அரையளபாயிசைத்த
லாற் குற்றியலிகரங் குற்றியலுகரமென்றும், அடிப்புக்கூட்டுப்
போல ஆய்தவடிவிற்றாக எழுதப்படுதலான் ஆய்தமென்றும், உயி
ரும்மெய்யுங்கூடி ஒலித்தலான் உயிர்மெய்யென்றும், உயிரளபெ
டுத்தலான் உயிரளபெடையென்றும், ஒற்றளபெடுத்தலான் ஒற்றள
பெடையென்றும், ஈரளபிசைக்கும் ஐகார ஔகாரங் குறுகி ஓரள
பிசைத்தலான் ஐகாரக்குறுக்கம் ஔகாரக்குறுக்கமென்றும், அரை
யளபிசைக்கும் மகரங்குறுகிக் காலளபிசைத்தலான் மகரக்குறுக்க
மென்றும், அ ஆ என்பன அ அ என இசைத்தலான் அஆ என்றுங்
காரணக்குறியாயினவாறுணர்க. பிறவும் அன்ன.

ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடியவாதற்குக் குற்
றெழுத்தாகிய இனந் தமக்கின்றேனும் அளவொப்புமையான் நெடி
லாமெனக்கொள்க. மெய் குற்றெழுத்திற்குறுகி அரையளபிசைக்கு
மேனுங் குற்றெழுத்தெனப்பெறு ஓளபிசைக்கும் மெய் தமக்கின
மாக இன்மையின். (எ)

அ. தோற்ற மளபு செய்கை பொருள்வடி
வேற்றன வொத்தலி னேற்புடை யினத்தினுஞ்
சிறப்பினு நெறிப்படச் செறிந்தீண் டம்முத
னடத்த ருனே முறையெனல் வேண்டும்.

இது நிறுத்தமுறையானே முறைகூறுகின்றது.

இ - ள். இடனும் முயற்சியுமாகிய பிறப்பும் மாத்திரையும் புணர்ச்சிக்கப்பட்டுஞ் செய்கையும் பொருளும் வடிவுமாகிய இவற்றுட் பொருந்தியன ஒத்தலான் ஒன்றற்கொன்று பொருத்தமுடைய இனத்தினுஞ் சிறப்பினுமொழுங்குபட ஒன்றன்பின்னர் ஒன்று இயைந்து நெடுங்கணக்கினுள் அரமுதலாக நடத்தருனே நூலுள்ளும் முறையென்ற சொல்லுதலே விரும்பும் ஆசிரியன். எ - று.

நெறிப்பட என்றதனுற் தப்மிற் சேர்ந்துவருஞ் சொற்கள் பலவாதலுஞ் சந்தவின்பத்திற்கு இயபுடைமையும் இன்னோன்

னபிறவும் இனமாதற்கும் இனமாதற்கு இயையுடையன முறை யாதற்குங் காரணமாமெனக்கொள்க. முறைக்கு எதுச்செய்வார் போன்று இனம் அடைத்தலுஞ்செய்தாரென்பதூஉமாயிற்று. ஒப் புழி முழுதொத்தலும் ஒருபுடையொத்தலும் ஓர்ந்துணர்க.

வரலாறு; அஆக்கள் பிறப்பானுஞ் செய்கையானும் அங்கு ஆங்கு என்னும் பொருளானும் வடிவானும்,இஈக்கள் பிறப்பானுஞ் செய்கையானும் இங்கு ஈங்கு என்னும் பொருளானும், உஊக்கள் பிறப்பானுஞ் செய்கையானும் உங்கு ஊங்கு என்னும் பொருளா னும் வடிவானும், எஏக்கள் பிறப்பானுஞ் செய்கையானும் எவன் ஏவன் என்னும் பொருளானும் வடிவானும், ஒஓக்கள் பிறப்பானுஞ் செய்கையானும் வடிவானும் ஒத்து ஓரினமாயின. இன்னும் இவை அளபெடுப்புழி நெட்டெழுத்தோடு குற்றெழுத்திற்கு ஓசை இசை யுமாற்றானும் ஓரினமாமென்றுணர்க. குற்றெழுத்துக்களே முன்ன கக் கூறி அவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்களே அவற்றின் பின்னுகக் கூறினர், ஒருமாத்திரைகூறியே இரண்மோத்திரை கூறவேண்டுதலின். அன்றி இரண்டை முற்கூறின் ஆகாது, ஒன்று நின்று அதனோடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டாவதன்றி இரண்டென்பதொன்று இன்மையின். இதனுன் ஒன்றுதான் பல கூடியே எண்ணிறந்ததென்றுணர்க. கங்களுஞ் சஞ்களும் டணக் களுந் தநக்களும் பமக்களுப் முயற்சியானும் மாத்திரையானுஞ் செய்கையானும், யரக்கள் இடத்தானும் மாத்திரையானுஞ் செய் கையானும், லவக்கள் இடத்தானும் மாத்திரையானுங் கல்வலிது சொல்வலிது என்றுற்போலத் தம்மிற் சேர்ந்துவருஞ் சொற்கள் பலவாதலானும், ழளக்கள் இடத்தானும் மாத்திரையானும் இடை யெழுத்து யரலவழள என்றுற் சுத்தவின்பத்திற்கு இயைபாதலா னும், றனக்கள் முயற்சியானும் மாத்திரையானுஞ் செய்கையானும் ஒத்து ஓரினமாயின.

இனி முறைவருமாறு; "அகர முதல வெழுத்தெல்லா மாதி— பகவன் முதற்றே யுலகு." எனத் திருவள்ளுவனுர் உவமைகூறிய வாற்றானுங் கண்ணன் எழுத்துக்களுள் அகரமாய் நின்றேன்யான் என உண்மைகூறியவாற்றானும் இறைவன் எல்லாப்பெருளின்கண் ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமாறு எல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகரமும் எல்லாவெழுத்தின்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்ததாகலான் அச்சிறப்பு நோக்கி எல்லாவெ ழுத்திற்கும் முன்னர் அகரமும் அதற்கினமாதலின் அதன்பின்

னர் ஆகாரமும், பிறப்புஞ் செய்கையுஞ் சுட்டுப்பொருட்டாதலும் அகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின்பின்னர் இகரமும் அதற் கினமாதலின் அதன்பின்னர் ஈகாரமும், இடமுஞ் செய்கையுஞ் சுட்டுப்பொருட்டாதலும் இகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற் றின்பின்னர் உகரமும் அதற்கினமாகலின் அதன்பின்னர் ஊகார மும், இடமுஞ்செய்கையும் உகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற் றின்பின்னர் எகரமும் அதற்கினமாதலின் அதன்பின்னர் ஏகா ரமும், பிறப்புஞ் செய்கையும் எகாரத்தோடுஅளவும் ஒத்தலிற் றனக்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின்பின்னர் ஐகா ரமும், இடனுஞ் செய்கையும் ஒத்தலின் அதன்பின்னர் ஒகர மும அதற்கினமாதலின் அதன்பின்னர் ஓகாரமும், பிறப்புஞ் செய் கையும் வடிவும் ஓகாரத்தோடு அளவும் ஒத்தலிற் றனக்கினமா கிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின்பின்னர் ஔகாரமும் தம் முள் இயைய வைக்கப்பட்டன. முதலுவும் முதலண்ணமும் உறப் பிறத்தலான் மெய்களின்முன்னர்க் ககரமும், அதற்கினமா தலின் அதன்பின்னர் ஙகரமும், இடைநாவும் இடையண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுங் ககரத்தோடு இடமொத்தலா னும் அவற்றின்பின்னர்ச் சகரமும், அதற்கினமாதலின் அதன்பின் னர் ஞகரமும், நுனிநாவும நுனியண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுஞ் சகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின்பின்னர் டகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ணகரமும்,நுனிநாவும் அண்பன்முதலும் உறப் பிறத்தலானும் அளவானும் டகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின்பின்னர்த் தகரமும், அதற்கினம தாதலின் அதன்பின்னர் நகரமும், இதழியையப் பிறத்தலானும் அளவானுந் தகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின்பின்னர்ப் பகரமும் அதற்கினமாதலின் அதன்பின்னர் மகரமுந் தம்முள் இயைய வைக்கப்பட்டன. வல்லெழுத்துக்களே முன்னுகக் கூறி அவற்றிற்கினமொத்த மெல்லெழுத்துக்களே அவற்றின் பின்னுகக் கூறி இடையெழுத்தாறனையும் அவற்றின் பின்னுகக் கூறினர், வல் லெழுத்துள் நான்கும் மெல்லெழுத்துள் மூன்றும் இடையெழுத் துள் இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கியென்றுணர்க. உயிர்கள்போல மிடற்றுப் பிறந்த வளி கண்ணுற்றடையப் பிறத்த லான் இடையெழுத்துக்களுண் முன்னர் யகரமும், அதற்கினமாத லின் அதன்பின்னர் ரகரமும், இடமும் அளவும் ஒத்தலானுஞ் சந்த வின்பத்திற்கு இயையுடைமையானும் அவற்றின்பின்னர் லகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் வகரமும், இடமும் அளவும் வகரத்தோடு முயற்சியும் ஒத்தலானும் சந்தவின்பத்திற்கு இயை

புடைமையானும் அவற்றின்பின்னர் ழகரமும், அதற்கினமாத லின் அதன்பின்னர் ளகரமும், அளவானும் ழகரம்போலத் தமிழெழுத்தாகலானும் அவற்றின்பின்னர் றகரமும், அதற்கினமா தலின் அதன்பின்னர் னகரமும் தமமுள் இயைய வைக்கப்பட்டன. றகரனகரங்களே வல்லினமெல்லினங்களேச் சாரவையாது இறுதிக்கண்வைத்தார் இவை தமிழெழுத்தென்பது அறிவித்தற்கும் னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்மகனேயுணர்த்துஞ் சிறப்பானுமென்றுணர்க. தோற்றம் முதலிய ஒத்தல் அவ்வவ்வதிகாரத்துட் காண்க. ஈண்டுக் காட்டிய எதுக்களேயன்றிப் பிறவருவன உளவேனுங் கொள்க. சார்பெழுத்துக்களுள் ஆய்தம் அகர ஆகாரங்கள் போல அங்காந்துகூறும் முயற்சியாற் பிறத்தலானும் உயிரேருது ஓசைவிகாரமாய் நிற்பதொன்றேனும் எழுத்தியல் தழா ஓசைபோலக் கொள்ளினுங் கொள்ளற்க, எழுத்தேயாமென்று ஒற்றின்பாற் படுத்தற்குப் புள்ளியெனப் பெயர்பெறுதலானும், உயிரும் ஒற்றுமாகிய இரண்டற்கும் இடையேவைக்கப்பட்டது. ஒழிந்த சார் பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களோடு ஒத்தமுறையே முறையாக முறைபெற்றுகடக்குமென்றுணர்க. ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் இனமென்றாரும் உளராலோவெனின், அவர்கூறிய இனம்பற்றி முறைபெறுமையானும் ''குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு—மெட்டெழுத் திம்ப மொத்த குற் றெழுத்தே.'' எனக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனுர் ஒத்த குற்றெழுத்தில்லாத ஐகார ஔகாரங்கட்கு இசைநிறைப்பன யாவையென ஆசங்கித்து ''ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்—கிகர வுகர மிசைநிறை வாகும.'' எனக் கூறியதன்றி இனமாமெனக் கூறுமையானும் அது முறையன்றென மறுக்க. (அ) ூ

கூ. உயிருழப் புதாஎனி ஞத மூச்சி
மிடறுர மூக்குற் றிதழ்நாப் பலலணத்
தடைந்து பின்ன ரவற்றது வினையான்
வேறுவே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

நிறத்தமுறையானே பிறப்பு உணர்த்துவனவற்றுள் இஃது அதன் பொதுவியல்பு உணர்த்துகின்றது.

இ - ள். உயிர்கழிவனது முயற்சியான் எழுகின்ற உதான னென்னுங் காற்றுல் நாதந் தலையும் மிடறும் நெஞ்சும் மூக்குமென்னும் இக்கான்குநிலைக்களத்துஞ் சென்று பொருந்தி இதழும் நாவும் பல்லும் அண்ணமுமென்னும் இக்கால்வகை உறுப்புக்களே

யுஞ் சார்ந்து பின்னர் அவற்றது புடைபெயர்ச்சியான் வேறுவேறு வகைப்பட்டு எழுத்தோசையாய்ச் செவிப்புலனுக வெளிப்படுதல் எழுத்துக்களது பிறப்பாம். எ - று.

வேறுவேறுவகைப்பட்டு எழுத்தோசையாய்ச் செவிப்புலனுக வெளிப்படுதல் எழுத்துக்களது பிறப்பாமெனவே, பரை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நால்வகை வாக்கினுள் அகத்தெழுவனவாகிய பரைமுதன் மூன்றனையும் ஒழித்தெழுந்து புறத்திசைப்பதாகிய வைகரிவாக்கினையே ஈண்டிவர் எழுத்துக்களது பிறப்பாமென்றுரைன்பதுஉம் பெற்றும். அவற்றின் விகற்பமெல்லாஞ் சைவாகமத்தானுணர்க. ''எல்லா வெழுத்தும் வெளிப்படக் கினந்து—சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்—பிறப்பொடு விடு வழி யுறழ்ச்சி வாரத்—தகத்தெழு வளியிசை யளிறப நாடி—யள விற் கோட லந்தணர் மறைத்தே—யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு—மெய்தெரி வளியிசை யளவுவுவன் றிசினே.'' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனுமெனக்கொள்க. முற்கு வீனை முதலியனவும் முயற்சியானுமெனும் மொழிக்காரணமாகிய எழுத்தோசையாய்ப் புலப்படாமையின் ஈண்டைக்கு ஏலாவெனக்கொள்க. (கூ)

கo. அவ்வழி யாவி யிடைமிட றுச்சி
வல்லை மெண்மைமூக் கிசையிற் றோன்றும்.

இது முதலெழுத்துக்கள் இங்ஙிலக்களங்களில் நிலைபெறும் ஓசையாற் பிறக்குமென்று அவற்றது பொதுப்பிறவி கூறுகின்றது.

இ - ள். மேற்கூறிய நிலைக்களங்களுட் பன்னீருயிரும் இடையெழுத்தாறும் மிடற்றின்கண்ணும் வல்லெழுத்தாறுந் தலையின்கண்ணும் மெல்லெழுத்தாறும் மூகத்தின்கண்ணும் நிலைபெற்றிசைக்கும் ஓசையாற் பிறக்கும். எ - று. (கo)

கக. அவற்றுண் முயற்சியுள் அஆ வங்காந்
தஈ எஏ ஐகா னதடிறு
டண்பன் மூதனு விளிப்புற உஊ
ஒஓ ஔகா னிதழ்தூவிந் தியலும்.

இது மேற் பொதுப்பிறவி கூறிய முதலெழுத்துக்களுள் உயிர்கள் இம்முயற்சிகளாற் பிறக்குமென அவற்றது சிறப்புப்பிறவி கூறுகின்றது.

இ - ள். மேற் பொதுப்பிறவிகூறிய முதலெழுத்துக்களுள் அகர ஆகாரங்கள் முன்னர்க்கூறிய நால்வகைமுயற்சியுள் அங்காந்துகூறும் முயற்சியானும், இகர ஈகார எகர ஏகார ஐகாரங்கள் அவ்வங்காந்துகூறும் முயற்சியோடு அண்பல்லும் அடிநாவிளிம்பும் உறக்கூறும் முயற்சியானும், உகர ஊகார ஒகர ஓகார ஔகாரங்கள் இதழ்குவிந்துகூறும் முயற்சியானும பிறக்கும். எ - று. அன்னவாதல் கூறிக்காண்க.

அண்பல் வினைத்தொகையாய் நாவிளிம்பு அணுகுதற்குக்காரணமாகிய பல்லென்று அதற்கோர் பெயராயிற்று, தந்து புணர்ந்திரைத்தலென்னும் உத்தியான். அவற்றுள் முயற்சியுள் என்பதனை மேலும் வருவிக்க. (உக)

கஉ. முதலிடை நுனிநா வண்ணமுமுறுமிற்
கஙவும சஞவும் டணவு மநப
லடிநா முடியுறத் தகவு மீகீ
ழிதழுறப் பகார மகார மிரண்டு
மண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரமு மண்ண
நுனிநா வருட ரழவு மணபன்
முதலு மண்ணமு முறையினு விளிம்பு
வீங்கி யொற்றவும் வருடவும லளவு
மேற்பல் லிதழுற வகாரமு மண்ண
நுனிநா வொற்ற னவுந தோன்றும்.

இது மேற் பொதுப்பிறவி கூறிய முதலெழுத்துக்களுண்மெய்கள் இம்முயற்சியாற் பிறக்குமென அவற்றது சிறப்புப்பிறவி கூறுகின்றது.

இ - ள். முதலுவும் முதலண்ணமும் இடைகாவும் இடையண்ணமும் நுனிநாவும் நுனியண்ணமுஞ் செறியக்கூறும் முயற்சியான் முறையானே ககர ஙகரங்களுஞ் சகரஞகாரங்களும் டகர ணகரங்களும், அண்பண்முதலும் நாவினதுநுனியுஞ் செறியக்கூறும் முயற்சியால் தகாநகாரங்களும், மேலிதழுங் கீழிதழுஞ் செறியக்கூறும் முயற்சியாற் பகாமகாரங்களாகிய இரண்டும், அண்ணத்தைப்பொருந்திய மிடற்றின்கண்ணே நிலைபெற்று எழாநின்ற காற்

முனைய ஓசை அவ்வண்ணத்தை அணைந்து உரலாணியிட்டாற்போலச் செறியக்கூறும் முயற்சியால் யகரமும், அண்ணத்தை நாநுனி தடவக்கூறும் முயற்சியால் ரகரழகரங்களும், அண்பல்லடியையும் அண்ணத்தையும் முறையானே நாவிளிம்பு தடித்துத் தீண்டவுந் தடவவுங் கூறும் முயற்சியால் லகரளகரங்களும், மேற்பல்லுங் கீழி தழும் இயையக்கூறும் முயற்சியால் வகரமும், அண்ணத்தை நாவினது நுனி மேனெக்கிச்சென்றுதீண்டக் கூறும் முயற்சியால் றகர னகரங்களும் பிறக்கும். எ - று.

உயிர்மெய்யாகக் கூறினுந் தனிமெய்யாகச் சேக்கை வேங்கை என மொழிப்படுத்து அன்னவாதல் கூறிக்காண்க. பிறவும் அன்ன.

ஈண்டு மிடற்றெழுவளியிசை என்றது அனுவாதம். "அடிநா வடியண முறையுத்தோன்றும்." என்ருர் அதன் இயல்பு உணராமை; மெய்பொய்யெனக் கூறிக்காண்க. (கஉ)

கஙு. ஆய்தநெஞ் சோசையி னங்காங் கியலுஞ்
சார்பெழுத் தேனவுந் தம்மூத லனைய.

இது சார்பெழுத்துக்கள் இக்கிலக்களங்களின் நிலைபெறும் ஓசையானும் இம்முயற்சியானும் பிறக்குமென அவற்றின் பொதுவுஞ் சிறப்புமாகிய இருகூற்றுப்பிறவியுங் கூறுகின்றது.

இ - ள். ஆய்தவெழுத்து நெஞ்சின்கண் நிலைபெற்றொலிக்கும் ஓசையானும் அங்காங்கு கூறும் முயற்சியானும் பிறக்கும். சார்ந்துவருவனவாகிய ஒழிந்த எழுத்துக்களின்பிறவியுந் தத்தம் மூதலெழுத்துக்களின் பிறவியையொக்கும். எ - று. அன்னவாதல் கூறிக்காண்க. (கங)

கச. தந்தந் திரிபே சிறிய வென்ப.

இது மேலனவற்றிற்கோர் புறனடைகூறுகின்றது.

இ - ள். ஒவ்வொரு தானங்களுட் பிறக்கின்ற எழுத்துக்களைக் கூட்டிக் கூறினேமாயினும் நுண்ணுணர்வான் ஆராயுமிடத்துத் தம்முடைய வேறுபாடுகள் சிறியவாகவுடையவென்று கூறுவர் புலவர் அவ்வேறுபாடுகள் அறிந்துகொள்க. எ - று.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்றவாற்ருனும் தலையிசை மிடற்றிசை நெஞ்சிசை மூக்கிசை என்றவாற்ருனும் பிறவாற்ருலும் வேறுபடுதல். ஐ விலங்கலுடையது. (கச)

கடு. யகரம் வரக்குற ளுக்தப வரூஉ
மிகரமு மியாவி னிகரமுங் குறிய.

இது மேற்பிறவிகூறப்பட்ட சார்பெழுத்துக்களுக்குச் சார்ந்துவரும் இயல்பும் ஓர்பிறவியாதலின் அப்பிறவி கூறுகின்றவற்றுள் இஃது இடனும் பற்றுக்கோடுஞ் சார்ந்து குற்றியலிகரமாமாறு கூறுகின்றது.

இ - ள். யகரமுதன்மொழி வருமொழியாய்வந்து புணரிலேமொழிக்குற்றுகரவெழுத்துக் கெட ஆண்டுவரும் இகரமும் முன்னிலையசைச்சொல்லாய்வரும் மியாவென்னும் இடைச்சொல்லின் மகரத்தையூர்ந்துநின்ற இகரமுங் குற்றியலிகரமாம். எ - று.

எனவே, புணர்மொழியகத்தும் ஒருமொழியகத்தும் வருமென்பதாயிற்று.

உ-ம். நாகியாது எஃகியாது வரகியாது கொக்கியாது குரங்கியாது தெள்கியாது எனவும், கேண்மியா எனவும், வரும். பிறவும் அன்ன. இங்ஙனம்வரும் புணர்மொழியும் ஒருமொழியும் இடம். இகரஞ்சார்ந்த வல்லெழுத்தும் மகரமும் பற்றுக்கோடு வல்லெழுத்தும் மகரம்போல யகரமும் இகரங்குறுகுதற்கோர் சார்பு. (கடு)

கக. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடரமொழி யிறுதி வண்மையு ருகர
மஃகு மென்மனோ ரியுங் காலே.

இஃது இடனும் பற்றுக்கோடுஞ் சார்ந்து குற்றியலுகரமாமாறு கூறுகின்றது.

இ - ள். நெட்டெழுத்தின்பின்னும் ஆய்தமும் உயிரும் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் இடையெழுத்துமென்று இவை தொடர்ந்த மொழியீற்றின்கண்ணும் நின்ற வல்லெழுத்துக்களோடு ஊர்ந்துநின்ற உகரந் தன் அளவிற் சுருங்குமென்று கூறுவர் ஆசிரியர் ஆராயுமிடத்து. எ - று.

வேற்றுமையம்பற்றி உயிர்த்தொடர்மொழியென்றார். தொடர்மொழியிறுதிவன்மையென நிலத்ததகலம்போல ஒன்றியற்கிழமைப்பட்டுநின்றது அம்மொழியிற்றீர்ந்து அவை நில்லாமையின். வன்மையெனப் பொதுப்படக்கூறுதலானே ஆறனையுந் தொடர வேண்டுமென்னும் யாப்புறவின்றி ஏற்றபெற்றி தொடருமெனக்

கொள்க. இடையொற்றுறும் வல்லொற்றுட் சிலவற்றோடன்றி ஆறேடும் மயங்காமையின்.

உ-ம். ஈரு எஃகு வரகு கொக்கு சுரங்கு தெள்கு எனவரும். பிறவும் அன்ன. இவ் அறுவகைமொழியும் இடம். ஈற்றுவல்லெழுத்துப் பற்றுக்கோடு.

ஆயுங்காலேயென்ற இலேசான் ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடராகா எனவும், ஈர்க்கு மொய்ம்பு என வன்றொடரும் மென்றொடருமாமெனவும், தந்தையென்னும் முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகரமிசை நகரமூர்த்தினின்ற உகரங் குற்றியலுகரமாமெனவும், வல்லொற்றுதொடர்மொழிக்குற்றுகரம் வல்லெழுத்துவருவழிச் செக்குக்கூண சுக்குக்கோடி எனத் தன் அரைமாத்திரையினுங் குறுகுமெனவுங் கொள்க. இஃது அங்ஙனங் குறுகியவாறு சுரங்குகடிதென்பது முதலியவற்றோடு படித்துச் செலிகரு வியாக வுணர்க. இதற்கு வல்லொற்றுத்தொடர்மொழியும் வல்லெழுத்துவரும்வழியும் இடம். ஈற்றுவல்லெழுத்துப் பற்றுக்கோடு. தந்தையுகரத்திற்கு முறைப்பெயர் இடம். நகரம் பற்றுக்கோடு. "நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை—யொற்றோடு வருதலோடு சுற்றுற்று நிறுதியென்—றேழ்ரும் றுகரக் கிடனென மொழிப." என எழிடங்கொள்வார்க்குப் பிண்ணுக்கு சுண்ணுப்பு முதலியனவும் ஆய்தத்தொடர்த்தனவும் அடங்காமையும் அவ்வேழும் இவ்வாறனுள் அடங்குமாறும் அறிக.

செவ்வெண்ணுக எண்ணுது நெடிலோடெனப் பிரித்தார் அதனீற்றுக்கணின்ற உகரம் ஈரெழுத்தொருமொழிக் குற்றுகரமென்பது அறிவித்தற்கு. எனவே, கீடாது சுறுகாது வடாது தெனுது முதலிய மொழியீறுநியுகரம் உயிர்த்தொடர்மொழிக் குற்றுகரமாவதல்லது நெடிலீறுநிக்கணின்ற குற்றுகரமாகாதெனவும், நெட்டெழுத்திறுதி தொடர்மொழியிறுதி எனவே அது இது முதலிய ஈரெழுத்தொருமொழியீற்றுகரம் நெட்டெழுத்திறுதியுந் தொடர்மொழியிறுதியும் அன்மையின் முற்றுகரமாவதல்லது ஈரெழுத்தொருமொழிக்குற்றுகரமும் உயிர்த்தொடர்மொழிக்குற்றுகரமும் ஆகாதெனவுங் கொள்க.

ஓரெழுத்தொருமொழி தொடர்மொழி என மொழிநிலை இரண்டென்றார்க்கு அவையுந் தொடர்மொழியிறுதிக் குற்றுகரமாவான் செல்லுமாறு அறிக.

சந்தனக்கோல் குறுகினுந் பிரப்பங்கோலாகாது சந்தனக் கோலே யாமாறுபோல உயிரின் குறுக்கமும் உயிரேயாமேனும், புணர்ச்சிவேற்றுமையானும் பொருள்வேற்றுமையானுஞ் சேருந் தானியுஞ் சிதையுமிடத்து அலகுடைமையானுங் குற்றிகரக் குற்று காரங்கள் சார்பெழுத்தென உயிரின் வேறுயின. (கசு)

கள. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இஃது இடஞ்சார்ந்து ஆய்தம்வருமாறு கூறுகின்றது.

இ - ள். ஆய்தமாகிய ஒற்றுக் குற்றெழுத்தின்முன்னர்த்தாய் உயிரோடுகூடிய வல்லெழுத்து ஆறன்மேலிடத்ததாய்வரும். எ-று.

உ-ம். எஃகு கஃசு கஃடி கஃது கஃபு கஃறு எனவும், அஃகம் அஃகாமை அஃகி எனவும் வரும். குறியதன்முன்னரும் வல்லெழுத்துமிசையும் இடம். கஃறீது மூஃடீது அஃகடிய இருபஃது என ஈறியன் மருங்கின் வருவனவும் இப்பெற்றியிற் திரிந்து வராமையின் அவற்றையும் ஈண்டே அடக்கி ஆய்தம் புணர்மொழிக் கண்வருதற்கும் இதுவே விதியாகக் கொள்க. ''விலஃஃகி வீங்கிருளோட்டுமே மாதர்—நிலஃஃகு முத்தினினம்.'' எனக் குறிலிணைக்கீழும் வருமாலோவெனின் அஃது அன்ன இயல்பிற்றன்றி ஓசைநிறைத்தற்பொருட்டு ஒற்றில்வழி ஒற்றுய் வந்ததென்க. கஃறீது மூஃடீது என்பனவற்றை மெய்பிறிதாகிய புணர்ச்சியென்றதனானும் ஈண்டுப் புள்ளியென்றதனானும் இதனையும் உடன்கூட்டி ஒற்றளபெடை பதினென்றென்றதனானும் ஒற்றின்பாற்படுமேனும் உயிர் ஏறுதல் ஓசைவிகாரமாய் இடம்பற்றி நிகழ்வதொன்றுகலின் ஆய்தஞ் சார்பெழுத்தென ஒற்றின்வேறுயிற்று. (கள)

கஅ. புள்ளி யில்லா வெல்லா மெய்யு
மவ்வொடு முன்னுரு வாகியு மேனை
யுயிரொடு திரிந்து மேறிய வுயிரி
னளவா யதனுரு வடக்கிமுந் தியிர்த்த
லுயிர்மெய் யென்மனு ருணர்ந்திசி னோரே.

இது தம்மொடு தாஞ்சார்ந்து உயிர்மெய்யாமாறு கூறுகின்றது.

இ - ள். புள்ளியில்லாதனவாய்ப் பதினெட்டுமெய்யும் அகரத்தோடு கூடித் தம் முன்னேவடிவே வடிவாகியும் ஒழிந்த உயிர்க

ளோடு கூடி அவ்வடிவு வேறுபட்டுந் தம்மை ஊர்ந்த உயிரின் அளவே தமக்கு அளவாய் அவ்வுயிரின்வடிவைத் தம்முள்ளே கரந்து தாம் முன்னுக ஒலித்தலே உயிர்மெய்யென்று கூறுவர் அறிந்தோர். எ - று.

ஏனவே உயிர்மெய் பன்னிரு பதினெட்டு இருநூற்றொருபத் தாறுயினவாறு பெற்றும்.

மூன்னுருவாகி உயிர்த்தல் க ஙய எனக் காண்க. உருவுதி ரிந்துயிர்த்தல் கா ஙா எனப் புள்ளிபெற்றுங் ஙி ஙீ என மேல்விலங்கு பெற்றுங் ஙு ஙூ எனக் கீழ்விலங்குபெற்றுங் கெ கே எனக் கோடு பெற்றுங் கொ கோ எனப் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் வரு மெனக்காண்க. பிறவும் அன்ன.

அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதுப. உயிரும் மெய்யுங் கூடி ஒலிக்குங்கால் உருவுதிரிந்தும் திரியாதும் ஒலிக்குமெனக் கூறியதன்றி உயிர்மெய்க்கு வடிவு கூறப் புகுந்தா ரல்லர், அது "தொல்லே வடிவின வெல்லா வெழுத்தும்." என மேற்கூறுவாகலின்.

உயிரோடு கூடியவழிப் புள்ளியின் றிவருமெனவே புணர்ச்சி யிடத்து "மெய்யுயிர் கீங்கிற் றன்னுரு வாகும்" என்பதூஉம் பெ றப்பட்டது. தன்னுருவாதல் தான் மூன்னர்ப் பெற்றுநின்ற புள்ளி பெற்று ஆலிலே என்பது ஆல் இலே எனநிற்றல். எறிய உயிரின் அளவாதல் கீர் தனித்து அளந்துழியும் நாழியாய், அரைநாழியுப் பிற் கலந்துழியும் நாழியாய், மிகாத பெற்றிபோல, ஒருமாத்தி ரையும் இரண்டுமாத்திரையுமுடைய உயிரும் அம்மாத்திரை யுடைய மெய்யுங் கூடியவழியும் ஒன்றரைமாத்திரையும் இரண் டரைமாத்திரையுமாகாது ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையு மாயே ஒலித்தல்.

அதனுரு அடக்கியெனவே அ என்புழி நின்ற சுறியும் ஒன் றென்னும் எண்ணுங் க என்புழியும், ஆ என்புழி நின்ற சுறியும் ஒன்றென்னும் எண்ணுங் கா என்புழியும் ஒத்து மாத்திரைபோல வெளிப்பட்டு நிற்குமென்பதாயிற்று "மெய்யோ டியையினு மூயி ரிய நிரியா" என்னும் ஆசிரியர் தொல்காப்பியனுருமென்க. இய லென்றது அளவுங் சுறியும் எண்ணுமென உணர்க.

மூன்றுயிர்த்தலெனவே, "மெய்யின் வழிய துயிர்சோன்று கிலேயே." என்பதூஉம் பெற்றும். இவ்வாற்றுன் மாத்திரைகொள்

ஞங்கால் உப்பும் நீரும்போல ஒன்றேயாய் நிற்றலும், வேறுபடுத்துக் காணுங்கால் விரலும் விரலுஞ் சேரநின்றுற்போல வேறுய் நிற்றலும் பெற்றும்.

நீர் உப்பின் குணமாயவாறுபோல உயிர் மெய்யின்குணமேயாய் வன்மை மென்மை இடைமை எய்திநிற்றலுங்கொள்க. இங் ஙனங்கூறியவாற்றுற் க ங ய எனக் கூட்டமும் பிரிவும் மூவகை ஓசையும் உடையவாதல் காண்க.

இவ்வாற்றுன் உயிர்மெய்யென்பதனே ஒற்றுமைநயங்கொள்வழி உம்மைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகவும், வேற்றுமைநயங்கொள்வுழி உம்மைத்தொகையாகவுங் கொள்க. உயிரும் மெய்யுங் கூடுகின்ற கூட்டத்தினே எல்லாமெய்யுமென மெய்மேல்வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப்போலும். இங்ஙனம் வருதலான் உயிர்மெய் சார்பெழுத்தென முதலெழுத்தின் வேறுயிற்று. (கஅ)

கக. இசைகெடின் மொழிமுத லிடைகடை நெடில்வ
தத்த மொத்த குற்றெழுத் தோடள [ழித்
பெழுஉ மையெள இஉ என்னு
மாயீ ரெழுத்தோ டளபெழு மென்ப.

இது தம்மொடு தாஞ் சார்ந்தும் இடஞ் சார்ந்தும் உயிரளபெடையாமாறு கூறுகின்றது.

இ - ள். வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் அளபெடுத்துக் கூறுக்கால் ஓசை குன்றுவதாயின் அவ்வோசை குன்றும் மொழியின் முதலிடையிறுதிகளில் நின்ற நெட்டெழுத்துக்கள் தமக்குப் பின்னுக நின்ற, தமக்குத் தமக்கு இனமொத்த, குற்றெழுத்துக்களோடு கூடி அவ்வோசை நிறைவதாக மிக்கொலிக்கும்: தமக்கு இனமில்லாத ஐகார ஒளகாரங்கள் ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரமென்று கூறப்படும் அவ்விரண்டெழுத்தோடு நிரனிறையாகக் கூடி மிக்கொலிக்குமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

வரலாறு; வாஅகை ஈஇகை ஊஉகம் பேஎகன் தையியல் தோஒரை மௌஉவல் எனவரும். பிறவும் அன்ன.

தனிநிலையளபெடை வேண்டற்றிலர், அது நெட்டெழுத்தோரெழுத்தொருமொழியாய் முதனிலையளபெடையாய்த்தான் இறுதி

நிலையளபெடையாய்த்தான் அடங்குதலின். அற்றேல், "தனிநிலை முதனிலை யிடைநிலை யீறென—நால்வகைப் பதவுமள பாய்வரு மிடனே." என்னும் முன்னோர்மதத்தோடு முரணும்பிறவெனின் மூரணது; "இருவர் நூற்கு மொருநிறை தொடங்கித்—திரிபுவே றுடையது புடைநூ லாகும்." என்பவாகலின்.

சூற்றெழுத்தோடென வரையாது கூறலின் ஓசை நிரம்பாவி டிற் சிறுபான்மை ஈரெழுத்தோடு கூடியும் அளபெழுமெனக் கொள்க; "செய்புட்க ளோசை கிதையுங்கா லீரளபு—மையப்பா டின்றி யணையுமாம்." என மாபுராணத்துக் கூறலின்.

வரலாறு; "செருஅய் வாழிய நெஞ்சு" எனவும், "இலா அதர்க் கில்லைத் தமர்." எனவும், வரும். இவை ஈரெழுத்தோடு கூடாக்கால் ஆசிரியத்தளைதட்டுச் செப்பலோசை கெடுமாறு உணர்க. அளபெடையல்லாத ஓசைகளெல்லாம் இசையோசையா கலின் அவற்றை "ஆலியுமொற்றும்" என்பதனுட்கூறுப. ஒற்றள பெடைக்கும் இவ்வுரைகொள்க. கோட்டுநூறும் மஞ்சளுங் கூடி யவழிப் பிறந்த செவ்வண்ணம்போல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்திற் பிறந்து பின் பிளவுபடாது ஒலிக்கின்றதொன்றுகலா னும், என் ஆட்டியவழியல்லது எண்ணெய் புலப்படாவாறுபோல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்தல்லது புலப்படாது நிற்ப தொன்றுகலானும், அதுதான் இயற்கையளபெடையுஞ் செய்யுட் குப் புலவர் செய்துகொண்ட செயற்கையளபெடையுமாய் அலகு பெறுதும் பெற்றும் நிற்பதொன்றுகலானும் உயிரளபெடை சார் பெழுத்தென உயிரின் வேறுயிற்று.

நெட்டெழுத்தே அளபெழுமென்பாருமுளர். அவர் அதன் பெற்றி அறிந்திலர்போலும். "மாத்திரை வகையாற் றனிதம கெட்ட நிலை—யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்." என்பது தமிழ்நலடையாகலின் யாப்பழியாது தனியறுப்புழி ஒரெழுத்தினை யே இரண்டுமாத்திரையும் ஒருமாத்திரையுமாகப் பிரித்து அசைத்து அதனுற் சீர்செய்து தனியறுத்தல் பொருந்தாமையின். அன்றியும் ஈண்டு அளவுகுறியாய் நிற்குமென்ற குற்றெழுத்துக்களைக் "குற்றுயி ரளபி னீறும்" என மேல் மொழிக்கு ஈறுநிற்குமென்று கூறுப வாகலானும் அவர்க்கு அது கருத்தன்றென்க. (கசு)

உ0. ஙஞண நமன வயலள வாய்தங்
குறிவிணை குறிற்கீழ் மொழியிடை யிறுதியி
னளபெழு மவற்றே டாயுங் காலே.

இது தம்மொடு தாஞ் சார்த்தும் இடஞ் சார்த்தும் ஒற்றள பெடையாமாறு கூறுகின்றது.

இ - ள். ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் என்னும் பதி னேரொற்றுங், குறிலிணைக்கீழுங் குறிற்கீழும், அளபெடுத்துக் கூறுக்கால் ஓசை குன்றுவதாயின், அவ்வோசை குன்றும் மொழியி டையினும் ஈற்றினும் நின்ற அப்பதினேரொற்றேடுங் கூடி அவ் வோசை நிறைவதாக மிக்கொலிக்கும் ஆராயுமிடத்து. எ - று.

மேல் "இசைகெடின்" என்றதனே ணண்டுங கூட்டுக.

வரலாறு;—அரங்கம் முரஞ்ஞ முரண்ண்டு பருந்து அரும்மபு முரன்ன்று குரவவவை அரய்ய்யர் குரல்ல்கள் இரள்ள் கள் வரஃஃகு எனவும், மங்ஙகலம் மஞ்ஞ மண்ண்ணு பந்து அம்ம்பு மின்ன்னு தெவவவர் வெய்ய்யா செல்ல்க கொள்ள்க எஃஃகு எனவும், "அரண்ண்கொண்ட வடுதோளினர்." "வலம்ம பட்ட வாள்வயவர." "பகல்லனன பண்புரையீர" "இரள்ள் சேணே செலநீக்கி" எனவும், "கண்ண்டண்ணெனக் கண்டுங்கேட் டும்" "தம்ம்படையைத தாநேர்க்கி" "மினன்னன்ன வேல்வி ளக்கி" "இவவவுலகை யினிதாண்டு செய்ய்தொழிலிற் செய ணேக்கி" "கல்ல்லன்னவன்னெஞ்சிற் கொள்ள்ளென்று கொடிக் கலராய்" எனவும் வரும். பிறவும அன்ன.

ஙகர ஆய்தங்கள் மொழிக்கு ஈருகாமையின் ண்டும் ஈற்றில் வந்து அளபெழாவெனக்கொள்க.

ஆயுங்காலேயென்றதனுற் புணர்மொழிக்கண் ஈருகாத ஙகர ஆய்தங்களுங் "கலங்கொண்டகன்மார்பா" எனவுங் கஃஃறீது மூஃஃடீது அஃஃகடிய எனவுஞ் செயற்கையொற்று அளபெடுத்த லும், இன்னும் ஒற்றின்றியும் இசைகெடின் "அம்பொரைந்து டைய்யகாம னேயனென்ன வந்தண—னம்புநீர ரல்லர்நன்கு ரங்கு நீர ராயினுர்—தங்குரவவர் தாங்கொடுப்பி னெஞ்சுநேர்ந்து தாழ்வர் தாம்—பொங்கரவவ வல்குலாரெ னப்புகன்று சொல்லினுன்." எனவும் அரய்யர் குரவவை வரஃகு விலஃகு இலஃகு எனவும் ஒற் றையுண்டாக்கலும், அதனனும் ஓசைநிரம்பாவிடின் அரய்ய்யர் குரவவவை வரஃஃகு "விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத— நிலஃஃகு மூத்தி னினம்." என அளபெடித்தலுங் கொள்க; "மைதீ ரொற்—றின்றியுஞ் செய்புட் கெடினெற்றை யுண்டாக்கு—குன் றுமே லொற்றளபுங் கொள்." என்பவாகலின். ஒருமாத்திரையாய்

அலகுபெறுதலானும் பிறவாற்றானும் ஒற்றளபெடை சார்பெழுத்தென ஒற்றின் வேறுயிற்று. (20)

உக. தற்சுட் டளபொழி யைமூ வழியு
கைபு மௌவு முதலற் றுகும.

இஃது இடஞ்சாராந்து ஐகார ஔகாரக்குறுக்கங்களாமாறு கூறுகின்றது

இ - ள். தனிநெடிலுதற்கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அலலாதவழி வந்த ஐகாரம் மொழிமுதலிடைகடையென்னும் மூன்றிடத்தும் குறுகும்; அவ்வாறு வரும் ஔகாரமும் மொழிமுதற்கட் குறுகும். எ - று.

வரலாறு;—ஐப்பசி மைப்புறம் இடையன தினை எனவும ஔவை கௌவை எனவும் வரும். கை பை மை கௌ வௌ என்னவும் பொருளிசைச்சுட்டியவழிக் குறுகுமெனக்கொள்க. இங்ஙனம் அளவுகுறுகலானுஞ் சீருந்தளையுஞ் சிதையுமிடத்து அலகுபெறுமையானும் ஐகார ஔகாரக்குறுக்கங்கள் சார்பெழுத்தென உயிரின வேறுயின. (2க)

உஉ. ளனமெய் நிரிதன ணனமுனும வருமொழி
வகார மிசையு மகார குறுகும.

இஃது இடஞ்சார்ந்து மகரக்குறுக்கமாமாறு கூறுகின்றது.

இ - ள். ளகரனகரங்கள் நிரிதனகரணகரங்கள் முன்னும் வருமொழிமுதற்றகரணினவகரதினமேலைய மகரங் குறுகும். எ-று.

எனவே, ஒருமொழிக்கண்ணும புணர்மொழிக்கண்ணுங் குறுகுமென்பதாயிற்று.

உ - ம். செந்நூற் கழியொருவன் கைப்பற்ற வந்நூலை—மூந்நூலாக் கொள்வானு. போனய." எனவும், "பசுப்போல்வார் மூற்பட்டாற் பாற்பட்ட சானேரு —முசுப்போல முள்கார் திருப்பர்—பசுத்தான்—வெருளினு மெல்லாம் வெருருமோ, தன்றி—மருளினு மெல்லா மருண்ம்." எனவும், வருமுண்ணைக்கண் எனவும் முறையே காண்க. நிரிதல யாண்டுப்பெற்றுமெனின், அதுவும் அனுவாதமுகத்தான் ஈண்டுபெற்றுமென்க.

இங்ஙனம் அளவுகுறுகலான் மகரக்குறுக்கஞ் சார்பெழுத்தென மெய்யின் வேறுயிற்று. (2உ)

உங. தொல்லே வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி

இது நிறுத்தமுறையானே வடிவுகூறுகின்றது.

இ - ள். இவ்வெழுத்து இவ்வடிவிற்றென யாம் எழுத்துக்க
ளுக்கு வடிவுகூறுமிடத்து எல்லா எழுத்துக்களும் நெடுங்கணக்கி 5
னுள் எழுதப்பட்டுவருகின்ற பழைய வடிவே வடிவாகவுடையன
வாம். ஆயினும் அங்ஙனம் வருமிடத்து எகரமும் ஒகரமும் மெய்
களும் மேற்புள்ளிபெற்றுநிற்கும். எ - று.

புள்ளியுந் தொல்லேவடிவேயாயினும் எகரஏகாரங்கட்கும்
ஒகரஓகாரங்கட்கும் தனிமெய்யுயிர்மெய்கட்கும் வடிவொப்புமை 10
கண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமைசெய்யும்பொருட்டு அவற்
றிற்கு முன்னேர் பின்னர்ப் புள்ளியிட்டு எழுதுகவென்றுரைத்
பார், 'ஆண்டெய்தும்' என்றார். தொல்லேவடிவினவாதல் நெடுங்க
ணக்கினுட் காண்க. ஏரி எரி ஓளி ஒளி நீகண்டை கெழல் நீகண்
டல் கொடை உல்கு உலகு என எகரமும் ஒகரமுந் தனிமெய்யும் 15
புள்ளியெய்தின்றவாறு காண்க. (உங)

உச. நெடிலிரண் டையெளக் குறுக்கங் குறிலொன்
றுய்தமொற் றிய்யுக் குறுமை யரைகுறண்
மஃகான் கான்மாத் திரைபெறு மதுதான்
கண்ணிமை கொடியென நுண்ணியோ ருரைப்ப. 20

இது நிறுத்தமுறையானே எழுத்துக்களது மாத்திரையும் மாத்
திரைக்கு அளவுங் கூறுகின்றது.

இ - ள். நெட்டெழுத்துக்கள் ஏழோவொன்று இரண்டுமாத்
திரையும் ஐகாரஔகாரக்குறுக்கங்களுங் குற்றெழுத்துக்களும்
ஏழோவொன்று ஒருமாத்திரையும் ஆய்தமும் ஒற்றுக்களுங் குற்றி 25
கரக் குற்றுகரங்களும் ஏழோவொன்று அரைமாத்திரையும் மகரக்
குறுக்கங் கான்மாத்திரையும் பெற்று ஒலிக்கும்; அம்மாத்திரைக்கு
அளவுதான் கண்ணிமையெனவுங் கைந்நொடியெனவும் நுண்ணி
தாக நூலிலக்கணத்தை உணர்ந்த ஆசிரியர் கூறுவர். எ - று.

நெடிற்குங் குறிற்கும் ஒற்றிற்கும் மாத்திரை கூறவே, அவை 30
கூடி ஒலிக்கும் உயிரளபெடை மூன்றுமாத்திரையும் நான்குமாத்
திரையும், ஒற்றளபெடை ஒருமாத்திரையும், ஏறிய உயிரின் அளவே

உயிர்மெய்க்கும் அளவெனக் கூறலின் அவை ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெறுமென்பதூஉம் பெற்றாம்.

வல்லொற்றுத்தொடர்மொழிக்குற்றுகரம் வல்லெழுத்து வரு வழித் தன் அரைமாத்திரையிற் குறுகுமெனக் கோடலின் அது கால்மாத்திரைபெறுதல் உரையிற்கொள்க.

கண்ணிமை கைக்கொடியென்னும் பலபொருளொருசொற் கள் ஈண்டுத் தொழின்மேலும் ஓசைமேலும் முறையேநின்றன. தன் குறிப்பின்றி நிகழ்தலின் இமை முற்கூறப்பட்டது. எண்ணியளத் தல் எடுத்தளத்தல் முகந்தளத்தல் பெய்தளத்தல் நீட்டியளத்தல் சார்த்தியளத்தல் தெறித்தளத்தல் என்னும் எழுவகையளவையுள் இது சார்த்தியளத்தலாம்.

கண்ணிமைக்கும் கொடிக்கும் அளவாராயின் வரம்பின்றி ஓடி மெனக்கருதி நுண்ணியோருரைப்பவென முடிந்ததுகாட்டலென் னும் உத்திகூறினார்; ஆணைகூறலுமாம். எனவே, எழுத்திறகே அள வுகூறி நாழுழக்குக்கொண்டது நாழியென்றுமுற்போல இலிங்கித்து ணைகொண்டது மாத்திரையென மாத்திரைக்கு அளவுகூறிற்றிலர். இயற்கைபகன் குறிப்பினன்றி இரண்டிமையும் ஒருகாற் கூடி நீங் கிய காலக்கழிவும் அனைப்பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் கா லக்கழிவுமாகும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்கும் அதன் பாகம் மகரக்குறுக்கத்திற்கும் இக்கண்ணிமை இரட்டிவருதல் கெ டிற்கும் அது மூன்றும் ஈரன்குமாய்வருதல் உயிரளபெடைக்கும் ஒன்றுவருதல் ஒற்றளபெடைக்குங் கொள்க. பிறவும் அன்ன. கொடித்தற்றொழிலிற் பிறந்த ஓசைக்கும் இவ்வரைகொள்க. (உசு)

உடு. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலு
மேவு மிசைவினி பண்டமாற் றுதியின்.

இஃது எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின்மிக்கு இசைக் கவும்பெறுமென்பதூஉம் அங்ஙனம் மிக்கு இசைக்கும் இடம் இவையென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். உயிரும் ஒற்றுமென்னும் இருகூற்றெழுத்துந் தமக் குச் சொல்லிய மாத்திரைகளைக் கடந்து ஒலித்தலையும்பொருந்தும்; அங்ஙனம் பொருந்தி இசைத்தல் இசையும் விளியும் பண்டமாற் றும் முதலியவற்றின்கண்ணும். எ - று.

ஆதியென்றதனால் நாவலும் முறையீடும் புலம்புங் குறிப்பி சைமுதலியவுங் கொள்க. நாவல் உழவர் நெல்லரிதொழுவரை

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIB
BESANT NAGAR, MADRAS-600 0

வினித்தல். அது "காவ ழுழவர் கடுங்களத்துப் போரேறி—நாவ லோஒ வென்றழைக்கு நாளோதை—மாவலவன்—கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே—நல்யானைக் கோக்கிள்ளி நாடி" இதனுன் அறிக. "கஃஃஃஃ றென்னுங் கல்லத ரத்தஞ்—சுஃஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை." என்றுற்போல் வன குறிப்பிசை. பிறவும் வந்துழிக் காண்க.

உயிர் பன்னிரண்டுமாத்திரையும் ஒற்றுப் பதினெருமாத்திரையும் நீளுமென்பர் இசைநூலார். அது வந்துழிக் காண்க. (உரு)

உசு. பன்னீ ருயிருங் கதந பமவெனு
மாவைந தெழுத்தொடு சவஞப வுளப்பட
வவ்வொன் பானுயிர் மெய்யு மொழிமுதல்.

இது நிறுத்தமுறையானே மொழிக்கு முதல் நிற்கும் எழுத்துக்கள் இவையெனப் பொதுவகையாற் கூறுகின்றது.

இ - ள். பன்னிரண்டு உயிரெழுத்துங் கதநபம என்று கூறப்படும் ஐந்தெழுத்தோடு சவஞய என்னும் நான்கெழுத்துங் கூட அவ்வொன்பதாகிய உயிரோடுகூடிய மெய்யுமாகிய இருபத் தோரெழுத்தும் மொழிக்கு முதலாவனவாம். எ - று.

Fரண்டு உயிர்மெய்யென்றது வேற்றுமைநயங் கருதிற்று. மேல் இவற்றுட் சிலவற்றைப் பிரித்து இவ்வொற்று இவ்வுயிரோடு கூடி முதலாமென்றலின் ஐந்தும் நான்குமாகப் பிரித்துக் கூட்டி யாதலும் முறைபிழைவைத்தலும் பொதுவகையான் எல்லாவுயிரோடுஞ் சிறப்புவகையாற் சிலவுயிரோடுங் கூடி முதலாதல் கோக்கியென்க.

உ - ம். அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐவனம் ஒளி ஓக்கம் ஔவியம் எனவும், கலகாரி கிளி கரி குடி கூடி கெண்டை கேழல் கைதை கொண்டல் கோதை கௌவை எனவும், தந்தை நாடி நிந்தி நீலம் நாணி நெற்றி நென்னல் நொண்டை நோடி நௌவை எனவும், நந்து நாரை நிலம் நீந்து நுகம் நூல் நெய்தல் நேர்ச்சி நைவளம் நொச்சி நோக்கம் நௌவி எனவும், பனை பாடி பிடி பீடி புகழ் பூமி பெட்டை பேடை பைதல் பொன் போதகம் பௌவம் எனவும், மடி மாலை மிடறு மீளி முலை மூப்பு மெலிவு மேனி மைவல் மொழி மோத்தை

மௌவல் எனவும் வரும். இவை பொதுவகையாற் போந்தன. ஏனைய மேற்கூறுப. (உசு)

உள. ஐஔ வலவொடு சகாரமும் உஊ
ஓஒ வலவொடு வகாரமும் ஆள
ஒவ்வொடு ஞகாரமு மாவொடு யகாரமு
முதலுமென்மனர் முறைபுணாாக தோரே.

இஃது அவற்றுட் சிலவற்றிற்கு வரையறுத்து எய்து விக்கின்றது.

இ - ள். ஐகார ஔகாரங்கள் ஒழிந்து நின்ற பத்து உயிரோடுங் கூடிச் சகரமும், உகர ஊகார ஒகரஓகாரங்கள் ஒழிந்து நின்ற எட்டு உயிரோடுங் கூட வகரமும், ஆகார எகர ஒகரங்களோடு கூட ஞகரமும், ஆகாரத்தோடு கூடி யகரமும் மொழிக்கு முதலா மென்று கூறுவர் இலக்கணங்களை அறிந்தோர். எ - று.

உ-ம். சட்டி சாந்து சினம் சீற்றம் சுருட்பு சூரல் செக்கு சேவல் சொல் சோறு எனவும், வளை வாளி வினை வீடு வெள்ளி வேர் வையம வெளவுதல் எனவும், ஞாலம் ஞெண்டு ஞொள்கிற்று எனவும், யானை எனவும் வரும்.

சையம் சௌரியம் யவனர் யுத்தி யூபம் யோகம் யௌவனம் எனவும், "ஞமலி தந்த மனவர்கு ஞெம்பின்." எனவும், ஞழியிற்று எனவும் விலக்கியனவும் வருமாலோவெனின், அவை முறையானே ஆரியசகிதவெனவுந் திசைச்சொலெனவும் இழிவழக்கெனவும் மறுக்க. இவற்றுன் மொழிக்கு முதலாம எழுத்துக்கள் பொதுவுஞ் சிறப்புமாம் இருவகையானுந் தொண்ணூற்றுநான்கா மென்பது அறிக.

"சுட்டியா வெகர வினாவழி யவ்வன—யொட்டி ஙஞ்வு முதலா ரும்மே" என்றாரும் உளராலோவெனின் முதலாவன இவை சாரவன இடையென ணகரக் கருவிசெய்தது மேல் கீழ்மொழியீறு வருமொழிமுதலோடு இயையப் புணர்க்குமபொருட்டன்றே? அட்வாறு புணர்த்தற்கு இயைபில்லாத யகரமும் அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் யாங்ஙனம் எங்ஙனம என இவ்வாறு மொழிக்கு முதலாமென்றல் பயனில்கூற்றுமென மறுக்க. அன்றியும், அங்கு ஆங்கு யாண்டு யாண்டையது அன்ன என்ன என்றுற்போலும்

இவ்வொற்றுக்களும் மொழிக்கு முதலாமென்னல் வேண்டுதலான் அவர்க்கும் அது கருத்தன்றென்க. (உஎ)

உஅ. ஆவிஞ ணஙமன யரல வழளமெய்
சாயு முகரஙா லாறு மீறே.

இது நிறுத்தமுறையானே மொழியிறுதிக்கண் நிற்கும் எழுத்து இவையெனப் பொதுவகையாற் கூறுகின்றது.

இ - ள். பன்னிரண்டு உயிரும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினேழொற்றுங் குற்றியலுகரமுமான இருபத்துநான் கெழுத்தும் மொழிக்கு ஈறுவனவாம். எ - று.

ஙகரம் ஈற்று வையாது மகரத்தோடு வைத்தது வழக்குப்பயிற்சியும் மயக்க இயைபும் நோக்கியென்க. குற்றுகரத்தை வேறெடுத்து ஓதினர் புணர்ச்சிவேறுபாட்டான். (உஅ)

உக. குற்று யிரளபி னீறு மெகர
மெய்யொ டேலாதொங் கவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப.

இது மேலைச்சூத்திரத்தாற் தாமே நின்று ஈறுதல் எய்தியதனை விலக்கி அளபெடுப்புழி ஈறுமென்றலிற் குற்றுயிர்க்குப் பொதுவிதி மாற்றிச் சிறப்புவிதியும், எகரம் மெய்யோடேலாதெனவே ஏனையுயிர்கள் தாமே நின்றும் அளபெடுப்புழி நின்றும் ஈறுதலேயன்றி மெய்யோடு கூடி ஈறுமென்பதூஉம், ஒங்கவ்வொடாம் ஔகக்கர வகரமோடாகுமென இவற்றை விதந்தோதாதே விதவாதனவெல்லாம் அங்ஙனம் ஈறுங்காற் தமக்கேற்ற மெய்களோடு கூடி ஈறுமென்பதூஉம் பெறப்படுதலின் எல்லா உயிர்க்கும் பொதுவிதிமேற் சிறப்புவிதியுங் கூறுகின்றது.

இ - ள். குற்றுயிரைந்தும் அளபெடுப்புழி ஈறுமென்றும், எகரம் மெய்யோடு கூடி ஈறுசாதென்றும் ஒகரம் ககரமொன்றோடனே கூடி ஈறுமென்றும், ஔகாரங் ககரவகரங்களோடு கூடி ஈறுமென்றுங் கூறுவர் ஆசிரியர். எ - று.

இவற்றுள், செட்டெழுத்து ஏழும் தாமே நின்றுங், குற்றெழுத்து ஐந்தும் அளபெடுப்புழிநின்றும், எகர ஒகர ஔகாரங்கள் ஒழிந்துநின்ற ஒன்பது உயிருந் தமக்கு ஏற்ற மெய்களோடு கூடி

நின்றும் ஈறுமென்பது போக்ததேனும், உரையிற்கோடலான் ஔகாரந் தானே நின்று ஈறுகாதெனவும ஙகரத்தோடு பன்னிரண்டு உயிரும் ஞகரத்தோடு ஏகாரமும் நகரத்தோடு உகரஊகாரமும் வகரத்தோடு ஊகாரமுங் கூடி ஈறுகாவெனவுங் கொள்க.

உடம். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனவும், வருக புகா வீக்கி புகீ செரு புகூ ஈங்கே மங்கை எங்கோ கௌ எனவும், உச உசா விகி மூழி மூசு மூரு செச்சை சோ எனவும், உரிஞ உரிஞா உரிஞி உரிஞீ உரிஞு உரிஞூ மஞ்ஞை உரிஞோ எனவுங், கட கடா மடி மடீ மடு மடூ பட்டை எனவும், மண்ண மண்ணு கணணி உணீ கணு நண்ணூ பணணை எனவும், அந்த அதா பதி வதீ அது கைகது தந்தை அந்தோ எனவும், பொருந பொருநா நீ நை கொ நோ எனவும், தப துப்பா நம்பி நம்பீ தபு பூ தும்பை போ எனவுங், சம மா அம்மி மீ செம்மு கொண்மூ யாமை வம்மோ எனவுஞ், செய காயா கொய்யு ஐயை ஐயோ எனவும், வர தாரா பரீஇ கரு வெரு நாரை எனவுஞ, சில பலா வலி வலீ வலு கொல்லு வலலே கலே எனவும், உவ உவா செவ்வி ஒருவீ கதவு வே வை வெள எனவுங், தொழ விழா நாழி வழீ மழு எழு தாழை எனவும், உள உளளா வெள்ளி குளீ உரு எள்ளு கனீ எனவும், கற்ப கற்ரு உறி உறீ மறு மறூ கர்றை எற்ரே எனவுங், நன கறு வண்ணி தூணீ முன்னு தன்னூ என்னே அன்னை அன்னோ எனவர, உர்ரு மண பொருந தரும் பொன் வேய் கோ கேல் தெய் வீழ வேள் எனவும், நாகு எனவும், வரும். பிறவும் அன்ன.

உயிரோடு கூடி மெய்மூவிலாமென்றும் மெய்யோடு கூடி உயிர்மூவென்றும் வேற்றுமையுபயத்திக கூறலின் மெய்ம்முதன் மொழியென்றும் உயிர்முதன்மொழியென்றும் ஆவதல்லது ஒற்றுமை நயம்பற்றி உயிர்மெய்முதலென்றும் உயிர்மெய்யீறென்றும் வழங் சப்படாவென்பதறி தானேபோதரும். போதரவே, "மெய்யீறெல் லாம் புள்ளியொடு கியலல்." என்பதனுள் மொழிக்கு முதலாயவை யெல்லாம் புள்ளியொடு கூடாது உயிரோடு கூடுமென்பதனாலும் "உயிர் மெய் யீறாய் முயிர்த் நியற்றே" என்பதனாலும் சண்டே பெற்றாம். தாமெயு அமெயெடி டதியும் பெயரொடியு வரும் உயிர்மூ றற்றதற்குமாம் மெய்யீறு பதினெனவுங் கூறுகையால் ஒன் றுமாகப் பொதுவகையானுஞ் சிறப்புவகையானுஞ் சூத்திரஞ் செய் பத்தைந்தாம். அவற்றுள் உதாரணங் காணுதன நூற்பத்திரண்டி. அவையும வந்திடுக் காண்க. (ஙசு)

3828.
II 39

ஈ0. னகர வீறுதி யஃறிணைப் பெயருண்
மகரமொடு மயங்கி வருனவு மூனவே.

இஃது ஓரீறு ஓரீற்றோடு மயங்கிவருமென்கின்றது.

இ - ள். னகரவீற்றஃறிணைப்பெயருட் சில னகரவீறு மகர வீற்றஃறிணைப்பெயரின் மகரவீற்றோடு மயங்கிவருவனவும் உளம யங்காதனவும் உள, புணரியலுள் அவை அறிந்து புணர்க்க. எ-று.

ஏற்புழிக்கோடலாற் பெயரென்றது ஈண்டித் தொடர்மொழி யென்றே கோடும்; "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த— னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப—புகரறக் கிளந்த வஃறிணை மேன." என்பவாகலின்.

வரலாறு; நிலன் நிலம், கலன் கலம் இத்தொடக்கத்தன மயங்குவன. எஃன் செஃன் பயின் சூயின் அழன் புழன் வீழன் கடான் வயான் இத்தொடக்கத்தன மயங்காதன எனக் காண்க. னகர இறுதி மகர இறுதியோடு மயங்குமென்றலின் வட்டம் சூட்டம் இத்தொடக்கத்து மகரவீறுகள் மயங்காவென்க. பிறவும் அன்ன. இதனை இடைநிலைப்பாற் படுதலி அதனைச் சார வைப்பாரும் உளர். அது பொருந்தாது; இறுதிநிலைப்பாற்படுவதோர் மயக்கமாதலின். (ஈ0)

ஈக. கசதப வொழித்த வீரேழன் கூட்ட
மெய்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகு முயிர்மெய் மயக்கள வின்றவை
தேருங் காலை மொழியிடைச் சிவணும்.

இது நிறுத்த முறையானே பொதுவகையான் மெய்மயக்க மும் உடனிலைமயக்கமுமாமாறும் அவற்றது எண்ணும் வரையறையின்றிமயங்குவனவும் அவைமயங்கும் இடமும் உணர்த்துகின்றது.

இ - ள். மெய்பதினெட்டனுட் கசதப என்னும் நான்கினையும் ஒழித்த பதினான்குமெய்களினது மயக்கம் மெய்மயக்கமாம். ரகரழகரங்களே ஒழித்த பதிறுமெய்களினது மயக்கம் உடனிலை மயக்கமாம். உயிர்மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இன்றும். அம்மயக்கநிலைகள் ஆராயுங்காலத்து மொழியிடையே பொருந்திநிற்கும். எ - று.

கூட்டமென்பதனை ஈரெட்டென்பதனோடும் மயக்கமென்பதனை உடனிலையென்பதனோடுங் கூட்டுக.

தின்முன்னர்த் தான் உடனின்று மயங்குவது உடனிலைமயக்கமெனவே தன்முன்னர்ப் பிறமெய் நின்று மயங்குவது மெய்மயக்கமென்பதாயிற்று. அது வருஞ்சூத்திரத்தானும் உணர்க.

தேருங்காலை என்றதனால் இவ்விருகூற்று மயக்கமும் தனிமெய்மூன் உயிர்மெய்நின்று மயங்குமெனவும் உயிர்மெய்மூன் உயிர்மெய்யுந் தனிமெய்யும் மயங்குமெனவுந் தனியுயிர்முன் உயிர்மெய்யுந் தனிமெய்யும் மயங்குமெனவும் அதற்கும் உயிர்மெய்மயக்கம்போல வரையறை இன்றெனவுங் கொள்க. இன்னும் அதனானே உயிர்மெய்மயக்கமும் உயிர்மயக்கமுந் தொடர்மொழிக்கண் னன்றிக் கரு மழு எனவும், கார் காழ் எனவும், அஃ உஃ எனவும், ஆர் ஊர் எனவும், ஈரெழுத்தொருமொழிக்கண்ணும் மயங்குவனவும் இன்னோரன்ன பிறவாற்றான் மயங்குவனவும் புணர்மொழியிடை மயங்குவனவுங் கொள்க. புணர்மொழியிடையும் மயங்குமெனவே மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாந் தலையாய அறிவினோர் நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்றென்பதூஉம் பெறுதும். சிறப்புவகையான் மேல் வரைந்தோதாமே மெய்மயக்கம் ஒழித்து ஈண்டுப் பொதுவகையான் முடிந்தவறிற்கு உதாரணங் காட்டுதும்.

வரலாறு; காக்கை எங்ஙனம் பச்சை மஞ்ஞை பட்டை மண்ணை தத்தை வெஞ்சொ அட்பை அம்மி வெய்யர் எல்லி எவ்வி கொள்ளி கொற்றி கள்ளி எனவும், கருவி தூணங்கை எனவும், ஆவணி ஆம்பல் எனவு வரும். பிறவும் அன்ன. (ஈ.உ)

ஈ.உ ஙம்முன் சவ்வும் வமமுன யவ்வு
ஞநமுன் னினமும் யகாமும டறமுன்
கசபவும் ணனமுன் னினமுங் கசஞப
மயவவு மம்முன் பயவவும் யரழமுன
மொழிமுதன் மெயயும் லளமுன் கசப
வயவு தினமு மயங்கு மென்ப.

இது மேற் பொதுவகையாற் கூறிய மெய்மயக்கத்தினைச் சிறப்புவகையான் வரையறுக்கூறின்றது.

இ - ள். கங்ஙல் என ஙகரமுன்னர்க் ககரமும்; தெவ்யாது எனவகரமுன்னர் யகரமும்; மஞ்சு உரிஞ்யாது எனவும், பாத்து வெரிஞ்யாத எனவும், ஞகாரகரங்களின்முன்னர் முறையே சகர

தகரங்களும் யகரமும்; கட்க கட்சி கட்ப எனவும், கற்க முயற்சி கற்ப எனவும், டகரறகரங்களின்முன்னர்க் ககரசகரபகரங்களும்; வண்டி எண்சு வெண்சாத்து வெண்ஞாண் பண்பு வண்மை மண் யாறு எண்வட்டு எனவும், கன்று புன்சு புன்செய் மென்ஞாண் அன்பு வன்மை பொன்யாது பொன்வலிது எனவும், னகரனக ரங்களின்முன்னர் முறையே டகரறகரங்களுங் ககரசகரருகரபகர மகரயகரவகரங்களுங்; கம்பு திரும்யாது நிலம்வலிது என மகர முன்னர்ப் பகரயகரவகரங்களும்; ஆய்க ஆய்தல் ஆய்நர் ஆய்பவை வாய்மை எய்சிலை தெய்வம் பாய்ஞெகிழி எனவும், ஆர்க ஆர்தல் ஆர்நர் ஆர்பவை கோர்மை வார்சிலை சேர்வது நேர்ஞெகிழி போர் யானை எனவும், ஆழ்க ஆழ்தல் ஆழ்நர் ஆழ்பவை கீழ்மை வாழ் சேரி வாழ்வது வாழ்ஞெண்டு வீழ்யானை எனவும், யகரரகரழக ரங்களின்முன்னர்க் ககரதகரநகரபகரமகரசகரவகரருகரயகரங்க ளுஞ்; செல்க வல்சி செல்ப செல்வம் கொல்யானை எனவும், கொள்க கீள்சினை கொள்ப கள்வன் வெள்யாறு எனவும், லகரனக ரங்களின்முன்னர்க் ககரசகரபகரவகரயகரங்களும் நின்று மயங்கு மென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

யரழமுன்னர் மொழிமுதன்மெய்யும் என்றாரேனுஞ் செய் யாறு என யகரமுன்னர் யகரம் மயங்குதல் உடனிலைமெயக்கமாத லின் அஃதொழித்து ஏற்புழிக்கோடலான் ஏனையகோடும். (ஈஉ)

ஈஊ. யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
வீரொற் றும்ரழத் தனிக்குறி லணையா.

இஃது ஈரொற்று உடனிலையாமாறும் வரையறையின்றி மயங் குவனவற்றுட் சிலவற்றிற்கு வரையறையுங் கூறுகின்றது.

இ - ள். யரழ என்னும் மூன்றுமெய்முன்னருங் கசதபங ஞநம என்னும் எட்டொற்றும் வந்து ஈரொற்றுடனிற்கும். ரகர ழகரம் என்னும் இரண்டொற்றோடும் பிறிதோர் எழுத்தையுஞ் சாராது தனியேநின்ற குற்றெழுத்துக்கள் மயங்கா. எ - று.

ஒற்றோடு மயங்காதெனவே உயிர்மெய்யோடு கரு மழு என வும், தனிக்குறிலெனவே குறிலிணை புகர் புகழ் எனவும், நெடில் கார் காழ் எனவும், மேலைப் பொதுவிதியான் மயங்குமெனக் கொள்க.

வரலாறு; வேய்க்க வாய்ச்சி பாய்த்தல் வாய்ப்பு காய்ங்கனி வேய்ஞ்சினை காய்ந்தனம் காய்ம்புறம் எனவும், பீர்க்கு சேர்ச்சி

வார்த்தல் ஆர்ப்பு நேர்ங்கல் நேர்ஞலே நேர்த்தலே நேர்ம்புறம் எனவும், வாழ்க்கை தாழ்ச்சி தாழ்த்தல் தாழ்ப்பு தாழ்ங்குலே தாழ்ஞனே வாழ்ந்தனம் வீழ்ம்படை எனவும் வரும். பிறவும் அன்ன. ஆகாதனவற்றிற்கு உதாரணம் இன்று. (கூகூ)

கூச. லனமெய் திரிந்த ணனைவொடு மகார
மீரொற் றுருஞ் செய்பு ஞள்ளே.

இது செய்யுட்கண் ஈரொற்று உடனிலேமயக்கமாமாறு கூறுகின்றது.

இ - ள். லகரளகரவொற்றுக்கள் திரிந்த னகரணகரவொற்றுக்களோடு கூட மகரவொற்று ஈரொற்றுடனிலேயாஞ் செய்யுளகத்து. எ - று.

வரலாறு; "எம்மொடு தம்மைப் பொரூஉங்காற் பொன்னெடு—கூவிளம் பூத்தது போன்ம்." எனவும், "வெயிலியல் வெஞ்சுர மையீ யேகின்—மயிலியன் மாதர் மருண்ம்." எனவும் வரும்.

கூடு. தம்மர பிசைப்பின் முதலீ றிடைகிலே
யம்மர பில்லவு மாமென மொழிப.

இது முதலீறிடைகிலே ஆகாதனவும் ஒரோவழி ஆமென்கின்றது.

இ - ள். தம்மியல்பைச் சொல்லுமிடத்து மொழிக்கு முதலாகாதனவும் ஈருகாதனவும் இடையாகாதனவும் முதலீறிடைகளில் நிற்றற்குரியவென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு; நக்கனேந்தார் டப்பெரிது எனவும், கெக்கலேக் தார் கொப்பெரிது எனவும், "அவற்றுள், ளளஃகான் முன்னர்" "வல்லெழுத் தியையின் டகார மாகும்." எனவும், முறையே முதலும் ஈறும் இடைகிலேயுமாயினவாறு காண்க. பிறவும் அன்ன. தம்மர டசைப்பின் அமரபில்லவுமாமெனவே, அக் குறிது கக் கலேக் தார் எனவும், ஆ நெடிது கா நன்று எனவும், "டறலள வென்னும் புள்ளி முன்னர்க்—கசப வென்னு மூவெழுத் துரிய" "மஃகான் புள்ளிமுன் வவ்வுக் தோன்றும்" எனவும், அம்மரபுள்ளன முதலுமீறுமிடைகிலேயுமாதல் கூறவேண்டாவாயிற்று. (கூடு)

நூசு. அம்மு னிகரம் யகர மென்றிவை
யெய்தி னேபொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன
விகர யகர மிறுதி விரவும்
புகரின் றுணர்ந்தோர் வரைந்தனர் போற்றல். 5

இது நிறுத்தமுறையானே சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள்போல இசைக்கும், அது கொள்ளற்க என விலக்கும் எழுத்துப்போலி கூறுகின்றது.

இ - ள். அகரத்தின்முன்னர் இகரமும் யகரமுமென்று கூறப்பட்ட இரண்டெழுத்தும் பொருந்திநிற்பின் ஐகாரம்போல இசைக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமும் பொருந்திநிற்பின் ஔகாரம்போல இசைக்கும்; இகரமும் யகரமும் அவ்வீற்றுமொழிகளின் இறுதிக்கண் ஒன்றன்பின் ஒன்று ஒசைவிரவி நிற்கும்; குற்றமின்றி எழுத்திலக்கணத்தை அறிந்தோர் அவ்விகாரங்களைக் கொள்ளாது கடிந்து பாதுகாக்க. எ - று. 10 15

வரலாறு; ஐவனமென்பது அஇவனம் அய்வனம் எனவும், ஔவையென்பது அஉவை அவ்வை எனவும், ஆளி ஞாளி என்பன ஆளிய் ஞாளிய் எனவும், ஆய் நாய் என்பன ஆய்இ நாய்இ எனவும், வரும். இவை கடிதல்வேண்டுமென்றறியாதார் இவற்றைக் கொள்ளற்பாலதாம் போலியென மயங்குப. (நூசு) 20

நூஎ. நெட்டெயிர் காரமு மையெளக் காளு
மிருமைக் குறிலொற் றிவற்றெடு கரமுமா
மின்ன சாரியைபெறூஉ மெவ்வழி யாளு
மெய்யி னியக்க மகரமொடு சிவணும்.

இது மேலிலக்கணங் கூறப்பட்ட அவ்வெழுத்துக்கள் வழங்குதற்கு வருஞ் சாரியை கூறுகின்றது. 25

இ - ள். நெட்டெழுத்து ஏழும் காரமும் ஐகாரஔகாரங்கள் அதுவன்றிக் காளும் உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் மெய்களுங் காரம் கான்களுடனே கரமும் ஆகின்ற இத்தன்மையையுடைய சாரியைபெற்று நடக்கும். சாரியை பெற்ற இடத்தும் பெறுத இடத்தும் ஒற்றுக்களது இயக்கம் அகரத்தோடு பொருந்தி இயங்கும். எ - று. 30

அன் ஆன் முதலிய மொழிச்சாரியையும் உடைமையின் இவை எழுத்தச்சாரியையென்பார் இன்னசாரியையென்றார்.

வரலாறு; ஆகாரம் ஈகாரம் எனவும், ஐகான் ஔகான் எனவும், அகாரம் இகாரம் எனவும், அஃகான் இஃகான் எனவும், அகரம் இகரம் எனவும், ககாரம சகாரம் எனவும், கஃகான் மஃகான் எனவும், ககரம் சகரம் எனவும் வரும். பிறவும் அன்ன. "வகார மிசையு மகாரங் குறுகும்" எனவும், "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த" எனவும், "வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லேறும்" எனவும், சாரியைபெற்றவிடத்தும் "அம்மி னிறுதி கசதக காலத்—தன்மெய் திரிந்து ஙஞந வாகும்" எனச் சாரியைபெறுத இடத்தும மெய்யினியக்கம் அகரமொடு சிவணியவாறு காண்க.

இன்னும் உரையிற்கோடலான் ஆன் ஏன் ஓன் முதலிய சாரியை பெறுதலும் ஐகார ஔகாரங்கள் ஒழிந்தவறறின்கட் கான்வருங்காலை ஆய்தம வருதலுஞ் சாரியை பெறவேண்டுமென்னும் யாப்புறவின்றி "ஆ ஏ ஓ அமரூன்றும் வினை" "அ இ உ அம் மூன்றுஞ சுட்டு" என்றாற்போல வாளாகூறுதலுங் கொள்க. (கூஎ)

முதலாவது எழுத்தியல் முற்றிற்று.

உ-வது பதவியல்.

கூஅ. எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும்
பதமாம் பொருடரி னதுபகாப் பதம்பகு
பதமென வாயிரு பகுதித் தென்ப.

என்பதுசூத்திரம். நிறத்தமுறையானே பதங்களது இயல்பு உணர்த்நிற்றலான் இவ்வோத்துப் பதவியலென்னும்பெயர்த்து. மேல் எழுத்துணர்த்தி அவ்வெழுத்தினைஞரும் பதங்களது இயல்பு உணர்த்திற்றலான் மேல் ஒத்தினேடு இயைபுடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச்சூத்திரம் மொழியாக்கமும் அதன் பகுதியும் உணர்த்துகின்றது.

இ-ள். மேற்கூறிய இலக்கணங்களை எய்திநின்ற எழுத்துக்கள் தாமே தனித்து ஒரெழுத்தாகியும் இணைந்து ஈரெழுத்தாகியும் இரண்டினை இறந்து தொடர்ந்து பலவெழுத்தாகியும் நின்று பொருளை விளக்குமெனின் அவ்வெழுத்துக்கள் மொழியெனப்

பிக்க். அங்ஙனம் எழுத்தாணுகிய மொழிதான் பகாப்பதமும் பகுபத முமென அவ்விரண்டு கூற்றதாமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

மேற்கூறிய இலக்கணங்களை எய்திநின்ற எழுத்தே மொழி யாமென்றலின் "மொழிப்படித் திசைப்பினுக் தெரிக்துவே றிசைப் பினு—மெழுத்திய றிரியா" என்பதனுலும் பெற்றும். பெறவே, அஃ கல் அ எனவும், ஆல் ஆ எனவும், கடல் க எனவும், கால் கா எனவும், மொழிக்கட்படுத்துச் சொல்லினுக் தெரிக்துகொண்டு வேறே சொல்லினும் உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் பெருக்கச் சுருக்கமுடையனபோன்று இசைப்பினுக் தத்தம் மாத் திரையியல்பிற் றிரியாவாகி வருமெனக்கொள்க. இன்னும் எடித் தல் படித்தல்முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரி யாவென்பதூஉங் கொள்க.

ஈரெழுத்தொருமொழியும் ஒதினுர் சில பல என்னுக் தமிழ்வ ழக்குநோக்கி. "ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி—யிரண்டிநந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட—மூன்றே மொழி நிலே தோன்றிய நெறியே" என்ருர் ஆசிரியர் தொல்காப்பிய ருருமென்க.

பொருடரித் பதமாம் எனவே தாராதவழி எழுத்தாந்தன் மையும் தந்தவழி மொழியாந்தன்மையும் எய்திநிற்றல் பெற்றும்; "தன்னே யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச்—சுட்டுதற் கண் ணேயாஞ் சொல்." என்பவாகலின்.

ஆ, கா, ஓரெழுத்தொருமொழி. மணி, கூனி, ஈரெழுத்தொ ருமொழி. அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனவும், கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அம்பலத் தான், அம்பலத்திஞன், உத்திரட்டாதியான் எனவும் வருவன தொ டர்மொழி. பிறவும் அன்ன. தொடருங்காற் பகாப்பதம் மூன்றெ ழுத்துமுதல் எழெழுத்தீருகவும் பகுபதம் மூன்றெழுத்துமுதல் ஒன் பதெழுத்தீருகவுக் தொடருமெனக்கொள்க. எழுந்திருத்தல் எழுந் திருக்கின்ருன் எனவும், பொருத்துவித்தல் பொருத்துவிக்கின்றனன் எனவும், சிறுபான்மை மிக்குத் தொடர்வனவுங்கொள்க. "சேரமான் யானேக்கட்சேவய் மாந்தரஞ்சொ லிருப்பொறை" இத்தொடக் கத்து ஒட்டுப்பெயர்கட்கு வரையறையில்லையென்க.

ஒற்றுங் குற்றுகரமும் எழுத்தென்னப்படாவெனச் செய்யு ளியலுட் கூறினமைபற்றிக் கால் மால் கல் வில் காகு தென்கு

எஃகு கொக்கு கோங்கு என்பனவற்றை ஓரெழுத்தொருமொழி யென்றுஞ் சாத்தன் கொற்றன் வரகு குரங்கு என்பனவற்றை ஈரெழுத்தொருமொழியென்றுங் கூறின், ஆகாது. என்னை? செய்யுட்கண் இசைபற்றி அவை எண்ணப்படாவெனவும் மொழியாக்கத்தின்கட் பொருள்பற்றி எண்ணப்படுமெனவுங் கருதி "நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி." "குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே." எனவும், "ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட நிடைத்தொட—ராய்த்த் தொடர்மொழி வன்ரொடர் மென்ரொட—ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஓதலின். (க)

கூகூ. நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி
குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே.

இது மேற்கூறிய மூவகைமொழியுள் ஓரெழுத்தொருமொழி இவ்வெழுத்துக்களான் ஆகுமென்கின்றது.

இ - ள். நெட்டெழுத்தாகிய ஏழும் ஓரெழுத்தாலாகும் ஒரு மொழியாம்; குற்றெழுத்தாகிய ஐந்தும் ஓரெழுத்தாய்நின்று ஒரு மொழியாய் நிறைதலில; இவற்றுட் சில நிறைக்கும். எ - று.

ஏழுமென்னும் முற்றும்மை தொகுத்து ஈற்றசை ஏகாரம் விரித்தார். ஐந்துமென்னும் முற்றும்மை ஈண்டு எச்சமாய்நின்றது. ஈண்டு நெட்டெழுத்தென்றது உயிரையும் உயிர்மெய்யையும். குற்றெழுத்தென்றது உயிர்மெய்யுட் சிலவற்றையெனக்கொள்க.

வரலாறு; ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், கா தீ பூ சே தை சோ கௌ எனவும், து நொ எனவும் வரும். பிறவும் அன்ன. ஔகாரம் உயிர்மெய்க்கண்ணல்லது வாராது. ஊ, இறைச்சி; ஓ, மதகு நீர் தாங்கு பலகை; சோ, அரண்; உகர ஒகரங்கள் து நொ என மெய்யோடு கூடியல்லது வாராமையானும், ஒகரம் ஒழிந்த ஏனை நான்குயிரும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எப்பொருள் என இடைச்சொல்லாய்ப் பெயரைச்சார்ந்துநின்று சுட்டுப் பொருளும் வினாப்பொருளும் உணர்த்துவதல்லது தனித்துநின்று உணர்த்துதலாற்றுமையானுங் குற்றெழுத்தைந்தும் 'மொழிநிறை பில என்றார். 'நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி—குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே.' என்றாரேனும் ஓரெழுத்தொருமொழி நெட்டெழுத்தேழானுங் குற்றெழுத்துட் சிலவற்றானும் ஆகுமென்பது கருத்தாகக்கொள்க. அங்ஙனங் கொள்ளவே

ஏனை இருவகைமொழியும் உயிர் ஒற்று உயிர்மெய்களான் ஏற்ற பெற்றியாகுமெனக் கோடும். (உ)

சo. பகாஅப் பதம்பகாஅப் பண்பிற் பயின்று
பெயர்வினை யிடையுரி யெனநால் வகைத்தே.

இது நிறுத்தமுறையானே பகாப்பதத்தினது இயல்பும் அதன் பகுதியும் உணர்த்துகின்றது.

இ - ள். பகாப்பதம் பகுக்கப்படாத இயல்பின்கண்ணே மிக்குச்சென்று பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமென நான்கு திறத்தினையுடைத்தாய்வரும். எ - று.

வரலாறு; ஆஉ மகஉ யானை குதிரை சோறு கூழ் உயிர் உடம்பு தீ நீர் எனவும், வான் நிலம் அகம் புறம் எனவும், யாண்டு வேனில் பங்குனி ஆதிரை பகல் இரா காலை மாலை நெருநல் இன்று எனவும், கண் செவி கை கால் கோடு தளிர் பூ காய் எனவும், செம்மை கருமை நெடுமை குறுமை சிவப்பு கறுப்பு வட்டம் சதுரம் எனவும், உணல் நினல் செலவு வரவு கூத்து பாட்டு எனவும், இத் தொடக்கத்துப் பொருளாதி அறுவகைப்பொருளையும் உணர்த்துவனவெல்லாம் பெயர்ப்பகாப்பதம். எல்லாம் பொருளென்றற்கு ஒரோவழி உரிமையுடைமையின் அக்கருத்தானீண்டுப் பண்புத் தொழிலும் பொருளெனப்பட்டன. நட வா உண் தின் இத்தொடக்கத்தன வினைப்பகாப்பதம். மன் மற்று அம்ம இத்தொடக்கத்தன இடைப்பகாப்பதம். சால உறு தவ இத்தொடக்கத்தன உரிப்பகாப்பதம். பிறவும் அன்ன. பகாப்பதம் பகுக்கப்படாத இயல்பின்கண்ணே மிக்குச்செல்லுமெனவே அவன் அவள் அவர் தமன் தமள் தமர் என்னுற்றுப்போல்வன ஈறு பகுக்கப்படினும் பகுதி வேறுபொருட் படாமையின் அங்ஙனம் வரும் இயல்பின்கண்ணுஞ் சாத்தையுடையான் சாத்தன் கொற்றையுடையான் கொற்றன் என்னுற்றுப்போல்வன ஈறுபகுக்கப்பட்டுப் பகுதி வேறு பொருட்படினுஞ் சாத்தன் கொற்றன் என இருகுறிமாத்திரையாயே நிற்பின் அவ்வாறு நிற்கும் இயல்பின்கண்ணுங் கங்கைகொண்டசோழபுரம் சோழனலங்கிள்ளி பாண்டியன்பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்னுற்போல்வன நிலைமொழி வருமொழியாகப் பகுக்கப்பட்டுப் பலபொருணுணர்த்தினுந் தொன்றுதொட்டு ஒருபிண்டமாய ஒருபொருளையே யுணர்த்தினிற்றலின் அங்ஙனம் நிற்கும் இயல்பின்கண்ணுஞ் சிறுவரவிற்றாய் நடக்குமெனக்கொள்க. இன்னுஞ் சாத்தன் சாத்தி முடவன் முடத்தி என்னுற்போலும் விரவுப்பெயர்கள் பகுதிவிகுதி

யாய்ப் பகுக்கப்படினும் விகுதிவகையான் உயர்திணையொருமை யேயன்றி அஃறிணையொருமையும் உணர்த்துமென்றற்கு ஒத்திலா மையான் உயர்திணையோடு அஃறிணை விரவிவரும் விரவுப்பெயர்க் கண்ணும் பகாப்பதஞ் சிறுவரவிற்றாக நடக்குமெனக்கொள்க. (கூ)

சக. பகுபதம் பகுக்கும் பண்பிற் றாகி
வினையே வினைப்பெய ரெனவிரு பாற்றே.

இது பகுபதத்தினது இயல்பும் அதன் பகுதியும் உணர்த்து கின்றது.

இ - ள். மேற்கூறிய பகுபதம் பகுதி விகுதி முதலியவாகப் பகுக்கப்படும் இயல்பினையுடைத்தாகி வினையும் வினைப்பெயரு மென இரண்டுவகையினையுடைத்தாம். எ - று.

ஈண்டு வினையைமுற்கூறினார், அது காரணமாகவரும் பெய ரென்பது அறிவித்தற்கு. வினையென்றது ஈண்டுத் தெரிநிலைவினை முற்றுங் குறிப்புவினைமுற்றும். சிறுபான்மை பெயரெச்ச வினை யெச்சங்களும் உடன்கோடலும் ஒன்று. இவற்றின் இயல்பெல் லாம் மேலைச் சொல்லோத்தினுட் காண்க.

நடந்தான் நடக்கின்றான் நடப்பான் எனவும், குழையன் கிலத்தன் வேனிலான் தோளான் செய்யன் ஊணன் எனவும், முறையே முக்காலமுங் காட்டும் வினைமுற்றுப்பகுபதமும் பொரு ளாகி ஆறுங் காரணமாகத் தோன்றும் வினைக்குறிப்புமுற்றுப்பகு பதமும் வந்தவாறு காண்க. பிறவும் அன்ன. இவற்றையே பகுத் துக்கூறி இருவகை வினைப்பெயர்க்கும் உதாரணமாமாறு காண்க. நடந்தவன் நடக்கின்றவன் நடப்பவன் செய்யவன் கரியவன் என் றாற்போலும் வினை வினைக்குறிப்புப் பெயர்ப்பகுபதமும் ஈண்டே அடக்கிக்கொள்க. (சு)

சஉ. பகுதி விகுதி யிடைநிலை சாரிய
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே.

இது மேற்கூறிய பகுபதத்தினை இக்கருவிகளான் முடிக்க என்கின்றது.

இ - ள். பகுதிமுதலிய ஆறனுள்ளும் ஈண்டைக்கு ஏற்பன இவையெனக் கருதிக் கொணர்ந்து கூட்டி மேற்கூறிய பகுபதத் தினை முடித்துக்கொள்க. எ - று.

இவற்றுட் பகுதி பெரும்பாலும் வேறுபடாது முதற்கண் நிற்பது; விகுதி வேறுபட்டு இறுதிக்கண் நிற்பது; இடைநிலை பெரும்பாலும் இனையது இத்துணையது என்று அளத்தற்கு அரிய தாய்ப் பதமுடிப்புழிக் காலமும் பொருண்மையுங் காட்டி ஆண்டே காணப்படுவது; சாரியை அன் ஆன் முதலாக எடுத்தோதப்பட்டு எல்லாப்புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறுபான்மை பொருணிலைக்கு உதவிசெய்து பெரும்பாலும் இன்னெழிலியே பயனுக வருவது; சந்தி இன்னது வந்தால் இன்னது இன்னதாமெனப் புணர்வுழித் தோன்றுஞ் செய்கை; விகாரஞ் செய்யுட்டொடையும் பதத்துள் அடிப்பாடும் ஒலியுங் காரணமாக வலித்தல் மெலித்தல் முதலாக ஆக்குவது. இஃது இடைநிலை முதலியவற்றுன் முடியாதவழி வருவது. ஏற்பன எனவே ஒன்றற்கே இவை ஆறும் வரவேண்டு மென்னும் யாப்புறவில்லையென்பதூஉம் பெற்றும். (நி)

சாரு. நீடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
றேய்பார் செல்வவ் வாழ்கே எஃகென்
றின்னவை முதல வெல்லா வினையுங்
தெரிநிலை வினையின் முதனிலை யாகும்.

பகுபதம் முடித்தற்கு உரிய கருவிகள் ஆறனுட் பின்னைய மூன்றும் மேற் புணரியலுட் பெறப்படுதலின் அவை யொழித்து ஏனைய கூறவனவற்றுள் இது நிறுத்தமுறையானே இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலுமென்னும் இருவகை வினைமுதலு ளுள் இயற்றும் வினைமுதலான் நிகழ்த்தப்படுந் தெரிநிலைவினைமுற் றுப்பகுபதத்திற்கு உரிய பகுதி கூறுகின்றது.

இ - ள். நடவென்பது முதல் அஃகென்பது ஈறுகக்கிடந்த இவ்வியல்பினவற்றை முதலாகவுடையவாய் இவ்வாறு வரும் எல் லாவினைச்சொற்களும் இயற்றும்வினைமுதலான் நிகழ்த்தப்படுந் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதத்தினுடைய பகுதிகளாம். எ - று.

இயல்பு உயிரும் ஒற்றுங் குற்றுகரமுமாகிய இருபத்துமூன் றீற்றவாகிப் பயித்தலோசையான் அச்செய்கைமேற் பெயர்த்தன்

மைப்பட்டு வினைமாத்திரையே உணர்த்திநிற்குந்தன்மை. குற்றுக ரத்தை வேறுபிரித்ததனற் போக்கு பாய்ச்சு ஊட்டு நடத்து எழுப்பு தீற்று இத்தொடக்கத்து வாய்பாட்டான் வருவனவுங்கொள்க. "ஏவல் வினைமுதற் றெரிநிலை வினையின்—மேவரு பகுதி" என வருஞ் சூத்திரத்துட் பெறப்படுதலின் ஈண்டு இயற்றும்வினைமுதற் தெரிநிலைவினையின்பகுதியே கூறிற்றென்பதுபெற்றும். இவ்வாறு நின்ற முதனிலைகளே வடநூலார் தாது என்ப.

இவற்றுற் பகுபதம் வருமாறு; நடந்தான் வந்தான் மடிந் தான் சீத்தான் விட்டான் கூவினன் வெந்தான் வைத்தான் கொந் தான் போயினன் வெளவினன் எனவும், உரிஞினன் உண்டான் பொருஞினன் திருமினன் தின்றான் தேய்த்தான் பார்த்தான் சென் றான் வவ்வினன் வாழ்ந்தான் கேட்டான் எனவும், அஃஞினன் போக்கினன் பாய்ச்சினன் ஊட்டினன் நடத்தினன் எழுப்பினன் தீற்றினன் எனவும் வரும். பிறவும் அன்ன. (சு)

சச. முன்ன ரோதிய முதனிலை யிறுதியின்
விப்பி யென்பவற் ரெழுப்பற்று தனிவரி
னேவல் வினைமுதற் றெரிநிலை வினையின்
மேவரு பகுதி யாமென மொழிப.

இஃது ஏவல்வினைமுதலான் நிகழ்த்தப்படுந் தெரிநிலைவினை மூற்றுப்பகுபதத்திற்கு உரிய பகுதி கூறுகின்றது.

இ - ள். உயிரீறு பதினொன்றும் ஒற்றீறு பதினொன்றுந் தன் வினையும் பிறவினையுமாகிய இருவகைக் குற்றுகரவீறு ஒன்றுமா கிய இருபத்துமூன்று ஈற்றவாகிய இவ்வியல்பினவற்றை முதலாக வுடையவாய் அவ்வாறு வரும் மேற்கூறிய பகுதிகளின் இறு திக்கண் வகர இகரமும் பகர இகரமுமாகிய இரண்டனுள் ஏற் பது தனியே வந்து இசையுமாயின் அவற்றை ஏவல்வினைமுத லான் நிகழ்த்தப்படுந் தெரிநிலைவினைமுற்றுப்பகுபதத்தினுடைய பொருந்திய பகுதிகளாமென்று கூறுவர் அறிந்தோர். எ - று.

இவற்றுற் பகுபதம் வருமாறு:—நடப்பித்தான் வருவித்தான் மடிவித்தான் சீப்பித்தான் விகிவித்தான் கூவுவித்தான் வேவித்தான் வைப்பித்தான் நோவித்தான் போவித்தான் வெளவுவித்தான் என வும், உரிஞுவித்தான் உண்பித்தான் பொருஞுவித்தான் திருமுவித் தான் தின்பித்தான் தேய்ப்பித்தான் பார்ப்பித்தான் செல்வித்தான் வவ்வுவித்தான் வாழ்வித்தான் கேட்பித்தான் எனவும், அஃஞு

வித்தான் போக்குவித்தான் பாய்ச்சுவித்தான் ஊட்டுவித்தான் நடத்துவித்தான் எழுப்புவித்தான் தீற்றுவித்தான் எனவும் வரும். பிறவும் அன்ன.

இவ்விருசூத்திரத்தானும் கூறிய பகுதிகள் பெயரெச்ச வினையெச்சங்கட்கும் நடந்தான் வந்தான் முதலிய வினைமுற்றுப்பெயர்கட்கும் பகுதியாமாறு உணர்க. நடந்தவன் வந்தவன் நடத்தல் வருதல் முதலிய வினைப்பெயர்க்கும் இவை பகுதியாமாறு உரையிற்கொள்க.

இனி இவ்வாறன்றி எடுத்தலோசையான் முன்னிலையேவலொருமை வினைமுற்றுப்பகாப்பதங்களாகிய நட நடப்பி என்றாற் போல்வனவே பகுதியாமென்றும், நடப்பிப்பி வருவிப்பி நடத்துவிப்பியென இவை இணைத்துவருமெனக்கூறியவற்றை இருமடியேவற்பகாப்பதமென்றும், அவை நடப்பிப்பித்தான் வருவிப்பித்தான் நடத்துவிப்பித்தான் என்றாற்போல்வனவற்றிற்குப் பகுதியாமென்றுங் கூறுவாரும் உளர். அவ்வாறு கூறுவார்க்கும் அவை பகுதியாங்கால் அப்பொருண்மையிற் திரிந்து படுத்தலோசையான் அச்செய்கை மேற்பெயர்த்தன்மைப்பட்டு வினைமாத்திரையே உணர்த்திநிற்குமெனக் கூறவேண்டிதலான், முன்னிலையேவல்வினைமுற்றுப்பகாப்பதங்கள் பகுதியாகாவென்றும்.இருகாலேவுதல் கூறியது கூறலாமாகலின் அவை இழிவழக்கென்றும்,அப்பகுதிகளாற் பிறந்த பகுபதங்களும் அவ்வியல்பினவாமென்றும் மறுக்க. (எ)

சடு. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலே
குறிப்பு வினையி னெறிப்படு முதனிலை.

இது குறிப்புவினைமுற்றுப்பகுபதத்திற்கு உரிய பகுதிகள் இவை என்கின்றது.

இ - ள். பொருளும் இடமும் காலமும் உறுப்பும் பண்புந் தொழிலுமாகிய ஆறுங் குறிப்புவினைமுற்றுப்பகுபதத்தினுடைய ஒழுங்குபட்ட பகுதிகளாம். எ - று.

பொருண்முதன்மூன்றும் முதலுஞ் சினைமுதன்மூன்றுஞ் சினையுமாய் இவ்வாறு இவ்வாறும் இருவகையாகியும் அடங்குமென்பது அறிவித்தற்கு இம்முறை வைத்தார். பண்பாவன கருஞ்செய் முதலியன.

இவற்றுப் பகுபதம் வருமாறு;—குழையன் நிலத்தன் வேலி லான் தோளான் கரியன் ஊணன் எனவரும். பிறவும் அன்ன. வினைக்குறிப்புப்பெயர்க்கு இவை ஆறும் முதனிலையாமாறும் பெய ரெச்சவினையெச்சக் குறிப்புவினைகட்கு இவற்றுள் ஏற்பன முதனி லையாமாறும் உய்த்துணர்க. கரியவன் செய்யவன் கருமை செம்மை முதலியபண்புப்பெயர்க்கும் இவைபகுதியாமாறு உரை யிற்கொள்க.

நெறிப்படுமுதனிலையென்றதனாற் கருமையன் செம்மையன் "பொருத்தமின்மையேன் பொய்மையுண்மையேன்" எனவும், வலை ச்சி புலைச்சி எனவும், கறுப்பன் சிவப்பன் அளியன் அன்பன் என வும் வரும் பண்புப்பகுபதங்கட்குக் கருமை செம்மை இன்மை உண் மைமுதலிய பண்புப்பெயர்களும் வலைமை புலைமை முதலிய சாதிப் பண்பு உணரநிற்கும் பெயர்களுங் கறுப்பு சிவப்பு அளி அன்பு முதலிய பல்வேறுவகைப்பட்ட பண்புப்பெயர்களும் தெறிப்பட வாராது உடைப்பொருணிரவாகி வரும் முதனிலையாகக்கொள்க. இன்னும் அதனானே வினை வினைக்குறிப்புக்களும் வினைப்பெயரு மாகிய பகுபதங்களின் பகுதிகளுட் சில மிக்குஞ் சில திரிந்துஞ் சில ஈறுகெட்டும் இவ்வாறு தெறிப்படவாராது வருவனவுங் கொள்க.

வரலாறு;—வாவென்பகுதி வந்தான் வருகின்றான் என்புழிக் குறைந்துந் திரிந்தும் வந்தது; கொள்ளென்பகுதி கொண்டான் கோடி கோடும் என்புழி ளகாரம் ணகாரமாகியுங் கெட்டும் நீண் டும் வந்தது; கொல் செல் வெல் என்னும் பகுதிகள் கொன்றான் சென்றான் வென்றான் கோறு கோறும் சேறு சேறும் வேறு வே றும் என்புழி லகாரம் னகாரமாகியுங் கெட்டும் நீண்டும் வந்தன; வலைமை புலைமை குயமை பனவு கணவாளம் சேமாறல் கைவாரஞ் கோடல் நாளோதல் நூலோதல் திருவின்மை அறிவின்மை என் னும் பகுதிகள் வலைச்சி புலைச்சி குயத்தி பனத்தி கணவாட்டி சேமாறி கைவாரி நாளோதி நூலோதி திருவிலி அறிவிலி என்புழி ஏற்றவாறு ஈறுகெட்டுவந்தன. வெள்ளாண்மை என்னும் பகுதி வேளாட்டி என்புழிக் கெட்டுந் திரிந்தும் வந்தது. பிறவும் அன்ன.

இனி இவ்வாறன்றிச் "செம்மை சிறுமை சேய்மை நிமை— வெம்மை புதுமை மென்மை மேன்மை—திண்மை யுண்மை தண் மை யிவற்றெதி—ரின்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே. என்" க் கூறி இவையே பகுதியாமென்றும் இவை விகுதி பதமென்பனவற் றோடி புணருங்கால் "ஈறுபோத லிடையுகர மியற்றா—லாதிநீட

லடியகர மையாத—றன்னெற் றிரட்டன் முன்னின்ற மெய்தி
ரித—லினமிக லினையவும் பண்பிற் கியல்பே" எனக்கூறி இவ்
வாறு செய்கைப்படுமென்றுங் கூறுவாரும் உளராலோவெனின்
உடைப்பொருளவாகிய செம்மையன் கருமையன் மூதலியவற்
றிற்கல்லது இன்னனென்னும் பொருளவாகிய செய்யன் கரியன்
முதலியவற்றிற்குப் பகுதியாகாமையிற் செம்மை கிறுமை முதலி
யன பகுதியாகாவெனவும், விருதிப்புணர்ச்சிக்கட் குழையன் என்
பதுபோலச் செம்மையன் கருமையன் எனப் புணர்வதல்லது ஈறு
கெடாதாகலானும் வலிச்சி மூலச்சி முதலியன கெடுதல் "விளம்
பிய பருதிவே றுதலும் விதியே." என அவர் கூறியவாற்றான்
அமையுமாகலானும் பதப்புணர்ச்சிக்கட் கருங்குதிரையென்பது
கருமையாகிய குதிரையென விரியாமையிற் கருவென்னும் பண்
பல்லது கருமையென்னும் பண்புப்பெயர்கின்று புணராமையா
னும் அது கின்று புணருங்காற் கருமைக்குதிரையெனப் புணர்வ
தல்லது கருங்குதிரையெனப் புணராமையானும் அச்செய்கை எய்
தாதெனவும் மறுக்க. (அ)

சசு. அன்ஞ னள்ளா ளர்ஆர் பம்மார்
அஆ குமிதறு என்னே னல்லோ
டம்மா மெம்மே மோமொ மெம்மூர்
கடதற ஐபா யிம்மி னிர்ஈர்
கயர வாலேல் காணும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

இது கிறுத்தமுறையானே வினை வினைக்குறிப்பு முற்றப் பகு
பதத்திற்கும் வினைப்பெயர்ப் பகுபதத்திற்கும் உரிய விகுதிகள்
இவையென்கின்றது.

இ - ள். அன்னென்பது முதல் உம்மென்பது ஈறுகக் கிடந்த
மூப்பத்தொன்பதும் அவைபோல்வன பிறவும் வினை வினைக்குறிப்பு
முற்றப் பகுபதங்களினுடைய விகுதிகளாம்; வினைப்பெயர்ப் பகுப
தத்தின்கண்ணுஞ் சில விகுதிகளாம். எ - று.

பகுபதமுடித்தற்குக் கருவியாந்தன்னையே சண்டிக்கூறவேண்
டுதலின் இவை தினை பால் இடங்கட்கு உரியவாமாறு கூறித்தி
லர். அது மேற் சொல்லோத்தினுட் கூறுப.

வரலாறு;—நடந்தனன் நடந்தான் நடந்தனள் நடந்தாள் நடந்
தனர் நடந்தார் உண்ப உண்பார் நடந்தன நடவா உண்கு உண்டி

வருது சேறு நடந்தனென் நடந்தேன் நடப்பல் நடப்பம் நடப்பாம் நடப்பெம் நடப்பேம் நடப்போம் உண்கும் உண்டும் வருதும் சேறும் நடந்தீ நடந்தாய் நடந்தி நடமின் நடந்னிர் நடந்தீர் வாழ்க வாழிய வாழியர் "மீஇயதொரால்" அழேல் சொல்லிக் காண் உண்ணும் எனவரும். வினைக்குறிப்பின்கண்ணும் இவற்றுள் ஏற்பன வருவித்துக் குழையன் குழையான் எனக் காண்க. பிறவும் அன்ன.

இவற்றுள் வேறுவினைக்கு உரியனவுஞ் சிலவுள. அவை பத்து. அவற்றை எழுத்தொப்புமைபற்றிச் சூத்திரம் பல்காமைப்பொருட்டு ஈண்டுத் தொகுத்தார். அவை சொல்லோத்தினுள் எடுத்துக் கூறுப.

அவை வருமாறு; அன்னீறு கூறுவன் எனத் தன்மைக்கண்ணும், மாரீறு "நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே." எனக் காண்கவென்னும் வியங்கோட்கு எதிர்மறைக்கண்ணும், டுவ்வீறுமூ தன்மூன்றுங் குண்டுகட்டு வந்தது போயிற்று என அஃறிணையொ ருமைப்படர்க்கைக்கண்ணும், அல்லீறு "மகனெனல் மக்கட் பதடி யெனல்." என வியங்கோளிடத்து மறையின்கண்ணும் உடன்பாட்டின்கண்ணும் உண்ணல் என முன்னிலையேவலொருமைமுற் றின்கண்ணும், மையீறு "அஞ்சாமை யஞ்சுவ தொன்றின்" என வியங்கோள்மறையின்கண்ணும், இகர ஈறு நடப்பி வருவியெனச் செய்வியென்னும் முன்னிலையேவற்பொருண்மை முற்றின்கண் ணும், ஆலீறு மரூஉ என முன்னிலையேவலொருமை முற்றின்கண் ணும் உம்மீறு "வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்" என வியங்கோட்கண்ணும் உண்ணும் தின்னும் என முன்னிலையேவற் பன்மைமுற்றின்கண்ணும் வரும். இன்னும் பிறவற்றின்கண்ணும் வருமேனும் வந்துழிக் காண்க.

இனி வினைப்பெயர்க்கண்ணும் இவற்றுட்சில விகுதியாமாறு வந்தவன் வந்தான் எனவும், வில்லவன் வில்லான் எனவும் காண்க. பிறவும் அன்ன.

பிறவுமென்றதனாற் பெயரெச்ச வினையெச்ச விகுதிவாய்பா மேம் ஓர்ந்துணர்க. (கூ)

சன. கடகற வொற்றின் னோம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

நிறுத்தமுறையானே இடைநிலை கூறுவனவற்றுள் இஃது இறந்தகாலங்காட்டும் வினைமுற்றுப் பகுபதங்களின் இடைநிலைகள் கூறுகின்றது.

இ - ள். கடதற என்னும் நான்குமெய்களும் இன்னுமாகிய ஐந்தும் ஐம்பான்மூவிடத்தும் இறந்தகாலங் காட்டித் தெரிநிலைவினைமுற்றுப்பகுபதங்களின் இடைநிலைகளாம். எ - று.

ககரம் முதனிலையெழுத்தாயுந் தகரம் முதனிலையெழுத்தாகாதும் ஏனையிரண்டும் முதனிலையெழுத்தாயும் அதற்கினமாயும் அமைத்துவரும்.

உரலாறு;—நக்கான் நக்காள் நக்கார் நக்கது நக்கன நக்கேன் நக்கேம் நக்காய் நக்கீர் எனவும், விட்டான் விட்டாள் விட்டார் விட்டது விட்டன விட்டேன் விட்டேம் விட்டாய் விட்டீர் எனவும், உண்டான் உண்டாள் உண்டார் உண்டது உண்டன உண்டேன் உண்டேம் உண்டாய் உண்டீர் எனவும், உரைத்தான் உரைத்தாள் உரைத்தார் உரைத்தது உரைத்தன உரைத்தேன் உரைத்தேம் உரைத்தாய் உரைத்தீர் எனவும், உற்றான் உற்றாள் உற்றார் உற்றது உற்றன உற்றேன் உற்றேம் உற்றாய் உற்றீர் எனவும, தின்றான் தின்றாள் தின்றார் தின்றது தின்றன தின்றேன் தின்றேம் தின்றாய் தின்றீர் எனவும், உறங்கினன் உறங்கினள் உறங்கினர் உறங்கிறறு உறங்கின உறங்கினேன் உறங்கினேம் உறங்கினாய் உறங்கினீர் எனவும் வரும்.

உரையிற்கோடலான் நக்கிலன் நக்கினனல்லன நக்கிலான் நக்கானல்லன் உண்டிலன் உண்டனனல்லன் உண்டிலான் உண்டானல்லான் உரைத்திலன் உரைத்தனனல்லன் உரைத்திலான் உரைத்தானல்லான் தின்றிலன் தின்றனனல்லன் தின்றிலான் தின்றானல்லான் உறங்கிலன் உறங்கினனல்லன் உறங்கிலான் உறங்கினனல்லான் என மறைக்கண் இவ்விடைநிலைகள் வேறுசில எழுத்துக்களோடு கூடி இறந்தகாலங் காட்டுமெனவும், எஞ்சியது தப்பியது போயது போய எனயகரமும் போயன என அன்னும் போனன் போனது என னகரமுஞ் சிறபான்மை இறந்தகாலங் காட்டுமெனவுங்கொள்க. பிறவும் அன்ன. (கo)

சஅ. ஆகின்று கின்று கிறுமூ விடத்து
மைம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

இது நிகழ்காலங்காட்டும் வினைமுற்றுப்பகுபத இடைநிலை கள் கூறுகின்றது.

இ - ள். ஆகின்றுங் கின்றுங் கிறுவுமாகிய மூன்றும் மூவிடத் தும் வரும் ஐம்பாற்கண்ணும் நிகழ்காலங்காட்டுந் தெரிநிலைவினை முற்றுப்பகுபத இடைநிலைகளாம். எ - று.

புதியனபுனைந்துரைத்தலுமென்பதனாற் கிறுவும் உடனெஞ்சினார்.

வரலாறு;—உண்ணுகின்றான் உண்ணின்றான் உண்கிறான் என வரும். ஏனைப்பால் இடங்களோடொடும் ஒட்டுக.

உரையிற்கோடலான் உண்ணுகின்றிலன் உண்ணுகின்றன னல்லன் உண்ணுகின்றிலான் உண்ணுகின்றானல்லான் உண்கின்றி லன் உண்கின்றனனல்லன் உண்கின்றிலான் உண்கின்றானல்லான் என மறைக்கண் ஆகின்று கின்றென்னும் இடைநிலைகள் வேறுசில எழுத்துக்களோடு கூடி நிகழ்காலங்காட்டுமெனவும், உண்ணுகிடக் தான் உண்ணுவிருந்தான் எனக் கிடவும் இருவும் "உரைகெழ்றி நன்றுமன் னிதுகாடாய் கூறி" என றகரமும் "கானங்கடத்திரெ னக்கேட்பின்" எனத் தகரமும் உண்பல் வருவல் உண்ணுநிற்பல் எனவும் "கூடீர் நின்றபெற்றி கண்டிப்பா ளெக்குவேற்கு" உண்பேற்கு எனவும் முறையே வினவினைப்பெயர்க்கண் வகரபக ரங்களுஞ் சிறுபான்மை நிகழ்காலங் காட்டுமெனவுங் கொள்க. பிறவும் அன்ன. (கக)

சகூ. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

இஃது எதிர்காலங்காட்டும் வினைமுற்றுப்பகுபத இடைநிலை கள் இவையெனவும் இவ்விடைநிலைகளோச் சில வினைமுற்றுப்பகுப தங்கள் ஏலாவெனவுங்கூறுகின்றது.

இ - ள். பகரவகரங்களாகிய இரண்டொற்றும் மூவிடத்து ஐம்பாலகளினும் எதிர்காலங்காட்டுந் தெரிநிலைவினைமுற்றுப்பகுபத இடைநிலைகளாம். இம்முக்காலமுங்காட்டும் இடைநிலைகளோச் சில வினைப்பகுபதங்கள் ஏலாவுமாம். எ - று.

வரலாறு;—உண்பன் உறங்குவன் எனவரும். ஏனைப் பாலி டங்கள் தோறும் ஒட்டுக. நடப்பி வருவி நடத்துவி எனச்செய்வி என்னும் பொருண்மைக்கண் வரும் மூன்னிலையேவலொருமை வினைமுற்றுப்பகுபதங்களும் இவ்விடைநிலை பெற்றவாறுகாண்க.

உரையிற்கோடலான் உண்பானல்லன் ஓதுவானல்லன் என மறைக்கண் இவ்விடைநிலைகள் வேறுசில எழுத்துக்களோடு கூடி எதிர்காலங்காட்டுமெனவும் "அந்த ளுளஜ ருகுகம் யாமே" "பாடு கம் வாவாழி தோழி" "ஐய சிறிதென்னை யூக்கி" உண்டி "ஈதன் மாட் டொத்தி பெரும" உவரத்நி நின்றி எனக் கடதறக்களுஞ் சிறு பான்மை எதிர்காலங் காட்டுமெனவுங் கொள்க. பிறவும் அன்ன.

நிo. சூடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டுமமூர் கடதற விறுதியும் பம்மார்
மின்னெ னீறும் வியங்கோட் பகுதியு
மேவலு மறையு மென்பன வெதிர்வுஞ்
செய்யுஞ்சுழ் பெதிர்வு மெய்பெறத் தருஉ
மிடைநிலே யேலா தென்மனர் புலவர்.

இது மேற் காலங்காட்டும் இடைநிலைகளைச் சிலவினைமுற் றுப்பகுபதங்கள் ஏலாவென்றூர் அவை இவையென்பதூஉம் அவை இக்காலங் காட்டுமென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். சூடுதுறுவென்னுங் குற்றியலுகரவீற்று உண்சு உண்டு வருது சேறு முதலிய தன்மையொருமை வினைமுற்றுக்க ளும், உம்மென்னும் இறுதியிடைச்சொல்லின் உகரமேறிய சும் டும் தும் றும் என்னுமிவ்வீற்று உண்சும் உண்டும் வருதும் சேறும் முதலிய தன்மைப்பன்மை வினைமுற்றுக்களும், பகர உயிர்மெய்யும் மாரும் என்னும் இவ்வீற்று உரிஞுப உண்ப கொண்மார் முதலிய உயர்திணைப்பன்மை வினைமுற்றுக்களும், மின்னென்னும் சாற்று உண்மின் உரிஞுமின் முதலிய முன்னிலைப்பன்மை வினைமுற் றுக்களும், வியங்கோட்டிறத்துவரும் கவ்வும் யவ்வும் ரவ்வும் அல்லும் ஆலும் மாரும் உம்மும் மையும் என்னும் இவ்வீற்றுச் செல்க வாழிய வாழியர் "மகனெனல் மக்கட் பதடியெனல்" "மரீஇயதொரால்" "காணன்மாரெமரே" "வாழ்தல் வேண்டுமி வண் வரைந்த வைகல்" "அஞ்சாமை யஞ்சுவ தொன்றின்" முத லிய வியங்கோண்முற்றுக்களும், ஏவற்றிறத்துவரும் உண்ணும் தின் னும் முதலிய முன்னிலையேவற்பன்மை வினைமுற்றுக்களும், அல் லும் ஆலும் ஏலும் காணும் என்னும் இவ்வீற்று உண்ணல் மருல் அழேல சொல்லிக்காண் முதலிய முன்னிலையேவலொருமை வினை முற்றுக்களும், உண்ணலன் உண்ணுன் முதலிய எதிர்மறைவினை முற்றுக்களும் எனச் சொல்லப்படுவனவாகிய பகுபதங்களெல்லாம்

எதிர்காலமுஞ்; செய்யுமென்னும் வாய்பாட்டான் வரும் உண்ணும் தின்னும் முதலிய வினைமுற்றுப்பகுபதங்கள் நிகழ்கால எதிர்கா லங்களும்; இடைநிலையேலாது பொருள்பெறக்காட்டுமென்று கூறு வர் அறிந்தோர். எ - று.

5 பகுதியென்றதனை ஏவலோடுங்கூட்டுக.

உண்ணுகிற்ப எனப் பவ்வீற்றுயர்திணைப்பன்மை வினைமுற்று நிகழ்காலமுமஉண் டிலன் உண்ணுகின்றிலன் முதலிய எதிர்மறை வினைமுற்றுக்கள் முறையே இறந்தகாலமும் நிகழ்காலமுங் காட்டும் பிறவெனின் அவை இடைநிலைபெற்று அவற்றுற் காலங்காட்டின; 10 ஈண்டு ஓதியன இடைநிலைபெறாது காலங்காட்டின என்க.

மெய்பெற என்றதனாற் "கழிந்தது பொழிந்தென வான் கண் மாறினும்" "தொல்லது விளைந்தென நிலம்வளங் காப்பினும்" எனப் பொழிந்துவிளைந்து என்னுந் துவ்வீற்றுத் தன்மையொரு மைவினைமுற்றுக்கள் இறந்தகாலமுஞ் "சிறுகண் யானையொடு 15 பெருந்தே ரெய்தி யாமிவ ணின்றும் வருதும்" எனத் தும்மீற்றுத் தன்மைப்பன்மைவினைமுற்று நிகழ்காலமுஞ் சிறுபான்மை காட்டு மெனவுங்கொள்க.

இன்னும் அதனானே ஈண்டு ஓதியகாலத்திற் பிறழ்ந்துவரு வன உளவாயின் அவையும் இவ்விடைநிலையேலாப் பெயரெச்ச 20 வினையெச்சங்களும் என்மனார் என்றிசினோர் முதலிய வினைத்திரி சொற்களுங் காலங்காட்டும் இயல்பு அறிந்து முடித்துக்கொள்க.

இன்னும் அதனானே வினைக்குறிப்புமுற்றுப் பகுபதங்கள் இடைநிலைவகையானும் ஈற்றுவகையானுமன்றிக் குறிப்பானே ஏற் றவாறு மூக்காலமும் நட வா முதலிய முன்னிலையேவலொருமை 25 வினைப்பகாப்பதங்கள் எதிர்காலமுங் காட்டுமெனவுங் கொள்க. ஈண்டுச் சொல்லாதொழிந்த இவற்றின் விகற்பமெல்லாம் மேற் சொல்லோத்தினுள் வினையியலுட் காண்க.

இனி இவ்வாறன்றி "றவ்வொ டகர வும்மைநிகழ் பல்லவுங்— றவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு—ழழிவுங் கவ்வொ டெதிர் 30 வுமின் னேவல்—வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்—செல வொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வு—மெதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே." எனக் கூறுவாரும் உளர். காலங்காட்டுவனவா கப் பின்னுள்ளோர் எடுத்தோதிய எழுத்துக்கள் தம்முண் மயங்கி

யும் வருதலின் அதுபற்றிக் காலங்காட்டும் எழுத்துக்களே ஆசிரியர் தொல்காப்பியனுர் எடுத்தோதாராயினுரேனும் இடைநிலைவகையானும் இறுதிநிலைவகையானுங் காட்டுதுமெனக் காலங்காட்டிய புகுந்த உரையாசிரியரை உள்ளிட்டோரால் அவ்வாறு கூறப்படாமையான் அஃது இலக்கணமன்றென மறுக்க. (கக) 5

நிக. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைக்குறிப் பிடைநிலை யென்னல் வேண்டுமே.

இது வினைக்குறிப்புமுற்றுப் பகுபத இடைநிலை கூறுகின்றது.

இ - ள் முற்காலத்திற் கண்டதாகிய இலக்கியத்திற்கு இலக் 10
கணங்கூறலின் ஈண்டு முடிக்கலுறும்பதத்தின் பகுதியையும் விகுதியையும் பிரித்து வேறு இடைநின்றதனை வினைக்குறிப்புமுற்றுப்பகுபதத்தின் இடைநிலையெனச்சொல்லுதலேவிரும்பும் ஆசிரியன்.எ-று.

இவை காலங்காட்டாது வாளாநிற்பினும் இடைநிற்றலான் இடைநிலையாமென்பார் இடைநிலையென்னல்வேண்டுமென்றார். 15

வரலாறு;—கச்சினன் காட்டினன் ஐயாண்டினன் தோளினன் அருளினன் வரவினன் எனவரும். பிறவும் அன்ன. இன் ஈண்டுச் சாரியையன்று, இடைநிலை,உறங்கினன் என்புழிப்போல.(கச)

நிஉ. விளம்பிய விடைநிலை வினைப்பெயர்க் கண்ணு
மேற்பன கோட லியல்பென மொழிப. 20

இது வினை வினைக்குறிப்புப்பெயர்ப் பகுபதங்கட்கு இடைநிலையாமாறு மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

இ - ள். மேல் வினை வினைக்குறிப்புமுற்றுப் பகுபதங்களுக்கு ஓதிய இடைநிலைகள் அவ்விருபெயரிடத்தும் பொருந்துவன கொணர்ந்து முடித்தல் இயல்பாமென்று கூறுவர் புலவர். எ - று. 25

வரலாறு;—நக்கான் விட்டான் உரைத்தான் உற்றான் பருகினன் எனவும், நடவாநின்றான் நடக்கின்றான் நடக்கிறான் எனவும், உண்பான் உறங்குவான் எனவும், கச்சினன் கழலினன் எனவும் வரும். இவற்றைப் பிரித்துக்கூறுக. உண்டவன் உரைத்தவன் உண்ணுநின்றவன் உண்பவன் முதலிய வினைப்பெயர்கள் இவ்வி 30

டைநிலை பெற்றவாறும், வானவன் மீனவன் வில்லவன் எல்லவன் கதிரவன் கரியவன் முதலிய வவ்வென்னும் இடைநிலை பெற்றவாறுஞ், சேரமான் கட்டிமான் முதலிய மகர இடைநிலை பெற்றவாறும், வலிச்சி பனத்தி மலையாட்டி முதலிய மூறையே சகர தகர டகர இடைநிலை பெற்றவாறுஞ் செட்டிச்சி தச்சிச்சி முதலிய இச்சென்னும் இடைநிலை பெற்றவாறுங் காண்க. பிறவும் அன்ன.

இனி ஈண்டு ஓதிய பகுதி முதலிய மூன்றனும் மேற் புணரியலுள் ஓதப்படுஞ் சாரியை முதலிய மூன்றனும் பகுபதம் முடிக்குமாறு:—நடந்தான் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை இறந்தகால இயற்றும் வினைமுதல்வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழி நடத்தலைச் செய்தானென்னுந் தொழில் தோன்ற "நடவா" என்பதனுன் நடவென்னும் அகரவீற்றுப்பகுதியை முதல்வைத்து, அதன்மீதே "அன்னன்" என்பதனுன் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை உணர்த்தும் ஆன் என்னும் விகுதியை நிறுவிக், "கடதறவொற்றின்" என்பதனுற் பகுதிவிகுதிக் கிடையே இறந்தகாலங் காட்டுந் தகர இடைநிலையை வருவித்து, "இயல்பினும் விதியினும்" என்பதனுன் மிகுத்து, "வலித்தன் மெலித்தல்" என்பதனுன் அதனை மெலித்துப், "புள்ளி மீற்றமுன்னுயிர்தனித் தியலாது" என்பதனுன் இடைநிலைத்தகரவொற்றின் மீதே விகுதி ஆகாரத்தை ஏற்றி, ஒருமொழியாக்கி, நடந்தானென முடிக்க. நடந்தது என்னும் அஃறிணை ஒருமைப் படர்க்கை இறந்தகால இயற்றும் வினைமுதல்வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழித் துவ்விகுதியும் அகரச்சாரியையும், நடந்தென் என்னும் விரவுத்திணைத் தன்மை ஒருமை இறந்தகால இயற்றும்வினைமுதல்வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழி ஏன் என்னும் விகுதியும், நடந்தாய் என்னும் விரவுத்திணை முன்னிலை ஒருமை இறந்தகால இயற்றும் வினைமுதல்வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழி ஆயென்னும் விகுதியுங் கொடுத்து முன்முடித்தாங்கு முடிக்க. இவ்வாறே இயற்றும் வினைமுதற் றெரிநிலைவினைமுற்றுப்பகுபதங்களெல்லாம் ஏற்றபெற்றி அறிந்து முடித்துக்கொள்க. நடப்பித்தான் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப்படர்க்கை இறந்தகால ஏவல்வினைமுதல்வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழி நடப்பித்தலைச்செய்தானென்னுந் தொழில் தோன்ற முன்னரோதிய "முதனிலை யிறுதியின்" என்பதனுனே நடப்பியென்னும் பகுதியை முதல்வைத்து, முன்முடித்தாங்கு முடிக்க. பிறவும் அன்ன. கச்சினன் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைக் குறிப்பான் முக்காலமும் கோ

3828
TL 39

டற்கு உரிய வினைக்குறிப்புமுற்றுப்பகுபதம் முடிப்புழிப் பண்டு இதுபொழுது நாளை என முறையே இப்பொருளையுடையனுயிருத் தலைச் செய்தான் செய்கின்றான் செய்வானென்பவற்றுள் ஏற்ப தொரு காலங் குறிப்பாற் றோன்றப் "பொருளிடங்காலம்" என்ப தனுற் கச்சு என்னும் பகுதியையுமுதல்வைத்து அதன்மீதே அன் என்னும் விகுதியை நிறுவி, "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்" என்பதனுன் இன் இடைநிலை வருவித்துக், "கூற்றிய லுகரத் திறுதி முன்னும்" என்பதனுனும் "புள்ளி யீற்றுமுன்" என் பதனுனுங் குற்றுகரத்தின்மீதே இடைநிலை இகரத்தையும் னகர வொற்றின்மீதே விகுதி அகரத்தையும் ஏற்றி, ஒருமொழியாக்கிக் கச்சினன் என முடிக்க. இவ்வாறே குறிப்புவினைமுற்றுப் பகுபதங் களெல்லாம் ஏற்றபெற்றி அறிந்து முடித்துக்கொள்க. உண்டான் உண்டவன் கரியான் கரியவன் முதலிய வினை வினைக்குறிப்புமுற் றுப்பெயர்களைமுறையே இதனெழிலைச்செய்தவன் இன்னனுயி ருந்தவனென்னுந் தொழின்மையும் பொருண்மையுந்தோன்ற மு டித்துக்கொள்க. இன்னும் பனவன் அரசன் வாணிகன் உழவன் கணக்கன் வலியன் தச்சன் வண்ணன் கணவாளன் எனவும், பனத்தி அரசி வாணிச்சி உழத்தி கணக்கச்சி தச்சிச்சி வண்ணத்தி கணவாட்டி எனவும் வரும் இத்தொடக்கத்துக் குறிப்புவினைமுற் றுப்பெயர்ப்பகுபதங்களை இன்ன குலத்தாரென்னும் பொருண்மை தோன்ற முடித்துக்கொள்க. இன்னேரன்ன பிறவாற்றுன் வரும் பகுபதங்களையும் இதுவே நிலைமை முடித்துக்கொள்க. (கடு)

இரண்டாவது பதவியல்முற்றிற்று.

கூவது உயிரீற்றுப்புணரியல்.

நூகூ. மெய்ப்புயிர் முதலீ ருமிரு பதங்களுந்
தம்மொடும் பிறவொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிக
ளியல்பொடு விகாரத் தியையது புணர்ப்பே.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே பதங்கள் தம்மோ டும் உருபோடும் புணருமாறு கூறுவான் புகுந்தவற்றுள் இவ் வோத்து உயிரீற்றுப்பதம் நின்று வருமொழி வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக்கணங்களோடும் புணருமாறு உணர்த்தினமை யின் உயிரீற்றுப்புணரியலென்னும் பெயர்த்து. பொதுவகையாற்

புணரும் இயல்பும் விரிந்த சூத்திரப்பொருளவன்றித் தொக்குப்புணரும் இயல்புங் குற்றுகரவீற்றுச்சொற்கள் நின்று புணரும் இயல்பும் உணர்த்துதலோடு இயையுமீக்காது தன்னோடு இயைபின்மை மாத்திரைநீக்கித் தலைமைபற்றி வந்து அடுத்த உயிரீறுபுணர்தலென்னும் விசேடத்தான் விசேடிக்கப்படுதலின் இக்குறி தலைமை பற்றிய வழக்கு, ஆ தீண்டு குற்றிபோல. மேற் பதங்களாமாறு உணர்த்தி ஈண்டு அவை தம்மிற் புணருமாறு உணர்த்தினமையின் மேலோத்தினோடு இயையுடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச்சூத்திரம் பொதுவகையாற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். மெய்முதலாயும் உயிர்முதலாயும் மெய்யீறாயும் உயிரீறாயும் உள்ள பகாப்பதங்களும் பகுபதங்களுந் தம்மோடுதாம்வந்தும் பிறவற்றோடுவந்தும் அல்வழிப்பொருளினானுதல் வேற்றுமைப் பொருளினானுதல் புணருமிடத்து நிலைமொழியது ஈற்றெழுத்தும் வருமொழியது முதலெழுத்தும் இயல்பாகியும் விகாரமாகியும் பொருந்துவது முன்னர்க்கூறிய புணர்ச்சியுட் தம்மோடு தாம்புணரும் புணர்ச்சியாம். எ - று.

மெய்யை மூற்கூறினுர் இயல்பும் விகாரமுமாகிய இருகூற்று நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாவென்றற்கு. வட்டப்பலகை தமிழப்பிள்ளை நின்கை ஆன்கன்று என்றாற்போல விதிவகையான் எய்திய உயிரொற்றிறுதிகளும் புணர்ச்சியெய்தல் ஈண்டுக் கோடும். மேல் இவற்றையும் விரிவஞ்சிப் பிறிதென்னும் நயம்பற்றி இயற்கையானின்ற உயிரொற்றிறுதிகளுள் அடக்கிச் செய்கைசெய்பவாகலின் ஈண்டு இருபதங்களும் என்றன அவற்றின் நிறனுகிய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுஞ் சிறுபான்மை இடைச்சொல்லும் உரிச்சொல்லுமெனக்கொள்க.

அவை மெய்யும் உயிரும் முதலும் ஈறுமாய் வருமாறு:— மரம் இலை எனவும், ஆல் விள எனவும், வந்தான் உண்டன எனவும், உண்டான் வந்தன எனவும், மன் அம்ம எனவும், அந்தில் மற்று எனவும், மல்லல் உறு எனவும், மால் தவ எனவும் முறையேகாண்க.

அவை தம்மோடும் பிறவோடும் வருமாறு:—ஆல் வீழ்ந்தது என மெய்யிறுசொன்முன் மெய்முதன்மொழி வருதலும், ஆவண்டி என உயிரிறுசொன்முன் உயிர்முதன்மொழி வருதலும், ஆலிலை என மெய்யிறுசொன்முன் உயிர்முதன்மொழி வருதலும், ஆவெ

னிது என உயிரிறுசொன்முன் மெய்முதன்மொழி வருதலுஞ், சாத்தன்கை எனப் பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்வருதலும், வந்தான் போயினான் என வினைச்சொல்லோடு வினைச்சொல் வருதலும், சாத்தனுண்டான் எனப் பெயர்ச்சொல்லோடு வினைச்சொல் வருதலும், வந்தான்சாத்தன் என வினைச்சொல்லோடு பெயர்ச்சொல் வருதலும் "அதுமற்றம்மதானே" என இடைச்சொல்லோடு இடைச்சொல் வருதலுங், "கொம்மைக் குழகாடுங் கோல வரைமார்ப" என உரிச்சொல்லோடு உரிச்சொல் வருதலும், "அதுகொ ழுஞ்சி காம நோயே" எனவும் "மல்லன்மார் படுத்தனன் புல்லுமா றெவனே" எனவும் அவற்றோடு பிறவருதலுமாம்.

நிலைவருமொழிகளென்றது ஈண்டு ஆகுபெயர். நிலைவருமொழிகளெனப் பொதுப்படக்கூறிய அதனுற் சாத்தன்வந்தான் வந்தான்சாத்தன் என நிறுத்த சொல்லும் அதனை மூடித்தலைக்குறித்து வருஞ் சொல்லுமாய் வருதலும்; அங்ஙனம் வருங்கால் அவை பதினாயிரத்தொன்று ஆயிரத்தொருபஃது பதினாயிரத்தொருபஃது என மூறையே நிலைமொழி அடையடுத்தும் வருமொழி அடையடுத்தும் இருமொழியும் அடையடுத்தும் வருதலும்; முன்றில் மீகண் என இலக்கணத்தோடு பொருந்தியுஞ் சோணாடு பாண்டிநாடு என இலக்கணத்தோடு பொருந்தாதும் மரூஉச்சொற்களாய் வருதலுங்; "கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினை" எனவும் "இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்—பரலவ லடைய விரலே தெறிப்ப" எனவும் "தெய்வ மால்வரைத் திருமுனி யருளால்" எனவும் மூறையே, ஓமைச்சினை, மருப்பினிரலே, தெய்வவரையென்று ஒட்டி, ஓமையினது சினை, மருப்பினையுடைய இரலே, தெய்வத்தன்மையையுடைய வரையெனப் பொருள் தருகின்றன காண்பு பரல் மால் என்பவற்றோடும் ஒட்டிஞற்போன்று ஒட்டி, மிக்குந் திரிக்துங் கெட்டும், நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய்ப் பொருளியைபின்றி வருதலுங்கொள்க. இவற்றுள் நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய் வருதல் நிலையிற்றென்றலாம், நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய்ப் பொருளியைபின்றி வருதல் நிலையாதென்றலாமென்று உணர்க. விளவினைக்குறைத்தான் விளவினது கோடு என்புழிச் சாரியையும் உருபும் நிறுத்தசொல்லாயே நிற்கும். இயல்பாய் இயைதல் பொன்மணி புகழழகிது ஒளிமணி என மூன்றின பெற்றியின் வேறுபடாமை இயைதல்; விகாரமாய் இயைதல் அப்பெற்றியின் வேறுபட்டு இயைதல். விகாரத்தியைவதெனப் பொதுப்படக் கூறிய அதனானே ஒன்றேயன்றி நிலப்பனை பனங்

காய் என "ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்" எனவுங் கொள்க. இயல்பு ஒருதன்மைத்தாகலின் அஃதொழித்து விகாரக் கூறுபாடு மேற்கூறுப.

நிலைமொழியது ஈற்றெழுத்து முன் பிறந்து கெட்டுப்போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையின் முறையிற் பிறந்து நின்று கெடுவன ஒருங்குநின்றுபுணருமாறின் மையிற் புணர்ச்சியென்பதொன்றின்றும்; பிறவெனின், அச்சொற் களைக் கூறுகின்றேமுங் கேட்கின்றேரும் அவ்வோசை இடைய றவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வராகலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆகவே, பின் கண்கூடாகப் புணர்கின்ற புணர்ச்சியும் முடிந்தன வேயாமென்க. (க)

நிசை. ஐம்முத லாறு தழுவுதொடர் வேற்றுமை
செவ்விதி னிலையு மெழுவாய் விளிமுற்
றிடையுரி யெச்சமதிக் குவமை யும்மை
தழுவுதொட ரல்வழிச் சந்தி யென்ப.

இது மேல் அல்வழி வேற்றுமை என்றுரை அவை இவையென் கின்றது.

இ - ள். ஐயும் ஆனுங் குவ்வும் இன்னும் அதுவுங் கண்ணும் என்னும் ஆறு உருபுகளும் விரித்துந் தொக்குந் தமக்கு ஏற்ற பெய ரோடும் வினையோடும் புணரும்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சியா மென்றும், வெளிப்படநிலைபெறும் எழுவாயும் விளியுந் தெரிநிலை வினையுங்குறிப்புவினையுமாகிய முற்றுசொற்களும் இடைச்சொல் லும் உரிச்சொல்லும் பெயரெச்சமும்வினையெச்சமுமாகிய எச்சச் சொற்களும் விரைவாதியின்வரும் அடுக்கும் உவமைத்தொகை யும் உம்மைத்தொகையுந் தமக்கு ஏற்ற பெயரோடும் வினையோ டும் புணருப்புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சியாமென்றுங் கூறுவர் ஆசிரியர். எ - று.

நிலைமொழி வருமொழியாய் நின்று புணர்ச்சி எய்தாமையான் ஈண்டைக்கு ஏலாத தோன்ற எழுவாயை நீக்குதற்குச் செவ்விதி னிலையும் எழுவாயென்றார். வேற்றுமையல்லாதது அல்வழியென் பது அறிவித்தற்கு ஈண்டு அல்வழி முற்கூறாயினர். சொல்லோத் தினுள் வேற்றுமையெனப்படும் எழுவாயும் விளியும் ஈண்டு அல்வ ழியென்றல் மலைவாம்பிறவெனின், ஆண்டு அவை ஐமுதலிய வேற்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600 090.

றுமைபோலப் பொருள்வேறுபடுத்தல் ஒப்புமைபற்றி அவற்றோடு உடனெண்ணப்பட்டு வேற்றுமையெனப்படும், ஈண்டு முற்றுச் சொற்கள் முதலியனபோலப் புணர்ச்சிக்கட் செய்கை ஒப்புமை பற்றி இவற்றோடு உடனெண்ணப்பட்டு அல்வழியெனப்படும் ஆகலின் மலைவாகாதென்க. 5

உ-ம். குடத்தைவனேந்தான் குழையையுடையான் எனவும், அகத்தியனுற்றமிழுரைக்கப்பட்டது வேலாலெறிந்தான் எனவும், அந்தணர்க்காவைக்கொடுத்தான் மாணாக்கர்க்குநூற்பொருளுரைத்தான் எனவும், ஊரிற்றீர்ந்தான் காக்கையிற்கரிதுகளம்பழம் எனவும், யானையதுகோடு சாத்தனதுதோட்டம் எனவும், குன்றத்துக் கட்குவடு பனையின்கணன்றில் எனவும்; நிலங்கடந்தான் குழைக்காது எனவும், தாய்மூவர் பொற்குடம் எனவும், கருப்புவேலி கடிசூத்திரப்பொன் எனவும், வரைபாய்தல் கருவூர்க்கிழக்கு எனவும், கொற்றனுணர்வு சாத்தன்புத்தகம் எனவும், மன்றற்பெண்ணை மாரிமா எனவும், மூறையே இரண்டாவதுமுதல் ஆறும் விரிந்துந் தொக்கும் வேற்றுமைப்புணர்ச்சி வந்தவாறு காண்க. ஆடிடந்தது ஆவரம்பல எனவும், நம்பிவாராய் கோவேகூறாய் எனவும், வந்தான்சாத்தன் பாய்ந்ததுபுலி எனவுங், குழையன்கொற்றன் குண்டுகட்டெருமை எனவும், இணிமற்றொன்றுரை "அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை" எனவும், "நணிபோதையே நயனில் கூற்றம்" "வெயில்புறந்தரூஉ மின்னலியக்கத்து" எனவும், ஓதிய பார்ப்பான் ஓதும்பார்ப்பான் எனவும், உண்டிவந்தான் ஓடிவந்தான் எனவும், "கொன்னூர் துஞ்சினும் படைபடை யென்றஞ்சி" "வந்தது வந்தது கூற்று" எனவும், புலிப்பாய்த்துள் மழைவண்கை எனவும், உவாப்பதினான்கு புலிவிற்கெண்டை எனவும், மூறையே எழுவாய்முதலிய ஏழும் விரிந்தும் உவமையும் உம்மையுந் தொக்கும் அல்வழிப்புணர்ச்சி வந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

இவற்றுடன் வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை என்பனவற்றையும் எடுத்து ஓதாராயினர் என்னையெனின், வினைத்தொகையும் பண்புத்தொகையும் அல்வழிப்பொருளவாயினும் பிரித்தவழி முறையே மூக்காலமும் உணர்த்துந் தன்மையவாயும் ஐம்பாலும் உணர்த்துந் தன்மையவாயும் நிற்குந் தத்தந் தொகைப்பொருள் சிதைதலிற் பிரிக்கப்படாமையாற் பிரிவிலொட்டுக்களாமாகலின், ஈண்டு மேலமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாது மருவின்பாத்தியவாய்க் கொல்யானை அரிவாள் ஆட

ரங்கு செல்செலவு புணர்பொழுது செய்குன்று எனவும், கருங்கு திரை நெடுங்கோல் பாலிலே பைங்கண் சேதா எனவும் வருவன போலவும் முடிந்தாங்கு முடியுமாகலானும்; அன்மொழித்தொகை வேற்றுமைத்தொகைமுதலிய ஐவகைகிலேக்களங்களினும் பிறக்கு பொற்றொடி பவளவாய் திரிதாடி வெள்ளாடை தகரஞாழல் என ஒருசொன்னீர்மைத்தாய்ப் பெயர்த்தன்மையெய்திப் "பொற்றொடி தக்தபூனைமடல்" எனப் பயனிலேயோடு புணர்த்துழி எழுவாயாயுஞ் "சுடர்த்தொடிகேளாய்" என முடிக்குஞ்சொல்லோடு புணர்த்துழி விளியாயும் அல்வழிப்புணர்ச்சியாதலுக், தகரஞாழல்பூஞினுள் தகர ஞாழலேப்பூஞினுளென வேற்றுமையுருபு தொக்கும் விரித்தும் முடிக் குஞ்சொல்லோடு புணர்த்துழி வேற்றுமைப்புணர்ச்சியாதலுமுடை யவாதலானும் ஓதாராயினுரென்க.

எச்சத்தை முற்றினேச் சாரக் கூறுத முறையகூற்றினனே வட்டப்பலகை சாரைப்பாம்பு என்பனபோலும் இருபெயரொட் டுப்பண்புத்தொகைகள் அல்வழிப்பொருளவாய்ப் புணர்ச்சியெய் தல் கொள்க. (2)

நூ. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலேயே.

இது மேல் "ஐம்மூதலாறுக் தழுவுதொடர்வேற்றுமை" யாமென வரையாதுகூறினமையின் "மெய்யுயிர்முதலீ ரைமிருப தங்களு" மென்பதனுற்பெற்ற பெயர்முதலிய நான்கும் ஐம்மூதலா றும் விரியவுக் தொகவும் வருக் தொடர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி யாமெனப் பெறுமன்றே? அதனேவிலக்கி வேற்றுமை பெயர்வழிய என்கின்றது.

இ - ள். வேற்றுமைகள் பெயரின்பின்னிடத்தனவாம் அவற் ருேடு புணரும் நிலேமைக்கண். எ - று.

பெயரென்றது உயர்திணேப்பெயரும் அஃறிணேப்பெயரும் விரவுப்பெயருஞ் சிறுபான்மை வினேப்பெயரும் உரிப்பெயருமெ னக்கொள்க.

உ-ம். நம்பியை நம்பியொடு நம்பிக்கு நம்பியின் நம்பியது நம்பிகண் எனவும், அதனே அதனெடு எனவும், சாத்தனே சாத்த னெடு எனவும், உண்டானே உண்டானெடு எனவும், நளியை நளி யொடு எனவும் முறையேகாண்க. பிறவும் அன்ன. (கூ)

நிசு. விகாரமொற் றுயிருயிர்மெய் சாரியை மிருத நிரிதல் கெடுத லெனமூ வகைத்தே.

இது முன்னர்க் கூறிய விகாரம் இத்துணைத்தென்கின்றது.

இ - ள். மேற்கூறிய விகாரப்புணர்ச்சி மெய்யும் உயிரும் உயிர்மெய்யுமாகிய எழுத்துஞ் சாரியையுந் தோன்றலும் வடிவுவேறுபடுதலுங் கெடுதலுமென மூன்றுகூற்றினையுடைத்தாம். எ - று.

ஏற்புழிக்கோடலான் எழுத்துஞ் சாரியையும் இம்மூன்றும் ள எய்தவேண்டுமென்னும் யாப்புறவின்றி ஏற்றபெற்றி வருமெனக் கொள்க.

வரலாறு;—மலைத்தலே எனக்கொட்டில் தமிழக்கூச்து உரிய நெய் மகவின்கை எனவும், மட்குடம் அறுபது மரவேர் பல்சாத்து அங்கை எனவும் வரும். பிறவும் அன்ன. (ச) 1

நிஎ. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

இது செய்யுள்விகாரங் கூறுகின்றது.

இ - ள். மெல்லொற்றைவல்லொற்றுக்கலும் வல்லொற்றை மெல்லொற்றுக்கலுங் குற்றெழுத்தைநீட்டலும் நெட்டெழுத்தைக் குறுக்கலுஞ் சந்தம் நிரம்புதற்கு ஒருசொல்லே விரித்தலுஞ் சந்தம் அளவாதற்கு ஒருசொல்லைத் தொகுத்தலுமாகிய அறுவகை விகாரமுஞ் செய்யுட்கண் வேண்டுழி வரும். எ - று.

இவை ஆறும் புணர்ச்சிவிகாரம்போல இன்னுழிவருமென வரையறுக்கப்படா, செய்யுட்செய்யுஞ்சான்றோர் அணிபெறச் செய் ஜ யுட்கண் வருவித்துழி வருமென்பார் வேண்டுழிவருமென்றார்.

வரலாறு;—"முத்தைவரூஉங்காலக்தோன்றின்" எனவும், "குன்றியலுகரத்திறுதியாகும்" எனவும், "போத்தறூர்புல்லறிவினார்" எனவும், "திருத்தார்நன்றென்றேனன்றியேன்" எனவும், "தண்ணந்துறைவர்தகவிலர்" எனவும், "ஐந்தவித்தாலற்றல்" எனவும், மூறையேகாண்க. பிறவும் அன்ன. (ஞ)

நிஅ. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

இதுவும் அது.

இ - ள். ஒருசொல்லின் முதலிடைகடையென்னும் மூன்றனுள் இச்சொல் இவ்வழிக் குறைப்பினும் நிறைந்துநிற்பதுபோன்று ஈ

பொருளை விளக்கும் என்பதை அறிந்து செய்யுளின்பம்பெறச் செய்வான் குறைக்க அங்ஙனம் வருங் குறைதல்விகாரமுஞ் செய்யுட்கண்வேண்டிழி வரும். எ - று.

"மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி" எனவும், "வேதினவெரிநிஞ்ஞிமுதுபோத்து" எனவும், "நீலுண்டுகிலிகைகடுப்ப" எனவும், முறையே மூவிடத்துங் குறைந்தவாறும் பிரிண்டுகுறைதற்கு ஏலாதவாறும் அங்ஙனங் குறைந்தனவாயினுந் தாமரை ஓந்தி நீல மென உரைத்த சொற்பொருள்களைத் தந்தவாறுங் காண்க. "கண்டிரண்முத்தங்கொண்டுவந்து" என்புழி வந்ததென்னும் வினையுஞ் "சான்றீரென்பிலர்தோழி" என்புழி என்பாரிலரென்னும் வினையுங் குறைந்துவந்தன. வினைச்சொல் இங்ஙனங் குறைதல் சிறுபான்மையெனக் கொள்க. இஃது ஒருசொல்லின்கட் சிறிதுநிற்பச் சிறிதுகெடித்தலாதலின் முழுதுங்கெடித்தலாகிய தொகுக்கும்வழித் தொகுத்தலின்வேறுதலறிக.

புணர்ச்சிவிகாரமன்றி யாப்பிற்கே உரிய இவற்றையும் ஈண்டுக்கூறினார் விகாரம் அதிகாரப்பட்டமையானும் பகுபதமுடித்தற்குச் சிறுபான்மை வேண்டுதலானும் யாப்பிற்கே உரிய பிறவும் இவ்வோத்துட் கூறுதலானும் விரித்தல் தோன்றலாகவும் வலித்தலும் மெலித்தலும் நீட்டலுங் குறுக்கலுந் திரிபாகவுந் தொகுத்தலும் மூவிடத்துக்குறைதலுங் கெடுதலாகவும் அடக்கிச் செய்யுள்விகாரமும் மூன்றென அமையுமென்பது போதற்குமென்க. (கூ)

ருகூ. அன்னு னின்ன லற்றிற் றத்தந்
தம்நம் நும்மே அஃ ஐஞன
வின்ன பிறவுஞ் சாரியை மொழியே.

மூவகைவிகாரமும் எய்துதற்கு உரிய இரண்டனுள் எழுத்துக்கூறுபாடு எழுத்தியலுட் பெறப்படுதலின் இஃது எஞ்சிநின்ற சாரியை இவையென்கின்றது.

இ - ள். அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் ஏயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வுமாகிய பதினேழும் அவைபோல்வன பிறவும் மேற்கூறிய சாரியையிடைச்சொல்லாம். எ - று.

பிற ஆவன உம்மும் ஞான்றுங் கெழுவும் முதலியனவாம். ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்

கும் வேற்றுமை சாரியையாயின் உருபேற்றலும் உருபாயின் ஏலா மையுமென்க. மகத்துக்கை என்புழித் தகரவொற்றுத் தகரவுகர மும் வருமென்னில் இருளத்துக்கொண்டான் என்புழி அத்தென வேண்டுதலின் ஆண்டும் அத்து நின்றே கெட்டதெனக்கோடும். வேறுகின்ற இருமொழியுந் தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்து நிற்றலிற் சாரியையாயிற்று.

வரலாறு;—ஒன்றன்கூட்டம் ஒருபாற்கு வண்டின்கால் பூத றுந்தொடையல்சூடி பலவற்றை பகிற்றுப்பத்து மரத்திலே புளியங் காய் எல்லார்தம்மையும் எல்லார்நம்மையும் எல்லீர்நும்மையும் கல னேதூணி சுன்றக்கூகை சாத்தனுக்கு மூன்னூனைக்குழவி ஆடிக்குக் கொண்டான் ஆன்கன்று என முறையே காண்க. பிறவும் வந்து ழிக் கண்டுகொள்க. (எ)

சுo. அத்தி னகர மகாமுனை யில்லை.

இது முற்கூறியவற்றுள் அத்துச்சாரியை முதலெழுத்துக் கெடுமென்கின்றது.

இ - ள். அத்துச்சாரியையின் அகரம் இயல்பானும் விதியா னும் நின்ற அகரவீற்றுமுன்னர்க் கெடும். எ - று.

வரலாறு;—மகத்துக்கை கலத்துக்குறை என முறையே காண்க. உரையிற்கோடலான் அதவத்துக்கண் எனச் சிறுபான்மை கெடாதெனவும், அண்ணத்தேரி திட்டாத்துக்குளம் என ஆகா ரத்தின் முன்னருங் கெடுமெனவும் விளவின்வீழ்பழம் பலாவின் வீழ்பழம் என இன்னுருபு இன்சாரியை பெறுதெனவும், பாம்பி னிற்கடிது தேள் என வழக்கின்கண்ணுங் "கற்பினின்வழாஅ நற் பலவுதவி" எனச் செய்யுட்கண்ணுஞ் சிறுபான்மை பெறுமென வுங் கொள்க. (அ)

சுக. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணாவழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகு
மஃனயவை தெரித லறிவோர் கடனே.

இது சாரியை வரும் இடனுந் நிறனுங் கூறுகின்றது.

இ - ள். கீழ்மொழிமுன்னர் விகுதியும் பதமும் உருபும் வந்து புணருமிடத்து இடையே ஒன்றும் இரண்டுஞ் சாரியை வருதலும் வாராதொழிதலும் இருவகையுமொப்ப நிற்றலும் பொருந்தும்; அத்

தன்மையவற்றை ஒட்டுதற்கு ஒழுகியவழக்கொடும் விரித்துரலோ டும் பகுத்தி எடுத்தோத்தானும் இலேசானும் புறனடையானும் உரையானுங் கூறுபட ஆராய்ந்தறிதல் அறிவுடையோர்க்கு முறை மையாம். எ - று.

விகுதிப் புணர்ச்சிக்கண் உண்டது ஊரது என்றாற்போல்வன வரவேண்டியேகின்றன; வெற்பன் பொருப்பன் என்றாற்போல் வன வேண்டாதனின்றன; வருவன வருவ உண்பன உண்ப என் றாற்போல்வன இருவகையுமோப்பநின்றன. பதப்புணர்ச்சிக்கட் பலவற்றுக்கோடு சிலவற்றுக்கோடு என்றாற்போல்வன வரவேண் டியே நின்றன; அத்திக்காய் அகத்திக்காய் என்றாற்போல்வன வேண்டாதனின்றன; விளவின்கோடு விளங்கோடு அதலின்கோடு அதங்கோடு என்றாற்போல்வன இருவகையு மொப்பநின்றன. உருபுபுணர்ச்சிக்கண் மரத்தை மரத்தோடு அவற்றை அவற்றோடு என்றாற்போல்வன வரவேண்டியேநின்றன; நம்பியை நம்பியோடு கொற்றனை கொற்றனோடு என்றாற்போல்வன வேண்டாதுநின்றன; மண்ணினை மண்ணை வேயினை வேயை என்றாற்போல்வன இருவ கையுமொப்ப நின்றன. பூவினெடுவிரிந்தகூந்தல் பூவொடுவிரிந்த கூந்தல் இவையும் அன்ன. அவையிற்றிற்கு இவையிற்றிற்கு என் றாற்போல்வன பலவும் வந்தன. பிறவும் வந்துழிக் காண்க.

இடையேவருமென வரைந்துகூறுது பொதுப்பட வருதலு மென்றமையின் எல்லாவற்றையும் எல்லார்நம்மையும் எல்லாவற் றுக்கோடும் எல்லாநங்கையும் என உருபின்பின்னரும் பொருட் பின்னரும் உம்மூச்சாரியை வருமெனக்கொள்க. (கூ)

சுஉ. எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
யிசையிற் றிரித னிலேஇய பண்பே.

இஃது எழுத்துக்கள் ஒன்று பலவாமென எய்தாதது எய்து விக்கின்றது.

இ - ள். எழுத்து ஒருதன்மையவான பொருள்விளங்கநிற்கும் புணர்மொழிகள் எடுத்தல் படுத்தல் முதலிய ஓசைவேற்றுமையாற் புணர்ச்சி வேறுபடுதல் நிலேபெற்றகுணம். எ - று.

செம்பொன்பதின்றொடி செம்பருத்தி குறும்பரம்பு நாகன் றேவன்போத்து தாமரைக்கணியார் குன்றேறுமா என இவை இசையிற் திரிந்தன. (கo)

சுங. அவைதாம், முன்னப் பொருள புணர்ச்சி வாயி
னின்ன வென்னு மெழுத்துக்கட னிலவே.

இது மேலதற்கு ஓர் புறனடை கூறுகின்றது.

இ - ள். பல பொருட்குப் பொதுவென்ற புணர்மொழிக டாங் குறிப்பான் உணரும பொருண்மையினையுடையனவாம; புணர்ச்சியிடத்து இத்தன்மையவென்னும் எழுத்துமுறைமையையுடையனவல்ல. எ - று.

செம்பொன்பதின்மெரடி என்றவழிப் பொன்னராய்ச்சியுள் வழிப் பொன்னென்றரு செம்பாராய்ச்சியுள்வழிச் செம்பென்றுங் குறிப்பான் உணரப்பட்டது. இசையிற் திரிதல் ஒலியெழுத்திற்கெனவும் எழுத்துக்கடனிலவென்றது வரிவடிவிற்கெனவுங் கொள்க.

சுச. புள்ளி யிற்றுமுன் னுயிர்தனித் தியலாது
மெய்யொடு சிவணு மவ்வியல் கெடுத்தே.

இது புள்ளியீற்றுமுன் உயிர்முதன்மொழிவரிற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். புள்ளியீற்றுச் சொன்முன்வந்த உயிர்முதன்மொழியின் உயிர் தனித்து நடவாது, அப்புள்ளியோடு கூடித், தானதனித்துநின்ற அவ்வியல்பினைக் கெடுத்து. எ - று.

எனவே, கீரோடு கூடிய பால்போல நின்றதென்று ஒற்றுமை கூறினரென்பதாயிற்று.

வரலாறு;—பாலரீது பாலாழி ஆலிலை பொருளீட்டம் வானுலகு வானூடு வேலெறிந்தான் வேலேத்ரன் பொருணியம் பொருளொன்று நாணெடிற்று சொலலெளவியம் எனவரும். பிறவும் அன்ன. அதனை அதனெடி நாடிரி என விதிவகையானெய்திய புள்ளிமுன்னும் இவ்விதிகொள்க. (கூ) 25

சுடு. சுற்றிய லுகரத் திறுதி முன்னு
மற்றென மொழிப யவ்வரி னிகரந்
தெற்றென வருஉமது முற்றத் தோன்றுது.

இது சுற்றியலுகரத்தாற்றுமுன் உயிர்முதன்மொழியும் யகரமுதன்மொழியும் வரிற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். குற்றியலுகர ஈற்றுமுன்னும் வர்க்க உயிர்முதன்மொழியின் உயிர் தனித்து நடவாது, அக்குற்றியலுகரத்தோடு கூடிக், தான் தனித்துநின்ற அவ்வியல்பினைக் கெடுத்தென்றும், அதன்முன் யகரமுதன்மொழி வரின் இகரம் தெளிவுபத்தோன்றுமென்றும், அக்குற்றுகரம் முடியத் தோன்றுதென்றுங் கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—காரு எஃகு வரகு கொக்கு குரங்கு தெள்கு என நிறுத்தி, அரிது யாது என வருவித்துக் காண்க. பிறவும் அன்ன.

நாகரிதென்புழி முன்னர்க் குற்றுகரவோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டும் கூடிநின்றல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப் போக நின்ற ஒற்றின்மேல் உயிர் எறிற்றென்றல் பொருந்தாதென்க. யகரம் வரிற் குற்றுகரம் இகரமாய்த் திரியுமென்னுது உகரங்கெட ஓர் இகரந் தோன்றுமென்றார், "யகரம் வரும்வழி யிகரங் குறுகு முகரக் கிளவி துவரத் தோன்றுது" என்பவாகலின். அங்ஙனந் தோன்றிய இகரங் குறுகல் "யகரம் வரக்குற வுத்தப வரூஉ" மென்பதனாற் பெறுதும். மூற்ற என்றார் அறுவகையீற்றின்கண்ணும் உகரங் கெடுமென்றற்கு. நெற்றென என்றதனால் அதனை அதனோடு இதனை இதனோடு கதவழகிது கனவழகிது கதவியாது கனவியாது என ஒரோவழி உயிர்முதன்மொழி வருங்கால் மூற்றுகரங் கெடுகின்ற ஒற்றின்மேல் உயிர் ஏறி முடிதலும் யகரமுதன்மொழி வருங்காற் குற்றுகரவீறு முடிக்தாங்கு முடிதலுங் கொள்க. (கஉ)

சூசு. தனிக்குறின் முன்னெற் றுயிர்வரி னிரட்டும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது; உயிர் ஏற இடங்கொடுத்தலேயன்றி இரட்டித்தும் நிற்குமென்றலின்.

இ - ள். பிறிதொன்றனைச் சாராது தனியேநின்ற குற்றெழுத்தின்முன் நின்ற ஒற்று உயிர்வரின் இரட்டித்துநிற்கும். எ - று.

வரலாறு;—மண் கம் பொன் நெய் கல் தெவ் புள் என நிறுத்தி, அழகிது ஆன்றது இயைந்தது எனவும், அமைவு ஆக்கம் இன்மை எனவும் வருவித்து, அவ்வாறுதல் காண்க. பிறவும் அன்ன.

சூஎ. தன்னெழி மெய்முன் யவ்வரி னிகரந்
தன்னு மென்று தூணிரு மூளரே.

இது யகரம் ஒழிந்த மெய்முன் யகரம்வந்து புணர்வழிப் படுஞ் செய்கை கூறுகின்றது.

இ - ள். தன்னையொழித்துநின்ற பத்துமெய்முன்னும் யகர முதன்மொழி வரின் ஓர் இகரந்தோன்றுமென்று துணிவாரும் உளர். எ - று.

உம்மையாற் துணியாதார் பலரென்க.

வரலாறு;—உரிஞ் மண் வெரிந் பொன் போர் கல் தெவ் கேழ் தாள் என நிறுத்தி, யானை யாது என வருவித்து, அவ்வாறு தல் காண்க. பிறவும் அன்ன. உரிஞ்யானை மண்யானை என இகரம் பெருமையுங் கொள்க. (கடு)

சூஅ. இஈ ஐவழி யவ்வு மேனை
யுயிர்வழி வவ்வு மேமுனிவ் வீருமையு
மூயிரா வரி னுடமபடு மெய்யென் றுதல்
வரையின் றெனமனுர் மதிக்குங் காலே.

இஃது உயிரீற்றுமொழிமுன் உயிர்முதன்மொழி வந்து புணருமாறு கூறுகின்றது

இ - ள். இகர ஈகார ஐகாரங்களின்பின்னர் யகரமும் ஒழிந்த உயிர்களின்பின்னர் வகரமும் அவற்றுள் ஏகாரத்தின்பின்னர் யகர வகரமும் உயிர்முதன்மொழி வந்தால் உடம்படுமெய்யென்று பெயரவாய்த் தோன்றுதலே நீகருதலின்றென்று கூறுவர் ஆசிரியர் ஆராயுமிடத்து. எ - று.

வரலாறு;—மணி நீ மலை அழகிது எனவும், வீள பலா கடி பூ அடைந்தது "ஓஒ வுவம னுறழ்வின்றி யொத்ததே" சோ கௌ அடைந்தது ஆடிற்று இழைந்தது எனவும், மணியழகு வீளவழகு மாவடி மாவாட்டம எனவும், "ஏஎபிவளொருதிபேடியோவென் னூர்" "ஏவாடல்காண்க" எனவும் வரும். பிறவும் அன்ன.

LDஇக்குங்காலே என்றதனால் அளபெடுப்புழிவரும் எகரமுன்னரும் ஏகாரத்தின்முன்போல உணடேஎயிகல் என யகரமுஞ் சேவடைந்தது என வகரமுஞ் சிறுபான்மை புள்ளியீற்றமுன்னும் "வீண்வத்துக்கொட்டுமவண்ணத்தமரர்" என வகரமுந் தோன்றுதல் கொள்க. "நீழ்கழன்மறவர்செல்வுழிச்செல்க" என்பது வீனைத் தொகையென மறுக்க. வரைவின்றென்மனுர் என்றதனால் உடம்படுமெய்பெறுதல் ஒருதலையன்றுய்க் கௌி அரிது மூங்கா இல்லே எனப் பெருமையுங்கொள்க. (கசு)

சுகூ. எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கு
முன்வரு ஞநமய வக்க ளியல்புங்
குறில்வழி யத்தனி யைநா தமுன்மெலி
மிசலுமாம் ணளலன வழிநத் திரியு
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.

தொக்குப்புணரும் இயல்புணர்த்துவனவற்றுள் இஃது எல்லாவீற்று எவ்வகைச் சொன்முன்னும் வரும் மென்கணமும் இடைக்கணமும் இருவழியும் முடியும் முடிபு தொகுத்துக் கூறுகின்றது.

இ - ள். மேல் ஈருமென்ற இருபத்தாஅ எழுத்தையும் இறுதியாகவுடைய பெயர் வினை இடை உரியென்னும் நான்கு சொன்முன்னும் வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் இயல்பாய்முடியுமென்றும், குற்றெழுத்தின்பின் நின்ற யகாரமும் ஒரெழுத்தொருமொழியான ஐகாரமும் கொவ்வுந் துவ்வுமான இவற்றின்முன்னர் ஞகார நகார மகாரங்கள் இயல்பாதலேயன்றி மிகுதலுமாமென்றும், ணகார ளகார லகார னகாரங்களின்பின் வரும் நகாரந் திரிந்து முடியுமென்றும், மெல்லெழுத்தினது இயல்பு ஒருகால் இயல்பாயும் ஒருகால் மிக்கும் இவ்வாறு உறழ்ந்துமுடியினும் மீக்கூர் நல்லறிவான் ஆராயும் பக்கத்தென்றுங் கூறுவர் அறிந்தோர். எ - று.

வரையாது கூறினமையின் இம்முடிபுகள் அல்வழி வேற்றுமையாம் இருவழியுங்கொள்க.

வரலாறு;—வினை பலா கிளி தீ கடு பூ ஏவு சேபுனை ஓஒ சோ கௌ உரிஞ் மண் பொருந் மரம் பொன் வேய் வேர் வேல் தெவ் யாழ் வாள் வரகு என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து, அஃறிணைப்பெயர்முன்னும்; நம்பி அவன் நங்கை அவள் என நிறுத்தி, ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் எனவும், ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவள் வலியள் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து, உயர்திணைப்பெயர்முன்னுஞ்; சாத்தி கொற்றி சாத்தன் கொற்றன் என நிறுத்தி, ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவள் வலியள் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் என

வும், ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து விரவுப்பெயர்முன்னும் இருவழியும் இயல்பாயினவாறு காண்க. சேரவுக்கு ஞெள்கிற்று நீட்டித்தது ஞெள்கல் நீட்டிப்பு எனவும், கௌவுக்கு ஞெகிழ்ந்தது நீட்டித்தது ஞெகிழ்ச்சி நீட்டிப்பு எனவும் ஒட்டுக. பிறவும் பொருள் தருதற்கு ஏற்பன அறிந்து ஒட்டுக. மலர்ந்தஞாலம் விரிந்தநூல் உயர்ந்தமலை வடிந்தயாறு துரந்தவாளி எனவும், வந்தனர்ஞாட்பின் வருந்தனர்நூலோர் மலிந்தனர்மறவர் புணர்ந்தனர்யாழோர் தணந்தனர்வயவர் எனவும் வினைச்சொன்முன்னும்; நிலனென நீரென தீயென வளியென எனவும், கொன்மூனையிரவூர் கொன்வரல்வாடை எனவும் இடைச்சொன்முன்னும்; தடமருப்பெருமை கடிநுனைப்பகழி "வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி" எனவும், "மல்லன்மார்படுத்தனன்புல்லுமாறெவனே" "தெள்ளாறறழீஇயவார்மணலடைகனர்". "பையுண்மாலைப்பழுமரம் படரிய" எனவும் உரிச்சொன்முன்னும் இயல்பாயினவாறு காண்க. பிறவும் அன்ன. "ஞாலனவழிநத்திரியும்" என்றலின் அத்திரிபு ஈண்டுக் கொள்ளற்க. உரிஞாஞான்றது பொருநஞான்றது மண்ணுஞான்றது வேண்ஞான்றது வாண்ஞான்றது மரமாண்டது வேயாது என மிலைமொழியீறு விகாரப்படுதலென்னை எனக் கடாவற்க, ஈண்டு வருமொழியியல்பாமென்றலின். மெய்ஞ்ஞானம் நூல் மாண்டது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி எனவும், கைஞ்ஞெரிந்தது நீண்டது மறித்தது எனவும், ஞெரித்தார் நீட்டினர் மறித்தார் எனவும், இருவழியும் மிக்கன. கொஞ்ஞெள்ளா தஞ்ஞெள்ளா காகாமாடா என இவை வினையாகலின் அல்வழிக்கண் மிக்கன. இவை கலிந்து கூறப்பிறத்தலான் இயல்பாதலே வலியுடைத்தென்பார் மிகலுமாமென்றார். ககரத்திரிபு மேறகாட்டுதும். கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி இதழ்ஞெரி இதழ்ஞ்ஞெரி நுனி மூரி எனவும், பூஞெரி பூஞ்ஞெரி நுனி மூரி எனவும், காய்ஞெரி காய்ஞ்ஞெரி நுனி மூரி எனவும் உறழ்ந்தன உம்மையான் இயல்பாதலே வலியுடைத்தென்க. நன்மதிகாட்டத்தென்றதனுன் இவ்வுறழ்ச்சிமுடிபு பெரும்பான்மையுக் தொடர்மொழிக்கேயெனவும் ஏனையிருமொழிக்குஞ் சிறுபான்மை வருமெனவும் ணகாரனகாரங்களின்முன் வந்த யாவும் ஞாவும் முதலாகிய வினைச்சொற்கள் ஒரு வினை வந்த தன்மையை ஒக்குமெனவுங் கொள்க. அவற்றுள் "மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்—சொல்லிய தொடர்மொழி யீறுதி யான" எனவும், "ணனவென் புள்ளிமுன் யாவு ஞாவும்—வினையோ ரனைய வென்மனுர் புலவர்" எனவும் கூறுபவாகலின் "மண் யாத்த

கோட்ட மழகளிறுதோன்றுமே'' ''மண்ஞாத்த கோட்ட மழக ளிறுதோன்றுமே'' எனவும், பொன்யாத்ததார்ப்புரவிபரிக்குமே'' ''பொன்ஞாத்ததார்ப்புரவிபரிக்குமே'' எனவும் வரும். இன்னும் இவ்விலேசானே மண்ஞான்றதென ஞாச்சென்றவழி யாச்செல் லாமையும் யாச் சென்றவழி ஞாச்சேறலுங்கொள்க. இதுவும் புண ரியலொழிபாய்க் கருவிப்பாற்படும். (கஎ)

எ0 ணைளமுன் டணவும் லனமுன் றனவு
மாகுந் தநக்க ளாயுங் காலே.

இது வருமொழித்திரிபு கூறுகின்றது.

இ - ள். ணகரளகரங்களின்முன்னர்த் தகரநகரங்கள் வரின் டகரணகரங்களாயும் லகரனகரங்களின்முன்னர் அவை வரின் றகரனகரங்களாயுந் திரிந்து முடியும் ஆராயுங்காலத்து. எ - று.

ஆயுங்காலேயென்றதனால் புணர்வுழி நிரனிறைகொள்ளாது நிலைமொழியொன்றுடனே வருமொழியிரண்டும் புணருமெனவுந் திரிவுழி நிரனிறைவகையானே தகரம் டகரறகரங்களும் நகரம ணகரனகரங்களுமாய்த் திரியுமெனவுங் கொள்க.

வரலாறு;—மண்டீது மண்ணன்று மூண்டீது முண்ணன்று; கண்றீது கன்னன்று பொன்றீது பொன்னன்று என வரும்.

நிலைமொழியீற்று லகரளகரங்கள் திரியினுங் ''திரிந்ததன்றி ரிபது'' என்னும் நயததால் வருமொழித் தகர நகரந் திரியுமென்க. ணளலனவழிநத் திரியுமென நகரம் அதிகாரப்பட்டமையின் ஒப் புமைபற்றித் தகரத்திரிபும் உடன்கூறினார். (கஅ)

எக. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெ
வலிவரி னியல்பா மவற்றீற் றுயிர்முன் [ய
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

இஃது ஒற்றீற்று விரவுப்பெயரும் உயர்திணைப்பெயரும் வன் கணத்தோடு புணருமாறும் வன்கணம் உயிரீற்று அவ்விருபெய ரோடும் புணருமாறுங் கூறுகின்றது.

இ - ள். பொதுப்பெயரீற்றின்கண்ணும் உயர்திணைப்பெயரீற் றின்கண்ணும் நின்ற ஒற்றுக்கள் வல்லீனமுதன்மொழி வரின் இயல்பாய்முடியும்; அவ்விருபெயரீற்றின்கண்ணும் நின்ற உயிர்

மூன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாது இயல்பாயும் முடியும்; அவ்வாறன்றி உயர்திணைப்பெயருட் சிலபெயர் விகாரமாகியும் முடியும். எ - று.

இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தாற் தொக்கது. வரைந்துகூறுமையின் இருவழியுங் கொள்க. ஈற்றுமெய்யென்றும் முன்னென்றும் பருத்தோதியது யாண்டும் நிலைமொழி வருமொழிச் செய்கைகள் தெரிந்தறிந்துகோடற்கெனக் கொள்க.

சாத்தன் கொற்றன் எனவும், சாத்தி கொற்றி எனவும் நிறுத்திக், குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், குறிது சிறிது தீது பெரிது எனவும், கை செவி தலை புறம் எனவும் ஏற்பன வருவித்து, இருவழியும் விரவப் பெயரீற்றுமெய் வன்மை வர இயல்பாயவாறும் அவ்வுயிரீற்றுப் பெயர்முன் வருமொழிவல்லெழுத்து மிகாதவாறுங் காண்க. அவன் நமன் ஆய் அவர் அவள் எனவும், நம்பி விடலை தோழி நங்கை எனவும் நிறுத்திக், குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், கை செவி தலை புறம் எனவும் ஏற்பன வருவித்து, இருவழியும் உயர்திணைப்பெயரீற்றுமெய் வன்மை வர இயல்பாயவாறும் அவ்வுயிரீற்றுப்பெயர்முன் வருமொழிவல்லெழுத்து மிகாதவாறுங் காண்க. பிறவும் அன்ன. பார்ப்பனக்கன்னி குமரிபிள்ளை சேரி தோட்டம் என ஈற்றயல் குறுகி அகரச்சாரியையைபெற்று வருமொழிவல்லெழுத்து மிக்குங்; கபிலபரணர் என ஈறுகெட்டு வருமொழி வல்லெழுத்து இயல்பாயும்; பல்சங்கத்தார் பல்சான்றோர் என ரகரவீறும் அதன் அயல் நின்ற அகரமுங் கெட்டு ஈற்றுமெய் இயல்பாயும்; ஆசீவகப்பள்ளி நிக்கந்தக்கோட்டம் ஈழவக்கத்தி வாணிகத்தெரு அரசக்கன்னி வேட்டுவக்குமரி கோலிகக்கருவி வண்ணப்பண்டி என ஈறுகெட்டு வருமொழிவல்லெழுத்து மிக்குங்; சூரகோட்டம் சூரக்கோட்டம் பிரமகோட்டம் பிரமக்கோட்ட வாசுதேவகோட்டம் வாசுதேவக்கோட்டம் என ஈறுகெட்டு வருமொழிவல்லெழுத்து உறழ்ந்தும்; ஆதேஉக்குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், மகரஉக்குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், வேற்றுமைக்கண் ஆதேஉக்கை மகரஉக்கை செவி தலை புறம் எனவும், எட்டிப்பூ காவிதிப்பூ நம்பிப்பூ நம்பிப்பேறு எனவும், நம்பிக்கொல்லன் நம்பிச்சான்றோன் நம்பித்துணை நம்பிப்பிள்ளை செட்டிக்கூத்தன் சாத்தன் தேவன் பூதன் எனவும், நங்கைப்பெண் நங்கைச்சாணி எனவும், உயர்திணைப்பெயருட் சில விகாரமேற்றவாறு

காண்க. பீறவும் அன்ன. எட்டி காலிதி என்பன தேயவழக்காகிய இறப்புப்பெயர், எட்டிமரம் அன்று; அஃது "எட்டிக்குமரனிருந் தோன்றன்னே" என்பதனுல் உணர்க. இவை எட்டியதிபூ எட்டிக்குப்பூ காலிதியதிபூ காலிதிக்குப்பூ என விரியும். ஈற்றுமெய் இயல்பாமெனவே, வருமொழிவல்லெழுத்துச் சாத்தன் குறியன் குறிது தாய்குறியள் குறிது நீர்குறியீர் எனவும், அவன்குறியன் அவள்குறியள் அவர்குறியர் எனவும் இயல்பாயும; மகன்முய்க்க லாம் செரு திறத்தல் பகைத்தல் என நிலைமொழிகசு அடையாய் முன்வந்த மகனது பகைவினையைப் பின்னுக ஒருவன் கூறுமிடத்து மிக்குந் தமக்கேற்ற பெற்றி முடியுமெனக கொள்க. மகன்முய்க்கலாமென்பது மகன் தாயொகெலாய்த்த கலாமென விரியும். ஏனையவற்றிற்கும் ஏறபன உருபு விரிக்க. தோன்றறீயன் அவன்றீயன் ஆண்டீயன் பெண்டீயள் வேடீயன் அவடீயள் தீமை எனவரு மொழித்தகரந் திரிந்தன மேலைச்சூத்திரத்தான் முடிந்தன.

பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களென்ற முறையலகூற்றுனே உயர்திணைவினைச்சொல்லும் இவ்வாறே இயல்பாய் முடியுமெனக் கொள்க.

வரலாறு;—உண்டான் உறங்கினன் எனவும், உண்டாள் உறங்கினள் எனவும், உண்டார் உறங்கினர் எனவும், உண்ப ஓதுப எனவும் கிறுததிக், கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும், கொற்றி சாத்தி தெரிவை பெதும்பை எனவும், கற்றூர் சான்றூர் தக்கார் பார்ப்பார் எனவும், ஏற்பன வருவித்துக் காண்க. பிறவும் அன்ன.

இன்னும் இம்முறையலகூற்றுனே விரவுப்பெயர் உயர்திணைப்பெயர் உயர்திணைவினை என்னும் இவற்றின் முடிபுவேறுபாடெல்லாம் மேல்முடித்தும். அஃது ஆங்காங்கு உணர்க. (கசு)

எஉ. விளிகிலேக கிளவியு மவற்றே ரன்ன.

இது விளிப்பெயர் வன்கணத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். விளியாய்நிற்றலையுடைய உயிரீறும் ஒற்றீறுமாகிய உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் உயிரும்புள்ளியும் இறுதியாகியு உயர்திணையியற்பெயரும் விரவுத்திணையியற்பெயரும்போல உயிரீற்றுமுன் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து இயல்பா

யும் ஒற்றீறு வல்லெழுத்து வந்தழி இயல்பாயும் அங்ஙனம் இயல்பா தலேயன்றிச் சில விகாரமாகியும் முடியும். எ - று.

நிலேயென்ற மிகையானே இவ்விருவீற்று அஃறிணேவினேப் பெயரும் அவைபோல இயல்பாகியுஞ் சிறுபான்மை விகாரமாகியும் முடியுமெனக்கொள்க. 5

வரலாறு;—ஊர ஊரா நம்பி நம்பீ வேந்து வேந்தே நங்கை எனவும், நம்பன் நங்காய் கடவுள் ஏந்தல மாந்தர் எனவும் நிறுதிக், கூறுய் சொல்லாய் தாராய் போதாய் எனவும், கூறீர் சொல்லீர தாரீர் போதீர் எனவும் ஏற்பன வருவித்து, உயர்திணேவினேப்பெயர் இயல்பாயவாறுஞ்; சாத்த சாத்தா சாத்தி சாத்தீ பூண்டி பூண்டே 10 தந்தை எனவும், ஆண் பெண் சாத்தன் தூங்கல் தாய் மகள் எனவும் நிறுத்திக், கூறுய் சொல்லாய் தாராய் போதாய் என வருவித்து, விரவுத்திணேவினேப்பெயர் இயல்பாயவாறுங், தும்பி தும்பீ வண்டி வண்டே வாடை எனவும, கண் அலவன் பேய் சூர் வேல் யாழ் வாள் எனவும் நிறுதிக், கொடியை சிறியை தீயை பெரியை என 15 வருவித்து, அஃறிணேவினேப்பெயர் இயல்பாயவாறும்; ஆடுகூறுய் மகடேக்கூறுய் எனவும், ஏந்தறியை கடவுளேயை எனவும், பிணேக்கூறுய் அழிதுக்கூறுய் எனவும், தூங்கறியை மகளேயை எனவும், விளக் கொடியை புறுக்கொடியை முசுக்கொடியை எனவும், கற்றீயை முட்டேயை கடறீயை நெஞ்சுடேயை மனங்கொடியை எனவும், மூவ 20 கைவினிப்பெயரும் விகாரம் ஏற்றவாறுங் காண்க. பிறவும் அன்ன. திரிந்துங் கெட்டுந் தோன்றியும் இயல்பாயும் அயல் திரிந்தும் வினி யேற்று நிற்பதொன்றுதலின் இயற்பெயர் மாததிரையாய் நிற்பன வற்றுள் அடங்காமையின் இவற்றை வினிநிலேக்கிளவியுமவற்றே ரன்ன என அவற்றோடு மாட்டெறிந்தாரெனக்கொள்க. (20) 25

எஉ. உயிருரும் புள்ளியு மிறுதி யாகிய
மூன்னிலே வினேயே யேவ லெனறிவை
யியல்பா குவவு முறழா குவவுமென்
றுயி ரியல வல்லெழுத்து வரினே.

இது மூன்னின்றன் தொழில் உணர்த்துவனவும் அவனேத் 30 தொழிற்படுத்துவனவுமாகிய மூன்னிலேவினேச்சொற்கள் வன் கணத்தோடு முடியும் முடிபுகூறுகின்றது.

இ - ள். உயிரும் ஒற்றும் ஈறுக வந்த மூன்னிலேவினேயும் ஏவல் வினேயுமென்ற இம்மொழிகள் இயல்பாய்முடிவனவும் உறழ்ந்து

முடிவனவுமென இவ்விரண்டியல்பினையுடைய வல்லெழுத்துமுத லாகிய மொழிவரின். எ - று.

வரலாறு;—உண்டி தின்றி உண்டனே தின்றனே உண்டாய் தின்றாய் கொற்ற சாத்தா தேவா பூதா எனவும், உண்டனிர் தின்ற னிர் கொற்றரே சாத்தரே தேவரே பூதரே எனவும், இவை முன் னிலைவினை இயல்பாயின. உறழ்ச்சி வந்துழிக்காண்க. கொணு எறி லிடு உண் தின் கொற்ற சாத்தா தேவா பூதா எனவும், உண்மின் தின்மின் கொற்றரே சாத்தரே தேவரே பூதரே எனவும, ஏவல் வினை இயல்பாயின. நடகொற்ற நடக்கொற்ற ஈர்கொற்ற ஈர்க் கொற்ற சாத்தா தேவா பூதா என ஏவலவினை உறழ்ந்தன. பிற வும் வந்துழிக்காண்க. நிலகொற்ற நிற்கொற்ற எனத் திரிந்துந் திரியாதும் உறழ்ந்தனவும் உறழாகுவமென்னும் பொதுவகை யான் முடிக்க. (உக)

எசு. ஔவென வருஉ முயிரிறு சொல்லு
ஞமவ வென்னும புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு மூளப்பட
முற்றத் தோன்ற முன்னிய முடிபே
யுகரம பெறாஉ மாவயி னான.

இஃது ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்கி எய்தாதது எய்துவிக்கின்றது.

இ - ள். ஔ என வருகின்ற உயிரீற்றுச்சொல்லும் ஞ ந ம வ என்ற சொல்லப்படும் புள்ளியீற்றுச்சொல்லுங் குற்றியலுகரத்தை இறுதியிலேயுடைய சொல்லுங் கூட முன்னர்க்கூறிய இயல்பும் உறழ்ச்சியுமாகிய முடிபு முற்றத்தோன்ற முடியா நிலைமொழியி உகரம்பெற்று உறழ்ந்து முடியும். எ - று.

ஏற்புழிக்கோடலாற் சொல்லென்றது ஈண்டு ஏவல்வி மேற்றாயிற்று.

உ-ம் கௌவுகொற்ற கௌவுக்கொற்ற வௌவுகொ வௌவுக்கொற்ற உரிஞுகொற்ற உரிஞுக்கொற்ற பொரு கொற்ற பொருநுக்கொற்ற திருமுகொற்ற திருமுக்கொற்ற தெ வுகொற்ற தெவ்வுக்கொற்ற கூட்டுகொற்ற கூட்டுக்கொ சாத்தா தேவா பூதா என வரும். ஒன்றெனமுடித்தலான் து கொற்ற நொக்கொற்ற கைதுக்கொற்ற சாத்தா தேவா பூதா என இவ்வியீற்று ஏவல்வினைச்சொற்கள் மிக்கேமுடிதலும் மண்ணு

கொற்ரு மண்ணுக்கொற்ரு பன்னுகொற்ரு பன்னுக்கொற்ரு உள்ளுகொற்ரு உள்ளுக்கொற்ரு கொல்லுகொற்ரு கொல்லுக் கொற்ரு சாத்தா தேவா பூதா என இப்புள்ளியீற்றேவல்வினைச் சொற்கள் உகரம்பெற்று உறழ்ந்துமுடிதலுங் கொள்க. (உஉ)

எடு. மெல்லெழுத்துமிகுவழிவலிப்பொடுதோன்றலு
வல்லெழுத்துமிகுவழிமெலிப்பொடுதோன்றலு [ம்
மியற்கை மருங்கின் மிகற்கை தோன்றலு
முயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ் 10
சாரியை யியற்கை யுறழத் தோன்றலு
முயர்திணை மருங்கி னெழுவாது வருதலு
மஃறிணை விரவுப்பெயர்க் கவ்வைய னிலையலு
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலு
மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின் 15
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இது மேல் உயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக் கட் கூறும் முடிவு பெறுதுநிற்கும் இரண்டாம் வேற்றுமைமுடிபு வேறுபாடு தொகுத்து உணர்த்துகின்றது. ஐ

இ - ள். விளங்குறைத்தான் என மெல்லெழுத்து மிகுமிடத்து விளக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுதலும் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங்குறைத்தான் என மெல்லெழுத்து மிகுதலும் தாய்கொலை என இயல்பாய் வருமிடத்துத் தாய்க் கொலை என மிகுதலும் பலாஅக்குறைத்தான் தழூஉக்கொணர்ந்தான் ஏஎக்கட்டிஞன் என உயிர்மிக வருமிடத்துப் பலாக்குறைத்தான் தழூக்கொணர்ந்தான் ஏக்கட்டிஞன் என உயிர்கெடவருதலும் வண்டின்கொணர்ந்தான் எனச் சாரியைப் பேறுள்ளவிடத்து வண்டு கொணர்ந்தான் எனச் சாரியைகெட்டு நிற்றலும் வண்டின்கொணர்ந்தான் எனச் சாரியைப்பேறுள்ளவிடத்து வண்டினைக்கொணர்ந்தா னெனச் சாரியையோடு தன்னுருபுநிற்றலுஞ் சாரியைபெறுவன பெறுது இயல்பாகின்றவிடத்துப்புளிகுறைத்தான் புளிக்குறைத்தான் பனைதடிந்தான் பனைத்தடிந்தான் பூல்குறைத்தான் பூற்குறைத்தான்

எண மிக்குந் திரிந்தும் உறழ்ச்சியாகத் தோன்றுதலும் உயர்திணைக் கண் நம்பியைக்கொணர்ந்தான் நங்கையைக்கொணர்ந்தான் எனத் தொகாதேதிற்றலும் ஒழியாதுவருதலுமென்றதனுன் ஆடூஉவறி சொல் மகடூஉவறிசொல் ஒன்னுர்த்தெறலும் என ஒழிந்தும வருத லும் உயர்திணையோடு அஃறிணை விரவும விரவுப்பெயர் கொற்ற னைக்கொணர்ந்தான் என உருபு தொகாதேதிற்றலும் அவ்வியனிலை யலுமென்றதனுன் மகற்பெற்றேன் என விரவுப்பெயர்கண்ணுக் தொகுதலும் பொறகொணர்ந்தான் மட்கொணர்ந்தான் என மெய பிறிதாகுமிடத்து அங்ஙனமாகாது பொன்கொணர்ந்தான் மணிகொ ணர்ந்தான் என இயற்கையாய்வருதலும் அவைபோல்வனபிறவுந் தன்னேநோக்கித் திரிபுடக்குமிடத்துப் பொருள்பெற எடுத்தது ஓதப்பட்டு ஏனைவேறுமைப்பொருட்புணர்ச்சியது மூடிபினைத் தான் நீக்கி வேறுமுடிபிற்றுய்ந்து ஒலிக்கும் இரண்டாம்வேற் றுமையது வேறுபட்ட புணர்சியென்ற கூறுவர் ஆசிரியர். எ - று.

அவைபோல்வன பிற ஆவன, 'எகக்கண்டுபேருங்காலையாழ் நின் கறகொழுசிறகுடி" "சப்புணாவில்லா கயனிலோர்நட்பு" என தெடுமுதல குறுகும் விரவுப்பெயர்கள் மெல்லெழுத்துப்பெறு தற்கு உரியன வலலெழுதுப்பெறுதலுங் கழிகுறைத்தான் றினைபி ளத்தான் மயிர்குறைத்தான் தறகொண்டான் செறுதத்தான் புகழ்ந் தான் எனலியல்பாதலுந் திரிதலும முதலியவெனக் கொள்க.'மெய பெற என்றதனுனே சாரியை உள்வழித் தன்னுருபு கிலையாது செய்யுட்கண் "மறங்கடிந்தவருங்கற்பின்" "செல்சொல்லிற்பல்கூ தல்" என வருவனவும் பிறவற்றின்கண் மைகொணர்ந்தான் மைக் கொணர்ந்தான் வில்கோள் விற்கோள் என உறழ்துமுடிவனவுங் கொள்க. இனி இவ்வாறு திரியாது கடுக்குறைத்தான் செப்புக் கொணர்ந்தான் என்றுற்போலப் பொதுமுடிபே தனக்கும் மூடி பாக முடிவனவுங் கொள்க. "தமமிஞ்சியதொழின்மொழிவரினே" என்பதனைச் சாரவைத்தமையான் வினைவந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவதெனக்கொள்க. இனித் தன்னினமுடித்த லென்பதனுன் வரைபாய்வருடை என்றுற்போல ஏழாவதற்கும் வினையோடு முடிபுழித திரிதல்கொள்க. (உக)

எசு. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
நம்மி ஞகிய தொழின்மொழி வரினே
வல்லினமி கற்பழு மியல்புமா வனவுள.

இது மேல் உயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக் கட் கூறும் முடிபு பெரும்பான்மைக்கும் மூன்றும்வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள். ஒற்றாகியும் உயிராகியும் ஈறுபயின்ற நிலைமொழி மூன்னர் அந்நிலைமொழிப்பொருளான மூன்றாவதன் பொருளாகிய வினைமுதற்பொருள்கள் தம்மான் உளவாகிய தொழிற்சொல் வரு மாயின் புணர்ச்சிக்கண் மேல் வேற்றுமைப்புணர்ச்சியிடத்து மிகு மெனக் கூறும் வல்லெழுத்து மிகாது உறழ்ந்து முடிவனவும் இயல் பாய்முடிவனவும் உள. எ - று.

சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் வளிகோட்பட் டான் வளிக்கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என இவையுறழ்ந்தன. காய்கோட்பட்டான் புலி கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என இவை இயல்பாயின. பிறவும் அன்ன.

புள்ளியும் உயிருமென்ற முறையலகூற்றானே பேஎய்கோட் பட்டான் பேஎய்க்கோட்பட்டான் என்னுமுறழ்ச்சியுள் எகரப்பே றும் பாம்புகோட்பட்டான் பாப்புகோட்பட்டான் பாம்புக்கோட் பட்டான் பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொ ழியொற்றுத் திரிதலுந் திரியாமையுங்கொள்க. இவ்வீறுதிகள் நாய்க் கால் தேர்க்கால் கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெ ழுத்து மிகுமாறு காண்க. (உசு)

எஎ. வேற்றுமை யல்வழி இஐ யென்னு
மீற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
வவைதா, மிபல்பா குநவும் வலெழுத்து மிகுநவு
முறழா குநவு மென்மனார் புலவர். ஷ!

இஃது இகரவீற்றுப்பெயர்க்கும் ஐகாரவீற்றுப்பெயர்க்கும் அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள். வேற்றுமையல்லாதவிடத்து இ ஐ என்னும் ஈற்றையு டைய பெயர்ச்சொற்கள் மூவகையாகிய முடிபுநிலைமையுடைய. அம்முடிபையுடைய சொற்கடாம் இயல்பாய் முடிவனவும் வல்லெ ழுத்து மிக்கு முடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவுமென்று கூறு வர் புலவர். எ - று.

உ-ம். பருத்திகுறிது காரைகுறிது சிறிது தீது பெரிது என இவை இயல்பாய்முடிந்தன. மாசித்திங்கள் அலிக்கொற்றன் காவிக்கண் சித்திரைத்திங்கள் புலிக்கொற்றன் குவளைக்கண் என இவை மிக்குமுடிந்தன. இளிகுறிது கிளிக்குறிது தினைகுறிது தினைக்குறிது என இவை உறழ்ந்துமுடிந்தன. பிறவும் அன்ன.

பெயர்க்கிளவியெனவே பெயரல்லாத இவ்விரண்டீற்றுவினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மேல் முடிப்பாம்.

நிலையென்ற மிகையானே இயல்பானும் விதியானும் நின்ற ஐகாரவீற்று லகரமெய்யென்னும் வினைக்குறிப்புமுற்றுச்சொற்கு உறழ்ச் சிமுடிபு கொள்க. (உரு)

எஅ. உயிரும் புள்ளியு மிறுதி யாகி
யளவு நிறையு மெண்ணுஞ் சுட்டி
யுளவெனப் பட்ட வெல்லாச் சொல்லுந்
தததங் கிளவி தமமகப் பட்ட
முத்தை வளஉங் காலந் தோன்றி
னெத்த தென்ப ஏயென் சாரியை.

இஃது அளவும் நிறையும் எண்ணுமாகிய பெயர்கள் அல்வழிக்கட் தம்மிற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். உயிரும் புள்ளியுந் தமக்கேற்ற அளவையும் நிறையையும் எண்ணையுங் கருதி வருவன உளவென்று ஆசிரியர் கூறப்பட்ட எல்லாச்சொற்களுந் தத்தமக்கு இனமாகிய சொற்களாய்த் தம்மிற் குறைந்தசொறகள தம்முன்னே வருங்காலந் தோன்றுமாயிற் பொருந்திற்றென்பார் ஆசிரியர்தாம் ஏயென்சாரியையெற்று முடிதலே. எ - று.

முந்தை முத்தையென விகாரமாயிற்று.

வரலாறு;—நாழியேயாழாக்கு உழக்கேயாழாக்கு கலனே பதக்கு எனவும், தொடியேகஃசு கழஞ்சேகுன்றி கொள்ளேயையவி எனவும், ஒன்றேகால் காலேகாணி காணியேமுக்கிரிகை எனவும் முறையே அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயருந் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்துழி ஏகாரம்பெற்ற வாறு காண்க.

இனி உயிரீறு புள்ளியீறென்ற மிகையானே குறுணிகாஞ்சி ஐகாழியுழக்கு என ஏயென்சாரியையபெறுது வருவனவுங் கொள்க. இன்னும் அதனானே உழக்கரை செவிட்டரை மூவுழக்கரை கல வரை எனவும், கஃசரை கழஞ்சரை தொடியரை கொள்ளரை என வும், ஒன்றரை பத்தரை எனவும், ஏயென்சாரியை பெறுதனவும்; உரிக்குறை கலக்குறை எனவும், தொடிக்குறை கொட்குறை என வும், காணிக்குறை காற்குறை எனவும் ஏயென்சாரியை பெறுது வேற்றுமைமுடிபெய்துவனவும்; உழக்கின்குறை ஆழாக்கின்குறை எனவும், கழஞ்சின்குறை கஃசின்குறை எனவும், ஒன்றின்குறை பத்தின்குறை எனவும் வேற்றுமைமுடிபு எய்தாது இன்பெறுவன வுங்; கலத்துக்குறை என அத்துப்பெற்று முடிவதூஉம்; பனையின் குறை காவின்குறை என இன்பெறுவனவும்; பனைக்குறை காக் குறை எனச்சிறுபான்மை இன்பெறுது வேற்றுமைமுடிபு எய்து வனவுங்; தூணிப்பதக்கு எனவும், இருதூணிப்பதக்கு மூச்தூணிப் பதக்கு எனவும் ஏயென்சாரியை பெறுது வேற்றுமைமுடிபு எய் துவனவுங்; தூணித்தூணி தொடித்தொடி காணிக்காணி எனத் தம் மூன்னர்த் தாம் வந்து வல்லெழுத்துப் பெறுவனவுங்; தூணிக்குத் தூணி இருதூணிக்கிருதூணி எனக் குச்சாரியை பெறுவனவுங் கொள்க. உரிக்கூறு தொடிக்கூறு காணிக்கூறு தூணிக்கொள் கலக்கொள் சாமை தோரை பயறு எனப் பொருட்பெயரோடு புணர்வழி வேற்றுமைமுடிபெய்தின மேற்கூறும் ஈற்றுப் பொது விதியானே முடியுமெனக்கொள்க. உழக்கரை உரிக்குறை உழக் கின்குறை கலத்துக்குறை பனையின்குறை காவின்குறை பனைக் குறை காக்குறை தூணிப்பதக்கு என்றற்றொடக்கத்தன உம்மைத் தொகை. உரிக்குறை உரியுங் குறையும் என விரிந்துழி உரியும் உழக்குமெனப் பொருடரும். எனையவற்றிற்கும் ஏற்குமாறு பொரு ளுரைத்துக்கொள்க.

தூணிக்கொள் என்றற்போல்வன பண்புத்தொகை. உழக் கின்குறை என்றற்றொடக்கத்தன வேற்றுமைக்கண்ணுயின் உழக் கிற்குறை என கிற்கும். கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், கழஞ்சு சீரகம் தொடி பலம் நிறை மா அரை அந்தை எனவும், அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க் கும் முதலாவன இவ்வொன்பதெழுத்தென உணர்க. உகரமுதனி றைப்பெயர் வந்துழிக் காண்க. "அளவிற்கு நிறையிற்கு மொழி மூ தலாகி—யுளவெனப் பட்ட வொன்பதிற் றெழுத்தே—யவைதாங், கசதப வென்ரு நமவ வென்ரு—அகர வுகரமோ டவையெனமொ

ழிப' என்பவாகலின. இறுபான்மை இம்மி இடர என்றாற்போல் வனவுங் கொள்க. எண்ணுப்பெயர்க்கு வஞையறையின்று. (உசு)

எக. உரிவரி ஞழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும டகர மூரியின் வழியே
யகர வுயிரமெய்யா மேற்பன வரினே.

இது நாழியென்னும் அளவுப்பெயர்க்கு வருமொழி ஒன்ற ஞெடு எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் உரியென்னும் அளவுப் பெயர்க்கு எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். உரியென்னும் அளவுப்பெயர் வருமொழியாய் வருங் காலத்து நாழியென்னும் நிலைமொழியளவுப்பெயரின் இறுதியில் நின்ற ஈற்றுயிர்மெய் கெட அங்ஙனங் கெட்டுழி டகரவொற்றுத் தோன்றும்; உரியென்னும் அளவுப்பெயர்முன் ஏற்றமொழி வரின் யகரவுயிர்மெய் வரும் எ - று

வரலாறு;—நாடுரி எனவும், உரியகொள சாமை தோரை பயறு மிளகு வரகு உப்பு எனவும், வரும் ஏற்பன என்றதனுன் உரியரிசி உரியெண்ணெய் முதலாயின மிகாதெனக கொள்க. வரு மொழி முற்கூறிய அதனுன் டகாரம் மிகாது நாவரியென்னும் மூடி புங கொள்க. (உஎ)

அ0. எகர வினுமுச சுட்டின முனை
ருயிருமு யகரமு மெயதின் வவ்வும
பிறவரி னவையுங துகரிற சுட்டு
நீடலும யகார நிலவலு நெறியே.

இது வினவுஞ் சுட்டுமாகிய உயிரீற்றிடைசசொற்கள் நாற்க ணத்தோடும் புணருமாறு தொகுத்து உணர்த்துகின்றது

இ - ள். எகரவினு முன்னும் அகரமுதலிய மூவகைச்சுட்டுக் கள் முன்னும் உயிர்முதன்மொழியும் யகரமுதன்மொழியும் வந் தால் வகரமும் ஏனைய வந்தழி வந்தவையுஞ் செயயுட்கட் சுட்டு நீண்டிசைத்தலும் அங்ஙனம் நீண்டிசைததவழி யகரம் மிகுதலும் முறைமை. எ - று

உ-ம். எவ்வடை அவ்வடை இவ்வடை உவ்வடை ஆடை இலை சயம் உரல் ஊர்தி எழு ஞாயம் ஒழுகக ஓடை ஒளவி யம் எனவும், எவ்யாழ் அவ்யாழ் இவ்யாழ் உவ்யாழ் எனவும், எக்

கொற்றன் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் ஞாண் நூல் மணி வலை எனவும், ஆவயினை ஈவயினை ஊவயினை எனவும், ''ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே'' எனவும் வரும். வருமொழி வரையாது கூறினமையின் இம்முடிபு நாற்கணத்தோடுஞ் சென்றதேனும் நெறியென்றதனான் வன் கணம் வந்துழி நீடாதெனவும் நீடல் ஒருதலையன்றெனவும் உயிர்க் கணம் வந்துழியே யகரந் தோன்றுமெனவுங் கொள்க. இன்னும் அதனானே ''கள்வனேவல்லன்கணவனென்கற்சிலம்பு—கொள்ளும்வினைப்பொருட்டாற்கொன்றுரையீதொன்று'' என இது என்னுஞ் சுட்டுமுதல் உகரவீற்றுப்பெயரின் இகரம் நீடலுங்கொள்க. இந்நீட்சி இருமொழிப்புணர்ச்சிக்கண் வருதலின் நீட்டிம்வழி நீட்டலாகாமை உணர்க. பிறவும் அன்ன. (உஅ)

அக. ஞாணாம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
யவ்வன் மெய்வரி னுவ்வுறு ஈவ்வுக்
கவவு மாகும் வேற்றுமைக் கென்ப
செவ்விதி னவ்விய றெரியுங் காலே.

இ-ஃது. ஒருசார்த்தொழிற்பெயர் வன்கணத்தோடும் மென்கணத்தோடும் இடைக்கணத்து வகரத்தோடும் புணருமாறு தொகுத்துணர்த்துகின்றது.

இ-ள். ஞகரமும் ணகரமும் நகரமும் மகரமும் லகரமும் வகரமும் ளகரமும் னகரமுமாகிய எட்டு ஒற்றுக்களும் ஈறாக வருந் தொழிற்பெயர்கள் யகரம் ஒழிந்த எட்டு ஒற்றுக்களையும் முதலாகவுடைய மொழிகள் வருமொழியாய்வரின் இருவழிக்கண்ணும் உகரம்பெற்று முடியும். அவற்றுள், நகரவீற்றுத்தொழிற்பெயர்க்கு உகரமேயன்றி அகரமுமாம் வேற்றுமைக்கண்ணென்று கூறுவர் ஆசிரியர் செவ்விதாக அவ்விலக்கணத்தை ஆராயுங்காலத்து. எ-று.

உ-ம். உரிஞுக்கடிது மண்ணுக்கடிது பொருதுக்கடிது செம்மூக்கடிது புல்லுக்கடிது தெவ்வுக்கடிது துள்ளுக்கடிது துன்னுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், கடிமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும், பொருநக்கடிமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். இம்முதனிலைத் தொழிற்பெயர்கட்கு உரிஞுதல் மண்ணுதல் பொருதுதல் செம்மூதல் புல்லுதல் தெவ்வுதல் துள்ளுதல் துன்னுதல் எனப் பொருளுரைக்க. பொருதுதல் பொருத்துதல்.

"செவ்விதினவ்வியறெரியுங்காலே" என்றதனுல் மூரணென் னுந்தொழிற்பெயர் உகரம்பெறுது மூரட்கடுமை சேணை தாணை பறை எனவும், ஞெகிட்சி கீட்சி மாட்சி வலிமை எனவும், மூரண் கடிது சிறிது நீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது வலிது எனவும் இருவழியும் உகரம்பெறுது ணகரவீற்றுப் பொது விதியான் முடிதலும், அவ்வீற்றுத்தொழிற்பெயரல்லனவும் வெண் ணுக்கரை எனவும், "கணைகுரல்கடிப்பப்பண் ணுப்பெயர்த்தி" எனவும் உகரம்பெறுதலும், வெரிந் என்னுஞ் சினைப்பெயரும் பொருந் என்னுஞ் சாதிப்பெயரும் வெருநுக்கடிது பொருநுகடிது என அல்வழிக்கண் உகரம்பெறுதலும்,வெரிநுக்கடுமை பொருநுக்கடுமை என வேற்றுமைக்கண் அகரம்பெறுதலும், "உய்வல்யானெவெரிநுச் சென்றனன்" பொருநுக்கடுமை எனச் சிறுபான்மை உகரம்பெறுத லும், வெரிநெனிறுஇ கெடுதலுங், கெட்ட இடத்து வெரிங்குறை வெரிக்குறை செய்கை தலைபுறம் என வருமொழிக்கு இனமான மெல்லெழுத்துப்பெறுதலும் வல்லெழுத்து மிக்குமுடிதலும், உரி ஞின்குறை பொருகின்குறை வெரிகின்குறை எனச் சாரியைபெறுத லுங், கன்னல்கடிது பின்னல்கடிது ஆடல்கடிது பாடல்கடிது நாட்டங்கடிது ஆட்டங்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண் டது மாண்டது வலிது எனவும், கன்னற்கடுமை பின்னற்கடுமை ஆடற்கடுமை பாடற்கடுமை நாட்டக்கடுமை ஆட்டக்கடுமை செய் கை தலை புறம் ஞாநஇ கீட்சி மாட்சி வலிமை எனவும் மூதனிலைத் தொழிற்பெயரல்லாத லகர மகர ஈற்றுத் தொழிறபெயர்கள் உகரம் பெறுது தமக்கு ஏற்ற ஈற்றுப் பொதுவிதியான் முடிதலுங், கொள் கடிது கொட்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், கொள்கடுமை கொட்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி கீட்சி மாட்சி வலிமை எனவும் இருவ ழியும் மூதனிலைத்தொழிற்பெயரலலாத ளகரவீற்றுத்தொழிற்பெ யர் உகரம்பெறுது தமக்கேற்ற செய்கைபெறுதலும், ஒளகார ஈற் றுத் தொழிற்பெயர் கௌவுக்கடிது வௌவுக்கடிது கடுமை என இருவழியும உகரம்பெறுதலுங் கொள்க. "உய்வல்யானெவெரி நுச்சென்றனன்" என்பதனை யானையினது மூதகின்மேற் சென் றனனென விரிக்க. (உசு)

அஉ. இயல்பினும் விதியினு கின்ற வுயிர்முன்
வல்லெழுத கிையயி னவ்வெழுத்து மிகுமே.

இனி உயிரொற்றிறுதிகளைத் தனித்தனி எடுத்து முடிப்பார் விரிவஞ்சி ஒருவாற்றுற் தொகுத்துணர்த்துவனவற்றுள் இஃது

உயிரீற்றுச்சொன்முன் வன்கணம் புணருமாறு தொகுத்துணர்த்துகின்றது.

இ - ள். இயற்கையானுஞ் செயற்கையானும் நிலைபெற்ற உயிரீற்றுச்சொன்முன்னர் வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய் வந்து புணரின் அவ்வருமொழிமுதற்கண் நின்ற வல்லொற்றுக்கள் மிக்குமுடியும் இருவழியும். ஈ - று.

வட்டக்கல் சதுரப்பாறை என்றாற்போல ஒற்றீறெழுதித்து, உயிரீருக்கிக்கொள்வதூஉந், தாழக்கோல் தமிழப்பள்ளி என்றாற் போல இடையே எய்துவித்து உயிரீருக்கிக்கொள்வதூஉம் எனச் செயற்கையீறு இருவகைத்து. அவை அங்ஙனம் ஆகுக்கொள்வழி வல்லெழுத்து மிகுமாறு ஆங்காங்கு உணர்க. சொல்லென்றது ஈண்டு அஃறிணைப்பெயருஞ் சிறுபான்மை அத்திணைவினையும் விரவுவினையும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமெனக் கொள்க. உயிரொருமையாற் குற்றுகரமும் உருபுயிரும் ஈண்டே அடங்கும். அங்ஙனம் அடங்குமென்பது கருத்தாதல் "வன்றொடரல்லனமுன்மி காவல்வழி" என்றற் தொடக்கத்தனவற்றுளும் "மூன்றனுருபினு மாறனுருபினும்" என்பதனுளும் ஈண்டி எய்தியதனை விலக்குதலான் அறிக.

வரலாறு:—விளக்குறிது அதக்குறிது சிறிது தீது பெரிது எனவும், இருவிளக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும், அகரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிக்கன. இருவிளவென்பது ஓரூர், இருவிளவின்கட் கொற்றனென வியையும். உணக்கொண்டான் புலிபோலக்கொண்டான் கண்டெனக்கொண்டான் ஆங்கக் கொண்டான் சாலக்கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என அகரவீற்று வினைச்சொன்முன்னும் இடைச்சொன்முன்னும் உரிச்சொன்முன்னும் முறையே மிக்கன. புலிபோல என்பது ஒன்றனோடு பொருவப்படுதல் நோக்கி இடைச்சொல்லெனப்பட்டதெனும் போலென்னும் இடைச்சொல்லடியாகத் தோன்றிய வினையெச்சக்குறிப்பாதலும் எனவென்பது இருசொல்லையும் இயைவிக்கின்ற நிலைமையான் இடைச்சொல்லெனப்பட்டதெனுஞ் செய்து செய்யு முதலியபோலச் செய்தெனவெனீறென. வினையெச்சமாய் அவற்றோடு உடனெண்ணப்படுதலும் பற்றி வினையெச்சத்துள் அடக்கிமுடித்தாம். இவ்வாங்கவென்னும் உரையசையிடைச்சொல் ஏழனுருபின் பொருள்பட வந்ததல்லாமை "ஆங்க வென்னு முரையசைக் கிளவியும்—ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே"

என்பதனுன் அறிக. தாராக்கடிது மூங்காக்கடிது சிறிது நீது பெரிது எனவும், கால் செவி தலை புறம் எனவும் ஆகாரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிக்கன. உண்ணுக்கொண்டான் சென்ருன் தந்தான் போயினுன் எனவும், உண்ணுக்குதிரை செந்நாய் தகர் பன்றி எனவும், "உயிருறுப் புயிர்மெய் தனிகிலே யெனுஅக்—குறி னெடி லளபெடை மூவின மெனுஅ" எனவும், உசாக்கடிது வயாக்கடிது சிறிது நீது பெரிது எனவும் ஆகாரவீற்று வினைச்சொன்முன்னும் இடைச்சொன்முன்னும் உரிச்சொன்முன்னும் முறையே மிக்கன. உசாக்கடுமை வயாக்கடுமை சிறுமை நீமை பெருமை என இவை பெயர்த்தன்மைப்பட்டுழி வேற்றுமைக்கண் மிகுமாறுங்காண்க. இகரவீற்றுப்பெயர்க்கு அல்வழிமுடிபு முன்னர்க் கூறிப்போந்தமையின் ஈண்டு ஏனையவற்றிறகே இம்முடிபுகோடும். தேடிக்கொண்டான் வந்தவழிக்கொண்டான் எனவும், இனிக்கொண்டான் அணிக்கொண்டான் சென்ருன் தந்தான் போயினுன் எனவும், கடிக்கமலம் சண்பகம் தாமரை பங்கயம் எனவும், இகரவீற்று வினைச்சொல்லும் இப்பொழுதெனவும் அணிய இடத்தெனவும் முறையே காலமும் இடமும் உணர்த்தும் இடைச்சொற்களும் உரிச்சொல்லும் முறையே மிக்கன. கிளிக்கால் சிறகு தலை புறம் என இகரவீற்றுப்பெயர்முன் வேற்றுமைக்கண் மிக்கன. கிளிகுறுமை கிளிக்குறுமை எனக் குணம்பற்றி வந்த உறழ்ச்சிமுடிபும் பனியத்தக்கொண்டான் பனியிற்கொண்டான் எனப் பனியென்னுங் காலப்பெயர் அத்தும் இன்னும் பெறுதலும் புறனடையாற்கொள்க. ஈக்கடிது சிறிது நீது பெரிது எனவும், கால் சிறகு தலை புறம் எனவும், ஈகாரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிக்கன. தழீஇக்கொண்டான் கிழீஇக்கொண்டான் என்றுற்போல்வன இகரவீறென்க. கடிக்குறிது சிறிது நீது பெரிது எனவும், காய் செதின் தோல் பூ எனவும், உகரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிகுகன. கொண்மூக்கடிது சிறிது நீது பெரிது எனவும், குழாம் செலவு தோற்றம் மூறைவு எனவும் ஊகாரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிகுகன. உண்ணூக்கொண்டான் சென்ருன் தருதான் போயினுன் என ஊகாரவீற்று வினைச்சொன்முன் மிக்கன. எக்கடிது சிறிது நீது பெரிது எனவும், எஎக்கடுமை சிறுமை நீமை பெருமை எனவும் ஏகாரவீற்றுப்பெயர்முன் இருவழியும் மிகுகன. வேற்றுமைக்கண் ஏகாரப் பேறு புறனடையாற் கொள்க. ஐகாரவீற்றுப்பெயர்க்கு அல்வழிமுடிபு மேற்கூறிப்போந்தமையின் ஈண்டு ஏனையவற்றிற்கே இம்முடிபு கோடும். ஒல்லைக்கொண்டான் வல்லைக்கொண்டான் வந்தக்கடைக்கொண்டான் கூரைமக்குறித்தான் வந்தபின்னைக்கொண்டான்

வருமுன்னைக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வும், மற்றைத்தெரு எனவும், பிணத்தோள் எனவும் ஐகாரவீற்று வினைச்சொன்முன்னும் இடைச்சொன்முன்னும் உரிச்சொன்முன் னும் முறையே மிக்கன. யானைக்கோடு செவி தலை புறம் என ஐகா ரவீற்றுப்பெயர்முன் வேற்றுமைக்கண் மிக்கன. உழைங்கோடு என மெல்லெழுத்துப்பெறுதலும் கலைங்கோடு கலைக்கோடு என உறழ்தலும் புறனடையாற்கொள்க. ஓக்கடிது கோக்கடிது சோக் கடிது சிறிது நீது பெரிது எனவும், ஓஒக்கடுமை கோஒக்கடுமை சோஒக்கடுமை சிறுமை நீமை பெருமை எனவும் ஓகாரவீற்றுப் பெயர்முன் இருவழியும் மிக்கன. வேற்றுமைக்கண் ஒகரப்போது புறனடையாற்கொள்க. கௌஉக்கடிது சிறிது நீது பெரிது என வும், கடுமை சிறுமை நீமை பெருமை எனவும் ஔகாரவீற்றுப் பெயர்முன் இருவழியும் மிக்கன. உகரப்போது அதிகாரப்புறன டையாற்கொள்க. கொக்குக்கடிது சிறிது நீது பெரிது எனவும், கால் சிறகு தலை புறம் எனவும், குற்றுகரவீற்றுப்பெயர்முன் இருவ ழியும் மிகுன. அடித்துக்கொண்டான் சென்றவிடத்துக்கொண் டான் சென்றான் தந்தான் போயினான் எனக் குற்றுகரவீற்றுவி னைச்சொன்முன் மிக்கன. ''புணர்தருசெல்வந்தருபாக்குச்சென் றான்'' என்பதும் அது. மற்றுக்கொள் செல் தா போ எனவும் அதிர்ப்புக்கடிது சிறிது நீது பெரிது எனவும் குற்றுகரவீற்றிடைச் சொன்முன்னும உரிசசொன்முன்னும் முறையே மிக்கன. அதிர்ப் புக்கடுமை எனப் பெயர்த்தன்மைப்பட்டிழி வேற்றுமைக்கண் மிகு மாறுங் காண்க. யானையைக்கொணர்ந்தான் சேர்த்தான் தடித் தான் பிடித்தான் எனவும், ஊர்க்குக்கொண்டான் சென்றான் தந் தான் போயினான் எனவும் உயிரீற்றுருபின்முன் மிக்கன. ாண் டுக் காட்டாதொழிந்தனவும் வந்தவழிக்கண்டு இதுவே நிலனை முடித்துக்கொள்க. (கூ0)

அஙு. மெல்லெழுத்து மிகுஙவும் வல்லெழுத்து மிகுஙம்மிடை வருஙவு மூறழ்ச்சி யெய்துஙவு [வு
மென்றொருநால் வகைய மரப்பெய ரன்னவை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இ-ள். மரப்பெயர்களுள் ஒருவழி எய்தாதது எய்து வித்தலும் எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் நூதலிற்று.

இ-ள். மெல்லெழுத்து மிகு முடிவனவும்; வல்லெழுத்து மிகு முடிவனவும்; அம்மூச்சாரியை இடையே பெற்று முடிவன

வும்; ஒருகால் மெல்லெழுத்துப் பெற்றும் ஒருகால் வல்லெழுத்துப் பெற்றும், ஒருகால் மெல்லெழுத்துப் பெற்றும் ஒருகால் அம்முச் சாரியை பெற்றும் ஒருகால் அம்முச்சாரியை பெறுது வல்லெழுத்துப் பெற்றும் இவ்வாற்றான் உறழ்ச்சிமுடிபு எய்துவனவுமென ஒரு நால்வகையினை உடையவாம் மரப்பெயர்கள். அவ்வியல்பினை யுடையவற்றை விரிக்குதூல்களில் எடுத்தோததானும் இலேசா னுங் கூறியவாறு நோகுகி வேற்றுமைப்புணர்ச்சிக்கட் பாதுகாத் தறிக. எ - று.

வல்லெழுத்துமிருதியுங் கூறினர் ஐயம் அகற்றுதற்கு. விளங் கோடி அதங்கோடி மாங்கோடி காயாங்கோடி சேங்கோடி விசைங் கோடி ஞெமைங்கோடி நமைங்கோடி அமைங்கோடி உடைங்கோடி செதிள் தோல் பூ என இவை மெல்லெழுத்து மிக்கன. ஏற்புழிக் கோடலான் இனமெல்லெழுத்தே மிகுதல் கொள்க. மேலும் வாளா மெல்லெழுததென்புழியெல்லாம் ஏற்புழிகோடலான் இன மெல்லெழுத்தே கொள்க. பலாஅக்காய் அத்திக்காய் அகத்திக்காய் ஆத்திக்காய் கடிக்காய் இலந்தைக்காய் கொன்றைக்காய் புன்னைக் காய் செதிள் தோல் பூ என இவை வல்லெழுத்துமிக்கன. புளியங் கோடு அரையங்கோடு தேக்கங்கோடு குருந்தங்கோடு புன்கங் கோடு வேப்பங்கோடு கடப்பங்கோடு செதிள் தோல் பூ என இவை அம்முப்பெற்றன. யாஅங்கோடு யாஅக்கோடு பிடாஅங்கோடு பிடாஅக்கோடு தளாஅங்கோடு தளாஅககோடு செதிள் தோல் பூ என இவை மெலலெழுத்துப்பெற்றும் வல்லெழுத்துப்பெற்றும் உறழ்ந்தன. உதிங்கோடு உதியங்கோடு ஒடுங்கோடு ஒடுவங்கோடு செதிள் தோல் பூ என இவை மெல்லெழுத்துப்பெற்றும் அம்முப் பெற்றும் உறழ்ந்தன புன்னையங்கானல் புன்னைக்கானல் முல்லை யந்தொடையல் முல்லைத்தொடையல் மனையங்கோல் மனைக்கோல் என இவை அம்முப்பெற்றும் பெறுது வலலெழுத்துப்பெற்றும் உறழ்ந்தன. பிறவும் அன்ன. உதி இக்காலத்து ஒதியென மருவிற்று.

போற்றல்வேண்டும் என்றதனானே ''புளிங்காய்வேட்கைத் தன்று''எனவும், புளிம்பழம் எனவும் அம்முப்பெறுது நிறுபான்மை மெல்லெழுதுமிகுதலும், கழுகுங்காய் தெங்குகாய் ஈச்சங்காய் பயற்றங்காய் சீகம்புல் என்றாற்போலும் புல்லினையும் மரமென அடக்கி அம்முக்கொடுத்தலும் ''யாணர்க்கோங்கின்குவிமுகை'' எனவும், ''காய்மாண்டதெங்கின்பழம்'' எனவும் இன்பெறுதலும், பிற வாறு வருவன உளவேல் அவையும் ஏற்குமாறு முடித்துக்கொள்க. இவற்றுள் அகரம்பெறுவன புறனடையான் முடிக்க. (நக)

அசை. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரி
னனபோ யம்முங் கிரளவரி னுறழ்வு
மட்டுறி னனகெட் டாவு மாம்பிற.

இஃது ஒன்றற்கு எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். பனையென்னுஞ் சொன்முன்னர்க் கொடியென்னுஞ் சொல்வரிற் பனைக்கொடியென வருமொழிவல்லெழுத்து மிக்குமுடிதலும், ஏனை வல்லெழுத்துமுதன்மொழி வரிற் பனங்காய் செறும்பு தூண் பழம் என ஐகாரங் கெட்டு அம்முப்பெற்றுமுடிதலு நிரள் என்னுஞ் சொலவரின் ஒருகாற் பனந்திரள் என ஐகாரங் கெட்டு அம்முப்பெற்று முடிதலும், பனைத்திரளென ஒருகால் ஐகாரங்கெட்டு அம்முப்பெறுது வல்லெழுத்து மிக்குமுடிதலும், அட்டென்னுஞ் சொல் வருமொழியாய் வந்து ஒன்றுமாயிற் பனையட்டி என ஐகாரங் கெட்டு அவ்விடதது ஓர் ஆகாரந்தோன்றி ஐகாரங் கெடநின்ற னகரவொற்றின்மேல் ஏறிமுடிதலுமாம். எ - று.

பிறவென்றதனானே ஆவிரங்காய் தூதுணங்காய் வழுதுணங்காய் தில்லங்காய் பாவட்டங்காய் நாழங்காய் செதிள் தோல் பூ எனவும், ஓலம்போழ் எனவும் வருவனவும் அவைபோல்வன பிறவும் ஐகாரங் கெட்டு அம்முப்பெற்றுமுடிதல் கொள்க. பனைக்கொடியென்பதற்கு இரண்டாவதும் மூன்றுவதும் பனையட்டி என்பதற்கு மூன்றுவதும் ஆறுவதும் விரியும். (கூஉ)

அநி. சாவ வென்னுஞ் செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே.

இஃது ஓர் அகரவீற்றுவினைச்சொற்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

இ - ள். சாவவென்று சொல்லப்படுஞ் செயவெனெச்சத்திறுதிக்கண் நின்ற அகரமும் அதனும் பற்றப்பட்ட வகரமுங் கெட்டு நிற்றலும் கெடாதுநிற்றலும் உரித்து. எ - று.

உ-ம். "கோட்டிடைச்சாக்குத்திணன்" சாவக்குத்திணன் சீறினன் தகர்த்தான் புடைத்தான் ஞான்றான் வீண்டான் மாண்டான் யாத்தான் வீழ்த்தான் அடைந்தான் எனவரும். நிலைமொழித்தொழிலாதலான் இயல்புகணத்திற்கும் இவ்விதிகொள்க. இங்ஙனகரவாய் மேல்வருவனவற்றிற்கும் ஈது ஒக்கும். (கூக)

அசு. செய்யிய வெனும்வினை யெச்சம் பலவகைப்
பெயரி னெச்சமும் முறனுருபே
யஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

இஃது அகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக் குகின்றது.

இ - ள். செய்யியவென்னும் வாய்பாட்டான்வரும் வினையெச் சமும் வினையுங் குறிப்பும் எதிர்மறையும் பற்றிவரும் பெயரெச்ச மும் அஃறிணைவினைமுற்றும் வினைக்குறிப்புமுற்றும் ஆறனுருபும் அஃறிணைப்பன்மைப்பெயரும் அம்மவென்னும் உரையசையிடைச் சொல்லுமாகிய அகரவீற்று இவ்வாறுவகைச் சொற்கண்முன்னரும் வருமொழிவல்லெழுத்து இயல்பாய்முடியும். எ - று.

இதன் முதலீறுகளில் அகரவீற்றுமொழிகளை வைத்தமை யான் இடைநின்றனவும் அகரவீறேயாமெனவும் அஃறிணைப்பன் மை வேற்றுமைக்கண் அத்துப்பெற்றுமுடிதல் மேல் மாட்டேற்றுற் பெறப்படுதலின் ஈண்டு இயல்பென்றது அல்வழிகண்ணே யென வுங் கொள்க.

உ-ம். உண்ணியகொண்டான் சென்றான் தந்தான் போயி னான் எனவும், உண்டகுதிரை உண்ணுகின்றகுதிரை பொன்னன்ன குதிரை பொன்போன்றகுதிரை பொன்னனையகுதிரை பொன்னி கர்த்தகுதிரை பொன்னெத்தகுதிரை அன்னகுதிரை இன்னகுதிரை என்னகுதிரை பெரியகுதிரை சிறியகுதிரை செய்யகுதிரை இனிய குதிரை தண்ணியகுதிரை நல்லகுதிரை உண்ணுதகுதிரை ஓடாத குதிரை செந்நாய் தகர் பன்றி எனவும், உண்டனகுதிரை கரிய னகுதிரை செந்நாய் தகர் பன்றி எனவும், சாத்தனகுதிரை செந் நாய் தகர் பன்றி எனவும், பலகுதிரை சிலகுதிரை செந்நாய் தகர் பன்றி எனவும், அம்மகொற்ற சாத்தா தேவா பூதா எனவும் முறையே காண்க. எவற்றினுஞ் சிறப்புடைய அஃறிணைப்பன்மை யை முற்கூறுமையான் அம்மாகொற்ற என ஈண்டுழியும் இயல்பா தலும் வடகடல் வடதலை என்றுற்போலும் விதியகரவீற்றுப்பெயர் முன் இயல்பாதலுங் கொள்க. (கூச)

அள. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யேகலு முரித்தஃ தேகினு மியல்பே.

இஃது எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமைக்காத்தலும் நுதலிற்று.

•இ - ள். வாழியவென்னும் வியங்கோண்மூற்றின் ஈற்றுயிர்மெய் கெடுதலும் உரித்து; அது கெட்டு இகரவீறாய் நின்றலும் முற்கூறிய இயல்பேயாம். எ - று. 5

உம்மையாற் கெடாமையே வலியுடைத்து.

வரலாறு;—வாழிகொற்ற வாழியகொற்ற சாத்தா தேவா பூதா மன்னு வளவா யாழா அரசா எனவரும். (கூடு)

அஅ. பலசில வெனுமிவை தம்முன் ரும்வரி
னியல்பு மிகலு மகர மேக 10
லகரம் றகர மாகலும் பிறவரி
னகரம் விகற்ப மாகலு மூளபிற.

இஃது எய்தியது இகந்துபடாமைக்காத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். பலவென்றுஞ் சிலவென்றுஞ் சொல்லப்படும் இவ் 1
விரு சொல்லுந் தம்முன்னர்த் தாம்வந்து புணரின் இயல்பாதலும் மிக்குமுடிதலும் அகரங்கெட லகரம் றகரவொற்றாய்த் திரிதலும் இவற்றின்முன்னர்ப் பிறமொழியினைத்தும் வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம். எ - று.

உ-ம். பலபல சிலசில எனவும், பலப்பல சிலச்சில எனவும், பற்பலகொண்டார் சிற்சிலவித்தி எனவும், பலகலே பல்கலே சிலகலே சில்கலே சேனே தானே படை நாள் மலர் யானே வேள்வி அணி எனவும் முறையே காண்க. பிறவென்ற மிகையானே பல்பல சில்சில என அகரங் கெட லகரம் றகரமாகாமையும் "பலாஅஞ்சிலாமென் மஞ்ஞர்புலவர்" எனச் செய்யுட்கண் ஒரோவழிப் பலவென்பதன் முன்னர்ச் சிலவென்பது வந்துழி இறுதி அகரம் நீண்டு ஓர் அகரமும் மகரவொற்றும் பெற்று முடிதலுங்கொள்க. இதன் சொன்னிலே பலசிலவென்னுஞ் செவ்வெண். (கூசு)

அக. அல்வழி யாமா மியாமூற் றிறுதி
யாவினு விவற்றுமுன் வல்லெழுத் தியல்பே.

இஃது ஆகாரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ - ள். அல்வழிப்புணர்ச்சிக்கண் ஆவும் மாவுமென்னும் இருபெயரும் ஏவல்குறித்த உரையசையாகிய மியாவென்னும் இடைச்சொல்லும் அஃறிணையெதிர்மறைப்பன்மைமூற்றுந் தன்முன் முதலுரைப்பதன் ஈற்றுவினாவும் யாவினாவுமாகிய ஆகார ஈற்று இவ் வறுவகைகள் சென்முன்னரும் வருமொழிவல்லெழுத்து மிகாது இயல்பாய்முடியும். எ - று.

வரலாறு;—ஆகுறிது மாகுறிது சிறிது தீது பெரிது எனவும், கேண்மியாகொற்ற சாத்தா தேவா பூதா எனவும், உண்ணு குநிரை செந்நாய் தகர் பன்றி எனவும், உண்காகொற்ற சாத்தா தேவா பூதா எனவும், யாகுறிய சிறிய தீய பெரிய எனவும் முறையே காண்க. (கஎ)

கூ0. குறியதன் கீழாக் குறுகலு மதனை
நெடில மேற்றலு மியல்புமாக நோக்கின்.

இஃது ஆகார ஈற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். குற்றெழுத்தின்கீழ் நின்ற ஆகாரங் குறுகுகிற்றலும் அங்ஙனங் குறுகலுடனே இறுதிக்கண் உகரம்பெறுதலும் அவ்வி ரண்டுமின்றி இயல்பாதலுமாகிய இம்மூன்றுவிதியும் பொருந்தும் இருவழியுஞ் செய்யுளகத்து. எ - று.

உ-ம். "சுறமறிவன தறையெல்லாம்" "இறவீன்பனவில்லெ லாம்" "நிலவிரிகானல்வாய்நின்று" எனவும், "இரவழங்குசிறு நெறி" எனவும், "முழவுமாதொலைச்சியபசிணப்பிளைவப்—பிணவு காய்முடுக்கியதடியொடிவிரைஇ" எனவும், "இறவுப்புறத்தன்னபி ணர்பிதடவுமதல்" "சுறவுக்கோட்டன்னமுள்ளிலைத்தாழை" "புற வுப்புறத்தன்னபுன்காயுமாய்காய்" எனவும், "நிலாவணங்குவெண்ம ணன்மேனின்று" எனவும், "நிலாச்சுறுவினம்பொன்போன்றன" எனவும், இருவழியும் முறையே காண்க. "நறவங்கண்ணிநற்போர்ச் செம்பியன்" "குரவுதீயகொன்றையங்கானல்" என்பன ஆகாரங் குறுகியவழி அம்முப்பெற்றன. 'சுறவுயர்கொடி' 'அரவணிகொடி' 'முழவுறழ்தோள்' என்றாற்போல்வன ஆகாரங்குறுகியவழி உக ரம்பெறாது உடம்படுமெய் பெற்றன. (கஅ)

கூக. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

இஃது இகரவீற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள். அன்றியெனவும் இன்றியெனவுஞ் சொல்லப்படும் வினையெச்சக்குறிப்புச்சொற்களினது ஈற்றிகரஞ் செய்யுளகத்து உகரமாகி வந்தால் அவ்வழி வருமொழிவல்லெழுத்து இயல்பாய் முடியும். எ - று.

எஞ்சென்பது ஈண்டுமுதனிலைத்தொழிற்பெயர். வரினென வே உகரமாதல் ஒருதலையன்றெனவும் ஆகாதவழி மிகுமென வுங்கொள்க.

உ - ம். "வாளன்றுபிடியாவன்கணுடவர்—நாளன்றுபோகிப் புள்ளிடைதட்பப்—பதனன்றுபுக்குத் திறனன்றுமொழியினு—மிடனன்றுதுறத்தல்வள்ளியோரே" எனவும், "உப்பின்றுபுற்கை யுண்கமாகொற்கையோனே" எனவும், அறிவின்றிக்கொடித்தான் சென்றுன் தந்தான் போயினன் எனவும் முறையேகாண்க. (கூ)

கூஉ. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். மரமன்றிச் சுவைப்புளியை உணர்த்திநின்ற புளி யென்னும் பெயர்முன் வல்லெழுத்துவரின் அவ்வல்லெழுத்தே யன்றி அவற்றிற்கு இனமான மெல்லெழுத்து மிகவும் பெறும். எ-று.

உ-ம். புளிங்கறி புளிக்கறி சோறு தயிர் பாளிதம் எனவரும். பாளிதம் பாற்சோறு. இகரவீற்றுப்பெயர்க்கு அல்வழிமுடிபு மேற் கூறுதலின் இம்முடிபு வேற்றுமைக்கண்ணதெனத் தானேபோதரும். இவற்றிற்கு இரண்டனுருபு விரிக்க. (சஅ)

கூங. பவ்வீ யல்வழி யியல்பு மீமுன்
னியல்பும் வலிமெலி மிகலுமாம் வேற்றுமை.

இஃது ஈகாரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கலும் எய்தியது இகத்துபடாமைக் காத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். பகரத்தோடு கூடிய ஈகாரவீற்று இடக்கர்ப்பெயர் முன் வருமொழிவல்லெழுத்து அல்வழிக்கண் இயல்பாதலும் ஓரிடத்தினே வரைந்துணர்த்தும் மேல் என்பதன் திரிபாகிய மீயென்னும் மரூஉச்சொன்முன் இயல்பாதலும் மிகுதலும் வருமொழிவல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிகுதலும் உளவாம் வேற்றுமைக்கண். எ - று.

வரலாறு;—பீகுறிது சிறிது நீது பெரிது எனவும், மீகண் செவி தலே புறம் எனவும், மீக்கோள் மீப்பா எனவும், மீங்குழி மீத்தோல் எனவும் முறையேகாண்க. மீகண்ணென்பது மேலிடத்துக் கண்ணென விரியும். பிறவும் அன்ன.

நீயென்பது வீரவுப்பெயராதலிற் "பொதுப்பெயருயர்திணைப் பெயர்களிற்றுமெய்" என்பதனுன் முடியும். (சக)

கூச. ஆமுன் பகரவீக் குறுகுமவ் வழியும்
வல்லெழுத் தியற்கை யல்வழியான.

இஃது எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் நுதலிற்று.

இ - ள். ஆவென்பதன்முன்னர் வருமொழியாய்வந்த இடக்கர்ப்பெயரினது பகரத்தோடு கூடிநின்ற ஈகாரம் இகரமாய்க் குறுகும்; அங்ஙனம் குறுகியவழியும் வருமொழிவல்லெழுத்து இயல்பாய் முடியும் அல்வழிக்கண். எ - று.

வரலாறு;—ஆப்பி எனவும், ஆப்பிகுறிது சிறிது நீது பெரிது எனவும் குறுக்கமும இயல்பும முறையேகாண்க.

அல்வழிக்கண் இயல்பாமெனவே வேற்றுமைக்கண் ஆப்பிக் குளிர்ச்சி செறிவு திரட்சி பொலிவு எனப் பொதுவிதியான் மிக்கு முடியுமெனக் கொள்க. அல்வழியென வேண்டாகூறிய அதனுனே குறுக்கம் வேற்றுமைக்கண்ணேயெனக் கொள்க. ஆப்பியரியதென் றூற்போல வருமொழியோடு புணர்வழிக் குறுகுமென்பாரும உளர். "ஆன்முன் வரூஉ மீகார பகரந்—தான்மிகத் தோன்றிக் குறுகலு மூரித்தே" என ஆசிரியர் தொல்காப்பியனுர் இக்குறுக்கம் நீலை மொழிநோக்கி வந்ததாக ஆகாரவீற்றுட் கூறினமையானும் உரையாசிரியரை உள்ளிட்டோரெல்லாம் அதற்கு உதாரணம் ஆப்பியென்றே காட்டினமையானும் அது மரபன்றென மறுக்க. ஆப்பி ஆவினதுபீ ஏனை விரியும். (சஉ)

கூடி. ஏண்ணி னிறுதியுஞ் சுட்டிமுத லிறுதியு
நண்ணிய வுகரமுன் னியல்பா மதுசெலீ
றன்று வருகாலை யாவா குதலு
மைவரு காலை மெயவரைநது கெடுதலுஞ
செயயுண் மருங்கி னுரிதென மொழிப. 5

இஃது உகரஈற்றுட் சுட்டுவற்றிற்கு எய்தியது விலக்கலும் ஒன்றற்கு எயதாதது எயதுவித்தலும் நுதலிற்று.

இ - ள். எண்ணுப்பெயரீற்றினுஞ் சுட்டெழுத்தினை முதலாகவுடைய பெயரீற்றினும் நின்ற உகரததின் முன்னர் வருமொழிவல்லெழுத்துமிகாது இயல்பாய்முடியும்; அதுவென்னுஞ் சொல்லீறாகிய உகரம் அன்றென்னும் வினைக்குறிப்புச்சொல வருமொழியாய் வருங்காலத்து அவ்வுகரம் ஆகாரமாய்த் திரிந்து முடிதலும், ஐயென்னுஞ் சாரியையிடைசசொல் வருங்காலதது அவ்வுகர தான் ஊர்ந்த மெயயையொழிதலுக் கெட்டுமுடிதலுஞ் செய்யுளகத்து உரித்து. எ - று. 10 15

ஒருகாசு நின்னம் துலாம் பலம் எனவும், அது இது உது சுருதி சிறிது நீது பெரிது எனவும், "அதாஅன்றென்பவெண்பாயாப்பே" எனவும், அதைமற்றம்ம எனவும் வரும.

சிறப்புடைய சுட்டுப்பெயரை முற்கூறுத முறையலகூற்றுனே சுட்டீறு இயல்பாதல அலவழிகணணேயெனவும இதாஅன்றம்ம உதாஅன்றம்ம என ஏஜைச்சுட்டுப்பெயரிறுதியுந் திரிதலும் இதைமற்றமம உதைமற்றமம எனஐகாரம் பெறுதலும் அதன்று இதன்று உதன்று என ஏறிமுதலும் உதுக்காண எனவ்வலெழுத்து மிகுதலும் "எழுவுதறாங்கியசதவமலேகதவர்—குழூஉக்களிற்றுக்குறுமபுடைததலின்" எனவும, "பழூஉப்பலலன்னபருவுகிர்ப் பாவடி" எனவும் உகரம் நீண்டு ஓர் உகரம பெறுதலும் பிறவுங் கொள்க. (சுரு) 20 25

கூசு. பூப்பெயர் முன்னினை மெல்லெழுத்து மிகுதலும்
போற்றல் வேணடிம் வேற்றுமைக கணணே.

இஃது ஊகாரஈற்றுள் ஒன்றற்கு எய்தாததி எய்துவித்தலும் எய்தியது இகரதுபடாமைக் காத்தலும் நுதலிறறு. 30

இ - ள். பூவென்னும் ஊகார ஈற்றுப்பெயர்முன்னர் வரும் வல்லெழுத்து மிருதலேயன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்து மிருதலேயும் விரும்பும் ஆசிரியன் வேற்றுமைப்பொருட் புணர்ச்சியிடத்து. எ - று.

வரலாறு;—பூக்கொடி பூங்கொடி சோலை தாமம் பக்தி என வரும். போற்றல்வேண்டும் என்றதனானே மெல்லெழுத்துப்பேறே சிறப்புடைத்தெனகொள்க. (சூ)

கூஎ. தேற்றமுஞ் சிறப்பு மல்வழி யான
வெகர வொகரம பெயர்க்கீ ழுகா
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்.

இஃது எகர ஒகரங்கள் ஈறுமிடம் உணர்த்துகின்றது.

இ - ள். தெளிவுபொருளுஞ் சிறப்புப்பொருளும் அல்லாத வேற்றுமைப்பொருண்மையிடத்து அளபெடுத்துக் கூறுதலின் உளவாகிய எகர ஒகரங்கள் பெயர்க்கீழ்வாரா, வினைக்கு ஈறுவரும். அதுதான் தன்மையினும் படர்க்கையினும் வாரா, முன்னிலைச்சொல்லிடத்தனவாமென்று கூறுவர் புலவர். எ - று.

எனவே தெளிவுபொருளினுஞ் சிறப்புப்பொருளினும் வந்து பெயர்க்கு ஈறாம இடைச்சொலலாகிய எகர ஒகரங்கள் மூன்றிடத்திற்கும் உரியவாமென்பது பெறாம.

வரலாறு;—ஏவக்கொற்ற ஓவக்கொற்ற சாத்தா தேவா பூதா எனவரும். இவை சண்டி முறையே எனக்கு ஒரு கருமம் பணி எனவும், இங்ஙனஞ் செய்கின்றதனை ஒழி எனவும் முன்னிலையேவற் பொருளவாய் வந்தன. இவற்றிற்கு வல்லெழுத்துப்பேறு "இயல்பினும்விதியினும்" என்பதனாற் பெற்றாம். (சூ)

கூஅ. தேற்ற வெகரமுஞ் சிறப்பி னெவவு
மேற்கூ றியறகை வல்லெழுத்து மிகா.

இது மேல் மூன்றிடத்திலுஞ் உரியவாய் வருமென்ற எகர ஒகர ஈறறிற்கு எயதியது விலக்குகின்றது.

இ - ள் தேற்றப்பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல் அளபெடுப்புழி வரும் எகர ஈற்றுமுன்னுஞ் சிறப்புப் பொருண்மைக்கண் வரும் ஓகார ஈற்று இடைச்சொல் அளபெடு

புழி வரும் ஒகர ஈற்றுமுன்னும் மேற்கூறிய அதிகாரவல்லெழுத்து மிகாது இயல்பாய்முடியும். எ - று.

வரலாறு;—யானேஎகொண்டேன் நீயேஎகொண்டாய் அவனேஎகொண்டான் எனவும், யானேஒகொடியேன் நீயோஒகொடியை அவனேஒகொடியன் எனவும் வரும்.

இயற்கையென்றதனானே ஏனை ஏகார ஓகார ஈற்று இடைச்சொற்கள் செய்யுள் அழிய வந்தவிடத்து அளபெடுப்புழி வரும் ஏகார ஓகாரவீற்றுக்கண்ணும் இயல்பாதல்கொள்க. அவைபோல இவை அளபெடுத்தல் ஒருதலையன்மையின் இலேஞ்ஞெ தழீஇயினரென்க.

கூகூ. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே.

இஃது ஏகார ஓகார ஈற்று இடைச்சொற்கட்கு எய்தியது விலக்குகின்றது.

இ - ள். இடைச்சொல்லாய்வரும் ஏகாரஓகாரங்கள் முன்னர் வல்லெழுத்து வந்தால் மிகாது இயல்பாய் முடியும். எ - று.

ஈண்டு இடைச்சொல்லென்றன தேற்றமுஞ் சிறப்பும் ஒழிந்த வற்றினே.என்னே? அவை அளபெடுத்து ஏகரஓகர ஈறுமேகிற்பவின்.

வரலாறு;—நீயேகொண்டாய் இதுவினு. காலேகையே இஃதென். அவருள் இவனேகொண்டான் இதுபிரிகிலே. யானேகொண்டேன் இஃதெதிர்மறை. ''கழியேசிறுகுரனெய்தல்பாடோவாதே'' இஃதீற்றசை. கொளலோகொண்டான் இஃதொழியிசை. நீயோகொண்டாய் இதுவினு. யானேகொண்டேன் இஃதெதிர்மறை. அவனேபோனன் இதுகழிவு. ''யானேதேறேனவர் பொய்வழங்கலரே'' இதுபிரிகிலே. பதநோபதினென்றே புற்றேபுதலோ இவையையம். ''குன்றுறழ்தகளிறென்கோ கொய்யுளைமாவென்கோ'' இவையெண். ''காணியவம்மினேகங்குலதுகிலேயே'' இஃதசைகிலே. இவை இயல்பாயவாறுகாண்க. (சஎ)

க00. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

இது குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள். வன்றொடசொழிந்த ஐவகைக் குற்றுகர ஈற்றுமுன்னும் வரும் வல்லெழுத்து மிக்குமுடியா அல்வழிக்கண். எ - று.

உ-ம். நாகுகடிது எஃகுகடிது வரகுகடிது குரங்குகடிது தெள்குகடிது சிறிது தீது பெரிது எனவரும். (சீஅ)

க0க. இடைதொட ராய்தத் தொடரொற் றிடையின் மிகாநெடி லுயிர்தொடர் முனமிகா வேற்றுமை.

இதுவும் அது.

இ-ள். இடைச்சொடர்மொழிக் குறுகர ஈற்றுமூன்னும் ஆய்தத்தொடர்மொழிக் குறுகர ஈறறுமுன்னும் ஒற்றடையெமி காத ரசெழுசதொருமொழிக குற்றுகர ஈறறுமுன்னும உயிர்தொ டர்மொழிக குறுகர ஈறறுமுன்னும் வரும வலலெழுதது இயல் பாய்முடியும வேறறுமைக்கண. எ-று.

உ-ம். தெள்குகால ஈறை தலே புறம் எனவும், எஃகு கடுமை ஈறுமை தீமை பெருமை எனவும, நாகுகால செவி தலே புறம எனவும், வரகுகதிர் சோறு தாள் பதர் எனவும முறையேகாணக.(சகூ)

க0உ. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட் டறவொற் றிரட்டுமெ வேறறுமை மிகவே.

இது குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப் புவிதி கூறுகின்றது.

இ-ள் ரசெழுத்தொருமொழியீற்றினும் உயிர்த்தொடர்மொ ழியீறறினும உகரம் பற்றுகோடாபநின்ற வலலெழுத்தாறனுள் டகாறறகாரமாகிய இரண்டொற்றும இடைகெகண் மிகும வேறறு மைக்கட் பெருமபாலும். எ-று.

உ-ம். யாட்டுக்கால் பாற்றுக்கால் முருட்டுக்கால் முயிற்றுக் கால் செவி தலே புறம ஞாறறி நிறம் மயிர் யாப்பு வலிமை அடி எனவரும். கயிறறுப்புறம வயிறறத்தீ இனவும் அன்ன. பெரும் பாலும் மிகுமெனவே, "வேலியாயிரமவினியுட்டாகக்—காவிரிபு ரகருடுழிழவோனே" "கறைமிடறணியலுமணிநதன்றகறை" எ னச் சிறுபான்மை வேற்றுமைக்கண் மிகாமையுங், காட்டரண் எற் றேனம் குருட்டுகோழி திருட்டுப்புலியன் காட்டுக்காணம வறட் டாடி குருட்டெருது களிரறுப்பன்றி வெளிற்றுப்பனை யெரறுப் பல் எனச சிறுபான்மை அவவழிகெகண் மிகுதலும, வேருக்குக்கண் ஏருத்துக்கால் எனச் சிறுபான்மை பிறமெய் மிகுதலுங்கொள்க.(ஙo)

கoங. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.

இதுவும் அது.

இ - ள். மெல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றுகர ஈற்று மொழிகளுட் சில மொழிகளே வேற்றுமைக்கட் தமக்கு இனமான வல்லொற்றுத்தொடர்மொழியாகாதன; ஆவனபல. எ - று.

உ-ம். குரக்குக்கால் ஞாற்சி கிணம் மூகம் வீரல் உகிர் எனவும், கழச்சுககோல் எட்குக்குட்டி மருத்துப்பை பாப்புத்தோல் எற்புக்காடு சிலப்பதிகாரம் எனவும் வரும். ஞெண்டுக்கால் பந்தற்சி ரட்சி பறம்பிறபாரி குறும்பிறசான்றோர் என்றாற்போல்வன வன்றொடராகாதன. மன்னே என்றதனானே குரக்கடி குரங்கின்கால் பாப்புத்தோல் பாம்பின்றோல என ஒன்றுதானே ஓரிடத்துத்திரிந்தும் ஓரிடத்துத்திரியாதும் வருதலுங் கொள்க. இன்னும் அதனானே அற்புத்தனே அன்பினசெயதனே என வேற்றுமையாதலேயன்றி அன்பாகியதனேயென அலவழியுமாதலின் அல்வழியுந் திரிதல் கொள்க. (ருக)

கoச. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

இதுவும் அது.

இ - ள். ஐகாரத்தைத் தம்மீற்றிலே பெற வருங் குற்றுகரமும் உள. எ - று.

உ-ம் பண்டைக்கூத்தன் சாத்தன் தேவன் பூதன் எனவும், மன்றைத்துறை பாணை எனவும் வரும் ஓராட்டையாணை ஐபாட்டையெருது எனத் திரிந்தும் அன்றைக்கூத்தர் அற்றைக்கூத்தர் என உறழ்ந்தும வருமெனவுங் கொள்க. (ருஉ)

கoடு. திசையொடு திசையும் பிறவுஞ் சேரி
னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்றது நீக்கலும்
றகரம் னலவாய்ந் திரிதலு மாமபிற.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருக்கின்றது.

இ - ள். திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிறமொழியும் வந்து புணருமிடத்து நிலைமொழியீற்றுயிர்மெய்யும் அதன்மேனின்ற

ககரவொற்றுங் கெடுதலும் றகரவொற்று னகரலகரங்களாய்த் திரி தலும் பொருந்தும். எ - று.

பிறவென்றதனானே திசையோடு திசை புணருங்கால் நீலே மொழி பெருந்திசையெனவும் வருமொழி கோணத்திசையெனவும், நீலமொழியாய் நிற்பனவும் வடக்குந் தெற்குமேயெனவுந், தெற் கென்பதன் றகரம் னகரமாயும் மேற்கென்பதன் றகரம் லகரமா யுந் திரியுமெனவும், மேற்றிசையென்றுற்போல்வன திரியாவென வும், வருமொழித் தகரந் திரியுமெனவும், ழகரத்து அகரங் கெட்டு முதல் நீண்டேவருமெனவும், பெருந்திசையோடு பெருந்திசை புணர் வழி எபென்சாரியை வருமெனவுங் கொள்க.

வரலாறு;—வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென் மேற்கு எனவும், வடகடல் வடகரம் வடதலை வடபால் "வடவேங் கடந்தென்குமரி" தென்கரம் தென்றலை தென்பால் மேல்கடல் மேல்பால் குடகடல் குடபால் குணகடல் குணபால் கிழ்கரை கீழ் சார் எனவும், தெற்கேவடக்கு வடகேகேதெற்கு மேற்கேகிழக்கு கிழக்கேமேற்கு எனவும் வரும் தெற்கேவடக்கு முதலியன உம் மைத்தொகை தெற்குவடக்கு வடக்குத்தெற்கு கிழக்குமேற்கு மேற் குக்கிழக்கு என ஏகாரம்பெறுதி பெரும்பான்மை பொதுவிதி பெறுதலுங் கிழைக்குளம் மேலைக்குளம் கீழைச்சேரி மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும் அவ்விலேசானே கொள்க. (நிக)

கoசூ. எண்ணிறை யளவும் பிறவு மெய்தி
னுன்று முதலெட் டுரு மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளுமூன் றுறு
குறுகு மாறல் லவற்றினீற் றுயிர்மெய்
யேகு மேற்புழி யென்மனார் புலவர்.

இது சூற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் எண்முதலிய பெய ரோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெய ரும் பொருட்பெயரும் வருமொழியாய் வந்து புணரின் நீலமொழி யாய் நின்ற ஒன்றுமுதல் எட்டீறுகிய எழுவகையெண்களுள் முதற் கணின்ற ஒன்றும் இரண்டும் முதலுயிர்நீண்டும் மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகியும் ஆறல்லாத அறுவகையெண்களின் ஈற்றுநின்ற உயிர்மெய் கெட்டும் முடியும் பொருந்துமிடத்தென்று கூறுவர் அறிவுடையோர். எ - று.

நாற்கணத்தோடும் இவ்வாறே முடியவேண்டுமென்னும் யாப்
புறவில்லேத் தமக்கேற்ற பெற்றி முடியுமென்பார் ஏற்புழி என்றார்.
எண்ணிறையளவும்பிறவுமெய்தின் என்பதனே மேல் ஐந்துருத்திரத்
தோடும் ஏற்புழி என்பதனே இப்பொருண்மையதிகாரம் முற்றுமள
வும் உய்த்துரைக்க 5

வரலாறு;—அறுபஃதுகோடி காணி கால் நூறு நூறுயிரம்
நான்கு மூன்று முந்நிரிகை முககால் ஆயிரம் எனவும், கழஞ்சு சே
கம் தொடி பலம் மஞ்சாடி எனவும், கலம் சாடி துலை பானே நாழி
மண்டை வட்டி எனவும், கல் சுனே துடி பறை ஞாண் நூல் மணி
யாழ் வட்டு எனவும் வன்கணமுதலிய முககணமும் ஆயிரமும் வர |
ஆறு நெடுமுதல்குறுகித் தனக்கேற்றபெற்றி முடிந்தது ஒழிந்தவற்
றிற்கு உதாரணம் மேறகாட்டுதும். ஏற்புழி என்பதனுனே ஆறு
கோடி கழஞ்சு கலம் கல் என நெடுமுதல் குறுகாது குற்றுகரஈற்
றுப் பொதுவிதியானேமுடிதலும், ஆறென்று இரண்டு ஐந்து ஆறு
ஏழ் எட்டு ஒன்பது எடை அகல் உழக்கு அகம ஆகம் என உயிர்க் |
கணத்தோடு புணருங்கால ரண்டுக கூறிய சிறப்புவிதி ஏலாது
மேலைப் பொதுவிதியானே முடிதலும், ஒன்றுமுதல எட்டீறும்
எண்ணுள் இரண்டுமுதலியன இரண்டுகோடி மூன்றுகோடி நான்
குகோடி ஐந்துகோடி எட்டுக்கோடி கழஞ்சு கலம் கல் என்றற்றொ
டக்கத்தனவறறோடு புணருமிடத்து முன்னர்க் கூறுஞ் சிறப்புவிதி ?
யேலாது குற்றுகரஈற்றுப் பொதுவிதிபான் முடிதலும், "ஒன்றுதே
ரினு னெருவன்கூற்றமே" எனச் சிறபான்மை ஒன்றும் அங்ங
னம் முடிதலுங் கொள்க. ஏழென்பது ஏற்றீருகலின் மெய்யீற்
றுப்புணரியலுள் முடிப்பாம். ஆசிரியர் தொல்காப்பியனாரும் ழக
ரவீற்றுள் முடிப்பர். (இசை) ?

கoஎ. ஒன்றன் புள்ளி ரகர மாக
விரணட னெற்றுயி ரேகவுவ் வருமே.

இது மேலனவற்றுட் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு
விதி கூறுகின்றது.

இ - ள். எண்முதலிய பெயர் வருமிடத்து ஒன்றென்னும்
எண்ணிடைநின்ற னகரவொற்று ரகரவொற்றாய்த் திரிய இரண்
டென்னும் எண்ணிடைநின்ற னகரவொற்றும் ரகாரமிசைகின்ற
அகரவுயிருங் கெட அவ்விரண்டெண்ணின் ரகாரத்துமேலும் உக
ரம் வந்து புணரும் ஏற்குமிடத்து. எ - று.

வரலாறு;—ஒருபஃது இருபஃது கழஞ்சு கலம் கல் எனவரும். ஏற்புழி என்றதனானே ஓராயிரம் இராயிரம் எனவும் ஓராயிரம் ஈராயிரம எனவும் ஆயிரம்வந்துழி உகரம்பெறுது முதலுயிர் கீடாதும் கீண்டும், ஒருொன்று ஈரொன்று இடை உழக்கு இலை என உயிர்க்கணம்வந்துழி உகரம்பெறுது முதலுயிர் கீண்டும், ஒருயானை இருயானையென முடிதலேபன்றி ஓர்யானை ஈர்யானையென யகரம் வந்துழி உகரமபெறுது நீண்டுமுடிதலும் கொள்க. (குடு)

கO அ. மூன்றனுறுப் பழிவும் வருதது மாகும்.

இதுவும் அது.

இ - ள். எண்முதலியன வருமிடத்து மூன்றென்னும் எண்ணிடைநின்ற னகரவொற்றுக் கெடுதலும் வருமொற்றுயுத திரிதலும் பொருந்தும் ஏறுமிடத்து. எ - று.

வரலாறு;—மூவொன்று எடை ஆசை என உயிர்க்கணம்வந்துழி ஈற்றுயிரமெய்யும் மேலகின்ற ஒற்றுங் கெட்டும், மூப்பஃது களஞ்சு கலம் கல் ஈன்கு மஞ்சாடி நாழி நூல என வன்கணமும் மென்கணமும் வந்துழி ஈற்றுயிர்மெய்கெட்டு மேல் நின்ற ஒற்று வருமொழியும, மூவ்வட்டி மூவட்டி மூவ்வட்டு மூவட்டு என வகரம் வந்துழி ஈற்றுயிர்மெய் கெட்டு மேல நின்ற ஒற்று வருமொற்றுய்த் திரிந்தும் கெடுமுதல்குறுகியும் ஒற்றும் உயிர்மெய்யுங் கெட்டு கெடுமுதலகுறுகாதும், மூவ்வாயிரம் மூவாயிரம் மூவ்வகல் மூவகல் மூவ்வாழாகு மூவாழாகு மூவ்வுழக்கு மூவுழகு என ஆயிரம் அகல் ஆழாக்கு உழக்கு வந்துழி ஒற்றும் உயிர்மெய்யுங் கெட்டு கெடுமுதலகுறுகியுங் குறுகாதுந் தனக்கேற்றபெற்றி முடிந்தவாறு காண்க. மூவ்பாழ் மூவ்யானை என யகரம் வந்துழி மூன்றனுறுப்பு வருமொற்றுகாது வகரவொற்றுதலும் மூழக்கு மூழாக்கு என்னும் மருஉமுடிவும் புறனடையாற் கொள்க. (குசு)

கO கூ. நான்கன் மெய்யே லறவா கும்மே.

இதுவும் அது.

இ - ள். எண்முதலிய நான்கும் வருமிடத்து நான்கென்னும் எண்ணிடைநின்ற னகரவொற்று லகரமும் றகரமுமாய்த் திரியும் ஏற்குமிடத்து. எ - று.

வரலாறு;—நாலொன்று எடை உழக்கு அடி எனவும் வட்டி வட்டு யானை எனவும் உயிர்க்கணமும் இடைக்கணமும வந்துழி

ற்றுயிர்மெய் கெட்டு மேல் நின்ற னகரவொற்று லகரவொற்றாய்த் திரிந்தும், நாற்பஃது கழஞ்சு சலம் கல் என வன்கணம் வந்தழி ற்றுயிர்மெய் கெட்டு மேல் நின்ற னகரவொற்று றகரவொற்றாய்த் திரிந்தும், நானூறு நான்முந்திரிகை நாழி நான்மண்டை நான்ஞாண் நானூல் நான்மணி என மென்கணம் வந்தழி ற்றுயிர் மெய் கெட்டுத் தனக்கேற்றபெற்றி முடிந்தவாறு காண்க. (நுஎ)

ககo. ஐந்தெனும் றடைவது மினமுங் கேடும்.

இதுவும் அது.

இ - ள் எண்முதலிய வருமிடத்து ஐந்தென்னும் எண்ணிடைநின்ற நகரவொற்று வருமொழியும் அதற்கினமாயுங் கெட்டும் முடியும் ஏற்குமிடத்து. எ - று.

வரலாறு;—ஐம்மூன்று ஐம்மஞ்சாடி ஐம்மண்டை ஐம்மணி ஐஞ்ஞாண் ஐந்நூறு ஐந்நாழி ஐந்நூல் என மென்கணம் வந்தழி ற்றுயிர்மெயகெட்டு மேலநின்ற நகரவொற்று வருமொற்றுய்த் திரிந்தும், ஐம்பஃது ஐங்கழஞ்சு ஐங்கலம் ஐங்கல் என வன்கணம் வந்தழி மேலைப் பொதுவிகியான் ற்றுயிர்மெய் கெட்டு மேல்நின்ற நகரவொற்று வருமொறிற்கு இனமாய்த்திரிந்தும், ஐயொன்று எடை ஆழாக்கு அம்பு என உயிர்க்கணம்வந்தழி ஒற்றும் உயிர்மெய்யுங்கெட்டும், ஐவட்டி ஐவ்வட்டி ஐவண்ணம் ஐவ்வண்ணம் ஐயாறு ஐய்யாறு என இடைகணம் வந்தழி ஒற்றும உயிர்மெய்யுங்கெட்டும் உயிர்மெய்கெட்டு ஒற்று வருமொற்றுய்த்திரிந்துந் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறுகாண்க. (நுஅ)

ககக. எட்ட னெற்றே ணகார மாகும்.

இதுவும் அது.

இ - ள். எண்முதலிய வருமிடத்து எட்டென்னும் எண்ணிடைநின்ற டகரவொற்று ணகரவொற்றாய்த் திரிந்துமுடியும் ஏற்குமிடத்து. எ - று.

வரலாறு;—எண்பஃது கோடி காணி கால் நூறு நூறாயிரம் நான்கு மூன்று முந்திரிகை முக்கால் ஒன்று இரண்டு ஐந்து ஆறு ஏழ் எட்டு ஒன்பது ஆயிரம் எனவும், கழஞ்சு சீரகம் தொடி பலம் மஞ்சாடி எடை எனவும், கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் ஆழாக்கு உழக்கு எனவும், கல் சுளை துடி பறை

ஞாண் நூல் மணி யாழ் வட்டு அகம் ஆகம் எனவும் நாற்கணமும் வந்துழி ஈற்றுயிர்மெய்கெட்டு மேனின்ற டகரவொற்று ணகர வொற்றுய்த் திரிந்து தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க. ()

ககஉ. ஒன்பானெடு பத்து நூறு மொன்றி
னென்றிய விரண்டு மூறு மாயிரமு
மென்று திரிய விறுதிய கெடுவழி
நின்ற னகர நிரலே ணளவா
யிரட்டி வொகரமிசைத் தகர மொற்றும்.

இஃது ஒன்பதென்னும் எண்முன்னர்ப் பத்தும் நூறும் வந்து புணர்வழிப் படுஞ் செய்கைகூறுகின்றது.

இ - ள். ஒன்பதென்னும் எண்முன்னர்ப் பத்தும் நூறும் வந்து புணரின் அப்பத்தும் நூறும் திரிநிறைவகையானே ஊதென்றும் ஆயிரமென்றுந் திரிய, நிலைமொழியீறாய்நின்ற ஒன்பதன் இறுதிக் கண்ணவாகிய சுற்றுகரமும் அதன்மேனின்ற அகரமுந் தம்மாற் பற்றப்பட்ட மெய்யோடுங் கெடுமிடத்து அவற்றின்மேனின்ற னகர வொற்று முறையே பத்தின் திரிபாகிய ஊறு வந்துபுணருமிடத்து ணகரவொற்றாய் இரட்டித்தும் நூறின் திரிபாகிய ஆயிரம் வந்துபுணருமிடத்து ளகரவொற்றாய் இரட்டித்தும் நிற்ப, நிலைமொழி ஒகரவுயிர்மேல் ஒரு தகரம ஒற்றாய்வந்து நிற்கும். எ - று.

வரலாறு;—தொண்ணூறு தொள்ளாயிரம் என வரும். வரு மொழிச்செய்தியை முற்கூறியவதனானே ஒற்றிரட்டாது தொளாயிரம் எனவருதலுங் கொள்க.

இவ்வெழுத்து இவ்வெழுத்தாய்த் திரியுமென்னுது ஊருகியும் ஆயிரமாகியுந் திரியுமென்றுரேனும் "ஒன்பா னெகரமிசைத் தகர மொற்று—மூத்தை யொற்றே ணகர மிரட்டும்—பத்தென் கிளவி யாய்த பகரங்கெட—நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி—யொற்றிய தகரம் றகர மாகும்" எனவும், "ஒன்பான் முதனிலை மூத்திகிளத் தற்றே—மூந்தை யொற்றே ளகர மிரட்டி—நூறென் கிளவி நகார மெய்கெட—லுவா வாகு மியற்கைத் தென்ப—வாயிடை வருத லிகார ரகார—மீறுமெய் கெடுதது மகர மொற்றும்" எனவும் ஆசிரியர்தொல்காப்பியனார் கூறியவாற்றானே அவற்றின் திரிபினை வேறுவேறு பகுத்துக்காண்க.

இவ்வாறே மேலும் விரிவஞ்சி யான் யாம் நீ நீர் என்பன என் எம் நின் நுமமாமெனக் கூறுப. "ஒன்பானெடு பத்து நூறு மொன்றின்—முன்னதி னேனைய முரணி யொவ்வொடு—தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை—நிரலே னளவாய்த் திரிப்பது கெறி யே" எனச் சூத்திரஞ்செய்யின் முரணுதலான் உளவாகிய நூறும் ஆயிரமும் வந்து புணர்ந்து தொண்ணூறாந் தொள்ளாயிரமுமென முடிந்திழி அவை ஒன்பதுபத்து ஒன்பதுநூறு எனப் பொருட ராது தொள்ளாயிரம் ஒன்பதினாயிரம் எனப் பொருடருமாதலின் வழுவாமென்க. (கூo)

ககங. ஒன்றுமுத லெட்டீறொ டெண்முனர்ப் பத்தி
னிடையொற் றேக லாய்த மாக
லெனவிரு விதியு மேற்கு மென்ப.

இது வருமொழி ஒன்றின் செய்தி கூறுகின்றது

இ - ள். ஒன்றுமுதலாக எட்டீறாகக் கிடந்த எழுவகை எண் களின்முன்னர் வரும் பத்தென்னும் எண்ணிடைநின்ற தகர வொற்று ஒருகாற் கெடுதலும் ஒருகால் ஆய்தமாகத் திரிதலு மென்னும் இவ்விருசெய்கையும் பொருந்துமென்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—ஒருபது ஒருபஃது இருபது இருபஃது முப்பது முப்பஃது நாற்பது நாற்பஃது ஐம்பது ஐம்பஃது அறுபது அறு பஃது எண்பது எண்பஃது எனவரும். (கூக)

ககச. ஒருப தொருபஃ தாகியென் றாதி
யொன்பது மலையூர் பிறவு மெயதிற்
கெடுதலுந் திரிதலு மிலலென மொழிப.

இது மேலனவற்றிற்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள். மேற்கூறியவாற்றான் முடிந்துநின்ற ஒருபது ஒரு பஃது முதலிய இருகூற்று எழுதிறத்து எண்ணுப்பெயர்கள் ஒன்று முதல் ஒன்பது எண்ணும் அலையூர்ந்த பிறவும் வந்து புணரின் இடைநின்ற தகரவொற்று முன்னர்க்கூறியவாற்றாற் கெடுதலும் ஆய்தமாய்த் திரிதலுமின்றி இயல்பாய் முடியுமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—ஒருபத்தொன்று இருபத்தொன்று ஒருபத்தொரு கோடி கழஞ்சு கலம காதம் என ஒன்பதின்காறும் ஒட்டுக. பிற வும் அன்ன. இவை நூற்றொருபத்தொன்று நூறுயிரத்தொருபத் தொன்று என வருமாறும் உணர்க. (சூஉ)

கஉடு. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
யெணணிலைற யளவும் பிறவிற் பத்தி
னீற்றுயிர் மெய்கெடுத தின்னு மிற்று
மேற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

இது சில எண்ணுப்பெயரோடு சில எண்ணுஇ காற்பெயரும் வந்து புணருமாறு கூறுகின்றது.

இ-ள் ஒன்றமுதலிய பத்தும் ஆயிரமும் கோடியுமாகிய எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பொருட்பெ யரும் வருமொழிபாய்வது புணரிற் பதினது ஈற்றுயிர்மெய் யைக் கெடுத்து இன்னுதல் இற்றுதல் ஆண்டைக்கேறபதொன்று வரும்; ஒன்பதன்முன் இவை வந்தாலும இவ்விரண்டனுள் ஒன்று ஆண்டு வரும். எ-று.

ஒருபுடைச்சேறலென்னும் உத்தியான் ஒன்பது ஈறுகெடாது சாரியை பெறுதலே கொள்க. இரண்டுமென முடித்தலின் ஈண்டு ஏனபவே வருவிக்க எண்ணுப்பெயர் வந்துழிப் பதினென்று பதிற் ருென்று மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழ் எட்டு கோடியெனு ஈறு கெட்டு இன்னும் இறறும் பெற்றும் பதினயிரம் என ஈறுகெட்டு இன்பெறறும பதிறருன்பது பதிற்றப்பத்து என ஈறுகெட்டு இற் றுப்பெற்றும, நிறைப்பெயர் வந்துழிப் பதின்கழஞ்சு பதிற்றுக் கழஞ்சு சீரகம் தொடி பலம் மஞ்சாடி என ஈறுகெட்டு இன்னும் இற்றும் பெற்றும் பதிறதெடையென ஈறுகெட்டு இறறுப்பெற்றும், அளவுப்பெயர் வந்துழிப் பதின்கலம் பதிற்றுக்கலம் சாடி நூதை பானை நாழி மண்டை வட்டி என ஈறுகெட்டு இன்னும் இற்றும் பெற்றும் பதிற்றுக்கலம் ஆழாக்கு உழக்கு என ஈறுகெட்டு இற்றுப் பெற்றும், பொருட்பெயர் வந்துழிப் பதின்நிங்கள் பதிற்றுத்திங்கள் மடங்கு என ஈறுகெட்டு இன்னும் இற்றும் பெற்றும் பதிற்றுவேலி யாண்டு முழம் அகலு இதழ் என ஈறுகெட்டு இற்றுப்பெற்றுந் தனக்கேற்றபெறறி முடிந்தவாறு காண்க. ஒருபதினயிரம் ஒருப தின்கழஞ்சு ஒருபதிறறுக்கலம ஒருபதிற்றுவேலி என அடைய தத்துவருமாறுங் காணக. ஒன்பதின்கோடி ஒன்பதிற்றுக்கோடி

கழஞ்சு தலாம் கலம் என ஈறுகெடாது இன்னும் இற்றும் பெற்றும், ஒன்பதினாயிரம் என இன்பெற்றும்,ஒன்பதிற்றொன்று எடை அகல் உழக்கு தடக்கை வேலி யாண்டு எழுத்து என இற்றுப்பெற்றும், ஒன்பதுந் தனக்கேற்ற பெற்றி முடிந்தவாறு காண்க. எற்புழி என்பதனானே பத்தொன்பது கழஞ்சு சாடி இதழ் எனச் சாரியை பெறுது குற்றுகர ஈற்றுப் பொதுவிதியானே முடிதலுங்கொள்க. பிறவும் அன்ன. (சூக)

ககசு. இரண்டு மூன்வரிற் பத்தினீற் றுயிரொமெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப.

இது பத்தின்முன்னர் இரண்டிவந்து புணர்வுழிப் படுஞ் செய்கை கூறுகின்றது.

இ - ள். இரண்டென்னும் எண் பத்தென்னும் எண்முன்னர் வந்து புணரின் இதன் ஈற்றுயிர்மெய் கெட மேல் நின்ற தகர வொற்று னகரவொற்றாய்த் திரிந்து முடியும். எ - று.

வரலாறு;—பன்னிரண்டு என வரும். (சுச)

ககள. ஒன்ப தொழித்தவெண் ணேரெட்டு மிரட்டின்
முனனதின் முன்னல வோட வுயிரவரின
வவவு மெபவரினா வநதது மிகனெறி.

இஃது ஒன்றுமுதலிய பத்து எண்ணுள் எட்டு எண் இரட்டித்தழிப் படுஞ்செய்கை கூறுகின்றது. உ

இ - ள் ஒன்பதென்னும் எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற ஒன்றுமுதற் பதினேழன எட்டெணணுந் தம்முன்னர்த் தாமவந்து புணரின், நிலைமொழியின் முதலெழுத்து ஒன்று நிற்க, அல்லன வெல்லாங் கெட, உயிர்முதலான எண் வந்து புணரின் ஈகர வொற்றும் மெய்முதலான எண் வந்து புணரின் வந்த மெய்களும் ஊ இடையே மிக்குமுடிதல் வரலாற்றுமுறைமை. எ - று.

வரலாறு;—ஒவ்வொன்று இவ்விரண்டு மும்மூன்று நான்கு எனவரும். பிறவும் அன்ன. தெரியென்ற மிகையானே, மூன்று நான்கு ஆறு என்பனவற்றிற்குக் குறுக்கமும், பத்துப்பத்து பத்து பத்து என்னும் விகற்பமும், நாலைஞ்சு நன்னூறு என்னுந் திரிபும், எ ஜயைந்து ஐவ்வைவந்து என்னும் உறழ்ச்சியும், ஒரோவொன்று கழக் கழஞ்சு கலகலம் என்றாற்றொடக்கத்து முடிவுங்கொள்க. எண்

பெயரோடு எண்முதலிய புணருமிடத்து, ஈண்டுக்கூறிய நிறப்பு விதியன்றித் தனிக்குறின்மூன்றெற்றுயிர்வரினிரட்டலும் வருநத் திரிக்தபின்மாய்வும் உடம்படுமெய்பெறுதலும் முதலிய பொதுவிதி யம் ஏற்புழிக் கொணர்ந்து முடித்துக்கொள்க. ஒவ்வொன்று அவ் வாறு என்றுற்போல்வனவற்று வகரம் உடம்படுமெய்யன்மை இவ் விரண்டென்பதனுள் அறிக.

நூற்றொன்று நூற்றுப்பத்து நூற்றுத்தொண்ணூறு நூற்றி ழ்த்தாமரை நூற்றுக்கான்மண்டபம் இருநூற்றொன்று இருநூற் றொருபது இருநூற்றுக்கலம் சாடி தூதை பாணை கழஞ்சு தொடி என்றற்றொடக்கத்தனவெல்லாங் குற்றுகர ஈற்றுப் பொதுவிதி யானே முடித்துக்கொள்க. (சூடு)

ககஅ. மூன்ற னுருபினு மாற னுருபினும்
வல்லெழுந்து மிகுத லில்லை மொழிப.

இஃது உருபுயிர்ற்றுட் லவற்றிற்கு எய்தியது விலக்கு கின்றது.

இ - ள். ஒடு ஓடு என்னும் மூன்றனுருபோடு தொடர்ந்த சொல்லின்முன்னும் அது ஆது என்னும் ஆறனுருபோடு தொடர்ந்த சொல்லின்முன்னும அதிகாரவல்லெழுத்துப் பெறுது இயல்பாய் முடியுமென்று கூறுவர் ஆசிரியர். எ - று

வரலாறு;—சாத்தனொடுகொண்டான் சாத்தனோடுகொண் டான் சென்றான் தந்தான் போயினன் எனவும், சாத்தனதுகை சாத்தனுதுகை செவி தலை புறம் எனவும் வரும். (சுசு)

மூன்றாவது உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

சஎவது மெய்யீற்றுப்புணரியல்.

ககக. னனவல் லினம்வரட் டறவும பிறவரி
னியல்பு மாகும வேற்றுமைக் கல்வழிக்
கனைதுமெய வரினு மியல்பா குமே.

என்பது சூத்திரம். இவ்வோத்து மெய்யீற்றுப்பதம் நின்று வருமொழி வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக்கணங்களோ டும் புணருமாறு ஒருவாற்றும் தொகுத்துணர்த்தினமையின் மெய் யீற்றுப்புணரியலென்னும் பெயர்த்து. மேல் உயிரீற்றுப்பதம் புண

ருமாறு உணர்த்தி இதனுள் மெய்யீற்றுப்பதம் புணருமாறு உணர்த்தினமையின் மேலோத்தினோடு இயையுபடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச்சூத்திரம் னகார னகார ஈறு புணருமாறு கூறுகின்றது.

இ - ள். ணகார னகார ஈறுகள் வல்லெழுத்துவந்தால் முறையே ணகாரம் டகாரமாகவும் னகாரம் றகாரமாகவும் திரிந்தும், மென்கணமும் இடைக்கணமும் வந்தால் இயல்பாயும் முடியும் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்; அல்வழிப்புணர்ச்சிக்கண் முக்கணமும் வந்தாலும் இயல்பாய் முடியும். எ - று.

வரலாறு;—மட்குடம் பொற்குடம் சாடி தூதை பாணை எனவும், ஞாறசி கீட்சி மாட்சி யாப்பு வலிமை எனவும், மண்கடிது பொன்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது எனவும் முறையே காண்க. (க)

கஉ0. குறிலணை வில்லா ணைகக்கள் வந்த
நகாரந திரிந்துழி ணண்ணுங் கேடே.

இ-ள். அவற்றுள் ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள் குற்றெழுத்தினைச் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார ஈறுகள் வருமொழிமுதற்கண் நின்ற நகாரந் திரிந்த இடத்துப் பொருந்துங் கெடுதலே. எ - று.

வரலாறு;—பாண் பரண் பைம்பூண் மணிப்பூண் பைங்கண் பசுங்கண் நன்று எனவும் நன்மை எனவும், வான் வயான் வலியன் அலவன் கலுழன் செம்பொன் பசும்பொன் நன்று எனவும் நன்மை எனவும் வரும். தானீண்டான் நீண்டது யானீண்டனன் என்றாற் போல்வன ''பொதுப்பெயருயர்திணை'' என்னுஞ் சூத்திரத்து முறையலகூற்றானே முடியும. (உ)

கஉக. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
யியல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

இது ணகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள். சாதிபற்றியுந் திரள்பற்றியும் வரும் பெயர்களும் பரண்கவணென்னுந் தனிப்பெயர்களுமாகிய இவற்றின் இறுதி

ணகாரம் வன்கணம் வரிற் திரியாது வேற்றுமைக்கண்ணும் இயல் பாய் முடியும். வரையறைப்பொருண்மை உணர்த்தாது ஓர் உண வை உணர்த்திநிற்கும் எண்ணென்னுஎ பெயரும் சாணென்னும் ஆளவுப்பெயரும் வன்கணம் வரின் இயல்பாகாது டகாரமாய்த் திரிந்து முடிதலும் பெறும் அல்வழிக்கண்ணும். எ - று.

வரலாறு;—பாண்குடி உமண்குடி சேரி தோட்டம் பாடி எனவும், அமண்குடி சேரி தோட்டம் பாடி எனவும், பரண்கால் கவண்கால் எனவும், எட்கடிது சிறிது நீது பெரிது எனவும், சாட் கோல் எனவும் முறையே காண்க. உம்மையான் எண்கடிது சாண் கோல் என இயலபாதலே வலியுடைத்தென்க. பிறவென்ற மிகை யானே கண்கடுமை அட்டேம்டிழனி என்றற் தொடக்கத்து இயல் பும், முரணகடுமை மூரட்கடுமை என்றற் தொடக்கத்து உறழ்வும், மண்ணங்கட்டி எனவும் ஆணமாக்கிளவி ஆணங்கோடி செதிள் தோல் பூ நார் இலை எனவந் திரியாது அம்முப்பெறுதலும், விண் ணைவஞ்ஞஉங் காயப்பெயர் செய்யுளிடத்துத் தொழிற்சொல் வருங் காலத்து விண்வந்துக்கொட்டும் வண்ணத்தமரர் எனத் திரியாது அத்துப்பெற்றும் "விணகுத்நீன்வரைவெற்பகளேபலவோ" எனப் பெறுதும் வருவனவும், வெண்ணுக்கரை "கணேகுரல்கபிப்பப்பண் ணுப்பெயர்த்து" எண்ணுப்பேறு என உகரம்பெறுதலும், இன் னோரன்ன பிறவுங் கொள்க. ஆண்கை பெண்கை செவி தலை புறம் எனவும், கடிது சிறிது நீது பெரிது எனவும் இருவழியும் இயல் பாதல் "பொதுப்பெயருயர்திணைப்பெயர்களிற்றமெய் வலிவரினி யல்பாம்" என்பதனனும் மண்கை புண்கை என்றுற்போல்வன இரண்டாம்வேற்றுமைத் திரிபானும் முடியும். (ங)

கஉஉ. னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகா னடைவு மாகும் வேறறுமைப் பொருட்கே.

இது னகார ாற்றுள் ஒன்றாகு எய்தியதுவிலக்கலும் எய்தா தது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். னகார ாற்றுச் சாதிப்பெயர் திரியாது இயல்பாத லும் அகரம் பெறுதலுமாகிய இருதிறனுஎ பொருட்கும் வேற்று மைப்பொருட்புணர்ச்சிகண். எ - று.

வரலாறு;—எயின்குடி சேரி தோட்டம் பாடி எனவும், எயி னக்கன்னி சிறுவன் குலவன் பிள்னை ஞாநசி கீட்சி மாட்சி யாப்பு

வலிமை ஆட்சி எனவும் முறையே காண்க. சாதிப்பெயருங் குழூஉப்பெயரும் உயர்திணைப் பெயராகாது அஃறிணைப்பெயராய் நிற்றலின் ாண்டு முடித்தார். (சு)

கஉங. மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.

இது னகர ாற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது 5 தவிதி வகுக்கின்றது.

இ - ள். மீன் என்னுஞ்சொல் இறுதினகரம் றகரவொற்றோடு உறழ்ாதுமுடியும் வேற்றுமைக்கண வல்லெழுத்துவரின். எ - று.

உ-ம். மீன்கண் மீற்கண் சினை தலை புறம் எனவரும். (சு)

கஉச. தேனென் கிளவி வல்லெழுத் தியையின 10
மேனிலை யொற்தலு மீறுபோய வலிமெலி
மிகுதலு மெலிவரி னிறுதியோ டுறழ்தலு
மிடைவரி னிபல்பு மாமிறை வுயிர்வரி
னெற்றுமிகு தகரமொடு கிற்றலு முரிததே.

இது னகர ாற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி 15 வகுத்தலும் எய்தியது இகந்தபடாமைக் காததலும தலிறறு.

இ - ள். தேன் என்னுஞ்சொல் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய்வரின் மீனென்பதற்கு மேற்கூறிய திரிபுறழ்ச்சிகளே ஒத்து முடிதலும் ாற்றெழுத்துக் கெட்டு வல்லெழுத்து மிக்குமுடி தலும் மெல்லெழுத்து மிக்குமுடிதலும, மெல்லெழுத்து முதன்மொ 2 ழிவரின் நிலைமொழியிறுதி னகரவொற்றோடு கெடிதலுங் கெடா மையுமாகி உறழ்ந்து முடிதலும், இடையெழுத்து முதன்மொழிவ ரின் இயல்பாதலும் பொருதும்; உயிர்முதன்மொழி வரிற் பிறி தமொரு தகர ஒறறு உடன்மிகுந்த தகரத்தோடு நின்றுமுடிதலும உரித்து. உம்மையாற் பிறசாரியையைபெற்று முடிதலும் இயல்பாய் 2 முடிதலும் உரிதது. எ - று.

தேன்குடம் தேற்குடம் சாடி தூதை பாணை எனவும், தேக்கு டம் தேங்குடம் சாடி தூதை பாணை எனவும், தேன்ஞெரி தேஞெரி தூனி மூரி எனவும், தேன் யாப்பு வலிமை எனவும், தேத்திரல் தேனிரல் தேனிரல் அடை ா எனவும் முறையே காண்க. 3

பிற என்றதனானே ஒற்றுமிகு தகரமொடு கிற்புழி ாறுகெதி லும், தேஞெரி தேஞ்ஞெரி தூனி மூரி என னகரங்கெட்டுத் தத்தம்

மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தலும், அலவன் கலுழன் வலியன் கண் செவி தலை புறம் எனவும் கான்கோழி கரை எனவும் திரியாமையும், வரிற்கொள்ளும் செல்லும் தரும் போம் என வினையெச்சத்திறுதி திரிதலும், "அதுமற்கொண்கன்றேரே" "காப்பும் பூண்டிசிற்கடையும்போகல்" என மன் சின் என்னும் அசைநிலையிடைச்சொற்களிறுதி திரிதலும், எகினங்கோடு செதிள் தோல் பூ என எகினமரப்பெயர் அம்மூப்பெறுதலும், இன்னோரன்ன பிறவுங் கொள்க. வெள்ளாளன் என நின்றதனை அன்கெடுத்துப் பிரித்து ளகர ஒற்றினை ணகர ஒற்றுக்கி வெள்ளாண்குமரி பிள்ளை மாந்தர் வாழ்க்கை ஒழுக்கம் என முடிவதும் இன்னோரன்ன பிறவுஞ் "சில விகாரமாமுயர்தினை" என்பதனுள் முடியும். நேக்கடிது தேங்கடிது என அல்வழிக்கண்ணும் இம்முடிபு எய்துமென்பாரும் உளர். "னலீகாண்கினைப்பெயர்" எனவும், "மீன்றவ்வொடுபொருஉம்" எனவும் மேனின்ற அதிகாரத்தான் இம்முடிபுகள் வேற்றுமைக்கண்ண என்றே கோடும். (சு)

கஉடு. மரமல் லெகின்மொழி யியல்பு மகர
மருவ வலிமெலி மிகலு மாகும்

இது னகர ரகரத்துள் ஒன்றற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ - ள். மரமல்லாத அன்னத்தை உணர்த்தி நின்ற எகின் என்னுஞ்சொல் வல்லெழுத்துவரின் வேற்றுமைக்கண் இயல்பாதலும் அகரம்பெற்று இருவழியும் வல்லெழுத்து மிக்குமுடிதலும் மெல்லெழுத்து மிக்குமுடிதலும் பொருந்தும். எ - று.

உ-ம். எகின்கால் சிறகு தலை புறம் எனவும், சேவல் பேடை எனவும், எகினக்கால் எகினங்கால் சிறகு தலை புறம் சேவல் பேடை எனவும், எகினக்கடிது எகினங்கடிது சிறிது நீது பெரிது சேவல் பேடை எனவும் முறையே காண்க. எகின்சேவல் எகின்பேடை என்பன ஆறும் வேற்றுமைத்தொகையும் இருபெயரொட்டிப் பண்புத்தொகையுமாம் என்றுணர்க. வருமொழி வரையாமையின் எகினஞ்சாற்சி நீட்சி மாட்சி யாப்பு வலிமை அடைவு எனவும், ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது அடைந்தது எனவும், இயல்புகணத்திற்கும் அகரப்பேறு கொள்க. (எ)

கஉசு. குயினெஞ் கிளவி யியற்கை யாகும்.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்குகின்றது.

இ - ள். குயின் என்னுஞ்சொல் வேற்றுமைக்கட் பொதுவி தியானெய்திய திரிபு எய்தாது இயல்பாய்முடியும். எ - று.

குயின்குழாம் செலவு தோற்றம் பறை எனவரும். குயின் மேகம்; வினையுமாம். ஊன் கடிமை சிறுமை தீமை பெருமை என வேற்றுமைக்கட் திரியாது இயல்பாதல் ஊ என்பது னகரச்சாரி யைபெற்று ஊன் என நின்றதாகலின். அஃது "இடையுரிவட சொலினியம்பியகொளாதவும்" எனபதனுன் முடியும். (அ)

கஉஎ. மினபின் பன்கன் றெழிற்பெய ரினைய
வேற்றுமை யாயிற சுன்னவ் வேற்று
வல்லெழுதுதப் பெய்துதல் வரைநிலை யின்றே
பொருளொடு புணருங் காலை யான. 1c

இது னகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வருக்கின்றது.

இ - ள். மின்னும் பின்னும் பன்னுங் கன்னுமாகிய இந் 1
நான்கு சொல்லும் இருவழியும் னகர ஈற்றுத் தொழிற்பெயர்போல உகரம் பெற்று முடியும். வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின், அவற்றுட் கன்னென்னுஞ்சொல் அகரம பெற்று வல்லெழுத்து மிக்கு முடிதலே நீகரும் நிலைமை இன்று, பொருட்பெயரோடு புண ருங்காலத்து. எ - று. 2

உ-ம். மின்னுக்கடிது பின்னுக்கடிது பன்னுக்கடிது கன் னுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது கீண்டது மாண்டது வலிது எனவும, கடிமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி கீட்சி மாட்சி வலிமை எனவும், கன்னக்குடம சாடி தூதை பானை என வும் வரும். "இயல்பினும்விதியினும்" என்பதனுன் வல்லெழுத்துப் 3
பெறுமெனும் "வல்லெழுதுதப் பெய்துதல் வரைநிலை யின்று" என வேண்டா கூறியவதனுற குணதேசடி புணருங் காலத்துஞ் சிறு பான்மை கன்னக்கடிமை என அகரமும வலலெழுத்தும பெற்று முடிதலும் கன்னங்கடிமை என அகரமும் மெலலெழுதத்தும் பெற்று முடிதலும் அலவழிக்கண்ணும் கன்னங்கடிது என அகரமும் மெல் 4
லெழுதத்தும் பெறறு முடிதலும் கன்னஞாற்சி கீட்சி மாட்சி வலிமை எனவும், ஞான்றது கீண்டது மாண்டது வலிது எனவும், இருவ ழியும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்துழியும் அக

ரம்பெற்று முடிதலுங்கொள்க. பொருளொடுபுணருங்காலை அகரம் பெற்றுமுடியும் எனவே வேற்றுமைக்கட் கன் உகரம் பெற்றுமுடி தல் குணத்தொடுபுணருங்காலை என்பதூஉம் பெற்றும். தொழினி லைக்கண் அன்றி வேறுபொருள் உணரநின்றவழியும் இம்முடி பெய்துமென்பார் "தொழிற்பெயரானய" என்றார். மின் மின்னு தற் தொழிலும் "மின்னுகிமிர்ந்தன்ன" என்புழி ஒரு பொருளும் உணர்த்தும். பிறவும் அன்ன. "பொன்னகர்வரைப்பிற்கன்னக் தூக்கி" என்பது மகரவீற்றுப்பொருட்பெயர். (கூ)

கஉஅ. அழனெ னிறுதி கெடும்வேற் றுமைக்கே.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருக்கின்றது.

இ - ள். அழன் என்னுஞ் சொல் ஈற்றுனகரங் கெட்டு முடி யும் வேற்றுமைக்கண். எ - று.

உ-ம். அழக்குடம் சாடி தூதை பானை எனவரும். அழக்கு டம் பிணக்குடம்.

தின் என் என்பவற்று இறுதி னகரந் தன்பகை தற்பகை என்பகை எற்பகை என உரைத்தலும், கீயென்னும் ஈகார ஈற்றுப் பெயர் கின் என நின்றவழி நின்பகை என இயல்பாதலும், "பொ துப்பெயருயர்திணைப்பெயர்களீற்றுமெய்" என்னுஞ் சூத்திரத் தான் முடியும். (கo)

கஉக. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வல்லெ னிறுதி மெல்லெ னாய்த்திரிபவு மாம்பிற.

இது முறையானே மகர ாறு ாற்கணத்தோடும் இருவழியும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். மகர ஈற்று மொழிகள் ாற்கணமும்வர இருவழியும் இறுதி மகரவொற்றுக் கெட்டு உயிரீறுபோல வல்லெழுத்துவரின் அவை மிக்கும், ஏனை இரண்டினமும் வர அவை இயல்பாயும், உயிர்வரின் உடம்படுமெய்பெற்றும் முடிவனவும், வல்லெழுத்து வரின் ஈறுகெடாது அவற்றிற்கு இனமான மெல்லெழுத்துக்க ளாய்த் திரிந்துமுடிவனவும் உளவாம் இருவழியும். எ - று.

வருமொழிவரையாமையின் ாற்கணமும்வரக்கெடுபெற்றும்.

உ ம். மரக்கோடு செதிள் தோல் பூ ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை ஆட்டம் எனவும், வட்டக்கல் சூனை தாழி பாறை ஞான்றது கீண்டது மாண்டது வலை அடி ஆடி எனவும் இருவழியும் நாற்கணமும் வர ாறுகெட்டு உயிரீறு போன்று முடிந்தன. மூண்டகக்கோடை எனவும், கலகொள் சுக்கு தோரை பயறு எனவும், வேழக்கரும்பு நீலக்கண் வட்டதடிக்கு சதுரத்தண்டு ஆய்தப்புள்ளி மரஞான்றது மரநீண்டது நிலநீர் அகரமுதல பவழ வாய் ஆய்தவுலக்கை எனவும வருவனவும அன்ன. இல்லங்கோடு செதிள் தோல் எனவும், மரங்குறிது சிறிது தீது எனவும், இருவழியும் வல்லெழுத்துவரத்திரிந்து முடிந்தன. பிற என்ற மிகையாலே இல்லம்பூ "புலம்புக்கனனேபுல்லணற்காலை" "கலமபெறுகண்ணுளரொகக்ற்றலவ" எனவும், மரம்பெரிது "இலம்படுபுலவர்ேற்றகைகிறைய" "இலம்பாடுகாணுத்தரும்" எனவும் இருவழியும் பகரம் வந்துழிக் கேடுந்திரிபுமின்றி இயலபாதலுங்கொள்க. (கக)

கஙo. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வு 15
மல்வழி யுயிரிடை வரினியல் பும்மூள.

இது வேற்றுமைக்கண் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் அல்வழிக்கண் எய்தியது விலக்கலும் நுதலிறறு.

இ - ள். வேற்றுமைக்கண் வல்லெழுத்துவரின் ாறுகெட்டு வல்லெழுத்து மிக்கும் மெல்லெழுத்துமிக்கும் உறழ்ந்தும் அல்வ 2
ழிக்கண் உயிர்க்கணமும் இடைக்கணமும்ம வரின் ாறுகெடாது இய
ல்பாயும்முடியும் மகர ாற்று மொழிகளுஞ் சில உளவாம். எ - று.

வரலாறு;—குளக்கரை குளங்கரை என வேற்றுமைக்கண் ாறுகெட்டு உறழ்ந்தது. இதுபோல ஒத்தவுறழ்ச்சியுதன்றிக் குளச்
சேறு குளஞ்சேறு தாது எனவரும் உறழ்ச்சியுஞ் சண்பகக்கோடு 2
சண்பகங்கோடு எனச் செய்யுட்கண்வரும் உறழ்ச்சியுங் கொள்க. மரமடைந்தது ஆடிற்று யாது வலிது என இம்மூ உயிர்க்கண
மும இடைகணமும் வர அல்வழிக்கண் ாறுகெடாது இயல்பாய் முடிந்தது. (கஉ)

கஙக. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும். 3

இம்மூ எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். அகமென்னுஞ் சொல்முன்னர்ச் செவி கை என்னுஞ் சொற்கள் வரின் நிலமொழி இடை நின்ற உயிரும்மெய்யுங் கெட்டு முன்போல வன்மைக்கு இனமாய்த் திரிந்து முடியும்.எ-று.

உ-ம். "அஞ்செவிநிறைய மந்திரமோதி" எனவும், "அங்கை யுணெல்லியதன்பயன்" எனவும் வரும். செவி கை என்ற முறை யலகூற்றுனே அகஞ்செவி அகங்கை எனக் கெடாமையுங்கொ ள்க. இவை பண்புத்தொகை. (கஙு)

5 கஙஉ. ஈமும், கம்மு முருமுந் தொழிற்பெயர் மானு முதலன வேற்றுமைக் கவ்வும பெறுமே.

இது மகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள். ஈமுங் கம்மும் உருமும் ஆகிய மூன்று பொருட்பெ
o யரும் முற்கூறிய தொழிற்பெயர்போல உகரம்பெற்று வன்மை மிக்கும் மென்மையும் வகரமும் வர இயல்பாயும் இருவழியும் முடி யும். அவற்றுள் ஈமுங் கம்மும் வேற்றுமைக்கண் உகரம் பெறு தலேயன்றி அகரமுமபெற்று அவ்வாறு முடியும். எ - று.

உ-ம். ஈமுக்கடிது கம்முக்கடிது உருமுக்கடிது சிறிது தீது
5 பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும், ஈமக்குடம் கம்மக்குடம் சாடி தூதை பானை ஞாற்சி கெருப்பு மாட்சி விறகு எனவும் முறையே காண்க. பெரும்பாலும் உகரப் பேறு குணவேற்றுமைக்கண்ணும் அகரப்பேறு பொருட்புணர்ச்சிக் கண்ணுங்கொள்க. ஈம் சுடுகோடி. கம் தொழில். உரும் இடி.

அம்மு தம்மு நம்மு எனச் சாரியையிடைச்சொலுகரம் பெற் று முடிதலும், மரவடி குளவாம்பல் என முடிவது வருமொழி முதற்கண் நின்ற அகரமும் ஆகாரமும் நீலமொழியீற்று மகரமுங் கெட்டு ரகாரளகாரங்களின்மேனின்ற அகரம் ஆகாரமாய் மராடி. குளாம்பல் என முடிதலுங் கரவகரங்கள் வந்துழியும் ஈறுகெட்டு ஈற்றுமிசை அகரம் நீண்டு கோணுகோணம் கோணுவட்டம் என முடிதலும், வருமொழி வல்லெழுத்து மிகாமையும், மேலைச் சூத்தி ரத்துப் பிற என்ற மிகையானே முடித்துக் கொள்க. இவற்றிற்கு உள்ளென்னும் பொருள்பட வந்த கண்ணெனுருபு விரிக்க. நுஞ் ஞாண் தஞ்ஞாண் எஞ்ஞாண் நஞ்ஞாண் நூல் என நும் தம் எம் நம் என்பனவற்றிற்கு வருமொழி ஞகாரங்களாய்த் திரிதலைப் "பொதுப் பெயருயர்திணைப் பெயர்களீற்றுமெய்" என்னுஞ் சூத்திரத்து முறையலகூற்றுனே முடித்துக்கொள்க. (கச)

ககக. யரழ முன்னர்க் கசதப வல்வழி
யியல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டிறைத்தலும் விதிமேல்.

இது யகர ரகர ழகர ஈறுகள் வல்கணத்தோடு புணருமாறு கூறுகின்றது. 5

இ - ள். யகர ரகர ழகர ஈற்றுச் சொற்கள்முன் வருமொழி முதற்கணின்ற கசதபக்கள் அல்வழிக்கண் இயல்பாயும் மிக்கும் முடிதலும் வேற்றுமைக்கண் மேல்வந்த வல்லெழுத்து மிக்குந் தன் இனமெல்லெழுத்தோடு உறழ்ந்தும் முடிதலும விதியாம். எ - று.

வரலாறு;—நாய் நீர் யாழ் குறிது சிறிது நீது பெரிது என வும், மெய்க்கடவுள் பொய்ச்சொல் மெய்த்தெய்வம் எய்ப்பன்றி பார்க்கன்னி தார்ச்சேனை சூர்த்தெய்வம் கார்ப்பருவம் தாழ்க் கோல் கூழ்ச்சோறு வீழ்த்துணம் பூழ்ப்புள் எனவும் அல்வழிக் கண் முறையே இயல்பாயும் மிக்கும் முடிந்தன. நகர்க்குட்டி புகர்ப்போத்து என்றாற்போல்வன பண்புத்தொகை கருதின் அவை யுங் கொள்க. நாய்க்கால் செவி தலை புறம் தேர்க்கால் செலவு தலை புறம் பூழ்ககால் சிறகு தலை புறம் எனவும், வேய்க்குறை வேய்ங் குறை வேர்க்குறை வேர்ங்குறை வீழ்கருறை வீழ்ங்குறை செய்கை தலை புறம் எனவும் வேற்றுமைக்கண் முறையே மிக்கும் உறழ்ந்தும் முடிந்தன. பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு சேரி தோட்டம் பாடி இது வும் அது. பாழினுட்கிணறு என விரியும். மேலென்ற மிகையானே "வாய்புகுவ தனிலுங்கால்பெரிதுகடுக்கும்" "தூங்குதோற்றியவள் ஞுகிர்தாவின்" என வேற்றுமைக்கண் இயல்பாதலும் வேய்கடிது வேய்க்கடிது வேர்குறிது வேர்க்குறிது வீழ்குறிது வீழ்க்குறிது சிறிது நீது பெரிது என அல்வழிக்கண் உறழ்தலும் ஆர்கோடு வெதிர்கோடு சார்கோடு பீர்கொடி செதிள் தோல் பூ என வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிகுதலும் "ஆரங்கண்ணியு போர்ச்சோழர்" என ஆர் அம்முப்பெறுதலும் "மாரிப்பீரத்தலர் ஞலகொண்டு" எனவும் பீரங்கொடி எனவும் பீர் அத்துப் பெ தலும் அம்முப் பெறுதலுந் தவரங்கோடு எனத் தவர் அம்முப் றுதலுஞ் சார்க்காழ் எனச் சார் காழொடு புணர்வழி வல்லெ மிகுதலுங் குமிழ்ங்கோடு குமிழங்கோடு மகிழ்ங்கோடு பெற்றமுழ் என முவ்வீற்று மரப்பெயர் மெல்லெழுத்தும் அப்பெறுதலும் இன் தலுந் தாழப்பாவை என அல்வழிக்கண் அகர,'

ஞரென்ன பிறவுங் கொள்க. இன்னும் அதனானே யகர ரகர யகரத்தின் முன்னர் வேயாது வேயாப்பு என இருவழியுங் கெடுத லுங் கொள்க. (கடு)

கஙுச. தமிழவ் வுறவும் பெறுமவேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். தமிழ் என்னுஞ் சொல் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலேயன்றி அகரமும் பெற்று முடியும்; தாழ் என்னுஞ் சொல்லுங் கோல் என்னுஞ் சொல் வந்து புணரிற் தமிழ் என்னுஞ் சொல்போல வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலேயன்றி அகரமும் பெற்று முடியும். எ - று.

உ-ம். தமிழக்கூத்து சேரி தோட்டம் பள்ளி நாடி வரை அரசு எனவும், தாழக்கோல் எனவும் முறையே காண்க. உம்மையாற் தமிழ்க்கூத்து தாழ்க்கோல் என அகரம்பெறுதலுவலெழுத்து மிகுதலே வலியுடைத்து. இவை தமிழையுடைய கூத்து தாழைத்தி றக்குங்கோல் என விரியும். (கசு)

கஙுடி. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். கீழ் என்னுஞ் சொல்முன்னர் வல்லெழுத்து ஒருகால் மிக்கும் ஒருகால் மிகாதும் உறழ்ந்து முடியும். எ - று.

அதிகாரத்தான் இம்முடிபு வேற்றுமைக்கண்ணதெனக் கொள்க.

உ-ம். கீழ்க்குளம் கீழ்குளம் சேரி தோட்டம் பாடி எனவரும்.

கஙுசு. ஏழென் கிளவி யாறிய னிலையு
முகரம் வருத லாவயி னான.

இஃது ஏழ் என்னும் எண்ணுப்பெயர் எண்முதலிய நான்கு ரோடு ணகரமாறு கூறுகின்றது.

இ - ள். ஏழ் என்னுஞ் எண்ணுப்பெயர் எண்முதலியவற் றோடு புணர்வுழி ஆறு என்னும் எண்ணுப்பெயர்போல ஏற்புழி

நெடிமுதல் குறுகும் இயல்பின்கண் நிலைபெற்றுமுடியும். அவ்வழி ஏற்புழி உகரம் வந்து புணர்தலுமாம். எ - று.

வரலாறு;—எழுமூன்று கழஞ்சு கலம் கடல் என நெடிமுதல் குறுகி உகரம்பெற்றும் எழாயிரம் ஏழாயிரம் என உகரம்பெறாது நெடிமுதல் குறுகியுங் குறுகாதும் ஏழொன்று ஏழ்தாமரை ஏழ்நூறு யிரம் ஏழ்வெள்ளம் ஏழாம்பல் ஏழ்கல் என இயல்பாயுந் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க. (கஅ)

கஙஎ. ளளவேற் றுமையிற் றடவு மல்வழி
யவற்றே றிறழவும் வலிவரி னுமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பு
மாகு மிருவழி யானு மெனப.

இது லகார ளகார ஈறுகள் இருவழியும் முக்கணத்தோடும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். லகார ளகார ஈறுகள் வன்கணம் வரின் வேற்று மைக்கண் முறையே றகார டகாரங்களாய்த் திரிதலும் அவ்வழிக் கட் தந்திரிபு வல்லெழுத்தினேறி உறழ்தலும் பொருந்தும்; மெல் லெழுத்து வந்து புணரின் முறையே னகார ணகாரங்களாய்த் திரிதலும் இடையெழுத்து வரின் இயல்பாதலும் பொருந்தும் இருவழிக் கண்ணும் என்று கூறுவர் ஆசிரியர். எ - று.

உ-ம். கற்குறை முட்குறை சிறை தலை புறம் எனவும், கல்குதிது கற்குரிது முள்கடிது முட்கடிது சிறிது தீது பெரிது எனவும, கன்ஞெரி முண்ஞெரி தினை முரி எனவும், கன்ஞெரிந்தது முன்ஞெரிந்தது ரீண்டது மாண்டது எனவும், கல்யாப்பு முள்யாப்பு வலிமை எனவும், கல்யாது முள்யாது வலிது எனவும் முறையே காண்க. ஏற்புழிக் கோடலான் கற்றீது முட்டீது எனக் குறியதன் இறுதியும் பெயர்ச்சொற் தொகுமாறு "பேசுவெஞ்சொற்றீதென றேவிடு" புழுங்கற்றோரை எனத் தொடர்மொழி இறுதியும் அவ்வழிக்கண்ணுந் தகரம் வருவழி உறழாது திரிதலே கொள்க; லகார ளகாரங்களோடு தகரம் மயங்குதல் ஏலாமையின். (கங)

கஙஅ. குறில்வழி ளளத்தவ் வணையி னுய்த
மாகவும் பெறூஉ மல்வழி யானே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். குற்றெழுத்தின்பின் நின்ற லகார ளகர்ரங்கள் தகர முதன்மொழி வந்து புணரின் றகர டகரங்களாய்த் திரிதலேயன்றி ஆய்தமாய்த் திரியவும் பெறும் அல்வழிக்கண். எ - று.

உ-ம். கற்றீது கஃறீது முட்டீது முஃடீது எனவரும். (உ0)

கஙக. குறில்செறி யாலள வல்வழி வருத
தகரந திரிதபிற் கேடுமீ ரிடத்தும்
வருதத் திரிந்தபின மாயவும் வலிவரி
னியல்புந் திரிவு மாவன வுளபிற.

இ-ள். எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். குற்றெழுத்தினைச் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த லகார ளகாரங்கள் அல்வழிக்கண் வருமொழித் தகரந் திரிந்தபின்னர்க் கெடிதலும் இருவழியும் வருமொழி நகரந் திரிந்தபின்னர்க் கெடிதலும் வல்லெழுத்து வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலுந் திரிதலும் வேற்றுமைக்கட் திரியாது இயல்பாதலும் பொருந்துவனவுள. எ - று.

உ-ம். வேறீது விரறீது ஆரறீது கருங்கொறீது எனவும், வாடீது தேடீது பொருடீது நெஞ்சுடீது எனவும்,வேனன்று குரனன்று சூழனன்று செங்கனன்று பைம்புனனன்று எனவும், வாணன்று ஈணன்று பொருணன்று நெஞ்சுணன்று எனவும், நன்மை எனவும், பால்கடிது தோள்கடிது கிறிது தீது பெரிது எனவும், புழுங்கற்கறி சோறு பயறு அழுங்கற்காய் சோறு போர் சமுங்கற்கூரை ஆரற்சுவர் புழற்காலாம்பல் புலிவிற்கெண்டை வந்தாற்கொள்ளும் வந்தக்காற்கொள்ளும் செல்லும் போம் எனவும், "எனல்காவலிவளுமல்லள்" "ஏனல்காவலாயினளெனவே" "அணில்வரிக்கொடுங்காய்—வாள்போழ்ந்தட்டகழன்மறவர்" "செல்வுழிச்செல்கெனவாள்போழ்ந்தடக்கலுமுய்ந்தனர்மாதோ" எனவும் முறையே காண்க. ளகர ஈறு அல்வழிக்கண் உறழாது திரிந்துமுடிதல் வந்துழிக் காண்க. பிறவென்ற பிகையானே கல்குறுமை கற்குறுமை முள்குறுமை முட்குறுமை கொள்கடுமை கொட்கடுமை வாள்கடுமை வாட்கடுமை எனக் குணவேற்றுமைக்கண் உறழ்தலும், வேறீது வேற்றீது வாடீது வாட்டீது என கெடியதனிறுதி அல்வழிக்கட் கெட்டுந் திரிந்தும் உறழ்தலும், விழன்காடு சேறு தாள் புறம் என லகார ஈறு வேற்றுமைக்கண் றகாரமாகாது னகாரமாய்த் திரிதலும், நூற்கடல் நூல்சில என அல்வழிக்கண் உறழாது ஒரிடத்துத் திரிதலும்

ஓரிடத்துத் திரியாமையும், முன்னுனிவாழ்வு முன்னுனியரசு ஒருநா ஊக்குழவி ஒருதிங்களூக்குழவி என ளகார ரகர றகர ஐகாரம் பெறுதலும், பூலங்கோடு உதளங்கோடு எனவும் வெயிலத்துக்கொண்டான் வெயிலிற்கொண்டான் இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் எனவும் முறையே வேற்றுமைக்கட் திரியாது அம்முப்பெறுதலும் அத்துப்பெறுதலும் இன்பெறுதலும், இன்னோரன்ன பிறவுங் கொள்க. மக்கட்கை செவி தலை புறம் எனப் பெரும்பான்மை மக்கள் உடம்பு உயிர்நீங்கிக் கிடந்த காலத்தும் மக்கட்பண்பு எனச் சிறுபான்மை அங்ஙனமல்லாத காலத்துந் திரிதல் "சிலவிகாரமா மூயர்தினே" என்பதனுன் முடியும். (உக)

கசo. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லு மலலது கிளப்பினும் வேற்றுமை யியல.

இதுவுமது.

இ - ள். நெல் செல் கொல் சொல் என்னும் இந்நான்குசொல்லும் அல்வழியைச் சொல்லுமிடத்துந் தாம் வேற்றுமை முடிபின் இயல்பினவாய் லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும். எ - று.

உம்மை சிறப்பு.

உ-ம். நெற்காய்த்தது செற்கடிது கொற்கடிது சொற்கடிது சிறிது தீது பெரிது எனவரும். (உஉ)

கசக. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும் பலகைநாய் வரினும வேற்றுமைக கவவுமாம்.

இதுவுமது.

இ - ள். வல் என்னுஞ் சொல் இருவழியுந் தொழிற்பெயர் இயல்பிற்றாய் உகரம் பெற்று முடியும். பலகை என்னுஞ் சொல்லும் நாய் என்னுஞ் சொல்லும் வருமொழியாய் வரினும் உம்மையாற் பிறசொற்கள் வரினும் வேற்றுமைக்கண் அகரமும் பெற்று முடியும். உம்மையான் உகரமும் பெற்று முடியும். எ - று.

உ-ம். வல்லுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும், வல்லப்பலகை வல்லநாய் எனவும், வல்லக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும், வல்லுப்பலகை வல்லுநாய் எனவும் முறையே காண்க. (உங)

கசஉ. இலலெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும.

இது லகார ஈற்றுள் ஒன்றற்கு எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் துதலிற்று.

இ - ள். இல் என்று சொல்லப்படும் ஒருபொருளினது இல் லாமையை உணர்த்தி நிற்கும் லகர ஈற்று வினைக்குறிப்புமுற்றுச் சொற்கு ஐகாரம் இறுதிவர வல்லொற்று ஒருகால் மிக்கும் ஒருகால் மிகாதும் உறழ்ந்து முடிதலும் ஆகாரம் இறுதிவர அதனோடு வல் லொற்று மிக்குமுடிதலும் அவவிருதிறனுமின்றி இயல்பாய் முடித லும் பொருந்தும். எ - று.

உறையுளை உணர்த்தி நிற்கும் இல் என்னும் லகர ஈற்று இடப் பெயரின் நீக்குதற்கு 'இல்லென்சொல்' என்றெழியாது 'இல்லெ னின்மைச்சொல்' என்றும் ஒருபொருளினது இல்லாமையை உணர்த்தி நிற்கும் இல்லை என்னும் ஐகார ஈற்று வினைக்குறிப்புமுற் றுச்சொல்வின் நீக்குதற்கு 'இன்மைச்சொல்' என்றெழியாது 'இல்லெனின்மைச்சொல்' என்றுங் கூறினர்.

வரலாறு;—இல்லைக்கல் இல்லைகல் இல்லாக்கல் இல்கல் சுணை துடி பறை என முறையேகாண்க. விதியுயிரீறும் ஐகார ஈற்றுமுன் உறழ்ந்தும் ஆகார ஈற்றுமுன் மிக்கும் முடியுமேனும் நீலமொழிச் செய்தி கூறுவார் விளங்குதற் பொருட்டு வருமொழிச் செய்தியும் உடன்கூறினர். இயல்புயிரீறும் விதியுயிரீறும் எழுத்தொப்புமை யான் ஒன்றுபோலத் தோன்றி ஒருமுடிபு எய்திற்றேனும், ஓசை வேறுபாட்டான் வேறுபட நிற்பதொன்றுகலின் இல்லைக்கல் இல்லை கல் இல்லாக்கல் எனவரும். இயல்புயிரீற்று முடிபும் இவ்வாறு வரும் விதியுயிரீற்று முடிபும் ஓசைவேறுபாட்டான் வேறுபடுமாறு இயல் புயிரீற்று முடிபிற்கு ஒலி ஊன்றுது ஒருதிரண்மையாக ஓசை ஒற்று மைப்படச் சொல்லுதலும் விதியுயிரீற்று முடிபிற்கு ஒலி ஊன்றி ஓசை இடையறவு படச் சொல்லுதலும் என்று உணர்க. இன்னும் இல்கல் என்னும் முற்றுச்சொன்முடிவும் அவ்வாறு வரும் பண்புத் தொகை முடிவும் இவ்வாறே வேறுபடுத்து உணர்க.இங்ஙனம் முடித் தல் ஆசிரியர் தொல்காப்பியனுருக்குங் கருத்தென்பது "இல்லென் கிளவி" என்னுஞ் சூத்திரத்து உரையாசிரியர் உரையான் உணர்க. இனி இல் என்பதன் முடிபாக இங்ஙனம் புணர்த்த சொல்லே

யன்றி இல்லை என ஐகார ஈறாய் நிற்பதோர்சொல் இன்னெனவும் இல்குணம் இல்லாக்கொற்றன் என்றாற்போலும் இல் என்பதன் முடிபாகிய இவற்றை இல் என்னும் வினைக்குறிப்பு முதனிலை அடியாகத் தோன்றிய பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றன என்றும் உரைகூறுவாரும் உளர். அவர்க்கு அது கருத்தன்மை "முன்னிலை வியங்கோள்" என்னுஞ் சூத்திரத்துள் யானில்லை யானு நீயுமில்லை என்றாற்போல வருமொழியோடு புணராமல் அவர் சொல்லோத்தினுட் காட்டிய உதாரணங்களே இல் என்பதன் முடிபன்றி இல்லை என இயல்பாகவே நிற்கும் ஐகார ஈற்றுச் சொல்லும் ஒன்று உளது என்பதற்குச் சான்றாகலானும், இன்மை செப்பல் என்பதற்கு இல்லை என்னாது இன்மை செப்பல் என்பதனால் இல்லை என்பதும் இல் என்பதும் என இரண்டாயிற்றென்று உரையாசிரியர் சேனாவரையரை உள்ளிட்ட தொல்லாசிரியரெல்லாம் உரைகூறிய வாற்றானும், "அழுக்கற் றகன்றாற் றில்லையஃ தில்லார்—பெருக்கத் திற் றீர்ந்தாரு மில்" என்றாற்போலச் சான்றோர் செய்யுட்கண் அவ்விருசொல்லும் பயின்று வருதலானும், பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றதேல் அவற்றிற்கு இம்முடிபு ஈண்டுக்கூறல் வேண்டாமையானும் அறிக. அன்றியும் அன்மைமுதலிய வற்றையும் இவ்வாறு புணர்க்கவேண்டுதலானும் அவர்க்கு அது கருத்தன்றென உணர்க.()

கசஉ. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். புள் என்னும் பெயர்ச்சொல்லும் வள் என்னும் பெயர்ச்சொல்லும இருவழிக்கண்ணும் ளகர ஈற்றுத் தொழிற்பெயரைப்போல, வன்கணமும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வர, உகரம் பெற்றும் முடியும். எ - று.

வரலாறு;—புள்ளுக்கடிது வள்ளுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது ணீண்டது மாண்டது வலிது எனவும், கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். புள்கடிது புட்கடிது வள்கடிது வட்கடிது எனவும், புட்கடுமை வட்கடுமை எனவும், புண்ஞான்றது வண்ஞான்றது எனவும், புண் ஞாற்சி வண்ஞாற்சி எனவும் உம்மையாற் பொதுவிதிபெறுதலுங் கொள்க. (உரு)

கசச. சுட்டு வகரமூ வினமுற முறையே
யாய்தமு மென்மையு மியல்புமா மல்வழி.

இது வகர ஈறு அல்வழிக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றுப்பெயர்மூன்றும் மூவினமும் வருது புணர முறையானே ஈற்றுவகரமு ஆய்தமும் வந்த மெல்லெழுத்தும இயல்புமாம் அல்வழிக்கண்.எ-று.

உ-ம். அஃகடிய இஃகடிய உஃகடிய சிறிய நீய பெரிய எனவும், அஞ்ஞாண் இஞ்ஞாண் உஞ்ஞாண நூல் பணி எனவும், அவயாழ் இவயாழ் உவயாழ் வட்டு எனவும முறையேகாண்க. இவவழக்கு இக்காலத்து அரிய. (உசு)

கசஞ. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும.

இது வகர ஈற்று உரிச்சொலொனறு இருவழியும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள். தெவ்வென்னுஞ் சொல்லீற்று வகரந் தொழிற்பெயரின் இயல்பிற்றுப் வன்கணமும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வர இருவழியும் உகரம்பெற்று முடியும்; மென்கணத்து மகரம் வரின் ஈற்று வகரம் மகரமுமாம். எ - று.

உ-ம். தெவவுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும், தெம்மாண்டது தெம்மாட்சி எனவும் முறையே காண்க. உம்மையான் உகரப்பேறே வலியுடைத்து. உரையிற்கோடலாற் தெம்முனை தெம்மன்னர் என் புழி மகரவொற்றுயே நிற்றல்கொள்க. (உஎ)

கசட. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

இஃது இன்னுமொருவாற்றுன் உயிரும் ஒற்றுமாகிய இருநிறத்து ஈற்று வேற்றுமைப்பொருட்புணர்ச்சியை உருபுபுணர்ச்சியோடு மாட்டெறிந்து உணர்த்துகினறது.

இ - ள். மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியும் முடிபெல்லாம் ஈண்டு அவவுருபின பொருளாகிய வேற்றுமைப்புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும. எ - று.

மேல் உருபுபுணர்ச்சிக்கண் "எல்லா வீற்றுஞ் சொல்லுங்காலை—வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை" என்றுர் ஈண்டும் அவவாறே விளவின்கோடு முஞகாவின்கால் கிளியின்கால் நீயின்க

மை எருவின்குறுமை கொண்மூவின்குழாம் சேவின்கால் தினை யின்கதிர் சோவின்புறம் கௌவின்கடுமை எனவும், உரிஞ்சின்குறை வெண்ணின்கரை பொருநின்குறை திருமின்குறை பொன்னின்குடம் வேயின்புறம் வேரின்புறம் கல்லின்கடுமை தெவ்வின்கடுமை யாழின்கோடு முள்ளின்கூர்மை எனவும், நாகின்கால் வரகின்கதிர் எனவும் இன்சாரியை பெற்றும்; உருபுபுணர்ச்சிக்கண் "பல்லவை தூதலிய வகர வீறுபெய—ரற்றொடு சிவண லெச்ச மின்றே,, என் றோர் ஈண்டும் அவ்வாறே கரியவற்றுக்கோடு உள்ளவற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு பல்லவற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு உளவற்றுக்கோடு இலவற்றுக்கோடு பலவற்றுக்கோடு சிலவற்றுக்கோடு என அற்றுப்பெற்றுப்; இன்சாரியையன்றி ஆ மா கோ வூ என்பன னகரமும் பெற்று முடியுமென்றோர் ஈண்டும் அவ்வாறே ஆன்கோடு மான்கோடு கோன்குணம் வூன்குறை சுவை என னகரம்பெற்றும்; "எல்லாமென்ப திழிதினை யாயி—னற்றோ டிருபின் மேலும் முறு மே—யன்றே னம்மிடை யடைத்தற் றோரும்" என்றோர் ஈண்டும் அவ்வாறே எல்லாவற்றுக்கோடும் எல்லாநங்கையும் என எல்லா மென்னும் விரவுப்பெயர் அஃறிணையானகாலை இடையே அற்றுச் சாரியையும் பொருளின்பின்னே உம்மும் உயர்திணையானகாலை இடையே நம்முச்சாரியையும் பொருளின்பின்னே உம்மும் பெற் றும்; "எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை— தள்ளி நிரலே தம் தும் சாரப்—புல்லு முருபின் பின்ன ரும்மே" என்றோர் ஈண்டும் அவ்வாறே எல்லார்தங்கையும் எல்லீர்தங்கையும் என எல்லாரு மென்னும் படர்க்கைப்பெயரின் உம்மும் எல்லீருமென்னும் முன்னிலைப்பெயரின் உம்முங் கெட்டு முறையே தம்முச்சாரியையும் தும் முச்சாரியையும் இடையேவரப் பொருளின்பின்னே உம்முச்சாரியை பெற்றும்; "தானரு நாமுதல் குறுகும் யான்யா—நீநீ ரென்னெம் நின்னும் மாப்பிற" என்றோர் ஈண்டும் அவ்வாறே தன்கை தங்கை நங்கை என்கை எங்கை நின்கை துங்கை எனத் தன் தம் நம் என் எம் நின் நும் எனவும், உரையிற்கோடலால் உன்கை உங்கை எனவும்; "வவ்வீறு சுட்டிற் கற்றுறல் வழியே" என்றோர் ஈண்டும் அவ்வாறே அவற்றுக்கோடு இவற்றுக்கோடு உவற்றுக்கோடு என அற்றுப்பெற்றுங் குற்றொற்றிரட்டாதுப்; "யாத னீறுதியுஞ் சுட்டு முத லாகிய—வாய்த வீறுதியு மன்னொடு சிவணு—மாய்தந் கெடுத லாவயி னுன" என்றோர் ஈண்டும் அவ்வாறே யாதன்கோடு அதன் கோடு இதன்கோடு உதன்கோடு என முறையே அன்பெற்றும் ஆய் தங்கெட்டும்; யாவென்னும் ஆகார ஈற்று வினுப்பெயர் அற்றுப்பெறு மென்றோர் ஈண்டும் அவ்வாறே யாவற்றுக்கோடு என அற்றுப்பெற்

றும்; அது இது உது என்னும் முற்றுகர சாற்றுச் சுட்டுப்பெயர்கள் அன்பெறுமென்றுர் ஈண்டும் அவவாறே அதன்கோடி இதன்கோடி உதன்கோடி என அன்பெற்றும்; அவை இவை உவை என்னும் ஐகார சாற்றுச் சுட்டுப்பெயர்கள் அற்றுப்பெற்று ஐகாரங் கெட்டுங் கெடாதும் வருமென்றுர் ஈண்டும் அவவாறே அவையற்றுக்கோடி அவற்றுக்கோடி இவையற்றுக்கோடி இவற்றுகோடி உவையற்றுக் கோடி உவற்றுக்கோடி எனவும்; யாவையென்னும் ஐகார சாற்று வினுப்பெயர் ஐகாரங்கெட்டு அற்றுப்பெறுமென்றுர் ஈண்டும் அவ வாறே யாவற்றுக்கோடி எனவும்; கரியவை நெடியவை என்றற்றொ டக்கத்து ஐகார சாற்றுப் பண்புகொள்பெயர்களும் அம்முடிபு எய்து மென்றுர் ஈண்டும் அவவாறே கரியவற்றுக்கோடி நெடியவற்றுக் கோடி எனவும்; கரியேமென்னும் மகர சாற்றுத் தன்மைப்பெயர் நம் மும் உம்மும் பெறுமென்றுர் ஈண்டும் அவவாறே கரியேநங்கையும் எனவும்; கரியா கரியீரென்னும் ரகார சாற்றுப்படர்க்கைப்பெயரும் மூன்னிலைப்பெயரும் முறையே தம்மும் உம்மும் நும்மும் உம்மும் பெறுமென்றுர் ஈண்டும் அவவாறே கரியார்தங்கையும் கரியீர்நுங் கையும் எனவும்; எல்லாருமென்னும் படர்க்கைப்பெயர் "எல் லார்க்குமெல்லாநிகழ்பவை" எனத் தம்முப்பெறுதும் வருமென்றுர் ஈண்டும் அவவாறே எல்லார்கையும் எனவும்; எவனென்னும் னகர சாற்று வினுப்பெயர அன்கெட்டு அற்றுப்பெற்றும் அன்னெடு அற் றின் அகரமுங்கெட்டும் முடியுமென்றுர் ஈண்டும் அவவாறே எவற் றுக்கோடி எற்றுகோடி எனவும்; ஈகினென்னும் னகர சாறு இன் னேயன்றி அதனுடனே எழென்னும் முகர சாறுங் குற்றுகர சாறும் அன் னும்பெறுமென்றுர் ஈண்டும் அவவாறே எனைதுக்கால் ஏழன்கா யம் கரியதன்கோடி எனவும் முடியும். இன்னேரனன பிறவும் இவ வாறே முடித்துக்கொள்க. (உ-அ)

கஉஎ. இடையரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மருஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்ப்பது யாவர்க்கு நெறியே.

இது புணரியல் ஒத்துக்களுட் கூறிய முடிபு எய்தாதனவற்றிற் கும் முடிபு கூறுதனவற்றிற்கும் ஒருவாற்றுன் முடிபுகூறுகின்றது.

இ - ள். இடைச்சொல்லினும் உரிச்சொல்லினும் வடசொல் லினும் மேலைப் புணரியல் ஒத்துக்களுட் கூறிய முடிபு பெறுதன வும் போலிமொழிகளும மருஉமொழிகளும் இருவகைவழக்கினும் நடக்கும் முறைமையறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்த்தல் கற்றுவல்லோரெல்லார்க்கும் முறைமையாம். எ - று.

வரலாறு:—"மடவ மன்ற தடவுநிலைக் கிளவி" எனவும் அகர ஈற்று இடைச்சொல் வல்லெழுத்துக்கு இயல்பாயும், ஆன்கண்வா மான்கன்று டன்குறை வண்டின்கால் தோன்செலவு யாழின்பயம் எனவும் அர ஈற்று இடைச்சொற்கள் தி, பாது இயல்பாயும், கமஞ் சூல் தடஞ்செவி நடந்தோள் எனவும் அர ஈற்று உரிச்சொல் மெல் லெழுத்துமிகும், மழகளிறு உறுகால் எனவும் இயல்பாயும், அளிகூடம் மயிர்கடகம் புனைதடம் எனவும் மடமொழிகள் இயல்பாயும் முடிந்தன. இனமுன் முன்றில், படைமுன் முன்படை, கண்ண மீகண், பொது வில் பொதியில், கேட்கைகா கேணீர், கேட்கையசா கேணைசா என்றாற்போலும் போலியொழிகளும் அருமருந்தன்னன் அருமந் தான, கிழங்கன்னபழஞ்சோறு கிழங்கிப்பழஞ்சோறு, குணக்குள் ளது குணுது தெற்குள்ளது தெணுது குடக்குள்ளது குடாது வடக் குள்ளது வடாது சோழநாடு சோணாடு பாண்டியநாடு பாண்டிநாடு மலையமானாடு மலாடு தஞ்சாவூர் தஞ்சை பனைநூர் பனசை சேந்த மங்கலம் சேந்தை ஆற்றூர் ஆறை கப்பிதிங்தை கப்பிந்தை சென்னி தந்தை சென்னிந்தை சாத்தன்றந்தை சாத்தந்தை ஆதன்றந்தை ஆந்தை பூதன்றந்தை பூந்தை அவ்வியார் அவ்வியார் அதுபோது அது யாவது என்றாற்போலும் மரூஉமொழிகளுங் கண் விண்ணவிணை த்து விணவிணைத்தது ஆடை வெள்ளவிளர்த்தது வெளவிளர்த்தது கடல் ஒல்லவொலித்தது ஒல்லொலித்தது என முறையே "உயிரும் புள்ளியும் இறுதியாகிக்—குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி—நெறிப்படவாராக் குறைச்சொற்கிளவியும்" கரும்பாப் பான் கரும்பார்ப்படினி கருப்பார்ப்பார் கருங்குதிரை கருங்குதிரை கள் என "உயர்திணை யஃறிணை யாயிரு பருஉகி—னேப்பா லறியும் பண்புதொகு மொழியும்" அடுகளிறு கொல்யானை எனச் "செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்—மெய்பொருங் கியலுந் தொழி றொகு மொழியும்" அவனனைத்து அன்றியஃறு எனவும் இவவ னந்தல் இந்தவனந்தல் எனவும் இன்னோரன்ன பிறவுமான பருஉ மொழிகளுந் தமக்கேற்றபெற்றிமுடிந்தன. பிறவும் இவணமே மே லோப்புணரியல் ஒத்துக்களுட் கூறிய முடிபெய்தாதனவற்றிற்கும் முடி புகூறுதனவற்றிற்கும் இயைந்தவாறு இதுவே ஒத்தாக முடித்துக் கொள்க. காரா பேரா பாசிழை பாசடை பைங்கண் பைந்தார் சேதா என்றாற்போலும் பண்புத்தொகை முடிபு வேறுபாடுகளும் மேற்கூறி யனபோல உலகத்து முருவி கடந்த வழக்கினது பகுதியைத் தமக்கு இலக்கணமாக உடையனவேயாமென்று உணர்க. (கூ) 35

நான்காவது மெய்யீற்றுப்புணரியல் முற்றிற்று.

நி-வது உருபுபுணரியல்.

கசஅ. உருபினும் பொருண்முடி பொக்குமன் பயின்றே.

என்பது சூத்திரம். பதங்களோடு உருபு புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உருபுபுணரியலென்னும் பெயர்த்து. மேற்பதத்தோடு பதம்புணருமாறு உணர்த்தி ரண்டு அதனோடு உருபு புணருமாறு உணர்த்தலின் மேலோத்தினோடு இயைபுடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச்சூத்திரம் உருபுபுணரும் முறைமை மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

இ-ள். உயிரும் ஒற்றும் முதலாகிய வேற்றுமையுருபுகள் மேற்கூறியவாற்றுன் உயர்திணைப்பெயர்முதலிய எல்லாப்பெயர்க்கும் பின்னுக வந்து புணரும் புணர்ச்சிக்கண்ணும் முற்கூறிப்போந்த வேற்றுமைப்பொருட் புணர்ச்சிமுடிபினை ஒத்துப் பெரும்பானும் முடியும். எ-று.

வராறு;—நம்பியை நம்பியொடு நம்பியின் நம்பியது எனவும், கிளியை கிளியொடு கிளியின் கிளியது எனவும், சாத்தியை சாத்தியொடு சாத்தியின் சாத்தியது எனவும், நம்பிக்கு நம்பிகண் எனவும், கிளிக்கு கிளிகண் எனவும், சாத்திக்கு சாத்திகண் எனவும், உயிரீற்றுப்பெயர்களோடு உயிர்முதலுருபுகளும் ஒற்றுமுதலுருபுகளும் வந்து மேலை வேற்றுமைப்பொருட்புணர்ச்சியை ஒத்து உடம்படுமெய்பெற்றும் உயிரேறியும் வல்லெழுத்துமிக்கும் இயல்பாயும் முடிந்தவாறுகாண்க. உயர்திணைப்பெயர்முன்னும் விரவுப்பெயர்முன்னும் பிறுதி முறையே "திலவிகாரமாமுயர்திணை" என்றதனுனும் பொதுப்பெயருயர்திணைப்பெயர்களென்ற முறையலகூற்றுனுங்கொள்க. அவனை அவனொடு அவனின் அவனது எனவும், பொன்னை பொன்னொடு பொன்னின் பொன்னது எனவும், சாத்தனை சாத்தனொடு சாத்தனின் சாத்தனது எனவும், அவற்கு அவன்கண் எனவும், பொற்கு பொன்கண் எனவும், சாத்தற்கு சாத்தன்கண் எனவும், ஒற்றீற்றுப்பெயர்களோடு உயிர்முதலுருபுகளும் ஒற்றுமுதலுருபுகளும் வந்து மேலை வேற்றுமைப்பொருட்புணர்ச்சியினை ஒத்து உயிரேறியுங் தனிக்குறின்முன்னொற்றிரட்டித்துங் திரிந்தும் இயல்பாயும் முடிந்தவாறுகாண்க. உயர்திணைப்பெயர்முன்னும் விரவுப்பெயர்முன்னும் னகரந்திரிதற்கு முன்னுரைத்தாங்கு உரைக்க. பிறவும் இவ்வாறே உய்த்துணர்க. பொருட்புணர்ச்சிக்கட். புளியங்கோடு அரையங்கோடு என்றாற்போல உருபுப்புணர்ச்சிக் கண்ணும் அம்முப்பெறுவன பெறுது புளிக்கு புளிக்கண் அரைக்கு

அரைக்கண் என முடிவன பெரும்பாலும் ஒக்குமெனவே சிறு பான்மை ஓவஹாதனவும் உளவென முடித்துக்கொள்க. இங்ஙனம் புணர்ந்த வேற்றுமையுருபுகளே நிலைமொழியாக நிறுத்தி ஈண்டே வருமொழிகளோடு புணர்ப்பாருமுளர், விளவினை விளவினது என் புழிச் சாரியையும் உருபும் நிறுத்தசொல்லாயே நிற்குமெனக் கோடலின். விளவினைக் குறைத்தான் மலையொடுபொருதமால்யானை மத்திகையாற்புடைத்தான் சாத்தற்குக்கொடுத்தான் காக்கையிற்கரிது களம்பழம் காக்கையதுபலி இத்தொடக்கத்தனவெல்லாம் மேலேப்புணரியலோத்துக்களுள்ளே நிலைமொழியாக நிறுத்தி வருமொழியோடு புணர்க்கப்பட்டு இவ்வாறு முடியுமன்றே? அங்ஙனம் முடிவனவற்றை நிலைமொழியாக நிறுத்தி ஈண்டு வருமொழியோடு புணர்த்தல் கூறியது கூறலாமெனமறுக்க. (க)

கசசு. எல்லா லீற்றுஞ் சொல்லுங் காலை.
வேற்றுமை யுநபிற் கின்னே சாரியை.

இனி மாட்டேற்றலன்றி விடற்தோதுவான்புகுந்தவற்றுள் ஐது பொதுவகையான் வேற்றுமையுருபுகட்கு வருஞ் சாரியை ஐதுவென்கின்றது.

இ - ள். உயிரும் ஒற்றுமாகிய எல்லா ஈற்றுப்பெயர்களின் முன்னும் வேற்றுமையுருபுகட்கு இடையே வருஞ் சாரியை இன் சாரியையாஞ் சொல்லுங்காலத்து. எ - று.

வரலாறு;—விள பலா கிளி நீ கடு பூ சே இவை சோ வௌ எனவும், உரிஞ் மண் பொருந் திரும் பொன் வேய் நார் கல் தெவ யாழ் முள் எனவும், நாகு வரகு எனவும் நிறுத்தி இன்னுருபு ஒழித்து ஏனையைந்துருபும் வருவித்து இன்சாரியை கொடுத்து விளவினை விளவிஞெடு என்றாற்போலப் பிறவற்றோடும் ஒட்டிக் காண்க. பிறவும் அன்ன. (உ)

கஙo. பல்லவை நூறலிய வகர விறுபெய
றறலொடு சிவணை லெசச மினறே

இஃது அகர ஈற்றுள் ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். பன்மைப்பொருளினைக் கருதின பெயர்களின் இறுதிநின்ற அகரம் அற்றுச்சாரியையோடு பொருந்துதலே ஒழிதலில்லை. எ - று.

வரலாறு; கரிய உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில என நிறுத்தி உருபுவருவித்து அற்றுக்கொடுத்துக் கரியவற்றை கரியவற்றோடு கரியவற்றுக்கு கரியவற்றின் கரியவற்றது கரியவற்றுக்கண் என்றுரைப்போலப் பிறவற்றோடும் ஒட்டுக. (ங)

5 **க**டுக. ஆமா கோனவ் வணைபவும் பெறுமே.

இஃது ஆகார ஈற்றுட் சிலவற்றிற்கும் ஓகார ஈற்றுள் ஒன்றற்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஆவும் மாவுங் கோவும் இன்னேயன்றி னகரச்சாரியைபெற்று முடியவும்பெறும். எ - று.

ஆவுடனே ஓதினமையான் மாவென்றது விலங்குமாவென்றேகொள்க. ஒன்றெனமுடித்தலான் ஐ என்பதற்கும் னகரங கொடுக்க.

வரலாறு;—ஆனை ஆனெடு மானை மானெடு கோனை கோனெடு ஊனை ஊனெடு எனப் பிறவற்றோடும் ஒட்டுக. உம்மையான ஆவினை மாவினை கோவினை எனப் பொதுவிதி பெறுதலும் உரையிற் கோடலான் ஊனை ஊனினை என னகரமும் இன்னும் பெறுதலுங் கொள்க. "ஒன்றுகின்றகோவினையடர்க்கவந்த" எனச் செயுளகத்துங் காண்க. "ஆனெய்தெளித்துநானர்வி" என ஆன் அகரம்பெறுதல் புறனடையாற்கொள்க. (ச)

கடுஉ. எல்லா மென்ப திழிதிணை யாயி
னற்றோ டிருபின் மேலும முறுமே
யனறே னம்மிடை யடைநத்த றுகும்.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

5 **இ**ள்.எல்லாமென்னும் வீரவப்பெயர் அஃறிணைப் பெயராயின் இடையே அற்றுச்சாரியையும் உருபின்பின்னே உம்முச்சாரியையும் பெற்றுமுடியும்; உயர்திணைப்பெயராயின் இடையே நம்முச்சாரியையும் உருபின்பின்னே முன்போல் உம்முச்சாரியையும் பெற்றுமுடியும். எ - று.

வரலாறு;—எல்லாவற்றையும் எல்லாவற்றோடும் எனவும், எல்லாநம்மையும் எல்லாநம்மோடும் எனவும் வரும். பிறவற்றோடும்

இவ்வாறே ஒட்டுக. உயர்திணையாயவழி அவற்றிற்கு எல்லாரையும் எல்லாரோடும் எனப் பொருளுரைக்க. (சு)

கரிசு. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தமதும சாரப்
புலலு முருபின் பின்ன ருமமே.

இது மகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள். எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் எல்லீரு மெனனும் முன்னிலைப்பெயருமாகிய இவற்றின் ஈற்றுநின்ற உம் மையைப்போக்கி முறையே தம்முச்சாரியையும் நுமமுச்சாரியை யும் இடையேவர உருபின்பின்னே உம்முச்சாரியையைவந்து புண ருமம். எ - று.

வரலாறு;—எல்லார்தம்மையும் எல்லாதமோடும் எனவும், எல்லீர்நுமையும எல்லீர்நுமோடும் எனவும வரும. பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. (சு)

கரிசு. தான்ரு நாமுதல குறுகும் யான்யாம
நீநீ ரெனனெம நினனும மாமபிற
குவ்வி னவ்வரு நானகா நிரட்டல.

இது னகர மகர ரகர ஈகார ஈறறிறகு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். தான் தாம் நாம் என்னும்மூன்றுபெயரும் முறையே தன்னென்றுந் தமமென்றும நமமென்றும நெடுமுதல்குறுகும: யான் யாம் நீ நீர் என்னும நான்குபெயரும முறையே எனனென்றும எம்மென்றும நினனென்றும நுமமென்றுந் திரியும; அங்ஙனந் திரிந்தவழி நானகனுருபு புணருமிடத்து இடையே அகரச்சாரியை வரும; இமமொழிகளோடு நானகனுருபும ஆறனுருபும புணருமிடத்துக் குற்றெழுத்து இரட்டா. எ - று.

இவ்வெழுத்து இவ்வெழுத்தாய்த் திரியுமென்னுது யான் யாம் நீ நீரென்பன முறையே என எம் நின் நும ஆமெனவரூஉம், "ஆ எய்யாகும் யாமெ னிறுதி—யாவயின ஒகரமெய கெடுதல் வேண்டும்" என்பன முதலாக ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்றானும் நும்மெனபதற்கு ஏற்ற பெற்றியானும அவற்றின் திரிபினை வேறுவேறு பகுத்துக்காண்க.

வரலாறு;—தன்னே தன்னோடு தனக்கு தனது எனவும், தம்மை தம்மோடு தமக்கு தமது எனவும், நம்மை நம்மோடு நமக்கு நமது எனவும், என்னே என்னோடு எனக்கு எனது எனவும், எம்மை எம்மோடு எமக்கு எமது எனவும், நின்னே நின்னோடு நினக்கு நினது எனவும், நும்மை நும்மோடு நுமக்கு நுமது எனவும் வரும். பிறவற்றோடும் இவவாறே ஒட்டுக. பிறவென்றதனானே நீயென்பது உன்னென்றும் நீரென்பது உம்மென்றுந் திரிதல்கொள்க. (எ)

கருஙு. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

இது வகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்துயதுவிலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள். வகர ஈற்று மூவகைச்சுட்டுப்பெயர்க்கும் அற்றுச்சாரியைபெறுதல் நெறி. எ - று.

வரலாறு;—அவற்றை அவற்றோடு இவற்றை இவற்றோடு உவற்றை உவற்றோடு எனவரும. பிறவற்றோடும் இவவாறே ஒட்டிக்கொள்க. வழியென்றதனாற் குற்றோற்று இரட்டாமை கொள்க.

கருசு. யாத னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
வாய்த விறுதியு மன்னொடு சிவணு
மாய்தங் கெடுத லாவயி னான.

இது குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள். யாதென வரூஉங் குற்றுகர ஈறுஞ் சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும் அன்சாரியையோடு பொருந்தும; அவ்விடத்து இடைநின்ற ஆய்தங்கெடும். எ - று.

வரலாறு;—யாதனை யாதனோடு எனவும், அதனை அதனோடு இதனை இதனோடு உதனை உதனோடு எனவும் வரும. பிறவற்றோடும் இவவாறே ஒட்டுக. (கூ)

கருஎ. ஒன்று முதலெட் டளவா மெணணோ
பத்தின்முன் னன்வரிற் பவ்வொற் றெழியமே
லெல்லா மோடு மொன்பது மிற்றே.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரோட் சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள். ஒன்று முதலாக எட்டு இறுதியாக நின்ற எண்ணுப்பெயர்களின்மேல் வந்து பஃதெனவும் பதுவெனவும் முடிந்துநின்ற பத்தென்னும் எண்ணுப்பெயர் முன்னர் ஆன்சாரியையலிற் பகரவொற்று நிற்க ஏனையவெல்லாங் கெடும். ஏனபதன்முன்னர் ஆன்வரினும் இவ்வாறுகெடும் உரூபுபுணர்வுழி. எ - று.

வரலாறு;—ஒருபாணை ஒருபாஞெடு எனவும, ஒன்பாணை ஒன்பாஞெடு எனவும் வரும். பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. மேற் "பல்லவைநுதலிய வகரவிறுபெய ரற்றொடுசிவணல்" என்றுழி யாது எச்சமின்றேயென்ற மிகையானே இன்பெறுவன பெறுது விளவை பலாவை என்றற்போல முடிதலும், மகத்தை நிலாத்தை எனப் பிறசாரியை பெறுதலும், விளவத்துக்கண் பலாவத்துக்கண் என அகர ஆகார ஈற்று மரப்பெயர்கள் ஏழனுருபோடு புணர்வுழி அத்துப்பெறுதலும், ய்காவென்னும் ஆகார ஈற்று விஞப்பெயர் யாவற்றை யாவற்றோடு என அற்றுப்பெற்றே முடிதலும, அது இது உது என்னும் மூற்றுகர ஈற்றுச் சுட்டுப்பெயர்கள் அதனை அதனோடு இதனை இதனோடு உதனை உதனோடு என அன்பெற்றே முடிதலும், அவை இவை உவை என்னும் ஐகார ஈற்றுச் சுட்டுப்பெயர்கள் அவையற்றை அவற்றை இவையற்றை இவற்றை உவையற்றை உவற்றை என அற்றுப்பெற்று ஐகாரங்கெடாதுங் கெட்டும் முடிதலும், யாவை என்னும் ஐகார ஈற்றுவிஞப்பெயர் யாவற்றை யாவற்றோடு என ஐகாரங்கெட்டு அற்றுப்பெற்று முடிதலுங், கரியவை நெடியவை என்றற்றொடக்கத்து ஐகார ஈற்றுப் பண்புகொள் பெயர்களுங் கரியவற்றை நெடியவற்றை என அம்முடிபு பெறலும், மகர ஈற்றுப்பெயருட் சில மரத்தை மரத்தோடு நுகத்தை நுகத்தோடு என அதனுப்பெற்றே முடிதலுங், கரியேமம்மையும் என மகர ஈற்றுத்தன்மைப்பெயர் நம்மும் உம்முங் கரியார்தம்மையும் கரியீர் நும்மையும் என ரகர ஈற்றுப் படர்க்கைப்பெயரும் முன்னிலைப் பெயரும் முறையே தம்மும் உம்மும் நும்மும் உம்மும் பெற்றுமுடிதலும், எல்லாருமென்னும் படர்க்கைப்பெயர் "எல்லார்க்குமெல்லாநிகழ்பவை" எனத் தம்முப்பெறுதும் வருதலும், அழன் புழன் என்னும் னகர ஈற்றுப்பெயர்கள் இன்னேயன்றி அழத்தை புழத்தை என அத்துப்பெற்று னகரங்கெட்டு முடிதலும், எவனென்னும் னகர ஈற்று விஞப்பெயர் எவற்றை எவற்றோடு என அன்கெட்டு அற்றுப்பெற்றுமுடிதலும், எற்றை எற்றோடு என அன்னோடு அற்

நின் அகரமுங் கெட்டுமுடிதலும், எகினென்னும் னகர ஈற்றுப்பெ யர் இன்னேயன்றி எகினத்தை என அத்துப்பெற்று முடிதலும், ஏழென்னும் ழகர ஈற்று எண்ணுப்பெயரும் பூழ் யாழ் என்றற் றொடக்கத்து ழகர ஈற்றுப் பொருட்பெய்ரும் இன்னேயன்றி ஏழ னே ஏழனேடு பூழனே பூழனேடு யாழனே யாழனேடு என அன்பெ றுதலுங், குற்றுகர ஈற்றுட் சில "வழக்கத்தாற்பாட்டாராய்ந்தீர்" எனவும் கரியதனே கரியதனேடு எனவும் முறையே அத்தும் அன் னும் பெறுதலுங், குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்கள் இன்னே யன்றி ஒன்றனே இரண்டனே என அன்பெற்றும் ஒருபஃது ஒருபது முதலியன ஆன்பெறுது ஒருபஃதனே ஒருபதனே எனவும் ஒருபஃ தினே ஒருபதினே எனவும் ஒருபஃதை ஒருபதை எனவும் அன்பெ றுதலும் இன்பெறுதலும் பெறுமையுங், குற்றுகர ஈற்றுத் திசைப் பெயர்கள் ஏழனுருபோடு புணர்வழி இன்பெறுது வடக்கண் கிழக் கண் மேற்கண் தெற்கண் என ஈற்றயிர்மெய் கெட்டு முடிதலும், இன்னேரன்ன பிறவுங் கொள்க. யா யாவை முதலியன யாவற்றை யாவற்றை என ஒருங்கிரனவாய் முடிந்தனவேனும் நிலைமொழி வேறுபாட்டான் வேறென்றே கோடும். (கo)

கடுஅ. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதிதவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

இஃது அதிகாரப் புறனடை கூறுகின்றது.

இ - ள். இவ்வெழுத்தோத்திலுள் விதித்தற்கு உரியனவற்றை யெல்லாம் விதந்து இதனுக்கு இது முடிபென்று ஒழியாது எல்லா வற்றையும் விதிக்கத் தொடங்கின் வரம்பின்றி ஓடுதலான் எடுத் தோதாதானும் இலேசானும் உரையானும் விதித்துப் போந்தவற் றின் இயல்பைப்பற்றி அதனனே திறப்படக் கூறுதனவற்றையுந் திறப்படக் கூறிக் கற்றுவல்லோர் அமைத்துக்கொள்க. எ - று.

வரலாறு;—உவாஅப்பதினன்கு இராஅப்பகல் இராஅவழு துணங்காய் என ஆகார ஈறு அகரம்பெறுதலும், பொன்னங்கட்டி கானுங்கோழி என னகரவீறு அம்முப்பெறுதலும், பதினேழு என ஏழ் உகரம்பெறுதலும், அதினே அவையிற்றிற்கு வினவினுக்கு வின் ணுக்கு பல்லுக்கு என முறையே அன்னேயன்றி இன்பெறுதலும் இற்றும் இன்னும் பெறுதலும் இன்னும் உகரமும் பெறுதலும் உக ரம்பெறுதலும், வேயாது வேயாப்பு என்றாற்போல்வன ஈறுகெடு லும், இன்னேரன்ன பிறவும் ஈண்டே அமைத்துமுடித்துக்கொள்க.

இன்னும் இதனனே உன்டென்னுஞ்சொல் தொழிலொழிய உண
மையென்னும் பண்பு உணர நிற்குமிடத்துப் பகரமுதன்மொழி வந்
தால் உள்பொருள் எனக் குற்றுகரம் மெய்யொடுங் கெட்டு மேல்
நின்ற ணகரவொற்று ளகரவொற்றாய்த்திரிதலும் உண்டுபொரு
ளென இயல்பாதலும் ஏனையவல்லெழுத்தும் இயல்புகணமும்வந்
தால் உண்டு காணம் சோறு தகர் ஞாண் நூல் மணி யாழ் வட்டு
அடை ஆடை எனக் கேடுந்திரிபுமின்றி இயல்பாய்முடிதலுங்
கொள்க. உள்பொருளென்பது பண்புத்தொகைமுடிபன்றேவெ
னின அஃது ஓசையொற்றுமைபடச்சொல்லும்வழிபதுபோலும்,
இஃது ஓசை இடையறவுபடச் சொல்லும் வழியதுபோலுமென்க.

இவ்வெழுத்ததிகாரத்தினுட் கூறிய இலக்கணங்களெல்லாங் கரு
வியுஞ் செய்கையுமென இருவகைப்படும். அவற்றுட் கருவி புறப்பு
றக்கருவியும் புறக்கருவியும் அகபபுறக்கருவியும் அகக்கருவியுமென
நால்வகைத்து. எண்பெபாழுதியன புறப்புறக்கருவி. பதவியல்
புறக்கருவி. "மெய்யுயிராமுதலீருமிருபதுங்களும்" என்றாற்போல்வன
அகப்புறக்கருவி. "எகரஒகரம்பெயாக்கிறுகா" என்றாற்போல்வன்
அகக்கருவி.

இனிச்செய்கையும் புறப்புறச்செய்கையும் புறச்செய்கையும்
அகப்புறச்செய்கையும் அகசசெய்கையும் என நால்வகைத்து. "இ
ஐவழியவவும" என்றாற்போல்வன புறப்புறச்செய்கை. "வனமுன்
றனவும்" என்றாற்போல்வன புறச்செய்கை. "ஞணநமலவளன
வொற்றிறுதொழிற்பெயர்" என்றாற்போல்வன அகப்புறச்செய்கை.
"இபல்பினுமவிதியினுன்றவுயிர்முன்" என்றாற்போல இன்ன ாறு
இன்னவாறு முடியுமெனச் செய்கை கூறுவனவெல்லாம் அகச்
செய்கை. இவையெல்லாம் ஓர்ந்து உணர்க. (கக)

ஐந்தாவது உருபுபுணரியல் முற்றிற்று.

முதலாவது

எழுத்ததிகாரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இலக்கணவிளக்கம்.

இரண்டாவது

சொல்லதிகாரம்.

க-வது பெயரியல்.

கடுக. உமையவ ளொடுகலந் தலகுபுரந் தருளு
மமைவன தடிபணிந் தறைகுவன சொலமீல.

என்பதசூத்திரம். இவ்வதிகாரம் மேற்பாயிரத்துள் "எழுத்து முதனமூன்றையும்" என நிறுத்தமுறையானே எழுத்துணார்த்திச் சொல்லுணர்த்துகின்றூராதலிற் சொல்லதிகாரமென்னும் பெயராகு 5
து. சொல்லியுணர்த்திய அதிகாரமென விரிக்க. சொல்லென்றது அதன் இலக்கணம். அதிகாரமென்றது முறைமை. சொல்லாவது ஒரெழுத்தானும் ரெழுத்தானும் இரண்டிறந்து இசைக்கும் பலவெழுத்தானும் ஆக்கப்பட்டுப் பொருளையுந் தன்னையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையாகலின் மேலதிகாரத்தோடு இயைபு 10
டைத்தாயிற்று. இவ்வதிகாரத்துள் ஐவகையோத்தினுந் சொல்லிலக்கணம் உணர்த்துகின்றூர். அவற்றுள் இம்முதலோத்துப் பெயர்ச்சொற்களது இயல்பு உணர்த்திற்றூகலாற் பெயரியலென்னும் பெயராதது. சிறுபான்மை ஏனையிலக்கணங்களையும் உணர்த்திற்றே 15
னும பெயரியலென்றது பன்மைபற்றிய வழக்கு. தலைமைபற்றிய வழக்கெனினும் அமையும். இதனுள் இத்தலைச்சூத்திரங் கூறத் தொடங்கிய பொருள் இனிதுமுடியும்பொருட்டு வணக்கமும் அதனை முடிபெய்தும்பொருளும் உணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது.

இ - ள். உமாதேவியோடு பொருந்தி உலகத்தைக்காத்து நிலை 20
பெறச்செய்யும் இறைவனது தாளை வணங்கி யான் சொல்லுவன் சொல்லிலக்கணத்தை. எ - று.

மாயோன்செயலும் இவன்செயலென்பார் உலகுபுரக்தருஞ மென்றும் ஆகுபெயராற் சொல்லிலக்கணத்தைச் சொல்லென் றுங்கூறினர். ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு "மலைமகளொருபால்" என்னுஞ் சூத்திரத்திற்கு உரைத்தாங்குப் பொருள் விரித்து உரைத்துக்கொள்க. (க)

கசூ0. தனிமொழி தொடர்மொழி யெனவிரு வகைத்தா
யிருதிணை யைம்பாற் பொருளீயுந் தன்னீயு
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

இது சொல்லின் கூறுபாடும் அது பொருளுணர்த்தும் இயல் பும் உணர்த்திய முகத்தான் மேற்கூறுவலென்றசொற்குப் பொது இலக்கணம் உணர்த்துகின்றது.

இ - ள். தனிமொழியுந் தொடர்மொழியுமென இரண்டு கூற் றதாய் இருதிணையும் அவற்றின் பகுதியாகின்ற ஐம்பாலுமாகிய பொருளீயுந் தன்னீயும் மூன்றிடத்தினும் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணுஞ் சொன்மாத்திரத்தான் விளக்கி வேறுநிற்கும் வெளிப்படையானும் அவவாறன்றிச் சொல்லோடுகூடிய குறிப்பான் விளக்கி வேறுநிற்குங் குறிப்பானும் விளக்குவது யான் முன் னர்ச் சொல்லுவலென்ற சொல்லாவது. எ - று.

எனவே, உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல் ஆண்பாற் சொல் பெண்பாற்சொல் பலர்பாற்சொல் ஒன்றறிசொல் பலவறி சொல் தன்மைச்சொல் முன்னிலைச்சொல் படர்க்கைச்சொல் வழக் குச்சொல் செய்யுட்சொல் வெளிப்படைச்சொல் குறிப்புச்சொல் எனவும், உயிர்ப்பொருள் உயிரில்பொருள் இயங்கியற்பொருள் நிலை யியற்பொருள் எனவும், காட்சிப்பொருள் கருத்துப்பொருள் முதற் பொருள் கினைப்பொருள் இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் வழக்குப்பொருள் செய்யுட்பொருள் எனவும் பகுத்துரைக்கப்படுஞ் சொல்லும் பொருளும் முறையே தனிமொழியுந் தொடர்மொழியு மாகவும் இருதிணையும் ஐம்பாலுமாகவும் அடங்குதலிற் தனிமொழி தொடர்மொழியெனவும் இருதிணை ஐம்பாற் பொருளீயுமெனவுங் கூறினர். இவற்றிற்கு உதாரணம் தத்தம் விதிச்சூத்திரங்களுட்பெ றப்படும். சொல் தன்னீயுணர்த்துமாறு கடியென்கிளவி புனிறென் கிளவியென வரும். பிறவும் அன்ன. "வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ்—செயிரறு பொன்னைச் செம்மைசெய்யாணியுங்—தமக்

கமை கருவியுந் தாமா மலைவபோ—லுரைத்திற முணர்த்தலு முரை யது தொழிலே" என்னுர் ஆசிரியரகத்தியனுருமென்றுணர்க. முயற் கோடு யாமைமயிர்க்கம்பலம் என்றற்போல்வனவும் பொருள்விளக் கியனவேயாம். என்னை? அவையும் பொய்ப்பொருள் விளக்கலின்.()

ககூக. தனிமொழி சமய வாற்றலாற் றனித்துந்
தொடர்மொழி யவாய்நிலே தகுதி யண்மையிற்
றெகைநிலே தொகாநிலே யாயிரு வகையாற்
றெடர்ந்தும் பொருளைத் தோற்றுவ தியல்பே.

இது மேற்கூறிய தனிமொழியுந் தொடர்மொழியும் பொருள் விளக்குமாறு கூறுகின்றது.

இ - ள். தனிமொழி சங்கேதவலியாற் தனித்துநின்றுந் தொ டர்மொழி அவாய்நிலேயானுந் தகுதியானும் அண்மையானுந் தொ கைநிலேவகையானுந் தொகாநிலேவகையானுந் தொடர்ந்துநின்றும் பொருளேவிளக்குதலேச்செய்வது அவற்றிற்கு இலக்கணமாம். எ-று.

உ-ம். மரம் உண்டான் மற்று ஈனி எனவும், ஆவைக்கொணு வெளிதைக்கொலான் எனவும், நீரானே எனவும், ஆற்றங்கரைக்க ணேந்துகனிகளுளவாகின்றன எனவும் முறையே காண்க. (ங)

ககூஉ. உயர்திணை யென்மனுர் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனு ரவரல பிறவே.

இது மேல் இருதிணையென்றுர் அவை இவையென்கின்றது.

இ - ள். உயர்திணையென்று கூறுவர் தொல்லாசிரியர் மக்கட் சுட்டினே, அம்மக்கட்சுட்டல்லாத பிறபொருளே அஃறிணையென்று கூறுவர் தொல்லாசிரியர். எ - று.

மக்கட்சுட்டென்பது பண்புத்தொகைநிலேக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டு மக்களென்றது ஆகுபெயரான் மக்கட் சுட்டை உணர்த்திநின்றது. அங்ஙனம் உணர்த்தவே மக்கட்சுட் டாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டென விரியும். அவரலவென்று ஒழியாது பிறவென்றுர் உயிருள்ளனவும் இல் லனவுமாகிய அஃறிணை இருகூறும் அடங்குதற்கு. ஏகாரம் இரண் டும் ஈற்றசை. உயர்திணையென்பது இறந்தகால வினேத்தொகை. அஃறிணையென்பது பண்புத்தொகை. அவை முறையே உயர்ந்தது திணையெனவும் அத்திணேயல்லவாகியதிணையெனவும் விரியும். திணை

யென்பது ஒழுக்கம். அஃது ஆகுபெயரான் அவ்வொழுக்கத்தை நிகழ்த்தும் பொருண்மேல் நின்றது. (ச)

கசுங. ஆண்பெண் பலரென மூப்பாற் றுயர்திணை.

இது மேல் ஐம்பாலென்றவற்றுள் உயர்திணை இத்திணைப் பால் உடைத்து என்கின்றது.

இ - ள். ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலுமென்னும் இம் மூன்று பாலையும் உடைத்து உயர்திணை. எ - று.

அறிவுமுதலாயினவற்றுள் ஆண்மகன் சிறந்தமையின் ஆண் பால் முற்கூறப்பட்டது. ஆண்பன்மையும் பெண்பன்மையும் இவவி ருபாலுந் தொக்க பன்மையுமன்றிப் பன்மையென வேறின்மையிற் பலர்பால் பிற்கூறப்பட்டது. இம்மூவகைப் பன்மையும் வந்தார் சென்றாரென்னும் ஓரீற்றுவரய்பாடேகொண்டு முடிதலின் பலர்பா லென ஒன்றியடங்கின. (ரு)

கசுச. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

இஃது அஃறிணை இத்திணைப்பால் உடைத்து என்கின்றது.

இ - ள். ஒருமைப்பாலும் பன்மைப்பாலுமென்று இருபகுதி யை உடைத்து அஃறிணை. எ - று.

ஆண்பெண்ணென்பன அஃறிணைக்கும் உளவேனும் அவவி ரண்டற்கும் வந்ததென்பதல்லது வழக்கினுள் வேறு வாய்பாடின் மையின் ஆண்பால் பெண்பாலென்னும் வழக்கு உயர்திணைக்கே யன்றி அஃறிணைக்கின்று. (சு)

கசுடு. தெய்வமும் பேடுமா மவ்விரு பகுதியு
மிவ்வென வறியுமஃ தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

இஃது ஐயம் அறுத்தல் நுதலிற்று. மேற் தொகையுள் ஒழிந்த தெய்வத்தினையும் வகையுள் ஒழிந்த பேட்டினையும் இவவாறு மென்றலின்.

இ - ள். தெய்வமும் பேடுமாகிய அவ்விருவகையும் இவையெ னத் தம்பொருளினை வேறு அறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்கு

உடையவல்லவாயினும் உயர்திணையிடத்திற்கு உரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும். எ - று.

பேடெனப் பொதுப்படக்கூறியவதனானே பெண் அவாய் ஆண்டன்மை திரிந்ததூஉம் ஆண் அவாய்ப் பெண்டன்மை திரிந்ததூஉமென அஃது இருவகைப்படும். பால் வேறுபட்டு இசைத்தலாவது தாம் உயர்திணைப்பொருளவாய் ஆண்பாற்கு உரிய ஈற்றுனும் பெண்பாற்கு உரிய ஈற்றுனும் பலர்பாற்கு உரிய ஈற்றுனும் இசைத்தலாம். அந்தந் தமக்கிலவென்ற மிகையானே நரகர் அலி மகண்மாமுதலியவற்றையும் இம்மூவீற்றுள் ஏற்பதொன்றனுன் முடித்ததூஉம் மக்கட்டன்மை நிரம்பாமையிற் பேட்டினை அஃறிணைவாய்பாட்டான் இசைத்தலுங் கொள்க.

வரலாறு;—தேவன்வந்தான் தேவிவந்தாள் தேவர்வந்தார் எனவும், பேடன்வந்தான பேடிவந்தாள் பேடர்வந்தார் எனவும், நரகன்வந்தான நரகிவந்தாள் நரகாவந்தா எனவும், அலிவந்தான் அலியர்வந்தா எனவும், மகண்மாவந்தாள் எனவும, பேடுவந்தது பேடுகள்வந்தன எனவும் வரும். தேவனமா தேவர்கள் தேவியர் தேவிமார் தேவிகள் பேடனமார் பேடர்கள் பேடியர் பேடிமார் பேடிகள் என்றுற்போல்வனவுங் கொள்க. (எ)

கசுங. தன்மை முன்னிலை படாக்கைமூ விடனே.

இது மேல் மூவிடமென்றன இவையென்கின்றது.

இ - ள். தனமையும் முன்னிலையும் படர்க்கையுமென்னும் இவை மூவிடமாவன. எ - று.

உள்ளுதற்பொருட்டாகிய படரென்னும் உரிச்சொல் ஈண்டுப் படர்க்கையென ஈறுதிரிந்துநின்றது. (அ)

கசுஎ. படர்க்கை வினைமுற்று நாமங் குறிபபிற்
பெறப்படுங் திணைபா லனைத்து மேனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

இது முனனாக்கூறிய இடம்பற்றி நிகழுஞ் சொற்களான் விளங்கும் பாலுந் திணையுந் தொகுத்துணர்த்துகின்றது.

இ - ள். படர்க்கைமுற்றுவினையானும் படர்க்கைப்பெயரானுஞ் சொல்லுவான்குறிப்பானும் இருதிணையும் ஐம்பாலும் அறி

தன்மை முன்னிலை வினைமுற்றும் பெயராலும் ஒருமை பன்மைபபாலும் அறியப்படும். எ - று.

தன்மை முன்னிலை வினைமுற்றுப்பெயர்களால் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் அறியப்படுமெனவே தன்மைமுன்னிலைகள் இருதிணைக்கும் பொதுவாய்நிற்றல் பெற்றாம்.

உ-ம். உண்டான் உண்டாள் உண்டார் உண்டது உண்டன எனவும், அவன் அவள் அவர் அது அவை எனவும், படர்க்கைமுற்றுவினையானும் படர்க்கைப்பெயரானும் திணையும் பாலும் விளங்கின. இருதிணைக்கும் ஆண்பால் பெண்பால்களுக்கும் பொதுவாய்நிற்கும் நீ நீர் என்பன நீவருதலான் அறிவுபெற்றேன் நீர் வருதலான் ஆசாரம்பெற்றேன என்றக்கால் உயர்திணையென்பதூஉம் ஆண்பாலென்பதூஉம் நீவருதலான் முல்லையரும்பின நீர்தொக்குநிற்றலான் உடம்பாயிற்று என்றக்கால் மழையென்பதூஉம் ஐம்பூதமென்பதூஉங் குறிப்பான்விளங்கின. இருபாற்கும் பொதுவாய்நிற்கும் ஒருவரென்பதூஉம் ஒருவரான் அரிய தவம்பெற்றேன் என்றக்கால் ஆண்பாலென்பதூஉம் ஒருவரான் அரிய மடல்பெற்றேன் என்றக்காற் பெண்பாலென்பதூஉங் குறிப்பான் விளங்கின. அறிவும் ஆசாரமும் பெண்பாலாற் பெறலாகாவோவெனின் ஆகா. "தண்ணறிவுடையோர் நூலொடுபழகினும்—பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்பவாகலின். உண்டேன் உண்டேம் உண்டாய் உண்டீர் எனவும், யான் யாம் நீ நீர் எனவும், தன்மைமுன்னிலை வினைமுற்றுஞ்சும் பெயரானும் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் விளங்கின. பிறவும் அன்ன. வினையை முற்கூறினுர் பெயராற் திணைபால் அறிதல் சிறுபான்மைதென்பது அறிவித்தற்கு. (கூ)

கசூஅ. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியலபு
மிடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
யெனுமுத் தகுதியோ டாறும வழக்கியல்.

இது மேல் வழக்கென்றதன் வகையுந் தொகையுஞ் சென்றது.

இ - ள். இலக்கணநெறியால் வருவதூஉம் இலக்கணமின்றேறும் அமைந்து உடையதுபோல அடிப்பட்ட சான்றோரால் வழங்குப்படி வருவதூஉம் இலக்கணத்திற் சிதைந்து ஒருகாரணமின்றி

வழங்கற்பாடேபற்றி மரூஉமுடிபிற்றுய்வருவதூஉமென இம்முவ
கையான் வரும் இயல்புவழக்கு நன்மக்களிடைக் கூறத்தகாத
சொல்லே அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் கூறுவதூஉ
தகுதிநோக்கி மங்கலமரபாற் கூறுவதூஉம் ஒவ்வொரு குழுவினுள்
ளார் தத்தங் குறியாக இட்டுக் கூறுவதூஉமென இம்முவகையான
வருந் தகுதிவழக்கினோடு கூட அறுவகைப்படும் வழக்கெனறி. எ-று

நிலம் நீர் நீ வளி விசும்பு என்றாற்போல்வன இலக்கணமுமை
யன. இன்முன் முன்றில் கோவில் கோயில் பொதுவில் பொதியில
கண்மீமிகண் என்றாற்போல்வன இலக்கணப்போலி. அருமருந்தலா
னுன் அருமந்தான் சோழன்நாடு சோணாடு பாண்டியன்நாடு பாண்டு
நாடு என்றாற்போலச் சிதைந்து வருவனவும் வெள்யாடு வெண்கள
மர் கருங்களமர் என்றாற்போலப் பண்புகுறிபாது சாதிப்பெயராய
வருவனவுங் குடத்துள்ளும் பிறகலத்துள்ளும் இருந்த நீரைச் சி
தென்னது நிலவென்றாற்போல்வனவும் மரூஉ. "ஆரூன் வரூஉ
மிகாரபகரம" எனவும், கண்கழிஇருதும் கான்யேனாபெய்துவரு
தும் கருமுகம்நிகர்செம்பினென்ற "புலிநின்றிறந்தபுள்ளுற்றது" எனவும
வும் வருவனவெல்லாம் இடைக்கரடக்கல். இடக்கர் அவையலகிளவி
பென்பன ஒருபொருட்கிளவி. ரகாரறகாரமென்பனபோலக் கண்க
ழுவுதல் முதலாயின அவையலகிளவியைக் கிடந்தவாறு கூறுது
பிறிதோராற்றூற் கிளந்தனவல்லவெனினும் அவையலகிளவிப்பெ
ருண்மையை உணர்த்தலின் ஒற்றுமையதுதான் அவையும் அவைய
லகிளவியைப் பிறிதோராற்றூற் கூறிய வாய்பாடாகவே கொள்ள
படுமென்க. செத்தாரைத் துஞ்சினாரென்றலுஞ் சுடுகாட்டை நன
காடென்றலும் ஓலையைத் திருமுகமென்றலுங் கெட்டதனைப் பெரு
கிற்றென்றலும் இவைபோல்வனவெல்லாம் மங்கலமரபினுள் வரு
வன. பொற்கொல்லர் பொன்னாப்பறியென்றலும் வண்ணக்க
காணத்தை நீலமென்றலும் ஆனைப்பாகர் ஆடையைக் கரையென
றலும் இவைபோல்வனவெல்லாங் குழூஉக்குறி. முன்னையமுன்றா
ஒருகாரணமின்றி இயல்பாய்வருதலின் இயல்புவழக்கென்றும் பி
னையமுன்றும் உயர்ந்தோரும் இழிந்தோரும் இவ்வாறு உரைப்பது
தக்கதென்று குறித்து வழங்கலிற் தகுதிவழக்கென்றும் ஆயின.

இலக்கணப்போலி அடிப்பாட்டிற் திரிக்கப்படாது மூ
னவே சொல்லப்படும்; மரூஉ இலக்கணத்தானுஞ் சி
முறையே அருமருந்தன்னைனவும் அருமந்தானை
லப்படும்; இவை இரண்டிற்குந் தம்முள்வேற்றுமை

அவையலகிலவிபோல மறைத்தவாய்பாட்டானே சொல்லவேண்டு
மென்னும் யாப்புறவின்றிச் செத்தாரென இலக்கணவாய்பாட்டா
னுந் தகவு நோக்கித் துஞ்சினாரென மறைத்தவாய்பாட்டானுஞ்
சொல்லப்படும். இவை இரண்டற்குந் தம்முள்வேற்றுமை. அற்
நேல் "மெழுகுமாப்பிகண்கலுழ்மீரானே" எனவும் "ஆப்பிமீரெங
ளுந்தெளித்துச்சிறுகாலே" எனவும் யானையிலண்டம் யாட்டுப்பி
ழுக்கை எனவும் இடக்கர்வாய்பாட்டானும் வழங்கப்படுமாலோவெ
னின் "மறைக்குங காலை மரீஇய தொரால்" என்பவாகலின் இந்நித
ரன மேற்றொட்டு மருவி வழங்கலின் அமைவுடையவென்க. "பக
ல்கான்றெழுதரும்பல்கதிர்ப்பரிதி" என்புழிக் கான்றென்னும் இடக்
கர் அணிகுறிதாதுப் பிறிதோர்பொருள்மேல் நிற்றலின் மறைக்கப்ப
ாமையுந் தனபொருள்மேல் நினறுழியே மறைக்கப்படுதலும்
ஊரித்தெனக்கொள்க. வெள்யாடுமுதலியவற்றை மங்கலமொழி
யென்பாரும் உளர். அவை தகுதிநோக்காது வழங்கற்பாடேபற்றி
வருதலின் மரூஉவாவதல்லது மங்கலமொழியாகாமை உணர்க.(கo)

கசுசு பலவகைத தாதுவி னுயிர்க்குடல் போறபல
சொலலாற பொருட்கிட னுக வுணாவினை
வலலோ ரணிபெறச செயவது செயயுள.

இது மேற் செய்யுளென்றதன் இயல்புகூறுகின்றது.

இ - ள். நரம்புமுதலிய தாதுக்களான் உயிர்க்கு இட
னாக இயற்றப்பட்ட உடம்புபோல "இயற்சொற் றிரிசொற்
றிசைசசொல் வடசொலென்—றனைத்தே செய்யு ளீட்டச் சொல்
லே" என்பவாகலின் அந்நால்வகைச் சொற்களாற் பொருட்கு இட
னாக அறிவினற் கற்றுவல்லோர் அலங்காரம்பெறச் செய்வது செய்
யுளாம. எ - று.

சொல்லும எழுத்தாற்பெறப்படுதலின் எழுத்துச்சொற்பொ
ருளாணி நான்கினுளும் இயல்வது செய்யுளாயிற்று. ஆகவே, இவ்வை
ந்துந் தம்முள் ஒன்றையின்றி அமையாவென்பதூஉம் பெற்றாம்.

வரலாறு;—"வருங்குன்றமொன்றுரித்தோன் றில்லையம்பல
த்—திருங்குன்றவாணரிளங்கொடியே யிடரெய்தலெம்மூ
ன்றமாளிகை நுண்களபத்தொளிபாயதும்மூர்க்—கருங்
கிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே." எனவரும்.

கஎ0. ஆகுபெயர் வினைக்குறிப் பன்மொழி விகார
முதலுருகை தகுதி குறிப்போ டின்னவுங்
குறிப்பிற் றருமொழி யலலன வெளிப்படை.

இது மேல் வெளிப்படை குறிப்பென்றன இவையென்று அவற்றின் இயல்பு கூறுகின்றது. 5

இ - ள். ஆகுபெயர்முதலியனவும் இவைபோல்வன பிறவுமாகிய சொற்கள் சொன்மாத்திரத்தாற் பொருளே விளக்காது செல்லோடு கூடிய குறிப்பாற் பொருளே விளக்குஞ் சொற்களாம். இத்தன்மையன அன்றி வரும் எல்லாச்சொற்களுஞ் சொன்மாத்திரத்தாற் பொருளே விளக்கும் வெளிப்படைச்சொற்களாம். எ - று. 10

உ-ம். கடித்தின்றான் புளித்தின்றான் என ஆகுபெயர் அவற்றது காயாகிய பிறிதுபொருளேயுங் கரியன் செய்யன் என வினைக்குறிப்புமுற்று அவற்றது வினையாகிய 'இன்னஞுயிருந்தானென்பதனேயும் "பொற்றொடிதந்தனேமடல்" "அறற்கூந்தற்கில்லையருள்" என அன்மொழித்தொகைச்சொற்கள் அவற்றையுடையானேயும் "மரைமலர்குவிகமொடிகலியவங்கை" "வேதின்வெரிநினேதிமுதுபோத்து" "நீனிறப்பெருங்கடல்பாடெழுந்தொலிப்ப" என விகாரச்சொற்கள் முறையே தாமரை ஓந்தி நிலம் என்பனவீற்றையுங் "குன்றுவினேயுஞுயிர்நிலந்துன்புற்றுத்—தாவென்றிரப்பாடன்கை" "அறத்தாறிது வெனவெள்ளக்கிழிபு" என ஒருசொல்லின் முதனிற்கும் எழுத்துமாத்திரமே விதந்ததூஉம் ஒருபாட்டின் முதனிற்குஞ் சொல்மாத்திரமே விதந்ததூஉம் முறையே குரலும் விளரியும் உளேயுந் துத்தமுந் தாரமும் இளியுங் கைக்கினேயுமாகிய சொற்களேயும் "அறத்தாறிது வெனவேண்டாசிவிகை—பொறுத்தானேதோன்தானிடை" என்னும் பாட்டையும் "அலங்குளேப்புரவியைவரொடுசினேஇ" என ஐவரென்னுந் தொகைச்சொல் அறமகன்முதலிய ஐவரையும் "புலிகின்றிறற் தீரலீரத்து" திருமுகம் பறி எனத் தகுதிவழக்குமூன்றும் முறையே இடக்கர்வாய்பாட்டான் உணரும் நீரையும் ஓலேயையும் பொன்னேயும் ஒருவரானறிவுபெற்றேன் கற்கறிக்கநனகட்டாய் எனக் குறிப்புச்சொற்கள் முறையே ஆண்பாலேயுந் தீங்கட்டாய் என்பதனேயும் சொன்மாத்திரத்தான் அன்றிச் சொல்லோடு கூடிய குறிப்பான் விளக்கியவாறு காண்க. "இனேதாக மூண்மரங்கொல்க கனேகுரல்—கைகொல்லுங்காழ்த்த விடத்து" என்னுந் தொடர்மொழி நிலேபெற்றுற் கனேயுறிற் கனேயுற்றுரை அவர்தாங் கொல்வர் அதனுற் நீயாரை அவர் நிலேபெறுக் காலத்தே கனேக என்னும் 15 20 25 30 35

பொருளே விளக்குதலுங் குறிப்பிற் தோன்றுதலாம். அணியிலக் கணங் கூறுகின்றூர் இன்னேரன்னவற்றைப் பிறிதுமொழிதலென் றதோர் அணியென்ப.

இனி இன்னபிறவாவன "நாவலொடுபெயரியபொலம்" "திங் கள்விரவியபெயரினன்" என்றூற்போல்வன; சாம்பூநதம் புத்திசே னனென்பனவற்றைக் குறிப்பான் விளக்கிநிற்றலின்.

இனி வெளிப்படைச்சொல் அவன் இவன் உவன் வந்தான செண்றூன் என மூறையே பொருளையும் பொருளது புடைபெயர்ச் சியையுஞ் சொல்மாத்திரத்தான் விளக்கியவாறு காண்க. அதுநூ றவாக்குழலி பாயாவேங்கை என்றூற்போல்வனவும் அன்ன; பிழி யினையுங் கானமல்லிகையினையும் வேங்கைமரத்தையும் பொதுமை யினீக்கி முறையே விளக்கிநிற்றலின். பிறவும் அன்ன. (கஉ)

களக. அதுவே, யியற்சொற் றிரிசொல் லியல்பிற் பெ
யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து [யாவினை
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.

இது மேல் அவவாற்றூற் பகுத்த சொல் இவவாற்றூன் இத்து ணையாமென்கின்றது.

இ - ள். மேற் கூறப்பட்ட சொல்லே இயற்சொல்லுந் திரி சொல்லுமாகிய இரண்டன் தன்மையானே கூறுபடும் பெயர்ச்சொல் லும் வினைச்சொல்லுமென இரண்டாம், இடைச்சொல்லும் உரிச் சொல்லுமாகிய இரண்டுங் கூட நான்குவகைத்துமாம், திசைச் சொல்லும் ஆரியச்சொல்லுங் கூடாத இடத்து. எ - று.

இங்ஙனங் கூறிய அதனைப் போக்கது பெயரியற்சொல் பெ யர்த்திரிசொல் வினையியற்சொல் வினைத்திரிசொல் இடையியற் சொல் இடைத்திரிசொல் உரியியற்சொல் உரித்திரிசொல் என எண் வகைத்தாந் தமிழ்நாட்டிற்கு உரிய சொல் என்பதாம். அற்றேல் அடுத்து நான்குமாமென்னது ஒன்றுக ஒத அமையும் பிறவெனின், பெயர்ச்சொற் பொருளே விளக்குதலானும் வினைச்சொற் பொருளது புடைபெயர்ச்சியை விளக்குதலானும் அவற்றை முன் ஓதி இடைச் சொல் அவவிரண்டற்கும் விகுதி வேற்றுமை உவமை சாரியை உரு புகளாகியுஞ் சில பெயர்வினைகளாகியும் வருதலானுந் தெரிநிலே தேற்றம் முதலிய பொருண்மை விளக்குதலானும் உரிச்சொல்லும் ஒருவாற்றூற் பெயரேயெனினும் பொருளேவிளக்கலும் பெரும்பான்

மையும் உருபேற்றலும் இன்றிச் சில வினைபோல வரலானும் இவ்ற்றை அவற்றின்பின் ஒதினரென்க. அல்லதூஉம் இவை பெயர்வினைபோல இலக்கணம் முற்றும் ஒருதலையாக ஏற்றுத் தினை பாலிடங்களை விளக்கித் தனி நடவா ஆகலானும் வேறு ஓதவேண்டு மென்பது. திசைவடசொல் அணுகாவழியெனவே இப்பகுதிப்படு வது தமிழ்நாட்டிற்கு உரிய சொல்லென்பதூஉம் அவையும் ஈண்டு அணுகப்பெறுமென்பதூஉம் அணுகுதல் ஒருதலையன்மையின் அவற்றிற்கு இலக்கணம் ஈண்டுக் கூறுரென்பதூஉமாயிற்று. (கங)

கஎஉ. செந்தமி ழாகித் திரியா தியார்க்குந்
தன்பொருள விளக்குந் தன்மைய தியற்சொல்.

இது மேல் இயற்சொலென்றதன் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். செந்தமிழ்நிலத்தின்கண்ணே வழங்குஞ் செவ்விய தமிழ்ச்சொல்லாய்ச் சொல்லானும் பொருளானுந் திரிபின்றி அச் செந்தமிழ்நிலத்தார்க்கும் ஏனைக் கொடுந்தமிழ்நிலத்தார்க்கும் ஒப் பத் தனது பொருளினை விளக்கும் இயல்பையுடையது இயற் சொல்லாம். எ - று.

இயல்பாகியசொல் இயற்சொல்லென்க. அவை நிலம் நீர் தீ வளி சோறு கூழ் பால் மக்கள் மரம் தெங்கு கமுகு என்றாற்போல் வன எனக்கொள்க. செந்தமிழ்நிலமாவது வைகையாற்றின் வடக் கும் மருதயாற்றின் தெற்குங் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம். (கச)

கஎகூ. ஒருபொருள குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இது மேற் திரிசொல்லென்றதன் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். அவ்வியற்சொல் திரிந்த திரிசொல்லாகிய சொல்லே ஒருபொருள்குறித்துவரும் பலசொல்லாகியும் பலபொருள்குறித்து வரும் ஒருசொல்லாகியும் இருவகைப்படுமென்று கூறுவர் ஆசி ரியர். எ - று.

அவ்வியற்சொல் திரிந்த திரிசொல்லினது திரிபாவது உறுப் புத்திரிதலும் முழுவதூஉந்திரிதலுமென இருவகைத்து. கின்னை மஞ் ஞை என்பன உறுப்புத் திரிந்தன, தத்தை பிணிமுகம் என்பன் முழுவதூஉந் திரிந்தன. வெற்பு வீலங்கல் விண்டு என்பன ஒருபொ

நூன்குறித்த வேறுபெயர்த்திரிசொல், இயங்கினன் ஏகினன் என்பன ஒருவினைகுறித்த வேறுவினைத்திரிசொல். உண்கே உண்கோ என்பன விளைவொருமைகுறித்த வேறிடைத்திரிசொல். சால உறுதவ என்பன மிகுதியொருமைகுறித்த வேறுரித்திரிசொல். உந்தி என்பது கொப்பூழும் தோராதட்டுமியாழ்ப்பதத்துறட்புங் காண்யாறும் உணாத்தலின வேறுபொருள்குறித்த ஒருபெயாதிரிசொல. துஞ்சினனெனபது உறங்கினனையும் நிலைபெற்றானையும் உணாத்தலான வேறுவினைகுறித்த ஒருவினைத்திரிசொல. மகனை எனபது புயபின்மை காலம பெருமையெனபனவற்றை உணாத்தலான மேறுபொருள்குறித்த ஓடைத்திரிசொல. கடி எனபது காடபு கூர்மை மூதலியவற்றை உணாத்தலான வேறுபொருள்குறித்த ஒருரித்திரிசொல். பிறவுமனன. (கரு)

கஎச. செந்தமிழ நிலஞ்சோ பன்னிரு நிலதினு
மொனபதிற நிரண்டினிற் றமிழொழி நிலதினுங
தங்குறிப பீனவே திசைசசொ லெனப.

இது, நிறுத்தமுறையானே இயற்சொல்லுந் திரிசொல்லும உணாதது, அவற்றின பருகியாய் இடைநின்ற பெயா வினை இடை உரி நான்கினையும மேல உணர்த்திய நிறிஇ, எஞ்சிய இரண்டனுட் திசைச்சொல்லாபாறு உணாத்துகின்றது.

இ - ள். செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பனிரண்டின்கண்ணும பதினெண்ணிலத்துள் இருவகைத்தமிழாம ஒருமொழிநிலத்தை ஒழிந்த மற்றைப் பதினேழ் நிலதினகண்ணுந் தத்தங் குறிப்பினை வழங்குவனவற்றைத திசைசசொல்லெனறு சொல்லுவர் ஆசிரியர். எ - று.

செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனையுங் "தென்பாண்டிகுட்டங்குடங்கற்காவேன்பூழி—பன்றியருவாவதன்வடக்கு—நன்றூய—சீதமலாடபுனனுடுசெந்தமிழ்சே—ரேதமிழ்பன்னிருநாட்டென்" இதனுன் அறிக. இவற்றுட் தென்பாண்டிநாட்டார் ஆவினைப்பெற்றமென்றுங் குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றுங் குடநாட்டார் தந்தையை அச்சனென்றுங் கற்கா நாட்டார் வஞ்சரைக் கையரென்றும் வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்றும் பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்றும் அருவாநாட்டார் செய்யைச் செறுவென்றும் அருவாவடதலையார் புளியை எகினமென்றுஞ் சீதநாட்டார் தோழனே எலுவனென்றும் வழங்குப. பிறவும் வந்துழிக் காண்க.

இனி இவ்நிலைச் சூழ்ந்த தமிழொழி பதினேழ்நிலத்தினையுஞ் "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்—கொங்கணங் கன்னடங் கொல்லங் தெலுங்கங் கலிங்கம் வங்கங்—கங்கமகதந் கவுடங் கடாரங் கடுங்குசலங்—தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ் புவி தாயினையே.' இதனுன் அறிக. அருணம்•காம்போசம்•சூழம் கூவிளம் பல்லவம் அங்கம் என்றற்றொடக்கத்தனவும் இவற்றின் பரியாயமும் இவற்றின்பகுதியுமாய் இவற்றுள்ளே அடங்குமென்க. அத்தோவென்பது சிங்களச்சொல். கரைய சிக்க குளிரவென்பன கருநடச்சொல். எருத்தைப் பாண்டிலென்பது தெலுங்குச்சொல். மாமரத்தைக் கொக்கென்பது துளுவச்சொல். ழிந்த சொற்களும் ஷ்துழிக் காண்க. (கசு)

கஎடு. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானு மீரெழுத் தாணு மியைவன வடசொல்:

இது மேல் வடசொல்லெனறதன இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவாகிய எழுத்தானும் ஆரியத்திற்கே உரிய எழுத்தானும் அவவிரண்டனுளும் ஆக்கப்பட்டு ஈண்டைக்கு ஏற்ற பெற்றியாய்த் திரிந்து பொருந்துவன வடசொல்லாம். எ - று.

பொது எழுத்தாவன அச்சு என்று வழங்கும உயிர பதினறனுள் இடையினஞ்கும் ாற்றிலிரண்டும் ஒழித்து ஒழிந்தபத்தும் அல் என்று வழங்கும் மெய் மூப்பத்தேழனுட் கசடதப என்னும் ஐந்து வருக்கங்களின் இடைக்கண் உரப்பியும் எடுத்துங் கனைத்துஞ் சொல்லப்பட்ட பதினேந்தும் ஒழித்து ஒழிந்த அவவருக்கங்களின் முதலினும் ாற்றினும் நின்ற பத்தும் யரலவள என்னும் ஐந்துமாகிய இருபத்தைந்துமாம். சிறப்பெழுத்தாவன உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்துவருக்கங்களின் ஒழிந்த பதினேந்தும் மூப்பதாம் மெய்முதல் நான்கும் மூப்பத்தைந்தாம் மெய்முதல் மூன்றுமாகிய இருபத்தெட்டுமாம்.

வரலாறு;—வாரி மேரு குங்குமம் மணி மானம் மீனம் வீரம் வேணு காரணம் காரியம் நிமித்தம் காரகம் என்றாற்போல்வன அடிப்பட்ட சான்றோர் செய்யுட்கண் இயைந்து வந்தன. கமலம் அமலம் மூலம் கோபம் ஞானம் ஞேயம் தமாலம் தாரம் திலகம் நாமம் யானம் யோனி உற்பலம் என்றாற்போல்வன அவரோ ஒருதன்மையர் செய்யுட்கண் இயைந்துவந்தன. இவவிருவகைமொ

ழியும் பொதுவெழுத்தான் இயன்றன. "அரமியவியலகத்தியம்பும்" "தசநான்கெய்தியவிணமருணூன்முள்" "வாதிகையன்னகவைக் கதிரிறைஞ்சிக்—கமிந்தேரிராமனுடன்புணர்சீதையை" "பேதையல் லேமேதையங்குறுமகள்" "தைப்பமைசருமத்து" என்முற்போல்வன அடிப்பட்ட சான்றோர்செய்யுட்கண் இயைந்து வந்தன. தந்திரம் சூத்திரம் விருத்தி அருத்தாபத்தி உத்தி என்முற்போல்வன நூலுள் இயைந்து வந்தன. பங்கயம் இடபம் விசயம் இருடி களம் மேகம் பந்தம் மயானம் விடம் துங்கம் பலம் பாரம் சற்சரை சாதி சித்தி சாதனம் அயன் அரி அரன் அருகன் ஆரம் சிங்கம் மோகம் தாமம் பக்கம் சூலம் சதம் போதகம் போதம் சத்தம் சலம் போகம் யோகம வந்தனை வேலை சாலை மாலை உவமை வனிதை புரி மேதினி சூமரி நதி அரங்கம் இயக்கன் உலோபம் உலோகம் நிருத்தம் கீதம் வாச் சியம் வச்சிரம் அருத்தம் கருமம் கருப்பம் காப்பியம் பருப்ப தம் என்முற்போல்வன அவரோடு ஒருதன்மையர் செய்யுட்கண் இயைந்து வந்தன. இவையெல்லாம் பொதுவுஞ் சிறப்புமாம் ஈரெ ழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும் இயற்றப்பட்டு ஆரியச்சிதைவாய்த் திரிந்து ஏற்கும் எழுத்துக்களான் மருவிவந்தன. பிறவும் அன்ன.

ஒன்றெனமுடித்தலான் நட்டம் கண்ணன் என்முற்போலும் பாகதச்சிதைவாய் மருவிவந்தனவுங் கொள்க.

இவவாரியச்சொல் ஒருநிலத்திற்கே உரித்தன்றிப் பதினெண் ணிலத்திற்கும் விண்ணிற்கும் புவனத்திக்கும் பொதுவாய்வருதலிற் திசைச்சொல்லுள் அடங்காமையான் வேறுசூறினர். அற்றேல் வடசொல்லென்றது என்னெனின் ஆண்டு வழக்குப்பயிற்சி நோக்கியென்க. இவவெழுத்து இவவெழுத்தாய்த் திரிந்து வருமென வரையறுத்து ஓதப்புகின் அவவரையறையிற் பிறழ்ந்தும் வருதலின் அங்ஙனம் ஓதாது 'இயைவனவடசொல்' என்றார். "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ—யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" "திதைந்தன வரினு மியைந்தன வரையார்" என்றார் ஆசிரி யர் தொல்காப்பியனுமென்க. (கஎ)

கஅசு. பெயரெனப் படுபவை தெரியுங் காலை
யிடுகுறி காரண மரபோ டாக்கந
தொடர்ந்து தொழிலல காலந தோற்றற
வேற்றுமைக் கிடனுய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாகிப் பாற்படப்
பொருள்புலப் படுப்பன வென்மனார் புலவர்.

இவ்வதிகாரத்துட் சொல்லிலக்கணம் உணர்த்துவான்புகுந்து ஒருவகையாற் சொல்லாவது இவ்வியல்பிற்றென்பது தோன்ற அதன் பகுதியும் அஃது உணர்த்தும் பொருளும் அப்பொருட்கூறும் அவற்றை உணர்த்தும் இடமும் உணர்த்தும் பகுதியும் உரைதத்துப் பின்னும் அச்சொல்லையே பெயராமுதலாக வகுத்துக்கூறிப் பின்னர் விரித்துக்கூறுவான் தொடங்கினவற்றுள் இது டெயரது பொது விதியும் அதன் பகுதியுங் கூறுகின்றது.

இ - ள். பெயரென்று கூறப்படுவன இத்தன்மையவென்று அவற்றின் இயல்பு ஆராயுமிடத்துப் பிறிதோர் நிமித்தமின்றி வழங்குதற் பயத்தவாய் இதற்கு இது குறியென்று இட்டு வழங்கிவருதலேயும் இவ்வியல்பிற்று இதுவென்று ஒர்நிமித்தம்பற்றி வருதலேயும் மரபுபற்றி வருதலேயும் ஒன்றன்பெயரை அதற்கு இயைபுடைய பிறி தொன்றற்கு ஆக்கும் ஆக்கம்பற்றி வருதலேயும் பற்றி வினையான் வருவனவே காலத்தை விளக்க ஒழிந்தன காலத்தை விளக்காதனவாகி எட்டு வேற்றுமையுஞ் சார்தற்கு இடனுய் இருதிணை ஐம்பால் மூவிடங்களின் ஒன்றற்கு உரியவும் பலவற்றிற்கு உரியவுமாகிப் பகுதிப்படப்பொருளை விளக்குவனவாகிய சொற்களாமென்று சொல்லுவர் அறிவுடையோர். எ - று.

பெயரென்றது பொருள். அஃது ஈண்டு ஆகுபெயரான் அதனை உணர்த்துஞ்சொல் மேல் நின்றது.

வரலாறு;—நிலம் நீர் சோறு கூழ் என்றாற்போல்வன இடுகுறியாய்வந்தன. குழையன் நிலத்தன் கரியன் என்றாற்போல்வன காரணக்குறியாய் வந்தன. பாகன் இடையன் என்றாற்போல்வன மரபுபற்றி வந்தன. தெங்கு கமுகு என்றாற்போல்வன ஆக்கம்பற்றி வந்தன. உண்டான் தின்றான் என்றாற்போல்வன காலங்காட்டிப் படுத்தலோசையான் வினைமுதல் மேல் நின்ற வினைப்பெயர். உண்டவன் உண்ணுமவன் என்றாற்போல்வன காலங்காட்டி ஓசைவேறுபாட்டானன்றித் தாமே வினைமுதல்மேல் நின்ற வினைப்பெயர். "கொலைவர்கொடுமரர்தேய்த்தார்" அவனேறிற்றுக்குதிரை என்றாற்போல்வன காலங்காட்டிப் படுத்தலோசையாற் செயப்படுபொருண்மேல் நின்ற வினைப்பெயர். யான்சொன்னவன் உண்பவைகாழி என்றாற்போல்வன காலங்காட்டி ஓசைவேறுபாட்டானன்றித் தாமே செயப்படுபொருள்மேல் நின்ற வினைப்பெயர். உண்டல் தின்றல் என்றாற்போல்வன காலங்காட்டாது புடைபெயர்ச்சிமாத்திரமே உணர்த்தி நிற்கும் வினைப்பெயர். பூசல் வேட்டை என்றாற்

போல்வன காலங்காட்டலும் புடைபெயர்ச்சி உணர்த்தலுமின்றி நிற்கும் வினைப்பெயர். பிறவாற்றான் வருவன உளவேல் அவையுங் கொள்க. ஏனவிகற்பமெல்லாம் மேற் பெறப்படும். (கஅ)

களவு. அவற்றுட், கிளையெண் குழூஉமுதற் பல்பொரு
மூர்வா ளகம்புறனை மூதல நிலனயாண் [டிணைதே
டிருது மதிநா ளாதிக் காலந
தோளகுழன் மார்புகண காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப பாதிப் பலகுண
மோகை லீதை லாதிப் பல்வினை
யிவறலிறுதி சுடு விஞபிற மற்றை
யுறறனவ லீறு நமபி யாடூஉ
விடலை கோவேள குரிசி றோன்ற
லிளனன் வாண்பெய ராகு மென்ப.

மேல் ஒன்றற்கு ஏற்பவும் என்றவற்றுள் இஃது ஆண்பாற்கு உரிய பெயராமாறு கூறுகின்றது.

இ - ள். மேற்கூறிய பெயர்களுள் கால்வகைக் கிளையும் எண்ணுங் குழூவும் முதலிய பல்பொருளும் ஐந்திணையுந் தேயமும் ஊரும் வானமும் அகமும் புறமும் முதலிய நிலனும் யாண்டும் பருவமுந் திங்களும் நாளும் முதலிய காலமுந் தோளுங் குழலும் மார்புங் கண்ணுங் காதும் முதலிய உறுப்பும் அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறனுங் கதியுஞ் சாதியுங் குடியுஞ் சிறப்பும் முதலிய பண்பும் ஓதலும் ஈதலும் முதலிய பலதொழிலுமாகிய இவவறுவகையினையுஞ் சுட்டினையும் வினவினையும பிறவென்பதனையும் மற்றையென் பதனையும் பொருந்திவரும் னகர ஈற்றுப் பெயர்களும் நம்பி ஆடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் என்னுந் தம்மை உணர நின்ற பெயா ஏழும் இவைபோல்வன பிறவுமாகிய பெயர்களும ஆண்பாற்கு உரிய பெயாகளாமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

ஆண்பாலெனவே உயாதிணையென்பதூஉம் ஒருமையென் பதூஉந் தாமே விளங்கும். மேல்வருவனவற்றிற்கும் இவவுரை கொள்க.

வரலாறு;—திமன் நமன் நுமன் எமன் எனவரும் இத்திறத் தன நான்குங் கிளைப்பெயர். தம்மான் நம்மான் நும்மான் எம்மான்

இவையும் அன்ன. ஒருவனென்பது எண்ணியற்பெயர். அவையத்தான் அத்திகோசத்தான் என்றாற்போல்வன குழூஉப்பெயர். இளந்தூண் மகார் தம்மிற் கூடிவினையாடல் குறித்த பொழுதைக்குத் தாமே படைத்து இட்டுக்கொண்டது. பட்டிபுத்திரன் கங்கமாத்திரன் என்றாற்போலுங் கூடிவருவழக்கின் ஆடியற்பெயரும் அன்ன. பொருளன் பொன்னன் முடியன் என்றாற்போல்வன பொருட்பெயர். இவையெல்லாம் பொருள்பற்றி வந்தன. வெற்பன் பொருப்பன் சிலம்பன் கானவன் குறவன் எனவும் எயினன் பறவன் எனவும் நாடன் பொதுவன் அண்டன் ஆயன் எனவும் பகிழ்நன் ஊரன் வினைஞன் களமன் எனவும் சேர்ப்பன் துறைவன் பரதன் நுளையன் எனவும் அருவாளன் சோழியன் எனவும் அப்பாஃறான் பேரூர்கிழான் கருவூரான் கூடலான் உறையூரான் எனவும் வாஞன் அகத்தான் புறத்தான் எனவும் வரும் இத்திறத்தனவெல்லாம் இடம்பற்றி வந்த இடப்பெயர். ஈராட்டையான முவாட்டையான் எனவும் வேனிலான் காரான் எனவும் தையான் மாகியான் எனவும் ஆதிரையான் ஓணத்தான் எனவும நெருநலான் இற்றையான் எனவும வரும் இத்திறத்தனவெல்லாங் காலம்பற்றிவந்த காலப்பெயர். திணிதோளான் சுற்குழலான் வரைமார்பான் செங்கண்ணன் அலைகாதான் என்றாற்போலனவெல்லாஞ் சினைபற்றி வந்த சினைப்பெயர். பெரியான் சிறியான் எனவும் அறிவன் புலவன் எனவும் பொன்னெப்பான் மணியொப்பான் எனவும் கூன குறளன் எனவும் கரியான் செய்யான் ஏனவும் மகன் மானுடன் தேவன் நாகன் எனவும் அந்தணன் அரசன் வணிகன் வேளாளன் எனவும் சேரன் சோழன் பாண்டியன் மலையமான் கட்டிமான் எனவும் ஆரியன் படைத்தலைவன் சேனுவரையன் எனவும் வரும் இத்திறத்தனவெல்லாங் குணம் பற்றிவந்த பண்புப்பெயர். ஓதுவான் ஈவான் உண்பான் உறங்குவான் எனவும் ஊணன் தினன் எனவும் தச்சன் கொல்லன் கணக்கன் பிணக்கன் எனவும் வரும் இத்திறத்தனவெல்லாங் தொழில் பற்றி வந்த தொழிற்பெயர். அவன் இவன் உவன் எனவும் அன்னன் அணையன் எனவும் வரும் இத்திறத்தனவெல்லாஞ் சுட்டி அடித்துவந்த சுட்டுப்பெயர். எவன் ஏவன யாவன் என்றாற்போல்வனவெல்லாம் வினு அடித்துவந்த வினாப்பெயர். பிறன் மற்றையன் என இவை இடைச்சொற்களாகிய பிற மற்றை அடித்து வந்த பெயர். நம்பி ஆஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் என்பன தனிப்பெயர். இன்னனவென்றத்தனை ஆண்மகன் ஏனதி காவிதி எட்டி வில்லி வாளி குடுமி சென்னி கிள்ளி வழுதி செட்டி கோற்றங்தை சேய் ஏந்தல் செம்மல் அண்ணல் ஆண்டையான் ஆங்கணன்

ஆயிடையான் என்றாற்போல்வனவுங் கொள்க. அந்தணன் முதலியன ஓரோவழிப் பாம்புமுதலாயினவற்றையும் உணர்த்துமன்றே? அவ்வழி அஃறிணைப்பெயராமேனும் உயர்திணை ஆண்பாலுணர்த்தல் பெரும்பான்மையாகலிற் சாதிப்பெயராகக் கூறினார். (கக)

கஎஅ. கிளைமுத லாகக் கிளந்த பொருளகளுள
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவுங
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

இது பெண்பாற்கு உரிய பெயராமாறு கூறுகின்றது.

இ - ள். மேற் கிளைமுதலாகக் கூறப்பட்ட பொருட்பகுதிகளுள் ளகர ஒற்றிற்கும் இகரத்திற்கும் பொருந்திய ஈற்றுள் வருவனவுந் தோழி செவிலி மகடூஉ நங்கை தையல் என்னுந் தம்மை உணரநின்ற பெயர் ஐந்துடனே இவைபோல்வன பிறவும் பெண்பாற்கு உரிய பெயர்களாம். எ - று.

ஏற்ற ஈற்றவுமென்றார் ளவ்வொற்று ஏற்பனவும் இகரம் ஏற்பனவும் இரண்டும ஏற்பனவும இரண்டும ஏலாதனவும் உள என்றற்கு.

வரலாறு:—தபள் நமள் நுபள் எமள் எனவும் தம்மாள் நமமாள் நும்மாள் எமமாள் எனவும அவையதாள் அதிகோசத்தாள் எனவும் பொருளாள் பொன்னுள் முடியாள் எனவும இவ்வாறே னகர ஈற்றை ளகர ஈறாக ஏற்பன அறிந்தொட்டுக. ஒருத்தி குறத்தி எயிற்றி மறத்தி ஆய்ச்சி உழத்தி பரத்தி அருவாட்டி சோழிச்சி பேரூர்கிழத்தி அம்பர்கிழத்தி பழையனூருடைச்சி அரசூருடைச்சி மானூடத்தி தேவி நாகி பார்ப்பனி அரசி வாணிச்சி வெள்ளாடிச்சி படைதலைவி சேனைவரசி கணக்கிச்சி தச்சிச்சி என்றாற்போல்வன இகரம் ஏற்றன. திணிதோளாள் திணிதோளி சுரிகுழலாள் சுரிகுழலி கூனுள் கூனி எனறாற்போல்வன அவ்விருவகையும் ஏற்றன. வெற்பன் பொருப்பன் என்றாற்போல்வன அவ்விருவகையும் ஏலாதன. தோழிமுதலிய ஐந்துந் தனிப்பெயர்.

இன்னன எனறதனானே பெண்டாட்டி பெண்மகள் மகள பெண்டு இருவீர் பாங்கி பேதை பெதும்பை முதலியனவும் நாணுவ

ரையிறந்து புறத்து வினையாடும் பருவத்துப் பெண்மகன் எனவருவ தூஉம் பிறவுங்கொள்க. "ஊரார்பெண்டெனமொழிகவென்னை" "நின்—பெண்டெனப்பிறர்கூறும்பழிமாறப்பெறுகிற்பின்" எனச் செய்யுட்கண்ணும் பெண்டு வருமாறு காண்க. (உ0)

கஎக. கிளந்த கிளமுத லுற்றரவ் வீற்றவுங்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

இது பலர்பாற்கு உரிய பெயராமாறு கூறுகின்றது.

இ - ள். மேற் கிளமுதலாகக் கூறப்பட்ட பொருட்பகுதிக ளைப் பொருந்திவரும் ரகார ஒற்றை ஈறாக உடைய சொற்களும் அவற்றுட் கள்ளென்னும் விகுதியை ஈறாக உடைய சொற்களின் ஈண்டைக்குப் பொருந்துவனவும் இவைபோல்வன பிறவும் பலர் பாற்கு உரிய பெயரின் திறனும். எ - று.

வரலாறு;—தமர் நமர் தூமர் எமர் ஒருவர் இருவர் மூப்பத்தூவர் என னகர ஈற்றை ரகர ஈறாக்கிக் காண்க. அடிகள் முனிகள் மனுக்கள் கோக்கள் வேள்கள் விடலைகள் வில்லிகள் வாளிகள் கணிகள் மடந்தைகள் பரத்தைகள் உழத்திகள் மறத்திகள் என்றாற் போல்வன கள்ளீற்றுள் ஈண்டைக்கு ஏற்பன. பிற என்றதனானே பாந்தர் மக்கள் மகார் சிறார் எல்லாரும் தந்தையர் தாயர் பெருங்காலர் பெருந்தோளர் பட்டிபுத்திரர் கங்கமாத்திரர் பெண்டிர் பெண்டுகள் மடந்தையர் உழத்தியர் வேளிர் என்றாற்போல்வன பிறவுங் கொள்க. "வெறியுறுகமழ் கண்ணி வேந்தர் கட்காயினும்" எனவும் "பிறந்தவர்களெல்லாம்" எனவும் வருவனவெல்லாம்பற்றிற்கும் ரகர ஒற்றுங் கள்ளென்விகுதியும் ஒருங்குநிற்பினும் ரகார ஒற்றே பால்விளக்கலின் ஏனைக் கள்ளீறு இசைகிறைத்து நின்றதேயாம். மேல் இவ்வாறு வருவனவற்றிற்கெல்லாம் இவ்வுரைகொள்க. (உக)

கஅ0 வினைவுஞ் சுட்டுஞ் சுட்டுமுத லாபதமும்
பொருண்முத லாறுந தொடருந துவ்வீ
றொன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

இஃது அஃறிணையொருமைப்பெயராமாறு கூறுகின்றது.

இ - ள். வினைவெழுத்துக்களையுஞ் சுட்டெழுத்துக்களையுஞ் சுட்டெழுத்துக்களே முதலாகவுடைய ஆய்தவெழுத்தையும் பொருண்

முதலாறனையும்பற்றிவருந் துவவீற்றுச்சொற்களும் ஒன்றென எண்ணப்படும் பொருண்மேல் நிற்கும் ஒன்றென்னுஞ் சொல்லும் அவை போல்வனபிறவும் அஃறிணையொருமைப் பெயர்களாம். எ - று.

வரலாறு;—ஏது எது யாது எனவும் அது இது உது எனவும் அஃது இஃது உஃது எனவும் குழையது புறத்தது மூலத்தது கோட்டது கரியது ஊணது எனவும் ஒன்று எனவும் வரும். இன்னன என்றதனானே பிறிது மற்றையது உள்ளது இல்லது எனமுற்போல்வன பிறவுங்கொள்க. (உஉ)

கஅக முனைரவ்வொடு வருவை யவ்வுரு
சுட்டிறு வவவுங் களளிறு மொழியு
மொனற லெண்ணு மூளள வில்ல
பலல சிலல வுளவில பலசில
வெனபவும் பிறவும் பலவின் பெயரே.

இஃது அஃறிணைப்பன்மைப்பெயராமாறு கூறுகின்றது.

இ - ள். மேல் அஃறிணையொருமைக்கு ஓதிய பொருண்மைக்கண் ஏற்பனபற்றி வரும் வகர ஐகார ஈற்றுச்சொற்களும் அகர ஈற்றுச்சொற்களுஞ் சுட்டெழுத்துக்களோப்பொருந்திய வகர ஈற்றுச்சொற்களுங் கள்ளென்னும் விருதினையாருகவுடைய சொற்களும் ஒன்றனை ஒழித்த ஏனை எண்ணப்படும் பொருண்மேல் நிற்குஞ் சொற்களும் உள்ள என்பதுமுதலிய எட்டும் இவைபோலவன பிறவும அஃறிணைப்பனமைப்பாற்கு உரிய பெயர்களாம். எ - று.

வரலாறு;—ஏவை எவை யாவை அவை இவை உவை நெடியவை குறியவை கரியவை செய்யவை நல்லவை தீயவை எனவும் குழையன குழைய புறத்தன புறத்த மூலத்தன மூலத்த கோட்டன கோட்ட கரியன கரிய ஊணன ஊண எனவும் அவ இவ உவ எனவும் ஆக்கள் குதிரைகள் தெங்குகள் கடல்கள் மலைகள் எனவும இரண்டு பத்து நூறு ஆயிரம் எனவும் உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில எனவும வரும். பிற என்றதனானே யாபல்லவை சில்லவை உள்ளவை இல்லவை உள்ளன இல்லன பிற மற்றைய மற்றையன எனமுற்போல்வனவுங் கொள்க. (உங)

கஅஉ. பாலபகாவஃறிணைப் பெயர்களபாற் பொதுமைய.

இஃது அஃறிணையியற்பெயர்க்கு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

இ - ள். கள்ளோடு சிவணுமையிற் பால்வரையறைபடாது நின்ற அஃறிணையியற்பெயர்கள் அத்திணை இருபாற்கும் பொது வாய்நிற்றலே உடைய. எ - று.

வரலாறு;—ஆவந்தது வந்தன குதிரைவந்தது வந்தன ஆவொன்று பல குதிரையொன்று பல எனவரும். (உசு) 5

கஅசு. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர நான்குஞ்
சினைமுதற பெயரொரு நான்குமுறை யிரண்டிற
தன்மை நானகு முன்னிலே யைநது
மெல்லாற தாநதா னின்னவும பொதுபபெயர்.

நிறுத்தமுறையானே ஒன்றற்கு ஏற்பன கூறிப் பொதுப்பெயர் கூறுவனவற்றுள் இஃது அதன் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது. 10

இ - ள். சாத்தன் சாத்தி கோதை யானை என்றாற்போல வழங்குதற்பயத்தவாய நிமித்தமின்றிப் பொருள்பற்றி வரும் இடுகுறிப்பெயராகிய முதற்பெயர்வகை நான்கும் முடவன் முடத்தி செவியிலி நெடுங்கழுத்தல் என்றாற்போலச் சினையுடைமையாகிய நிமித்தம் பற்றி முதன்மேல் வருஞ் சினைப்பெயர்வகை நான்கும் முடக்கொற்றன் முடக்கொற்றி கொடும்புறமருதி பெருங்கால்யானை என்றாற்போலச் சினைப்பெயரோடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாது வருஞ் சினைமுதற்பெயர்வகை நான்குந் தந்தைதாய் என்றாற்போலப் பிறவியான் ஒருவரோடு ஒருவற்கு உளதாம் இயைபுபற்றி வரும் பெயராகிய முறையுடைப்பொருண்மேல் வரும் முறைப்பெயர்வகை இரண்டும் யான் நான் யாம் நாம் எனவரும் தன்மைப்பெயர்வகை நான்கும் எல்லீரும் நீயிர் நீவிர் நீர் நீ எனவரும் முன்னிலைப்பெயர் வகை ஐந்தும் எல்லாம் எனவும் தாம் எனவும் தான் எனவும் விதந்தோதப்பட்ட பெயர்வகை மூன்றுமாகிய இருபத்தாறுபெயரும் இவைபோல்வன பிறவும் விரவுப்பெயர்களாம். எ - று. 15 20 25

இவைபோல்வன பிறவாவன மகஞ்குழவி என்றாற்போல்வனவுங் காடன் காடி நாடன் நாடி தரையன் திரையன் என்றாற்போல்வனவும் முதியானெனப் பிராயம்பற்றியுஞ் சுமையனெனத் தொழில்பற்றியும் வருவனபோல்வனவும் பிறவுமாம். (உஞ) 30

கஅச ஆண்மை பெண்மை யொருமை பன்மையி
னுமக நான்மைக ளாண்பெண் ணவற்றுள்
முறைபபெய ரிரண்டா மென்மனுர் புலவர்.

இது மேற் தொகைப்படுத்துரைத்த பெயர்களை வகைப்படுத்து உரைக்கின்றது.

இ - ள். ஆண்மை முதலிய நால்வகையானே மேற்கூறிய முதற்பெயர் முதலாகிய மூன்றும் ஒவ்வொன்று அங்ஙனங் கூறிய நான்காதற் தன்மையைப் பொருந்தும்; ஆணும் பெண்ணுமாகிய இருவகையானே முறைப்பெயர் இரண்டாதற் தனமையைப் பொருந்துமென்று கூறுவர் அறிந்தோர். எ - று.

வரலாறு;—ஆண்மைமுதற்பெயர் பெண்மைமுதற்பெயர் ஒருமைமுதற்பெயர் பன்மைமுதற்பெயர் எனவும் ஆண்மைச்சினைப்பெயர் பெண்மைச்சினைப்பெயர் ஒருமைச்சினைப்பெயர் பன்மைச்சினைப்பெயர் எனவும் ஆண்மைச்சினைமுதற்பெயர் பெண்மைச்சினைமுதற்பெயர் ஒருமைச்சினைமுதற்பெயர் பன்மைச்சினைமுதற்பெயர் எனவும் ஆண்மைமுறைப்பெயர் பெண்மைமுறைப்பெயர் எனவும் வரும். (உசு)

கஅடு. அவற்று, ளொன்றே யிருதிணைத் தன்பா லேற்
பன்மை சுட்டிய பெயரலங் கடையே. [கும்

இது மேற்கூறிய பெயர் பதினெனகனுட் பன்மைசுட்டிய பெயர் ஒழித்து ஒழிந்தவை இருதிணையும்பற்றிப் பால் உணாததுமாறு கூறுகின்றது.

இ - ள். ஆண்மைசுட்டிய பெயர்கான்கும் பெண்மைசுட்டிய பெயர்கான்கும் ஒருமைசுட்டிய பெயர்மூன்றும் பன்மைசுட்டியபெயர்மூன்றுமாகிய பெயர் பதினெனகனுள் ஒருபெயரே இருதிணையிடத்துந் தான் உணர்த்தற்கு உரிய பால்களே உணர்த்தும் பன்மைசுட்டிய பெயர்மூன்றும் அல்லாத இடத்து. எ - று.

வரலாறு;—சாத்தன்வந்தது வந்தான் முடவன்வந்தது வந்தான் முடக்கொற்றன்வந்தது வந்தான் தந்தைவந்தது வந்தான் என ஆண்மைசுட்டிய பெயர்கான்கும் அஃறிணை ஆண் ஒன்றனையும் உயர்திணை ஒருவனையுஞ், சாத்திவந்தது வந்தாள் முடத்திவந்தது வந்தாள் முடக்கொற்றிவந்தது வந்தாள் தாய்வந்தது வந்தாள் எனப்

பெண்மைசுட்டிய பெயர்நான்கும் அஃறிணைப் பெண் ஒன்றனையும் உயர்திணை ஒருத்தியையுங், கோதைவந்தது வந்தான் வந்தாள் செவியிலிவந்தது வந்தான் வந்தாள் கொடும்புறமருதிவந்தது வந்தான் வந்தாள் என ஒருமைசுட்டிய பெயர்மூன்றும் அஃறிணையொருமையினையும் உயர்திணையொருமையினையும் உணர்த்தியவாறு காண்க. மூடஞ் சினையது விகாரமாதலிற் சினையாயிற்று. நுங்தை எந்தை என்பனவும் ஆய் யாய் என்பனவும் முறையே ஆண்மை முறைப்பெயராயும் பெண்மைமுறைப்பெயராயும் வருமெனக்கொள்க. தம்பி நும்பி எபி தங்கை நுங்கை எங்கை என்பனவும் அவவிருகூற்று முறைப்பெயருள் அடங்கும். (உஎ)

கஅசு. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொனறே பலவே யொருவ ரென்னு
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே.

இது பன்மைப்பெயர் இருதிணையும்பற்றிப் பால் உணர்த்து மாறு கூறுகின்றது.

இ - ள். பன்மைசுட்டிய மூன்றுபெயரும் அஃறிணையொருமையும் அததிணைப்பன்மையும் உயர்திணையொருமையுமென்று சொல்லப்படும் மூன்றுபாற்கும் ஒத்த உரிமைய. எ - று.

வரலாறு;—யானைவந்தது வந்தன வந்தான் வந்தாள் எனவும் கெடுங்கழுத்தல்வந்தது வந்தன வந்தான் வந்தாள் எனவும் பெருங் காலியானைவந்தது வந்தன வந்தான் வந்தாள் எனவும் வரும். பன்மைசுட்டியபெயரென்றது ஒருமைசுட்டுதலோடு இயைபுநீக்காது தன்னோடு இயைபின்மைமாத்திரம் நீக்கித் தலைமைபற்றிவந்து அடுத்த பன்மைசுட்டுதலென்னும் விசேடத்தான் விசேடிக்கப்பட்டுத் தலைமைபற்றிய வழக்காய் நின்றது. ஆதிண்டுகுற்றியென்றது மேதிமுதலியன நீண்டுதலோடு இயைபுநீக்காது தன்னோடு இயைபின்மைமாத்திரம் நீக்கித் தலைமைபற்றிவந்து அடுத்த ஆதிண்டுதலென்னும் விசேடத்தான் விசேடிக்கப்பட்டுத் தலைமைபற்றிய வழக்காய் நின்றாற்போலப் பன்மைசுட்டுதற்குத் தலைமை ஆண்மைசுட்டிய பெயர்முதலிய மூன்றனும் ஒருகாற் சுட்டப்படும் ஒன்றும் ஒருவரும்போலாது இப்பெயரானே சுட்டப்படும் உரிமையுடைமையாற் கொள்க. பலபால்களையுஞ் சுட்டிநிற்றலிற் பன்மைசுட்டிய பெயரென்றாலோவெனின் ஒருமைப்பெயர் முதலியனவும் பலபால்களையுஞ் சுட்டிநிற்றலின் அவற்றையும் பன்மைசுட்டிய பெயரெனல் வேண்டுமாகலின் ஆகாவென மறுக்க. (உஅ)

கஅள். தன்மை யானுன் யாநா முன்னிலை
யெலலீரு நீயிர் நீவிர் நீநீ
யல்லன படர்க்கை யெல்லா மெனலபொது.

இது மேற் தன்மை நான்கும் முன்னிலை ஐந்துமென்னுர் அவை இவையென்பதூஉம் ஏனைப்பெயர்கள் இவ்விடத்தனவா மென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள். மேற் கூறிப்போந்த தன்மைப்பெயர் நான்காவன யானென்பதூஉம் நானென்பதூஉம் யாமென்பதூஉம் நாமென்ப தூஉமாம். முன்னிலைப்பெயர் ஐந்தாவன எல்லீருமெனபதூஉம் நீயி ரென்பதூஉம் நீவிரென்பதூஉம் நீரென்பதூஉம் நீயென்பதூஉ மாம். இவையொழித்து ஒழிந்த பெயர்களெல்லாம் படர்க்கையிடத் திற்கு உரியனவாம். அவற்றுள் எல்லாமென்பது மூன்றிடத்திற்கும் உரித்தாம். எ - று.

"பேய்தூத மந்தி கிளிபூவை பேசுதலா—னுகுமே தன்மை பொது" என்பவாகலிற் தன்மையும் விரவுப்பெயராயிற்று.

"நுமரெங்குந்தீதின்றி நும்மையான்காப்பே—னமரெங்குநோ டியரும்பிணங்கின்பேன்—புனரங்கியென்பதென் புல்லியமெய்ப் பெயர்—நமரங்காள்பேணுபி னன்கென்றதுவே" எனவும் "மூன் றைந்தின்மூன்றிட்ட மொய்கொள்கணங்களுட்—டோன்றலம்பூத மென் மேற்றற்கிரியல்" எனவும் "ராங்குநியெம்மைநோக்கி யென் செய்தியெமக்குவாணு—ணீங்கினிறிதுநிற்பிற்காண்டியானீயுமென் னத்—தூங்கித்தான் றுளங்கிமந்தி தொழுத்தையென் செய்வதென் று—தாங்குபுதழுவிகொண்டு தன்னேத்தான்பழித்ததன்றே." எனவும் "பூவையுங்கிளியுங்கேட்டுப் புழைமுகம்வைத்துநோக்கிக்—கா வலன்மடந்தைநெஞ்சங் கற்கொலோவிரும்புகொல்லோ—யாவது மூருகாதென்றுந் தவறிலனருளுஞ்செம்பொற்—பாவையென்றிரத் துமென்ற பறவைகடம்முட்டாமே." எனவும் வருஞ் செய்யுட்க ளான் அவைபேசியவாறு காண்க. (உக)

கஅஅ. வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

இது வினையின்பெயர்க்கு எய்தியது; இகந்துபடாமைக்காத்த லும் வினையாலணையும்பெயர்க்கு எய்தியது விலக்கலும் துதலிற்று.

இ - ள். வினையினதுபெயரே படர்க்கையிடத்திற்கு உரித்தாம். வினையாற் பிறிதொன்றற்கு எய்தியபெயர் மூன்றிடத்திற்கும் உரித்தாம். எ - று.

வரலாறு;—உணல் தினல் செலவு வரவு என்றாற்போல்வன வினையின்பெயராய் அவவப் புடைபெயர்ச்சி உணர்த்திப் படர்க்கைக்கு உரியவாய்நின்றன. பூசல் வேட்டை கூத்து என்றாற்போல்வன வினையின்பெயராய்ப் புடைபெயர்ச்சி உணர்த்தாது நின்றன. இவையும் அன்ன. வந்தான் வந்தாள் வந்தேன் வந்தேம் வந்தாய் வந்தீர் என்றாற்போல்வன வினையாலணையும்பெயராய்ப் பிறிதுபொருள் உணர்த்தி மூன்றிடத்திற்கும் உரியவாய்நின்றன. இவை பெயராயினபொழுது உருபேற்றலும் வினையாயினபொழுது பெயர் கொண்டு முடிதலுந் தப்முள்வேறுபாடென்று உணர்க. வந்தவன் சென்றவன் என்றாற்போல்வனவும் வினையாலணையும்பெயரேயாம். பிறவும் அன்ன. (கூ0)

கஅகூ. தான்யா னுனீ யொருமை பனமைத்தாம்
யாம்நா மெலாமெலீ நீயிர்நீர் நீவிர.

இது தான்யானென்பன முதலிய பெயர் பன்னிரண்டும் பாற்கு உரியவாமாறு கூறுகின்றது.

இ - ள். தான் யான் நான் நீ என்னும் நால்வகைப்பெயரும் ஒருவன் ஒருத்தி ஒன்றென்பனவற்றிற்கெல்லாம் பொதுவாகிய ஒருமைப்பாற்கு உரியனவாம். ஒழிந்த எண்வகைப்பெயரும் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மைப்பாற்கு உரியனவாம். எ - று.

வரலாறு;—தான்வந்தான் வந்தாள் வந்தது எனவும். யான்வந்தேன் நான்வந்தேன் எனவும் நீவந்தாய் எனவும் தாம்வந்தார் வந்தன எனவும் யாம்வந்தேம் நாம்வந்தேம் எனவும் எல்லாம்வந்தேம் வந்தீர் வந்தார் வந்தன எனவும் எல்லீரும்வந்தீர் நீயிர்வந்தீர் நீர்வந்தீர் நீவிர்வந்தீர் எனவும் வரும். "மேனியெல்லாம்பசலையாயிற்று" என ஒருமை உணர்த்திநின்றது எஞ்சாப்பொருட்டாயதோர் உரிச்சொல். (கச)

ககூ0. ஒருவ னெனுத்திப் பெயர்மே லெண்ணில.

இது மேற்கூறிய எண்ணியற்பெயருள் ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ - ள். உயர்திணையாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் எண்ணடியாகத்தோன்றுங்காலத்து ஒன்றென்பது அடியாக ஒருவன் ஒருத்தியெனத் தோன்றுவதல்லது அதன்மேல் நின்ற இரண்டு முதலிய ஏண்ணடியாக இருவன் இருத்தியெனத தோன்றுதல் உளவாகா. எ - று. (உ)

ககூக. ஒருவ ரெனப துயரிரு பாற்றுய்ப்
பனமையொடு முடியும் பாங்கிற் றெனப.

இது மேற்கூறிய பல்லோர்பெயரின்பகுதியாய் நின்ற ஒருவ ரென்னும் பெயரின் இயல்பும் அதன் முடிபுங் கூறுகின்றது.

இ - ள். மேற் கூறிப்போந்த எண்ணியற்பெயருள் ஒருவ ரென்று சொல்லப்படும்பெயர் உயர்சொல்லாய் உயர்திணைப்பாலுள் ஒருபால் உணர்த்தாது ஒருவன் ஒருத்தியென்னும் இருபாற்கும் பொதுவாய்ப் பன்மைச்சொல்லோடு முடியும் உரிமையுடைத்து. எ - று.

எனவே தான் காட்டுகின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச் சொல்லோடு முடியாது ரகர றகரதாய்நின்ற சொற்றன்மைக்கு ஏற்ப ஒருவர்வந்தார் ஒருவர் அவர் எனப் பன்மைச்சொல்லோடு முடியுமெனப் பால்பற்றிய மரபுவழு அமைத்தவாறுயிற்று. உயர்திணை இருபாற்கும் பொதுவாய் நிற்றலின் ஈண்டுக் கூறினுர். இனிப் பாங்கிற்றென்ற மிகையாலே சாத்தனுர்வந்தார் மூடவனுர்வந்தார் மூடத்தாமக்கண்ணியார்வந்தார் தந்தையார்வந்தார் என்றுற்போலும் ஆரீற்று விரவுப்பெயருங் கிளியார்வந்தார் நரியார்வந்தார் என்றுற் போலும் அஃறிணை இருபாற்கும் உரிய ஆரீற்றுச் சாதிப்பெயரும் நம்பியார்வந்தார் நங்கையார்வந்தார் இறையனுர்வந்தார் அகத்தியனுர்வந்தார் தொல்காப்பியனுர்வந்தார் என்றுற்போலுஞ் சிறுபான்மை ஆரீற்றுயர்திணைப்பெயரும் பன்மைச்சொல்லோடு முடியுமெனவும் ஆரீறு உயர்த்தற்பொருட்டாய் வருமெனவும் அதுதானே தாம்வந்தார்தொண்டனுரெனச் சிறுபான்மை இழித்தற்குறிப்பிற்றாயும் வருமெனவுங் "கடிவன் முதுமகன் கல்லா மூலற்கு—வதுவை வந்தவன்பறழ்க் குமரி" என்புழிக் கடிவன் மூலன் குமரி என்பன ஒறையே உயர்திணையாண்பால் உணர்த்தும் அன் ஈறும் பெண்பால் உணர்த்தும் இகர ஈறும்பற்றி வருதலின் விரவுப்பெயராமன்றே ஆயினும் அவை ஈண்டுப் பொருட்கு உபகாரப்படுங் கருப்பொருளே உணர்த்துநிற்றலின் உயர்திணையை உணர்த்தாது அஃறிணையே உணர்த்துமெனவும் பொருள்வகையானன்றி இங்கிலத்து இப்பொ

ருள் இப்பெயரான் வழங்கப்படுமெனத் திணைவகையான் உரிமை பூண்டு கருப்பொருள் உணர்த்திநிற்குஞ் "செருமிகுமுன்பிற்கூர்வேற் காளை" "திருந்துவேல்விடலை" என்றற் தொடக்கத்து விரவுப்பெயர்கள் இருதிணையும் உணர்த்துமேனும் உயர்திணையே உணர்த்துமெனவுங் கொள்க. காளை விடலை என்பன உயர்திணைப்பெயரன் மரவெனினும் ஓர் எருத்தையுங் காளை விடலை என்பவாகலின் விரவுப்பெயரெனவே படுமென்பது. இன்னும் அஃறிணையானே எல்லாமென்பது இருதிணைப் பன்மைக்கும் ஒத்த உரிமைத்தேனும் உயர்திணையிடத்து வருங்கால் அத்திணைத் தன்மைப்பன்மைக்கட் பெரும்பான்மையுங் "கண்டனிரெல்லாங்கதுமெனவாங்கே—பண்டறியாதீர்போலநோக்குதிர்" எனவும் "ஊடினீரெல்லாமுருவிலான் றன்ஞாண—கூடினீ ரென்று குயில்சாற்ற" எனவும் முன்னிலைப் பன்மைக்கண்ணும் "நெறிதாழிருங்கூந்தனின்பெண்டிரெல்லாஞ்—சிறுபாகராக" எனப் படர்க்கைப்பன்மைக்கண்ணுஞ் சிறுபான்மை வருமெனவும் இன்னனவென்றதனைத் தழீஇக்கொண்ட பெண்பகனென்பது பெண்மகன்வந்தாள் பெண்மகன் இவள் என ஈறுபற்றி ஆகூவிற்கு ஏற்ற முடிபுகொள்ளாது பொருண்மைபற்றி மகனேவிற்கு ஏற்ற முடிபுகோடலுங் கொள்க. சாத்தன் கொற்றன் என்றற் தொடக்கத்து ஒருமைப்பெயர் நின்று ஆரைக்கிளவியை ஏற்றுச் சாத்தனுர் கொற்றனுரென நிற்றலின் இவை ஒருவரென்னும் ஒருவரை உயர்த்திக்கூறும் பன்மைக்கிளவியின்வேறுதலும் அலவன் களவன் என்றற் தொடக்கத்தன கடிவன் மூலன் என்றற் தொடக்கத்தனபோல விரவுப்பெயராய் நின்று உயர்திணை உணர்த்தாது அஃறிணை உணர்த்துவன அன்மையின் அவை சாதிப்பெயரேயாய் அஃறிணையே உணர்த்திநிற்றலின் ஈண்டுஅமைக்கவேண்டுவதின்றெனவும் உணர்க. (கூ)

ககூஉ. பொருண்முத லாமே டளவைசொற் றுனி
காரணங் காரிய முருத்த னதிபு
லொன்றன் பெயரா னதற்கிய பிறிதத
தொன்முறை யுரைபன வாகு பெயரே.

இது மேல் ஆக்கம்பற்றி வரும் ஆகுபெயர் என்றதன் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். பொருண்முதலாகிய ஆறனுடனே அளவையுஞ் சொல்லுந் தானியுங் காரணமுங் காரியமுங் கருத்தாவும் முதலியனவற்றுள் ஒன்றன்பெயரானே விடாதாக விட்டதாக யாதானும் ஒரு

வாற்றூன் அதனுக்கு இயையுடைய பிறிதொன்றனைத் தொன்று தொட்டு வருமுறையாற் கூறுவன ஆகுபெயராம். எ - று.

வரலாறு;—கடுத்தின்றூன் புளித்தின்றூன் "தாமரைபுரையுங் காமர்சேவடி" "ஆம்பலனுங்குத்துப்பொதிளவி" என்றூற்போல்வன முதற்பொருளை உணர்த்தும் பொருட்பெயரான் அவற்றின் ஒருவழி யுறுப்பாகிய சினைப்பொருளைக் கூறின. குழிப்பாடிகோரிது இப்பட் டெச்சீனம் என்றூற்போல்வன இடப்பெயரான் அவ்விடத்து நிகழ் பொருளைக் கூறின. காரறுத்தது கூதிர்வீசும் கார்த்திகைபூத்தது என் றூற்போல்வன காலப்பெயரான் அக்காலத்தின்கண் உளவாகிய பைங்கூழையுங் காற்றையுந் தோன்றியையுங் கூறின. இலைநட்டவா ழும் பூநட்டவாழும் என்றூற்போல்வன சினைப்பெயரான் அவவம் முதற்பொருளைக் கூறின. "நெறிகிரிருங்கழிலேழுஞ்சுடாள்" இச் செறுவட்டம் என்றூற்போல்வன பண்புப்பெயரான் அப்பண்பு டைப் பொருளைக் கூறின. ஊண்கொடுத்தார் "எழுத்தறியத்தீரும் ழிதகைமை" "பெருஞ்செய்க்நெல்லின் பாட்டின்பொருளைப்—பர விப்பல்கால்" என்றூற்போல்வன தொழிற்பெயரான் அவவத்தொ ழிலுற்றுநின்ற பொருளைக் கூறின. இஃதோரேறு இஃதோர்குத்து என்றூற்போல்வனவும் அன்ன, அவவத்தொழிலான் ஆகிய வடிக்க ளை உணர்த்தி நின்றமையின். இப்பொன்றொடி இவ்வெள்ளிதுலாம் இங்நெற்பதக்கு இப்பயறுதூணி இம்மனையொருகோல் என்றூற் போல்வன எடுத்தல் முகத்தல் முதலிய அளவுப்பெயரான் அங்ங னம் அளக்கப்படும் பொருளைக் கூறின. அளக்கப்பட்ட பொருட் கட் கிடக்கும் இவவரையறைக் குணப்பெயர் பண்புப்பெயருள் அடங்குமேனும் விளிங்குதற்பொருட்டு வேறு கூறினர். ஒன்று துலாம் நாழி உழக்கு ஆழாக்கு கோல் என்பன அவவளவகருவி களை உணர்த்தின் இபற்பெயராம், இம்மணியொன்று இப்பொன்று லாம் இப்பானாழி இங்நெய்யுழக்கு இவ்வெண்ணெயாழாக்கு இம்மனை யொருகோல் என அவவக் கருவிகளான் அளக்கப்படும் பொருளை உணர்த்தின் ஆகுபெயர்ாம் என்பாரும் உளராலோவெனின், அக்க ருவிகளும் இயற்பெயரானன்றி இவவரையறைக் குணப்பெயரான் உணர்த்தப்படுதலின் ஆகுபெயராய் இவற்றுள்ளே அடங்குவதல் லது வேறெனப்படாவென மறுக்க. அளவையெனப் பொதுப்படக் கூறினுரேனும் ஏற்புழிக்கோடலான் நிறைப்பெயர்முதலியனவே கொள்க. என்னை? பொன்னை நிறுத்துப்பார்த்தும் நெல்லை அளந்து பார்த்தும் மனையை அளந்துபார்த்தும் பின்னர் அவற்றிற்கு அப்பெ யர்கூறப்படுதலின் அவை ஆகுபெயராதற்கு ஏற்புடைமையும் ஒன்

றென்னும் எண்ணுப்பெயரான் அவ்வெண்ணப்படும் பொருளைக் கூறுவதற்குமுன்னும் அப்பொருள் ஒன்றேயாய் நிற்றலின் எண்ணுப் பெயர் ஆகுபெயராதற்கு ஏற்புடைத்தாகாமையும் உடைமையின். இவ்வதிகாரமெழுத்து இவ்வதிகாரஞ்சொல் இவ்வதிகாரம்பொருள் என்றாற்போல்வன எழுத்துச்சொற்பொருளென்னுஞ் சொற்களான் அவற்றிற்கு இலக்கணங்கூறிய அதிகாரங்களைக் கூறின. விளக்குமுரிந்தது நெஞ்சுநொந்தது நிருதிமேலெழுந்தது என்றாற்போல்வன தானம்பற்றிநிகழுஞ் சுடரும் உணர்வுந் தெய்வமுமாகிய தானிகளின் பெயராற் பிழம்பும் உறுப்புந் திசையுமாகிய தானங்களைக் கூறின. இக்குடம்பொன் இத்தூண்வெள்ளி இவ்வாடைபஞ்சு எனவும் இஃதோரம்பு இஃதோர்வேல் எனவும் யாழ்கேட்டான் குழல் கேட்டான் எனவும் வரும் இத்திறத்தனவெல்லாங் காரணப்பெயர்களான் முறையே அக்காரணங்களாஞ்சுடம் முதலியவற்றையும் வடிவினையும் ஓசையினையுங் கூறின. இப்பொன்கடிதுத்திரம் இப்பஞ்சாடை இக்நெல்லவல் இக்காணஞ்சோறு என்றாற்போல்வன காரியப்பெயரான் அவைக்காரணங்களைக் கூறின. இவ்வாடைகோலிகன் இவ்வாடைசாலிகன் என்றாற்போல்வன வினைமுதற்பெயரான் அவ்வான் இயற்றப்பட்ட பொருளைக் கூறின. அகத்தியம் தொல்காப்பியம் கபிலம் என்றாற்போல்வனவும் அன்ன. இவை ஈறுதிரிதல் உரையிற்கொள்க.

இனி ஆதியென்றதனானே, யானை பாவை என்றற் தொடக்கத்து உவமைப்பெயரான் யானைவந்தான் பாவைவந்தாளென உவமிக்கப்படும் பொருளைக்கூறுவனவும் இற்றைஞான்றுநேரை இற்றை ஞான்றேழுணம் என்றற் தொடக்கத்து நாண்மனின்பெயரான் அந்நாளைக் கூறுவனவும் பொற்றொடியென்னும் இருபெயரொட்டாற் பொன்னுந் தொடியுமன்றி அணிந்தாளைக் கூறுவனவும் அவை போல்வன பிறவும் ஆகுபெயராமெனக்கொள்க. இது மேல் அன்மொழித்தொகையெனக் கூறப்படுதலின் ஈண்டுக் கூறவேண்டாவெனின், நன்றுசொன்னாய்! ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் தம்பொருள் உணர்த்தாது பிறிதுபொருள் உணர்த்துதல் இலக்கணமென்றலின் அவை இரண்டும் வேறன்மையான் ஓரிடத்துக் கூற அமையுமேனும் இயற்பெயரும் ஆகுபெயருமெனப் பெயர் இரண்டாய் அடங்குமென்றவழிப் பெற்றொடிவந்தாள் என்பதனை இருபெயரொட்டாகுபெயராகவுந் தோகையாரென்றவழி அதனை அன்மொழித்தொகையாகவுங் கூறவேண்டுதலான் ஈரிடத்துங் கூற வேண்டுமென்க. இஃது ஆசிரியர் தொல்காப்பியனுர்க்குங் கருத்தா

தல் சேனுவரையருரையான் உணர்க. இக்கருத்தேபற்றியன்றே "அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை" என்றவழிப் பரிமேலழகருங் கனங்குழையென்றதனை .ஆகுபெயரென்றதனு மென்க. அற்றேல், மக்கட்சுட்டென்றவழி,மக்களாகியசுட்டு மக்கட் சுட்டு, சுட்டு, நன்குமதிப்பு; அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்தும்; உணர்த்தவே, மக்கட்சுட்டென்பது பிறிதுபொருள் உணர்த்தாது அம்மக்களேயே உணர்த்திநிற்றலானும், பொற்றொடி யென்பது பொன்னுந்தொடியுமன்றி அணிக்தாளெனப் பிறிதுபொ ருள் உணர்த்திநிற்றலானும், இருபெயரொட்டாகுபெயரும் வேறே அன்மொழித்தொகையும் வேறேயெனக்கொண்டு, ஈண்டு மக்கட்சுட் டென்பதனை இருபெயரொட்டாகுபெயர்க்கு உதாரணமாக்கி, ஆண் டுப் பொற்றொடியென்பதனை அன்மொழித்தொகைக்கு உதாரண மாக்கிற் படும் இழுக்கென்னையெனின்: மக்கட்சுட்டே இருபெய ரொட்டாகுபெயராய் அச்சுட்டு மக்களை உணர்த்திற்றேல், மக்க ளாகிய மக்களென்று வருவதல்லது ஒன்றையொன்று விசேடித்து இன்னது இதுவென வாராமையின் மக்கட்சுட்டே இருபெய ரொட்டாகாமையின் இருபெயரொட்டாகுபெயராமாறு யாண்டை யதென்பதாம்.

கடுத்தின்றூன் புளித்தின்றூன் என்றாற்போல்வன விடாது நின்று ஒருவாற்றூன் இயைபுடைய பிறிதொன்றனை உணர்த்திநின் றன. குழிப்படிநேரிது இப்பட்டச்சினம் என்றாற்போல்வன விட்டு நின்று ஒருவாற்றூன் இயைபுடைய பிறிதொன்றனை உணர்த்திநின் றன. பிறவும் அன்ன. (கூ)

கசுஙு. ஏற்கு மெவவகைப பெயர்க்குமீ றுய்ப்பொருள
வேற்றுமை செயவன வேழென மொழிப
விளிகொள வதன்கண் விளியலங் கடையே.

மேல் வேற்றுமைக்கிடனுமெனப் பெயர்க்கு இலக்கணமாகக் கூறிப்போந்த வேற்றுமைகளை விரித்துக்கூறுவான் தொடங்கினவற் றுள் இஃது அவை நிற்கும் இடனும் அவற்றின் பொது இலக்கண மும் அவை இத்துணையென்பதனுமுணர்த்துகின்றது.

இ - ள். தம்மை ஏற்றுக்கோடற்கு உரிய எப்பெ பெயர்க்கும் இறுதிக்கண்ணவாய்ப் பெயர்ப்பொருளை வேறுபடுத்தும வேற்றுமைகள் ஏழாமென்று கூறுவர், விளியேற்கும் பெயர்க்கண் ணதாகிய விளியோடு கூடாத இடத்து; அதனோடு கூட எட்டென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

ஏற்குமெனவே, ஏலாதனவும் உளவாயின. அவை மேலே கூறுப. ஏவலகைப்பெயர்க்குமென்றதனானே உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயரும் விரவுப்பெயரும் வினைப்பெயரும் யானைக் கோடு மதிமுகம் கொல்யானை கருங்குதிரை உவாப்பதினென்கு பொற்றொடி என்றாற்போலப் பெயரோடு பெயர் தொக்கனவும் பெயர்த்தன்மை எய்தினின்ற இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாப்பெயருங் கொள்க. ஈறுயெனப் பொதுப்படக்கூறினானேனும் இக்காட்டுட்புக்காரெல்லாங் கூறைகோட்பட்டார் என்ற வழிக் கூறைகோட்படுதல் கடவுளரை ஒழித்து ஏனையோர்மேற் றூயினற்போலப் பெயர்வேற்றுமை பெயர்க்கு ஈறுதலை ஒழித்து ஏனை வேற்றுமைகளின் மேற்றூமெனவும் அவ்விடைச்சொல் விகுதியிடைச்சொற்போல உறுப்பாகாது தானென வேறு உணரப்பட்டுச் சாத்தனை சாத்தனால் சாத்தற்கு சாத்தனின் சாத்தனது சாத்தன்கண் என இறுதிநிற்குமெனவுங் கொள்க. செயப்படுபொருள் முதலியனவர்கப் பெயர்ப்பொருளை வேறுபடுத்து உணர்த்தலின் வேற்றுமையாயின. செயப்படுபொருள் முதலியனவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரம் உணர்த்தலின் எழுவாயும் வேற்றுமையாயிற்று. பிறிதோர் இடைச்சொல்லே ஏலாது தானே திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரது இறுதி விளியென்பார் 'விளிகொள்வதன் கண்விளி' என்றார். எனவே, விளியென்பது பெயருமன்று, அதனின் வேறுமன்றுயிற்று. 'ஏழெனமொழிப' எனப் பிறர்மதங்கூறி விளியொடு கூட எட்டெனத் தந்துணிபு உரைத்தார். "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை—வேறென விளம்பான் பெயரது விகாரமென்—றோதிய புலவனு முளனொரு வகையா—னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்" என்றார் ஆசிரியர் அகத்தியருமென்க. (கூடு)

ககசு. பெயரே ஐஆல குஇன் அதுகண் விளியென் றாகு மவற்றின் பெயராறை.

இஃது அவற்றின் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

இ - ள். பெயரும் ஐயும் ஆலும் குவவும் இன்னும் அதுவுங் கண்ணும் விளியுமென்று கூறப்படும் அவற்றின் பெயரும் அவற்றின் இடக்கைமுறையும். எ - று.

எண்டுக் கூறிய பெயர்களேயன்றி எழுவாய் இரண்டாவது மூன்றாவது நான்காவது ஐந்தாவது ஆறாவது ஏழாவது எட்டாவது என இவை வேறுவேறு பெயர்பெறுமாறு மேலே கூறுப. சாத்தன்

குடத்தைக் கையால்வனைந்து கொற்றற்குக் கொடுத்தான் என வேண்டுதலின் இங்ஙனங் கிடத்தல் கிடக்கைமுறையாயிற்றென்பது. பிறவும் அன்ன. (கூசு)

ககூடு. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

இஃது எய்தாதது எய்துவிக்கின்றது.

இ - ள். பெயரேயனறி ஆறனுருபும் அவ்வுருபுகளே ஏற்கும். எ - று.

வரலாறு;—சாத்தனதனே சாத்தனதனால் சாத்தனதற்கு சாத்தனதனின் சாத்தனதனது சாத்தனதனகண் எனவரும். ஏற்புழிக் கோடலான் எழுவாயும் விளியும் ஒழித்து ஏனையவே கொள்க. பெயரோடு இதற்கு வேற்றுமை உருபு ஏற்புழியுந் தன் இருநிழமைப்பொருளினுந் திரிபின்றிநிற்றலாம். பெயரவேற்றுமையும் ஏனையுருபுகளையும் ஏற்குமால் அஃது ஒழித்ததென்னையெனின் அஃது ஏனையுருபுகளே ஏலாமை மேற் பெறப்படும். (கஎ)

ககூசு. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெரு

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள். நீயிரென்பதூஉம் நீவிரென்பதூஉம் நானென்பதூஉமாகிய மூன்றுபெயரும் எழுவாய்வேற்றுமையை ஏற்றலேயன்றி ஏனையுருபுகளே ஏற்றுநில்லா. எ - று. (கஅ)

ககூள. அவற்று, ளெழுவா யுருபு திரிவில் பெயரே வினைபெயர் வினுகொள லதற்பய னிலையே.

இது நிறுத்தமுறையானே எழுவாய்வேற்றுமையது உருபும அதன் பயனிலையுங கூறுகின்றது.

இ - ள். மேற் கூறிப்போந்த வேற்றுமை எட்டனுள் முதல் வேற்றுமையாவது திரிபில்லாத பெயரேயாம்; வினையையும் பெயரையும் வினவையுங் கோடல் அதற்குப் பயனிலையாம். எ - று.

திரிபில்லாமையாவது உருபும் விளியும் ஏலாது, ஆ அவன் என்றாற்போல நிற்றலாம். ஆகவே எழுவாய்வேற்றுமையுருபாவது பெயர்ச்சொல் மூவகைப்பட்ட பயனிலையுந் தன்கட் தோன்ற நிற்கும் நிலைமையென்பதாயிற்று. முடிக்குஞ் சொற்பொருள் அத்தொ

டர்மொழிக்குப் பொருணிலையாகலிற் பயனிலையென்னார். வினையெனவே வினையும் வினைக்குறிப்புந் தழுவுதலாற் "பொருண்மை சுட்டல் வியங்கோள் வருதல்—வினைநிலை யுரைத்தல் வினவிற் கேற்றல்—பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்—றன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே" என்ற ஆறும் இவரும் நேர்ந்தா 5
ரென்பதாம். "வினைநிலை யுரைத்தலும் வினவிற் கேற்றலும்—பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே" என்ற ஆசிரியர் அகத்தி யனார்க்கும் இதுவே உடன்பாடென்க.

பொருண்மைசுட்டல் ஆவுண்டு எனப் பண்பு முதலாயின சுட்டாது உண்மையே சுட்டலாம்; வியங்கோள்வருதல் ஆசெல்க 10
எனத் தான் ஏவலைக்கொள்ள வருதலாம்; வினைநிலையுரைத்தல் ஆடினாள் எனத் தன்வினைநிலையைச் சொல்ல வருதலாம்; பண்புகொளவருதல் ஆகாது என வருதலாம். வினைக்குறிப்பாதல் ஒப்புமையான் ஆவில்லை ஆவல்ல என்னும் தொடக்கத்துக் குணப்பொருள அல்லா வினைக்குறிப்போடு தொடர்த்துங்கொள்க. இவையெல்லாம் 15
வினைப்பாற்பட்டன. வினவிற்கேற்றல் அஃதியாது அஃதெவன் என வினச்சொல்லோடு தொடர்தலாம்; பெயர்கொளவருதல் ஆவாயிரம் ஆவாம்பல் ஆவெள்ளம் என முடிக்கப்படுஞ்சொல்லாகாது முடிக்குஞ்சொல்லாயே வருதலாம். பிறவும் அன்ன. (கக).

ககஅ. • எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி 20
யவ்வய னிலையல் செவ்வி தென்ப.

இஃது எய்தாதது எய்துவிக்கின்றது, எழுவாய்வேற்றுமை வெளிப்படத்தோன்றிப் பயனிலைகோடலேயன்றித் தோன்றுதுநின்றும் பயனிலைகொள்ளுமென்றலின்.

இ - ள். மூன்றிடத்துப்பெயருஞ் செவிப்புலனுகத்தோன்றி 25
நின்று பயனிலைகோடல் செவ்விதென்பர் ஆசிரியர். எ - று.

எனவே, அவ்வாறு தோன்றுதுநின்று பயனிலைகோடலும் உண்டு, அது செவ்விதன்று என்றவாறும். பெயரென்றது சுண்டி எழுவாயை.

கருவூர்க்குச்செல்லாயோ சாத்தா என்றவழிச் செல்வல் என 30
வும் யான்யாதுசெய்வல் என்றவழி இதுசெய் எனவும் இவன்யாவன் என்றவழிப் படைத்தலிவன் எனவுஞ் செப்பியவழி, யான் நீ இவன் என்னும் எழுவாய் வெளிப்படாதுநின்று செல்வல் இதுசெய் படைத்தலிவன் என்னும் பயனிலைகொண்டவாறு கண்டுகொள்க.

செல்வல் இதுசெய் என்னுந் தன்மை முன்னிலை வினைகளான் யான் நீ என்பனவற்றின் பொருளும் உணரப்படுதலின் யான் செல் வல் நீயிதுசெய் எனப் பெயர் வெளிப்படுதல் பயமின்றுயினும் வழக்குவலியுடைத்தாகலின் அவ்வாறு வருதல் பயமின்றெனப்படா தென்பது விளக்கிய 'எவ்வயிற்பெயரும்' என்றுரென்பது. அவ்விய லான் நிலையிலென விரியும் பயனிலைக்கு இருமையும் ஒதாது எழு வாய்க்கே ஒதுதலிற் பயனிலை வெளிப்பட்டேநிற்குமென்பதாயிற்று.

நூற்பா. இரண்டா வதனுரு பையே யதன்பொரு
ளியற்றவுந திரிகவு மெய்தவும் படூஉந
திறந்தவும பிறவுமாஞ் செயப்படு பொருளே.

இது நிறுத்தமுறையானே இரண்டாம்வேற்றுமையது உரு பும் பொருளும் உணர்த்துகின்றது.

இ - ள். இரண்டாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்று மைக்கு உருபு ஐயென்பதாம்; அதன்பொருள் முன் இல்லதனை உண்டாக்கவும் முன் உள்ளதனை வேறுபடுக்கவும் இவ்விருவகையு மின்றி எய்தவும் படூஉம் பகுதியனவும் அவ்வாற்றுனன்றிப் பிற வாற்றுன் வரும் பகுதியனவுமாகிய செயப்படுபொருளாம். எ - று.

செயப்படுபொருளாவது ஒரு வினைமுதல் செய்யுந் தொழி லினை உறுவது. இயற்றப்படுவதும் வேறுபடுக்கப்படுவதும் எய்தப் படுவதுமெனச் செயப்படும்பொருளை மூன்றுகத் தொகுத்தாரேனும், வகுத்துக்கூறுமிடத்து இயற்றப்படுவதொரு தன்மைத்தாகலின் அஃ தொன்றும், வேறுபடுக்கப்படுவது எட்டும், எய்தப்படுவது தொழிலு றுவதுந் தொழிற்பயனுறுவதுமாகப் பத்தொன்பதும், ஆக இருபத். தெட்டுவகையவாம் என்பது உரையிற்கொள்க.

வரலாறு;—எயிலெயிழைத்தான் இஃதியற்றப்படுவது. குடத் தைவனைந்தானென்பதும் அது. கிளியையோப்பும் பொருளையிழக் கும் நாணையறுக்கும் மரத்தைக்குறைக்கும் நெல்லைத்தொகுக்கும் வேலியைப்பிரிக்கும் அறத்தையாக்கும் நாட்டைச்சிதைக்கும் என வரும் ஒப்புமுதலிய இவ்வெட்டும் வேறுபடுக்கப்படுவன. இவற் றிற்கு வேறுபாடு முறையே ஒருதொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலுந் தொழிற்பயனுற்றமாத்திரையாய் ஒருவன் கொண்டுபோ கப்போதலும் சிறிதிழவாமல் வேறுபடுத்தலுஞ் சிறிதிழக்க வேறுப டுத்தலும் விரித்ததுதொகுத்தலும் தொகுத்ததுவிரித்தலும் மிகுத்த லுங் கெடுத்தலுமாம். குறைத்தற்குப் பெருமையைச்சுருக்குதலு

மாம். ஊரைக்காக்கும் தந்தையையொக்கும் தேரையூரும் குரிசிலப்புகழும் நாட்டைப்பழிக்கும் புதல்வனைப்பெறும் மனைவியைக் காதலிக்கும் பகைவரைவெகுளும் செற்றுரைச்செறும் நட்டாரையுவக்கும் நூலைக்கற்கும் பொன்னைநிறுக்கும் அரிசியையளக்கும் அடைக்காயையெண்ணும் ஊரைச்சாரும் நெறியைச்செல்லும் சூனினைக்கன்றும் கணையைநோக்கும் கள்ளரையஞ்சும் எனவரும் காப்பு முதலிய இப்பத்தொன்பதும் எய்தப்படுவன. இவை தாந்தொழிலுறுவனவுந் தொழிற்பயனுறுவனவுமாகி வரும் வேறுபாடும் உணர்க. வெகுடலுஞ் செறலுங் கொலைப்பொருளவாயவழி வேறுபடுக்கப்படுவனவாம். செறல் வெகுளியது காரியம், உவர்த்தல் காதலது காரியம். இனிச் சோற்றைக்குழைத்தான் எனச் செய்வான் கருத்து இல்வழி நிகழுஞ்செயப்படுபொருளுஞ் சாத்தன் தன்னைக்குதித்தனன் எனச் செய்வானுஞ் செயப்படுபொருளுந் தானேயாய்நிற்பனவுங் கொள்க. பிறவென்றதனானே பகைவரைப்பணித்தான் சோற்றையட்டான் குழையையுடையன் பொருளையிலன் என்றாற்போல்வனவுங் கொள்க. எயிலெயிழைத்தான் என்றவழி எயிலென்பது இழைத்தற்றொழிலையுற்று நின்றாற்போலக், குழையையுடையன் என்றவழிக் குழையென்பதோர் தொழிலுற்று நில்லாமையிற் செயப்படுபொருளாமாறென்னையெனின், அஃதும் உடையனெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையிற் செயப்படுபொருளேயாமென்பது. காப்பு முதலாயின பொருள்பற்றி நின்றமையான் ஊரைப்புரக்கும் தேரைச்செலுத்தும் என்பனபோல்வன எல்லாங்கொள்க. (அக)

உ00. மூன்றுவதனுருபாலாஞ்சொற்கள்
கருவி கருத்தா வுடனிகழ்வதனபொருள்.

இது மூன்றும்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த்துகின்றது.

இ - ள். மூன்றும் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு உருபு ஆலும் ஆனும ஓடும் ஒடுவும் என்பனவாம். அதன் பொருள் கருவியுங் கருத்தாவும் உடனிகழ்ச்சியுமாம். எ - று.

மேல் ஆலொன்றையும் இதற்கு உருபாகச் சொல்லி ஈண்டு உருபுகான்கென்றல் மலைவாம் பிறவெனின், ஆண்டுப் பெயரும முறையுங் காட்டுதல்மாத்திரைக்கு வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் பயின்று வருவதனைச் சொன்னார், ஈண்டு அவவேற்றுமைக்கு வரும் உருபெல்லாம் எடுத்து ஓதினராகலான் ஆகாதென்க.

இக்கடாவிடை இங்ஙனம் மேல்வருவனவற்றிற்கும் உய்த்துரைக்க.

"ஆஅ மானு மோடு மொடுவஞ்—சாஅ மூன்றும் வேற்றுமைத்தனுவே—செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி—யெய்திய தொழின்முத லியைபுட னதன்பொருள்" என்றார் ஆசிரியர் அகத்தியனருமென்க. அற்றேல் அவர் பொருளென்றதன்றமையின் மூன்றென்றல் நிரம்பாதெனின், அற்றன்று; காரணத்தையுங் கருவியையும் இயற்றுதற்கருத்தாவையும் ஏவுதற்கருத்தாவையும் பொதுப்படமுறையே கருவி கருத்தா என்றமையின் இவரும் அவைவந்தும் சேர்ந்தாரென்பது. பொருட்பன்மைபற்றிக் கருவியை முற்கூறினர்.

கருத்தாவெனினும் வினைமுதலெனினும் ஒக்கும். வினைமுதலாவது கருவிமுதலாயின காரணங்களைத் தொழிற்படுத்துவது. அதுதான் இயற்றும் வினைமுதலும் ஏவுவினைமுதலுமென இருவகைப்படும். கருவி காரணம் ஏது நிமித்தமென்பன தம்முள் வேறுபாடையுமெனும் ஒத்தபொருளினவேயாம். கருவியாவது வினைமுதற் றொழிற்பயனைச் செயப்படுபொருட்கண் உய்ப்பது. அதுதான் காரகக்கருவியும் ஞாபகக்கருவியுமென இருவகைப்படும். காரகமாவது தொழிலை இயற்றுவிப்பது. ஞாபகமாவது அறிவிப்பது. காரணம் முதற்காரணமுந் துணைக்காரணமுமென இருவகைப்படும். முதற்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமையுடையது. துணைக்காரணமாவது முதற்காரணத்துக்குத் துணையாய் அது காரியப்படுங்காறும் உடனிகழ்வது.

தச்சனால் இயற்றப்பட்ட வையம், அகத்தியனால் உரைக்கப்பட்டதமிழ் என்பனபோல்வன இயற்றும்வினைமுதல். அரசனால் இயற்றப்பட்ட தேவகுலம், தேவராற் தரப்பட்ட திரு என்பபோல்வன ஏவும்வினைமுதல். மண்ணுன் இயன்ற குடம், பொன்னுன் இயன்ற பணி என்பனபோல்வன முதற்காரணம். இவை ஒன்றால் ஒன்று பண்ணப்படுதலென்னும் பொருள. கோலான் இயன்ற குடம், வேலான் இயன்ற வடு என்பனபோல்வன துணைக்காரணம். இவையெல்லாம் ஏதுப்பொருளவாய் நின்ற காரகக்கருவி. உணர்வினால் உணர்ந்தான், அறிவினால் அறிந்தான் என்பனபோல்வன முதற்காரணம். புகையினால் அறிந்தான், ஒளியினால் உணர்ந்தான், முயற்சியிற்பிறத்தலான் ஒலிநிலையாதென்பது உணர்ந்தான் என்பனபோல்வன துணைக்காரணம். இவையெல்லாம் ஏதுப்பொருளவாய்நின்ற ஞாபகக்கருவி. கொடியொடுவக்குண்டான், ஊசி

'யொடுகுயின்ற தூசும்பட்டும் என்பனபோல்வன உடனிகழ்ச்சி, கொடி சாத்தனைத் தொழிலுறுவிக்குங்கால் அக்கொடி அவனை நீங்கா உடனிகழ்ச்சியை விளக்குதலானும், ஊசி சாத்தன்றொழிற் பயனைத் தூசிலும் பட்டிலும் உய்க்குங்கால் அவ்வூசி அவற்றைநீங்கா உடனிகழ்ச்சியை விளக்குதலானும் இவை முறையே வினைமுதற் பொருள்மேலுங் கருவிப்பொருள்மேலும் வந்தன. இங்ஙனம் வரவே, கருவி கருத்தா எனவே அடங்குதலின் உடனிகழ்வென வேறு கூறவேண்டாவெனினும் அது மிகுந்துகாட்டலின் வேறுகூறினர் போலும் என்பது. இக்கருத்தேபற்றியன்றே "வினைமுதல் கருவியினைமுதற் றதுவே" என்ற ஆசிரியர் தொல்காப்பியனாரும் மீட்டும் உடனிகழ்வு கூறியதூஉமென்பது. இவையெல்லாம் ஆவுருபானும் ஆனுருபானும் ஓடுவுருபானும் வந்தன.

"உலகத்தோடொட்டவொழுகல்" எனவும் "நாலீற்றிருந்தபு லமாமகளோடுநன்பொற்—பூவீற்றிருந்த திருமாமகள் புல்லாளும்" எனவும் வருவன எல்லாம் ஓடுருபான் வந்தன.

வாயாற்றக்கதுவாய்ச்சி அறிவானமைந்தசான்றோர் என்பனபோல ஒன்றுஞெனன்று தருதலென்னுங் கருவிப்பொருண்மைக்கண்ணும், நாயாற்கோட்பட்டான் சாத்தனுன்முடியுமிக்கருமம் என்பனபோல ஒன்றுஞெனன்று தொழிலுறுதலென்னும் வினைமுதற்பொருண்மைக்கண்ணும், வாணிகத்தானையினன் என்பதுபோல ஒன்றுஞெனன்றுதலென்னுங் காரக ஏதுப்பொருண்மைக்கண்ணுங், காணத்தாற்கொண்ட அரிசி என்பதுபோல ஒன்றுஞெனன்றைக் கோடலென்னுங் கருவிப்பொருண்மைக்கண்ணும், எண்ணெய்விராய அரிசி என்பதுபோல ஒன்றஞெடொன்று மயங்குதலென்னும் உடனிகழ்ச்சிப்பொருண்மைக்கண்ணும், ஆசிரியனெடு மாணாக்கன்வந்தான் என்பதுபோல ஒன்றஞெடொன்று இயைந்து ஒருவினையாதலென்னும் உடனிகழ்ச்சிப்பொருண்மைக்கண்ணும், மலையொடுபொருத மால்யானை என்பதுபோல ஒன்றஞெடொன்று இயைந்து வேறுவினையாதலென்னும் உடனிகழ்ச்சிப்பொருண்மைக்கண்ணும், (பொருதல் யானைக்கல்லது மலைக்கின்மையின் வேறுவினையாயிற்று.) பொன்னெடிருப்பனையர் நின்னெடுபிறர் என்பதுபோல ஒன்றஞெடொன்று இயைந்து ஒப்பல்லா ஒப்பினை உரைத்தலென்னும் உட்னிகழ்ச்சிப்பொருண்மைக்கண்ணும், (பொன்னெடு இரும்பை உவமித்தலை ஒப்பர் நின்னெடு பிறரை உவமிக்குமிடத்து என்பதாம்.) கண்ணுற்கொத்தை காலான்முடவன் என்பனபோலச் சினைவிகார்த்தை முதன்மேல் ஏற்றிக்கூறும் பொருண்மைக்கண்ணும்,

மதியோடொக்குமுகம் என்பதுபோல ஒப்பின்கண்ணுஞ், சூலொகே முதைபாரஞ்சுமந்தது என்பதுபோலக் கட்புலனுகா ஒருவினைக்கண்ணும் வரும் வேறுபாடும் அறிக.

"தூங்குகையானேங்குகடைய" "உறழ்மணியானுயர்மருப்பின" என்பனபோல்வன எல்லாம் ஆன் ஒவொயின. பிறவும் அன்ன.

உ0க. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல
பொருட்டுமுறையாதியி னிதற்கிதெனல்பொருளே.

இது நான்காம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த்துகின்றது.

இ - ள். நான்காம் எண்ணுமுறைமைக்கண நின்ற வேற்றுமைக்கு உருபு குவ்வென்பதாம்; அதன்பொருள் அந்தணர்க்கு ஆவைக்கொடுத்தான் "இரப்போர்க்குத் தேர்வீசும் வண்கையவன்" என்பனபோல ஒன்றற்கொன்றைக் கொடுத்தலும், அவற்குப்பகை இவன் அவற்குமாற்ருன் இவன் மக்கட்குப்பகை வெகுளி என்பன போல ஒன்றற்கொன்று பகையாதலும், நாகர்க்குப் பலிநேர்ந்தார் சாத்தற்கு மகள் உடம்பட்டார் என்பனபோல ஒன்றற்கொன்றை மேற்கொடுப்பதாக உடம்படுத்தலும், அவற்குத் தக்காள் இவள் அறத்திற்குத் தக்கது அருள் என்பனபோல ஒன்றற்கொன்று தகுதலுங், கடிஞருத்திரத்துக்குப்பொன் அவலுக்குநெல் என்பனபோல ஒரு பேற்கும்பொருள் தானேயாய்த் நிரிதலுங், கூழிற்குக்குற்றேவல் செய்யும் கூலிக்குக்கூறையொலிக்கும் என்பனபோல ஒன்றனே மேற் பிறுதல் காரணமாக ஒருதொழில் நிகழ்த்தலுஞ், சாத்தற்குமகன் கொற்றிக்குமகள் என்பனபோல ஒன்றற்கொன்று முறையாதலும் முதலிய பொருண்மைக்கண் இதற்கு இது என்பதுபட நிற்றலாம். எ - று.

ஆதியென்றதனுனே மாணுக்கற்கு அறிவுகொடுத்தான் என்பதுபோலக் கொடுப்பான்பொருளாய்க் கொள்வான்கட் செல்லாது ஆண்டித்தோன்றுதலும் மாணுக்கற்கு நூற்பொருள் உரைத்தான் என்பதுபோலக் கொடைப்பொருள்குறித்த சொல்லானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறுதலுமாகிய கொடைப்பொருண்மைக்கண்ணும் "அல்லவைசெய்வார்க்கறங்கூற்றம்" பிணிக்குமருந்து கள்வர்க்குத் தள்ளும் உயிர்நிலே என்பனபோலப் பகைமை தோன்றநிற்கும் பொருண்மைக்கண்ணும், "உற்ருர்க் குரியர் பொற்ருடி மகளிர்"

"அருங்கலமுலகின்பிக்கவரசர்க்கேயுரிய" "செல்வர்க்கேசெல்வந்த கைத்து" என்பனபோலத் தகுதிதோன்றநிற்கும் பொருண்மைக் கண்ணும், கரும்பிற்குவேலி மயிரிற்கெண்ணெய் உயிரிற்குண்டி என் பனபோல ஒன்றற்கொன்று உபகாரப்படுதற்கண்ணும், சார்த்தற்குக் கூறுகொற்றன் என்பதுபோலப் பொதுவாகிய பொருளைக் கூறுபடுத் தற்கண்ணும், கைக்கியாப்புடையதுகடகம் "உண்டிவெய்யோர்க்கு றும்பிணியெளிது" என்பனபோல ஒன்றற்கொன்று பொருத்தமு டைத்தாதற்கண்ணும், அவற்குநட்டான் அவற்குத்தமன் என்பன போல ஒன்றற்கொன்று நட்பாதற்கண்ணும், நட்டார்க்குக்காதலன் புதல்வர்க்கன்புறும் என்பனபோல ஒன்றற்கொன்று காதலுடைத் தாதற்கண்ணும், வடுகரசர்க்குச்சிறந்தார்சோழியவரசர் கற்பார்க்குச் சிறந்ததுசெவி என்பனபோல ஒன்றற்கொன்று சிறத்தலென்னும் பொருண்மைக்கண்ணும் வருவன எல்லாங் கொள்க. இன்னும் இதனானே அரசர்க்கமைச்சன் நமக்குநல்லன் "நிலத்துக்கணியென் பநெல்லுங்கரும்பும்" "போர்க்குப்புணைமன்" "மனைக்குப்பாழ்வா ணுதலின்மை" "அந்தணர்நூறகுமறத்திற்குமாதியாய்" "பல்லுக்குத் தோற்றபணிமுல்லை" "ஊர்க்குமணித்தேபொய்கைபொய்கைக்குச்— சேய்த்துமன்றேநெறிறுகான்யாறே" இச்சொற்குப்பொருளிது அவற் குச்சோறுண்டி னெனக்குவலியான் அவவூர்க்கிவவூர்காதம் "நட்டார்க் குத்தோற்றலைநாணுதோன்" என்பனபோல இதற்கு இதுவென்பது படவருவன பிறவுங்கொள்க. (சுந)

உ0உ. ஐந்தா வதற்குரு பின்னு மில்லு
நீங்கலொப் பொலியே யெதுப் பொருள்வயி
னிதனினிற் றிதுவென வரலதன் பொருளே.

இஃது ஐந்தாம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த் துன்றது.

இ - ள். ஐந்தாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற . வேற்று மைக்கு உருபு இன்னும் இல்லுமாகிய இரண்டுமாம்; நீக்கமும் பொருஉவும் எல்லையும் ஏதுவுமாகிய நால்வகைப்பொருண்மைக்கண் ணும் இப்பொருளின் இத்தன்மைத்தாயிருக்கும் இப்பொருளென் னும் பொருண்மைத்தாய் வருதல் அதன்பொருளாம். எ - று.

உ-ம். ஊரினீங்கினனேணன் தமரிற்றீர்ந்தான்சாத்தன் வரை யின்வீழருவி "தலையினிழிந்த மயிரனையர்மாந்தர்—நிலையினிழிந்தக் கடை" காமத்திற்பற்றுவிட்டான்காவலன் என்பனபோல்வன நீக்

கம். பொரூஉ உறழ்பொரூஉவும் உவமப்பொரூஉவுமென இருவகைப்படும். உறழ்தல் ஒன்றினொன்றைமிகுத்தல். காக்கையிற்கரிது களம்பழம் என வண்ணம் பற்றியும் இதனின்வட்டமிது என வடிவு பற்றியும் இதனினெடிதிது எனவளவுபற்றியும் இதனிற்றீவிதிது எனச் சுவைபற்றியும் இதனிற்றண்ணிதிது எனத் தண்மைபற்றியும் இதனின்வெய்திது என வெம்மைபற்றியும் இதனினன்றிது என நன்மைபற்றியும் இதனிற்றீதிது எனத் தீமைபற்றியும் இதனிற்சிறிதிது எனச் சிறுமைபற்றியும் இதனிற்பெரிதிது எனப் பெருமைபற்றியும் இதனின்வலிதிது என வலிமைபற்றியும் இதனின்மெலிதிது என மென்மைபற்றியும் இதனிற்கடிதிது எனக் கடுமைபற்றியும் இதனின்முதிதிது என முதுமைபற்றியும் இதனினிளிதிது என இளமைபற்றியும் இதனிற்சிறந்ததிது எனச் சிறப்புப்பற்றியும் இதனினிழிந்ததிது என இழிவுபற்றியும் இதனிற்புதிதிது எனப் புதுமைபற்றியும் இதனிற்பழைதிது எனப் பழைமைபற்றியும் இவனினிலனிவன் என இன்மைபற்றியும் இவனினுடையனிவன் என உடைமைபற்றியும் இதனினுறுமிது என நாற்றம்பற்றியும் இதனிற்பலவிவை எனப் பன்மைபற்றியும் இதனிற்சிலவிவை எனச் சின்மைபற்றியும் வருவனபோல்வன எல்லாம் பொரூஉ. இவற்றிற்கு இருவகைப்பொரூஉவும் விரிக்க. வண்ணம் வெண்மை கருமை முதலாயின; வடிவு வட்டஞ் சதுரம் முதலாயின; அளவு நெடுமை குறுமை முதலாயின; சுவை கைப்புப் புளிப்பு முதலாயின; நாற்றம் நறுநாற்றந் தீநாற்றம் முதலாயின.

கருஞாழின்மிழக்கிது இதனினூங்கிது என்பனபோல்வன எல்லே; கள்ளரினஞ்சுமிவன் வாணிகத்தினுயினனிவன் "கோட்டிற் செய்தகொடிஞ்சிநெடுந்தேர்" என்பனபோல்வன ஏது. அவனினளியனிவன் அதனிற்சேய்தாகிது இகழ்ச்சியிற்கெட்டானிவன் மகிழ்ச்சியின்மைத்துற்றனிவன் என வருவனபோல்வன பிறவும் அன்ன.

இத்திறத்தனவெல்லாம் இதனினிற்றிதுவென வந்தவாறு கண்டுகொள்க. காக்கையிற்கரிதுகளம்பழம் என்றவழி இதனினென்பது காக்கையினென்பது, இற்றென்பது கரிதென்பது, இதுவென்பது களம்பழமென்பது. பிறவும் அன்ன. இவ்வுதாரணங்களுள் இற்றென்னும் வினைக்குறிப்பானன்றிப் பிறவாய்பாட்டான் வந்தனவும் அப்பொருள்பட நிற்றலான் இற்றென்றலேயாமென்பது. இவ்வாறே இல்லுருபோடும் ஒட்டுக. (சச)

உ0ங. ஆற னெருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புமுப்

பொன்றன் கூட்டம் பலவி னீட்டங்
திரிபி னுக்க மாந்தற் கிழமையிற்
பொருளிடங் காலமாம பிறிதின கிழமையி
னிதனதிது வெனவரூஉ மதனது பொருளே.

இ-ஸ்து ஆறும்வேற்றுமையுருபும் பொருளும் உணர்த்து கின்றது. 5

இ-ள். ஆறும் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்றுமை யது ஒருமைப்பொருண்மைக்கு அதுவென்பதும் ஆதுவென்பதும் பன்மைப்பொருண்மைக்கு அகாரமும் உருபாம்; பண்பும் உறுப்பும் ஒன்றுபலகுழீஇயதும் வேறுபலகுழீஇயதும் ஒன்றுதிரிந்து ஒன்றுத லுமாகிய தன்னேடு ஒற்றுமையுடைய பொருளான்வந்த தற்கிழ மைக்கண்ணும் பொருளும் நிலனுங் காலமுமாகிய தன்னின்வேறும் நின்ற பொருளான்வந்த பிறிதின்கிழமைக்கண்ணும் இப்பொருளி னுடையது இப்பொருளென்பதுபட வரும் அதனது பொருள். எ-று. 10

ஈண்டுத் தன்னென்றது உருபேற்கும் பொருளே. 15

"ஆற னுருபே யதுவா தவவும்—வேரொன் றுரியதைத தனக்குரி யதையெனா—வீருபாற் கிழமையின் மருவுற வருமே—யையமபா லுரிமையு மான்றதற் கிழமை" என்னும் ஆசிரியர் அகத்திய னுருமெனக்கொள்க.

பண்பின்கிழமையெனினும் ஒன்றியற்கிழமையெனினும் ஒக் கும். அதுதான் சாத்தனது இயற்கை நிலத்தது அகலம் என்பன போல வரும், இயற்கைக்கிழமையுஞ் சாத்தனது நீலமை சாத்த னது இல்லாமை என்பனபோல வரும் நீலமைக்கிழமையுமென இருவகைப்படும். 20

உறுப்பாவது ஒருபொருளினது எகதேசம். அவவுறுப்பின்கி ழமைதான் யானையது கோடு புலியது உகிர் என்பனபோல்வன ஒன்றுபலகுழீஇயது எள்ளது குப்பை கொள்ளது குவியல் என்பன போல்வன. வேறுபலகுழீஇயது படையது குழாம் மணியது தொ குதி என்பனபோல்வன. திரிபினுக்கமெனினும் மெய்திரிந்தாயதெ னினும் ஒக்கும். அதுதான் சிறிதுதிரிவதூஉம் முழுவதுந்திரிவ தூஉ மென இருவகைப்படும். அவற்றுட் சிறிதுதிரிவதுதான் சாத்தனது செயற்கை சாத்தனதுகற்றறிவு என்பனபோல வருஞ் செயற்கைக் கிழமையும், அரசனதுமுதுமை அரசனதுமுதிர்வு என்பனபோல வரும் முதுமைக்கிழமையுஞ், சாத்தனதுதொழில் சாத்தனதுசெ 25 30

லவு என்பனபோல வரும் வினைக்கிழமையுமென மூவகைப்படும். முதுமை பிறிதோர் காரணம்பற்றாது காலம்பற்றி ஒருதலையாக அப்பொருட்கட் தோன்றும் பருவமாகலிற் செயற்கையுள் அடங் காதென்க. சாத்தனதொப்பு தொகையதுவிரி பொருளதுகேடு சொல்லதுபொருள் இவையும் அன்ன. முழுவதுந்திரிவது எள் ளதுசாந்து கோட்டதுநூறு என்பனபோல்வன. இத்திறத்தன வெல்லாந் தற்கிழமை. இனிப்பிறிதின்கிழமை மூன்றனுட்பொருட் பிறிதின்கிழமைதான் சாத்தனதுடைமை சாத்தானதுதோட்டம் என்பனபோல வரும் உடைமைக்கிழமையும், மறியதுதாய் மறியது தந்தை என்பனபோல வரும் முறைக்கிழமையும், இசையதுகருவி, வீணைகலத்ததுதிரி என்பனபோல வருங் கருவிக்கிழமையும், அவனதுதுணை அவனதிணங்கு என்பனபோல வருந் துணைக்கிழ மையும், நிலத்ததொற்றிக்கலம் சாத்தனதுவிலைத்திட்டு என்பன போல வருங் கலக்கிழமையும், (கலமாவது ஓலை. இஃது இருபொ ருட்கு உரிமையுடைமையின் உடைமையின்வேறுயிற்று.) ஒற்றிய துமுதல் ஒற்றியதுபொருள் என்பனபோல வரும் முதற்கிழமையும், கபிலரதுபாட்டு என்பதுபோல வருஞ் செய்யுட்கிழமையும், (பாரிய துபாட்டு எனவும்படுதலின் இதுவும் இருபொருட்கு உரித்து. பாண ரதுபாட்டியலென்பதும் அது.) காட்டதுயானை என்பதுபோல வரும் வாழ்ச்சிக்கிழமையுமென எண்வகைப்படும். இனி இடப்பிறி தின்கிழமைதான் முருகனதுகுறிஞ்சிநிலம் என்பதுபோல வருங் கிழமைக்கிழமையும், யானையதுகாடு என்பதுபோலவரும் வாழ்ச்சிக் கிழமையுமென இருவகைப்படும். இனிக் காலப்பிறிதின்கிழமை தான் வெள்ளியதாட்சி என்பதுபோல வருங் கிழமைக்கிழமைத் தாய் நிற்கும். "தஞ்சுவெள்வேல் யானைவளவன் கொல்லிமிசை" என்பதுபோல ஆதுருபுஞ் சாத்தனவாடை என்பதுபோல அகாரவு ருபும் வந்தனகாண்க. பிறவும் அன்ன. பெரும்பான்மைபற்றி இத னானிது என்றுரேனும் பன்மைக்கண் இதனவிலை எனபதுபட வருதல்கொள்க. (சு(ு)

உ0ச. ஏழ னுருபு கண்ணே யதன்பொருள
வினைசெய யிடந்தி னிலந்திற காலந்தி
னானவகைக் குறிப்பிற் றோனறலா மனறியுங்
கண்கால புறமக முளளுழை கீழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை யெனஅ
முன்னிடை கடைதலே வலமிட மெனஅ
*வன்ன பிறவும மதனபால வென்மனர்.

இஃது ஏழாம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த்துகின்றது.

இ - ள். ஏழாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு உருபு கண்ணெனபதாம்; அதனது பொருள் வினைசெய்யாகிற்றலாகிய இடத்தின்கண்ணும் நிலமாகிய இடத்தின்கண்ணுங் காலமாகிய இடத்தின்கண்ணுமென அம்முவகைக்குறிப்பினகணுறும் தோன்றலாம்; அன்றியுங் கண் முதலாக இடம் ஈறுகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவைபோல்வன பிறவும் ஏழாவதன் திறத்தன என்றுகூறுவர் ஆசிரியர். எ - று.

எனவே, இடமாகக் குறிக்கப்படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றுதென்பதாம். தன்னினமுடித்தலென்பதனால் ஏனைவேற்றுமைச்சொற்களும் அவவப்பொருட்குறிப்பு இல்வழி அவவப்பெயர்க்கண் வாராமைகொள்க.

வரலாறு;—தட்டுப்புடைக்கன்வந்தான் மாடத்தின்கணிருந்தான் கூரிர்க்கண்வந்தான் எனவரும்.

இனிக் கண்ணென்னும் பொருளாவது "கணணின்றுகூறுதலாற்றூனவ்றுயினன்" எனவும் "கண்ணகன்ஞாலம்" எனவும் கண்ணெனனும் இடைச்சொல்லான் உணர்த்தப்படும் இடப்பொருண்மை. தேவகையென்பது திசைக்கூறு. கண் கால் புறம் அகம் என்பவற்றது பொருள்வேற்றுமை வழக்குநோக்கி உணர்ந்துகொள்க. கண்ணின்றுசொல்லியாஅன் என்கணின்றியைசொல்லற்பாலேயல்லே என்றும் ஊர்க்காற்செய்யை ஊர்க்கட்செய் என்றும் உரிப்புறத்து நின்றமரத்தை ஊர்க்கண்மரமென்றும் எயிலகத்துப்புக்காஅன எயிற்கடபக்கான் என்றும் இல்லுளிருந்தாஅன இல்லின்கணிருந்தான் என்றும் அரசனுழையிருந்தாஅன அரசன்கணிருந்தான் எனறும் ஆலின் கீழ்கிடந்த ஆவை ஆலின்கட்கிடந்தது என்றும் மரத்தின்மேலிருந்த குரங்கை மரத்தின்கணிருந்தது என்றும் ஏர்ப்பின்சென்றூஅன ஏர்க்கட்சென்றான் என்றும் காட்டிச்சாரோடுவதனைக் காட்டின்கண்ணேவெது என்றும் உறையூர்க்கயனின்ற சிராப்பள்ளிக்குன்றினை உறையூர்க்கட்குன்று என்றும் எயிற்புண்டகின்றூரை எயிற்கணினூர் என்றும் வடபால்வேங்கடம் தென்பாற்குமரி என்பனவற்றை வடக்கண்வேங்கடம் தெற்கட்குமரி என்றும் புலிமுன்பட்டானைப் புலிக்கட்பட்டான் என்றும் நூலின் இடையுங் கடையுந் தலையும் நின்ற மங்கலத்தை நூற்கண்மங்கலம் என்றும் கைவலத்துள்ளதனைக் கைக்கண்ணுள்ளது என்றும் தன்னிடத்து நிகழ்வதனைத் தன்

கணிகழ்வது என்றும் அவ்விடப்பொருள்பற்றி ஏழாம்வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க. எனவென்பது எண்ணிடைச்சொல்.

அன்னபிறவும் என்றதனற் பொருடகணுணர்வு என்கணன்பு டையன் மலர்க்கணூற்றம் ஆகாயத்துக்கட்பருந்து எனனுந் தொடக் கத்தன கொள்க.

இனிக் கண் கால் முதலியவற்றை உருபென்பாரும் உளரா லோவெனின், உருபாயின ஊர்ப்புறத்திருந்தான் ஊரகத்திருந்தான் கைவலத்துள்ளதுகொடுக்கும் எனப் புறம அகம் வலம என்பனவற் றுவழி அத்துச்சாரியைகொடுத்து உதாரணங்காட்டல் பொருந்தா மையானும் அவை வேறு வேறுபட்ட இடப்பொருளவாகிய பெய ராய்நிற்றலல்லது பெயர்ப்பொருளே ஐ ஒடு கு இன் அது போல வேறு படுத்துந் தனமையவாய உருபுகளாய் நிற்றலினமையானும் உருபா காவென்க. இவற்றைப் பொருளென்றலே ஆசிரியர் தொல்காப்பிய னுர்க்குங் கருத்தென்பது சேனவரையருரையான் உணர்க. வாய் வயின பாடி அணை முதலியன இடப்பொருளவாகிய பெயராய் நிற்ற லல்லது பெயர்ப்பொருளே வேறுபடுத்துந் தன்மையவாய் நிற்றலின மையின் அவையும் ஏழனுருபாகாமையுங் கண் கால் முதலியனபோ லத் தம்முட் பொருள்வேறுபாடி உடைய அன்மையின் இவ்விடப் பொருள்பற்றிக் கண்ணென்னுருபு வாராமையும் உணர்க. (அசு)

உ0கு. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
நிரிபு குன்றன மிகுத லியல்பயற்
நிரிபு மாம்பொருள் படாக்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப பதுவே.

இஃது எட்டாம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த் துகின்றது.

இ - ள். எட்டாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்று மைக்கு உருபு விளியேற்கும் பெயரின இறுதி நிரிதலுங் கெடுதலும் பிறிதுவந்தடைதலும் இயல்பாதலும் சாற்றயல் நின்றதன் நிரிபுமாம்; அதன்பொருள் படர்க்கையிடத்தாரை ஒருவன தனக்கு எதிர்முக மாக விளித்தலாம். எ - று.

எய்துபெயரெனவே, எய்தாப்பெயரும் உளவென்பதாயிற்று. அவை மேற்கூறுப. படர்க்கையிடத்தாரெனவே ஏனையிடத்தார் ணண்டே விலக்கப்பட்டாரென்பதூஉம் பெற்றும். படர்க்கையோ

ரை என்றாரேனும் "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்—வரு வன தாமே வழக்கென மொழிப" என்பவாகலின் அவவிடத்து ஐம் பாலுங்கொள்க. இயல்பாய விளியுருபிற்கும் பெயருருபிற்கும் வடி வான் வேற்றுமையின்றேனும் பொருளான் உளதெனக்கொள்க. தானென்பது சந்தவின்பப்பொருட்டு வந்தது. (சஎ) 5

உ0சு. இஉ ஊவோ டையோ னளரல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னுவீ றுகும் பொதுப்பெயர்
மெய்புயி ரணைதற் றம்றிணை விளிப்பன
வொல்வழி யறிதல வழக்கத் தான. 10

இது மேல் எய்துபெயரென்றூர் அவை இவையெனத் தொ குத்து உணர்த்துகின்றது.

இ - ள். இகர உகர ஊகார ஐகார ஓகாரங்களும் னகர ளகர ரகர லகர யகரங்களுமாகிய பத்து சாற்று உயர்திணைப்பெயர்களும் இவற்றுள் ஓகாரமும் ரகாரமுமாகிய இரண்டனையும் ஒழித்துகின்ற 15 எட்டுடனே ணகாரமும் ஆகாரமுமாகிய பத்து சாற்று விரவுப்பெயர்க ளும் ஒற்றும் உயிருமாகிய எல்லா சாற்று அஃறிணைப்பெயர்களும் விளியேற்பனவாம். அங்ஙனம் விளியேற்றற்குப் பொருந்தும் இடம் அறிக வழக்கிடத்து. எ - று.

முன்னிலையாக்கலுஞ் சொல்வழிப்படுத்தலும் வேண்டுழியென் 20 பார் ஒல்வழியென்றூர். இன்னும் அதனானே உகரங் குற்றுகர மெனவும் முற்றுகரமுஞ் சிறுபான்மை விளியேற்குமெனவுங் கொள்க. ஏனை சாற்றுப் பெயர்கள் விளிகொள்ளாவென்பது தானே போதருமெனக. (சஅ)

உ0எ. இம்முப் பெயர்க்க ணியல்பு மேயு 25
மிகர ஈட்சியு முருபா மன்னே.

இது மூவகைப்பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு தொகுத்து உணர்த்துகின்றது.

இ - ள். மேல் விளியேற்பன இவையென வரைந்தோதப் பட்ட உயர்திணைப்பெயர் விரவுப்பெயர் அஃறிணைப்பெயரென்னும் 30 மூவகைப்பெயர்க்கண்ணும் இயல்பாதலும் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிகுதலும் இகர சாறு சகாரமாய்த் திரிதலும் விளிவேற்று மைக்கு உருபுகளாம். எ - று.

வரலாறு;—நம்பிவாழி வேந்துவாழி திருவாழி ஆஉவாழி நங்கைவாழி கோவாழி என உயிரீற்று உயர்திணைப்பெயர்கள் அண் மைக்கண் இயல்பாயின. கணி கணியே, வேந்து வேந்தே, திரு திருவே, ஆஉ ஆஉவே, கோ கோவே என உயிரீற்று உயர்தி ணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. நம்பி நம்பீ, தோழி தோழீ என இகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் ஈகார மாய்த் திரிந்தன. னகர ஈற்று உயர்திணைப்பெயருள் "நம்பன்சிறி தேயிடைதந்திதுகேட்க" என அன்னீறுஞ் சேரமான் மலையமான் என ஆனீறும் அண்மைக்கண் இயல்பாயின. "படிவ வண்டிப் பார்ப்பான் மகனே" என முறைமைசுட்டாமகனுக் "தென்னவனே தேர்வேம்தே தேறுநீர்க் கூடலார்—மன்னவனே மார்பின் மறு" என அன்னீறுந் தமுன் தம்முனே என உன்னீறும் பிறிதுவந்து அடை தலாய் ஏகாரம் மிக்கன. கடவுள்வாழி அடிகள்கூறீர் கோமான்கூ றுய் கடியான்கூறுய் "ஆவுமானியற்பார்ப்பனமாக்களு***மெம்மம் புகடிது விடுது நும்மரண் சேர்மின்" என ளகர ஈற்றுயர்திணைப்பெ யர்கள் அண்மைக்கண் இயல்பாயின. "அகவன்மகளேயகவனம களே" என முறைமைசுட்டாமகளென்னும் ளகர ஈற்று உயர்தி ணைப்பெயர் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கது. மாந்தர்கூ றீர் சான்றோர்கூறீர் கேளிர்வாழி "பெண்டிரும்பிணியுடையீரு*** நும்மரண்சேர்மின" என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் அண் மைக்கண் இயல்பாயின. இறையவர் இறையவரே வந்தவர் வந்த வரே கரியவர் கரியவரே என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் பிறி துவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. குரிசில்கூறுய் தோன்றல் கூறுய் ஆண்பால்கூறுய் பெண்பால்கூறுய் என லகர ஈற்று உயர் திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. திருமாலே தோன் றலே "குருசிலேயெம்மையுள்ளாய்" ஏன லகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. ஆய்வாழி என யகர ஈற்று உயர்திணைப்பெயர் அண்மைக்கண் இயல்பாயிற்று. ஆயேகூறுய் என யகர ஈற்று உயர்திணைப்பெயர் பிறிதுவந்து அடை தலாய் ஏகாரம் மிக்கது. பிணவாராய் சாத்திகூறுய் பூண்டுகூறுய் அழிதூவாரர்ய் தந்தைதாராய் அன்னையருளாய் என உயிரீற்று விர வுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. பிணவேகூறுய் பூண் டேகூறுய் என உயிரீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைத லாய் ஏகாரம் மிக்கன. சாத்தி சாத்தீ எப்பி எப்பீ என இகர ஈற்று விரவுப்பெயர்கள் ஈகாரமாய்த் திரிந்தன. ஆண்வாழி பெண்வாழி சாத்தன்வாழி மகள்வாழி தூங்கல்வாழி தாய்வாழி என ஒற்றீற்று விரவுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. ஆண் ஆணே பெண்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

அம்பலவிப்பு

பெண்ணே மகன் மகனே மருமகன் மருமகனே மகள் மகளே மருமகள் மருமகளே தூங்கல் தூங்கலே கூந்தல் கூந்தலே தாய் தாயே என ஒற்றீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் பிக்கன. கெஞ்சம்வருந்தினே வாழியகெஞ்சம் என வும் "குருகு கருங்கால்வெண் குரு கொன்று கேண்மதி" எனவும் ஒற்றீற்று அஃறிணைப்பெயரும் உயிரீற்று அஃறிணைப்பெயரும் அண்மைக்கண் இயல்பாயின. இதண் இதணே புனம் புனமே மான் மானே வேய் வேயே கார் காரே குயில் குயிலே புள் புள்ளே என வும் விள விளவே நிலா நிலாவே கிளி கிளியே வீ வீயே குருந்து குருந்தே பூ பூவே சே சேவே கழை கழையே எனவும் ஒற்றீற்று அஃறிணைப்பெயர்களும் உயிரீற்று அஃறிணைப்பெயர்களும் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் பிக்கன. மந்தி மந்தீ தும்பி தும்பீ என இகர ஈற்று அஃறிணைப்பெயர்களின் ஈறு ஈகாரமாய்த் திரிந்தன. பிறவும் அன்ன.

மன்னென்றபிகையானே ஐகார ஈற்று உயர்திணைப்பெயர் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் ஏலாதனவும் அஃறிணைப்பெயர் அன்மொழித்தொகையாய்த்தான் ஆருபெயராய்த்தான் உயர்திணைக்கண்வந்துழி உயர்திணைப்பெயராய்ச் சுடர்த்தொடி "சுடர்த் தொடீகேளாய்" என இகர ஈறு ஈகாரமாய்த் திரிந்துந் தாழ்குழல் தாழ்குழலே எனப் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் பிக்கும் விளியேற்றலுந் தோழீஇஇஇஇ தோழீஇஇஇஇஇ எனத் தொழில்செய்கின்றவளேயென்னும் பொருட்டாய் நிற்பதோர் இகர ஈற்று அள பெடைப்பெயரும் உழாஅன் கிழாஅன் என னகர ஈற்று அள பெடைப்பெயரும் கோஒள் என ளகர ஈற்று அள்பெடைப்பெயருஞ் சிறுஅர் மகாஅர் என ரகர ஈற்று அளபெடைப்பெயரும் மாஅல் என லகர ஈற்று அளபெடைப்பெயரும் இயல்பாய் விளியேற்றலும் நம்முன் நம்முறு என உன்னீறு ஆகாரம் மிகுதலும் அம்மசாத்தா என்புழிச் சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும் அம்ம என்னும் இடைச்சொல்லும் எதிர்முகமாக்குதலே குறித்துநிற்றலின் அதுவும் அம்மாசாத்தா என இறுதி திரிந்து விளியேற்றலும் இவ்வாறுவருவன் பிறவுங்கொள்க. இவ்வளபெடைப்பெயர்கள் செய்யுளுட் குறைந்துவந்தன சந்த இன்பகோக்கி விகாரத்தான் வந்தனவென்க. (அக)

உஅ. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவு
முருபா மல்லவற் றுயு மாகும்.

இஃது ஐகார ஈற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு அவ்வைகாரம் ஆயாயும் ஆவாயுந் திரிந்து விளியேற்றலும் உயர்திணை அஃறிணைப் பெயர்க்கு அஃது ஆயாய் ஈறுதிரிந்து விளியேற்றலும் உருபாம். எ - று.

வரலாறு;—அன்னை அன்னாய் "அன்னை வன்னை வலந்தே னெமூந்திராய்" அத்தை அத்தாய் அத்தா எனவும் நங்கை நங்காய் மடந்தை மடந்தாய் எனவும் "சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்" "கொன்மூய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்" எனவும் வரும்.()

உ0கூ. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்கள
ளளபீ றழிவய னீட்சி யதனே
டூறு போத லவற்றோ டோவுற
வீறழிந் தோவுற லிறுதியவ் வாத
லதனே டயறிரிந் தேயுற வீறழிந
தயலே யாதலும் விளியுரு பாகும்.

இஃது னகர ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். னகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில சேரமான் சேரமாஅன் மலையமான் மலையமாஅன் அம்பர்கிழான் அம்பர்கிழாஅன் வல்லங்கிழான் வல்லங்கிழாஅன் எனச் சேய்மைக்கண் அளபெடித்தலுஞ், சில துறைவன் துறைவ ஊரன் ஊர எனஅன்னீறு அண்மைக்கண் ஈறுகெடுதலுஞ், சில நம்பன் நம்பான் எம்பெருமன் எம்பெருமான் என அன்னீறு ஈற்றயல் நீடலுஞ், சில துறைவன்துறைவா ஊரன் ஊரா சோழன் சோழா என அன்னீறு அயல் நீண்டு ஈறுகெடுதலுஞ், (ஏடாவென்பது படர்க்கைப்பெயராகாது தோழன் மூன்னிலைப்பெயராயேதோழாவென்னும் பொருட்டாய் நிற்பதொன்மூகலின் ண்டைக்கு ஏலாதென்க.) சில ஐயன் ஐயாவோ அன்பன் அன்பாவோ என அன்னீறு புலம்பின்கண் ஈறழிந்து அயல் நீண்டு பிறிதுவந்தடைதலாய் ஓகாரம் மிகுதலுஞ், சில திரையன் திரையவோ ஐயன் ஐயவோ என அன்னீறு புலம்பின்கண் ஈறழிந்து பிறிதுவந்தடைதலாய் ஓகாரம் மிகுதலுஞ், சில வந்தான் வந்தாய் சென்மூன் சென்மூய் என ஆனீறு இறுதி யகாரவொற்மூயுஞ், சில வாயிலான் வாயிலோயே என ஆனீறுங் கிழவன் "பெருங்கால்வைப்பினு

கெழுவோயே" மாயன் மாயோயே என அன்னீறும் அயல் நிரிந்து இறுதி யகரவொற்றுய் ஏகாரம் மிகுதலும், சில ஐயன் "ஐயேய மக்கீங்கருள்" முருகன் "மடவைமனற வாழியமுருகே" என அன்னீறு ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாதலும் விளியுருபாம். எ-று.

பிறவும் அன்ன. 5

ஒருசாரென்பதனே விளியதிகாரமுடிவளவும் உப்த்துரைக்க.()

உகO. ளஃகா னுயர்பெயர்க் களபய னீட்சி
யிறுதி ளகரம் யவ்வொற் றுக
லயலி லகரமே யாதலும விளித்தனு.

இது ளகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. 10

இ - ள். ளகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில "மேவார்த் தொலைத்தவிறன்மிகுவேளள்" எனச் சேய்மைக்கண் அளபெடுத்தலும், சில குழையள் குழையாள் அணியள் அணியாள் மக்கள் மக்கள் என அன்னீற்று அயல் நீடலும், சில குழையாள் குழையாய் உண்டாள் உண்டாய் என ஆளீற்று இறுதிளகரம் யகரவொற்றுய்த் திரிதலும், சில "தலைமீதுகொள்வமடிகேள்" என ஈற்றயலில் அகரம ஏகாரமாதலும் விளியுருபாம். எ - று. 15

பிறவும் அன்ன.

"துறந்துள்ளாரவரெனத்துணிகொள்ளலெல்லாந்" என ஈறழிந்தும் விளியேற்கும் என்பாரும் உளராலோவெனின் அது படர்க்கைப்பெயராகாது தோழிமுன்னிலைப்பெயராயே தோழீ என்னும் பொருட்டாய்நிற்பதொன்றுகலின் ஈண்டைக்கு ஏலாதெனக. (குஉ) 20

உகக. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றய
லகர மிஈ யாதலாண் டையா
வீயாத லதனே டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீட
லீற்றி னேவுற லிவையுமீண் டுருபே. 25

இது ரகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. 30

இ) - ள். ரகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில உரூர் உரூஅர் செரூர் செரூஅர் எனச் சேய்மைக்கண் அளபெடித்தலுஞ், சில தெவ்வர் "எனைமுன்னில்லன்மின்றெவ்விர்" என ஈற்றயல் அகரம் இகரமாதலுஞ், சில வேந்தர் வேந்தீர் நாய்கர் நாய்கீர் என அஃது ஈகாரமாதலுஞ், சில பார்ப்பார் பார்ப்பீர் சான்ரூர் சான்றீர் கரியார் கரியீர் என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலுஞ், சில பல்சான்ரூர் பல் சான்றீரே சிவகசாமியார் சிவகசாமியீரே என அதனுடனே ஏகாரம் மிகுதலுஞ், சில தோழியார் தோழீரே தொழும்பியார் தொழும்பீரே என ஈற்றயல் யாக்கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாய் ஏகாரம் மிகுதலுஞ், சில பெண்டிர் பெண்டிரோ என இர் ஈறு புலம்பினகண் ஓகாரம் மிகுதலுமாகிய இவையும் விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன.

"ஈண்டென்ற மிகையானே கடல் கழி சாத்தி கொற்றி என்றற் ரூடக்கத்து ஒருசாரனவற்றைக் கடலார் கழியார் சாத்தியார் கொற்றியார் எனச் சிறபபித்து உயர்திணைவாய்பரட்டான் வழங் குழி அவையுங் கடலீரே கழியீரே சாத்தீரே கொற்றீரே என்றற் ரூடக்கத்துத் திரிபேற்றலும் பிறவாற்ரூன் வருக் திரிபுவேறுபாடு ரூங் கொள்க. (ருஙூ)

உகஉ. லகாரவீற் றுயர்பெயர்க் கயனீ தெலும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

இது லகார யகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். லகார யகார ஈற்று உயர்திணைப்பெயர்களுட் சில முறையானே ஏந்தல் ஏந்தால் தோன்றல் தோன்ரூல் குரிசில் குரிசீல் என லகார ஈறு ஈற்றயல் நீடலும் "விளங்கு மணிக்கொடும் பூணுஅய் நின்ரூட்—டிளம்பிடி யொருரூல் பத்தீ னும்மே" என யகார ஈறு சேய்மைக்கண் அளபெடித்தலும விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன. (ருசூ)

உகங. ஸவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
ணிறுதி யழிவத் னேடைய னீட்சி.

இது னகார ஈற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். னகார ஈற்று அஃறிணைப்பெயருள் ஞும் விரவுப்பெய ருள் ஞுஞ் சில முறையானே அலவன் "கொடுந்தாளலவகுறையாமீ ரப்பம்" எனவும் சாத்தன் சாத்தகேள் எனவும் ஈறுகெடுதலும் இக லன் "இகலுபகுதிக்குமிகலா" அலவன் "கண்டல்சேரலேசேரலவா" க்ஞுழன் "கடும்பறைக்கஞுழா" எனவும் சாத்தன் சாத்தா கொற் தன் கொற்ரு எனவும் ஈறுகெடுதலுடனே ஈற்றயல் நீடலும் விளியு ருபாம்.. எ - று.

பிறவும் அன்ன. முன்னர் விளியுருபாமென்றதனே ணண்டும் உய்த்துரைக்க. (ருரு)

உகச. லளவீற் றஃறிணைப பெயாபொதுப் பெயர்க்க ணீற்றய னீடசியு முருபா கும்மே.

இது லகார ளகார ஈற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெ யர்க்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். லகார ளகார ஈற்று அஃறிணைப்பெயருள்ளும் விர வுப்பெயருள்ளுஞ் சில முயல் "இங்களுட் டோன்றி யிருந்த குறுமு யால்" கிளிகள் கிளிகாள் எனவும் கூந்தல் கூந்தால் மக்கள் மக்காள் எனவும் ஈற்றயல் நீடலும் விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன. (ருசு)

உகரு. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையி னளவும புலம்பி னேவு மாகும.

இது முன்னர்க் கூறிப்போந்த இயல்புமுதலாயின இன்னுழி யும் என்கின்றது.

இ - ள். அண்மைக்கண் இயல்பாதலும் ஈறுகெடுதலுஞ் சேய் மைக்கண் அளபெழுதலும் புலம்பின்கண் ஓகாரம் மிகுதலும் விளியு ருபாம். எ - று.

நம்பி நம்பீஇ சாத்தி சாத்தீஇ துப்பி தும்பீஇ என இகர ஈறு சேய்மைக்கண் அளபெழுந்தன. ஒழிந்தவற்றிற்கு உதாரணம் முன் னர்க் காட்டினவேயாம். (ருள)

உகசு. தூது எனென் னவைமுத லாகித் தன்மை குறித்த னளரவெ னிறுதியும்

வினுச்சுட் டெனுமவை முதல வாகி
யைம்பால் குறித்த வைவகை யிறுதியு
மன்ன பிறவுந் தாமுந் தானு
மின்மை வேண்டும் விளியொடு கொளலே.

இது மேல் விளியேற்குமெனக் கூறிப்போந்த இறுதியவற்றுள் ளும் இவ்வீற்றுப்பெயர்கள் விளியேலா என்கின்றது.

இ - ள். த ந து என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயி ரையும் முதலாகவுடையவாய் ஒருவனது இயைமைப்பொருண்மை யைக் குறித்துநின்ற ன ள ர என்னும் மூவகைப்புள்ளியையும் இறு தியாகவுடைய பெயர்களும் வினுவெழுத்துக்களையுஞ் சுட்டெழுத் துக்களையும் முதலாகவுடையவாகி ஐம்பாலையுங் குறித்துநின்ற ஐவ கை இறுதியையும் இறுதியாகவுடைய பெயர்களும் அவைபோல் வன பிறபெயர்களுந் தாம் தான் என்னும்பெயர்களும் மேல் விளி யேற்குமெனப் போந்த பெயரோடு கோடலியின்றிநிற்றலே வேண் டும் ஆகிரியன். எ - று.

வரலாறு;—தமன் தமள் தமர் நமன் நமள் நமர் நுமன் நுமள் நுமர் எமன் எமள் எமர் தம்மான் தம்மாள் தம்மார் நம்மான் நம் மாள் நம்மார் நும்மான் நும்மாள் நும்மார் எம்மான் எம்மாள் எம் மார் எனவும், எவன் எவள் எவர் எது எவை ஏவன் ஏவள் ஏவர் ஏது ஏவை யாவன் யாவள் யாவர் யாது யாவை எனவும், அவன் அவள் அவர் அது அவை இவன் இவள் இவர் இது இவை உவன் உவள் உவர் உது உவை எனவும், தாம் தான் எனவும் வரும்.

அன்னபிறவும் என்றதனுனே மற்றையான் மற்றையாள் மற் றையார் மற்றையது மற்றையவை பிறன் பிறள் பிறர் என்பன போல்வனவுங் கொள்க.

வேண்டும் என்றதனுனே "எம்மானே தோன்றினு யெம்மை யொழித்தியோ" எனச் சிறுபான்மை விளியோடு கோடலுந் தமர் முதலாயின கள்ளென்னும் இடைச்சொல்லோடு கூடியவழி ளகர ரகரமாறுபோல ரகரயல் நீண்டு தமர்காள் எமர்காள் எனவும் நமரங்காள் எனவும் பெயர்த்திரிசொல்லாய்த் திரிந்துநின்று விளியோடு கோட லுங்கொள்க. (நிசு)

உகள. பொருண்மயங் குதலு முருபுமயங் குதலுந்
தெரிநிலை யுடைய வேற்றுமைக் கண்ணே.

இது மேற்கூறிப்போந்த வேற்றுமைகட்கு எய்தாதது எய்து விக்கின்றது.

இ - ள். பொருள்மயங்குதலும் உருபுமயங்குதலுமாகிய இரு கூற்று மயக்கமும் ஆராய்ந்ததியும் இடனுடைய வேற்றுமையி டத்து. எ - று.

உரியவை உரிய என்பார் தெரிநிலையுடைய என்றார். (ருசு)

உகஅ. அவற்றுட், பொருளின் மயக்கம் பிறிதொன்றன் தன்பொருளவிடாததலைமயங்குதலே. [பொருளொடு

இது பொருள்மயக்கமாமாறு கூறுகின்றது.

இ - ள். அவ்விருகூற்று மயக்கத்துட் பொருளின்மயக்கமா வது பிறிதோர் வேற்றுமையுருபின் பொருளோடு பிறிதோர் வேற் றுமையுருபு தன்பொருளிற் நிராது அப்பொருணிலைக்களத்துச் சென்று மயங்குதலாம். எ - று. (சுஎ)

உகக. உருபின மயக்கமோ ருருபின் பொருளொடு தன்பொருள விடுத்துத் தலைமயங் குதலே.

இஃது உருபு மயக்கமாமாறு கூறுகின்றது.

இ - ள். உருபின்மயக்கமாவது பிறிதொரு வேற்றுமையுரு பின் பொருளோடு பிறிதொரு வேற்றுமையுருபு தன்பொருளிற் நிர்ந்து அப்பொருணிலைக்களத்துச் சென்று மயங்குதலாம். எ - று.

உஉ0. அவ்விரு திறனுஞ் செவ்விதி னுடி யிவ்வென வறித லியல்புணாந் தோரே.

இது மேலனவற்றிற்கு ஓர் புறனடை கூறுகின்றது.

இ - ள். அவவிருகூற்று மயக்கத்தையும் முறையானே ஆராய்ந்து இவையென அறிக இலக்கணங்களே அறிந்தோர். எ - று.

இவ்வென அறிதலாவது கோட்டைக்குறைத்தான் குதினைக் கன்றினுன் நெறியைச்சென்றான் என இரண்டாவதன் பொருளா கிய குறைத்தல் முதலாயின பொருட்கட் கோட்டின்கட்குறைத் தான் குதின்கட்கன்றினுன் நெறிக்கட்சென்றான் எனக் குறைத்தல் முதலியவற்றிற்குக் கோடிமுதலாயின இடனுமாகலிற் தன்பொரு

ளிற் றீராது ஏழாவது மயங்கிற்றெனவும், "இவளைக்கொள்ளுமிவ் வணி" என இரண்டாவதன் பொருட்கண் 'இவட்குக்கொள்ளுமிவ் வணி' எனவும், அவனுற்செயத்தகுமக்காரியம் என வரும் மூன்றாவ தன்பொருட்கண் அவற்குச்செயத்தகுமக்காரியம் எனவும், கருவூரின் கிழக்கு சாத்தனினெடியன் மனைவாழ்க்கையிற்பிற்றுவிட்டான் ஊ ரிற்றீர்ந்தான் என வரும் ஐந்தாவதன் பொருட்கட் கருவூர்க்குக்கி ழக்கு சாத்தற்குநெடியன் மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் ஊர்க்குத்தீர்ந்தான் எனவும், யானையதுகோடுகூரிது ஆவின்கன்றுக ரிது என வரும் ஆறாவதன் பொருட்கண் யானைக்குக்கோடுகூரிது ஆவிற்குக்கன்றுகரிது எனவும், காலைக்கண்வரும் என வரும் ஏழா வதன் பொருட்கட் காலைக்குவரும் எனவும், இதற்கு இதுவென் பது பட வருந் தன்பொருளிற்றீராது நான்காவது மயங்கிற்றெனவும், மணலுளீன்ற எனவரும் ஏழாவதனபொருட்கட் "கிளையரிகாணற்கி ழங்குமணற்கீன்ற—மூளியோ ரன்ன முள்ளெயிற் றுத்துவர் வாய்" எனவும், கொக்கினின்றும் ஏழிந்த எனவரும் ஐந்தாவதன் பொ ருட்கட் "கொக்கினுக்கொழிந்தநீம்பழங்கொக்கின" எனவும் தம் பொருளிற்றீர்ந்து நான்காவது மயங்கிற்றெனவும் அறிதலாம். பிறவும் அன்ன.

தொக்குழி மயங்குவனவும் உள. அவை மேற்கூறுப.

பொருண்மயக்கந் தன்பொருளிற் றீராது மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இயை புடையனவாமாகலின் அதுதொடர்ப்பொருள் அவவேற்றுமையுரு பின் பொருளாவான் சேறலான் அதனைச் சார்ந்து அதன்பொருளா மென்பதூஉம் உருபுமயக்கந் தன்பொருளிற் றீர்ந்து மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இயைபு டையனவல்லவாமாகலின் அத்தொடர்ப்பொருள் அவவேற்றுமையு ருபின் பொருளாவான் செல்லாமையான் அதன் பொருளாகாது தான்செல்லும் பக்கத்து வேற்றுமையுருபினைச் சார்ந்து அதன்பொ ருளாமென்பதூஉந் தாமே விளங்குமென்று உணர்க. (சூ2)

உஉக. முதன்முனை வரிற்கண் கினைமுன் வருதலு
மதுமுதற காகிற் கினைக்கை யாதலு
மினையவை பிறவு கினைதல் வேண்டும்.

இது வேற்றுமையுருபு ஏற்புழிப் படுவதோர் வரையறையும் வேற்றுமைப்பகுதிக்கு ஏற்பதோர் புறனடையும் உணர்த்துகின்றது.

இ - ள். முதற்சொல்லுஞ் சினைச்சொல்லுமாகத் தொடர்ந்த வழி முதற்சொற்கண் இரண்டாவது வரின் ஏழாவது சினைச்சொற் கண் வருதலும் ஆறாவது முதற்சொற்கண் வரிற் சினைச்சொற்கண் இரண்டாவது வருதலும் இத்தன்மைய பிறவும் ஆராய்ந்து அறிதலே விரும்பும்.—ஆசிரியன். எ - று.

வரலாறு;—யானையைக்கோட்டின்கட்குறைத்தான் எனவும் யானையதுகோட்டைக்குறைத்தான் எனவும் வரும்.

இனி, இனையவைபிறவும் என்றதனானே யானையைக்கோட் டைக்குறைத்தான் என நரிடத்தும் இரண்டாமேற் வருதலும் இவ வாறே மணிமைநிறத்தின்கட்கெடுத்தான மணியதுநிறமைதக்கெடுத் தான மணியைநிறத்தைக்கெடுத்தான எனப் பண்புபற்றிவருதலுந் தலைமகனைச்சேலவின்கணழுங்குவித்தல் தலைமகளைச்சேலை யழுங்குவித்தல் தலைமகனைச்சேலையழுங்குவித்தல் என்னுந் தொழில் பற்றி வருதலுஞ் சாத்தனைநூலேயோதுவித்தான் யாம்நுமக்கிவை விலக்கினான எனப் பெருட்டொடர்ச்சிபற்றி வருதலும் அரசனேடி னாயாவந்தா ஆயிரபமேனுயொணுக்கர்வந்தார் என் உயர்பொருளுமி ழிந்தபொருளும்பற்றி மயங்கிவந்துழி முருவினையிடைச்சொல் உயர் பின்வழிநிகரலும் நம்பிமகன் நங்கைகணவன் என்னும் தொகை களே விரிப்புழி நம்பிக்குமகன் நங்கைக்குக்கணவன் என "அது வென வேற்றுமை யுயர்நிலைத் தொகையெயி—னதுவெ னுருபுகெ டக் குகரம் வருதலும்" பிறவுற்றுன வருவனவுங் கொள்க. (சுஉ)

உஉஉ. முதலிவை சினையிவை யெனவே யுளவீல வுரைப்போர் சூறிபபின வறறே பிண்டமும.

இது முதல் சினைகளே ஆராயுமுகத்தான் ஐயம் அறுத்தலும் பல பொருட்டொகுதியை உணர்த்தும் பெயர்க்கும அற்றின் இயல்பு ஏற்பித்தலும் நிகழ்கின்று.

இ - ள். முதற்பொருள் இவை சினைப்பொருள் இவை எனத் தம்முள் வேறுவேறு பொருளாக; சொல்லுவாரது குறிப்பின்வழி யவாய் முதலாயவையே சினையுமாய்ச் சினையாயவையே முதலுமாய் நிற்கும் பிண்டப்பொருண்மையை உணர்த்தும் பெயரும் அவையில் பிற்றை முதலுஞ் சினையுமாக வழங்கப்பட்டு முதற்கு இரண்டாவது வரிற் சினைக்கு ஏழாவது வருதலுஞ் சிறபானமை இரண்டாவது வருதலும் முதற்கு ஆறாவது வரிற் சினைக்கு இரண்டாவது வருத லும் பொருந்தும். எ - று.

முதலெனப்பட்டது தானே தன்னைப் பிறிதொன்றற்கு ஏது தேசமாக நோக்கிச் சினையெனக் குறித்தவழிப் படையதியானே எனச் சினையுஞ் சினையெனப்பட்டது தானே தன்கண் ஏதுதேசத்தை நோக்கி முதலெனக் குறித்தவழிக் கோட்டத்துநுனி என முதலு மாமென்பார் 'உரைப்போர்குறிப்பின்' என்றார். கோட்டைநுனிக் கட்குறைத்தான் கோட்டைநுனியைக்குறைத்தான் கோட்டதுநுனியைக்குறைத்தான் என முதற்கு ஓதப்பட்ட உருபு சினைக்கண்ணும் வந்ததாலென்று ஐயற்றார்க்குக் கருத்துவகையாற் கோடென்பதூஉம் ஆண்டு முரலாய்நிற்றலின் முதற்கு ஓதிய உருபே முதற்கண் வந்ததென ஐயமகற்றியவாறு காண்க. குப்பையைத்தலைக்கட்கிதறினான் குப்பையைத்தலையைச்சிதறினான் குப்பையதுதலையைச்சிதறினான் என வரும். இது வேறுபல குழீஇ யகாடுமுதலியவற்றிற்கும் ஒக்கும். பிண்டமும் முதலுஞ்சினையுமாகலின் வேறு கூறவேண்டாவெனின், குப்பையென்புழித் தொக்க பல்பொருளல்லது அவற்றின் வேறுயவற்றின் இயன்று தான ஒன்றெனப்படுமே பொருளின் மையிற் தொல்லாசிரியர் அதனை முதலென்றுவேண்டார் அது மேற்றோட்டு வழங்கிவரும் மரூஉவென்பது அறிவித்தற்கு வேறு கூறினரென்க. (சூசு)

உஉ. ஐயான்குச செய்யுட் கவவு மாகு
மாகா வஃறிணைக கானல் லாதன.

இஃது அவவேற்றுமையுருபுகளுட் சில உருபுகள் செய்யுளுட் திரியவும் பெறுமெனகின்றது.

இ - ள். ஐயும் ஆனுங் குவவும் ஆகிய மூனறு உருபுஞ் செய்யுளிடத்து அகரமாய்த் திரிந்து நிற்கவும் பெறும், அஃறிணையிடத்தாயின் ஆனுருபன்றி ஐயுங் குவவுந் திரியா. எ - று.

'ஆகாவஃறிணைக்கானல்லாதன' எனவே மூன்றும் உயர்திணைக்கண்ணுமெனபது தானேபோதருமென்க. அவவாகுபெயரப் பொதுப்படக் கூறிய அதனுள் ஐகாரம் அகரமாய்த் திரிதலும் ஆன் அகரம் பெறுதலுங் குவவீறு அகரமாய்த் திரிதலும் ஆமெனக் கொள்க.

வரலாறு;—காவலோனை என்பது "காவலோனக்களிறஞ்சும்மே" எனவும், புலவரான் என்பது "புரைதீர்கேள்விப்புலவரான" எனவும், ஆசிரியர்க்கு என்பது "கடிநிலையின்றேயாசிரியாக்க" எனவும், அஃறிணைக்கட் புள்ளினன் என்பது புள்ளினை எனவும

ஞரும். உம்மை எதிர்மறையாகவின் இவ்வாறு திரிதல் சிறுபான்மை யெனக்கொள்க. (சுஞ்)

உஉச. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளூ
மலை விளைகொளூ நான்கே ழிருபையும
புலனும் பெரும்பா லுமென்மனா புலவா

இஃது உருபுஏற்ற சொற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். எல்லைப்பொருண்மைக்கண் வரும் இனனுருபும் அது வெனனுருபும் பெயரைக்கொண்டு முடியும், இவையல்லவாகிய உருபுகள் முற்றும் எச்சமுமாகிய விளைகளைக்கொண்டு முடியும், அவற்றுள் நான்கனுருபும் ஏழனுருபும் பெயரும் வினையுங் கொண்டு முடியும் பெரும்பாலுமெனச் சொல்லுவர் அறிவுடையோர். எ - று.

'எல்லையினனுமதுவும்பெயர்கொளூம என்ருரேனும் இன்னுருபுமுதலிய உருபுகளை ஏற்ற சொற்களோ அவ்வாறு முடிவனவெனக் கொள்க; எனின்' ஐமுதலிய ஆறும இடைச்சொல்லாய் ஒன்றை விசேடிதத்திற்றலல்லது பிறிதொன்ருன முடியும் தன்மை அவற்றிற்கு இனமையின்.

எழுவாய்வேற்றுமைக்கு ஆண்டே முடிபுகூறினையாயினும், ஐ டாவது படர்க்கையிடத்தாரை முன்னிலையி - டத்தாராக்கும் வேறுபாடுடைமையின் மேலெருவேற்றுமையாக வேண்டியதல்லது பெயரது விகாரமாய்ப் பெயராய் அடங்கும் தன்மையும் உடைத்தாதலான் கபிகூரய் எனறவழி அது ங்கூரயெனப் பெயர்வேற்றுமையை ஒருதுப் பயனிலைகொள்ளுமாகலானும், ரண்டு இரண்டாவது முதல ஆறுருபும ஏறறசொற்களுக்கே இயைபுகூறியதெனக் கொள்க. பெரும்பாலுமெனறதனை வினைகொள்வன வினையுங் குறிப்புப்பற்றிய பெயாகே டலுங கொள்க. உதாரணம் மூற்காட்டினவே கொள்க. சாத்தனதுவந்தது சாத்தனதூன்று என ஆறாவது வினையுங குறிப்புங் கொள்ளுமென்பாரும் உளராலாலெவெனின், அஃது ஆறனுருபேற்ற பெயரனறு குறிப்புவினைமுற்றுப்பெயராமென மறுக்க. (சுஞ்)

உஉரு. வேற்றுமைப பொருளோ விரிக்குங் காலை
மீற்றுருன் றியலுந் தொகைவயிற் பிரிந்து
பல்லா ருகப் பொருள்புணர்ந் திசைக்கு
மெல்லாச் சொல்லு முரிய வென்ப.

இது வேற்றுமைத்தொகையை விரிப்புழி வரும் வேறுபாடு அன்மொழித்தொகையை விரிப்புழி வரும வேறுபாட்டோடு ஒக்கு மென்கின்றது.

இ - ள். வேற்றுமைதொகையை விரிக்குமிடத்து வேற்று மையேயன்றி, அனமொழித்தொகையை விரிப்புழிப் பல்லாற்றுன் அன்மொழிப்பொருளோடு புணாந்துவரும் எலலாச்சொல்லும் விரிக் கப்படும். எ - று.

உருபு தொகப் பொருள் நிற்றலின் வேற்றுமைத்தொகையை வேற்றுமைப்பொருளென்றார். அனமொழித்தொகை வேற்றுமைத் தொகை முதலாகிய தொகை இறுதிகின்று இயறலின் 'ஈற்றுகின்றிய லுந்தொகை' எனறார். ஈற்றுகின்று இயலுந் தொகைவயிற் பிரித்து பல்லாறுகப் பொருள்புணாத்து இசைக்கும் எல்லாச்சொல்லும் விரி த்தற்கு உரியவாமாறுபோல, வேற்றுமைதொகையை விரிக்குங்கா லும் பல்லாறுகப் பொருள்புணாந்து இசைக்கும் எல்லாச்சொல்லும விரித்தற்கு உரியவா மென்பார, 'ஈற்றுகினறு இயலுந் தொகைவயிற் பிரிந்து பல்லாறுகப் பொருள்புணாந்திசைக்கு மெல்லாச்சொல்லு முரிய'என்று உபசரித்தார்.பொற்றொடி தாழ்குழல் பட்காரணம் என னும் அன்மொழித்தொகைகளை விரிப்புழிப் பொற்றொடியணிந்தாள் தாழ்குழலுடையாள் மண்ணுகியகாரணத்தாணியன்றது என வரும் அணிதலும் உடைமையும் இயறலும், பொற்றொடியரிவை கருங்கு ழற்பேதை பட்குடட என னும வேற்றுமைத்தொகைகளை விரிப்புழி யும் பொற்றொடியை அணிந்த அரிவை கருங்குழலியுடையபேதை மண்ணுனியனறகுடம என வந்தவாறு கண்டுகொள்க. 'பொருள்பு ணாந்திசைக்கும' எனவே,இருதொகைக்கண்ணும் ஒருவாய்பாட்டா னன்றிப் பொருள் தெரியாமல் உணாத்துதற்கு ஏற்ற வாய்பாடெல் லாவற்றினும வருமெனபதாம். அவவாறுதல் மேற்காட்டினவற் றுட் கண்டுகொளக. அன்மொழித்தொகையிற் சொற்பெய்துவிரித் தல் யாண்டுப்பெற்றுமெனின், அதுவும் அனுவாதமுகத்தான் ஈண் டுப் பெற்றுமெனக. (சுஎ)

உஉசு. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்ரு
வின்னதற் கிதுபய னுக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட்டென்ப தொழின்மூத னிலையே
யவைதாம், வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்.

இது தொழிற்கு மூன்றிற்கும் காரணங்கள் இத்துணை யென்று உணர்த்தியமுகத்தான் மேற்கூறிப் போந்த வேற்றுமைப் பொருள்களோ ரண்டுத் தொகுத்துக்கூறுகின்றது.

இ - ள். வினையும் வினைமுதலுஞ் செயப்படுபொருளும் நிலை மூங் காலமும் கருவியுமாகிய ஆறும் இன்னுருக்க இது பயனுக் வென்று சொல்லப்படும் இரண்டொடுத் தொகுத் தொழிலது முதனிலை எட்டாமென்றும் அவைதாம் எல்லாத்தொழிற்கும் எட்டும் வருமென்னும் யாப்புறவு இல்லை வழக்கின்கட் குன்றத்தகுவன குன்றிவருமென்றுஞ் சொலலுவர் ஆசிரியர். எ - று.

தொழின்முதனிலையென்றது தொழிலதுகாரணத்தை; காரியத்தின் முதனிற்றலின் முதனிலையாயிற்று. காரணமெனினும் காரகமெனினும் ஒக்கும்.

வினைந்தானென்றவழி வினைதற்றொழிலும் வினைதற்கருத்தாவும் வினையப்பட்டகுடமும் வினைதற்கிடமாகியநிலமும் அத்தொழினிகழுங்காலமும் அதற்குக்கருவியாகிய திகிரிமுதலாயினவும் வினையப்பட்டகுடத்தைக் கொள்வானும் வினைத்தலுளும்பயனுமாகிய எட்டும் பற்றி அத்தொழினிகழ்ந்தவாறு கண்டுகொள்க. வினைவித்தானென்பதற்கும் இவையொக்கும். இனிக் குழையனென்றவழி உடையனெனக் கருதுதற்றொழிலுங் கருதுதற்கருத்தாவுங் கருதப்பட்டகுழையும் பிறவும்பற்றி அக்கருத்து நிகழ்ந்தவாறு காண்க.

அங்ஙனந் தொழிலின்வேறாயது காரகமாகலின் வினைதற்றொழிற்கு அத்தொழிலின் காரகமாமாறென்னையெனின், வினைந்தானென்பது வினைதலைச்செய்தானென்னும் பொருட்டாகலிற் செய்தற்கு வினைதல் செயப்படுபொருணீர்மைத்தாய்க் காரகமாமென்பது. அற்றாகலினன்றே கொளலோகொண்டானென்பது இரண்டாம் வேற்றுமைத்தொடராயிற்றென்பது.

இன்னனதற்காக இதுபயனுக என்னும் இரண்டும் அருங்கலச்சொல் வாராமையின் 'அன்னமரபினிரண்டொடும்' எனப் பிரித்துக் கூறினர்.

குன்றத்தகுவன ஆவன செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாம். கொடியாடிற்று வலிவழங்கிற்று என்புழிச் செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலை இல்லையாயினும் மொழிந்தனவற்றுள் ஆதிதலும் வழங்குதலுமாகிய தொழில் நிகழ்ந்தவாறு கண்டுகொள்க.*

இவ்வாறு தொழின்முதனிலை எட்டுடனிலை ஏவல்வினைமுத
லையும் இயற்றுவினைமுதலையுஞ் செய்வதெனவுஞ் செயப்படுபொரு
ணிர்மைத்தாகிய வினையப்படுவது முதலியவற்றையும் இயற்றப்படுவத
னையும் வேறுபடுக்கப்படுவதனையும் எய்தப்படுவதனையும் முறையே
5 வினையென்றுஞ் செயப்படுபொருளென்றும் முதற்காரணமுந்து
ணைக்காரணமும் நிமித்தகாரணமும் பற்றிப் பலவேறுவகைப்பட்டு
வரும் மூன்றுவகைன்பொருளையும், ஐந்தாவதன்பொருளையுங் கருவி
யென்றும் பொருண்முதலிய அறுவகையிடத்தினையும் நிலனென்
றுங் காலமென்றும் நான்காவதன்பொருளெல்லாவற்றையும் இன
10 னதற்காக இதுபயனிவனென்றும் ஈண்டு சேர்த்தோதிப் போக்த
வேற்றுமைப்பொருளேயெல்லாந் தொகுத்துக்கூறினரென்பதூஉமா
யிற்றென்று உணர்க.

இங்ஙனம் ஈண்டுத் தொகுத்ததனாற் பயன் "செய்வதாதி"
எனவும் "செயப்படுபொருளைச்செய்ததுபோல" எனவும் மேல்வரும்
15 வினைக்கு இலக்கணங்கூறுதலும் பிறவுமாமெனவுங் 'குன்றுவருகின்
றும்' என்பதனாற் பயன் எல்லாத்தொழிற்கும் முதனிலையெட்டுங்
குன்றுதலுமோ சிலதொழிற்குச் சிலகுன்றிவருமோ என்னும் ஐ
யம் நீக்குதலுஞ் செயப்படுபொருள்குன்றிய வினையை உணர்த்துஞ்
சொல் இரண்டாவதனோடு இயையுதலெனப் பெறுதலுமாம். (சூஉ)

20 முதலாவது பெயரியல் முற்றிற்று.

உ-வது. வினையியல்.

உஉஎ. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றிப்
பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப் பதுவே.

25 என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே வினையிலக்கணம்
உணர்த்தினமையின் இவ்வோத்து வினையியலென்னும் பெயர்த்து.
இதனுள் இத்தலைச்சூத்திரம் வினைச்சொற்கெல்லாம் பொது இலக்
கணம் உணர்த்துகின்றது.

இ - ள். மேற் கூறிப்போந்த வினைச்சொல்லென்று சொல்
0 லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்
தோடு கூடப் புலப்பட்டுப் பொருளது புடைபெயர்ச்சியை விளக்கு
வதாம். எ - று.

ஈண்டு வேற்றுமையென்றது உருபை.

உ-ம். உண்டனன் உண்ணுகின்றனன் உண்பன் எனவும் பண்டுகரியனுயிருந்தனன் இதுபொழுது கரியனுயிருக்கின்றனன் நாளைக்கரியனுயிருப்பன் எனவும் வேற்றுமைகொள்ளாது காலமொடுதோன்றிப் பொருளது புடைபெயர்ச்சியை விளக்கியவாறுகாண்க. வேற்றுமைகொள்ளாதென்னுது காலமொடுதோன்றியென்னிற் கொழிற்பெயரும், காலமொடுதோன்றியென்னுது வேற்றுமைகொள்ளாதெனின் இடைச்சொல்லும் உரிச்சொலலும் வினைச்சொல்லாவான் செல்லுமாகலான் அவற்றை நீக்குதற்கும், அவாய்நிலை தோன்றியவழித் தோன்றும் ஏனைக் காரகங்கள்போலாது காலம் உடன்றோன்றுமென்பது அறிவித்தற்கு', வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள அவையும் ஆராய்ந்தகாற் குறிப்பாற் காலம் விளக்குதலையுடையவென்றற்கும 'வேற்றுமை கொள்ளாது' எனினுங்காலைக் காலமொடு தோன்றி' என்றுரைக்க.()

உஉஅ முன்ன ரிசைதத முதனிலை யவறறு
னின்ன வினைசசொ லியலுத லுடைதமித்.

இது முற்கூறியவினைச்சொல் அங்ஙனந் தோன்றுங்கால் இம் முதனிலையடியாகத் தோன்றுமென்கின்றது.

இ - ள். மேல் எழுத்தோத்துட் கூறிய முதனிலைகளான் இத் தன்மையையுடைய வினைச்சொற் பிறத்தலையுடைத்தாம். எ - று.

முதனிலைகளாவன நட வா முதலாயினவும் நடப்பி வருவி முதலாயினவும் பொருளிடங்காலம் முதலாயினவும் பிறவுமாம். இத் தன்மையென்றது வேற்றுமைகொள்ளாமை முதலிய தன்மை.

வரலாறு;—நடந்தான் நடக்கின்றான் நடப்பான் எனவும் நடப்பித்தான் நடப்பியாநின்றான் நடப்பிப்பான் எனவும் தெரிநிலை வினையின் முதனிலைகளானும் கச்சினன் கழலினன் எனவும் இல்லத்தன் புறத்தன் எனவும் மூவாட்டையான் ஐயாட்டையான் எனவும் கண்ணன் தோளன் எனவும் கரியன் செய்யன் எனவும் துணங்கையன் கூத்தன் எனவும் குறிப்புவினையின் முதனிலைகளானுந் தோன்றியவாறு காண்க. பொன்னன்னன் புலிபோல்வன் என ஒப்பு உணர்த்துவனவும், எப்பொருளுமல்லனிறைவன் எனப் பண்பு உணர்த்தியும் அவைதாம் இவையல்ல எனக் குறிப்பு உணர்த்தியும் ஆவுண்டு என உண்மை உணர்த்தியும் எவ்வயிர்க்கண்ணுமிறைவனுளன் எனப் பண்பு உணர்த்தியும் மாற்றருந்துப்பின் மாற்றேர்பாச

றையுளன் எனக் குறிப்பு உணர்த்தியும் பொய்யர் நெஞ்சிற்புனித னிலன் எனப் பண்பு உணர்த்தியும் மாற்றேர்பாசறையிலன் எனக் குறிப்புப் உணர்த்தியுங் குழையிலன் கச்சிலன் என உடைமைக்குமறையாயும் மெய்வலியன் எனப் பண்பு உணர்த்தியுஞ் சொல்வல்லன் எனக் குறிப்பு உணர்த்தியும் வருவனவும், நல்லன் தீயன் உடையன் என வருவனவும் இவைபோல்வன பிறவும் ஈண்டுக் குணத்தின் பருதியாயே அடங்குமெனக் கொள்க. ஏனைத் திணைபாலிடங்கடோறும் ஏற்குமாறு ஒட்டுக.

உண்மையாவது பொருள்கட்குக் கேடுபிறந்தக்காலுந் தனக்குக்கேடு இன்றித் தான் ஒன்றேயாய்ப் பல்வகைப்பட்ட பொருடோறும் நிற்பது. பண்பாவது ஒருபொருள் தோன்றுங் காலத்து உடன் தோன்றி அது கெடுத்துணையும் நிற்பது. குறிப்பாவது ஒருபொருட்குப் பின்றேன்றிச் சிறிதுபொழுது நிகழ்வது. (உ)

உஉக. அவைதா, முற்றும் பெயரினை யெச்சமு மாகி யொன்றற் குரியவும் பொதுவு மாகும.

இது முற்கூறிப் போந்த வினைச்சொற்கடாம் இத்துணைப் பிரிதிய என்கின்றது.

இ - ள். வேற்றுமைகொள்ளாது வெளிப்படையானுங் குறிப்பானுங் காலமொடு தோன்றி அங்ஙனந் தோன்றுங்கால் நட வா முதலிய முதனிலையடியாகத் தோன்றிப் பொருளது புடைபெயர்ச்சியை விளக்கிநிற்குமென மேற் கூறிப்போந்த வினைச்சொற்கடாம் முற்றுவினைச்சொல்லும் பெயரெச்சவினைச்சொல்லும் வினையெச்சவினைச்சொல்லுமென மூன்று திறத்தவாய் இருதிணை ஐம்பான் மூவிடங்களுள் ஒன்றற்கு உரியனவும் பலவற்றிற்கு உரியனவுமாய் வரும். எ - று.

முற்றுச்சொற்கும் எச்சத்திற்கும் வேற்றுமை யாதோவெனின் பிறிதொருசொல்லோடு இயையாது தாமே தொடராதற்கு ஏற்கும் வினைச்சொல் முற்றும்; பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்; இவை தம்முள் வேற்றுமையென்க. அஃதேல், உண்டானென்பது சாத்தனென்னும் பெயர் அவாவியன்றே நிற்பது! தாமே தொடராமென்றது என்னையெனின், அற்றன்று, உண்டான்சாத்தனென்றவழி எற்றையென்னும் அவாய்நிலைக்கட் சோற்றையென்பது வந்து இயைந்தாற்போல உண்டானென்றவழி யாரென்னும் அவாய்நிலைக்கட் சாத்தனென்பது வந்து

இயைதலல்லது, அப்பெயர்பற்றியல்லது நிற்றலாற்றா நிலைமைத் தன்று அச்சொல்லென்பது. இவ்வேற்றுமை விளங்குதற்கன்றே தொல்லாசிரியரெல்லாரும் முற்றுசசொல்லெனறும் எசசமென்றும் அவற்றிற்கு இப்பெயா கொடுத்ததூஉமெனக. (ங)

உங0. மற்றுச்சொன் னேக்கா மரபின வினைத்து
முற்றி நிற்பன முற்றியன மொழியவை
யெத்திறத் தானும பெயாமுடி பினவே.

இது முற் கூறிப்போந்த மூவகைவினைச்சொல்லுள் முற்றுவி னைச்சொற்கு இலக்கணங் கூறுகினறது.

இ - ள். பிறிதொரு சொல்லோடு இயையாது தாமே தொட ராதற்கு ஏற்கும இயல்பையுடையனவாய் முற்கூறிபபோந்த வேற் றுமைகொள்ளாமை முதலிய பொது இலக்கணஙகளே ஏற்றுநிற்ற லேயன்றி, மேற் கூறக்கடவ திணபாலிடங்கள் முழுதையும முடிய விளக்கிக் குறைவுபடாது நிறபன முற்றும இயல்பையுடைய முற்று வினைச்சொற்களாம. அத்தனமையவாகிய முறறுவினைசசொற்க டாம எவ்வாறாயினும பெயரோடு முடியும. எ - று.

உ - ம. வஙசரான்வழுதி கரியனமால எனவரும். இனி எத்தி றததானுமெனறதனுனே "கற்றுவவழக்கமெனபதூஉவா" என வெளிப்பட்டுவரினும "அகரமுதனகரவிறுவாயமுப்பஃதென்ப" என வெளிபபடாதுவரினும பெயாமுடிபாமெனக் கொள்க. "எவ்வயிற் பெயரும் வெளிபபடாதோனறி" எனறதனுனே வெளிப்படாதுநிற் றலும பெறபபட்டமையின ணகரக் கூறலவேண்டாவெனின, ஆண்டு முடிக்கப்படுமெ பெயா வெளிபபடாதுநிற்றலுமுடைதென் னூர், இது முடிக்கும பெயராகலின் ஆண்டு அடஙகாதெனப்து.

அஃதேல முற்றிநிற்றலாவது மறறுசசொனனேக்காமையாக வின முற்றிற்றேல அது பெயா அவாயநிலவாது, பெயா அவாவிற் றேல் முற்றுச்சொல்லெனப்படாது, அதனுன் முற்றுச்சொற் பெயர் கொளுமென்றல் மாறுகொளக்கூறலாமெனின், அற்றன்று, உண் டான்சாதனெனபது எற்றையெனனும அவாய்நிலைக்கட் சேரற் றையென்பதனுனே இயைந்தாறபோல உண்டானெனபது யாரென் னும் அவாய்நிலைக்கட் சாதனென்பதனுனே இயைவதல்லது அ வாய்நிலையில்வழி உண்டானெனத தான தொடராய் நிற்றல் முற்கூ றிப் போந்தாமென்பது.

அஃதேற் சாதனென்னும் பெயாசோற்றையென்பதுபோல அவாய்நிற்றலே உள்வழி வருவதாயின் 'எத்திறத்தானும் பெயர்முடி

பினவே' என விதந்தோதல் வேண்டாம பிறவெனின், கன்றுசொன் னுய், அவாயநிற்றலே உளவழி வருவது அவவிரணடற்கும் ஒக்குமே னும், உண்டானெனறவழி உண்டற்றெழிலாற செயப்படபொருள உய்த்துணர்ந்து பின அதன வேறுபாடு உணரச சோறறையென்பது வக்கியைவதல்லது சொற்கேட்டதுணையான எறறையெனக் கேட் பான் செயப்படபொருள் வேறுபாடு அறிவதாக அவாவாமையிற் சோறறையெனபது வருதல ஒருதலேயனறு. இனி உண்டானென னுஞ் சொல்லாற் பொதுவகையான வினைமுதல் உணாநது கேட் பான் அதன வேறுபாடு அறிய அவாவுதலிற சாரதனெனபது வருதல் ஒருதலே. ஆதலான அசசிறப்பு நோக்கி விதநதோதி னுரெனபது. (சு)

உங்க ஒருவன்முத லுகதையும படாக்கை யிடத்து
மொருமைப பனமையைத தனமைமுன் னிலையினு
முக்கா லததினு முரண முறையே
முவைந திருமூன றுருப் முறறு
வினைபபத மொன்றே மூவொன பானும.

இது முற கூறிபபோநத முற்றுவினைசசொறரு வகையும விரி யுங கூறுகினறது.

இ - ள். ஒருவன ஒருதத பலா ஒனறு பலவென்னும் ஐம் பா லையும படாசகையிடத்தும ஒருமைபனமைபபாலகளோத தனமை யிடத்தும முனனிலையிட சதும ஏறிட்டு முகாலஙகளானும உறழ முறையே படாக்கைவினைமுறறுப் பதினைநதுந தனமைவினைமுறறு ஆறும முன்னிலைவினைமுற்று ஆறுமாக வினைமுற்றுசசொல ஒனறே இருபததேழு திறறும. எ - று. (ரு)

உங்உ அனஞ னிறுமொழி யானபாற் படாககையும
அள்ளார் னிறுமொழி பெணபாற படாக்கையும
அஆஆ பவ்வு ரகார மாரீறற
பலலோ படாக்கையும பகருமன னவற்றுண
மாரைக் கிளவி வினையொடு முடியினு
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே.

நிறுத்தமுறையானே முற்றுவினையை விரித்து உணாத்து வான தொடங்கினவற்றுள். இஃது உயர்திணை முப்பாற் படாக்கை வினைமுற்றுமாறு கூறுகின்றது.

இ - ள். அன்னும் ஆனுமாகிய இருவகை விகுதியையும் சாரு
வதையை வினை வினைக்குறிப்புமொழிகள் உயர்திணையாண்பாற்ப
டர்க்கையினையும் அள்ளும் ஆளுமாகிய இருவகை விகுதியையும்
சாருகவுடைய வினை வினைக்குறிப்புமொழிகள் உயர்திணைப்பெண்
பாற்பட்ர்க்கையினையும் அரும் ஆரும் பகரத்தைபேறிய அகரமும்
யாருடாகிய நால்வகை விகுதியையும் சாருகவுடைய வினை வினைக்கு
றிப்புமொழிகள் உயர்திணைப்பலோ டடர்க்கையினையும் விளக்
கும். அத்தனமையவாகிய வினைமுற்றுச்சொற்களுள் மாறீற்றுத்தெ
ரிநிலைவினைமுற்றுச்சொல் வினைகொண்டு முடியுமாயினும் முற்கூறிய
பல்லோரபடர்க்கைவினைமுற்றோடு ஒக்கும். வினைகோடலான்
முற்று எச்சமாய்த் திரிந்தெனப்படாது வினையோடல்லதுபெய
ரோடு அது முடியுமையின். எ - று.

ஆன்பால் பெண்பால் பல்லோர்பாலெனவே திணை உயர்தி
ணையென்பதூஉம் பெற்றும். மேற் பரியனுட் கூறிய இடைநிலைவ
கையானே அன் முதலிய ஆறும் முன்றுகாலமும்பற்றி வரும். சற்று
வகையானே பகர சாறும் மீறும் எதிர்காலம்பற்றி வரும். அங்ங
னம் வருவழி அன்றென்று இறந்தகாலம்பற்றி வருங்கால் புக்கனன்
உண்டனன் உரைத்தனன் தின்றனன் என இடைநிலைக் கடதற
எழுத்துக்களின்முன் அன்பெற்றும் அஞ்சினன் கலக்கினன் என
வய உரிஞினன் ணன்னினன் பொருகினன் திருகினன் துவனினன்
எனவும் போயினன் சேரினன் செல்லினன் வவ்வினன் தள்ளி
னன் எனவும் குற்றுகரமும் ங்கரம் ழிறீற்று மெல்லெழுத்துக்களும்
முசரம் ஞிறீற்று இடையெழுத்துக்களுமாகிய ஏனை எழுத்துக்களின்
முன் அன்பெறுது இடைநிலை இன்னே பெற்றும்வரும். இனி அது
நிகழ்காலம்பற்றி வருங்கால் உண்ணுகின்றனன் உண்கின்றனன்
எனவும் உண்ணுகிடக்கனன் உண்ணுவிருந்தனன் எனவும் ஆகின்று
கின்றென்னும் இடைநிலைகளினமுனனுஞ் சிறுபான்மை கிட இரு
என்பனவற்றின்முன்னும் அன்பெற்றும் வரும். இனி இம்மூது எதிர்
காலத்துவருங்கால் அன்பெறுது இடைநிலைப்பகரவகரங்களேபெற்
றும் வகரம் ஏற்புழிக் குகரமும் உகாமுய அடுத்தும் உண்பன்
உரைப்பன் செல்வன் போவன அஞ்சுவன் கொழிருவன் உரிஞு
வன் எனவரும். பிறவும் அன்ன. இனி ஆனீறு புக்கான் உண்
டான் உரைத்தான் தின்றான் அஞ்சினன் கலக்கினன் உரிஞினன்
போயினன் போனன் எனவும் உண்ணுகின்றான் உண்கின்றான்
உண்கிறான் உண்ணுகிடந்தான் உண்ணுவிருந்தான் எனவும் உண்
பான் உரைப்பான் செல்வான் போவான் அஞ்சுவான் கலக்குவான்

மொழிகுவான் உரிஞுவான் எனவும் அன் பெறுது முறையே முக் காலமுங் காட்டும் இடைநிலைகளே பெற்றுவரும்.

இனி அள்ளீறும் ஆளீறும் அர்ஈறும் ஆர்ஈறும் முறையே அன் னீற்றோடும் ஆளீற்றோடும் ஞ்சுப் புக்களள் புக்கள் புக்கனர் புக் 5 கார் எனவரும். பிறவும் அன்ன. இனிப்பகர ாறு உண்ப உரிஞுப என உகரம்பெறுதலும் பெற்றும் மாரீறு "எள்ளுமார்ஞ்தாரேபக்கு" என உகரம் பெற்றும் ஆர்த்தார் கொண்மார் வந்தார் எனப் பெறு தலும் வரும். பிறவும் அன்ன. உண்டிலன் உண்ணுநின்றிலன் உண் ணலன் முதலிய இவற்றின் மறைவாய்பாடும் அறிக. இனி வினை 10 யொடு முடியுமென்ற மாரீற்றுவினைச் "பீடின்று பெருகிய திரு விற்—பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" "படபட வருகி ஞ்ய—நோய்பால வருத்துங் காணன்மா ரெமரே" எனப் பெயரொடு முடிந்தனவெனின், இவை பாடுக காண்க என்னும் விபங்கோட்கு எதிர்மறையாய்ப் பாடாதொழிக காணாதொழிக என ஏவற்பொருள 15 வாய் நின்றன; மாரீறல்லவென்க. அல்லதூஉம் பாடியார் காண்பார் என்பன லெ வியாங்கோள்முற்றென்றுகொண்டு அவற்றிற்கு எதிர்ம றையாய்ப் பாடாதொழிவார் காணாதொழிவார் என ஏவற்பொருள வாய் நின்றன என்றலும் ஒன்று. அன்றி மார்ருபாகல் இலக்கணம் ஏவற்பாருண்மையை உணரத்துணர்ந்திலேமெனக. இனிக் கரியன் 20 கரியான் கரியன் கரியாள் கரியர் கரியார் என வினைக்குறிப்புவந்தன காண்க. பிறவும் அன்ன. (கூ)

உகுக. யாரென வினவினைக் குறிபடுபயர் முப்பால.

இது உயர்திணைவினைக்குறிப்பினுள் முன்றற்குப் பால்வகை யாற் பொதுமை கூறுகின்றது.

25 இ - ள். யாரென்னும் வினாப்பொருளை உணர்த்தும் வினைக் குறிப்புமுற்றுச்சொல் உயர்திணைருங்கின் முன்றாற்கும் உரி த்து. எ - று.

மூப்பாற்கும் உரித்தென்பார் மூப்பாலென்றார் சொல்லொடு பொருட்கு ஞ்றுமையுண்மையான். இழியிருபாலென்பதற்கும் இவ 30 வரைகொள்க.

வரலாறு;—அவன்யார் அவள்யார் அவர்யார் எனவரும். "ஊதைகூட் டுண்ணு முருபனி யாபத்தெங்—கோதைகூட் டுண் ணிய தான்யார்மன்—போதெலாந்—தாதோடு தாழுந்தார்க் கச்சி

ளுளாடன்—றூதோடு வாராத வண்டி.'' என்புழி வண்டிதான்யார் என அஃறிணைக்கண்ணுஞ் சிறுபான்மை வருதல் உரையிற் கொள்க. திணைவழுவமைதியென்றலும் ஒன்று. (எ)

உங.ச. துறுமிக் குற்றிய லுகர வீற்ற
வொனறன் படர்க்கையும் அஆ வீற்ற
பலவின படர்க்கையும் பகருமன் னவற்றுட்
டுவ்வீறு கிளவி குறிப்பிற் கேற்றலு
மாவீ றெதிர்மறைக் காகலு முரிய.

இஃது அஃறிணை இருபாற் படர்க்கைவினைமுற்றுமாறு கூறுகின்றது.

இ - ள். தறுட என்னுஞ் சாற்றுக்களை ஏறிநின்ற குற்றியலுகரத்தினை முதலாகவுடைய வினை வினைக்குறிப்புமுற்றுச்சொற்கள் அஃறிணையொருமைப்படர்க்கையினையும், அகரமும் ஆகாரமுமாகிய இருவிகுதியையுடைய வினை வினைக்குறிப்புமுற்றுச்சொற்கள அஃறிணைப்பன்மைப்படர்க்கையினையும் விளக்கும்; அற்றன்மையாகிய வினைமுற்றுச்சொற்களுள் டுவ்விகுதியை இறுதியாகவுடைய வினைச்சொற் குறிப்புப்பொருண்மையை விளக்குதற்கு ஏற்புடைத்தாகலும், ஆகார சாற்றுவினைச்சொல் எதிர்மறைத்தொழிற்பொருணிலையை விளக்குதற்கு ஏற்புடைத்தாதலும் உரியவாம். எ - று.

மேம் பதவியலுட்கூறிய இடைநிலைவகையாலே தகர உகரமுன்றுகாலத்திற்கும் உரித்து. தகர உகரம் இறந்தகாலத்திற்கு உரித்து. அப்பற்றுள் தகர உகரம் இறந்தகாலப்பற்றி வருங்கால் புக்கது உண்டது வந்தது சென்றது உறங்கினது எனக் கடதறக்களும் இன்னும் என்னும் இடைநிலைகளினமுன் அகரம்பெற்றும், எஞ்சியது தப்பியது கலக்கியது எனவும் உளிஞ்சியது நண்ணியது எனவும் போயது போனது எனவும் ஏனை எழுத்துக்களின்முன் முறையே இகரமும் யகர உயிர்மெய்யும் பெற்றும் யகர உயிர்மெய்யே பெற்றும் னகர உயிர்மெய்யே பெற்றும் வரும். இனி நிகழ்காலம்பற்றி வருங்கால் நடவாநின்றது நடக்கின்றது என ஆகின்று கின்று எனனும் இடைநிலைகளின்முன் அகரம்பெற்று வரும். இனி எதிர்காலம்பற்றி வருங்கால் நடப்பது வருவது எனப் பகர வகர இடைநிலைகளின்முன் அகரம் பெற்று வரும். இனி தகர உகரம் புக்கன்று உண்டன்று வந்தன்று சென்றன்று எனக் கடதற என்னும் இடைநிலைகளின்முன் அன்பெற்றும், கூயின்று கூயிற்று உறங்கின்று

உறங்கிற்று என இன்னிடைநிலைபெற்று அது திரியாதுந் திரிந்தும் வரும். புக்கின்று உண்டின்று வந்தின்று சென்றின்று என்பன எதிர்மறுத்தலே உணர்த்தும் இல்லது லகரம் னகரமாய்த் திரிந்து நின்ற எதிர்மறைவினை. அவை எதிர்மறைவினையாதல் புக்கிலன் உண்டிலன் வந்திலன் சென்றிலன் என்பனபோலும் ஏனைப்பாற் சொல்லான் அறிக.

இது தாலிகனேந்தன்றுமிலனே வியந்தன்றுமிலனே இழிந்தன்றுமிலனே என உயர்திணைக்கண்ணும் வந்ததாலெனின், அவை கனேந்தான் வியந்தான் இழிந்தான் என்பனவற்றிற்கு மறையாய்க் கனேந்திலன் வியந்திலன் இழிந்திலன் என நிற்கின்றவை கனேந்தன்றுமிலன் வியந்தன்றுமிலன் இழிந்தன்றுமிலன் என முற்றுவினைத் திரிசொல்லாய் நின்றன.

இனி வினைக்குறிப்பின்கண் மூன்றுகாலத்திற்கும் உரியவாய்க் குழையது நிலத்தது மூவாட்டையது வெண்கோட்டது கரிது கடைத்து எனத் துவவீறும், குழையிற்று மேற்று வைகற்று மருப்பிற்று வடிவிற்று செலவிற்று என றுவவீறும், குண்டுகட்டு குறுந்தாட்டு என டுவவீறும் வரும்.

இனி அகர ஈறு மூன்றுகாலமும்பற்றி வரும். அவற்றுள் இறந்தகாலம்பற்றிவருங்காற் தொக்கன தொக்க உண்டன உண்ட வந்தன வந்த சென்றன சென்ற எனக் கடதற என்னும் இடைநிலை யெழுத்துக்களின்முன் அன் சாரியை பெற்றும் பெறாதும், எஞ்சினதப்பின எனவும் உரிஞின நண்ணின பொருகின திருமின துன்னின எனவும் போயின சேரின சொல்லின வவவின துள்ளின எனவும் குற்றுகரத்தின்முன்னும் ஙகாரம் ஒழிந்த மெல்லெழுத்துக்களின்முன்னும் முகாரம் ஒழிந்த இடையெழுத்துக்களின்முன்னும் இடைநிலை இன்பெற்றும், போயன என அன்னிடைநிலை பெற்றும், போய என யகர இடைநிலை பெற்றும், போன என னகர இடைநிலை பெற்றும் வரும். இனி நிகழ்காலம்பற்றி வருங்கால் உண்ணுகின்றன உண்ணுகின்ற உண்கின்றன உண்கின்ற என ஆகின்று கின்று என்னும் இடைநிலைகளின்முன் அன்சாரியை பெற்றும் பெறாதும் வரும். இனி எதிர்காலம்பற்றி வருங்கால் உண்பன உண்ப வருவன வருவ எனப் பகர வகர இடைநிலை யெழுத்துக்களின்முன் அன் பெற்றும் பெறாதும் வரும். உரிஞுவன உரிஞுவ உண்குவன உண்குவ என முதனிலையிறுதிக்கண் உகரம் பெற்றுங் ககர உகரம்பெற்றும் வருதலும் ஏற்புழிக்கொள்க.

இனி ஆகாரம் உண்ணு தின்னு எனக் கால எழுத்துப்பெறுது எதிர்காலத்துப் பயின்றுவரும்.

இனி அகர ஈறு வினைக்குறிப்பின்கண் மூன்றுகாலத்திற்கும் உரித்தாய்க் குழையன குழைய நிலத்தன நிலத்த மூவாட்டையன மூவாட்டைய வெண்கோட்டன வெண்கோட்ட கரியன கரிய நடையன நடைய என அன்பெற்றும் பெறுதும் வரும்.

இனி வகர ஈறும் ஓதுப. அஃது ஈண்டு அகர ஈற்றுள் அடங்கும்.

இன்று இல கோடைத்து கோடுடைய அதுவன்று அவை யல்ல உளது உள பொன்னன்னது பொன்னன்ன என்பனபோல ஒருமை உணர்த்துவனவும் பன்மை உணர்த்துவனவுமாகிய வினைக் குறிப்புமுற்றுக்களும் இவற்றுள்ளே அடங்குமாறு அறிந்து அடக் கிக்கொள்க. வந்திலது வந்தில என்பனமுதலியவற்றின் மறைவாய் பாடும் அறிக. ஒன்றன்படர்க்கை பலவின்படர்க்கையெனவே அஃ றிணையாமென்பதூஉம் பெற்றும். (அ)

உகுடு. எவனென் வினவினைக் குறிப்பிழி யிருபால்.

இஃது அஃறிணைவினைக்குறிப்பினுள் ஒன்றற்குப் பால்வகை யாற் பொதுமை கூறுகின்றது.

இ - ள். எவனென்னும் வினாப்பொருளை உணர்த்தும் வினைக் குறிப்புமுற்றுச்சொல் அஃறிணைமருங்கின் இருபாற்கும் உரித்து எ - று.

வரலாறு;—அஃதெவன் அவை எவன் என வரும். நுமக்கிவ னெவனுமென உயர்திணைக்கண்ணும் வருமாலோவெனின், ஆண்டு அது முறைபற்றி நிற்றலின் அஃறிணைக்கண்வந்ததெனவே படு மென்பது. அஃதேல் நுமக்கிவன் என்ன முறையனுமென்பதல்லது என்னமுறையாமென்பது பொருந்தாதெனின் என்னமுறையென் பது ஆண்டு முறைமேனில்லாது ஒற்றுமைநயத்தான் முறையுடை யான்மேல் நிற்றலிற் பொருந்துமென்க. படுத்தலோசையான் எவ னென்பது பெயருமாம்; அஃது இக்காலத்து என்னென்றும் என்னை யென்றும் மருவிற்று. (கு)

உகுசு. தின்மை முன்னிலே வியங்கோள் வேறுண்
டின்மை செய்யு மிவற்றொடு ரெச்சமும்.

பிரிவு வேறுபடூஉஞ் செய்திய வாகி
யிருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய.

நிறுத்தமுறையானே விரவுவினை உணர்த்துவனவற்றுள் இஃது அதன் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

இ - ள். தன் தொழில் உணர்த்துவதாகிய தன்மைவினை வினைக்குறிப்புமுற்றுச்சொற்களுந் தனக்கு எதிர்முகமாகநின்ற பொருளின் தொழில் உணர்த்துவதாகிய முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுச்சொற்களும் ஏவற்பொருண்மையைக் கொண்டு நிற்பதாகிய வியங்கோட்டெரிநிலைவினைமுற்றுச்சொற்களும் வேறுபாடுதன்னை உணர்த்துவதாகிய வேறென்னும் வினைக்குறிப்புமுற்றுச்சொல்லும் ஒருபொருளினது உண்மை உணர்த்துவதாகிய உண்டென்னும் வினைக்குறிப்புமுற்றுச்சொல்லும் ஒருபொருளினது இல்லாமை உணர்த்துவனவாகிய இல்லை இல் என்னும் இருகூற்று வினைக்குறிப்புமுற்றுச்சொற்களுஞ் செய்யுமென்னும் வாய்பாடுபெற்றி வரும் உம்மீற்றுத் தெரிநிலைவினைமுற்றுச்சொல்லுமாகிய இவ்வெட்டோடு பெயராகிய ஒழிபையுடைய பெயரெச்சவினை வினைக்குறிப்புச்சொற்களும் வினையாகிய ஒழிபையுடைய வினையெச்சவினை வினைக்குறிப்புச்சொற்களுமாகிய இவ்வடைவின்கண் இன்ன வினைச்சொற்களெல்லாம் பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையை உணர்த்தியும் ஒருகால் அஃறிணையை உணர்த்தியும் வேறுபடுந் தொழிலையுடையவாய் இருதிணையும் உணர்த்துஞ் சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாம். எ - று.

வாழ்த்தல் முதலிய பிறபொருளும் உடைத்தாகலான் வியங்கோளென்றது மிகுதிநோக்கிச்சென்ற குறி. செய்யுமென்னும் வாய்பாட்டான் உண்ணும் தின்னும் என்னுந் தொடக்கத்தனவெல்லாந் தழுவப்பட்டன, எல்லாத்தொழிலுஞ் செய்தல் வேறுபாடாகவிற் பொதுவாகிய செய்தல் எல்லாத்தொழிலையும் அகப்படுத்தி நிற்றலான். அவை பொதுவுஞ் சிறப்பும் அல்லவேல் என்செயாகின்ரு னென்று வினையவழி உண்ணுகின்ரு னெனச் செப்புதல் இயையாதா மென்க. இது செய்த செய்து முதலியவற்றிற்கும் ஒக்கும். இருதிணைக்கும் பொதுவாயதோர் பொருளின்மையான் அதனை நிகழும் விரவுத்தொழிலென்பது ஒன்று இன்ரு லெனின், அவ்விரவுத்தொழிலைச் கூறுகின்றவன் அதனை நிகழ்த்திய வினைமுதல் உயர்திணை அஃறிணையென்பது உணர்ந்தே கூறுமாயினும் பால்காட்டும் ஈறின்மை காரணத்தாற் கேட்டோன் உணர்வு இருதிணைவினைமுதன்மே

லும் ஒருங்கு சேறலின் அவ்வினைமுதற்பொருண்மையான் நிகழும், விரவுத்தொழிலும் உளதாயிற்றென்க. (கo)

உஉ. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னுகு மீற்ற
விருதிணை மூக்கூற் றொருமைத் தன்மையு
மம்மம மீற்ற முன்னிலை யாரையு
மெம்மே மோமிவை படர்க்கை யாரையு
மும்மூர் கடதற விருபா லாரையுந்
தன்னெடு பமிக்குந் தன்மைப் பனமையும்
பாற்பட வுணர்தலும் பகுதிய விரண்டனுட்
செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

நிறுத்தமுறையானே இது தன்மையொருமையும் பன்மையுங் கூறுகின்றது.

இ - ள். கடதறக்களே ஊர்ந்த குற்றியலுகர மறும் அல் அன் என் ஏன் என்னும் ஈறுமாகிய எண்வகைமீற்றினையும் ஈருகவுடைய மொழிகள் இருதிணைக்கண்ணும் உளவாகிய ஒருவனொருத்தியொன் றென்னும் மூவகையொருமைத்தன்மையினையும் அம்மும் ஆமுமா கிய ஈற்றையுடைய வினை வினைக்குறிப்புமொழிகள் முன் நின்மூ ரைத் தன்னெடு உளப்படுக்குந் தன்மைப்பன்மையினையும் எம்மும் ஏமும் ஓமுமாகிய ஈற்றையுடைய வினை வினைக்குறிப்புமொழிகள் படர்க்கையாரைத் தன்னெடு உளப்படுக்குந் தன்மைப்பன்மையினை யும் உம்மென்னும் இடைச்சொல்லின் உகரத்தை ஊர்ந்துவருங் கும் மும் டும்மும் தும்மும் றும்மும்மாகிய ஈற்றையுடைய வினைகள் அவவி ருதிறத்தாரையும் ஒருங்கேயுந் தனித்தனியேயுந் தன்னெடு உளப்ப டுத்துந் தன்மைப்பன்மையினையும் பகுதிப்பட விளக்கும். அங்ஙனங் கூறிய பகுதியையுடைய ஒருமையும் பன்மையுமாகிய தன்மைவினை முற்றுச்சொற்களுட் செய்கென்னும் வாய்பாட்டான் வருந் தன்மை யொருமைவினைமுற்றுஞ் செய்குமென்னும் வாய்பாட்டான் வரும் உளப்பாட்டுத்தன்மைப்பன்மைவினைமுற்றும் பெயரோடு முடியாது வினைகொண்டு முடியும். அவ்வாறு முடியுமாயினும் முற்றுச்சொல் லாதலிற் கிரியாது முற்கூறிய முற்றுச்சொல்லேயாம். எ - று.

மேற் பதவியலுட் கூறிய ஈற்றுவகையானே உண்கு உண்டு வருது சேறு எனவும் உரிஞுகு திருமுகு எனவும் வரும் குற்றுகர

ற்றுத் தன்மையொருமைமுற்றுச்சொல்லும் இடைநிலைவகையா
னே உண்பல் வருவல் எனவரும் அல்லீற்றுத் தன்மையொருமை
முற்றுச்சொல்லுங் கூறுவன் என வரும் அன்னீற்றுத் தன்மையொ
ருமைமுற்றுச்சொல்லும் எதிர்காலம்பற்றி வரும் என்னீறும் ஏனீ
றும் இடைநிலைவகையானே மூன்றுகாலமும் பற்றி வரும். அவற்
றுள் என்னீறு இறப்பும் நிகழ்வும்பற்றி வருங்காற் புக்கனென் உண்
ணாநின்றனென் என உயர்திணையாண்பாற்படர்க்கை அன்னீற்
றோடு ஒத்து இடைநிலைகளின்முன் அன்பெற்றுவரும். ஏனையவற்
றோடும் ஒட்டுக. இனி எதிர்காலம்பற்றி வருங்கால் உண்பென்
உண்குவென் வருவென் வருகுவென் என முதனிலையெழுத்தின்
மூன் குகரம்பெறுதும் பெற்றும் இடைநிலைபெற்றுவரும். இனி
ஏனீறு இறப்பினும் நிகழ்வினும் புக்கனேன் புக்கேன் உண்ணாநின்
றனேன் உண்ணாநின்றேன் என அன்பெற்றும் பெறுதும் எதிர்வின்
கண் உண்பேன் உண்குவேன் உரிஞுவேன் எனக் குகரமும் உகர
மும்பெறுதும் பெற்றும் இடைநிலைபெற்றுவரும். ஏனையவற்றோ
டும் ஒட்டுக. அம் ஆம் எம் ஏம் ஓம் என்பன இடைநிலைவகையானே
மூன்றுகாலமும் சுற்றுவகையானே உம்மூர் கடதற எதிர்காலமும்
பற்றி வரும். அங்ஙனம் வருங்கால் யானும் நீயும் புக்கனம் புக்காம்,
யானும் அவனும் புக்கனெம் புக்கெம், யானும் அவனும் புக்கனேம்
புக்கேம் புக்கனெம் புக்கோம் எனவும், யானும் நீயும் உண்ணாநின்ற
னம் உண்ணாநின்றும், யானும் அவனும் உண்ணாநின்றனெம் உண்
ணாநின்றெம், யானும் அவனும் உண்ணாநின்றனேம் உண்ணாநின்
றேம் உண்ணாநின்றனெம் உண்ணாநின்றோம் எனவும்; யானும்
நீயும் உண்பம் உரிஞுவம் உண்குவம் உண்பாம் உரிஞுவாம் உண்கு
வாம், யானும் அவனும் உண்பெம் உரிஞுவெம் உண்குவெம் உண்
பேம் உரிஞுவேம் உண்குவேம் உண்போம் உரிஞுவோம் உண்கு
வோம் எனவும்; யானும் நீயும் அவனும் உண்கும் உண்டும் வருதும்
சேறும் உரிஞுதும் திருமுதும் எனவும் வரும். இவை அன்பெறும்
விகற்பமும் உகரமுங் குகரமும் பெறுதலும் முற்கூறியவாறே
காண்க. ஏனையவற்றோடும் ஒட்டுக.

இனிப் பாற்பட என்றதனானே அம் ஆம் என்பன தமராயவ
ழிப் படர்க்கையாரையும் உளப்படுத்தல்கொள்க. தன்மை இருதி
ணைக்கும் பொதுவாதல் வீரவுப்பெயர் உரைத்தவழி உரைத்தாம்.
அதனானே "யானுமென் னெஃகமுஞ் சாறு மவனுடைய—யானைக்
குந் தானைக்கும் போர்" என்புழி றும்மீறு அஃறிணைப்படர்க்கையை
உளப்படுத்தல் வழுவமைதியன்று சண்டைக்கு வழாநிலையேயா
மென்க. "இலனென்றீயவைசெய்யற்கசெய்யி—னிலனுமற்றும்

பெயர்த்து" என்பவாகலிற் தனித்தன்மைக்கண் அன்விகுதியும் வழக்குப்பயிற்சியான் உளப்பாட்டுத்தன்மைக்கண் ஓம்விகுதியும் உடனேதினர். தன்மைக்கு ஒருமையல்லது இன்மையிற் தன்மைப்பன்மையாவது தன்னோடு பிறரை உளப்படுத்ததேயாமென்பார் 'தன்னொடுபடுக்குந்தன்மைப்பன்மை' என்ரூர். இனிக் கரியன் கரியென் கரியேன் எனவும் கரியம் கரியெம் கரியேம் கரியோம் எனவும் வினைக்குறிப்புவந்தன காண்க. பிறவற்றோடும் ஒட்டுக.

காண்குவந்தேன் காண்குவந்தேம் எனச் செய்கெனெருமையுஞ் செய்குமென்பன்மையும் வினைகொண்டுமுடிந்தவாறு காண்க.

"பெயர்த்தனென்முயங்கயான்" எனவும் "சேர்ந்தனைசென்மோபூந்தார்மாப" எனவும் "மோயினளுயிர்த்தகாலை" எனவும் வினைமுற்றுச்சொற்கள் வினைகொள்ளுங்கால் முற்றுச்சொல்லாதலிற் திரிந்து வினையெச்சமாமாறுபோல வினையெச்சமாகாது முற்றேயாமெனபா 'வினைபாடுமுடியினும்விளம்பியமுற்றே' என்ரூர். இருசாரானவும் பெயர்கொள்ளாது வினைகொண்டவழிச் செய்கெனெருமையுஞ் செய்குமென் பன்மையுந் திரியாவென்றும் ஏனைய திரியுமென்றுங் கூறிய கருததென்னையெனின, நன்றுசொன்னுய் காண்குவந்தேன் காண்குமவந்தேம் என்றவழி அவை வினையெச்சமாய்த் திரிந்தனவாயிற் செய்தெனெச்சத்திற்கு ஏலாமையிற் செயவெனெச்சமாய்த் திரியுமெனல்வேண்டும். வேண்டவே, செயவெனெச்சத்திற்கு உரிய வினைமுதல்வினையும் பிறவினையுங் கொள்வான் செல்லும். வினைமுதல்வினை அல்லது கொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரியுமெனல் பொருந்தாது, பிறிதொராற்றின் மையின் முற்றுச்சொல்லாயே நின்றனவெனப்படுமென்க. செய்கென்பது "நோகோயானே" எனச் சிறுபான்மை பெயர்கோடல் உரையிற்கொள்க. உண்டிலன் உண்டிலம் முதலிய இவற்றின் மறைவாய்பாடும் அறிக. (ககு)

உகூஅ. ஐயா யிகர வீற்ற மூன்று
மேவலின் வருஉ மெலலா வீற்றே
டல்லா லேலகா ணென்னு மீற்றவு
முப்பா லொருமை முன்னிலை வினையு
மிஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முனனிலையு மின்னு மீற்ற
வன்னவற் றேவலு மாமென மொழிப.

இது முறையானே முன்னிலையொருமைவினையும் பன்மைவினையுங் கூறுகின்றது.

இ - ள். ஐயும் ஆயும் இகரமுமாகிய ஈற்றையுடைய மூவகைச் சொற்களும் ஏவற்பொருண்மைக்கண் வரும் இருபத்துமூவகை ஈறு மூடி அல் ஆல் ஏல் காண் என்னும் நான்கு ஈற்றையுமுடைய சொற்களும் உயர்திணையாண்பாலொருமையும் பெண்பாலொருமையும் அஃறிணையொருமையும் உணர்த்தும் முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுக்களும், இர் ஈர் என்னும் இருவகைபீற்றையுடைய சொற்களும் உயர்திணைக்கட் பல்லோரையும் அஃறிணைக்கட் பல வற்றையும் உணர்த்தும் முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுக்களும், மின்னும் உம்முமாகிய ஈற்றையுடைய சொற்கள் அவ்விருதிணை ஏவலையும் உணர்த்தும் பன்மைவினைமுற்றுமாமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—உண்டனை உண்ணுநின்றனை உண்பை எனவும் உண்டாய் உண்ணுநின்றாய் உண்பாய் எனவும் ஐகார ஈறும் ஆய் றும் மூன்றுகாலமும்பற்றி வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக. "ஐய சிறிதென்னையுக்கி" உண்டி "ஈதன்மாட்டொத்திபெரும" உரைத்தி தின்றி போறி என இகர ஈறு கடதறக்களையூர்ந்து எதிர்காலம்பற்றி வரும். "பிரிந்திறைஞ்சாதி" என இதன்மறையுங் காண்க. "உரைக் கிற்றிநன்றுமன்னிதுநாடாய்கூறி" எனச் சிறுபான்மை நிகழ்வும் பற்றி வரும். உண்ணுநிற்றி என்பது எதிர்காலத்திற்பிறந்த நிகழ்காலம். நடப்பி வருவி எனச் செய்வியென்னேவல் முன்னிலைவினை இகர ஈறு பகரவகரங்களையூர்ந்து எதிர்காலம்பற்றி வரும். உண்டிலை உண்டிலாய் முதலிய இவற்றின் மறைவிகற்பமும் அறிக. நட வா மடி சீ விடு கூ வே வை கொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் இன் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு போக்கு என ஏவலின்வரூஉம் எலா ஈற்றவும் உண்ணல் மருல் அமேல் சொல்லிக்காண் எனவரும் அல் ஆல் ஏல் காண் என்னும் ஈற்றையுடைய முன்னிலைமுற்றுக்களும் ஈற்றுவகையானே எதிர்காலம்பற்றி வரும். முன்னின்ரூன் தொழில் உணர்த்துவனவேயன்றி அவனைத் தொழிற்படுத்துவனவும் எதிர்முகமாதலொப்புமையான் முன்னிலையாயின. செய்வியெனீற்றிற்கும் மின்னீற்றிற்கும் உம்மீற்றிற்கும் ஈதொக்கும். உண்டனிர் உண்ணுநின்றனிர் உண்பிர் உண்குவிர் எனவும் உண்டீர் உண்ணுநின்றீர் உண்பீர் உண்குவீர் எனவும் இடைநிலைவகையானே இர் ஈரென்பன மூன்றுகாலமும் உண்மின் உரிஞுமின் எனவும் உண்ணும் உரையும் கேளும் எனவும் ஈற்றுவகையானே

மின்னீறும் உம்மீறும் எதிர்காலம்பற்றி வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக. உண்டிலிர் உண்டிலீர் உண்ணன்பின் என இவற்றின் மறைவிகற்பமும் அறிக. கரியை கரியாய் கரியிர் கரியீர் என வினைக் குறிப்பு வந்தன காண்க. பிறவும் அன்ன. (கஉ)

உகக. கயவொடு ரவ்வொற் றல்ஆல் உம்மார் 5
ஐகா லீற்ற வியங்கோண் முறறஅவ
யெய்து மிடம்பா லெங்கு மென்ப.

இது வியங்கோண்முற்று உணர்த்துகின்றது.

இ - ள். அகர உயிரோடுகூடிய ககரயகரங்களும் ரகாரவொற் றும் அல்லும் ஆலும் உம்மும் மாரும் ஐயுமாகிய எண்வகைவிகுதி 10 யையும் ஈறுகவுடைய சொற்கள் வியங்கோட் தெரிநிலவினைமுற் றுச் சொற்களாம்; அம்முற்றுச்சொற்கள் ஐம்பான் மூவிடங்களி னுஞ் செல்லுமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—அவன்செல்க அவள்செல்க அவர்செல்க அது செல்க அவைசெல்க என உயர்ந்தான் இழிந்தானே இன்னதுசெய்க 15 என விதித்தற்பொருண்மைக்கண்ணும், அவன்வாழ்க அவள்வாழ்க அவர்வாழ்க அதுவாழ்க அவைவாழ்க எனவும் "அமிழ்தமுண்கநம்ம யிலியவாட்டி" "அருளிலர் கொடாமை வல்லராகுக" "வெல்கவாழி கின்வென்றி வார்கழல்" "செல்க தீயன சிறக்கநின் புகழே." எனவும் "பெறுக தில்லம் மயானே" "மடவமாக மடந்தை நாமே" எனவும் 20 வாழ்த்துதற்பொருணமைக்கண்ணும், "யானும்நின்னோடுனுறைக" எனவும் "கடாவுகபாகநின்கால்வனெடுந்தேர்" "கேட்டிதுமறக்கநம் பி" யாவருங்கேட்க எனவும் வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் ணும் அகரத்தோடுகூடிய ககர றாறும், அவன்வாழிய அவள்வாழிய அவர்வாழிய அதுவாழிய அவைவாழிய "யான்வாழ்நாளுமெம்பா 25 ணன்வாழிய" "மன்னியபெருமநிணிலமிசையானே" என வாழ்த்து தற்பொருண்மைக்கண் அகரத்தோடு கூடிய ரகர றாறும், "வாழியர்ந டுக்கின்றிநீலியரோவத்தை" நீவாழியர் நின்றந்தைதாய்வாழியர் என வாழ்த்துதற்பொருண்மைக்கண் ரகார ஈறும் "வழாஅலோம்பல்" இற்றெனக்கிளத்தல் ஆக்கமொடுகூறல் என அல்லீறும் "மரியதொ 30 ரால்" என ஆலீறும் விதித்தற்கண்ணும் "வாழ்தல்வேண்டுமிவண்வ ரைந்தவைகல்" என உம்மீறும் "பீடின்றுபெருகியதிருவிற்—பா டின்மன்னரைப்பாடன்மாரெமரே" "நோய்மலி ஞருத்தங் காணன் மாரெமரே" என மாரீறும் வாழ்த்துதற்பொருண்மைக்கண்ணும்

"அஞ்சாமையஞ்சாமையஞ்சுவதொன்றின்" என விதித்தற்கண் ஐகார ஈறும் வந்தன. "பயனில்சொற்பாராட்டுவானேமகனெனன்மக்கட்பதடியெனல்" என அல்லீறு விதித்தற்கண் மறையும் உடம் பாடுமாய் வருதலும் உணர்க. நாடாகொன்றோ காடாகொன்றோ அவலாகொன்றோ மிசையாகொன்றோ என்பனவற்றையும் நாடே யாக காடேயாக அவலேயாக மிசையேயாக என இதன்பாற் படுத்துக. இவற்றுள் ஏவல் கண்ணுதது இதுவென்று உணர்க. (கஙு)

உசo. வேறின்மை யுண்டைம் பான்மூ விடத்தன.

இது வேறுமுதலியன மூன்றிற்கும் பால் இட உரிமை கூறுகின்றது.

இ - ள். வேறென்பதூஉம் இன்மையென்னுஞ் சொல்லான் உணர்த்தப்படும் இல்லை இல் என்னுஞ் சொற்களும் உண்டென் பதூஉம் ஐம்பான்மூவிடத்திற்கும் உரிய வினைக்குறிப்புமுற்றுக்களாம். எ - று.

வரலாறு;—அவன்வேறு அவள்வேறு அவர்வேறு அதுவேறு அவைவேறு யான்வேறு யாம்வேறு நீவேறு நீயிர்வேறு எனவும் அவனில்லை அவளில்லை அவரில்லை அதுவில்லை அவையில்லை யானில்லை யாமில்லை நீயில்லை நீயிரில்லை எனவும் "பிறன்கடை நின்றூரிற் பேதையாரில்" "வழியெஞ்சலெஞ்ஞான்றுமில்" எனவும் அவனுண்டு அவளுண்டு அவருண்டு அதுவுண்டு அவையுண்டு யானுண்டு யாமுண்டு நீயுண்டு நீயிருண்டு எனவும் வரும். "யாருமில்லைத் தானே கள்வன்—ருனவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ-கிணைத் தாளன்ன சிறுபசுங் கால—வொழுகுநீ ராரல் பார்க்குங் குருகு முண்டு தான் மணந்த ஞான்றே" என்புழிக் குருகென்ப இயற்பெயராகலின் அதன்கட் பன்மையொடு காலவென்பது இசைந்து காலனவாகிய குருகுகளென நின்று அஃது உண்டென்னும் பொதுவினைகொண்டதென்றுற் படும் இழுக்கின்றேனுங் கள்வன் தானெருவனுமே வேறுசிலர் ஆண்டில்லையென்று கூறுகின்றமை இரைதேரும் மனக்குறிப்புடைமையிற் கேளாது சிறிதுகேட்டதா யினுங்கொலைசூழ் குருகாதலிற் கூறுவதுஞ் செய்யாது இத்தன்மைத்தாயதொரு குருகும் உண்டென்று கூறுதலிற் காலகுருக்கென்பதனைப் பன்மையொருமை வழுவமைப்பென்றே கொள்ளவேண்டுதலான் உண்டென்பது ஆண்டு அஃறிணையொருமை உணர்த்திநின்றதல்லது யாண்டும் அஃறிணையொருமையே உணர்த்திநிற்கு

மெனக் கூறவேண்டுவதில்லையென்க. அல்லது அங்ஙனங் கூறவேண்டிற்றேல் "நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்—பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு—வண்டுறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை—யுண்டுறங்கு வாளரவு ணுண்டு" எனவும் "பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்—கொண்ட கொழுங ருறு குறை தாங்குறாஉம்—பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டு கொல்—சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொ—லீன்ற குழவி யெடுத்து வளர்க்குறாஉஞ்—சான்றோரு முண்டுகொல் சான் றோரு முண்டுகொல்" எனவும் வருவன முடியாமையுணர்க. (கச)

உசக. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற் செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

இது செய்யுமென்னும் முற்றுச்சொற்குப் பால் இட உரிமை கூறுகின்றது.

இ - ள். பல்லோர்படர்க்கைக்கண்ணும் முன்னிலைக்கண்ணுந் தன்மைக்கண்ணும் பொருந்தாது ஒருவன்படர்க்கைக்கண்ணும் ஒருத்திபடர்க்கைக்கண்ணும் ஒன்றன்படர்க்கைக்கண்ணும் பலவற் றின்படர்க்கைக்கண்ணும் பொருந்துஞ் செய்யுமென்னும் முற்றுச் சொல். எ - று.

உ-ம். அவன்வரும் அவள்வரும் அதுவரும் அவைவருமெ னவரும். (கடு)

உசஉ. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியுந் தேருங் காலைம் பான்மூ விடத்தன வவைதாம், பிறிதொடியைந் தல்லது நிற்றலாற் றூ குறைபட நிலையுங் கொளகைய வென்ப. [து

இது பெயரெச்ச வினையெச்சங்கட்குப் பால் இட உரிமையும் முற்றோடு அவற்றிடை வேற்றுமையுங் கூறுகின்றது.

இ - ள். பெயரெச்சமாகிய வினை வினைக்குறிப்புச்சொல்லும் வினையெச்சமாகிய வினை வினைக்குறிப்புச்சொல்லும் ஆராயுமிடத்து ஐம்பான்மூவிடத்திற்கும் உரியனவாம்; அங்ஙனம் உரியனவாகிய எச்சங்கள் தாம் பிறிதோர்சொற்பற்றியல்லது நிற்றலாற்றூது குறை படநிற்குங் கோட்பாட்டினை உடையனவாமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

மற்றுச்சொல் நோக்குதலான் மற்றுச்சொல் நோக்கா முற றுச்சொல்லின் வேறுபடடு எச்சமாய்நிற்குமென்பார் 'குறைபடநிலை இயும்' என்றார். எனவே, பெயரோடியைந்தல்லது நிற்றலாற்றாத எச்சச்சொல் பெயரெஞ்சுகிளவியெனவும் வினையோடியைந்தல்லது நிற்றலாற்றாத எச்சச்சொல் வினையெஞ்சுகிளவியெனவும் விரியு மென்பதூஉமாயிற்று.

வரலாறு;—அவனுண்டனுண் அவளுண்டனுண் அவருண்ட னுண் அதுவுண்டனுண் அவையுண்டனுண் யானுண்டனுண் யாமுண் டனுண் நீயுண்டனுண் நீயிருண்டனுண் எனவும் அவனுண்கின்றனுண் அவளுண்கின்றனுண் அவருண்கின்றனுண் அதுவுண்கின்றனுண் அவையுண்கின்றனுண் யானுண்கின்றனுண் யாமுண்கின்றனுண் நீயுண் கின்றனுண் நீயிருண்கின்றனுண் எனவும் அவனுண்ணுமூண் அவ ளுண்ணுமூண் அவருண்ணுமூண் அதுவுண்ணுமூண அவையுண்ணு மூண் யானுண்ணுமூண் யாமுண்ணுமூண் நீயுண்ணுமூண் நீயிருண் ணுமூண் எனவும் உண்டுவந்தான் வந்தாள் வந்தார் வந்தது வந்தன வந்தேன் வந்தேம் வந்தாய் வந்தீர் எனவும் பெயரெச்சமும் வினை யெச்சமும் முறையானே பெயரோடும் வினையோடும் இயைந்து ஐம்பான்முவிடங்கட்கும் உரியவாயினவாறு காண்க. (கசு)

உசஙு. அவற்றுட், செய்த செய்கின்ற செய்புமென் பா
செயவ தாதி யறுபொருட் பெயரொடு [ட்டிற்
முடியு முறையது பெயரெச் சம்மே.

இது பெயரெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின் றது, இத்தூணைவாய்பாட்டான் நிகழுமெனவும் இத்தூணைப் பொருட் பகுதிபற்றிவரும் பெயர்களான் முடியுமெனவுங் கூறுகின்றமையின்.

இ - ள். முற்கூறிய எச்சங்கள் இரண்டனுட் செய்த செய் கின்ற செய்யுமென்னும் முறையே முக்காலமுங் காட்டும் வாய்பாட் டாற் புலப்பட்டுத் தொழின்முதனிலையெட்டனுள் இன்னதற்காக இதுபயனுக என்னும் இரண்டும் ஒழித்து வினைமுதன்முதலாயின ஏனை அறுவகைப்பொருள்களையும் உணர்த்தும் பெயர்களோடு முடி யும் இயல்பினையுடையது பெயரெச்சவினைச்சொல்லாம். எ - று.

வரலாறு;—ஆடியகூத்தன் வென்றவேல் புக்கஇல் போயி னபோக்கு வந்தநாள் உண்டசோறு எனவும் ஆடுகின்றகூத்தன் வெல்கின்றவேல் புகுகின்றஇல் போகின்றபோக்கு வருகின்றநாள்

உண்கின்றசோறு எனவும் ஓதும்பார்ப்பான் வினையுங்கோல் வாழு மில் உண்ணும் ஊண் துயிலுங்காலம் கற்குநூல் எனவும் வினைமு தற்பொருளுங் கருவிப்பொருளும் நிலப்பொருளும் வினைப்பொரு ளுங் காலப்பொருளுஞ் செயப்படுபொருளுமாகிய பொருட்பகுதியா றனையும் பற்றி வரும் பெயர்ச்சொற்களோடு முடிந்தவாறு காண்க. இவற்றிற்குச் செய்யாகின்ற எனவும் செய்யாகிற்கும் எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமை ஒன்றெனமுடித்தலாற் கொள்க.

முடியுமென்னது முடியுமுறையதென்ற பிகையானே அவ ணுண்ட ஊணென்னுற்போல வினைமுதற்பொருட்பெயர் முன்வந்தே ஏனைய பின்வருமெனவும் வினைமுதற்பொருள் பெயராயின் ஆறிய கூத்தனென்னுற்போல அப்பெயர்பின்வருமெனவுங் கொள்க.

"மற்றிங்கோய் நீரு மருந்தருளா யொண்டொடி" என்புழி நோய்நீர்தற்கேதுவாகிய மருந்தென்னும் ஏதுப்பொருணமை கருவிக் கண் அடங்கும். தேரோடும்புறங்காணேனுயினென் நிலமபூத்தமரம் என்பனபோல்வனவும் அனன. "நின்முகங்காணுமருந்தினேன்" என்புழிக் காட்சியைமருந்தென்றதாதலிற் காணுமருந்தெனபதூஉம் "பொச்சாவாக்கருவியாற்போற்றிச்செயின்" எனபுழிப் பொச்சாவா மையைக் கருவியென்றதாகலிற் பொச்சாவாக்கருவியென்பதூஉம் வினைக்கண் அடங்கும். ஆறுசெனறவியரென்புழி வியர் ஆறுசேற லான் வந்த காரியமாகலிற் செயப்படுபொருட்கண் அடங்கும். ஆர்க ளிறுமிதிததிர் எள்ளாட்டியஎண்ணெய் உண்டஎசில் என்பன போல்வனவும் அன்ன.

நூற்றநூலானியன்றகலிங்கம் பூத்தபூவானியன்றகண்ணி என்பனவும் ஒற்றுமைநயத்தானே நூற்றகலிங்கம் "குண்டுசுனை பூத்தவண்டுபடுகண்ணி" எனப் பொருட்பெயர்கொண்டனவேயாம். "ஞாலாக்கலிங்கம்வாலரைக்கொளீஇ" என்பது பெயரெச்ச எதிர் பறை. இதுவும அவவியல்பிற்று. சிந் 12: ப.

உம்மையை எச்சவும்மையாக்கிச் செய்வதாதி அறுபொருட் பெயருமேயன்றி அரசனுற்கொடுத்தபார்ப்பான் கொடுக்கின்றபார்ப் பான் கொடுக்கும்பாப்பான் எனவும் ஆடையொலித்தகூலி ஒலிக் கின்றகூலி ஒலிக்குங்கூலி எனவும் ஒத்த உரிமையனவன்றிச் சிறு பான்மை இன்னதற்காக இதுபயனுக என்பனபற்றிவரும் பெயருங் கொள்க. இன்னும பழம் உதிர்ந்தகோடு உதிருங்கோடு எனச் சிறுபான்மை தீர்தற்பெருண்மைபற்றிவரும் பெய ருங்கொள்க.

இனிச் செய்த என்பதன்குறிப்பாய் இன்ன அன்ன என்ன கரிய செய்ய பெரிய என் வருவனவுங் காண்க."இன்னதன்மையின ருமையின்" எனவும் "அன்னதன்மையினறிந்தீயாரே" எனவும் "என்னிளவியும்பண்பின்றுகையே" எனவும் கரியமால் நெடுங் கண் எனவும் செய்யகோலிஞாய் எனவும் "பெரியகேழலட்டபேழ் வாயேற்றை" எனவும் பிறண்டும் வந்தவாறுகாண்க. (கஎ)

உசச. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்மூ தாதலு முற்றே
லுயிரு முயிர்மெய்யு மேகலு மாம்பிற.

இது செய்யுமென்னும் வாய்பாட்டான்வரும் உம்மீற்றுப் பெயரெச்சத்திற்கும் முற்றிற்கும் எய்தாதது எய்துவிக்கின்றது.

இ - ள். செய்யுமென்னும் பெயரெச்சத்து இறுதியுயிர்மெய் கெடுதலுஞ் செய்யுளிடத்து உம்மீறு உந்தெனத் திரிதலும் முற்று மாயின் ஈற்றுயிர்கெடுதலும் ஈற்றுயிர்மெய்கெடுதலுமாகிய இவ்விதி கள் பெறுதலும் பிறவுமாம். எ - று.

உம்மையாற் பெறுதல் ஒருதலையன்றெனக்கொள்க. "வாம்பு ரவி வழுதியொடெம்மிடை" "ஆன்போம்புழை" என வாவும்புரவி போகும்புழை என்பன உயிர்மெய்கெட்டு நின்றன. மகரவொற்று நிற்றலான் இவை வினைத்தொகையாகாவென்க. "திரைமிசைப்பா யுந்து" "கீர்க்கோழிகூப்பெயர்க்குந்து"என பாயுரும் பெயர்க்கும் என் பன உம்மீறு உந்தாய்தலிரிந்தன. "சாரலுடவென்றூழியுங்கலுழ் மே" "அம்பலூருமவனுமொழிமே" என முறையே கலுழுமே மொழியுமே என்பன ஈற்றுயிர்கெட்டும் ஈற்றுயிர்மெய்கெட்டும் நின் றன. பிறவும் அன்ன.

இனிப் பிற என்றதனானே செய்யுமென்னும் உம் ஈற்று முன் னிலைப்பன்மைமுற்றும் இவ்வாறுகெடுதலுங்கொள்க. "மாமறைமாக் கள்வருகுலங்கேண்மோ" "முதுமறை யந்தணர் முன்னிய துரை மோ" என முறையே கேளுமோ உரையுமோ என்பன ஈற்றுயிர் கெட்டும் ஈற்றுயிர்மெய்கெட்டும் நின்றன. மகர ஈறு "மவவீறுற் றழிந்துயிரீறுப்பவும்" என்பதனாற்கெட்டது. இவை மணிமேக லையுட்கண்டனை. (கஅ)

உசஞ. செய்து செய்யூ முதல வாய்பாட்டிற்
றன்வினை பிறவினை யாயிரு வினையொடு
மூடியு முறையது வினையெச் சமமே.

இது வினையெச்சதிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது; இத்துணைவாய்பாட்டான் நிகழுமெனவும் இவ்வினைச் சொற்களான் முடியுமெனவுங் கூறுகின்றமையின்.

இ - ள். செய்து செய்யூ முதலிய வாய்பாட்டாற் புலப்பட்டுத் தன்னை நிகழ்த்திய வினைமுதலான் நிகழ்ந்த வினையும் பிறவற்றின் வினையுமாகிய அவ்விருவகை வினையோடும் முடியும் இயல்பினையுடையது வினையெச்சச்சொல்லாம். எ - று. (கக)

உசசு. செய்து செய்யூச் செய்யாச செய்பு
செய்தெனச் செயசசெயின செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சமபிற
வைஅதொன் ரூறுமுக் காலமுறை தருமே.

இது முன்னர் வினையெச்சஞ் செய்து செய்யூ முதலிய வாய்பாடுபற்றி வருமென்றார், அவை இவையென்பதூஉம் அவற்றுற் புலப்படுங்காலம் இவையென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். உகரமும் ஊகாரமும் ஆகாரமும் புகரமும் எனவும் அகரமும் இன்னும் இயவும் இயருமாகிய இறுதியிடைச்சொற்களான் வேறுபட்ட செய்யென்னும்வாய்பாடுபற்றிவருஞ் செய்தென் பதுமுதலிய ஒன்பதும் வான் பான் பாக்கு ஆகிய இறுதியிடைச் சொற்களான் வேறுபட்ட செய்யென்னும்வாய்பாடுபற்றிவருஞ் செய்வான் செய்பான் செய்பாக்கு என்னும் மூன்றும் இவைபோல்வன பிறவும் வினையெச்சத்திறத்தனவாம். நிறுத்தமுறையானே முதற்கண் நின்ற ஐந்தும் இடைக்கண் நின்ற ஒன்றும் இறுதிக்கண் நின்ற ஆறும் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் புலப்படுத்திநிற்குமெ. எ - று.

வான் பான் பாக்கு என்னும் இடைச்சொல்லிறுதிவினைச் சொல்லே ஆருபெயரான் வான்பான்பாக்கென்றார்.

இவற்றுள் உகர ஈறு நக்கு உண்டி வந்து சென்று எனக் கடதறக்களே ஊர்ந்து இறந்தகாலம்பற்றி வரும். ஊகார ஈறும் ஆகார ஈறும் உண்ணுவந்தான் தின்னுவந்தான் "படுமகன் கிடக்கை காணுர—வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" எனவும் உண்ணுவந்தான் "கல்லாக்கழிப்பர்தலையாயார்நல்லவை—துவவாக்கழிப்பரிடைகள்" எனவும் பின்வருந்தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி முன்வருந்தொழின்மேல் இறந்தகாலம்பற்றி வரும். பகர

வுகரம் "பல்கால் வாக்குபு தரத்தர வருத்தம் விடவார வண்டு" "புல ராப் பச்சிலே யிடையிடுபு தொடுத்த" என இறந்தகாலம்பற்றி வரும். உரினுபு என உகரமும் கற்குபு எனக் குகரமும் ஏற்றவழிப் பெறு தல்கொள்க. எனவென்பது சோலைபுக்கெனவெப்பங்கிற்று உண் டெனப்பசிகெட்டது உரைத்தெனவுணர்ந்தான மருந்துதின்றெனப் பிணிநீங்கிற்று என முடிக்குஞ்சொல்லான் உணரப்படுந்தொழிற் குத் தன்முதனிலைத்தொழில் காரணமாய் விரைவு உணர்த்திக் கட தறக்கனே ஊர்ந்து இறந்தகாலம்பற்றி வரும். எஞ்சியென உரிஞ் யென என ஏனையெழுத்தோடும் வருமாறு அறிந்து ஒட்டிக்கொள்க. அகரம் ஞாயிறுபடவந்தான் என இதுநிகழாநிற்கவந்தானென்னும் பொருட்டாய் நிகழ்காலம்பற்றிவரும். வாழச்செய்தகல்வினையென்ப தூஉம் அது. இன் மழைபெய்யிற்குளநிறையும் மெய்யுணரின்வீடெ ளிதாம் எனக் காரணப்பொருட்டாய் எதிர்காலம்பற்றி வரும். கடப் பின் உரைப்பின் என ஏற்றவழிப் பகரம்பெற்று வருதலுங்கொள்க. இய இயர் என்பன உண்ணிய திண்ணிய உண்ணியர் திண்ணியர் என எதிர்காலம்பற்றி வரும். போகிய போகியர் என ஏற்றவழிக் குகரம் பெற்றுவருதலுங் கொள்க. வான்பான்பாக்கென்பன முறையே "கொல்வான்கொடித்தானேகொண்டெழுந்தான்" எனவும் "அலைப் பான்பிறிதுயிரையாக்கலுங்குற்றம்" எனவும் "புணர்தருசெல்வந்த ருபாக்குச்சென்றூன்" எனவும் எதிர்காலம்பற்றி வரும்.

இனி இவைபோல்வன பிறவாவன;—உணற்குவந்தான் என எதிர்காலம்பற்றி வருங் குகரஈற்றுச்சொல்லும், நீர்பொய்கூறியபின் மெய்கூறுவார்யார் என இறந்தகாலமும் நீயிவவாறுகூறுகின்றபின் னுரைப்பதுண்டோ என நிகழ்காலமும்பற்றி வரும் பின்னீற்றுச் சொல்லும், மருந்துதின்றூமுன்னேநெய்தீர்ந்தது என இறந்தகாலம் பற்றி வரும் முன்னீற்றுச்சொல்லும், "வலஞகவினேயென்றுவணங் கிநாம்விடுத்தக்கால்" என இறந்தகாலமும் "அகன்றவர்திறத்தினிநா டுங்கால்" என நிகழ்காலமும்பற்றி வருங் காலீற்றுச்சொல்லுங், "தொ டர்கூரத்துவாமைவந்தக்கடை" என இறந்தகாலம்பற்றி வருங் கடையீற்றுச்சொல்லும், "விடுவழி விடுவழிச் சென்றூங் கவர்— தொடுவழித் தொடுவழி நீங்கின்றூற் பசப்பே" என இறந்தகாலமும் "அவ ளாடுவழி யாடுவழி யகலென் மனனே" என நிகழ்காலமும் உரைக்கும்வழியுரைக்கும்வழி என எதிர்காலமும்பற்றி வரும் வழி யீற்றுச்சொல்லுங், "கனியுநர்—கைகொல்லுங்காழ்த்தவிடத்து"என இறந்தகாலமும் உரைக்குமிடத்து என நிகழ்காலமும் எதிர்காலமும் பற்றி வரும் இடத்தீற்றுச்சொல்லுமாகிய இவவறுவகை ஈற்றுச் சொல்லுமெனக்கொள்க.

இன்னும் அதனானே "விருந்தின்றியுண்டபகலும்" என வரும் இன்றியும், "நாளன்றுபோகி" என வரும் அன்றியும், "நாணு நட்பு மில்லோர்த் தேரின்—யானல தில்லை யிவ்வுலகத் தானே" என வரும் அல்லதும், "நுணங்கியகேள்வியரல்லால்" எனவரும் அல்லாலும், "அவாவுண்டேலுண்டாஞ்சிறிது" என வரும் ஏலும், "அவனெள்ளுமேனும்வரும்" எனவரும் ஏனும் வினையெச்சக்குறிப்புக்களாமெனக் கொள்க. "ஒன்றனுந்தீச்சொல்" என்புழி ஆயினுமென்பது ஆனுமெனக் குறைந்துநின்றது. உண்டான் உண்டவனென்னும் வினைப்பெயர்கள் உண்டாற்கு உண்டவற்கு என நான்கனுருபு ஏற்றுழிச் செயற்கு என்னும் எச்சப்பொருடரும் மயக்கமின்மையும் உணலென்னும் வினைப்பெயர் குகரம் அடித்துழி உண்டலைச்செய்தற்கென்னும் பொருடந்து எச்சப்பொருட்டாயே நிற்றலின் வினைப்பெயர் நான்கனுருபு ஏற்றுநின்றதென்னும் மயக்கம் உணர்ற்கென்பதற்கு இன்மையும் உணர்க. எற்றுக்குவந்தான் என்பது எக்காரியஞ் செய்தற்குவந்தானென்னும் பொருட்டாய் அவவெச்சவினைக்குறிப்பாய்நிற்கும். எவற்றுக்கென்பதும் அது. இவையும் இன்னவென்பதனுற் கொள்க. பின்முதலிய ஆறனையுங் காலம்பற்றிவருமென்றது கூதிர்போயபின்வந்தான் எனவும் நின்றவிடத்துநின்றான் எனவும் பின்முதலியன பெயரெச்சத்தோடு வந்துழிக் காலம்பற்றுமையினென்றுணர்க. இவற்றைச் செய்தவென்னுங் காலம்பற்றிய இடப்பொருளுருபாய் அடங்குமென்னுமோவெனின், என்னும்; வினை வேற்றுமையுருபேலாமையின்.

இனிப் பிற என்றதனானே உகரங் கடதறக்களே ஊர்ந்து இயல்பாய்நிற்றலேயன்றி எஞ்சி உரிஞி ஓடி எனவும் ஆய் போய் எனவும் ஏனையெழுத்துக்களே ஊர்ந்து இகரமாய்த்திரிந்தும் கெட்டெழுத்தீற்றின் முதனிலைமுன்னர் யகரம்வரத் தான்கெட்டும் இறந்தகாலம்பற்றி வருமெனவுங் கொள்க. சினைஇ உரைஇ இரீஇ உடீஇ பாய் தாய் ஆய் என்பனவோவெனின் அவை செய்யுள்முடிபென்க. ஆகி போகி ஓடி மலர்த்தி ஆற்றி என்புழி முதனிலை குற்றுகர ஈறுதலின் ஏனையெழுத்தாதல் அறிக. கடதற என்பன குற்றுகரத்தோடு வரும் இடமுந் தனிமெய்யாய் வரும் இடமுந் தெரிந்து உணர்க. உரிஞி ஓடி என்பனவற்றை இகர ஈறென்றும் ஆய் போய் என்பனவற்றை யகர ஈறென்றுங் கொள்ளாது உகர ஈற்றின் திரிபென்றது கடதற ஊர்ந்து உகர ஈறு வினைக்கட் பயின்று வருதலானும், எதிர்மறையெச்சமெல்லாம் பெரும்பான்மையும் உகரவீறுயல்லது வாராமையானும், அவ்விகர யகர ஈறுகளுஞ் செய்தென்னும்

வாசகத்தைத் தந்தே நிற்றலானும், உகரம் இயல்பாக, இகரமும் யகர மும் அதன் திரிபென்றலே முறைமையாமென்று உணர்தற்கெனக் கொள்க. இன்னும் அதனனே "ஓடாநின்றுபோயினன்" எனவும் "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்—பகல்கான் றெழுதரும் பல் கதிர்ப் பருதி" எனவும் "தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கருமி னீன்று—முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமும்" எனவும் உகர ஈறு இறுபான்மை நிகழ்காலம்பற்றி வருதலும், புகர ஈறு "நகுபவந் தான்" என்புழி நகாநின்றுவந்தானென்றும் "வாடுபுவனப்போடி" என்புழி வாடாநின்று வனப்போடி" என்றும் முடிக்குஞ்சொல்லான் உணரப்படுந்தொழிலோடு உடனிகழ்ந்து நிகழ்காலம்பற்றி வருத லும், அகர ஈறு மழைபெய்யக்குளநிறைந்தது எனக் காரணப்பொ ருட்டாயுங் குளநிறையமழைபெய்தது எனக் காரியப்பொருட்டாயும் இறந்தகாலம்பற்றியும் உண்ணவந்தானெனத் தற்பொருட்டாய் எதிர் காலம்பற்றியும் வருதலுக், தலைவன்பிரிந்துவருங்ஙஞள் "மாஅல் யா ணையொடு மறவர் மயங்கித்—தூறுதற்ப் பட்ட வாறுமயங் கருஞ் சுரம்" "வானின் றுலகம் வழங்கி வருதலால்" எனவும் "நமதுகலனு கர்வான்யாம்விரும்புதும்" கற்பானூல்செய்தான் புணர்தருசெல்வந் தருபாக்குயாம்விரும்புதும் எனவும் உகர ஈறுயும் வான்பான்பாக்கீ றுயுந் திரிதலுங் கொள்க. உரைப்ப உரைக்க என இதற்கு ஏற்புழிப் பகரமுங் ககரமும் வரும். இது மறைக்கட் "கூறுமற் குறித்ததன் மேற் செல்லுங் கடுங்கூளி" என அல்லீறுயுங் "கூறுமை நோக்கிக் குறிப்பறிவான்" என மகர ஐகார ஈறுயும் வருதலும், இன்னீறு "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே" என உம்மீறுயும் "அற்றூல லவறிந்துண்க" என ஆலீறுயுந் திரிதலுங் கொள்க. அகர ஈறும் இன்னீறும் இயல்பாதற்கும் உகர ஈறும் வான்பான்பாக்கீறும் உம்மீ றும் ஆலீறும் அவற்றின் திரிபாதற்கும் மேல் உகர ஈற்றிற்கு உரைத்தாங்கு உரைக்க.

இன்னும் அதனனே ஓடிவந்தான் விரைந்துபோயினன் என வும் "வெய்ய சிறிய மிழற்றுஞ் செவ்வாய்" எனவும் "செவ்வன் றெரிகற்பான் புதுவத னியன்றவணி" எனவும் தம்மைமுடிக்கும் வினைக்கட்கிடந்த தொழிலானும் பண்பானுங் குறிப்பானும் உணர்த் தித் தெரிநிலைவினையுங் குறிப்புவினையுமாய் முடிக்குஞ்சொல்லை விசேடித்தலும் பிறவும் பின் பின்னர் பின்னை எனவும் முன் முன் னர் முன்னை எனவும் திரிதலுங் கொள்க. (உ0)

உசஎ. அவற்றுண், முதலி னொரு மீற்றின் மூன்றும் வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

இஃது இன்னும் வினையெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது; "தன்வினை பிறவினை யாயிரு வினையொடு— முடியு முறையது வினையெச் சம்மே" எனப் பொதுவகையான் எய்துவித்ததனை ஈண்டுச் சிறப்புவகையான் எய்துவிக்கின்றமையின்.

இ - ள். முற்கூறிய பன்னிரண்டனுள் முதற்கண் நின்ற செய்து செய்பூ செய்யா செய்பு என்னும் நான்கும் ஈற்றின்கண் நின்ற செய்வான் செய்பான் செய்பாக்கென்னும் மூன்றுந் தம்மை நிகழ்த்தின கருத்தாவினது வினையைக்கொண்டு முடியும். பிறகருத் தாவினது வினையையும் உம்மையாற் தம்மைநிகழ்த்தின கருத் தாவினது வினையையுங்கொண்டு முடியும் ஏனை ஐவகை எச்சங் களும். எ - று.

உ-ம். உண்டுவந்தான் வந்துதோன்றினான் "எண்ணித்துணிக கருமம்" "பரீஇயுயிர்செகுக்கும்" "ஐவரொடுசினஇகிலத்தலைக்கொண்ட" எனவும் உண்ணுவந்தான் "நிலம்படையுவெழுதருவலம்படுகுஞ்சரம்" எனவும் உண்ணுவந்தான் "நிலங்கிளையாநாணினின்றோணிலை" எனவும் உண்குபுவந்தான் "தெரிபுதெரிபுகுதினவேறு" எனவும் "கொல்வான்கொடித்தானைகொண்டெழுந்தான்" "திருவிற்றுன் மாரிகற்பான்றுவலைகாட்செய்ததேபோல்" எனவும் "புணர்தருசெல் வந்தருபாக்குச்சென்றான்" எனவும் முதலினனும் ஈற்றின்மூன் றும் வினைமுதல்வினைகொண்டு முடிந்தவாறுகாண்க. வினைமுதல்வி னையை வினைமுதலென்றார் ஆசிரியரான். "மழைபெய்தெனப் புகழ்பெற்றது" "காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடி பசித்தெனக்— கடுங்கண் யானைக் கோடுகொடுத் துண்ணும்" எனவும் மழைபெய்தெ னமரங்குழைத்தது "கோவாவாரம் வீழ்ந்தெனக்குளிர்கொண்டு— பேஎதாறுந்தாழ்நீர்ப்பனிச்சுனை" எனவும் மழைபெய்யப்புகழ்பெற் றது "கொள்ளக்குறைபடாஅக்கூழுடையினகர்" எனவும் மழை பெய்யமரங்குழைத்தது "மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து— நோக்கக் குழையும் விருந்து" எனவும் மழைபெய்யிற்புகழ்பெறும் "தாம்வேண்டினல்குவர்காதலர்" எனவும் மழைபெய்யிற்குளிறை யும் "யாம்வேண்டிற்கௌவையெடுக்குமிவளூர்" எனவும் மழைபெய் யியமுழங்கும் "காணியவாவாழிதோழி" எனவும் மழைபெய்யிய வான்பழிச்சுதும் "மாணிழை யரிவை காணிய வொருநாட்—பூணக மாகின் புனைமணி நெடுந்தேர்" எனவும் மழைபெய்யியசெழுந் தது "பகலெயுணியர்வேண்டும்" எனவும் மழைபெய்யியர்பலிகொடுத் தனர் "கொற்கைச் செழியர் கொங்கர்ப் பணியியர்—பழையன

வேல் வாய்த்தன" எனவும் ஏனையைந்தும் வினைமுதல்வினையும் பிற வினையுங் கொண்டு முடிந்தவாறுகாண்க.

இனி மழைபெய்தற்குமுழங்கும் மழைபெய்தற்குக்கடவுள் வாழ்த்துதும் எனவும் இறந்தபின்னிளமைவாராது கணவனினி துண்டபின்காதலிமுகமலர்ந்தது எனவும கடுத்தினஞமுன்றுவர்த் தது மருந்துதின்னுமுன்னேய்தீர்ந்தது எனவும் உரைத்தக்காலுரை பல்லும் "வலஞக வியையென்று வணங்கிநாம் விடுத்தக்கா—லொளி யிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை" எனவும் நல்வினைதா னுற்றக்கடையுதவும் நல்வினைதானுற்றக்கடைத்தீவினைவாரா என வும் நல்வினைதானுற்றவழியுதவும நல்வினைதானுற்றவழித்தீவினை வாரா எனவும் நல்வினைதானுற்றவிடத்துதவும நல்வினைதானுற்றவி டத்துத்தீவினைவாரா எனவும இன்ன என்பதனுற் தழீஇயவையும் வினைமுதல்வினையும் பிறவினையுங் கொண்டு முடிதல் ஒன்றெனமு டித்தலாற் கொள்க. (உக)

உசஅ. சினைவினை முதலொடும் பிறவினை பிறவினை முதலொடு முடிதலு முன்னினா கொளலே.

இது வினைமுதல்வினைகொண்டு முடியுமென்ற முதலுணக்கற் கும் ஆவதோர் புறனடை கூறுகின்றது; ஏனையவற்றிற்கு இவ்வாறு அமைதிகூறவேண்டாமையின்.

இ - ள். சினைப்பொருள்பற்றித்தோன்றிய வினையெச்சம் அச் சினைவினையான் முடிதலேயன்றி முதல்வினையோடு முடிதலுஞ் சினைவினையேயன்றி முதல்வினையுந் தமக்கு உரிய வினைமுதல்வி னையோடு முடிதலேயன்றிப் பிறவினைமுதல்வினையோடு முடிதலும் ஆராய்ந்து அமைத்துக்கொள்க. எ - று.

உ-ம். கையற்றுவீழ்ந்தான் கண்ணெரிந்துகிடந்தான் வயிறு தொந்துகிடந்தான் "கண்டியின்றுமுன்றிற்போகாமுதிர்வினள்" "பா யுந் தாளொற்றித் தப்பிவீழ்ந்தார் தறிவலைமானிற் பட்டார்" எனவும் கையிறுவீழ்ந்தான் கண்வலியுக்கிடந்தான் எனவும் கையிறுவீழ்ந் தான் கண்வலியாக்கிடந்தான் எனவும் கையிறுபுவீழ்ந்தான் வயிறு குத்துபுகிடந்தான் எனவும் காரணகாரியப்பொருளவாயும் "அகன மர்ந்து செய்யா ஞறையு முகனமர்ந்து—நல்விருந் தோம்புவா னில்" "காமன்கணையொடுகண்ணிவந்துபுலர்ந்தாள்" எனச் சிறுபான்மைகார ணகாரியப்பொருளவல்லவாயுஞ் சினைவினை முதல்வினையோடும் ஞா யிறுபட்டுவந்தான் "உரம்கால்யானையொடுக் கண்டெஞ்சியயா—

விரிநிழற்றுஞ்சுஞ்செந்நாயேற்றை" எனவும் ஞாயிறுபடஉவந்தான் எனவும் ஞாயிறுபடாவந்தான் எனவும் ஞாயிறுபடுபுவந்தான் எனவும் முதல்வினை தமக்குரிய வினைமுதல்வினையானன்றிப் பிறவினை முதல்வினையோடு முடிந்தவாறுகாண்க. தலைவன்பிரிந்துவருந்தினுள் "மாஅல் யானையொடு மறவர் மயங்கித்—தூறுதப்பட்ட வாறு மயங் கருஞ்சுரம" "வானின்றுலகம்வழங்கிவருதலால்" எனவும் நமதுநலனுக்கானயாம்விரும்புதும் கற்பானூல்செய்தான் செல்வக் தருபாக்குயாம்விருமபுதும் எனவும் பிறவினைகொண்டு முடிந்தன வோவெனின், அவை காரணகாரியப்பொருட்டாய் இறந்தகாலம் உணர்த்துஞ் செயவெனெச்சமுந் தற்பொருட்டாய் எதிர்காலம் உணர்த்துஞ் செயவெனெச்சமும் மேலைச்சூத்திரத்துப் பிறவென்ற மிகையானே முறையே செய்தெனெச்சமாயுஞ் செய்வான் செய் பான் செய்பாக்கு என்னும் எச்சங்களாயுந் திரிந்துநின்றுழியே பிற வினைகொண்டன எனப்படுமென்க.

அற்றேல் ஞாயிறுபட்டுவந்தான் "உரற்கால்யானையொடித் துண்டெஞ்சியயா" என்பன முதலியவற்றையுஞ் செயவெனெச்சத் திரிபென்றற் படும் இழுக்கென்னையோவெனின் பிறவினைகொண் டனவாயினுஞ் செய்தெனெச்சத்திற்கு உரிய இறந்தகாலம் உணர்த் தலிற் செய்தெனெச்சமேயாவதல்லது ஏனைக்காலத்திற்கு உரிய செயவெனெச்சத்தின் திரிபெனப்படாவென்க.

அஃதேல் மழைபெய்யமரங்குழைத்ததெனச் செயவெனெச் சத்து இறந்தகாலமும் உரித்தாலெனின், அது காரணகாரியப்பொ ருட்டாயவழியல்லது செயவெனெச்சம் இறந்தகாலம் உணர்ததா தென்க. எனவே, ஞாயிறுபடுதலும் ஒடித்துண்டலும் வருத்தற்கும் எஞ்சுதற்குங் காரணமன்மையின் ஆண்டு இறந்தகாலம் உணர்த்தா மையிற் செய்தெனெச்சமாயே நின்று தமக்கு உரிய இறந்தகாலம் உணர்த்தினவெனப்படுமென்பதாயிற்று. ஞாயிறுபட்டுவந்தான் என் பது ஞாயிறுபட்டபின்வந்தானென இறந்தகாலமும் ஞாயிறுபடவந் தானென்பது ஞாயிறுபடாநிற்கவந்தானென நிகழ்காலமும் உணர்த் துதல் வழக்குநோக்கி உணர்க. தன்வினைகோடற்கு உரியன பிறவி னைகொண்டு முடியுமாயினும் முதலொடு சினைக்கு ஒற்றுமையுண் மையின் முதல்வினையுந் தன்வினையேயாமாகலானுந், தமக்கு உரிய இறந்தகாலமே உணர்த்திநிற்றலாற் செயவெனெச்சத்திரிபாகாது செய்தெனெச்சமுதலியனவேயாமென்பது அவற்றிற்கு இயல்பாமா கலானும், வழுவெனக் கணியப்படாவென்று ஆராய்ந்து அமைத்துக் கொள்க என்பார் முன்னினார்கொளலேயென்றார்.

இன்னும் இதனுனே ஆகிடந்துசெறுவினேந்தது என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றி அதன்வினேயொடு முடிதலும் (இதற்கு வினேமுதல் தானே செயப்படுபொருளாம்.) "பூணணிந்து விளங்கிய புகழ்சான் மார்ப" என அணிந்தென்னும் முதனிலேவினே நினேவினேயொடுமுடிதலுமாம். உண்டுபசிகெட்டதும் அது. இவ்வாறு காரணகாரியப்பொருளவாய்ப் பிறவாற்றுன் முடிதலுங் கொள்க. (உஉ)

உசகூ. வினேயெஞ்சு கிளவிக்கு வினேயுங் குறிப்பு
நினேயத் தோன்றிய முடிபா கும்மே
யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே.

இது முன்னர்த் "தன்வினே பிறவினே யாயிரு வினேயொடு—முடியு முறையது" என்றுந் தன்வினேகொள்வன இவையென்றுந் தன்வினேயும் பிறவினேயுங் கொள்வன இவையென்றும் பொதுவகையாற் கூறினர்; இஃது அவ்வினே இவவினேயென்பதூஉம் வினேக்குறிப்போடு முடிவுழி இவ்வாறு முடியுமென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். வினேயெச்சவினேச்சொற்குத் தெரிநிலேவினேயுங் குறிப்புவினேயும் ஆராயத் தோன்றிய முடிபுசொல்லாம்; ஆண்டுக் குறிப்பு ஆக்கவினேயோடு வரும். எ - று.

உ-ம். உழுதுவந்தான் மருந்துண்டுநல்லனுயினுன் எனவரும். வினேயுங் குறிப்புமெனப் பொதுப்படக்கூறிய அதனுன் ஓதிப்பெற்றபொருள் ஓதிநல்லசாத்தன் உழுதுபயன்கொண்டு உழுதன்றியுண்ணுன் எனப் பெயரெச்ச வினேயெச்ச வினே வினேக்குறிப்புக்களும் முடிபாதல்கொள்க. நினேயத்தோன்றிய என்றதனுனே உழுதுவந்தவன் உழுதுவருதல் எனத் தொழிற்பெயரோடும் வினேப்பெயரோடும் முடிதலும் "வேங்கையுங் காந்தளு நாறி—யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே" எனவும் "குருதி படிந்துண்ட காகமுரு விழந்து—குக்கிற் புறத்த சிரல்வாய" எனவும் சிறுபான்மை வினேக்குறிப்பு ஆக்கமின்றி வருதலுங் கொள்க. (உங)

உஙo. வினேமுற் றேவினே யெச்ச மாகலுங்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

இது முற்றுச்சொல்லது திரிபாயும் எச்சங்கள் வருமென்று எய்தாதது எய்துவிக்கின்றது.

இ - ள். தெரிநிலைவினைமுற்றுத் திரிந்து வினையெச்சமாகி வருதலுங் குறிப்புவினைமுற்றுத் திரிந்து வினையெச்சமாகி வருதலும் பெயரெச்சமாகி வருதலுஞ் சிறுபான்மை உள. எ - று.

உ-ம். "காணுன் கழிந்தவைகலு முண்டென் றிருநாள்" "மோயினஞ்யிர்த்தகாலே" "முகந்தனர்கொடுப்ப" "விளிப்பது பயி லுங் குறும்பர் துந்துபியொடு" "எருவை நுண்டாது குடைவன வாடி" எனவும் "பெயர்த்தனென்முயங்கயான" "மக்களு னிரட்டையாய் மாறினம் பிறந்தியாம்" எனவும் "சேர்ந்தனே சென்மோ பூந்தார் மார்ப" "கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்" எனவும் ஐம்பான்மூவிடத்துந் தெரிநிலைவினைமுற்றுக்கள் திரிந்து வினையெச்சமாயினவாறு காண்க. "வரிபுனைவில்ல னெருகணை தெரிந்து கொண்டு" "அளிகிலே பெருஅ தமரியமுகத்தள்—விளிகிலே கொள்ளாள்" "உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து" "விழுமிதுகழிவதாயினும்" "நிலமிசைப் புரளுங் கையவெய் துயிர்த்து" எனவும் "துணையினெஞ்சினேன் றுயருழந் தினையேன்" "நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சி" எனவும் "நீர்வார்கண்ணைநியிவணெழிய" "வெள்வேல் வலத்தினிர் பொருடரல் வேட்கையி னுள்ளினிர்" எனவும் "வெந்துப்பினன்விறல்வழுதியொடு" "அஞ்சாயல ளாயிழை முன்" "கடற் றுனையர் கழல் வேந்தரை" "பெருவரை மிசையது நெடுவெள் ளருவி" "புன்ரு லோமைய சுரனிறந் தோரே" எனவும் "பெருவேட்கையெனைப்பிரிந்து" "கண்புரை காதலே மெய்மூள்ளான்" எனவும் "உலகுகொடோளினையொருகின்ஞல்" "வினைவேட்கையீர்வீரர்வம்மின" எனவும் ஐம்பான்மூவிடத்துங் குறிப்புவினைமுற்றுக்கள் திரிந்து வினையெச்சக்குறிப்பும பெயரெச்சக்குறிப்புமாயினவாறு காண்க. இவ்வாறு பெயர்ப்படாதனவே இங்ஙனந் திரிந்து வருவனவாமெனக் கொள்க. பிறவும் அன்ன.

முற்றுச்சொற் திரிந்து எச்சமாமென்னுது எச்சமே முற்ருய்த் திரியுமென்று ஓதிற் படும் இழுக்கு என்னையெனின், இருதிணை ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவாகிய வினைகிகழ்ச்சியன்றே எச்சமாவன; அவை அவ்வாறன்றி முற்றுச்சொற்கு ஓதிய ஈற்றவாய் இருதிணையைம்பான்மூவிடமும் உணர்த்தலின் முற்றுச்சொல்லே எச்சமாய்த் திரிந்தன எனப்படும். எச்சம் முற்ருய்த்திரிந்தன எனப்படா. ஆதலான் அவ்வாறு ஓதினுரென்க. அவ்வாறன்றி வினைகொடன்மாத்திரத்தான் வினையெச்சமெனின் மாரீறும் வினையொடுமுடியும் வேற்றுமையும் பிறவும் வினையெச்சமாவான் செல்லுமாகலானும், அல்லதூஉங் "கண்ணியன்வில்லினன்" எனவரும் வினைக்

குறிப்பு முற்முய்த்திரிதற்கு ஏற்பதோர் எச்சமின்மையானும் அஃது இலக்கணமன்றென்க. இஃது ஆசிரியர் தொல்காப்பியனுர்க்குங் கருத்தாதல் சேனவரையருரையான் உணர்க. இக்கருத்தேபற்றியன்றே "எண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்" என் புழி எண்பதத்தானென்பதனேப் பரிமேலழகரும் முற்றுவினேயெச்சமென்றுரைமென்க. (உசு)

இரண்டாவது வினேயியல் முற்றிற்று.

கூ-வது இடைச்சொல்லியல்.

உருக. வேற்றுமை வினேசா ரியையொப் புருபுக
டத்தம் பொருள விசைநிறை யசைநிலே
யித்திற மேழிற் றனித்திய லின்றிப்
பெயரினும வினேயினும் பினமுன் னேரிடத்
தொன்றும பலவும்வந தொன்றுவ திடைச்சொல்.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே இடைச்சொல்லியல் உணர்த்துகின்றமையின் இவ்வோத்து இடைச்சொல்லியலென்னும் பெயர்த்து. இதனுள் இத்தலேச்சூத்திரம் அதன்பாகுபாடும் அதனியல்புங் கூறுகின்றது.

இ - ள். செயப்படுபொருள் முதலாகிய வேற்றுமைப்பொருட்கண் உருபென்னுங் குறியவாய் வருவனவும், வினேப்பகுபதங்களேப் பிரித்து முடிக்குபிடத்துக் காலங் காட்டுங் கடதற முதலிய இடைநிலேயுருபாயுந் திணேயும் பாலும் இடமுங் காட்டும் அன் ஆன் முதலிய இறுதிநிலேயுருபாயும் வரும் வினேயுருபுகளும், இருமொழி தம்மிற் புணருமிடத்து அவற்றின பொருணிலேக்கு உதவிசெய்து பெரும்பாலும் இன்னெலியே பயனுக வரும் அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும், ஒப்புமைப்பொருண்மையை உணர்த்திவரும் போல மான முதலிய உவமவுருபுகளுந், தமதுதமது குறிப்பினுலே பிரிநிலே முதலிய பொருளே உணர்த்துநிற்கும் ஏ ஓ முதலியனவும், வேறுபொருள் உணர்த்தாது செய்யுட்கண் இசைநிறைத்தலே பொருளாக வரும் ஏ ஓ முதலியனவுந், தமக்கோர் பொருளின்றித் தாஞ் சார்ந்த பெயர் வினேகளே அசையச்செய்யும் நிலேமையவாய் வரும் பிற இக முதலியனவுமாகிய இவ்வகையேழானே தனித்துநடத்தலின்றி "அதுமன்" "அதுமற்றம்மதானே" எனவும் கொன்னூர் ஓஒஓ பெரியன்

எனவும் வருகதில் எனவும் வருகதில்லம்ம எனவும் ஓலதந்தார் "ஏஎஏஎ ' யம்பன் மொழிந்தனள் யாயே" எனவும் பெயரின்கண் ணும் வினையின்கண்ணும் பின்னனும் முன்னனும் ஓரிடத்து ஒன் றனும் பலவானும் வந்து பொருந்திநிற்பது மேல் நிறுத்திய இடைச் சொல்லாம். எ - று.

பின்னும் முன்னும் நிற்குமேனும் இடைநிற்றலும் இடைநிற் றல் பெரும்பான்மையென்பதூஉம் பெறுதற்கு இடைச்சொலென் றார். தனித்தியலின்றியெனப் பொதுப்படக் கூறிய அதனைச் சாரப் படுஞ் சொல்லின் வேறுய் வருதலேயன்றி உண்டான் என்றிசி னோர் அருங்குரைத்து என உறுப்பாய்வருதலுங் கொள்க. வருவ தென்னுது வந்தொன்றுவதென்ற மிகையானே "உடனுயிர்போகுக தில்ல" என ஈறுதிரிதலும் "மன்னேச்சொல்லே" "கொன்னேச்சொ ல்லே" எனத் தம்மையுணராநின்றவழியும் ஈறுதிரிதலும் "னகாரை முன்னர்" என எழுத்துச்சாரியை ஈறுதிரிதலுங் கொள்க.

இனி ஒன்றெனமுடித்தலான் வேற்றுமைப்பொருட்கண் உரு பென்னுங் குறியவாய் வருவனவேயன்றி வேற்றுமைப்பொருள வாய் வருவன பிறவுங்கொள்க. அவையாவன "கண்ணகன்ஞா லம்" "ஊர்க்கானிவந்தபொதும்பர்" என ஏழாவதன்பொருளவாய் வருங் கண் கால் முதலியவும் "அனையையாகன்மாறே" "நிறந் தோன்பெயரன்பிறந்தமாறே" "முறையுளிகோலோச்சுமன்னவன்" என மூன்றாவதன்பொருளவாய் வரும் மாறு உளி என்பவும் பிறவு மாம். "மந்திர விதியின் மரபுளி வழாஅ—வந்தணர் வேள்வி" என உளி ஐந்தாவதன் பொருட்டாயும் வரும். "கூற்றம்தோழியான்வா ழுமாறே" என்புழி வாழுமாற்றையென இரண்டாவதுவிரிதலின் அது மாறன்று, ஆறென்பது வாழுநெறியையென இரண்டாவது விரிந்துநின்றதாமென்க. இவவாறு வருவனவற்றைப் பகுதிப்பொ ருள்விருதியென்பாரும் உளர்.

இன்னும் அதனனே வினையுருபென்றேனும் உண்டவன் உண்டவள் நம்பி நங்கை என வருந் தொழிற்பெயரும் பெயர்ப்பெய ரும் முதலியனவும் இவவிடைச்சொற்பெற்று வருதல்கொள்க. சாரியை பொருணிலைக்கு உதவுதலாவது எல்லாவற்றையுமென்புழி அற்றுச்சாரியை நிலைமொழிப்பொருள் இருதிணைக்கும் பொதுவாயி னும் அஃறிணையென்பதுபட வருதலும் எல்லாநம்மையுமென்புழி நம்முச்சாரியை அப்பொருள் உயர்திணைத்தன்மைப்பன்மையென்ப துபட வருதலுமாம். ஒழிந்தனவும் தாஞ் சார்ந்துவரும் மொழிப்பொ ருட்கு உபகாரமுடையவாமாறு ஓர்ந்து உணர்க.

இன்னும் அதனனே காரங் கரம் முதலிய எழுத்துச்சாரியை யுங் கொள்க.

இவ்விடைச்சொற்றிறம் ஏழனுள் முன்னேயமூன்றும் முன்னர் உணர்த்தப்பட்டமையானும் உவமவுருபு மேல் உணர்த்தப்படுதலானும் ஒழிந்த மூன்றும் இவ்வோத்தினகத்து உணர்த்தப்படுமென்று உணர்க. குறிப்பென ஒன்று கூட்டித் திறம் எட்டென்பாரும் உளராலோவெனின், அது 'தத்தம்பொருள' என்பதனுள் அடங்குதல் "வினேபெயாகுறிப்பிசை"என்பதனாற் பெறப்படுதலின் மிகைபடக்கூறலென மறுக்க. (க)

உருஉ. தேற்றம் வினுவெண் பிரிநிலே யெதிர்மறை யீற்றசை யெனவா றேகா ரம்மே.

இது தத்தங் குறிப்புப்பொருள் செய்வனவற்றுள் ஏகாரம் பெரும்பான்மை பொருள்படுமாறுஞ் சிறுபான்மை அசையாமாறுங் கூறுகின்றது.

இ - ள். "உண்டேமறுமை" என வரும் தெளிவுபொருண்மையும் கீயேகொண்டாய் என வரும் வினுப்பொருண்மையும் நில னேநீரேநீயேவளியே என வரும் எண்ணுப்பொருண்மையும் அவருள் இவனேகள்வன் என வரும் பிரிநிலேப்பொருண்மையும் யானே கொண்டேன் என வரும் எதிர்மறைப்பொருண்மையும் என்னும் ஐவகைப்பொருண்மைக்கண்ணுங் "கடல்போற் ருேன்றல் காடிறந் தோரே" எனச் செய்யுளிறுதியின் அசைநிலேயாதற்கண்ணும் வருவனவென அறுவகைப்படும் ஏகார இடைச்சொல். எ - று. (உ)

உருங. ஒழியிசை வினுச்சிறப் பெதிர்மறை தெரிநிலே • கழிவுபிரிப் பசைநிலே யெனவெட் டோவே.

இதுவும் அது.

இ - ள். ஒழியிசைமுதலாகப் பிரிநிலேயீருகக் கிடந்த பொருணிலேயும் அசைநிலேயுமெனச் சொல்லப்பட்ட எட்டுவகையினேயும் பற்றி நிகழும் ஓகார இடைச்சொல். எ - று.

உ-ம். கொளலோகொண்டான் என்பது கொண்டுய்யப்போகலாயினுன் அல்லன் என்பது முதலிய ஒழியிசைநோக்கி நிற்றலின் ஒழியிசையோகாரம். சாத்தனுண்டாேே என்பது வினுவோகாரம். ஓஒபெரியன் என்பது பெருமைமிகுதியுணர்த்தலிற் சிறப்போகாரம்.

"ஓலவுவமையுழ்வின்றியொத்ததே"என்பதும் அது. யாஞெகொள் வேன் என்பது கொள்ளேனென்னும் எதிர்மறைகுறித்து நிற்றலின் எதிர்மறையோகாரம். "திருமகளோ வல்ல—ளரமகளோ வல்ல ளிவள்யார்" என்பது தெரிதற்கண்வருதலிற் தெரிநிலேயோகாரம். "கைத லின்றி நல்லறஞ்செய் கின்றிலா ரோஎ தமக்கோ ருறுதியுண ராரோ" என்பது கழிந்ததற்கு இரங்கலிற் கழிவோகாரம். "நீங்கின ளோவென்பூங்கணுளே" என்பதும் அது. "யாஞேதேறேனவர் பொய்வழங்கலரே" என்பது தேறுவார் பிறரிற் பிரித்தலிற் பிரிநி லேயோகாரம். "சென்றீ பெருமகிற் றகைக்குநர் யாரோ" என்பது பொருள்குறியாமையின் அசைநிலேயோகாரம். "காணியவம்மினே கங்குலதுநிலேயே" என்பதும் அது. (ஈ)

உடுச. தெளிவி னேவுஞ் சிறப்பி னேவு
மளபி னெடுத்த விசைய வென்ப.

இது முற்கூறிய ஏகாரத்துள் ஒன்றற்கும் ஓகாரத்துள் ஒன்றற் குஞ் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். தெளிவின்கண்வரும் ஏகாரமுஞ் சிறப்பின்கண்வரும் ஓகாரமும் அளவான் மிக்க இசையையுடைய என்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

அளபெடையான் வந்தன மேற்காட்டப்பட்டவற்றுள்ளும் பிரண்டுங் கண்டுகொள்க. (சு)

உடுடு. வினேபெயர் குறிப்பிசை பண்பெண் ணுறினு
மெனவெனு மொழிவரு மென்று மற்றே.

இஃது எனவும் என்றும் பொருள்படுமாறு கூறுகின்றது.

இ - ள். வினேப்பொருள் முதலிய ஆறுபொருண்மைக்கண் ணும் எனவென்னும் இடைச்சொல் வந்து இயையும்; என்றென் னும் இடைச்சொல்லும் அவ்வாறு பொருண்மைக்கண்ணும் என வென்பதுபோல வந்து இயையும். எ - று.

உ-ம். "கார்வருமெனக்கருதிகொந்தாள்" என்பது வினேப்பொ ருண்மை. "மேலவான் கொள்கென வுயர்பலி தூஉய்" என்பதும் அது. "அழுக்காறெனவொருபாவி" என்பது பெயர்ப்பொருண்மை. துண்ணெனத்துடித்ததுமனம் என்பது குறிப்புப்பொருண்மை. ஒல் லென ஒலித்தது என்பது இசைப்பொருண்மை. வெள்ளெனவெரூத்

தது என்பது பண்புப்பொருண்மை. நிலனென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்க ளோந்து என்பது எண்ணுப்பொருண் மை. "கடலெனக் காற்றெனக் கடுங்கட் கூற்றென—வுடல்சின வுருமென வூழித் தியென" என்பதும் அது.

இனி என்று வருமாறு;—"நரைவருமென்றெண்ணி" எனவும் "பாரியென்றிருவனுளன்" எனவும் விண்ணென்றுவிணைத்தது எனவும் "ஒல்லென் றிருலிக்கு மொலிப்புன வூரற்கு" எனவும் பச் சென்றுபசுத்தது எனவும் நிலனென்று நீரென்று தீயென்று வளி யென்று வானென்று பூதங்க ளோந்து எனவும் அவவாறும் வரும். ()

உரிசூ. எதிர்மறை சிறப்பெண் ணெச்சமுற் றையங் தெரிநிலை யாக்க மெனவெட் டமமே.

இதுவும் அது.

இ - ள். எதிர்மறைப்பொருண்மை முதலாக ஆக்கப்பொருண் மை ஈறாகக் கிடந்த பொருள்வகை எட்டனையும் பற்றி நிகழும் உம் மையிடைச்சொல். எ - று.

உ-ம். சாத்தன்வருதற்குமுரியன் என்பது வாராமைக்கும் உரி யனென எதிர்மறையை ஒழிபாக உடைத்தாய் நிற்றலின் எதிர்மறை யும்மை. இஃது எச்சத்தின்பாற் படுமேனும் பிறிதோர்பொருளைத் தழுவாது ஒருபொருளின் வினையை மறுத்தலின் எதிர்மறையென அதனின வேறுமிற்று. சிறப்பும்மை உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பு மென இருவகைத்து. "குறவருமருளுங்குன்றத்துப்படினே" என் பது குன்றத்து மயங்காது இயங்குதற்குக் குறவர் சிறந்தமையின் உயர்வுசிறப்பும்மை. இவ்வூர்ப்பூசையும் புலாரின்னது என்பது புலால் தின்னும் இழிவின்கட் பூசை சிறந்தமையின் இழிவுசிறப் பும்மை. நிலனுநீருந்தீயும்வளியுமாகாயமுமெனப் பூதமைந்து என் பது எண்ணும்மை. எச்சவும்மை இறந்ததுதழீஇயதும் எதிரதுதழீஇ யதுமென இருவகைத்து. கொற்றனும்வந்தான் என்பது முன் சாத் தனும் வந்தானென்பதனைத் தழுவுதலின் இறந்ததுதழீஇயவெச்ச வும்மை. சாத்தனும்வந்தானென்பது பின் கொற்றனும் வந்தானென் பதனைத் தழுவிநிற்றலின் எதிரதுதழீஇயவெச்சவும்மை. இனி இவவி ரண்டனையும் எதிர்காலந்தழீஇயின ஆக்கி இன்றுசாத்தனும்வரும் நாளைக்கொற்றனும்வரும் என எதிரதுதழீஇயின என்றலுமாம். இன் னும் இவவெச்சந்தானே யான் கருவூர்க்குச்செல்வலென்றூர்க்கு யானும் அவவூர்க்குப் போதுவல் என முழுவதுந்தழுவுவதூஉம் அவ

வாறு கூறினார்க்கு யானும் உறையூர்க்குப் போதுவல் என ஒருபு டைத்தழுவுவதூஉமென இருவகைத்தாம். தமிழ்நாட்டுமூவேந்த ரும்வந்தார் என்பது எஞ்சாப்பொருட்டாய் நிற்றலின் முற்றும்மை. "ஒன், நிரப்பான்போ லிழிவந்துஞ் சொல்லு முலகம்—புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்—வல்லாரை வழிப்பட்டொன் றறிந்தான் போல—நல்லோர்கட் டோன்று மடக்கமு முடைய—னில்லோர் புன்க ணீகையிற் றணிகக—வல்லான் போல்வதோர் வண்மையு முடைய—னன்னனெனுவன்" என்புழி இன்னனென் று துணியாமைக்கண் வருதலின் இவை ஐயவும்மை. "இருநில மடி தோய்தலிற் றிருமக ளமல்ல—ளரமகளு மல்ல ளிவள்யா ராகும்" என்பன ஆராய்தற்கண் வருதலிற் தெரிநிலையும்மை. திருமகளோ அரமகளோ என்னுது அவரீக்குதலின் ஐயவும்மையின் வேறு தல் அறிக. நெடியனும்வலியனுமாயினன் என்பன ஆக்கங்குறித்து நிற்றலின் ஆக்கவும்மை.

இஃது "அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே" எனப் பண்புபற்றியும் வரும். "செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே" என்பதூஉம் வழுவை இலக்கணமாக்கிக்கோடல் குறித்தமையின் அதன்பாற்படும். (சு)

உருள. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

இஃது ஒரும்மை பிறிதோரும்மைப்பொருளுந் தருமென வழு வமைக்கின்றது.

இ - ள். முற்றும்மை தன்முடிபாகிய வினையைச் சார்ந்த தொகை உணரநிற்கும் பெயரிடத்து எச்சவும்மைப்பொருட்டுமாம்.எ-று.

உ-ம். பத்துங்கொடால் அனைத்துங்கொடால் என்புழி முற்றும்மைப்பொருள் உணர்த்தாது சில எஞ்சக்கொடு எனனும் பொருள் உணர்த்துகின்றவாறு காண்க. தன்முடிபாகிய வினை கொடா லென்பது, அதனைச் சார்ந்த தொகை உணரநிற்கும் பெயர் பத்தும் அனைத்தும் என்பன. எச்சமுமாகுமெனவே, எச்சப்பொருண்மை குறியாதுநிற்றலே பெரும்பான்மையென்பதாம். ஏற்புழிக்கோட லான் எச்சப்படுவது எதிர்மறைவினைக்கண்ணென்று கொள்க. பத்துங்கொடு என்பது பிறவுங்கொடு என்பதுபட நிற்றலின் விதிவினைக்கண்ணும் எச்சங்குறிக்குமென்பாரும் உளர். இப்பொழுது பத்துங்கொடு என்பது கருத்தாவின் இப்பொழுது பத்துக்கொடு என உம்மையின்றியும் பொருள்பெறப்படும். பத்துங்கொடு பிறவுங்கொடு என்பது கருத்தாவின் அஃது எச்சவும்மையாமாகலின் சண்

டைக்கு எய்தாதது. அதனன் அது பொருத்தமின்றென்க. எல்லா ரும்வந்திலர் எல்லாம்வந்தில என்புழிச் சிலர்வந்தார் சிலவந்தன எனச் சிறுபான்மை எச்சங்குறித்து நிற்றலின் உம்மையிடைச் சொல்லேயன்றி எஞ்சாப்பொருளவாகிய பொருட்பெயர்களும் இவ விதிபெறுதல் அதிகாரப்புறனடையாற் கொள்க. (எ)

உருஅ. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாகிற் பிற்படக கிளவார் முற்படக் கிளத்தல்.

இஃது எச்சவும்மைக்கட் சொல்லுதல்வகைமை கூறுகின்றது.

இ - ள். எச்சவும்மையாற் தழுவப்படும் எஞ்சுபொருட்கிளவி உம்மையில்சொல்லாயின் அவவும்மையில்சொல்லே அவவும்மைத் தொடர்க்குப் பின்சொல்லாது முன்சொல்லுக. எ - று.

வரலாறு;—சாத்தன்வந்தான் கொற்றனும்வந்தான் எனவரும். "அடருபுலால் பாகு பாளிதமு முண்ணுன்—கடல் போலுங் கல்வி யன்" என்பதும் அது. கொற்றனும்வந்தான் சாத்தன்வந்தான் எனப் பிற்படக்கினப்பின் முற்கூறியதனே விலக்குவதுபோன்று பொருள்கொள்ளாமை கண்டுகொள்க. உம்மையடாதே தானே நிற்றலிற் செஞ்சொலென்றார். செஞ்சொலாயின் முற்படக்கிளக்கவெனவே எஞ்சுபொருட்கிளவி உம்மையொடு வரிற் பிற்படக் கிளக்க என்றவாறும். (அ)

உருக. என்ற வெனவொ டெண்ணுக்குறித் தியலும்.

இஃது என்றமுதலிய இடைச்சொற்கள் இப்பொருண்மை குறித்து வரும் என்கின்றது.

இ - ள். என்றவும் எனவும் ஒடுவுமாகிய மூன்றிடைச்சொல் லும் எண்ணுப்பொருண்மையைக் கருதிநடக்கும். எ - று.

நிலனென்ற நீரென்ற எனவும் நிலனெ நீரென எனவும் நிலனொடு நீரொடு எனவும் வரும். (க)

உசுo. பெயர்ச்செவ் வெண்ணே யென்ற வெனவெண் ணன்ஞ தொகைபெறு மும்மை யென்றெனவொ டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

இஃது எண்ணிடைச்சொற்கட்கு எய்தியதோர் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். இடைச்சொல்லானன்றிப் பெயரான் எண்ணப்படுஞ் செவிவெண்ணினிறுதியும் ஏகாரமும் என்றுவும் எனவுமாகிய இடைச்சொற்களான் எண்ணப்படுஞ் சொற்கள் இறுதியுமாகிய நான்கு இறுதியுந் தொகைபெற்றே நடக்கும். உம்மும் என்றும் எனவும் ஓடுவுமாகிய இடைச்சொற்களான் எண்ணப்படும் இந்நான்கு சொற்களின் இறுதியுந் தொகைபெற்றும் பெரும்தும் நடக்கும். எ - று.

உ-ம். நிலநீரிரண்டும் எனவும் நிலனேரேயிரண்டும் எனவும் நிலனென்றுநீரெனறுவிரண்டும் எனவும் நிலனெனறுநீரெனறுவிரண்டும் எனவும் இவைநான்குந் தொகைபெற்றன. "உயர்திணைக் குறிமையு மஃறிணைக் குறிமையு—மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு—மம்மு வருபின தோனற லாறே" எனவும் "இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி" எனவும் நிலனென்றுநீரென்றுதியென்றுவளியென்றுநான்கும் எனவும் "உடலென் றுயிரென் றின்றியமையா" எனவும் நிலனெனநீரெனத்தியெனவளியெனநான்கும் எனவும் உடலெனவுயிரெனவின்றியமையா எனவும் நிலனெடுநீரொடுதியொடுவளியொடுநான்கும் எனவும் நிலனெடுநீரொடுதியொடுவளியொடுபொருந்தி எனவும் இவை நான்குந் தொகைபெற்றும் பெரும்தும் வந்தன. தொகையெனப் பொதுப்படக் கூறிய அதனானே எண்ணுப்பெயரேயன்றி அனைத்தும் எல்லாம் என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க. செவிவெண்ணிடைச்சொலன்றுயினும் எண்ணுதலுந் தொகைபெறுதலுமாகிய ஒப்புமையான் ரண்டுக் கூறினார். அஃது எண்ணுதல் புறனடையாற் கொள்க. "குன்றி கோபங் கொடிவிடு பவளமொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்" எனச் செவிவெண்டொகை பெரும்தும் வருமாலோவெனின், அது தொகுக்கும்வழித் தொகுத்தலாற் தொக்குநின்றதென்க. பிறவும் அன்ன. ()

உசுக. என்று மெனவு மொடுவுந் தோன்றி
யொனறுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.

இஃது எண்ணிடைச்சொல்லுட் சிலவற்றிற்கு ஆவதோர் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். என்றும் எனவும் ஓடுவும் என்பன ஒருவழித் தோன்றி எண்ணினுட் பிறவழியும் பிரிந்துசென்று ஒன்றும் இடமுடைய. எ - று.

உ-ம். "வினைபகை யென்றிரண்டி னெச்சம்" எனவும் "கண்ணிமைகொடியென" எனவும் "பொருள்கருவி காலம் வினையி

டனை டைந்தும்" எனவும் அவை ஒருவழிநின்று வினையென்று எனவும் கண்ணிமையென எனவும் பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு எனவும் நின்ற இடத்துப் பிரிந்து பிறவழிச்சென்று ஒன்றியவாறு காண்க. ஒன்றுவழியுடைய என்றதனாற் சொற்றொறும் நிற்றலே பெரும்பான்மையென்பதாம். சொற்றொறும் நின்ற எண் இக்காலத்து அரிய. (கக)

உசுஉ. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.

இஃது எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்கண்ணும் வருமென்கின்றது.

இ - ள். வினையொடுவந்து நிற்பினும் எண்ணிடைச்சொற்கள் முற்கூறிய இயல்பினவாய்த் தொகைபெற்றும் பெறுதும் வருவனவாம் பொருந்துவன. எ - று.

உ-ம். உண்டுந்தின்றும்பாடியும்வந்தான் எனவும் உண்ணவெனத்தின்னவெனப்பாடவெனவந்தான் எனவும் "மண்டில மழுங்க மலைநிறங் கிளர—வண்டின மலர்பரந் தூத பிசைய—கண்டற் கானங் குருகின மொலிப்ப" எனவும் வரும். பிறவும் வினையொடு வருவனவுளவேற் காண்க.

உம்மையாற் பெயரொடுவருதலே பெரும்பான்மையென்பதாம். ஏற்பன என்றதனானே முற்றும்பெயரெச்சமும்பற்றி வாரா எனவும் வினையெச்சத்தோடும் ஏற்பனவற்றோடல்லது வாரா எனவும் ஆண்டுத் தொகைபெறுதல் சிறுபான்மையெனவுங்கொள்க. சாத்தன்வந்தான் கொற்றன்வந்தான் வேடன்வந்தான் மூவரும்வந்தமையாற் கலியாணம் பொலிந்ததெனச் செவிவெண் தொகைபெற்று வந்ததாலெனின், அவை எழுவாயும் பயனிலையுமாய் அமைந்து மாறுதலின் எண்ணப்படாமையானும் மூவருமென்பது சாத்தன்முதலாயினோர் தொகையாகலானும் அவைபொருந்தாவென்க. (கஉ)

உசுங. கழிவே யாக்க மொழியிசை யசைநிலை
யெனநான கென்ப மன்னைச் சொல்லே.

இது மன்னென்னும் இடைச்சொற் பெரும்பான்மை பொருள் பலமொறுஞ் சிறுபான்மை அசைநிலையாமாறுங் கூறுகின்றது.

இ - ள். கழிவுகுறித்து நிற்பதும் ஆக்கங்குறித்து நிற்பதும் ஒழியிசைப்பொருண்மைகுறித்து நிற்பதும் அசைநிலையாய் நிதுபற்

மென நான்குவகையினையுடைத்தென்று சொல்லுவர் ஆசிரியர் மன் னென்னும் இடைச்சொல்லே. எ - று.

உ-ம். "நிறியகட்பெறினேயெமக்கியுமன்னே" என்புழி மன் இனி அது கழிந்ததென்னும் பொருள்குறித்து நின்றது. "பண்டுகா மென்" என்புழி மன இன்று கயல்பிறழும் வயலாயிற்று என ஆக் கங்குறித்து நின்றது. "கூரியதோர்வாண்மன்" என்புழி மன் இட்ப மின்மையினுமென எச்சமாய் ஒழிந்த சொற்பொருண்மைகுறித்து நின்றது. "அதுமற்கொண்கன்றேரே" என்புழி மன் அசைநிலையாய் நின்றது. "மன்னுமாதர் பெருங்கற்பென் றறிந்தேன்வாழி காவேரி" என மிகுதிகுறித்தும் "மன்னு வுலகத்து மன்னியது புரிமே" என நிலைபேறு குறித்தும் வருமென்பாரும் உளராலோவெனின் அவை வினைச்சொல்லாய் நிற்றலின் ஈண்டைக்கு எய்தாவென்க. (கஉ)

உசுச. விழைவே கால மொழியிசை தில்லே.

இது தில்லென்னும் இடைச்சொற் பொருள்படுமாறு கூறு கின்றது.

இ - ள். விழைவுகுறித்து நிற்பதுங் காலங்குறித்து நிற்பதும் ஆண்டு ஒழிந்துநின்ற சொற்பொருள் குறித்து நிற்பதுமென மூன்று வகையினையுடைத்துத் தில்லென்னும் இடைச்சொல். எ - று.

உ-ம். "வார்ந்தி லங்கும் வையெயிற்றுச் சின்மொழி—யாரிவை யைப் பெறுகதில் லம்ம யானே" என்புழிப் பெறுதற்கண் உளதா கிய விருப்பங் குறித்து நின்றது. "பெற்றுங்கறிகதில்லம்மவிவளூரே" என்புழிப் பெற்றகாலத்து அறிகவெனக் காலங்குறித்து நின்றது. "வருகதில்லம்மவெஞ்சேரிசேர" என்புழி வந்தக்கால் அது செய்வ லென்னும் ஒழியிசைப்பொருள் குறித்துநின்றது. இடம் வரைய றுத்தோதாமையின் மூன்றிடத்தும் வருதல் எய்திற்றேனும் ஏற்பு ழிக்கோடலான் விழைவின்கண் வருவுழித் தன்மைக்கண்ணல்லது வாராதெனக்கொள்க. என்னே? "விழைவின்றில்லதன்னிடத்திய லும்" என்பவாகலின். (கச)

உசுஞ. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா லுன்கே கொள்ளுச் சொல்லே.

இது கொன்னென்னும் இடைச்சொற் பொருள்படுமாறு கூறுகின்றது.

இ - ள். அச்சப்பொருள் குறிப்பதும் பயமின்மைப்பொருள் குறிப்பதுங் காலப்பொருள் குறிப்பதும் பெருமைப்பொருள் குறிப்பதுமென்று கூறப்பட்ட அக்கூற்று நான்கேயாங் கொன்னென்னும் இடைச்சொல். எ - று.

உ-ம். "கொன்முனை யிரவுர் போலச்—சிலவா குகனீ துஞ்சுநா ளே" என்புழி அஞ்சிவாழும் ஊரென அச்சமுங் "கொன்னேகழிந் தன்றிளமையும்" என்புழிப் பயமின்றிக் கழிந்ததெனவுங் "கொன் வரல்வாடை" என்புழிக் காதலர் நீங்கியகாலம் அறிந்து வருதலையு டைய வாடையெனக் காலமுங் "கொன்னூர் துஞ்சினும் யாந் துஞ் சலமே" என்புழிப் பேரூர் துஞ்சினுமெனப் பெருமையுங் குறித்துநின்றவாறு காண்க. (கடு)

உசுசு. மற்றென் கிளவி வினமாற் றசைநிலை.

இது மற்றென்பது பொருள்படுமாறும் அசைநிலையாமாறுங் கூறுகின்றது.

இ - ள். மற்றென்னும் இடைச்சொல் முன்சொல்கின்றது ஒழிய இனி அது வேறென்னும் பொருண்மைகுறித்தலும் அசைநி லையாதலும் உடைத்து. எ - று.

உ-ம். "இனிமற்றுரை" எனத் தொழிலும் "மற்றறிவா நல்வினை யாமினையம்" எனக் காலமும் "மற்றுங் கூடு மனைமடி துயி லே" என இடமும் பற்றி வரும். "அதுமற்றவலங்கொள்ளாது" என்பது அசைநிலை.கட்டுரையிடையும் மற்றே என அசைநிலையாய் வரும். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று—சூழினுந் தான் முந் துறும்" என்புழிப் பிறிதென்னும் பொருள்பற்றி வந்ததென்பா ரும் உளராலோவெனின், வினமாற்றோடு இதனிடைவேற்றுமை யின்மையிற் பொருந்தாதென மறுக்க. (கசு)

உசுஎ. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

இஃது எற்றென்னும் இடைச்சொல் பொருள்படுமாறு கூறு கின்றது.

இ - ள். எற்றென்னும் இடைச்சொல் ஒன்றனிடத்துநின்றும் ஒன்றுபோயிற்றென்னும் பொருளே உணர்த்துதலை உடைத்து. எ-று.

உ-ம். "எற்றெனுடம்பினெழினலம்" என்புழி என் நலம் இழந் ததென்கின்றது. "எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்"

என்பதூஉம் இதுபொழுது துணிவில்லாருட் துணிவில்லாதேன் யானென்று துணிவிறந்ததென்பது பட நின்றது. (கஏ)

உசுஅ. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

இது மற்றையதென்பது பொருள்படுமாறு கூறுகின்றது.

இ - ள். மற்றையதென்னும் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றையென்னும் ஐகார ஈற்றிடைச்சொல் ஒருவன் முன்னர்க் கருதப்பட்ட பொருளொழிய அதன் இனப்பொருளைக் குறித்து நிற்கும். எ - று.

வரலாறு;—ஆடைகொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் மற்றையதுகொணு என்னும். அஃது அச்சுட்டிய ஆடையொழித்து அதற்கு இனமாகிய பிற ஆடைகுறித்து நின்றவாறு காண்க. பெரும்பான்மையும் முதனிலையாய் நின்றல்லது அவ்விடைச்சொற் பொருள்விளக்காமையின், மற்றையதென்பது என்றூர். சிறுபான்மை மற்றையாடையெனத் தானேயும் வரும். அஃது அவன் என்னுந் தொடக்கத்தனவும் இடைச்சொன் முதனிலையாய பெயர்.(கஅ)

உசுகூ. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

இது கொல்லென்பது பொருள்படுமாறும் அசைநிலையாமாறுங் கூறுகின்றது.

இ - ள். கொல்லென்னும் இடைச்சொல் ஐயப்பொருண்மை குறித்துநிற்றலும் அசைநிலையாதலும் என்னும இருபகுதிதாம். எ - று.

உ-ம். குற்றிகொல்லோ மகன்கொல்லோ என்புழி ஒன்றுந் துணியாமையின் ஐயத்துக்கண் வந்தது. "பிரிவெண்ணிப் பொருள் வயிற் சென்றநங் காதலர்—வருவர்கொல் வயங்கிழாய்" என்புழி அசைநிலையாய் வந்தது. (ககூ)

உஎ0. மன்றவெள் கிளவி தேற்றஞ் செய்யும.

இது மன்றவென்பது பொருள்படுமாறு கூறுகின்றது.

இ - ள். மன்றவென்னும் இடைச்சொல் தெளிவுபொருண்மையை உணர்த்தும். எ - று.

உ-ம். "கடவுளாயினு மாக—மடவை மன்ற வாழிய முருகே" எனவரும். மடவையேயென்றவாறும். (உ0)

உஎக. தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

இதுவும் அது.

இ - ள். தஞ்சமென்னும் இடைச்சொல் எளிமைப்பொருண்மையை உடைத்து. எ - று.

உ-ம். "மூரசுகெழுதாயத்தரசேதஞ்சம்" என்புழி அரசுகொடுத்தல் எளிதென எளிமைப்பொருள் உணர்த்தியவாறு காண்க. ()

உஎஉ. ஓடிவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

இஃது இசைநிறையாமாறு கூறுகின்றது.

இ - ள். ஓடிவென்பதுந் தெய்யவென்பதும் இசைநிறையிடைச்சொல்லாம். எ - று.

உ-ம். "மூதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்—விதைக்குறுவட்டி போதொடு பொதுள" எனவும் "சொல்லேன் றெய்ய நினெஞ்சு பெயர்ந்தே" எனவும் வரும். (உ உ)

உஎந. அந்தி லாங்க வசைநிலை யவற்று
ளந்தி லிடப்பொருட் டாகலு முரித்தே.

இஃது அசைநிலையாமாறும் பொருள்படுமாறுங் கூறுகின்றது.

இ - ள். அந்திலும் ஆங்கவுமாகிய இரண்டு இடைச்சொல்லும அசைநிலையாம். அவற்றுள் அந்தில் இடப்பொருளைக் குறித்து நிற்றற்கும் உரித்து. எ - று.

உ-ம். "அந்திற்கழலினன்கச்சினன்" "ஆங்கக்குயிலு மயிலுங்காட்டிக்—கேசவனெவிடுதுப் போக்கியோளே" எனவும "வருமே—சேயிழையந்திற் கொழுநற்காணிய" எனவும் வரும். அசைநிலையெனவும இடமெனவும் பொதுப்படக் கூறினுரேனும் ஏற்புழிக்கோடலான ஆங்க அசைநிலையாதல் கட்டுரைக்கண்ணெனவும் அந்தில் ஆங்கென்னும் இடப்பொருள் குறித்து வருமெனவுங் கொள்க.

உஎச. அம்மகேட் பிதனலு மசைநிலையு மாகும்.

இதுவும் அது.

இ - ள். அம்மவென்னும் இடைச்சொல் ஒருவனை ஒருவன் ஒன்று கேளென்று கேட்பித்தற்கண் வருதலும் அசைநிலையாய் வருதலும் பொருந்தும். எ - று.

உ-ம். "அம்மவாழிதோழி" எனவும் "செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாமை—கயநின்ற பொருள் கெடப் புரியறு நரம்பினும்—பயனின்று மன்றம்ம காமம்" எனவும் வரும்.

மியாய் இக முதலாய அசைநிலைகள் ஒருபொருள் உணர்த்தா வாயினும் முன்னிலைக்கண்ணல்லது வாராமையின் அவ்விடம் உணர் விக்குமாறுபோல அம்மவென்பதூஉம் ஒருபொருள் உணர்த்தாதா யினும் ஒன்றனைக் கேட்பிக்குமிடத்தல்லது வாராமையான் அப்பொ ருள் உணர்விக்குமென்பது விளக்கிய கேட்பித்தலென்றார். (உச)

உஎடு. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

இஃது அசைநிலையாமாறு கூறுகின்றது.

இ - ள். மாவென்னும இடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும். எ - று.

உ-ம். "புற்கை யுண்கமா கொற்கை யோனே" என வரும். சிறுபான்மை "ஓகமா தோழியவா தோமணிக் குரலே" என முன் னிலையசைச்சொல்லாயும "ஒக்கல்வாழ்க்கைதழீஇக்குமாகாலே" என முன்னிலையன்றி அசைச்சொல்லாயும வருதல "அவவச்சொல் லிற்கு" என்னும் பொருட்பாநனடையாற் கொளக. (உடு)

உஎசு. மியாயிக மோமதி யதனை யிதனை
வாழிய மாள வியாழமுன் னிலையசை.

இது முன்னிலை அசைநிலையாமாறு கூறுகின்றது.

இ - ள். [illegible]முழுவிய பதினெட்சொல்லும் முனனிலைமொ ழியைச் சார்ந்துவரினும் அசைசெறல்லாம். எ - று.

உ - ம். கேண்மியா "லெயன் செழுந்தழையன் சென்மியா வென்று—மலையகலான் வாடி லரும". என மியாவுங் "கன்பனி யன்றிக வென்றி தோழி" எனவுங் "காமஞ செப்பாது கண் டது மொழிமோ" என மோவும் "உரைமதி வாழியோ வலவ" "சென்மதி பெருமநிற் றகைக்குநர யாரே" என மதியுஞ் "செவிய றதனைநின்வெகுளி" என அதனையும "வேய்நரல் விடரக நியொன று பாடித்தை" என இதனையுங "காணிய வாழிய மலைச்சாரல்" என வாழியவுஞ் "சிறிது தவிர்ந்தெக மானநின் பரிசில ருய்ம்மார்" என மாளவுஞ் "செழுந்தே ரோட்டியும் வென்றீ" என ராரமும் "நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்—கைபுனை

வல்வி ஞணூர் தீயே" என யாழவும் முன்னிலையசைநிலையாய் வந்தவாறு காண்க. (உசு)

உஎஎ. யாகா பிறபிறக் கரோபோ மாதிருஞ்
சின்குரை யோரும் போலு மிருஙிட்
டன்றுந் தாந்தா னென்னு லென்ப
வன்ன பிறவு மசைநிலை மொழியே.

இஃது அசைநிலையாமாறு கூறுகின்றது.

இ - ள். யா முதலிய இருபத்தோர் இடைச்சொல்லும் அவை போல்வன பிறவுந் தாஞ் சார்ந்த சொல்லை அசைத்துநிற்குஞ் சொல்லாம். எ - று.

உ-ம். "யாபன்னிருவர்மாணக்கரகத்தியனர்க்கு" என யாவும் "அறநிழ லெனக் கொண்டாய் நின்குடை யக்குடைப்—புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா" எனக் காவும் "யாஞ்சில வரிசை வேண்டினே மாகத்—தான்பிற வரிசை யறிதலிற் றன்னுந்தூக்கி" எனப் பிறவும் "நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய" எனப் பிறக்கும் "நோதக விருங்குயி லாலுமரோ" என அரோவும் "எரியி னன்ன செந்தலை யன்றில—பிரியின் வாழா தென்போ தெய்ய" எனப் போவும் "விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே" என மாதுங் "கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே" என இருமுங "கண்ணும் படுமோ வென்றிநின் யானே" எனச் சின்னும் "பல்குரைத துன்பங்கள் சென்று படும்" எனக் குரையும் "அஞ்சுவ தோரு மறனே யொருவனை—வஞ்சிப்ப தோரு மவர்" என ஓரும் "மங்கல மென்பதோ ரூருண்டு போலு[illegible] எனப் போலும் "ஓரூற்ரு லென்கண் ணிமைபொருந்த வந்நிலையே—கூரார்வேன் மாறனெங் கைப்பற்ற—வோரா—ஙனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்—கனவுமொழிந் திழந்த வாறு" என இருந்தும் "நெஞ்சம் பிளந்திட்டு நேரா நடுவட்டன்—வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்" என இட்டுக் "தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே" என அன்றும் "பணியுமா மென்றும் பெருமை சிறுமை—யணியுமாந் தன்னூ வியந்து" என ஆமுந் "தகைம்கு குழைதந்தார் தாவில்சீர்த் தம்மடிகண்—முகைமிகு மலர்க்கண்ணி" எனத் தம்முஞ் "சாந்துய ரெவவ முழந்துறு தண்புன—னீந்தியோர் மாண்பினி தொன்றலி னீதான்" எனத் தானும் "அறிவார் யாரஃ திறுவழி யிறுகென" என எனவும் "ஈங்காயினவா லென்றிநின்

யானே" என ஆலுங் "குரைபுனற் கன்னி கொண்டிழிந்த தென் பவே" என என்பவும அசைநிலையாய் வந்தவாறு காண்க.

இனிப் பிறவும் என்றதனானே "தண்ணென்றினினே" "பெருந்துறைப் புனலேகா தன்னமா நீமற்றினினே" என இனினுங் "தேனமாரியன்னன்" "ஊனையுண்டருகும்" என ஐகாரமும் "நெருப்பமுற் சேர்ந்தக்கா னேயம் போல்வதூஉ—மெரிப்பச்சுட் டெவவனோ யாக்கும்" எனப் போல்வதுஞ் சிறுபான்மை அசைநிலையாதலும், ஒருவன் யானின்னேனென்றனும் நீயின்னையென்றனும் அவனின்ன னென்றனுங் கூறியவழிக் கேட்டான் ஆக ஆக ஆகல் ஆகல் என்னும் இவை உடம்படாமைக்கண்ணும் ஆதரமில்வழியும், ஒருவன் ஒன்று உரைப்பக்கேட்டான் என்பது என்பது என்னும் அது கன்குரைத்தற்கண்ணும் பிறருண்டெந் தனித்துநில்லாது இரட்டித்துப் பிரிவிலசைநிலையாதலுங் கொள்க. இன்னும் அதனானே போலும் போல்வதென்பன உரையசைக்கண்ண எனவுங் கொள்க. (உஎ)

உஎஅ. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்
வினையினும் பெயரினு நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினுந தெரிந்தனர் கொளலே.

இது முன்னர்க் கூறியவற்றிற்குப் பொருள்பற்றி வருவதோர் புறனடை கூறுகின்றது.

இ - ள். மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள் "அவவச் சொல்லிற் கவையவை பொருள்" என நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடையனவாயினும வினையொடும் பெயரொடும் ஆராய்ந்து உணரத் தோன்றி வேறுபொருளவாயும் அசைநிலையாயும் இசைநிறையாயுந் திரிந்துவரினும் ஆராய்ந்துகொள்க. எ - று.

எனவே, கூறியமுறையாய் வருதலே பெரும்பான்மையென்றும் வேறுபட வருதல் சிறுபான்மையென்றுஞ் சொல்லியவாறும். வினையொடும் பெயரொடுமென்றது அவை வேறுபொருள என்று உணர்தற்குச் சார்புகூறியவாறு. ஏகார இடைச்சொல் "ஏஎயிவ ளொருத்தி பேடியோ வென்றூர்" என இழிபுபொருண்மைக்கண் வருதலும் "ஏஎஇஃ தொத்த ணிலைன் றன்னெஞி" என இசைநிறையாதலும் "ஏஎயென்சொல்லியது" என அசைநிலையாதலும் "வாடா வள்ளியங் காடிறந் தோரே" எனச் செய்யுளீற்றின்கண் ணேயன்றி ஈற்றசை செய்யுளிடையும் வருதலுங் "கடல்போ லேரன்

றல் காடிறந்தோரே" எனச் செய்யுளிடத்து ஈற்றினின்று இசைக்கும் ஏயெனிறுதி கூற்றுவயின் ஓர் அளபாதலும் ஓகார இடைச்சொல் குற்றியோமகளே என ஐயப்பொருண்மைக்கண்ணுங் "கலக்கொண்டன் கள்ளென்கோ காழ்கொற்றன் சூடேன்கோ" என எண்ணுதற்கண்ணும் எனவென்பது "ஊரெனப்படுவது றையூர்" எனச் சிறப்பின்கண்ணும் வருதலுந் தஞ்சக்கிளவி அவ்ர்மக்குத் தஞ்சமல்லர் எனப் பற்றல்லரென வருதலுங் குரையென்னும் இடைச்சொல் அசைநிலையாதலேயன்றி "அளிதோ தானேயதுபெறலருங் குரைத்தே" என இசைநிறையாதலும இன் சாரியையாதலேயன்றிக் "காப்பி ஞெப்பி னூர்திபி னிழையின்" என அசைநிலையாதலும் இவ்வாறு பிறவாற்றுற் திரிந்து வருவனவுளவேல் அவையும் ஈண்டே அமைத்துக்கொள்க.

"ஏயிவ ளொருத்தி பேடியோ வென்னூர்" என்பதனை இசைநிறையென்பாரும் உளர். பொருள் உணர்த்திநிற்றலின் அங்ஙனமாகாமை அறிக.

செய்யுளின்பநோக்கி வினையினும் பெயரினுமென்னூர். (உ-அ)

உஎக. கிளந்த வல்ல வன்ன பிறவும்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இது சொற்பற்றி வருவதோர் புறனடை கூறுகின்றது.

இ - ள். மேற்சொல்லப்பட்டனவன்றி அவைபோல்வன பிறவினும் அவற்றையுங் கிளந்த சொல்லின் இயல்பான் உணர்ந்து கொள்க. எ - று.

கிளந்தவற்றையும் இன்னவென்று அறிவது வழக்கினுட் சார்பும் இடமுங் குறிப்பும் பற்றியன்றே? அதனாற் கிளவாதவற்றையும் அவ்வாறு சார்பும் இடமுங் குறிப்பும்பற்றி இஃது அசைநிலை இஃது இசைநிறை இது குறிப்பால் இன்னபொருள் உணர்த்துமென்று ஆணையானன்றி உணர்ந்துகொள்க என்பார் 'கிளந்தவற்றியலானுணர்ந்தனர்கொளலே' என்னூர்.

"குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே" எனத் தொறுத்தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமும் உணர்த்தி நிற்றலும் அதுதான் "நாடோறு நாடி முறைசெய்யா மன்னவ—னூடோறு நாடு கெடும்" என நீண்டுநிற்றலும் ஆவென்பது வியப்புள் வழியும் மறுத்தலுள்வழியும் ஆ அம்மா அம்மா என இரக்கமுள்வழி

யும் பொருள் உணர்த்தலும் பொள்ளெனப் பொம்மெனக் கது
மென என்பனபோல்வன விரைவுங் ஙொம்மென என்பது பெருக்க
மென்னுங் குறிப்பும் முறையே உணர்த்தலும் "ஔஔ வொருவன்
றவஞ்செய்த வாறு" என்றவழியும் ஒருதொழில் செய்வாஅ ஔஔ
இனிச்சாலும் என்றவழியும் ஔகாரம் பிரிவிலசைநிலையாய்ச் சொல்
லுவான் குறிப்பிற்குத் தரும் ஓசைவேறுபாட்டான் முறையே சிறப்
பும் மாறுபாடும் புலப்படுத்தலும் ஔஉ ஒருவன் இரவலர்க்கீந்தவாறு
ஔஉ இனிவெருளல் எனவும் ஔ அவன்முயலுமாறு ஔ இனித்
தட்டுப்புடையல் எனவும் முறையே அதுதான் அளபெடுத்தலும்
அளபெடாதும் வந்தவழியுஞ் சிறப்பும் மாறுபாடும் புலப்படுத்தலும்
இனி ஓகாரமும் ஓஓ ஒருவன்றவஞ்செய்தவாறு ஓஓ இனிச்சாலும்
ஓஓ ஒருவன் இரவலர்க்கீந்தவாறு ஓஓ இன்வெருளல் எனவும் ஓ
அவன்முயலுமாறு ஓ இனித்தட்டுப்புடையல் எனவும் முறையே
பிரிவிலசைநிலையாயும் அளபெடுத்தும் அளபெடாதும் வந்தவழியும்
அங்ஙனம் பொருட்புலப்படுத்தலும் அவை பிற பொருள்படுமாறும்
ஒருவன் ஒன்று உரைத்தவழி ஙனறே ஙன்றே அன்றே அன்றே
என அதிக்கி அதற்கு ஏவலாமைக்குறிப்பு உணர்த்தலும் அன்றே
என்பது அடுக்காது அவனன்றேயென நின்றவழித் தெளிவுமுதலா
கிய பிறபொருளுப்படுதலும் அந்தோ அன்னே என்பன அடுக்கியும்
அடுக்காதும் இரங்கற்குறிப்பு உணர்த்தலும் அதோ அதோ அச்சோ
அச்சோ ஒக்கும் ஒக்கும் என்பன இரங்கற் குறிப்பு உணர்த்தலும்
"அன்னவலமருமாருயிரும்" என அன்னு இரங்கற்குறிப்பு உணர்த்
தலும் "அஆவிழந்தானென்றெண்ணப்படும்" என்பதுஉம் அப்பொ
ருள்படுதலுப் மேல் எழுததோத்தினுட் கூறிய அக்கொற்றன் அவன்
முதலியவும் ஆங்கு ஙாங்கு என அவை ஈண்டுவந்தனவும் யாவன் எப்
பொருள் உண்கா எவன் என்பனவும் முறையே சுட்டுப்பொருளும்
வினுப்பொருளும் உணர்த்திநிற்றலும் ஆன் ஏன் ஓன் இத்தொடக்
கத்து எழுத்துச்சாரியையும் எடுத்தோதாதன பிறவுங் கொள்க.

இனி ஆரென்னும் இடைச்சொல் "பெயரி னுகிய தொகை
யுமா ருளவே" என உம்மைமுன்னரும் "எல்லா வுயிரொடுஞ் செல்
லுமார் முதலே" என உம்மீற்றுவினைமுன்னரும் அசைநிலையாய்
வருதலும் "மலிநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்" எனவும்
"தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே—யுறலோ டாங்கைம் புல
னென மொழிப" எனவும் சொற்றொறும் வாராது எண்ணேகாரம்
இடையிட்டுவரினும் எண்ணுதற்பொருட்டாதலுஞ் சாத்தனும்வந்
தான் கொற்றன் இனிவரலும் உரியன் என எச்சவும்மை நின்றவழி
எஞ்சுபொருட்கிளவியாம் எதிர்மறையும்மைத்தொடர் வந்து தம்முள்

மயங்குதலில எனவும் "பாட்டிங் கோட்டியு மறியாப் பயமி—றேக்கு மரம்போ னீடிய வொருவன்" எனவும் "இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி" எனவும் உம்மை எண்ணின்கண் இரண்டா வதும் ஏழாவதுந் தொகுமெனவுந் தொகுதல் வரையப்படாதென வும் ஏனையெண்ணின்கண் வரையப்படுமெனவுங் கொள்க. இவ வாறு பிற வருவன உளவேல் அவையும் இப்புறனடையானே அமைத்துக்கொள்க. (உசு)

மூன்றாவது இடைச்சொல்லியல் முற்றிற்று.

சஎவது. உரிச்சொல்லியல்.

உஅ0. குறிப்பும் பண்பு மிசையுந் தோற்றிப்
பெயரும் வினையும போன்றவை யிரண்டற்கு
மடியு மாகி யவறறேற் புழிகின
ரொருபொருட் குரிமையும் பலபொருட் குரிமையு
மூடைய வாகி யுணரா தவற்றை
யுணர்ந்தவை சார்த்தி யுணர்வன வுரிசசொல்.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே உரிச்சொற்களது இயல்பு உணர்த்திற்றுகலான் இவ்வோத்து உரிச்சொல்லியலென்னும் பெயர்த்து. இதனுள் இத்தலைச்சூத்திரம் உரிச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துகின்றது.

இ - ள். குறிப்பும் பண்பும் இசையுமாகிய மூன்றுபொருண்மையும் உணர்த்திப் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்போலத் தம்மைக் காட்டி அவவிருசூற்றுமொழிக்கும் முதனிலையுமாய் அவற்றின்கண் முன்னுகப் பின்னுகத் தாம் நிற்றற்கு உரிய நிலைக்களங் களினின்று பலசொல் ஒருபொருட்கு உரியவாதலையும் ஒருசொல் ஒருபொருட்கு உரித்தாதலையன்றிப் பலபொருட்கு உரித்தாதலை யும் உடையவாகிப் பெயர்வினைபோல சாறுபற்றிப் பொருளுணர்த்த லாகாமையிற் பயிற்சியின்மையாற் கேட்போனுற் பொருளுண ரப்படாத சொற்களைப் பயிற்சியுண்மையாற் பொருளுணரப்பட்ட சொற்களோடு சார்த்தி உணரப்படுவன மூற்கூறிப்போந்த உரிச் சொற்களாம். எ - று.

குறிப்புப் பரப்புடைமையின் முற்கூறினர். குறிப்பு மனத்தாற் குறித்து உணரப்படுவது. பண்பு பொறியான் உணரப்படுங் குணம்.

குறிப்பும் இசையும் பண்பின் பகுதியாய் அதன்கண் அடங்குமே னும் விளங்குதற் பொருட்டு வேறுகூறினர்.

உ-ம். கறுப்பு சிவப்பு என்பன போல்வன பெயர்ப்போலி. உறுதவ என்பன போல்வன வினைப்போலி. துவைத்தல் சிலைத்தல் என்பன போல்வன பெயர்க்கு முதனிலையாயின. துவைக்கும் சிலைக் கும் என்பன போல்வன வினைக்கு முதனிலையாயின. உறுபுகழ் நனி பேதை என்பன போல்வன பெயர்முன் நின்றன. நனிசொற்முன் தவச்சென்முன் என்பன போல்வன வினைமுன் நின்றன. "திரிகாய விடத் தேரொடு காருடைபோகி" "கயலற லெதிரக் கடும்புனல் சாஅய்" என்பன போல்வன பெயர்ப்பின் நின்றன. "மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல்" "வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கத்து" என்பன போல்வன வினைப்பின் நின்றன. உறுதவ என்பன போல்வன பலசொல் ஒருபொருட்கு உரியவாயின. கடி நனி என்பன போல்வன ஒருசொற் பலபொருட்கு உரிய வாயின. பிறவும் அன்ன. பொருட்கு உரியவாகிய குறிப்பு முதலி யவற்றை உணர்த்திநிற்றலில் உரிச்சொல்லாயிற்று. இவ்வாறன்றிப் பெரும்பாலுஞ் செய்யுட்கு உரித்தாய்வருதலின் உரிச்சொல்லா யிற்றென்பாரும் உளர். (க)

உஅக. உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வாகலுஞ்
செல்ல லின்ன லின்னுமை செப்பலு
மலமர றெருமரல் சுழற்சி சாற்றலு
மழவுங் குழவு மிளமைக் கேற்றலுங்
கூர்ப்புங் கழிவு முள்ளது சிறத்தலுங்
கதழ்வுந் தூணவும் விரைவு காட்டலு
மதிர்வும் விதப்பு நடுக்கஞ் செய்தலுங்
கெடவரல் பண்ணை விளையாட் டுணர்த்தலு
நம்பு மேவு நசையின வாகலு
மோய்த லாய்த னிழத்தல் சாய்த
லுள்ளத னுணுக்க முணரக் காட்டலும்
பிணையும் பேணும் பெட்பின வாகலும்
பையுளுஞ் சிறுமையு நோய்கூ றுதலும்
வெறுப்பு முறப்புஞ் செறிவினை விளம்பலு
மிலம்பா டொற்கம் வறுமை செப்பலு

ளெமிர்தலும் பாய்தலும் பரத்தலே யுரைத்தலும்
போகா மூருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சங் கூறலுங்
கறுப்புஞ் சிவப்பும் வெகுளி சுட்டலும்
5 பாவும் பழிச்சும் வழுத்தினகுறிப் புணர்த்தலும்
வரன்முறை யென்மனார் மரபுணர்ந் தோரே.

இது நிறுத்த முறையானே குறிப்புணர்த்துவனவற்றுட் சாம் பலவாய்நின்று ஒருபொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவை யென்கின்றது.

இ - ள். "உறுபுனறந்துலகூட்டி" எனவும் "ஈயாது வீயுமு யிர்தவப் பலவே" எனவும "வந்துநனி வருந்தினே வாழிய நெஞ் சே" எனவும உறுவெனத் தவவென நனியென வரும் மூன்றுரிச சொற்களும் மிகுதியென்னும் உரிச்சொற்காட்டுங் குறிப்புப்பொ ருளே உடையவாகலும் "மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல் லல்" எனவும் "வெயில்புறந்தரூஉமின்னலியக்கத்து" எனவும் செல் லலும் இனனலாகிய இரண்டுரிச்சொற்களும் இன்னுமையென் னும் உரிச்சொலுணர்த்துங் குறிப்புப்பொருள் உணர்த்தலும் "அலம ரலாயம்" எனவும் "தெருமர லுள்ளமொ டன்னே துஞ்சாள்" என வும் அலமரலுந் தெருமரலுமாகிய இரண்டுரிச்சொற்களும் மனத்தடு மாற்றமாகிய சுழற்சியென்னும் உரிச்சொல்லுணர்த்துங் குறிப்பு உணர்த்தலும் "வரைபுரைமழகளிறு" எனவும் "குழக்கன்று" எனவும் மழவுங் குழவுமாகிய இரண்டுரிச்சொற்களும் இளமையென னும் உரிச்சொல்லுணர்த்துங குறிப்பு உணர்த்தற்குப் பொருந்துத லும் "இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத் துனிகூ ரெவவ ழைமாடு" எனவும் "சினனே காமங் கழிகண் ணோட்டம்" எனவும் கூர்ப்புங் கழிவுமாகிய இரண்டும் முன சிறவாது உள்ளதொன்று சிறத்தலாகிய குறிப்பு உணர்த்தலுங் "கதழ்பரிநெடுந்தேர்" எனவும் 'துணைபரி துரக்குந் துஞ்சாச் செலவின்" எனவும கதழ்வுந் துணை வுமாகிய இரண்டும் விரைவென்னுங் குறிப்பு உணர்த்தலும் "அதிர வருவதோர்நோய்" எனவும் "விதுப்புற வறியா வேமக் காப்பினை" எனவும் அதிர்வும் விதுப்புமாகிய இரண்டும் நடுக்கமாகிய குறிப்பு உணர்த்தலுங் "கெடவரலாயமொடு" எனவும் "பண்ணைத் தோன றியவெண்ணுன்கு பொருளும்" எனவும் கெடவரலும் பண்ணையும் வினையாட்டுக்கருத்தாகிய குறிப்பு உணர்த்தலும் "நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி" எனவும் "பேரிசை நவிரமேஎவுங் காரியுண்டி"

எனவும் நம்பும் ஏவுமாகிய இரண்டும் நசையென்னுங் குறிப்பினை உடையவாதலும் "வேனி ழுழந்த வறிதுயங் கோய்களிறு" எனவும் "பாய்ந்தாய்ந்ததனை" எனவும் "நிழத்த யானை மேய்புலம் படாஅ" எனவும் "கயலறலெதிரக்கடும்புனல்சாஅய்" எனவும் ஓய்தலும் ஆய்தலும் நிழத்தலுஞ் சாய்தலுமாகிய நான்குரிச்சொற்களு முன் நுணுகாது உள்ளதொன்று நுணுகுதற் குறிப்பினை அறிய உணர்த்தலும் "அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்" எனவும் "அமரர்ப் பேணியு மாகுதி யருத்தியும்" எனவும் பிணையும் பேணுமாகிய இரண்டினிச்சொற்களும் பெட்பின்பொருளாகிய புறந்தருதலென்னுங் குறிப்பினை உடையவாதலும் "பையுண் மாலைப் பழுமரம் படரின்' எனவும் "சிறுமை யுறுப செய்பறி யலரே" எனவும் பையுளுஞ் சிறுமையுமாகிய இரண்டும் நோயென்னுங் குறிப்பு உணர்த்தலும் "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனவும் "உறந்த விஞ்சி யுயர்நிலை மாடத்து" எனவும் வெறுப்பும் உறப்புமாகிய இரண்டுஞ் செறிவென்னுங் குறிப்பினை உணர்த்தலும் "இலம் பாடுகாணுத்தரும" எனவும் "ஒக்கலொற்கஞ்சொலிய" எனவும் இலம்பாடும் ஒற்கமுமாகிய இரண்டும் வறுமையென்னுங் குறிப்பினை உணர்த்தலுங் "திருமணன் ஞெமிரிய திருநகர் மூற்றத்து" எனவும் "புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதர" எனவும் ஞெமிர்தலும் பாய்தலுமாகிய இரண்டும் பரத்தலாகிய குறிப்பினை உணர்த்தலும் "மன்ற மராத்த பேமுதிர் கடவுள்" எனவும் "நாகல்லார்க் கெதிர் படவமிழ்ந்தே" எனவும் "உருமில்சுற்றமொடு" எனவும் பேழும் நாமும் உருமுமென்று சொல்ல வருகின்ற ஐவியாகிய அம்முறைமையினையுடைய மூன்று உரிச்சொற்களும் அச்சமாகிய குறிப்பு உணர்த்தலும் "நிற்கறுப்பதோரருங்கடிமுனையன்" எனவும் "நீவிவர் நிறுத்த நீர்கழி பாக்கம்" எனவும் கறுப்புஞ் சிவப்புமாகிய இரண்டும் வெகுளியாகிய குறிப்பு உணர்த்தலுங் "கல்லே பரவி னல்லது—நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே" எனவும் "செறிவளை விறலியர் கைதொழூஉப் பழிச்சி—வதிதுகெறியெரீஇ" எனவும் பரவும் பழிச்சுமாகிய இரண்டும் வழுத்துதலாகிய உரிச்சொலின் குறிப்பு உணர்த்தலும் வரலாற்றுமுறைமையென்று கூறுவர் உரிச்சொற்கள் பொருளுணர்த்துந் தன்மையை அறிந்தோர். எ-று.

இலமென்னும் உரிச்சொற் பெரும்பான்மையும் பாடென்னுஞ் தொழில்பற்றியல்லது வாராமையின் இலம்பாடென்றார். (உ)

உஅஉ. ஏற்ற நினைவுந் துணிவு மியம்பலும்
விறப்பே செறிவும் வெருவலும விளக்கலும்

பணையே பிழைத்தலும் பெருத்தலு மிசைத்தலும்
படரே யுள்ளலுஞ் செலவுஞ் சொல்லலுங்
தாவே வலியும் வருத்தமுங் தழுவலுஞ்
செழுமை வளனுங் கொழுப்புஞ செப்பலும்
விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையு
நனவே களனு மகலமுஞ் செய்தலு
மதவே மடனும் வலியு மன்றி
மிகுதியும் வனப்பு மொருவழி விளக்கலுங்
கடியென் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்க
மிகுதி சிறப்பே யச்சமுங் தேற்றே
டையமுங் கரிப்பு மணமு மறைதலு
முறையென மொழிப முறையுணர்ந் தோரே.

இது குறிப்பு உணர்த்துவனவற்றுட் தாம் ஒன்றுய் நின்று பல பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவையென்கின்றது.

இ-ள். "கானலஞ் சிலம்பன் கொடுமை யேற்றி" எனவும் "ஏற்றமிலாட்டியென்னேமுற்றுள்" எனவும் ஏற்றமென்னும் உரிச் சொல் நினைவுந் துணிவுமாகிய குறிப்பு உணர்த்தலும் "விறந்த காப் பொடுண் ணின்று வலியுறுத்து" எனவும் "அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல" எனவும் விறப்பென்னும் உரிச்சொல் செறிவும் வெருவலுமாகிய குறிப்பு உணர்த்தலும் "அமர்க்கணமா னருநிற மூழ்காது—பணைத்துவீழ் பகழிப் போக்கு நினைந்து காண்" எனவும் "வேய்மருள் பணைத்தோ ணெகிழச்சேய் நாட்டு" எனவும் பணை யெனனும் உரிச்சொற் பிழைத்தலும் பெருத்தலுமாகிய குறிப்பு உணர்த்தலும் "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி" எனவும் "கறவைகன்றுவயிற்படர" எனவும் படரென்னும் உரிச்சொல் உள் ளுதலுஞ் செலவுமாகிய குறிப்பு உணர்த்தலுங் "தாவினன்பொன் றைஇயபாவை" எனவும் "கருங்கட் டாக்கலே பெரும்பிறி தூற் றென" எனவும் தாவென்னும் உரிச்சொல் வலியுங் வருத்தமுமாகிய குறிப்பு உணர்த்தலுஞ் "செழுஞ்செயநெல்லின்" எனவும் "செழுந் தடி தின்ற செந்நா யேற்றை" எனவும் செழுமையென்னும் உரிச் சொல் வளனுங் கொழுப்புமாகிய குறிப்பு உணர்த்தலும் "விழுமி யோர்க் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு" எனவும் "வேற்றுமை யில்லா விழுத்தினைப் பிறந்து—வீற்றிருந் தோரை யெண்ணுங்

காலே" எனவும் "நின்னுறுவிழுமங்களோக்தோன்" எனவும் விழுமமென்னும் உரிச்சொல் சீர்மையுஞ் சிறப்பும் இம்பையுமாகிய குறிப்பு உணர்த்தலும் "நனவுப்புகுவிறலியிற்றேர்றுநாடன்" எனவும் "நனந்தலேயுலகம்வணேஇய" எனவும் நனவென்னும் உரிச்சொல் களனும் அகலமுமாகிய குறிப்பு உணர்த்தலும் "பதவு மேய்ந்த மதவுநடை நல்லான்" எனவும் "கயிறிகெதச்சேப்போன்மதமிக்கு" எனவும் மதவென்னும் உரிச்சொல் மடனும் வலியுமாகிய குறிப்பு உணர்த்தலே யன்றி "மதவிடை" எனவும் "மாதர் வாண்முக மதைஇய நோக்கே" எனவும் உள்ளமிகுதியும் வனப்புமாகிய குறிப்புஞ் சிறுபான்மை உணர்த்தலுங் கடியென்னும் உரிச்சொற் "கடிந்த கடிந்தொராரர் செய்தார்க்கு" என வரைவுங் "கடிதுணேப்பகழி" எனக் கூர்மையுங் "கடிமரந்தடியுமோசை" எனக் காவலுங் "கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்" எனப் புதுமையுங் "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" என விரைவுங் "கடும்பகன்ஞாயிறு" என விளக்கமுங் "கடுங்கா லொற்றலிற் சுடர்நிறந் தூருத்து" என மிகுதியுங் "கடுநட்பு" எனச் சிறப்புங் "கடியுருமீனூறிக்கடிப்புச்சேர்பு" என அச்சமுங் "கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வ நோக்கிக்—கடுஞ்சு டருகுவனிங்கே கானலின்" எனப் புறத்தன்றிப் தெய்வமுதலாயினவற்றின்முன் நின்று தெளிவித்தலுமாகிய குறிப்போடுகூடச் சிறுபான்மை "கடுத்தன ளல்லளோ வன்னே" என ஐயமாகிய குறிப்புங் "கடிபிளகுதின்றகல்லாமந்தி" எனக் கரிப்புங் "கடிகாதுபூந்துணர்" என மணமுமாகிய பண்பும் உணர்த்தலும் வரலாற்றுமுறைமையென்று சொல்லுவர் உரிச்சொற்கள் பொருளுணர்த்தும் முறைமையை உணர்ந்தோர். எ - று.

மேற் பண்பு உணர்த்துதற்குத் தோற்றுவாய் செய்வார் கரிப்பும் மணமுமாகிய பண்பும் உடன்கூறினர். (ங)

உஅங. குருவுங் கெழுவு நிறனு குதலு
நொசிவு நுழைவு நுணங்கு நுண்மைம
பொருள வாகலும பொருந்து மென்ப.

இது நிறுத்தமுறையானே பண்பு உணர்த்துவனவற்றுட் தாம் பலவாய் நின்று ஒருபொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவை யென்கின்றது.

இ - ள். "குருமணித்தாலி" எனவும் "நறுஞ்சாந்து புலர்ந்த கேழ்கிள ரகலம்" எனவும் குருவுங் கெழுவுமாகிய இரண்டு உரிச்சொற்களும் நிறனென்னும் பண்பு உணர்த்தலும் "நொசிபெ மருங்

குற் கஞ்வுறக் கைதொழா" எனவும் "இழைமருங் கறியா துழைநூற் கலிங்கம்" எனவும் "துணங்குதுஞ்னுடக்கம்போல" எனவும் கொஞ்வும் நுழைவும் துணங்குமாகிய மூன்றும் நுண்மையாகிய பண்பு உணர்த்தலும் பொருந்துமென்று கூறுவர் ஆசிரியர். எ - று. (ச)

உசச. வார்தல் போக லொழுகன் மூன்று
கோர்வு நெடுமையு நிலவக் காட்டலுங்
தடவே பெருமையுங் கோட்டமுஞ் சாற்றலுங்
கயவே பெருமையு மெனமையுங் கருதலு
நளியே பெருமையுஞ் செறிவு நவிற்றலு
மியல்பென மொழிப வியல்புணர்ந தோரே.

இது பண்புணர்த்துவனவற்றுட் தாம் ஒன்ருய் நின்று பல பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவையென்கின்றது.

இ - ள். "வார்ந்திலங்கும்வையெயிற்றுச் சின்மொழியரிவை யை" எனவும் "தெள்ளற நுழ்இய வார்மண லடைகரை" எனவும் "போகுகொடிமருங்குல்"எனவும்"திரிகாயவிடத்தேரொடுகாருடை போகி" எனவும் "ஒழுகுகொடிமருங்குல்" எனவும் "மால்வரையொ ழுகியவாழை" எனவும் வார்தலும் போகலும் ஒழுகலுமாகிய உரிச் சொற்கள் நேர்மையும் நெடுமையுமாகிய பண்பு உணர்த்தலும "வலி துஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்" எனவும் "சடமரும்பெரு மை" எனவும் தடவென்னும் உரிச்சொல் பெருமையுங் கோட் டமுமாகிய பண்பு உணர்த்தலும் "இரும்பிடி கன்றெடு விரைஇக் கயவாய்ப்—பெருங்கை யானை" எனவும "கயந்தலைமடப்பிடி" எனவும் கயவென்னும் உரிச்சொற் பெருமையும் மென்மையுமாகிய பண்பு உணர்த்தலும் "நளிமலைநாடன்" எனவும் "ஞெலிப்புவல் லேற் றின்றலைக்கை தந்துநீ—னளிந்தனை வருத லுடன்றன ளாகி"எனவும் நளியென்னும் உரிச்சொற் பெருமையுஞ் செறிவுமாகிய பண்பு உணர்த்தலும் இயல்பென்று சொல்லுவர் இலக்கணங்களே அறிந் தோர். எ - று. (டு)

உஅடு. கமபலை சும்மை யரவங் கண்ணலுங்
துவைதுதல சிலைத்த லியம்பலிசை சுட்டலு
முரிய வெனமனு ருணாந்திசி னோரே.

இது கிறுத்தமுறையானே இசை உணர்த்துவனவற்றுட் தாம் பலவாய் நின்று ஒருபொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவை யென்கின்றது.

உரியியல். உடுங

இ - ள். "களிறுகவர்கம்பலேபோல" எனவும் "துனிமழை தோயுந் தண்பரங் குன்றிற்—கலிகொள் சும்மை யொலிகொ ளாயம்" எனவும் கம்பலியுஞ் சும்மையுமாகிய இரண்டு உரிச்சொற்களும் அரவமாகிய இசைப்பொருண்மையை உணர்த்தலும் "முரசுகடிப் பிகுப்பவும் வரிவளை துவைப்பவும்" எனவும் "ஆமாநல்லேறுகிலேப்ப" எனவும் "கடிமரந் தடியு மோசை தன்னூர்—நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப" எனவும் துவைத்தலுஞ் சிலேத்தலும் இயம்பலுமாகிய உரிச்சொற்கள் மூன்றும் இசையென்னும் இசைப்பொருண்மை உணர்த்தலும் உரியவென்று கூறுவர் அறிந்தோர். எ - று. (சு)

உஅசு. கலியே யரவமுஞ் செருக்குங் காட்டலு
மழுங்க லரவமு மிரக்கமுங் கேடு
மிரங்க லிசையுங் கழிந்தபொருட் டாகலுஞ்
சிவணு மென்மனா தெளிந்திசி னோரே.

இது நிறுத்தமுறையானே தாம் ஒன்றாய் நின்று பலபொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் இவையென்கின்றது.

இ - ள். "கலிகொ ளாய மலிதொகு பெடுத்த" எனவும் "கலி கொள் சும்மை யொலிகொ ளாயம்" எனவும் கலியென்னும் உரிச்சொல் அரவமாகிய இசைப்பொருண்மையுஞ் செருக்காகிய குறிப்புப்பொருண்மையும் உணர்த்தலேயும் "உயவுப் புணர்த்தன்றிவ வழுங்க லூரே" எனவும் "பழங்கண் ணேட்ட முதலிய—வழுங்கினெனல்லலோ வயர்ந்தனன் மன்னோ" எனவும் "சூணனமுங்கக் குற்ற முழைகின்று கூறுஞ் சிறியவர்கட்கு" எனவும் அழுங்கலென்னும உரிச்சொல் அரவமாகிய இசைப்பொருண்மையும இரக்கமுங் கேடுமாகிய குறிப்புப்பொருண்மையும் உணர்த்தலும் "ஏறிரங் கிருளிடையிரவினிற் பதம்பெறூன்" எனவும் "செய்திரங்கா வினைச் சேண்விளங்கும் புகழ்" எனவும் இரங்கலென்னும் உரிச்சொல் இசைப்பொருளும் ஒருபொருளது கழிவாற்பிறந்த வருத்தமாகிய குறிப்புப்பொருளும் உணர்த்தலும் பொருந்துமென்று கூறுவர் அறிந்தோர். எ-று.

இசையன்றிக் குறிப்பு உணர்த்தினும் பலபொருட்டாதல்பற்றிக் குறிப்பும் உடனேதினர். (எ)

உஅள. மெய்பெறக் கிளந்த வரிச்சொ லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி

யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

இஃது உரிச்சொன்மாட்டு நிகழ்வதோர் ஐயம் அகற்று கின்றது.

இ - ள். இச்சொல் இப்பொருட்கு உரித்தென மேற்கூறப் பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும் அவற்றின் முன்னும் பின்னும் வரும் மொழிகளே ஆராய்ந்து அம்மொழிகளுட் தமக்குப் பொருந் தும் மொழியோடு கூட்டிப் பொருளுணர்த்துக. அவ்வாறு உணர்த் தவே வரலாற்றுமுறைமையாற் தத்தமக்கு உரிய பொருள் விளங் கித்தோன்றும். எ - று.

இஃது என்சொல்லியவாறோவெனின்;—"உறுதவ நனி என வரூஉம் முன்று—மிகுதி செய்யும் பொருள வென்ப" எனவும் "செல்லல் இன்னல் இன்னுமையே" எனவும் ஓதியவழி அவை பயின்ற சொல்லன்மையான் இவை மிகுதியும் இன்னுமையும் உணர்த்துமென்று ஆசிரியன் ஆணையாற் கொள்வதல்லது வரலாற்று முறைமையாற் பொருள் உணர்த்தப்படாவோ என்று ஐயுறுவார்க்கு "உறுகால்" "தவப்பல" "நனி சேய்த்து" எனவும் "மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல்" எனவும் முன்னும் பின்னும் வருஞ் சொல் நாடி அவற்றுள் இச்சொல்லோடு இவ்வுரிச்சொல் இயையுமென்று கடைப்பிடிக்கத் தாம் புணர்த்த சொற்கு ஏற்ற பொ ருள் விளங்குதலின், உரிச்சொல்லும் வரலாற்றுமுறைமையாற் பொருள் உணர்த்துமென்பது பெறப்படுமென ஐயம் அகற்றியவா றெனக் கொள்க. வரலாற்றுமுறைமையாற் பொருளுணர்த்தாவா யிற் குழுவின்வந்த குறிஞ்சிலவழக்குப்போல இயற்சொல்லெனப்ப டாவாமென்பது. (அ)

உஅஅ. கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோனறினு மவற்றொடு கொளலே.

இது முற்கூறிப்போந்த உரிச்சொற்கு ஆவதோர் பொருட்புற னடை கூறுகின்றது.

இ - ள். முன்னும் பின்னும் வருபவை நாடியவழி, முற்கூறிய உரிச்சொற்களின் பொருணிலைமையல்லாத வேறுபொருள் தோன் றுமாயினும் முற்கூறப்பட்டனவற்றோடு அவற்றையும் உரிச்சொல் லாகக் கொள்க. எ - று.

"தாரவாதவில்லேவினைகளும்" என்புழித் தாகேடும் "நுணங்குகொடிமின்" என்புழி நுணங்கு நுடக்கமும் உணர்த்தியவாறு காண்க. பிறவும் அன்ன. (சு)

உஅசு. எழுத்துப் பிரிந்திசைத்த லிவணியல் பின்றே.

இஃது உரிச்சொற்கு எழுத்துப்பிரிந்து இசைத்தலின்றெனவும் ஐயம் அகற்றுகின்றது.

இ - ள். முதனிலையும் இறுதிநிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்துதல் உரிச்சொலிடத்து இயல்பு டைத்தன்று. எ - று.

பிரிந்திசைத்தல் இவணியல்பின்றெனவே, திரிந்திசைத்தல் இவண் இயல்புடைத்தென்பதூஉம் பிரிந்திசைத்தல் பிறண்டு இயல்புடைத்தென்பதூஉங் கொள்க. உரிச்சொல் எழுத்துத் திரிந்திசைத்தன "நனந்தலையுலகம்" எனவும் "பதவுமேய்ந்த மதவுநடை நல்லான்" எனவும் வருவன போல்வன. பிறவும் அன்ன.

எழுத்துப்பிரிந்திசைத்தன நடந்தான் நடந்தாள் என்பன போலும் வினைச்சொல்லுந் தமன் தமள் என்பன போலும் ஒட்டுப் பெயருமாம். அவை முறையே வினையியலுள்ளும் பெயரியலுள்ளுங் கூறிப்போந்தன. பிரிதலும் பிரியாமையுந் தாமாகப் பொருளுணர்த்துவனவற்றிற்கேயாகலிற் கூறைகோட்படுதல் கடவுளர்க்கு எய்தாதவாறுபோல, இடைச்சொற்கு இவ்வாராய்ச்சி எய்தாமை அறிக. தவ நனி என்னுந் தொடக்கத்தன குறிப்புவினையெச்சம்போலப் பொருளுணர்த்தலின், அவைபோலப் பிரிக்கப்படுஞ் சொல்லோ என்று ஐயுறுமையை அமைத்து அகற்றியவாறு இச்சூத்திரத்திற்குக் கருத்தாதல் அறிக. (கo)

உகo. அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
மூரிசசொ லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்.

இஃது உரிச்சொற்கு ஆவதோர் சொற்புறனடை கூறுகின்றது.

இ - ள். சொல்லப்பட்டனவேயன்றி அவைபோல்வன பிறவு மாய் ஈறுபற்றி உணர்த்தற்கு அடங்காது பலவாற்ருனும் பரந்துவ ரும் உரிச்சொலெல்லாம் பொருளைச் சொல்லின்றி அமையாக் குறைபாடு தீரப் பொருளை அதனெடு கூட்டி உணர்த்தக் குறிப்பும் பண்பும் இசையும் பற்றித் தாம் இயன்ற நிலத்து இத்துணையென வரையறுத்து உணரும் எல்லை தமக்கின்மையான் எஞ்சாமற் கிளத் தல் அரிதாகலின் அவற்றை அறிதற்கு ஓதிய வழிகளைச் சோராமல் மிகவுங் கடைப்பிடித்துப் பாதுகாவலாகிய ஆணையிற் கிளந்தவற்றி யல்பானே அவற்றையும் பருதியுற உணர்கவென்று சொல்லுவர் புலவர் ஆதலால் யானும் அவவாறே கூறினேன். எ - று.

ஆதலால் யானும் அவவாறே கூறினேனென்பது குறிப்பெச் சம். எனவே, "பெயரும் வினையும் போன்று" எனவும் "முன்னும் பின்னும் வருபவை நாடி" எனவும் யான் கூறிய நெறியைச் சோரா மற் கடைப்பிடித்து "எச்சொல்லாயினும் பொருள் வேறுகிளத்தல்" எனவும் "ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த—றத்த மரபிற் ரூன்றுமன் பொருளே" எனவும் என்னுற் தரப்பட்ட பாதுகாவ லாணையாற் "கிளந்தவற் றியலாற் பாங்குற வுணர்க" என்பது இதன்கருத்தாயிற்று. உரிச்சொல்லெல்லாங் கூட்ட வரம்பு தமக் கின்மையிற் கடைப்பிடித்து இயல்பானே இவற்றை உணர்க என வினைமுடிபுசெய்க.

"உருகெழு ஞாயிற் ருெண்கதிர் .பிசைந்த" என உரு உட்கும் "புரைய மன்ற புரையோர் கேண்மை" எனவும் "புரைதீர் கேள் விப் புலவ ரான" எனவும் புரை முறையே உயர்வுங் குற்றமும் "மல்லன்மார் படுத்தனம் புல்லுமா றெவனே" என மல்லல் வள னும் "ஏகல் லடுக்கத் திருளனைச் சிலம்பின்" என ஏ பெருக்கமும் "வீசும்புகந் தாடா திரைதேர்ந் துண்ணுது" என உகப்பு உயர்வும் "உவந்துவந்—தார்வ நெஞ்சமொ டாய்நல னளிஇ" என உவப்பு உவகையும் "பயவாக்—களரனையர் கல்லா தவர்" எனப் பயப்பு பய னையும் "வளமலி யுறுக்கு முளமி லாளரோ—டியைந்த கேண்மை யில்லா னியரோ" என இயைபு கூட்டமும் "வயக்கஞ்சால்சீர்த்தி" எனச் சீர்த்தி மிகுபுகழும் "இரவரன்மாலையனே" என மாலை இயல் புந் "துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை" எனத் தீர்தல் விடலும் "பழுதுகழிவாழ்நாள்" எனப் பழுது பயமின்மையும் "மண்முழு தாண்டநின் முன்னேர் போல" என முழுது எஞ்சாமையும் "வம்பு மாரியைக் காரென மதித்தே" என வம்பு நிலையின்மையும் "மாதர் கொண் மாநோக்கின் மடநல்லாய்" என மாதர் காதலும் "புலிப்பற்

கோத்த புலம்புமணித் தாலி" எனப் புலப்பு தனிமையும் "ஆரியர் துவன்றிய பேரிசை யிமையம்" எனத் துவன்றல் நிறைவுங் "கோடி பல முரஞ்சிய கோளி யாலத்து" என முரஞ்சல் முதிர்வும் "பெரு வரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்" எனப் பொற்பு பொலிவும் "வறி துவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி" என வறிது சிறிதும் "எய்யா மை யல்லே நீயும வருந்துதி" என எயயாமை அறியாமையும் "நன்று மரிதும் றனையாற் பெரும" என நனறு பெரிதும் "நீர்தெவு நிரைத் தொழுவர்" எனத தெவு கொள்ளுதலுங் "தெவவுப்புலஞ் சிதைய வெய்கணை சிதறி" எனத் தெவவு பகையுங் "கழுமிய ஞாட்பினுண் மைந்திழந் தாரிட்ட" எனவுங் "கழும முடித்துக் கண்கூடு கூழை" எனவும் முறையே கழுமம மயக்கமுந் திரட்சியுங "கருவி வானங் கதழுறை சிதறி" எனக் கருவி பலவற்றதுகூட்டமுங் "கார்கோண் முகந்த கமஞ்சூன மாமழை" எனக் கமம் நிறைவும் "அரிமயிர்த் திர ணிமுன்கை" என அரி ஐமையுங் "கவவுக்கடுங்குரையள் காமர் வனப்பினள்" எனக் கவவு அகத்திடதலுங் "கவர்நடைப்புரவி" என வுங்"கொள்ளே மாந்த ருண்ணுது கவரும்"எனவுங் கவர்வு விருப்புங் கைக்கொள்ளுதலுஞ "சோந்து செறிகுறங்கின்" எனச் சேர் திரட் சியும் "இருங்கல்—வியலறைக் கிடத்தி வயிறு தின்று" என வியல அகலமுங் "துன்னருந் துப்பின் வயமான ரேன்றல்" எனு வய வலியுங் "துயவற்றேம்யாமாக" எனத துயவு அறிவின்றிரிவும் "பருங் திருந் துயாவினி பயிற்றும்" என உயா வருத்தமும் "உசாத்துணை" என உசா சூழ்ச்சியும "வயாவும் வருத்தமு மீன்றக்கா லெனவும்" என வயா கருப்பத்தங்கி வருத்தமுற்று துகரப்படும் பொருண்மேற் செல்லும் வேட்கையினது பெருக்கமும "புனிற்றுப்பாய்ந்தெனக்க லங்கி" எனப் புனிறு ானறணிமையும"விததொடு செனற வட்டிபபற் பல—மீனெறி பெயரும யாண ரூர"எனயாணர் வாரி புதிதாகப்படுதலும் "அகனமர்ந்துசெய்யாளுறையும்" என அமாதல் மேவலும் "யா ணதுபசலையென்றனளே" என யாண் கவினும்"ஐதேகாமம்யானே" என ஐ வியப்புஞ் "சேற்றுநில முனைஇய செங்கட் காரான்" என முனைவு முனிவும "வைந்நுனைப் பகழி மூழ்கலிற் றலைசாய்த்து" என வை கூர்மையுஞ் "சிலைகவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளீஇ" என எறுழ் வலியும் இருமை கருமையும் பெருமையுமாகிய குறிப் புப்பொருண்மை உணர்த்திநின்ற உரிச்சொற்கள். "மையில் வாண் முகம் பசப்பூ ரும்மே" எனப் பசப்பு நிறனும் "மயிற்சாயன்மகள் வேண்டி"எனச் சாயல் மென்மையும் "ஏமவெங் காம மியைவ தாயி னும்" ஏனு வெம்மை விருமபுதலுங் "கண்ணே நோக்கி வாளிழக் கனவே" என வாள் ஒளியுமாகிய பண்புப்பொருண்மை உணர்த்தி

கின்ற உரிச்சொற்கள். "வாயிற் ரோன்றி யாழிசையூப் புக்கு" என இசை இசைப்பொருண்மை உணர்த்திநின்ற உரிச்சொல். "வெளிப் படு சொல்லே கிளத்தல் வேண்டா—வெளிப்படவாரா வரிச்சொன் மேன" என்பவாகலின், வெளிப்பட்ட உரிச்சொற்கணைக் கிளந்தது ஞற் பயனின்மையின், அவற்றை ஒழித்து, வெளிப்படாதனவற்றுள் இவைபோல்வன பிறவருவன உளவேல் அவற்றையும் இப்புறன டையாலே எடுத்தோதி ஈண்டே அமைத்துக்கொள்க. (கக)

உகூக. பொருட்குப்பொரு டெரியி னதுவரம் பின்றே.

இஃது உணராதவற்றை உணர்ந்தவை சார்த்திப் பொருள் உணர்த்துங்காற் படும் முறைமை கூறுகின்றது.

இ - ள். ஒருசொல்லே ஒருசொல்லாற் பொருள் உணர்த்திய வழி அப்பொருள் உணர்த்த வந்த சொற்கும் பொருள்யாதெனப் பொருட்குப் பொருள் தெரியுமாயின், மேல் வருவனவற்றிற்கெல் லாம் ஈது ஒத்தலின், அவவிரு இறைவரம்பின்றி ஓடும்; அதனைப் பொருட்குப் பொருள் தெரியற்க. எ - று.

ஒருசொற்குப் பொருள் உரைப்பது பிறிதோர் சொல்லா னன்றே? அச்சொற்பொருளும் அறியாதாரே உணர்த்துமாறென்னே யெனின், அது வருகின்ற சூத்திரத்தாற் பெறப்படும். (கஉ)

உகூஉ. பொருட்குத் திரிபில்லுயுணர்த்த வல்லின்.

இ - ள். உறுகாலென்புழி உறு என்னுஞ் சொற்குப் பொரு ளாகிய மிகுதி என்பதன் பொருளும் அறியாத மடவோளுயின், அவ வாறு ஒருபொருட்கிளவி கொணர்ந்து உணர்த்தல் உரூது கடுங்கா லதுவலிகண்டாய் உறுவென்பதற்குப் பொருளென்று தொடர்மொ ழிகூறியானுங் கடுகாலுள்வழிக்காட்டியானும் மாணாக்கன் உண ரும் வாயிலறிந்து உணர்த்தல் வல்லனுயின் அப்பொருள் திரிவுப டாமல் அவனுணரும். எ - று.

அவவாற்ருனும் உணர்தலாற்ருதானே உணர்த்துமாறென்னே யெனின் அதற்கன்றே வருஞ் சூத்திரம் எழுந்ததென்பது. (கங)

உகூங. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

இ - ள். வெளிப்படத் தொடர்மொழி கூறியானும் பொரு ளைக் காட்டியானும் உணர்த்தவும் உணராதாரை உணர்த்தும் வாயி லில்லை, உணர்ச்சியது வாயில் உணர்வோரது உணர்வை வலியாக உடைத்தாகலான். எ - று.

யாதானும் ஓர் ஆற்றான் உணருந் தன்மை அவற்கில்லையா யின் அவனை உணர்த்தற்பாலனல்லன் என்பதாம். (கச)

உகசு. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றும்.

இது மொழிப்பொருள் உணர்த்துதற்குக் காரணம் உண் டென்கின்றது.

இ - ள். உறுதவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்றுமுறைமையாற் கொள்வதல்லது அவை அப்பொருளவாதற்குக் காரணம் விளங்கத்தோன்றும். எ - று.

பொருளொடுசொற்கு இயைபு இயற்கையாகலான் அவவி யற்கையாகிய இயைபாற் சொற் பொருள் உணர்த்துமென்ப. ஒருசா ரார் பிற காரணத்தானும் உணர்த்துமென்ப. அவற்றுள் மெய்ம்மை யாகிய காரணம் ஆசிரியர்க்குப் புலனுவதல்லது நம்மனோர்க்குப் புல னுகாமையின் மொழிப்பொருட்காரணம் இல்லையென்னுது 'விழிப் பத்தோன்றும்' என்றார். அக்காரணம் பொதுவகையான் ஒன்றுயி னுஞ்,சொற்றொறும் உண்மையிற் சிறப்புவகையாற் பலவாமாகலின் விழிப்பத்தோன்றுவெனப் பன்மையாற் கூறினர்.

உரிச்சொற்பற்றி ஒதினுரேனும் "பொருட்குப்பொரு டொகியி னதுவரம் பின்றே" என்பது முதல் இச்சூத்திரங்காறுங் கூறிய விதிகளெல்லாம் ஏனைச்சொற்களுக்கும் ஒக்குமென்பது கருத்தாகக் கொள்க; மேற் பொது இலக்கணங் கூறும் பொதுவியலைச் சார வைத்தமையானென்க. (கரு)

நான்காவது உரிச்சொலலியல் முற்றிற்று.

நு-வது பொதுவியல்.

உகடு. திணையே பாலிடம் பொழுது விளுவிறை
மரபா மேழும் வழாஅ லோம்பல்.

என்பது சூத்திரம். இது வழுவற்க எனவும் வழுஇயமைக எனவுங் காதது வழுக்கனோக்து சொற்களை அமைத்துக்கோடலும் மூற்கூறிய நால்வகை ஓதலினுள்ளுங் கூறுதற்கு இடமின்றி எஞ்சி நின்றனவுமாகிய சொல்லிலக்கணங்கள் எல்லாவற்றையுந் தொகுத்து ஒருங்கு உணர்த்தலின் இவ்வோத்துப் பொதுவியலென்னும் பெ

யர்த்தாயிற்று. இதனுனே மேலோத்திஞேடு இதற்கு இயைபுடை மையும் விளங்கும். இத்தனுள் இத்தலைச்சூத்திரம் வழுவற்கவெனக் காத்தலும் வழுவியமைகவெனக் காத்தலுமென்னும் இரண்டனுள் வழுவற்கவெனக் காக்கின்றது.

இ - ள். திணையென்பது முதல் மரபென்பது ஈறுகக் கிடந்த ஏழனையும் வழுவாமற் போற்றுக. எ - று.

உ-ம். அவனுண்டான் அவளுண்டாள் அவருண்டார் அது வுண்டது அவையுண்டன யானுண்டேன் யாமுண்டேம் நீயுண் டாய் நீயிருண்டீர் எனவும் உண்டானவன் உண்டாளவள் உண்டா ரவர் உண்டது உண்டனவவை உண்டேன்யான் உண்டேம்யாம் உண்டாய்நீ உண்டீர்நீயிர் எனவும் திணையும் பாலும் இடனும்,நெரு நலுண்டேன் இன்றுண்ணுநின்றேன் நாளையுண்பேன் எனவும் உண் டேனெருநல் உண்ணுநின்றேனின்று உண்பேனுனே எனவும் கால மும், உயிரெத்தன்மைத்தென வினவும், உணர்த்தற்றன்மைத்தென இறையும், யானேமெய்ப்பான்பாகன் யாடுமேய்ப்பானிடையன் என மரபும் வழுவாமற் தத்தம் மரபினுல் வந்தவாறு காண்க. வழாஅ லோம்பலெனவேவவழுவுதலும்உளவென்பதூஉம்,அவவழு அமைக் கப்படாதென்பதூஉம், அவவழுவும் அவனுண்டது அவனுண்டன அவளுண்டது அவளுண்டன அவருண்டதுஅவருண்டன அதுவுண் டான் அவையுண்டான் அதுவுண்டாள் அவையுண்டாள் அதுவுண் டார் அவையுண்டார் எனவும் உண்டானது உண்டானவை உண்டா ளது உண்டானவை உண்டாரது உண்டாரவை உண்டதவன் உண் டனவவன் உண்டவள் உண்டனவவள் உண்டதவர் உண்டனவ வர் எனவும் ஒருதிணைச்சொல் ஏனைத்திணைச்சொல்லோடு முடியுந் திணைவழுவும், அவனுண்டாள் அவனுண்டார் அவளுண்டான் அவ ளுண்டார் அவருண்டான் அவருண்டாள் அதுவுண்டன அவை யுண்டது எனவும் உண்டானவள் உண்டானவர் உண்டாளவன் உண்டாளவர் உண்டாரவன் உண்டாரவள் உண்டதவை உண்டன வது எனவும் ஒருபாற்சொல் அத்திணைக்கண் ஏனைப்பாற்சொல் லோடு முடியும் பால்வழுவும், யானுண்டான் யானுண்டாய் உண் டான்யான் உண்டாயான என்பனபோல ஓரிடச்சொல் ஓரிடச் சொல்லோடு முடியும் இடவழுவும், நாளேஉண்டான் உண்ணுநெ ருநல் என்பனபோல ஒருகாலச்சொல் ஒருகாலச்சொல்லோடு முடி யுங் காலவழுவும், ஒருவிரல் காட்டிச் சிறிதோபெரிதோ கறக் கின்ற எருமை பாலோநிணையோ என்பனபோல வினவப்படாத பொருள்பற்றிவரும் வினவழுவும், கடம்பூர்க்குவழியாதோ என

இடம்பூணியென்னுவின்கன்று கருவூர்க்குவழியாதோ எனப் பருந்தால்பன்னிருதொடி என்பனபோல வினுவுதற்கு இறையாகச் செப்புவழுவும், யானேமெய்ப்பானே இடையினென்றும் யாடுமேயப் பானைப் பாகனென்றும் பிறிதோர் காரணம்பற்றுது ஒருபொருட்கு உரிய வழக்கு ஒருபொருண்மேற் சென்றதெனப்படுமெ மரபு வழுவும் 5
என எழுவகையுமென்பதூஉம் பெற்றும். பிறவும் அன்ன. (க)

உகசு. திணைமயக் குற்ற வையப் பொருளையும்
பாலமயக் குறற வையப் பொருளையு
மூருவே பன்மை யஃறிணைப் பிரிப்பி
னறைதலுங் துணிந்துழி யனமையல லாமை 10
மறுபபதன மருங்கினு மற்றத னிடத்துங
கிறப்படச சுட்டலுஞ செவ்விய வெனப.

இஃது உயாதிணையாக அஃறிணையாக ஆண்பாலாக பெண்பாலாக ஒன்முக பலவாக யாதானும் ஒன்முகற்பாலதனை அதற்கு உரிய சிறப்புச்சொல்லாற் சொல்லாது இருதிறத்துஞ் சேறற்கு உரிய 15
பொதுச்சொல்லாற் சொல்லுதல் வழுவாமாயினும் ஐயப்பொருள் மேற் சொல் நிகழ்த்துமாறு உணர்த்திய முகத்தான் அமைகவெனத் திணைவழு அமைத்தலும் பாலவழு அமைத்லுந் துணிந்தவழி அனமைக்ளவி ஒருபொருள் ஒருபொருளன்மை தன்மையைச் சுட்டி நிற்கும் திறனுங கூறுகின்றது. 20

இ - ள். திணை துணியாத ஐயப்பொருளையும் திணைதுணிந்து பால் துணியாத ஐயப்பொருளையும உருவும பன்மையும், ஒருமையும் பனமையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணைப் பொதுவுமாகிய ஐயப்புலப் பொதுச்சொற்களாற் கூறலுந் திணைபால் துணிந்தவழி அன்மைச்சொல் ஒருபொருள் ஒருபொருளன்மை தன்மையை 25
மறுக்கப்படும் பொருள்மேலுங் கழுவப்படும் பொருள்மேலும் முறையே மறுக்கப்படுதலுந் தழுவப்படுதலுமாகிய முகத்தாற் கூறுபடச் சுட்டுகிற்றலும் வழுவாகா; வழுவமைதியை உடையனவாமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

ஐயப்பொருளாவது திறப்பியல்பாற் தோன்றுது பொதுவியல் 30
பாற் தோன்றியது. ஏற்புழிக்கோடலாற் திணையையத்துக்கண் உருவும் உயர்திணைப்பாலையத்துக்கண் உருவும் அத்திணைப்பன்மையும் அஃறிணைப்பாலையத்துக்கண் அத் திணைப்பன்மையும் பொதுப்பெயரும் ஐயப்புலப் பொதுச்சொல்லாதலும், பால்மயக்குற்ற ஐயப்பொ

ருளெனப் பொதுப்படக் கூறிய அதனுற் றிணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மையொருமைப்பாலியமும் அத்திணைப்பன்மைச்சொல் ஐயப்புலப் பொதுச்சொல்லாதலுங் கொள்க. "கண்டுபான் மயங்கு மையக் களவி—னின்றோர் வருவோ ரென்று சொன் னிகழக்—காணு வையமும் பல்லோர் படர்க்கை" என்பது அகத்தியம் ஆகலின் உருபென்றாலேனும் உருபின்பொருளவாகிய வடிவு பிழைப்பு பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங் கொள்க.

குற்றிகொல்லோ மகன்கொல்லோ இதோ தோன்றுகின்றவுருவு எனவும் ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இதோ தோன்றுகின்ற உருவு எனவும் ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இதோ தோன்றுகின்ற இவர் எனவும் ஒன்று கொல்லோ பலகொல்லோ செய்புக்கன எனவும் ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய்புக்கபெற்றம் எனவும் ஒருவன்கொல்லோ பலர் கொல்லோ கறவை உய்த்த கள்வர் எனவும் ஒருத்திகொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கத்திமுல் வண்டல் அயர்ந்தார் எனவும் இணையடித்துகள்நுணுமபாலியத்துகள்நுணுமும் உருவமுமுலாயின ஐயப்புலப் பொதுச்சொற்களாய் வந்துவாறு காண்க. மகனென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகாற் குற்றிகொல்லோ என்றும் ஐயஞ் சென்றமையிற் குற்றியன்றென அதனை மறுத்து மகனென்றும், குற்றியென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகால் மகன் கொல்லோ என்றும் ஐயஞ்சென்றமையின் மகனல்லனென அதனை மறுத்துக் குற்றியென்றும், ஆண்மகனென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகாற் பெண்டாட்டிகொல்லோ என்றும் ஐயஞ் சென்றமையிற் பெண்டாட்டியல்லளென அதனை மறுத்து ஆண்மகனென்றும், பெண்டாட்டியென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகால் ஆண்மகன்கொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையின் ஆண்மகனல்லனென அதனைமறுத்துப் பெண்டாட்டியென்றும், ஒன்றென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகாற் பலகொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையிற் பலவல்லவென்று அதனைமறுத்து ஒன்றெனறும் பலவென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகால் ஒன்று கொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையின் ஒன்றனறென அதனை மறுத்துப் பலவென்றும் அன்மைச்சொல்லானது மறுக்கப்படும் பொருண்மேல் ஒருபொருள் ஒருபொருளன்றுந் தன்மையைச் சுட்டிநின்றவாறும், மகனென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகால் மகன் கொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையிற் குற்றியல்ல னென்று அதனைத் தழீஇக்கொண்டு மகனென்றுங், குற்றியென்று

துணிந்தவழிப் துணியுமுன் ஒருகாற் குற்றிகொல்லோவென்று
ஐயஞ்சென்றமையின் மகனன்றென அதனைத் தழீஇக்கொண்டு
குற்றியென்றும், ஆண்மகனென்று துணிந்தவழிப் துணியுமுன் ஒரு
கால் ஆண்மகன்கொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையிற் பெண்
டாட்டியல்லனென அதனைத் தழீஇப்பெண்டி ஆண்மகனென்றும், 5
பெண்டாட்டியென்று துணிந்தவழித் துணியுமுன ஒருகாற் பெண
டாட்டிகொல்லோவெனறும் ஐயஞ்சென்றமையின ஆண்மகனல்ல
னென்று அதனைத் தழீஇக்கொண்டு பெண்டாட்டியெனறும், ஒன்
றென்று துணிந்தவழித் துணியுமுன் ஒருகால் ஒன்றுகொல்லோ
வெனறும் ஐயஞ்சென்றமையிற் பலவன்றென அதனைத் தழீஇக் 10
கொண்டு ஒன்றென்றும், பலவென்று துணிந்தவழித் துணியுமுன
ஒருகாற் பலகொல்லோவென்றும் ஐயஞ்சென்றமையின் ஒன்றல்ல
வென்று அதனைத் தழீஇக்கொண்டு பலவென்றும், அன்மைச்சொல
லானது தழுவப்படும் பொருள்மேல் ஒருபொருள் ஒருபொருளன
மூந்தன்மையைச் சுட்டிநின்றவாறுங் காண்க. சூற்றியன்று மக 15
னெனறவழிக்கினெனபது நின்று வற்றுப்பெயரீற்ற வச்சமாய்நின்ற
இவ்வினையினும் பெயரெழுவாய்க்கு அது படனிலையாய் நிற்றலின
நின்றுவற்றுவது யாணடையதெனக. அலவனற்றிற்கும் இவ
வாறே முடிதலுங்கொள்க. இனிச் சூற்றியல்லன மகனென்பதற்
சூற்றியெனபதல்லனெனனுரு சொலலீறாடு இயைந்தவாறனனே 20
யெனின், இவ்வருவு சூற்றியாயெனறவழி உயினபகரத்தோடு சூற்றி
யென்பதும எழுவாயாய நிலைபெறாற்போல குறறியல்லனென
புழி ஆயினபதன எதிரமறை பாரிய அனமைக்குளவியொடுங் சூற்றி
யென்பது எழுவாயாய் நினறீற இயையுமென்க. எழுவாயாய் இயை
யினன்றே யான நியலலீனெனபுழி நீயெனபது வேற்றுமைக் 25
கேற்ற செய்கை பெறாது நினறதெனக. இனித் நீயணையைத் துச
கண மகனெனறு துணிந்த புழி இவ்வருக் குற்றியனறு மகனென
றும் இவ்வருக் சூற்றியலலன் மகனனறும் பாலையுதுக்கண் ஆண
மகனென்று துணிந்தவழி இவ்வருப் பெணடாட்டியல்லன் இவ்வ
ருப் பெண்டாட்டியல்லன இவா பெணடாட்டியலலன் இவர் டெண் 30
டாட்டியல்லன ஆண்மகனெனறும் பெணடாட்டியெனறு துணிந்
தவழி இவ்வரு ஆண்மகனலன இவ்வருர் ஆண்மகனல்லன் இவ
ரணமகனல்லன் இவா ஆணமகனல்லன் பெண்டாட்டியெனறும
ஒன்றென்று துணிந்தவழிச் செய்புக்கன பலவன்று ஒன்றென்றும
உருவுமுதலிய ஐயப்புலப் பொதுச்சொற்கள் கூட்டியே பொருண் 35
முடிக்க வேண்டுதலின அவ்வாறு கூட்டிமுடிப்புழி உருவுமுதலா
யின அல்லன் அல்லள் அனறு என்பனவற்றோடு முடியாவாம் பிற

வெனின், அற்றன்று; ஐயுற்றவழியல்லது துணிந்தவழியும் ஐயப்பு லப்பொதுச்சொற்கனைக் கூட்டிப் பொருண்முடிக்கவேண்டுமென்ப தற்கு ஒத்தில்லாமையான் அங்ஙனங் கூட்டிமுடித்தல் ஒருதலையன் மையான் ஏற்புழியல்லது யாண்டுங் கூட்டிமுடிக்க வேண்டுமென் னும் யாப்புறவின்மையான் அது கடாவன்றென மறுக்க. குற்றி கொல்லோ மகன்கொல்லோ ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டி கொல்லோ என்புழி ஐயக்கருத்துத் தினைமேலும் பால்மேலுமன்றி மகனுருவுகொல்லோ ஆண்மகனுருவுகொல்லோ பெண்டாட்டியுரு வுகொல்லோ என உருவின்மேற்றேயாகலானும் பன்மையும் அஃறி ணைப்பிரிப்பும் ஒருகாற் சொல்லுதற்கண் ஒருபால்மேல் நில்லாது இருபால்மேல் நிற்றலானும் ஐயப்பொருண்மேற் சொல் நிகழ்த்து மாறு உணர்த்தியமுகத்தான் வழுவமைதியாயினவாறு காண்க. இவ வாறு ஐயப்பொருண்மேற் சொல் நிகழ்த்துதலுந் துணிந்துழி அன் மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டுதலும் ஆசிரியர் தொல் காப்பியனார்க்குங் கருத்தாதல் சேனாவரையருரையான் உணர்க.(2)

உகூ. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறு மதனெடு சார்தரி னததிணை முடிபின.

இது திணைவழுக் காக்கின்றது.

இ - ள். யாதானும் ஓர் இயைபுபற்றி உயர்திணையோடு தொ டர்ந்துநின்ற பொருள் முதலிய ஆறும் அவ்வியைபினை அவ்வுயர் திணையோடு ஒன்றுபடுத்து முடிக்குங்கால் அவ்வுயர் திணைமுடிபினை உடையவாய் முடியுப். எ - று.

எனவே. வேறுபடுத்து முடிக்குங்காற் தமக்கு உரிய அஃறி ணைமுடிபானே முடியும் என்பதாயிற்று.

நம்பிபொன்பெரியன் இல்லப்பெரியன் வாழ்நாள்பெரியன் நங் கைமுறக்குநல்லள் நிறங்கரியள் கவவுக்கடியள் என முறையே பொ ருண் முதல் ஆறும் உயர்திணைமுடிபான் முடிந்தவாறு காண்க. இனித்தமக்கு உரிய அஃறிணைமுடிபான் முடியுமாறு, நப்பிக்குப் பொன்பெரிது இல்லம்பெரிது வாழ்நாள்பெரிது நங்கைக்குமுக்கு நன்று நிறங்கரிது கவவுக்கடிது என வரும். பிறவும் அன்ன.

பொருண்முதலாறெனப் பொதுப்படக்கூறிய அதனுனே கண்ணல்லள் தோணல்லள் மூலநல்லள் புருவநல்லள் காதுநல்லள் எனவும் கண்ணெந்தாள் தோளெந்தாள் மூலநொந்தாள் புருவ நொந்தாள் காதுநொந்தாள் எனவும் கண்ணல்லர் தோணல்லர் மூல

நல்லர் புருவநல்லர் காதுநல்லர் எனவும் கண்ணெந்தார் தோணெந் தார் மூலிகொந்தார் புருவகொந்தார் காதுகொந்தார் எனவும் கண் ணுந் தோளும் மூலியும் பிறவும் "பன்மை சுட்டிய சினைநிலைக்கி ளவி—பன்மைகூறுங் கடப்பாடில" வாய் முதற்பொருள் ஒன்றுயின் ஒருமையாணும் பலவாயிற் பன்மையாணும் முடிதலுங்கொள்க. கோ 5
கூரிதுகளிறு குளம்புகூரிதுகுதிரை என அஃறிணைப் பன்மைச் சினைப்பெயர் நின்று முதல்விணையாகிய ருமையான் முடிந்தனவும் ஒன்றெனமுடித்தலாற் கொள்க. உடைப்பொருளும் உடையாணும் இடமும் இடந்துங்கிழ்பொருளுங் காலமுங் காலத்தியலும்பொரு ளும் அவயவமும் அவயவியுங் குணமுங் குணியும் வினையும் வினைமு 10
தலுமாகிய இயைபுடைமையான் அதுபற்றி உடைப்பொருண்முதலி யவற்றின் இயல்பை உடையான் முதலிய பொருண்மேலேற்றி. அவற்றின் வினையான் முடிப்பினும் அமையுமெனத் திணைவழு வமைத்தவாறுயிற்று. (கூ)

உகூஅ. திணைவிரா வெண்ணுப்பெயர் சிறப்பினு மிகவினு 15
மிழிபினு மொருமுடி பெய்து மென்ப.

இதுவும் அது.

இ - ள். திணைவிராபெண்ணிய எண்ணுப்பெயர்கள் தலைமை யானும் பன்மையானும் இழிபானும் ஒன்றுபற்றி அதற்கேற்ற ஒரு முடிபான் முடியுமென்று கூறுவர் ஆசிரியர். எ - று. 20

உ-ம். "அங்கண்விசும்பி னகனிலாப் பாரிக்குந்—திங்களுஞ் சான்றேரு மொப்பர்மற் —றிங்கண்—மறுவாற்றுஞ் சான்றோ ரீ தாற்றூர் தெருமந்து—தேய்வ தொருபா சுறின்." இது திணைவிரா யெண்ணித் தலைமைபற்றி உயர்திணையான் முடிந்தது. "பழியஞ் சான் வாழும் பசுவு மழிவிணற்—கொண்ட வருந்தவம் விட்டா 25
னுங்—கொண்டிருர்—நில்லஞ்சி வாழுமெருது மிவர்முவர்—கெல் லுண்டகெஞ்சிற்கோர் சோய்." இதுவும் அது, விட்டானென்பது உயர்திணைசகமாய் ரணைப் பசுவினும் எருத்தினுஞ் சிறந்தமை யின். "வேந்தன் பெரும்பதி மண்ணுண் மாந்ர—ரீங்கிம் மூவ ரிதற் குரியோரே" எனவும் "ன்பான் மனையா ளயலான்றலைக் கண்டு 30
பின்னு—மின்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடிபோலா—ன்பால் பசுவே தமந்தார்பெண்டிர் பாலர் பார்ப்பா—ரென்பாரை யோம்பே னெனின்யானவ ஞக வென்முன்" எனவும் "பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்—முத்தோர் குழவி யெனுமிவரைக் கை விட்டுத்—தீத்திறத்தார் பக்கமே செல்கென்று" எனவும் "பார்ப்பார் 35

தவரே சுமந்தார் பிணிப்பட்டார்-மூத்தாரினையார் பசுப்பெண்டி ரென்
றிவர்கட்—காற்றவழிவிலங்கி ஞரே பிறப்பிடைப்—போற்றி யெ
னப்படுவோர்" எனவும் இவை திணைவிராயெண்ணிப் பன்மைபற்றி
உயர்திணையான் முடிந்தன. "நசைதர வந்தோர் நசைபிறக் கொழி
5 ய—வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையினற்—பனுவலுல்
வேதத்தருஞ்சீர்த் திப்பெருங்-கண்ணுறை நெய்ம்மலி யாகுதி பொங்
கப்—பன்மாண் வீயாச் சிறப்பின் வேள்வி—மூற்றி யூப நட்ட வியன்
களம்—பலகொல் யாபல கொல்லோ பெரும" எனவும் "தொல்லே
நால்வகைத் தோழருந் தூயணி நெடுந்தேர்—மல்லற் றமபியு மா
10 மனு மதுவிரி கமழ்தார்ச்—செல்வன் முதையுஞ் செழுநக ரொடு
வள நாடும்—வல்லே தொக்கது வளங்கெழு கோயிலு ளொருங்கே"
எனவும் இவை திணைவிராயெண்ணித் தலைமைபற்றி அஃறிணை
யான் முடிந்தன. "கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ—யாலம்
வீழ் போலு மமைச்சனும்—வேலின —கடைமணிபோற் றிண்ணி
15 யான் காப்புமிம் மூன்றும்—படைவேந்தன் பற்று விடல்" எனவும்
"எச்சிலார் நீண்டார் பசுப்பார்ப்பார் நீத்தெய்வ—மூச்சந் தலையோ
டிவையென்ப யாவருந்—தீட்பத்தாற் றீண்டாப் பொருள்" எனவும்
"கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவு—நெடுங்கொடிய
நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவருமென—நன்குடன் மாண்ட
20 தாயினும்" எனவும் இவை திணைவிராயெண்ணிப் பன்மைபற்றி
அஃறிணையான் முடிந்தன. "'ஈடுக ரருவாளர் வான்கருநாடர்—
சுடுகாடு பேயெருமை யென்றிவையாறுங்—குறுகா ரறிவுடையார்"
எனவும் "மூர்க்கனு மூதலியுங் கொண்டது விடா" எனவும் இவை
திணைவிராயெண்ணி இழிபுபற்றி அஃறிணையான் முடிந்தன. இரு
25 திணைப்பெயரும் விராய்வந்து ஒருதிணைச்சொல்லான் முடிதல் வழு
வாயினுந் தலைமைமுதலாயின பற்றி முடிதலான் அமைகவெனத்
திணைமழு அமைத்துவாழியிற்று. "பாணன் பறையன் றுடியன்
கடம்பனென்—றிங்கான் கல்லது குடியு மில்லே" எனத் திணைவிர
வாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான்முடிந்த இவ்வழு
30 யாண்டு அமைக்கப்படுமோவெனின், பாணன்முதலாயினரைக் குடி
யென்று சுட்டியவழிக் குடிக்கேற்ற தொகைகொடித்தல் வழுவன்
மையான் அமைத்தல் யாண்டையதென்க. "தம்முடைய தண்ண
ளியுந் தாமுந்தம் மான்றேரு—மெம்மை நினையாது விட்டனரேல்
விட்டகல்க—வம்மெல் விணர்தோ யடம்புகா ளன்னங்கா—ணம்
35 மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்" எனவும் "யானுந் தோ
ழியு மாயமு மாடுந் துறைநண்ணித்—தானுந் தேரும் பாகனும் வந்
தென் னலனுண்டான்—றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரி

வானேற்—கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே" என வும் தலைமைப்பொருளையும் தலைமையில்பொருளையும் விராயெண் ணித் தலைமைப்பொருட்கு வினைகொடுப்பவே தலைமையில்பொரு ளும் உடன்முடிந்தனவாவதோர் முறைமைபற்றி வருவனவும் ஈண்டு ஒன்றெனமுடித்தலான் அமைத்துக்கொள்க. "தானுந்தன் புரவி யுந் தோன்ற நின்றனன்" எபதும் அது. (சு)

உசுக. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு மிழிப்பினுஞ் சொன்னேக் கினுநதிணை பாலவை வழுக்கினும் வழுவென வரையா ரென்ப.

இது திணைவழுவமைதியும் பால்வழுவமைதியுங் கூறுகின்றது.

இ - ள். ஒன்றனை உவந்துகூறுதற்கண்ணும் உயர்த்திக்கூறு தற்கண்ணுஞ் சிறப்பித்துக்கூறுதற்கண்ணுஞ் செறுத்துக்கூறுதற் கண்ணும் இழித்துக்கூறுதற்கண்ணும் பொருனோக்காது சொல வின் இயல்பை நோக்குதற்கண்ணுஞ் சொல்லானன்றிச் சொல்லு வான் குறிப்பொடுபடித்து வேறுவேறு உணரப்படுங் திணையும் பாலு மாகிய அவவிரண்டும் மயங்கிவரினும் வழுவென்று கடியார் அமைத துக்கொள்வர் ஆசிரியர். எ - று.

ஒருவனை என்யானைவந்தது போயிற்று "என்-போர்யானைவந் தீகவீங்கு" எனவும் ஒருத்தியை என்பாவைவந்தது போயிற்று என வும் ஒரெருத்தினை என்றந்தைவந்தான் போயினுன் எனவும் ஓரா வினை எம்மன்னைவந்தாள் போயினுள் "கொடுங்கோற் கோவலர் பின்னின்றுய்த்தா—லின்னே வருகுவர் தாயர்" எனவும் முறையே உயர்திணை அஃறிணையாகியும் அஃறிணை உயர்திணையாகியும் ஒப்பு மைகருதாது உவப்பின்கட் திணைமயங்கிவந்தன. "தேமலரங்கட் டிருவேபுகுதக" என ஒப்பின்றி ஆண்பால் பெண்பாலாக உவப்பின் கட் பால்மயங்கி வந்தது. கன்னிஞாழல் கன்னியெயில் எனவும் ஓரெருத்தை கம்பி எனவும் ஒருகிளியை நங்கை எனவும் அஃறிணை உயர்திணையாகி உயர்ச்சிக்கட் திணைமயங்கி வந்தன. ஒருவனையும் ஒருத்தியையும் இவர்வந்தார் போயினர் எனவும் ஒருவனையும் ஒருத் தியையும் ஒன்றனையும் நீர்வந்தீர் போயினீர் எனவும் ஒருவன்றன் ஒருத்திதான் ஒன்றுதான் யாம்வந்தேம் போயினேம் எனவும் "இர வின்வருவானைப் புல்லலறுமென்மனனே தோழா" எனவும் "தாயா ஐத் தலையளிக்குந் தண்மறை யூரகேள்" எனவும் ஒருமைப்பால் பன் மைப்பாலாகவும் பெண்பால் ஆண்பாலாகவும் ஆண்பால் பெண்பா லாகவும் உயர்ச்சிக்கட் பால்மயங்கி வந்தன. வழக்கினகத்துப் பெ

ருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என அடைசேர் மொழி இல்குணம் அடுத்து உயர்த்துக்கூறலும் ஈண்டே அமைத்துக்கொள்க. கண்போல ச்சிறந்தானே என்கண்வந்தது எனவும் உயிர்போலச்சிறந்தானே என்னுயிர்வந்தது "ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்—போல வருமெம் முயிர்" எனவும் உயர்திணை அஃறிணையாய்ச் சிறப்பின் கட் திணைமயங்கி வந்தன. "மன்னனுயிர்த்தேமலர்தலையுலகம்" எனவும் "உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்—றப் பானுற் கூற்றே மருந்து" எனவும் "தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொரு—டந்தம் வினையான் வரும்" எனவும் வருவனவெல் லாம் ஈண்டே அமைத்துக்கொள்க. பொறியறைவந்தது போயிற்று எனவும் கெழியிலிவந்தது போயிற்று எனவும் பொய்ச்சித்தை வந்தது போயிற்று எனவும் உயர்திணை அஃறிணையாய்ச் செறலின்கட் திணைமயங்கிவந்தன. "எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்து ணையுங்—தேரான் பிறனில் புகல்" எனவும் "அவர்நமக்—கன்னெய் மத்தரு மல்லரோ தோழி—புல்லிய தெவ்லே வன்பிலங் கடையே" எனவும் பன்மைப்பால் ஒருமைப்பாலாயும் ஆண்பால் பெண் பாலாயுஞ் செறலின்கட் பால் மயங்கிவந்தன. "ஏவலுஞ் செய்க லான் மூன்றோரா னவ்வுயிர்—போஒ மளவுமோர் நோய்" எனவும் "இரவெதிர் கொள்ளா விருகாற் பசுவே" எனவும் உயர்திணை அஃறிணையாய் இழிபின்கட் திணைமயங்கி வந்தன. இழிபின்கட் பால் மயங்கிவந்தன வந்துழிக் காண்க. குடிமைகன்று ஆண்மைகன்று இளமைபோயிற்று மூப்புவந்தது அடிமைகன்று வன்மைகன்று விருந்துவந்தது குழுகன்று பெண்மைகன்றுஅரசுவந்தது வேந்துவந்தது வேள்வந்தது குரிசில்வந்தது அமைச்சுவந்தது புரோசுவந்தது மகவந்தது குழவிவந்தது அலிவந்தது அழிதுவந்தது குருடீது முடந்தீது பெருவிறல்வந்தது அருந்திறல்வந்தது எனவும் உலகம்ப சித்தது உயிர்போயிற்று உடம்புதுணுகிற்று யாக்கைதீது இவற்குக் காலமாயிற்று தெய்வஞ்செய்தது வினைவினைந்தது விதிவலிது பூதம்பு டைத்தது ஞாயிறுபட்டது திங்களெழுந்தது மதிநிறைந்தது சொன் னன்று பொழுதுகன்று கனலிகடுகிற்று வெள்ளியெழுந்தது வியா ழன்கன்று எனவும் முறையே பண்புடைப்பொருளையும் மக்களையுந் தெய்வத்தையும் உணர்த்திநிற்கும் உயர்திணை அஃறிணையாய்ச் சொல்லியல்புபற்றித் திணைமயங்கி வந்தன. இக்குடிமை ஆண்மை முதலியவெல்லாம் உயர்திணைப்பொருளை உணர்த்திநின்றனவேனும் அச்சொற்கள் அஃறிணைவாசகமாதலின் அவற்றிற்கேற்ப அஃறி ணைமுடிபு கொள்ளுமென்பார் சொன்னூல்கினுமென்றார். உலகம் உயிர் உடம்பு என்பன ஈண்டு மக்களை உணர்த்திநின்றன. என்னை?

உயர்திணைமுடிபு கொள்ளாவென விலக்கற்படுவன அவையேயாக லானும் அன்றியும் அறஞ்செய்து துறக்கம்புக்கான் உயிர்தீத்தொரு மகன்கிடந்தான் என உயர்திணைக்கேற்ற முடிபுகோடலானுமென்க. குடிமை ஆண்மைமுதலியன இருதிணைக்கண்ணுஞ் சேறன் மாலைய, உலகம் உயிர் உடம்புமுதலியன அனனவல்லவாம்; இவை தம் முள்வேற்றுமை. அவவேறுபாடும் உணர்க. உலகமென்பது இடத் தையும் ஆகுபெயரான் இடத்துங்கிழ்பொருளாகிய மக்கட்டொகுதி யையும் உணர்த்துமாகலான் இருதிணைக்கண்ணுஞ் சென்றதன்மே வெனின், அற்றன்று; வட நூலுள் உலகமென்பது இருபொருட்கும் உரித்தாக ஓதப்பட்டமையான மக்கட்டொகுதியை உணர்த்தும் வழியும் உரியபெயரேயாகலான் ஆகுபெயரன்று. அதனால் ஒரு சொல் இருபொருட்கண்ணுஞ் சென்றதெனப்படாது இருபொருட் கும் உரிமையுடைமையான் இருசொல்லெனவேபடுமென்பது. வே றுபொருள் உணர்த்தலின் வேறுசொல்லாதலே துணிவாயினும் பல பொருளொருசொல் என்புழி எழுத்தொப்புமைபற்றி ஒருசொல் லென்றார். குடிமைமல்லன ஆண்மைமல்லன் என நாறுதிரியாது நின்றாங்குநின்று குடிமை ஆண்மை முதலியன உயர்திணைமுடிபு கொண்டவழியும் உலகர்பசித்தார் காலன்கொண்டான் என நாறு திரித்தற்கேற்பன நாறுதிரிந்து வாய்பாடு வேறுபட்டு உயர்திணைமுடிபு கொண்டவழியும் வழுவின்மையின் வழாநிலையாகலான் சண்டைக்கு எய்தாவென்க. இங்ஙகரனவாய்ச் திணைபால் வழுவி வருவன உள வேல் அவற்றிற்கெல்லாம் இதுவே ஒத்தாக அமைத்துக்கொள்க.(சு)

கூ00. ஒருமை பன்மையும் பன்மை யொருமையு மோரிடம பிறவிடஞ தழுவலு முளவே.

இது முற்கூறிய உவப்புமுதலானவற்றுனன்றி வேறோராற் றும் பால்வழுவும் இடவழுவும் அமைக்கின்றது.

இ - ள். ஒருமைச்சொற் பன்மையும் பன்மைச்சொல் ஒருமை யும் ஓரிடத்திற்கு உரியசொல் பிற இடந்தழுவிநிற்றலும் உள அவ்விடங்கள் அறிந்து அமைத்துக்கொள்க. எ - று.

"அஃதைதந்தை அண்ணல்யானை யடுபோர்ச் சோழர்" என வும் "ஏவலினீயர் தாய்வயிறு கரிப்ப" எனவும் முறையே ஒருமைச் சொற் பன்மைதழுவியும் பன்மைச்சொல் ஒருமைதழுவியும் வந் தன. அங்ஙனம் வருதல் வழுவாயினுஞ் சோழசெல்லாரும் அஃ தைக்குத் தந்தையர்முறையாதலிற் தந்தையென்னும் ஒருமை

சோழரென்னும் பன்மையோடு தனித்தனிசென்று கூடுதலானும் ஒருவற்கு ஒருத்தி தாயாந்தன்மையான் இரையரென்னும் பன்மை தாயென்னும் ஒருமையொடு தனித்தனி சென்றுகூடுதலானும் அமைக்கவென அமைத்தவாறென்பதாம். நீர்பரந்தன பால்சுரந்தன எனவும் சோறுமாண்டது படைவந்தது கண்கிவந்தது முலை வீங்கிற்று "இருநோக் கிவளுண்க ணுள்ளது" "உள்ளியதெல்லா முடனெய்தும்" நாடெல்லாமவாழ்ந்தது ஊரெல்லாம்வாழ்ந்தது எனவும் அஃறிணைக்கண் மயங்கிவருவனவுங் கொள்க. எல்லாமென்பது "மேனியெல்லாம் பசலையாயிற்று" என்பதுபோல எஞ்சாப் பொருட்டாயதோ உரிச்சொல்லாய்நிற்பின் வழாநிலையாம். இனி "இரண்டனுட் கூர்ங்கோட்ட சுடர்வேல்" எனபுழி இரண்டனுளென ஒன்றைவருத்தமையாற் கூர்ங்கோட்டதென ஒருமையாகப் பாலது கோட்ட எனப் பன்மையாய் நிற்றலும் "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி—பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே—யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டுமே" என்பதனுள் கூத்தராற்றுப்படையுட் "கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ" எனபுழித் தலைவ என்கின்ற ஒருமைச்சொல் முடிவுழி "இரும்பெய ரொக்கலொடு பதமிகப் பெறுகுவீர்" என்னும் பன்மையொடு முடிந்ததுவும் உண்டு இதனுளே அமைத்துக்கொள்க.

இன்னும் இதனுளே நம்பிமார்வந்தார் நங்கைமார்வந்தார் அன்னைமார்வந்தார் எனவும் நங்கைமீர்கேண்மின் பாவைமீர்கேண்மின் அன்னைமீர்கேண்மின் எனவும் ஒருமைப்பெயர் அடுத்துநின்று மாரீறும் மீரீறும் பன்மை உணர்த்துவுங் கொள்க. யானெம்மூர்புகுவன் நீதும்மூர்புகுவை என்பனபோல்வன யான்புகுவன் நீபுகுவை என ஒருமையொடு முடிந்துநிற்ப எம்மூர் தும்மூர் என்பன வேறூர்முடிபாய் நிற்றலின் வழாநிலையாம். "மன்றமராத்தபேழுதிர்கடவுள்" என்புழி மராத்தகடவுளென்பது பகுதிப்பொருள் விகுதிபெற்று நின்றது. இவைபோல்வனவன்றி முன்னர்க்காட்டிய உதாரணங்கள்போல மயங்கிவருவன உளவேல் அவற்றையும் இச்சூத்திரத்தானே அமைத்துக்கொள்க. "என்னீ ரறியாதீர் போல விவைகூறி—னின்னீர வல்ல நெடுந்தகாய்" எனவும் "இறப்பத் துணிந்தனிர் கேண்மின் மற்றையிய" எனவும் வருவனபோல்வன எல்லாம் மேலைச்சூத்திரத்தானே அமையும். சாத்தன்றுயிலைசெய்வலோ எனவும் "கல்வி யென்னும் வல்லான் சிறுஅ—ஞெல்லே னல்லனது வாயாகுதலே" எனவும் "நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளு—மென்னையே குறித்த நோக்கமொடு" எனவும் இவை தன்மை படர்க்கைதழீஇயின. "எம்பியையீங்குப்பெற்றே னென்னெனக்கரியதென்றன்"

இது முன்னிலை படர்க்கைதழீஇயிற்று. அங்ஙனஞ் சொல்லப்படுவானே பெருஞ்சாத்தனறந்தை அங்ஙனஞ் சொல்லப்படுவானோ பெருஞ்சாததன்றுய் எனத் தம்மைப் பிறர்போலக் கூறுங் கருத்திஞற்கூறப்படும் படாக்கைச்சொற்கள் தன்மைதழுவுதலும் நீயோ அவனே யாரிதுசெய்தார் யானே அவனே யாரிதுசெய்தார் யானே நீயோ யாரிதுசெயதார் அவனே நீயோ யானே யாரிதுசெய்தார் என விரவி ஒரிடம் பிறவிடந் தழுவுதலும் ரண்டே அமைத்துக் கொள்க. பிறவும் அனன. (சு)

நoக. தரல்வர்ல கொடைசெல லெனவிவை ஈன்கு
மொருமூ விடததிற்கு முரியவன னவற்றுட்
டரலவர தனைமைமுன னிலையையு மேனைய
வேனை யிடதுதையு மெயது மென்ப.

இஃது இடம்வழுவற்கவெனக் காத்தலும் வழுவியமைகவெனக் காத்தலும் நுதலிற்று.

இ - ள். தரலும் வரலுங் கொடையுஞ் செலலுமென்று கூறப்பட்ட இக்ஈன்கு வினைச்சொல்லுந் தன்மை முன்னிலை படாக்கையென்னும் ஒரு மூவிடத்திற்கும் உரியனவாம்; அவவியல்பினவற்றுட் தரலும் வரலுந் தன்மையையும் முன்னிலையையும், ஒழிந்த கொடையுஞ் செலலும் படர்க்கையினையுஞ் சென்று பொருந்துமென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

இசனுள் ஈங்கு முதலாயின தன்மைக்கண்ணும் ஆங்குமுதலாயின படர்க்கைக்கண்ணும் அடக்கப்பட்டன. வினைச்சொல் மூன்றிடத்திற்கும் உரியவாதல் வினையியலுட் பெறப்பட்டமையான் ஈண்டுக் கூறல்வேண்டாவெனின, ஆண்டுப் பாலுணர்த்தும் ஈற்றுரன் இடத்திற்கு உரிமைகூறினர். ஈண்டு ஈற்றுரனன்றித் தரல் முதலாயின முதனிலைதாமே இடங்குறித்து நிற்றலுடைமையான் இவவே றுபாடு ஆண்டுப் பெறப்படாமையின் ஈண்டுக்கூறினரென்பது. போதல் புகுதலென்னுந் தொடக்கத்தனவும் இக்காலத்துச் சில இடங்களிற் பயின்றுவருமாயினும் இக்கிரனவன்றி ஏனையவெல்லாம் மூன்றிடத்திற்கும் பொதுவாகலின் இடஞ் சுட்டும் முதனிலை இவை ஈன்குமென இவற்றையே வரைந்தோதினரென்க.

உ-ம். எனக்குத்தந்தான் நினக்குத்தந்தான் என்னுழைவந்தான் நின்னுழைவந்தான் எனவும் ஈங்குவந்தான் எனவும் அவற்குக்

கொடித்தான் அவன்கட்சென்மூன் எனவும் ஆங்குச்சென்மூன் என வும் ஈற்மூனன்றித் தரப்படும்பொருளும் வரவுதொழிலுங்கொடைப் பொருளுஞ் செலவுதொழிலுந் தன்கண்ணும் முன்னின்மூன்கண் ணும் படர்க்கைக்கண்ணுஞ் சென்று உற்றன. பொதுவிதியான் மூன் றிடத்திற்கும் வரையின்றி ஆமெனவுங் கொள்ளவைத்தமையானே "பெருவிற லமரற்கு வென்றி தந்த—புன்தரு பசுங்காய் தின்றதன் றப்பிற்கு" எனவும் "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" எனவும் சாந்துகொடு எனவும் "அரிமல ராரந்தக ணம்மா வரிவை—திரு முகமும் நிங்களுஞ் சேத்துத்—தெருமந்து—வையத்தும் வானத் துஞ் செல்லா தணங்கரகி—யையத்து நின்ற தரா." எனவும் தன மைமுன்னிலைக்கு உரிய தரலும் வரலும் படர்க்கையிடத்தும் படர்க் கைக்கு உரிய கொடைச்சொல் தன்னைப் பிறனொருவன்போலக் கூறுங் கருத்துவகையாற் தன்னிடத்தும் செலவுதொழில் ஈங்கென் பதுபடநின்ற வையத்திடத்துஞ் சென்று மயங்குதலுங் கொள்க.

உயர்ந்தான் தான் ஏற்பானுகச் சொல்லாது கொடுவெனப் படர்க்கை வாய்பாட்டாற் சொல்லும்; ஆண்டுத் தன்னையே பிறன்போலக் குறி த்தானுகலிற் தன்னிடத்தேயாமென வழுவமைத்துவாரூமென்பது. இனி உயர்ந்தான் தமரொருவனைக் காட்டி இவற்குக் கொடுவென் னும்; என்று உரைப்பின் ஆண்டுப் படர்க்கைச்சொற் படர்க்கைச் சொல்லோடு இயைதலான் வழுவின்மையின் அமைக்கவேண்டா வாம். அதனுன் அஃது உதாரணமன்றென்க. அற்றேற் கொடுவென் பது கொடுப்பதோர் பொருளே ஏற்றற்கு உரிய தான்கனுருபு வந்தால் அதனே முடித்தற்கு வந்த சொல்லாதலின் அவற்கு இவற்கு உவற்கு என்னுஞ் சொற்களே அவாய் அவற்றைமுடித்தே நிற்றல்வேண்டும். வேண்டவே அவற்குக்கொடு என்பதும் அவையில்பிற்றன்மேலெ னின் அன்றென்க. என்னை? தன்னைப் பிறனொருவன்போலக்கூறுங் கருத்துவகையான் எனக்குக்கொடுவென்பதுபட நின்றமையின்.(எ)

நஉஉ. வினைக்கிட நீரது கால மதுதா
னிறப்புகழ் பெதிர்பென் றெருமூ வகைத்தே.

இது வழாஅலோம்பலென மேற்கூறிப் போந்த காலமாவது இன்னதென்பதூஉம் இத்துணைத்தென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். தொழினிகழ்ச்சிக்கு இடமாதற்றன்மையையுடை யது காலமென்பதாம். அக்காலந்தான் தொழிலது கழிவுபற்றிய தூஉந் தொழிலெடங்கப்பட்டி முற்றுப்பெறுத நிலைமைபற்றிய

தூஉந் தொழில் பிறவாமைபற்றியதூஉம் என்று ஒருமூன்று திறத்தினை உடைத்தாம். எ - று.

வரலாறு;—பண்டுண்டான் இன்றுண்ணுநின்றான் நாளையுண்பான் எனவரும். தொழிலாவது பொருளது புடைபெயர்ச்சியாகலின் ஒருகணம் நிற்பதல்லது இரண்டுகணம் நில்லாமையின் நிகழ்ச்சியென்பதொன்று அதற்கில்லையாயினும் உண்டல் இன்றல் வருதலெனப் பஃறொழிற்றொகுதியை ஒருதொழிலாகக் கோடலான் உண்ணுநின்றான உண்ணாநின்றான உண்ணாநின்றனென வராநின்றனென நிகழ்ச்சியுமுடைத்தாகலின் அதுபற்றிவரும் நிகழ்காலமும் உளதாயிற்றென்பது. நிகழ்காலமொன்றுமே உளதென்பாரும் "இறப்புமெதிர்வும்" எனவும் இரண்டென்பாரும "இறப்புநிகழ்பெதிர்பு" எனவும் முன்றென்பாரும் எனப் பலபகுதியா ஆசிரியர். அவருள் முன்றென்பார் மதம்பற்றி மூவகைத்தே எனத் தேற்றேகாரங கொடுத்தார். (அ)

ந�oந. மூக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செபபுவா நிகழுங் காலத் தானே.

இது நிகழ்காலச்சொல் ஏனைக்காலங்களையும் உணர்த்துமென வழுவமைக்கின்றது.

இ - ள். முன்றுகாலத்தினும் ஒருதன்மையவாய் நிகழும் பொருள்களின் வினையைச் சொல்லுவர் சான்றோர் நிகழ்காலச் சொல்லானே. எ - று.

நிகழ்காலச்சொல்லென்றாரேனும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்தி முன்றுகாலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யுமென்னும் முற்றும எச்சமுமே கொள்க.

மலைநிற்கும நீச்சுடும் ஞாயிறியங்கும் திங்களியங்கும் எனவும் "வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந்—தண்கடல் வரைப் பின்" எனவும் வரும். பிறவும் அன்ன. நீச்சுடுமென்றுற் பண்டும் இன்றும் மேலுஞ் சுடுமென்பதனை ஒப்பவிளக்கியவாறு காண்க. இதனானே ஏனை நிகழ்காலச்சொற்கள் ஏலாமை உணர்க. (க)

ந�oச. விரைவினு மிகவினு மியல்பினுந தெளிவினு
மன்னவை யலவழி யானுமுக் காலமு
மேற்புழி மயங்கு மென்மனர் புலவர்.

இஃது எதிர்வும் நிகழ்வும் இறப்பொடு மயங்குமெனவும் இறப்பும் எதிர்வும் நிகழ்வொடு மயங்குமெனவும் எதிர்வு இறப்பொடும்

நிகழ்வொடும் மயங்குமெனவும் இறப்பும் எதிர்வும் நிகழ்வும் ஏனைய வற்றோடுந் தம்முள் மயங்குமெனவும் வழுவமைக்கின்றது.

இ - ள். விரைவுபொருண்மையையுடைய வினைச்சொற்கண்ணும், இருவினைகள் பலவற்றுள்ளுஞ் சிறந்த இருவினைக்கண்ணவாகிய தவஞ்செய்தல் தாயைக்கோறல் முதலிய வினைச்சொல்லே நோக்கி அம்மிக்கதனது திரிபின்றிப்பயக்கும் பண்பைக்குறித்து வருஞ் சுவர்க்கம்புகுதல் நிரயம்புகுதல் முதலிய வினைமுதல்வினைச்சொற்கண்ணும், வழங்கலாற்றான் இங்கு இப்பெற்றித்தென அப்பெற்றியான் ஒருதலையாக அறிந்திருந்த இயல்புபொருண்மைக்கண்ணே நிகழும் வினைச்சொற்கண்ணும், இதுநிகழின் இதுநிகழுமென றானெறியாற் தெளியப்படுங் தெளிவுபொருண்மைக்கண்ணே நிகழும் வினைச்சொற்கண்ணும், விரைவுமுதலிய அத்தன்மையையுடைய பொருண்மையைக்குறியாது வருமிடத்தும், மூன்றுகாலங்களும் பொருந்துமிடத்து மயங்குமென்று கூறுவர் அறிந்தோர். எ - று.

மூன்றுகாலமுந் தம்முள் மயங்குமென்றாரேனும் ஏற்புழியென்றதனானே, சோறுபாணித்தவழி உண்ணுதிருந்தாணப் போகல்வேண்டுங் குறையுடையனெருவன் இன்னும் உண்டியேயோ என்றவழித் தொழில் இறந்தகின்றேனுங் குறிப்பான் இறந்தனவாகக் கருதி உண்டேன்போந்தேன் எனவும் உண்ணுகின்றானை அவனாறு கூறியவழியும் இதோ உண்டேன்போந்தேன் எனவும் விரைவுபற்றி எதிர்வும் நிகழ்வும் இறப்பொடு மயங்குமெனவும், யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும் யாவன் தாயைக்கொன்றான் அவன் நிரயம் புகும் எனவும் ஒருவன் தவஞ்செய்யிற் சுவர்க்கம்புகும் தாயைக்கொல்லின் நிரயம்புகும் எனவும் சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாது இங்ஙனம் பொதுவகையாற்கூறியவழி மிகுதிபற்றி இறப்பும் எதிர்வும் நிகழ்வொடு மயங்குமெனவும், இக்காட்டிற்போகிற் கூறை கோட்படுவனெனற்பாலது கூறைகோட்பட்டான் படுகின்றான் எனவும் எறும்பு மூட்டைகொண்டுதிட்டையேறியது கண்டுழி மழை பெய்வதாமென்னது மழைபெய்தது மழைபெய்கின்றது எனவும் முறையே இயல்புந் தெளிவும்பற்றி எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும் மயங்குமெனவும், இவர் பண்டு இப்பொழிலகத்து வினையாடுவர் எனவும் நாளையவன்வளொடுவெகுண்டுவந்தான் பின் நீ என்செய்குவை எனவும் இவள் பண்டு இப்பொழிலகத்து வினையாடும் எனவும் நாளைவரும் எனவும் விரைவுமுதலிய பொருண்மைகுறியாது முறையே இறப்பும் எதிர்வும், எதிர்வும் இறப்பும், இறப்பும் நிகழ்வும், எதிர்வும் நிகழ்வும் மயங்குமெனவுங் கொள்க.

"வாராக் காலத்து நிகழுங் காலத்து—மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி—யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்—விரைந்த பொருள வென்மனார் புலவர்" எனவும் "மிக்கதன் மருங் கின் வினைச்சொற் சுட்டி—யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி—செய்வ தில்வழி நிகழுங் காலத்து—மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும்மே" எனவும் "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி—யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று—மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலே" எனவும் "இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்—சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி" எனவும் "ஏனைக் காலமு மயங்குதல் வரையார்" எனவும் வருவன ஒத்தாகலின் நியுண்டுவருவாய் உழுதுவருவாய் என இறந்தகாலவினையெச்சம் நின்று முடிக்குஞ்சொல்லின் எதிர்காலத்தோடு மயங்கிவருதலும் ணர்ண்டேயமைத்துக்கொள்க. பிறவும் அன்ன.

யாவினுருவினைனப் பொதுவகையாற் கூறுது சுட்டி ஒருவர் பெயர்கொண்டவழிச் சாசதன் தவஞ்செய்து துறக்கம்புக்கான் தவஞ்செய்யிற் துறக்கம்புகும் என ஏனைக்காலங்களாற் கூறப்படுதலிற் சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாதவழியே மயங்குமென்பது பெறுமாம். தவஞ்செய்தான சுவர்க்கம்புகும் தாயைக்கொன்றான் நிரயம்புகும் என்பன போல்வன இயல்பாக தெளிவாக ஒன்றனுள் அடங்குமெனின், இயல்புந் தெளிவுந் தெய்வத்தானுக பிறிதொன்றனுக தோன்றுதலுடையவாகலானும் அவைபோல இவை தோன்றிலவாகலானும இறந்தகாலத்தாற் கூறப்படாமையானும் அவற்றுள் அடங்காவென்க. யாம் பண்டு வினையாடுங்கா இது என்றாற்போல்வனவற்றை இயல்புள் அடக்குவாரும் உளர். அவை இயல்புபற்றி மயங்காமைக்கு யாம் இயல்புபற்றிய மயங்குவனவற்றிற்குக் காட்டிய உதாரணங்களே சானறுதல அறிக. (கப)

நஂடு. அறிய லுறவுவெளிப் படுப்பது வினுவஂ
தறியாமை யைய மறிவு கொடைகொள
லேவலின் வருஉ மிவையிரு மூன்றனுட்
கடைநிலை நானகு முதனிலை யினைய.

இது வழாஅலோம்பலென மேற்கூறிப்போந்த வினுவாவது இன்னதென்பதூஉம் இத்துணைத்தென்பதூஉம் அதன் வழுவமைதியும் உணர்த்துகின்றது.

இ - ள். அறியலுறவு வெளிப்படுப்பதாகிய சொல் வினுவென்பதாம். அதுதான் அறியாமையும் ஐயமும் அறிபொருளுங் கொடுத்

தலுங் கொள்ளுதலும் ஏவலுமாகிய இவற்றின்கண் வெளிப்படும். அங்ஙனம் வெளிப்படும் இவ்வறுவகை விஞவுள்ளும் இறுதிக்கண் நின்ற நான்கும் முதற்கண் நின்ற இரண்டனோடு ஒக்கும். எ - று.

அறியான்விஞ உயிரெத்தன்மைத்தென விஞவுவது. ஒருபு டையானும் அறியப்படாத பொருள் விஞவப்படாமையிற் பொது வகையான் அறியப்பட்டுச் சிறப்புவகையான் அறியப்படாமை நோக்கி அறியான்விஞவாயிற்று. ஐயவிஞக் குற்றியோமகனே தோன்றுகின்ற உருவென விஞவுவது. அறிபொருள்விஞ அறியப் பட்டபொருளேயே வேறு அறிவும் அறிவுறுத்தலும் முதலிய பயன் நோக்கி அவவாய்பாட்டின் ஒன்ரூன் விஞவுவது. கொடுத்தற்கண்வ ரும் விஞச் சாத்தனுக்கு யடையில்லையோ என விஞவுவது. கோ டற்கண்வரும் விஞ மணியுளவோ வயிரமுளவோ என விஞவுவது. ஏவற்கண் வரும் விஞச் சாத்தா உண்டாயோ என விஞவுவது. பிறவும் அன்ன. கை.நிலைகான்ரும் அறியலுறவுவெளிப்படுப்பன அன்மையின் வழுவாமாயினும் விஞவாய்பாட்டான் விஞவப்படு தல் நோக்கி அமைக்கப்படுதலின் வழாநிலையாகிய முதனிலையனைய என்ரூர். அறிபொருள்விஞவின்கண்ணே அறிவொப்புக்காண்டலும் ஐயம் அறுத்தலும் அவன் அறிவு தான் கோடலும் மெய்யவற்குக் காட்டலும் அடங்கும். இனிக் கொடைமுதலிய மூன்றனையும் இதன்கண்ணே அடக்கி விஞ முன்றென்பாரும் உளர். (கக)

கூ0சு. யாதெவ னெனனு மாயிரு கிளவியு
மறியாப பொருளவயிற் செறியத தோன்றும்.

இது விஞச்சொற்கருட் சிலவற்றிற்குப் பொருள்பற்றி வரை யறை கூறுகின்றது.

இ - ள். யாது எவினெனனும் அவவிரண்டு சொல்லும் அறி யாப்பொருளிடத்து விஞவாய் யாப்பறத்தோனறும். எ - று.

இச்சொற்குப் பொருள்யாது? இச்சொற்குப் பொருளெவன்? என வரும். சண்டும் அறியாப்பொருளென்றதற்கு மேலுரைத தாங்கு உரைக்க. இக்காலத்து எவினென்பது என்னென்றும் என் னையென்றும் மருவிவழங்கும்.

யா யாவை யாவன் யாவள் யாவர் யார் யாண்டு யாங்கு என் னுந் தொடக்கத்தன திணையும் பாலும் இடமும் முதலாகிய சிறப் புவகையானுஞ் சிறிது அறியப்பட்ட பொருளவாகலின் அவை

அறியாப்பொருள்வயிற் செறியத்தோன்முமையின் இவற்றையே விதந்து அறியாப்பொருள்வயிற் செறியத்தோன்றும் என்றார். இவையுந் நிணையும் பாலுங் குறித்துவருதலிற் சிறப்புவகையானும் அறியப்பட்ட கொருளவன்றேவெனின், இச்சொற்குப் பொருள் யாது? இச்சொற்குப்பொருளெவன்? என்று வினயவழி, வினவுகின் றூன் அஃறிணையொருமையும் பொதுமையுந் துணிந்து அவற்றின்ப குதி அறிதற்கு வினவாது பொதுவகையான் வினவுதலும், இறுப்பா னும் பொதுவகையான் வினயினனென்று உணர்தலும் வழக்கின கத்து அவவிருவரது குறிப்பொடுபடுத்து உணர்க. (கஉ)

கூ0எ. அவற்றுள், யாதென வருஉம் வினவின் கிளவி
யறிந்த பொருள்வயி னீயத் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு மூரித்தே.

இஃது அவற்றுள் ஒன்று அறிந்தவழியும் வருமென்கின்றது.

இ - ள். முற்கூறப்பட்ட இரண்டனுள் யாதென்னும் வினாச் சொல் அறியப்பொருள்வினா ஆதலேயன்றி அறிந்தபொருட்கண் ஐயம் நீக்குதற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து. எ - று.

உ-ம். இம்மரங்களுட் கருங்காலி யாது? நம்மெருதைத்தனுட் கெட்ட எருது யாது? எனவரும். நமருள் யாவர்போயினர்? அவற் றுள் எவவெருது கெட்டது? எனப் பிறவும் அறிந்தபொருள்வயின் ஐயந்தீர்தற்குத் தெரிந்த கிளவியாய் வருதலின் அவையும் ஈண்டே அமைக்கற்பாலவெனின், அவை அறிந்தபொருள்வயின் ஐயந்தீர்தற் கல்லது யாண்டும் வாராமையின் ஈண்டு அமைக்கப்படாவென்பது.

கூ0அ. வினய பொருளறி வுறுப்பது செப்பது
செவ்வ னிறையு மிறைபயப பதுவு
மெனவிரு வகைத்தா மவற்றுளிறை பயப்பது
வினவெதிர் வினதலு மேவலு மறுத்தலு
முற்ற துரைத்தலு முறுவது கூறலு
நேர்தலுஞ் சொறெருரூத் திறுதலு மெனனத்
தேரி னேரேழ் திறனுடைத் தெனப.

இது வழாஅலோம்படலென மேற் கூறிப்போந்த இறையாவது இன்னதென்பதூஉம் இத்துணைத்தென்பதூஉம் அதன் வழுவமை தியுங் கூறுகின்றது.

இ - ள். விளைய பொருளை அறிவுறுப்பதாகிய சொல் இறையென்பதாம். அது செவவனிறையும் இறைபயப்பதுமென இரண்டு பகுதியையுடைத்தாம். அவற்றுள் இறைபயப்பது விளுவெதிர் விளுதலும் ஏவுதலும் மறுத்தலும் உற்றதுரைத்தலும் உறுவதுகூறலும் உடம்படுதலுஞ் சொற்றெருத்திறுத்தலுமென ஆராயுங்காலத்து ஓரேழ்வகையினை உடைத்தாமென்று கூறுவர் அறிந்தோர். எ - று.

உ-ம். உயிர் எத்தன்மைத்து? என்று விளையவழி உணர்த்தற்றன்மைத்தென்றும், இச்சொற்குப்பொருள்யாது? கருவூர்க்குவழியாது? என்று விளையவழி இதுவென்றுஞ், சாத்தா உண்டியோ? என்று விளையவழி உண்ணேனென்றும் உண்பலென்றும், இங்ஙனஞ் செவவனே இறுப்பனவெல்லாஞ் செவவனிறையாம்; இனி இவவாறன்றிச் சாத்தா உண்டாயோ? என்று விளையவழி உண்ணேனே? என்றும் நீயுண் என்றும் வயிறு குத்துகின்றது என்றும் வயிறுகுத்திற்று என்றும் வயிறுகுத்தும் என்றும் பசித்தேன் பொழுதாயிற்று என்றும், பயறுளவோவணிகீர்? என்று விளையவழி உழுந்தல்லதில்லை இத்துணைப்படறல்லதில்லை என்றும் இங்ஙனம் இறுப்பனவெல்லாம் ஒருவாற்றான் உண்பல் உண்ணேன் இல்லை என்பன பயத்தலான் இறைபயப்பனவாம். உண்பல உண்ணேன் இல்லை எனச் செவவனே இருது தான் ஒன்றை விளுவுவான்போன்றும் ஒருவனே ஏவுவான்போன்றும் உருகின்றதனையும் உற்றதனையும் உறுவதனையும் உடம்படுதற்கு இயைவனவற்றையும் உரைப்பான்போன்றுஞ் சொல்லைத் தொகுப்பான் பிறிதொருபொருளைக் கூறுவான்போன்றும் இறுத்தலாற் செப்புவழுவாயினும் விளையபொருளை ஒருவாற்றான் அறிவுறுத்தலின் அமைந்தவாறு காண்க. செப்பு உத்தரமென்பதனோடு ஒருபொருட்கிளவியாகலின் விளையபொருளை அறிவுறுத்தலே செப்பிற்கு இலக்கணமாமென்க.

அற்றேற் குமரியாடிப்போந்தேன் ஒருபிடிசோறுதம்மின் என விளுவின்றி நிகழ்ந்தசொல் யாண்டு அடங்குமெனின், தேரினென்றதனானே அறியலுறுதலை உணர்த்தாது ஒன்றனை அறிவுறுத்துநிற்றலிற் செப்பின்பாற்படும் என்க. மறுத்தலைப் பயப்பதனை மறுத்தலென்றும் நேர்தலைப் பயப்பதனை நேர்தலென்றுங் கூறினார் ஆசிரியரான் என்பது. (கச

உ0கூ. செப்பினும் விளுவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்த்துணைப் பொருளே.

இது செப்புவழாநிலைக்கண்ணும் விளுவழாநிலைக்கண்ணும் பொருளாராய்ச்சியுள்வழி வழுவற்க என்கின்றது.

இ - ள். செப்புவழாநிலைக்கண்ணும் விளுவழாநிலைக்கண்ணுஞ் சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் உறழ்பொருளுந் துணைப்பொருளும் அவ்வப்பொருளுக்கு அவவப்பொருளேயாம். எ - று. 5

எனவே, சினையும் முதலுந் தம்முள் மயங்கிவருதல் வழுவென்பதாயிற்று. உறழ்பொருளாவது ஒப்புமைகூறுது மாறுபடக் கூறப்படுவது. துணைப்பொருளாவது ஒப்புமைகூறப்படுவது.

உ-ம். இவள்கண்ணின் இவள்கண்பெரிய தும்மரசனின் எம்மரசன் முறைசெய்யும் எனவும், இவள்கண்ணின் இவள்கண்பெரிய வோ? எம்மரசனின் தும்மரசன் முறைசெய்யுமோ? எனவும், இவள்கண் ஒக்கும் இவள்கண் எம்மரசனை ஒக்கும் தும்மரசன் எனவும், இவள்கண் ஒக்குமோ இவள்கண்? எம்மரசனை ஒக்குமோ தும்மரசன்? எனவும் வரும். "கோலினுந் தண்ணிய தடமென் றோளே" எனவும் "துளிதலைத் தலைய தளிரன் னோளே" எனவும் மயங்கிவந்தன வழுவாம்பிறவெனின், அவை செய்யுள்பற்றி வரும் உவம வழுவாகலின் ஈண்டைக்கு எய்தாவென்க. இம்மகள்கண் நல்லவோ கயல் நல்லவோ? என வழக்கின்கண்ணும் மயங்கிவருமாலோவெனின், உண்மையுணர்தற்கு விளையதன்றி ஐயவுவமைவாய்பாட்டாற் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின் அன்னவையெல்லாம் உரையென்னுஞ் செய்யுளாமென்க. தன்னினமுடித்தலென்பதனாற் பொன்னுந் துகிரும் முத்தும் மணியுமென எண்ணுங்காலும் இனமாய பொருளே எண்ணப்படுமென்பது கொள்க. (கடு)

ஙகo. இல்ல தல்ல திலலதனு னில்லெனி
னப்பொரு ளல்லாப் பிறிதுபொருள கூறியு
மப்பொருள் கூறி யகற்றி னப்பொருளினைச்
சுட்டியு மாற்றுவர் சொற்சுருங் குகற்கே. உ

இது சொற்றெருத்திறுத்தலுமென முற்கூறப்பட்ட செப்பிலக்கணங் கூறுகின்றது.

இ - ள். தன்னுழை இல்லாத பொருளேயல்லது இல்லையென் 3
னும் வாய்பாட்டான் இல்லையெனல் உறுவராயின் வினையபொருள் தன்னையே கூறுது அப்பொருளல்லாத பிறிதுபொருளைக் கூறியும், பிறிதுபொருளைக் கூறுது அப்பொருள் தன்னையே கூறி இல்லையெ

னல் உறுவராயின் அப்பொருளைச் சுட்டியும், இல்லையென்றுகூறி மறுப்பர் வினயதன் புறத்துச் சொற்பல்காமற்பொருட்டு. எ - று.

உ-ம். பயறுளவோ வணிகீர்? என்று வினயவழி உழுந்தல்ல திலலை கொள்ளல்லதிலலை எனவும் இப்பயறல்லதிலலை இவையல்ல திலலை எனவும் தன்னுழை இல்லதனையல்லது இல்லென்னும் வாய் பாட்டான் இல்லையென்பான் பிறிதுபொருள்கூறியுஞ் சுட்டிக்கூறி யும் மறுத்தவாறு காண்க.

தன்னினமுடித்தலென்பதனுற் பசும்பயறல்லதிலலை பெரும்ப யறல்லதிலலை எனக் கிளந்துகூறுதலுங் கொள்க. இவையல்லதிலலை யென்புழி முன்னர்க்கிடந்த பயறு காட்டி இவையென்றுனுகலின் அது பொருளொடுபுணராச் சுட்டுப்பெயராயினும் பொருள்வேறுப டாது இப்பயறெனப் பொருளோடு புணர்ந்த சுட்டுப்பெயரேயா மெனக் கொள்க. அல்லதிலலதனுனில்லெனின் அப்பொருள்பற்றி ஓதினுராகலின் அல்லதில்லெனும் வாய்பாடேயன்றி உழுந்தன்றி யில்லை கொள்ளன்றியில்லை என்பனபோல அப்பொருள்படுவன வெல்லாங்கொள்க.

அப்பொருளல்லாப் பிறிதுபொருள்கூறியுமெனப் பொதுப்ப டக் கூறினுரேனும் பயற்றுன் முடிக்குங் குறையும் உழுந்தான் முடி தலிற் பயறுளவோ என்று வினயவழி உழுந்தல்லதில்லை கொள் ளல்லதில்லை என அதற்கு இனமாகிய பிறிதுபொருளைக் கூறி இல் லென்பதே இயைபுடைத்தெனக் கொள்க. அன்றியும் பாம்புணிக்க ருங்கல்லும் பயறும் விற்பானெருவனுழைச்சென்று பயறுளவோ என்றவழிப் பாம்புணிக்கருங்கல்லல்லதில்லை என்றுற்படும் இழுக் கின்மையின் இனப்பொருள்கூறுது பாம்புணிக்கருங்கல்லல்லதில் லை எனப் பிறிதுபொருள்கூறினும் இழுக்கின்றெனவுமொன்று. பயறுளவோ என்று வினயவழிப் பயறில்லையென்றல் செவவனி றையாகலின் வழுவின்மையான் அங்ஙனம் இறுது பிறிதுபொருள் கூறியுஞ் சுட்டிக்கூறியும் இறுத்தலல்லது இல்லென்னும் வாசகத் தாற் சொற்றெருத்திறுப்பான் இறுத்தலே என்று உணர்க. இவ வாறு சொற்றெருத்திறுத்தல் ஆசிரியர் தொல்காப்பியனுர்க்குங் கருத்தென்பது சேனவரையருரையான் உணர்க. (கசு)

ங்கக. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பினு ரப்படிச் செப்புதன் மரபே.

இது முற்கூறிப்போந்த மரபாவது இத்தன்மைத்தென்று அதன் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள். யாதொருபொருளே யாதொருசொல்லான் யாதொரு நெறியாற் கல்லியால் நிறைந்த தொல்லாசிரியர் ஐம்பெருங்காப்பியம் எண்பெருந்தொகை பத்துப்பாட்டுப் பதினெண்கீழ்க்கணக்கு முதலிய இலக்கியங்களுள் ஞும் விரிந்த இலக்கணநூலுள் ஞும் வழக்கத்துங் கூறினுர் அப்பொருளே அச்சொல்லான் அந்நெறியாற் கூறுதல் முற்கூறிப்போந்த மரபிற்கு இலக்கணமாம். எ - று.

எனவே, தனிமொழி சமயவாற்றலாற் பொருள் உணர்த்துமென்றதனே வலியுறுத்திற்றென்பதுஉமாயிற்று. உதாரணம் முன்னர்க்காட்டிஞும். (கஎ)

நகஉ. பொருண்முத லாறு மடைசேர் மொழியின முள்ளதற் குரித்தில லதறகு மொரோவழி.

இது விசேடிக்குஞ்சொல் இனமுள்ளதற்குக் கொடுத்தல் அதுவதன் பொதுமையினீக்கி விசேடித்தலின் மரபாமாகலான் உரித்தென்றும், இனமில்லதற்குக் கொடுத்தல் அதுவதன் பொதுமையினீக்கி விசேடித்தலின்முயினுஞ் செய்யுட்கண் அணியாயும் வழக்கின்கட் பட்டாங்குபடவும் நிற்றலிற் சிறுபான்மை உரித்தென்றும் மரபுவழாநிலையும் மரபுவழுவமைதியுங் கூறுகின்றது.

இ - ள். பொருள் முதலாகிய ஆறனையும் அடையாக அடுத்து வருஞ் சொல் இனப்பொருளைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படும் பொருட்கு உரித்தாம், அங்ஙனம் விசேடிக்கப்படாத பொருட்கும் ஒரோவிடத்து உரித்தாம் இருவகை வழக்கின்கண்ணும். எ - று.

உ-ம். "பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கம்" "கான்யாற்ற டைகரை" "மூங்காட் பிறையின் முளியாது வளர்ந்தது" "கலவமா மயிலெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா" "சிறுகோட்டுப் பெரும் பழந் தூங்கி யாங்கிவள்" "ஆடுபோம் பெனப்புடை யகன்ற வல்குன் மேல்" எனவும் நெய்க்குடம் குளநெல் கார்த்திகைவிளக்கு பூத்தோடு கருங்குவளே குறுங்கூலி எனவும் "பொற்கோட் டிமயமும் பொதியிலும் போன்றே" "வடவேங்கடத் தென்குமரி" "வேனிற் கோங்கின் பூம்பொகுட் டன்ன" "சிறகர் வண்டு செவவழி பாட" "செஞ்ஞாயிற்றுணிலவு வேண்டினும் வெண்டிங்களுள்வெயில் வேண்டினும்" கோட்சுரை எனவும் உப்பளம் ஊர்மன்று சிறுகாலை காலி

மாடு செம்போத்து தோய்தயிர் எனவும் செய்யுட்கண்ணும் வழக்கின்கண்ணும் முறையே பொருண் முதல் ஆறும் அடைசேர்மொழி இனமுள்ளதற்கும் ஒரோவழி இனமில்லதற்கும் உரித்தாயவாறு காண்க. பிறவும் அன்ன. (கஅ)

ஙகஙட. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தலுஞ்
செயற்கைப பொருளே யாகக மொழி கூறலு
மாககங் காரண முதற்றே யாகலு
மாககங் காரண மினறியும வழககிடைப்
போககின் றுதலுமப போற்றினர் கொளலே.

இஃது இயற்கைப்பொருள்மேலுஞ் செயற்கைப்பொருள்மேலுஞ் சொல் நிகழ்த்தும் மரபு கூறுகின்றது.

இ - ள். தன் இயல்பிற் திரியாதுநின்ற பொருளை அதன் இயல்பு கூறுங்கால் ஆக்கமுங் காரணமுங் கொடாது இவவியல்பிற்றெனச் சொல்லுதலுங், காரணத்தாற் தன்மை திரிந்த பொருளை அதன் திரிபு கூறுங்கால் ஆக்கங் கொடுத்துச் சொல்லுதலும், அங்ஙனஞ் சொல்லுங்கால் அவவாக்கச்சொற்றன் காரணச்சொல்லை முன்னுக உடைத்தாதலுங், காரணம் முதற்றெனப்பட்ட ஆக்கச் சொற் காரணமின்றி வரினும் வழக்கிடத்துக் குற்றமின்றுகலும் பாது காத்து அறிந்துகொள்க. எ - று.

இயல்பு, பொருட்குப்பின் தோன்றுது உடனிகழுந்தன்மை.

உ-ம். நிலம்வலிது நீர்தண்ணிது தீவெய்து வளியுளரும் உயிருணரும் எனவும், கடிக்கலந்த கைபிழியெண்ணெய் பெற்றமை றன் மயிர் நல்லவாயின,எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமை யாற் பைங்கூழ் நல்லவாயின, நீர்கலத்தலான் நிலம் மெலிதாயிற்று, தீச்சார்தலான் நீர் வெய்தாயிற்று எனவும் மயிர்நல்லவாயின பயிர் நல்லவாயின நிலம்மெலிதாயிற்று நீர்வெய்தாயிற்று எனவும் வரும்.

இற்றென்பது வினைக்குறிப்புவாய்பாடாயினும் உளரும் உணருமென்னுந் தெரிநிலைவினையும் இற்றென்னும் பொருள்பட நிற்றலின் இற்றெனக்கிளத்தலேயாமென்பது. சேற்றுநிலம் மிதித்து வன்னிலம் மிதித்தான் நிலம்வலிதாயிற்று என்றவழி மெலிதாயது வலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்துநிற்றலிற் செயற்கைப்பொருள் ஆக்கமொடுவந்ததாமல்லது இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்ததன்றும். ஆக்கங் காரணமின்றியும் வழக்கிடைப் போக்

கின்றெனவே செய்யுளிடத்து ஆக்கமுங் காரணமும் பெற்றேவரும் என்பதாயிற்று. "வருமழைய வாய்க்கொள்ளும் வாடாச்சீர் வண் கைக்—கருமுருகன் சூடிய கண்ணி—திருதுதா—லின்றென் குரற் கூந்தற் பெய்தமையாற் பண்டைத்தன்—சாயல வாயின தோள்" என இது காரணமும் ஆக்கமும் பெற்றது. உம்மை எதிர்மறையா லான் வழக்கிடத்துங் காரணங்கொடுத்துச் சொல்லுதலே வலிய டைத்தென்பது. "அரியகானஞ் சென்றோர்க்—கெளியவாகிய தட மென்றோளே" எனவும் "நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு—நல்லவாஞ் செல்வஞ் செயற்கு" எனவும் செயற்கைப்பொருள் செய் யுளிடத்துக் காரணமின்றியுங் "தெரிகணை யெஃகந் திறந்தவா யெல் லாங்—குருதி படிந்துண்ட காக—முருவிழந்து—குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா—றப்பியா ரட்ட களத்து" என ஆக்கமின்றிக் காரணம் அடுத்தும் மயிர்நல்ல பயிர்நல்ல என ஆக்கமுங் காரணமும் இன்றியும் வந்தனவாலெனின், முறையே களவுகாலத்தரியன கற் புக்காலத்து எளியவாயின என்பது கருத்தாகலின் அக்காலங் கார ணமென்பது பெறப்படுதலானும் ஊழானென்பது அதிகாரத்தாற் பெறப்படுதலானுங் காரணமின்றி வந்ததெனப்படாதெனவுங் "குக் கிற்புறத்தசிரல்வாய" என்புழி ஆக்கம் விகாரத்தாற் தொக்குநின்றதா கலின் ஆக்கமின்றி வந்ததெனப்படாதெனவும் மயிர்நல்ல பயிர்நல்ல என்புழி அந்நன்மை பொருட்குப்பின் தோன்றுது உடன்றோன் றிற்றேல் இயற்கையாம் அவ்வாறன்றி முன் தீயவாய்ப் பின் நல்ல வாயினவழி அத்தீமை காணுதான் மயிர்நல்ல பயிர்நல்ல எனினும் இழுக்கின்றுகலான் ஆக்கமுங் காரணமுமின்றி வந்ததெனப்படாதெ னவும் மறுக்க. இவ்வாறு செயற்கைப்பொருள்மேற் சொல் நிகழ்த் துதலே மரபென்பது ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங் கருத்தாதல் எடுத்தோத்தானுஞ் சேனவரையரை உள்ளிட்ட உரையாசிரிய ருரையானும் உணர்க. அவ்வாறு உணராதார் "காரண முதலா வாக்கம் பெற்றுங்—காரண மின்றி யாக்கம் பெற்று—மாக்க மின்றிக் காரண மடுத்து—மிருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்' எனத் தாம் வேண்டியவாறே கூறுப. (கக)

கக. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செயுட்கே.

இஃது அடையுஞ் சினையும் முதலுந் தம்முட் தொடருமவ ழிப் படுவதோர் மரபுகூறுகின்றது.

இ - ள். பண்புச்சொல்லுஞ் சினைச்சொல்லும் முதற்சொல்லும் இங்ஙனங் கூறப்பட்ட முறையே தொடர்தலும் இரண்டு பண்புச்சொல் முதற்சொல்லோடு தொடர்தலும் வழக்கினிடத்து மரபாம். இரண்டு பண்புச்சொற் சினைச்சொல்லோடு தொடர்தலும் பிறவும் மயங்கிதொடர்தலுஞ் செய்யுளிடத்து மரபாம். எ - று.

வரலாறு;—செங்காஞரை நெட்டிலைத்தெங்கு பெருந்தலைச் சாத்தன் எனவும் சிறுகருகாக்கை இளம்பெருங்கூத்தன் எனவும் "சிறுபைந் தூவியிற் செயிரறச் செய்த" "கருநெடுங் கண்டரு காம நோயே" எனவும் "கவிசெந் தாழைக் குவிபுறத் திருந்த—செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவா—வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி" எனவும் "பெருந்தோட் சிறுதுசுப்பிற் பேரமர்க்கட் பேதை" எனவும் வரும். பிறவும் அன்ன. (20)

கூகரு. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்
வினைப்படு தொகுதிக கண்ணும பொருண்முத
லவற்றொடு படுத்தற் கண்ணு மூறையே
முற்று மெச்சமு மாயீ ரும்மையுங
தெற்றெனப் பெறுதல் செவ்வி தென்ப.

இது வரையறையுடைய பொருள்மேலும் உலகத்தில்லாத பொருள்மேலுஞ் சொல் நிகழ்த்துழிப் படிவதோர் மரபுகூறுகின்றது.

இ - ள். கேட்போரான் இத்துணையென்று அறியப்பட்ட பொருள்முதலிய அறுவகைப்பொருள்களும் உலகத்தில்லாத பொருள்களும் முடிக்குஞ்சொல்லோடு படுத்தொகுதிப்பெயர்க்கண்ணும், பொருளும் இடமுங் காலமும் முதலியவற்றோடு படுத்திக் கூறுதற் கண்ணும் முறையே முற்றும் எச்சமுமாகிய அவ்விரண்டு உம்மையுந் தெளியப்பெறுதல் மரபென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

தமிழ்நாட்டுமூவேந்தரும்வந்தார் உலகமூன்றுமொருங்குணர்ந்தான் காலமூன்றுங்கண்டான் கண்ணிரண்டுஞ்சிவந்தான் சுவையாறுமுடைத்திவ்வடிசில் கதியைந்துமுடைத்திக்குதிரை எனவும் "உறற்பால நிக்க லுறுவர்க்கு மாகா" பவளக்கோட்டுநீலயானை சாதவாகனன்கோயிலுள் ளுமில்லை குருடுகாண்டல்பகலுமில்லை எனவும் முறையே இனைத்தென்றறிபொருள் முற்றும்மையும் உலகினிலாப் பொருள் எச்சவும்மையும் பெற்றவாறு காண்க. பிறவும் அன்ன.

இணைத்தென்றறிபொருளெனவே முன்னறியப்படாக்காற் தமிழ்நாட்டிற்கு வேந்தர்மூவர் எனவும் பொருண்முதலவற்றோடு படுத்தற்கண்ணெனவே அவற்றோடுபடுத்தாதவழிப் பவளக்கோட்டு நீலயானையில்லை எனவும் உம்மைபெறுதும் வருமென்பதாம். "நான் மறை முதல்வர் வந்தார்" ஐங்கலைநாகமுடன்றது என்புழி இனைத் தென்றறிபொருளாயினும் வினைப்படுதொகுதியன்மையின் உம்மை பெறுவாயின. அஃதேற் "பன்னிரு கையும் பாற்பட வியற்றி" என் புழியுந் தொகுதிப்பெயர் வினையோடு தொடராது கையென்பத னோடு ஒட்டிநிற்றலின் வினைப்படுதொகுதியன்றுகலான் உம்மை வேண்டாபிறவெனின், அங்ஙனம் ஒட்டிநின்றதாயினும் நான்மறை முதல்வர் ஐங்கலைநாகமென்பன போலாது இருசொல்லும் ஒருபொ ருள்மேல் வருதலிற் கையென்பதனோடு ஒட்டியியைந்த இயற்றி யென்னும்வினை தொகுதிப்பெயரோடும் இயைந்ததாம், அதனுன் அது வினைப்படுதொகுதியாமாகலின் உம்மைவேண்டுமென்க. அற் றேற் கண்ணிரண்டுங்குருடு எருதிரண்டும்மூரி எனப் பெயர்கொண்ட வழி உம்மைபெறுமாறென்னையெனின், பெயராக வினையாக முடி க்குஞ்சொல்லொடு படுதலே சண்டு வினைப்படுதலாகலின் அவையும் வினைப்படுதொகுதியாமென்க. "இருதோ டோழர்பற்ற" எனவும் "ஒண்குழை யொன்றுல்கி யெருத்தலைப்ப" எனவும் உம்மையின் றிவந்தன உம்மை செய்யுள்விகாரத்தாற் தொக்குநின்றன எனப் படுமென்பதாம். (உக)

நகசு. படர்க்கைமுப் பெயரோ டுணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க ளெங்கு
மருவும் வழக்கிடைச் செய்புட் கேற்புழி.

இஃது ஒருபொருளுணர்த்தும் இருபெயரிடத்து வழுவற்கவெ னவும் வழுவியமைகவெனவுங் காக்கின்றது.

இ - ள். படர்க்கையிடத்தவாகிய உயர்திணைப்பெயரும் அஃ றிணைப்பெயரும் விரவுப்பெயருமாகிய மூன்றுபெயரோடுஞ் சுட்டுப் பெயர் தொடர்ந்துவருமாயின், அங்ஙனம் வருமிடத்து ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் பிறிதுவினைகொண்டு முடியுமாயிற், சுட்டுப்பெயர் அம்மூவகைப்பெயர்க்கும் பின்னுகவரும்; அவ்வாறு முடியாது பெயர்கொண்டு முடியுமாயின், அம்முடிபிற்கு முன்னும் பின்னும் வரும்; வழக்கிடத்து: செய்யுளிடத்து இவ்வரையறை யின்றி முன்னும் பின்னும் வரும். எ - று.

ஏற்புழிக் கோடலான் அம்மூவகைப் பெயர்களின் பின்னிற் றற்கு உரிய அகரச்சுட்டே கொள்க.

உ-ம். நம்பிவந்தான் அவற்குச்சோறுகொடுக்க. நங்கைவந் தாள் அவட்குப்பூக்கொடுக்க எனவும் எருதுவந்தது அதற்குப்புல்லி கெ குதிரைவந்தது அதற்குமுதிரைகொடுக்க எனவும் சாத்தன்வந் தான் அவற்குச்சோறுகொடுக்க சாத்திவந்தாள் அவட்குப்பூக்கொ டுக்க முடவன்வந்தான் அவற்குச்சோறுகொடுக்க முடத்திவந்தாள் அவட்குப்பூக்கொடுக்க எனவும் நம்பி அவன் அவன் நம்பி நங்கை அவள் அவள் நங்கை எனவும் எருதுஅது அது எருது குதிரை அது அதுகுதிரை எனவும் சாத்தன் அவன் சாத்தன் அது அவன்சாத்தன் அதுசாத்தன் சாத்தி அவள் சாத்தி அது அவள்சாத்தி அதுசாத்தி என வும் முறையேகாண்க. அவன்வந்தான் நம்பிக்குச்சோறுகொடுக்கவெ னின், அவனும் நம்பியும்வேறும் அவன்வருந்துணையும் நம்பி சோறு பெறுதிருந்தானுவான்செல்லுமாகலின் அங்ஙனங்கூறற்க என மரபு வழுவுக்க என்றவாறுமென்பது. "அவனணங்கு நோய்செய்தா ஞயி ழாய்வேலன்—விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகன மர்ந்—தன்னே யலர்கடப்பந் தாரணியி னென்னேகொல்—பின்னேய தன்கண் வினவு" எனச் செய்யுட்கட் சுட்டுப்பெயர் முன்வந்தது. பின்வருதல் வந்துழிக்காண்க. சேந்தன் இயற்பெயர். செய்யுளாக வின் அமைகவென வழுவமைத்தவாறுமென்பது. பெயர்கொண்டு முடிவுழி வழுவின்மையின் அதற்கு வழுவமைத்தலின்று. பெயர்க்கு எங்கும் வருமென வழுவற்கவென்றவாறுமென்பது.

இனிச், சாத்தன்கையெழுதுமாறுவல்லன் அதனுற்றந்தையு வக்கும், சாத்திசாந்தரைக்குமாறுவல்லள் அதனுற்கொண்டானுவக் கும் எனச் சுட்டு முதலாகிய காரணக்கிளவியுஞ்; சாத்தன்வந்தான் அஃதரசர்க்குத்துப்பாயிற்று, இழவன்பிரிந்தான் அதனைக் இழத்தியு ணர்ந்திலள் எனக் காரணமின்றித் தொடர்மொழிப்பொருளைச் சுட் டிவருஞ் சுட்டுப்பெயருந் தன்னினமுடித்தலாற் சுட்டுப்பெயர் இயற் கையிற் செறியத்தோன்றுதல் கொள்க. சுட்டுமுதலாகிய காரணக் கிளவி உருபன்று, உருபு ஏற்ற சுட்டுப்பெயரோடு ஒருதன்மைத் தாகிய இடைச்சொல்; என்னை? அது பிளவுபடாது ஒன்றுபட்டு இசைத்தலின். (உஉ)

நூகள. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
தவந்தொழில் கல்வி சினைகுணஞ் சிறப்போ
டியற்பெய ரேற்றிடற் பின்வர லியல்பே.

இஃது ஒருபொருணர்த்தும் இருபெயர் வழுவற்கவெனக் காக்கின்றது.

இ - ள். திணைப்பெயர் முதலிய பெயர்வகை பதினொன்று டனே இயற்பெயர் பொருந்திவருமாயின் அஃது ஏனைப்பெயர்க ளுக்குப் பின்னே வருதல் மரபு. எ - று.

ஈண்டுச் சிறப்பென்றது மன்னர் முதலாயினோரைப் பெறும் வரிசை.

வரலாறு:—குன்றவன்குறவன் அருவாளனழகன் பார்ப்பான் பாராயணன் சேரமான்சேரலாதான் ஊர்கிழானோணன் முனிவன கத்தியன் நாடகமெம்பி தெய்வப்புலவன்திருவள்ளுவன் குருடன் கொற்றன் மெய்யன்மேற்றிசைகின்முன ஏனதிகல்லுதடன் என வரும். பிறவும் அன்ன. இங்ஙனம் வருதல் ஏற்புழிக்கோடலான் ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் வந்தான் சென்முன் என் முற்போல வினைக்கு ஒருங்கு இயலுங்காலத்தெனக்கொள்க. திரு விரவாசிரியன்; மாந்தக்கொங்கேனதி என இயற்பெயர்முன் வந்தன வாலெனின் அவை தொகைச்சொல்லாதலான் அவற்றின்கண்ண தன்று இவ்வாராய்ச்சியென்க. ஆண்டு இயற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகை ஆராய்ச்சிக்கட்பெறுதும். (உங)

நகஅ. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழிலவேறு கிளப்பி னொன்றிட னிலவே. ஙக

இஃது ஒருபொருள் உணர்த்தும் பலபெயரிடத்து மரபுவழு வற்க எனக் காக்கின்றது.

இ - ள். ஒருபொருளைக்குறித்து வந்த பலபெயர்ச்சொற்கள் ஒருதொழிலே முடிபாகக் கூறுது பெயர்தோறும் வேறுவேறு தொழில் களைக் கொடுத்து முடிப்பின் ஒருபொருளவாய் ஒன்றுதலில. எ - று.

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத் தன்வந்தான் என்னது ஆசிரியன்வந்தான் பேரூர்கிழானுண்டான் செயிற்றியன்சென்முனென வேறுவேறு முடிக்குஞ்சொற் கொடுப் பின் வந்தானும் உண்டானுஞ் சென்முனும் ஒருவனுகாது வேறுவேறு தோன்றியவாறு காண்க. "எந்தைவருகவெம் பெருமான்வருக— மைந்தன்வருக மதலைவருக" எனவும் "மின்னேர்எய் வரைகொன்ற வேலோன் புகுதக—வின்றேன் கமழ்தா ரியக்கன் புகுதக—வென் முன் புகுதக வீரன் புகுதக—வென்றே நகர மெதிர்கொண் டது

வே" எனவும் வரும் இங்கிகரனவெல்லாங் காதல் முதலாயின பற்றி ஒருதொழில் பலகால் வந்ததல்லது வேற்றுத்தொழிலன்மையான் ஒருதொழில்கிளத்தலேயாம் என்பது. (உச)

நகக. வேறுவினைப் பல்பொரு டமுழிய பொதுச்சொலும் வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

இதுவும் ஓர் மரபுவழுவற்க எனக் காக்கின்றது; வேறுவினைப் பொதுச்சொற்களையும் வேறுவினைப்பொருள்களைப் பொதுச்சொல்லாற் கூறுது பிரித்து எண்ணும் இடத்தும் ஒருசார்க்கு உரிய வினையாற் சொல்லினும் எண்ணினும் வழுவாமாகலின் இவை பொதுச்சொல்லாற் சொல்லவும் எண்ணவும்படும் என்றலின்.

இ - ள். வேறுபட்ட வினையையுடைய பலபொருள்களையும் ஒருங்கு தழுவிநிற்கும் பொதுச்சொற்களும், வேறுபட்ட வினையையுடைய பொருள்களைப் பொதுச்சொல்லாற் கூறுது பிரித்து எண்ணுமிடத்தும், அவற்றுள் யாதானும் ஒன்றற்கு உரிய வினையாற் கூறப்படாது, அவற்றையெல்லாம் உள்ளடக்கி நிற்கும் பொதுவினையாற் கூறப்படும். எ - று.

அடிசிலென்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கும் அணியென்பது கட்டுவன கவிப்பன செறிப்பன பூண்பன வற்றிற்கும் இயமென்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவனவற்றிற்கும் படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கும் பொதுவாகலின் அடிசில் அயின்றார் பிசைந்தார் கைதொட்டார் எனவும் அணி அணிந்தார் மெய்ப்படுத்தார் எனவும் இயம் இயம்பினர் படுத்தார் எனவும் படைவழங்கினர் தொட்டார் எனவும் சோறுங்கறியும் அயின்றார் எனவும் யாழுங்குழலும் இயம்பினர் எனவும் பொதுவினையாற் கூறப்பட்டவாறு காண்க. அடிசிறின்றார் பருகினர் எனவும் அணி கவித்தார் பூண்டார் எனவும் இயங் கொட்டினர் ஊதினர் எனவும் படை எறிந்தார் எய்தார் எனவும் சோறுங் கறியுந் தின்றார் எனவும் யாழுங்குழலும் ஊதினர் எனவும் ஒருசார்க்கு உரிய வினையாற் கூறின் மரபுவழுவாமென்பது. அஃதேல் "ஊன்றுவை கறிசோ றுண்டெருந்துந் தொழிலல்லது" என்புழி உண்டென்பது ஒன்றற்கே உரிய வினையாகலின் வழுவாம்பிறவெனின், உண்டலென்பது உண்பன தின்பன பிரித்துக்கூறும்வழிச் சிறப்புவினையாம், பகிப்பிணிதீர துகரப்படும்பொருளெல்லாம் உணவெனப்படுமாகலாற் பொதுவினையுமாம், அதனால் அது வழுவாகாதென்க. இன்னும் "உண்டற் குரிய வல்லாப் பொருளை—யுண்டன

போலக் கூறலு மரபே" என்னும் பொருளியற்சூத்திரத்தானும் உண்டற்பாலதில் பொதுவினையுமாதல் உணர்க. கறியொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டற்பாலதில் உரித்தாகலிற் பன்மை பற்றிக் கூறினுரெனினும் அமையும். "அறுசுவை யடிசி லணியிழை தருதலி—னுறுவயி ரூர வோம்பாது தின்று" என்பது இழித்தற்கண் வருதலின் வழுவன்று. மிசைதல் அயிறல் என்பனவற்றைச் சிறப்பு வினையென்பாரும் உளர். (உடு)

கூஉ0. வினைபெய ரினஞ்சார்பு மேவி வினங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

இது பலபொருளொருசொற்கண் ஆவதோர் மரபுவழுக் காக்கின்றது, குறித்தபொருள் விளங்காமைக் கூறல் மரபன்மையின் விளங்கக்கூறுக என்றலான்.

இ - ள். வினைமுதலியபற்றி அவற்றுள் வேறுபடாத பலபொருளொருசொல்லே இன்னதிதுவெனச் சிறப்பான் எடுத்துக் கூறுவர் புலவர். எ - று.

எனவே, வினைமுதலியவற்றுள் வேறுபடும் பலபொருளொருசொல்லே அவற்றுள் வேறுபடக் கூறுவர் என்பதூஉமாயிற்று. மா என்பது ஒருசார்விலங்கிற்கும் ஒருமரத்திற்கும் வண்டிற்கும் பொது. குருகு என்பது ஓர்பறவைக்கும் உலோகத்திற்கும் வீளைக்கும் பொது. மாப்பூத்தது எனவும் இம்மாவயிரம் வெளிறு எனவும் மாவும் மருதும் ஓங்கின எனவும் "கவசம் புக்குரின்று மாகொணு" எனவும் முறையே ஒருபொருட்கே சிறந்த வினையானும் பெயரானும் இனத்தானும் மரமென்பதூஉஞ் சார்பாற் குதிரையென்பதூஉம் விளங்கின. ஏனையவும் அன்ன. இனி அவற்றுள் வேறுபடாதன மாமரம்வீழ்ந்தது விலங்குமாவீழ்ந்தது எனவரும்.

ஒருசாதிக்கண் அமைந்த சாதி இனம். அங்ஙனமன்றி ஒருவாற்றுள் இயைபுடையது சார்பு.

"கழிப்பூக் குற்றுக் கானல் வைகி" என்பனபோலச் சிலபொருளே ஒழித்துச் சிலபொருண்மேல் நிற்றல் உரையிற்கொள்க. "மாமறுத்தமலர்மார்பு" என்றவழித் திருவென்பது இடத்தான் விளங்கிற் றென்பாரும் உளர். அது மறுத்தல் என்னும் வினையான் விளங்குமென மறுக்க. (உசு)

கூஉக குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி.

இதுவும் ஓர் மரபுவழுக் காக்கின்றது.

இ - ள். ஒருபொருள் வேறுபடக் குறித்தோன் கூற்றுற்றல் முதலாயினவற்றுள் விளங்காதாயின் அப்பொருளைத் தெரிவித்துச் சொல்லுஞ் சொல்லாகக் கூறுக. எ - று.

"கலந்தது போல வருமே யிலங்கருவி—யன்பன் மலைப் பெய்த நீர்" எனத் தெரித்துமொழியாக்கால் வழுவாமாகலின் "அரி தாரச் சாந்தங் கலந்தது போல—வருகெழுத் தோன்றி வருமே—மு ருகுறழு—மன்பன் மலைப்பெய்த நீர்" எனத் தெரித்துமொழிக் என்ப தாம். வடநூலார் இதனை நேயமென்ப. "ஊட்டியன்ன வொண்ட னிர்ச் செயலே" என்புழி இன்னதனையென்று தெரித்துமொழியா மையின் வழுவாம்பிறவெனின், உவமையென்னும் அலங்காரமா யினன்றே இன்னதென்றனை என்னல் வேண்டுவது. செயலையந்த னினது செய்யாத நிறத்தைச் செய்ததுபோலுங் கருத்தினைகக் கூறலிற் பிறிதோர் அலங்காரமாம். அதனுள் அதுகடாவன்றென்க. "படுத்துவைத் தன்ன பாறை மருங்கி—னெடுத்துநிறுத்தன்ன விட் டருஞ் சிறுகெறி" என்றுற்போல்வனவெல்லாம் அவ்வலங்காரம பற்றி வந்தன. "பல்லாரதோ டோய்ந்து வருதலாற் பூம்பொய்கை—நல்வய லூரனின் மூர்புலால்—புல்லெருக்க—மாகின் மணிப்பூணெம் மைத்தன் மலைத்தமையாற்—காதற்றுய் நாறு மெமக்கு" எனக் குவ னை புலால் நாறுதற்கும் எருக்கங்கண்ணி நறிதாதற்குங் காரணங கூறுது "ஒல்லேங் குவனை புலாஅன்மகன் மார்பிற்—புல்லெருக்கங கண்ணி நறிது" என வாளாகூறின் வழுவாய்பிறவெனின், புதல்வற் பயந்த பூங்குழன்மடந்தை பரத்தையிற் பிரிந்துவந்த கிழவனைநோ புலந்து உரைக்கின்றுளாகலிற் குவனை புலாஞறுதற்கு அவன் தவறு காரணமென்பதுஉம் எருக்கங்கண்ணி நறிதாதற்கு மகிழ்நன்செய்த துனி கூர் வெப்பம் முகிழ்நகைமுகத்தாற் றணிக்கும் புதல்வன்மேல் ஒருகாலைக்கொருகாற் பெருகும் அன்பு காரணமென்பதுஉம் பெறப் படுமாதலின் வழுவாகாதெனக.

மீக்கூற்றம் என்புழிப்போலக் கூற்றுக்கூற்றமென நின்றது.

எடுத்த மொழியினஞ் செப்பலு மூரிதே.

இதுவும் ஓர் மரபுவழுக் காக்கின்றது; ஒருதொடர் ஒருபொ ருள் உணர்த்தியமையாது வேறுரூபொருளுங் குறித்துநிற்றல் வழுவாயினும் அமைக்க என்றலின்.

இ - ள். இனமாகிய பலபொருட்கண் ஒன்றனேவாங்கிக் கூறியவழி அச்சொற் தன்பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பான் உணர்த்தலும், உம்மையான் உணர்த்தாமையும் உரித்து. எ - று.

வரலாறு;—அறஞ்செய்தான் துறக்கம்புகும் இழிவறிந்துண்பான் இன்பமெய்தும் எனவரும். இவை சொல்லுவார்க்கு இனப் பொருளியல்பு உரைக்குங் குறிப்பு உள்வழி மறஞ்செய்தான் துறக்கம்புகான் கழிபேரிரையான் இன்பமெய்தான என இனஞ்செப்புதலும் அக்குறிப்பில்வழி இனஞ்செப்பாமையுங் காண்க. எடுத்தபொருளே உணர்த்தும் மொழியை எடுத்தமொழியெனறும் இனனல் பொருளினீக்குதற்கு இனமென்றுங்கூறினர். ஆவாழ்க அந்தணர் வாழ்க என்பன இனஞ்செப்பாதன என்றும் மேலேச்சேரிக்கோழி அலைத்தது எனக் கீழைச்சேரிக்கோழி அலைப்புண்டதெனவும், குடங் கொண்டான்வீழ்ந்தான் எனக் குடம்வீழ்ந்ததெனவும் வருவன இனஞ்செப்புவனவென்றுங் கூறுவாரும் உளர். அற்றன்று. ஆவாழ்க அந்தணர்வாழ்க என்புழிச் சொல்லுவான் முழுந்த விலங்கும் மக்களுஞ் சாக என்னுங் கருத்தினனுயின் அவையும் இனஞ்செப்புவன அன்றே என்றும்; கீழைச்சேரிக்கோழி அலைப்புண்டலின்றி மேலேச்சேரிக்கோழி அலைத்தல் அமையாமையானும் குடம்வீழ்தலின்றிக் குடங்கொண்டான் வீழ்தல் அமையாமையானும், கீழைச்சேரிக்கோழி அலைப்புண்டலும் குடம்வீழ்தலுஞ் சொல்லானன்றி இன்றியமையாமையாகிய பொருளாற்றலாற் பெறப்படுமாகலின் சாண்டைக்கெய்தா, இது சொல்லாராய்ச்சியாகலானென்றும் மறுக்க. இன்னேரன்ன சொல்லாற்றலாற் பெறப்பட்டதாமென்பது. (உஉ)

நஉந. ஒருபெயராப் பொதுச்சொ லுளபொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்த றலைமையும் பனைமையு
முயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்.

இஃது ஒரு பெயர்ப்பொதுச்சொற்கண்ணதோர் மரபுவழுக்காக்கின்றது.

இ - ள். உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் ஒருபெயராய்ப் பலபொருட்கும் பொதுவாகிய சொல்லைப் பிற உள்பொருளொழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறுகச் சொல்லுக தலைமையானும் பன்மையானும். எ - று.

தெரிபு என்பதன் செயப்படுபொருள் தலைமையும் பன்மையும்.

பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச்சேரியென்றல் உயர்திணைக்கட் தலைமைபற்றிய வழக்கு. எயினர்காடென்பது அத்திணைக்கட் பன்மைபற்றியவழக்கு. பிற புல்லும் மரமும் உளவேனுங் கமுகங்தோட்டமென்றல் அஃறிணைக்கட் தலைமைபற்றிய வழக்கு. ஓடுவங்காடென்றல் அத்திணைக்கட் பன்மைபற்றிய வழக்கு. பார்ப்பார் பலராயினுங் கமுகு பலவாயினும் அவைதாமே பன்மைபற்றிய வழக்காம்.

பலபொருளொருசொல்லின் நீக்குதற்குஒருபெயரென்னூர்.

ஒன்றெனமுடித்தலான் அரசர்பெருந்தெரு வெண்குடைப் பெருவிறல் வயிரகடகம் ஆதிண்டுகுற்றி ஆனதர் எருத்தில் என்னும் பொதுச்சொல் அல்லனவுங் கொள்க.

பலகுடியுஞ் சேர்ந்திருப்பது சேரி. பலபொருளுந் தொக்கது தோட்டம். உள்ளபொருளெல்லாங் கூறுது ஒன்றனை எடுத்துக் கூறுதல் மரபன்றுயினும் பொதுச்சொன்மேலும ஒன்றெனமுடித்தலால் பொதுச்சொலல்லனவற்றின்மேலுஞ் சொல் நிகழ்த்துமாறு உணர்த்தியமுகத்தான் அமைக்க என மரபுவழு அமைத்தவாறென்பது. எனவே, இயைபின்மை நீக்கிய விசேடமும பிறிதினியைபு நீக்கிய விசேடமுமாகிய இருவகைவிசேடங்களுள் செங்குவளைமுதலியவை கருங்குவளைமுதலியவற்றோடு இயைபுநீக்குதலிற் பிறிதினியைபுநீக்கிய விசேடமாம். அது பண்புத்தொகை உரைப்புழிப் பெறப்படுதலின் இஃது இயைபின்மைநீக்கிய விசேடங் கூறிப்போந்த வாறுமாயிற்றென்பதூஉம் பெற்றும். என்னை? கமுகங்தோட்ட மென்புழிப் பிற புல் மரம் முதலியவற்றோடு இயைபுநீக்காது கமுகோடு இயைபின்மைமாத்திரை நீகிக் கமுகினையுடைத்து இத் தோட்டமென்பதுபட நிற்றலின். பிறவும் அன்ன.

வடநூலார் இயைபின்மைநீக்குதலே அயோகவிவச்சேதமென்றும் பிறிதினியைபுநீக்குதலே அந்யோகவிவச்சேதமென்றுங் கூறுப.

ஈஉச. பெயரினுந தொழிலினும் பிரிபவை யெலலா மயங்கல் கூடா வழகுவழிப் படடன.

இஃது இருதிணையிருபாற்கும் பொதுவாகிய பெயர்க்கண்ணதோர் மரபுவழுக் காக்கின்றது.

இ - ள். உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினும் வினையினும் பொதுமையிற்பிரிந்து ஆண்மைக்கும் பெண்

மைக்கும் உரியவாய் உருவனவெல்லாம் வழுவாகா, வழக்கின்கண். அடிப்பட்டனவாகலான். எ - று.

உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் என்பது அதிகாரத்தான்வந்தது.

வரலாறு:—"தொடியோர்—கொய்குழை யரும்பிய குமரிஞாழல்" என்பது உயர்திணைக்கட் பெயரிற்பிரிந்த ஆணெழிலிமிகுசொல். வடுகரசர் ஆயிரமக்களுடையர் என்பது பெயரிற்பிரிந்த பெண்ணெழிலிமிகுசொல். இவர் இல்வாழ்க்கைப்பட்டார் என்பது தொழிலிற்பிரிந்த ஆணெழிலிமிகுசொல். இவர்கட்டிலேறினர் என்பது தொழிலிற் பிரிந்த பெண்ணெழிலிமிகுசொல். நம்பிநூறெருமையுடையன் என்பது அஃறிணைக்கட் பெயரிற்பிரிந்த ஆணெழிலிமிகுசொல். நம்மரசன ஆயிரம்யானையுடையன் என்பது பெயரிற்பிரிந்த பெண்ணெழிலிமிகுசொல். தொடிசெறித்தலும் மக்கட்டன்மையும் இல்வாழ்க்கைப் படுதலுங் கட்டிலேறுதலும் எருமைத்தன்மையும் யானைத்தன்மையும் ஒழிக்கப்படும் பொருட்கும் உண்மையாற் பொதுவாய் நிற்கற்பாலன ஒருபாற்கு உரியவாய்நிற்றலின் மரபுவழு அமைத்தவாமுயிற்றென்பது. பிறசொல்லாற் பிரிவன "வினைபெயரினஞ்சார்பு" என்பது முதலியவற்றுள் ஓதப்படுதலானும் ஆண்டு வழுவின்மையானும் சண்டுத் தாமே பிரிவன கொள்க. தம்மாற் தாம் பிரியுமென்பார் பெயரினுந் தொழிலினுமென்றார். பெயர்க்கண்ணும் வினைக்கண்ணுந் தாமே பிரிவனவெனினும் அமையும். அஃறிணைக்கட் தொழிலிற்பிரிந்தன உளவேல் வந்துழிக்காணக.

இனி யானையோடிற்றென்பது தொழிலிற்பிரிந்த பெண்ணெழிலிமிகுசொற்கும் யானைநடந்ததென்பது தொழிலிற்பிரிந்த ஆணெழிலிமிகுசொற்குங் காட்டலுமொன்று. இனி இன்றிவ்வூர்ப்பெற்றமெல்லாம் அறங்கறக்கும், உழவொழிந்தன என்பனபோல்வன காட்டிவாரும் உளர். பெற்றமென்னும் பொதுப்பெயர் கறத்தலும் உழுதலுமாகிய சிறப்புவினையாற் பொதுமைநீங்குதலின் வழுவின்மையான் சண்டைக்கு எய்தாவென மறுக்க. (கூ0)

கூஉடு. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா. ஐச

இஃது உரிச்சொற்கண் மரபுவழுக் காக்கின்றது.

இ - ள். இரட்டித்துநின்று பொருளுணர்த்துஞ் சொற்கள் இரட்டித்துநிற்றலிற் பிரிந்துநில்லா. எ - று.

கொறுகொறுத்தார் மொறுமொறுத்தார் எனக் குறிப்புப்பற்றியுங் குறுகுறுத்தது கறுகறுத்தது எனப் பண்புபற்றியுஞ் சுருசுருத்தது மொடுமொடித்தது என இசைபற்றியும் இரட்டித்துப் பிரியாது நின்றன. இவை குறுத்துகுறுத்தது என ஒருசொல் முழுவதும் இருமுறை வராமையின் அடுக்கா. இவை மக்களிரட்டையும் வீலங்கிரட்டையும்போல வேற்றுமையின்றி இலையிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாய் குறுவென்னுஞ்சொல் அடித்துக் குறுந்தென்பது பிருதியுணர்த்திற் றேற் குறுவென்பது யாண்டும் பிருதியுணர்த்தல்வேண்டும் அஃது ணர்த்தாமையின் இரண்டும் ஒருசொலலே பாயிற்று. இரட்டித்து நின்று பொருளுணர்த்துவனவற்றைப் பிரித்து வழங்கல் மரபன்மையின் மரபுவழுக் காத்தவ் முயிற்று. (கஈ)

கூஉசு. பெயாவினே யிடத்து னைரய வீற்றய
லாவோ வாகலுஞ செயபுஞ ஞரித்தே.

இத்துணையும் வழுவற்நவெனவும் வழுஇயமைக்நவெனவுங காத்து வழுக்கனேர்து சொற்கனே அமைத்துக்கொண்டு இனி முற்கூறிய நால்வகை ஒத்தினுள்ளுங் கூறுதற்கு இடமின்றி எஞ்சினனறன கூறுவான் புகுந்தனவற்றுள் இது செய்யுளிடத்துப் பெயாவினே பற்றி நிகழ்வதோர் ழிபு கூறுகினறது.

இ - ள். பெயர்வினைகளின் ற்றினின்ற னகரளகரரகரயக ரங்களின் அயலாகாரம் ஓகாரமாகவும் பெறுஞ் செய்யுட்கண். எ-று.

"வில்லோன காலன கழலே" "தொடியோண் மெல்லடி மேலவுஞ் சிலம்பே" "நல்லோர் யார்கொ லளியர் தாமே" "வேய் பயில் பழுவ முன்னி யோரே" "கன்னிநல் லூர மகிழ்நர்க்கென்—னினைநெகிழ் பருவரல் செப்பா தோயே" எனவும் "வினவிநிற்றந் தோனே" "நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே" "பாகிலை-வாடா வள்ளியங் காடிறந் தோரே" "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" எனவும் ஆகாரம் ஓகாரமாயவாறு காண்க. ஏற்பழிக்கோடலாற் சேரமான் மலையமான் உண்ணுன் உறங்கான் என்னுங்கொடக்கத்தன திரியா எனவும், ஆறுதிரிதல் பெரும்பான்மையும் உயர்திணைக்கண் வந்தவழியெனவுங் கொள்க.

இனி ஒன்றெனமுடித்தலாற் "பழமுதிர் சோலை மலைகிழவோனே" என அகரந் திரிதலுங் கொள்க.

பிறவும் வந்துழிக்காண்க. (கூஉ)

கூஉ. ஏதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா வுருவும் பெயர்வினை யெச்சமு மென்ப.

இது வேற்றுமைச்சொற்கண்ணும் பெயரெச்ச வினையெச்ச வினைச்சொற்கண்ணும் முறையே வழுவமைத்தலும் எய்தாதது எய்துவித்தலும்பற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். விதிமுகத்தாற் கூறுது எதிர்மறுத்துக்கூறினும் பொருணிலை திரியாவாம் வேற்றுமைச்சொல்லும் பெயரெச்சவினைச்சொல்லும் வினையெச்சவினைச்சொல்லுமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். மரத்தைக்குறையான் வேலானெறியான் எனவும் ஓதாப் பார்ப்பான் வினையாக்கோல் உண்ணுவில்லம் உண்ணுவண் உண்ணுக்காலம் உண்ணுச்சோறு எனவும் உண்ணுதுவந்தான உண்ணுமைக் குப்போயினுன் எனவும் வரும். உண்ணு என்பது உண்டு உண்கின்ற உண்ணுமென்னும முன்றற்கும் எதிர்மறையாம். உண்ணுத என்பதும் அது. உண்ணுதென்பது உண்டு உண்ணு உண்குபு என் பனவற்றிற்கு எதிர்மறை. உண்ணுமைக்கென்பது உண்ணியர் உண்ணிய உணற்கு என்பனவற்றிற்கும் உண்ண எனச் செயற்கென்பது பட வருஞ் செயவெனெச்சத்திற்கும் எதிர்மறையாம். உண்ணுமை உண்ணுமல் என்பனவும் அதற்கு எதிர்மறையாம். பிறவும் எதிர்மறைவாய்பாடெவேற் கொள்க. குறையான் எறியான் என்றவழி வினைநிகழாமையின் மரமும் வேலுஞ் செயப்படுபொருளுங் கருவியுமெனப்படாவாயினும் எதிர்மறைவினையும் விதிவினையோடு ஒக்குமென்பது நான்முடிபாகலான் ஆண்டு வந்த உருபுஞ் செயப்படுபொருள் முதலாயினவற்றின்மேல் வந்தன எனப்படுமென வழுவமைத்தவாறுஞ், செய்த செய்கின்ற செய்யும் எனவும் செய்து செய்யு செய்பு எனவும் பெயரெச்சமும் வினையெச்சமும் விதிவாய்பாட்டான ஓதப்பட்டமையின் ஆண்டுச் செய்யா செய்யாது என்னும் எதிர்மறைவாய்பாட்டு அடங்காமையின் அவை எச்சமாதல் பெறப்பட்டின்றுதலால் அவையும் அவவெச்சப்பொருண்மையிற் திரியாது பெயரும் வினையுங் கொள்ளுமென எய்தாதது எய்துவித்தவாறும் ஓர்ந்து உணர்க. உண்டிலன் உண்ணுநின்றிலன் உண்ணலன் உண்ணுன் என்னுந் தொடக்கத்து முற்றுச்சொல்லும் எதிர்மறுத்து நிற்கு மாதலிற் பொருணிலைதிரியாதென அதற்கு ஓதாராயினுர் என்னெயெனின், விதிவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவாக நாறு பற்றி ஓதியதல்லது விதிப்பொருளவாகிய வாய்பாடெற்றி ஓதாமையின், ஆண்டுக் கட்டுரை இல்லையென்க.

(கூக)

கூஉஅ. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
பொருள்சென் மருங்கி னொருசொலான் முடிதலு
முற்றியன் மொழியும் பெயரெஞ்சு கிளவியு
தததங் கிளவி யடுக்குந வரினும்
பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடிதலு மரபே.

இது வேற்றுமைக்கண்ணும் வினைச்சொற்கண்ணும் வழுவமைதிபற்றி நிகழ்வதோ ஒழிபு கூறுகின்றது.

இ - ள். பல உருபுந் தம்முட் தொடர்ந்து அடுக்கிவந்த வேற்றுமைச்சொற்களெல்லாம் முடிக்குஞ்சொல் ஒன்றனுற் பொருள் செல்லும் இடத்து அவ்வொன்றனுன் முற்றுப்பெற்று நடத்தலும் முற்றுவினைச்சொல்லும் பெயரெச்சவினைச்சொல்லுந் தத்தஞ் சொற்கள் பலவடுக்கி வரினும் ஒருவாய்பாட்டானும் மற்றப் பலவாய் பாட்டானும் வினையெச்சவினைச்சொற்கள் அவ்வச்சொற்கள் முறையான் முடியாது அடுக்கிவரினும் முன்னின்ற சொல் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாகலும் இலக்கணமாம். எ - று.

ஈண்டு வேற்றுமைக்கிளவியென்றது வேற்றுமையுருபை இறுதியாகவுடைய சொல்லே. பொருள்சென்மருங்கினென்பதனையுஞ் சொன்முறைமுடியாதென்பதனையும் ஏனையவற்றோடுய்த்துரைக்க.

வரலாறு;—"என்னெடு நின்னெடுஞ் சூழாது" எனவும் "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்" எனவும் வேற்றுமைக்கிளவியும் உண்டான் தின்றூன் ஒடினுன் பாடினுன் சாத்தன் எனவும் "நல்ல னறிவுடையன்—செவியின் சான்றோர் மகன்" எனவும் தத்தங்கிளவியாற் தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றும் "நெல்லரியுமிருந்தொழுவர்" என்னும் புறத்தொகைப்பாட்டினுட் "தெண்கடற் றிரைமிசைப் பாயுந்து***தண்ணுரவைச் சீர்தூங்குந்து***எல்லீ மகளிர் தலேக்கை தருஉந்து***மிழலே" எனச் செய்யுமென்னும் பெயரெச்சமும் உண்டுதின்றூடிப்பாடிவந்தான் எனவும் உண்டுபருகூத்தின்குபுவந்தான் எனவும் ஒருவாய்பாட்டானும் பலவாய்பாட்டானும் வினையெச்சமுஞ் சொன்முறை முடியாது அடுக்கிவந்து பொருள்சென்மருங்கின் ஒருசொல்லான் முடிந்தவாறு காண்க. இவற்றுட் செய்யுமென்னும் பெயரெச்சம் அடுக்கி மிழலையென்னும் ஒருபெயர்கொண்டு முடிந்துழித் தாங்கா வினையு

ணல்லூர்க்கெழீஇய என்னும் பெயரெச்சம் இடைநிலையாய் வந்தது. சாத்தன்மூயைக்காதலன், நாய்தேவனையிற்று என்புழித், தாயை தேவன் என்பன காதலன் ஆயிற்று என்னும் பயனிலைக்கு அடையாய் நின்றாற்போலக், கோட்டை நுனிக்கட்குறைத்தான், கிணையிற்கிளியைக்கடியும் என்புழி நுனிக்கட் கிளியை என்பன குறைத்தான் கடியும் என்னும் முடிக்குஞ்சொல்லிற்கு அடையாய் நின்றன ஆகலான் அவை அடுக்கன்மையின் அவை உதாரணமாகாமை உணர்க. யானையது கோட்டை நுனிக்கட் பொருட்கு வாளாற் குறைத்தான் என்பதூஉம் அது. இனிக் "கட்கினியாள் காதலன் காதல் வகைபு ணைவா—ளுட்குடையா ளூர்நா ணியல்பிலு—ளுட்கி—யிடனறிந் தூடி யினிதி னுணரு—மடமொழி மாதரா ள் பெண்" எனவும் "காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட—வேலார் வெருவந்த தோற்றத்தார்—காலன்—இளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே—யுளர்ந்தார் நிரைபெயர்வு முண்டு" எனவும் வருவனவற்றை ஓர் உருபு அடுக்கித் தமக்கேற்ற ஒருபெயரும் வினையும் இறுதிவர முடிந்தன என்பாரும் உளர். அவை முறையே முற்றெச்சங்கள் அடுக்கி உணரும் மடமொழிமாதரா ள் எனவும் உளர்ந்தார் எனவும் வரும் பயனிலைகட்கு அடையாய் நிற்றலான் அன்னவும் இன்ன வென மறுக்க.

சூழையைச்சாத்தனதுகள்ளரினென்கண் என இவ்வாறு தொடர்ந்து வருவனவற்றை நீக்குதற்கு உருபுதொடர்ந்து அடுக்கிய என்றும் நீதந்த சோற்றையுங் கூறையையும் உண்டி உடுத்து இருந்தோம் எனவும் உண்டுகின்றுமழைபெய்யக்குளநிறையும் எனவும் வரும் இன்னோரன்னுழி முடிக்குஞ் சொல் ஒன்றனை முடியாமையினை அவற்றை நீக்குதற்குப் பொருள்சென்மருங்கு என்றுங் கூறினர். சொற்முறுமியையாது முடிக்குஞ்சொல் ஒன்றனை முடிதல் வழுவாயினும் பொருள்சென்மருங்கின் அமையுமென்றலின் வழுவமைத்தவாமுயிற்று. (உச)

உஉகூ. உருபு முற்றீ ரெசசங் கொளனும்
பெயர்வினை யிடைப்பிற வரனுமா மேற்பன.

இது முடிவனவற்றை முடிப்பன முடிப்புழி வழுவமைதிபற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது; என்னை? ஒட்டிநிற்றற்கு உரிய அவவிரண்டற்கும் இடையே பிறசொல் வருதல் வழுவாயினும் முடிக்குஞ்சொல்லோடு இயையுடையன வரின் அமையுமென்றலின்.

இ - ள். உருபு ஏற்ற சொற்களும் முற்றுவினைச்சொற்களும் பெயரெச்சவினையெச்சச்சொற்களுந் தாந்தாங் கொண்டுமுடியும் பெயர்ச்சொற்கும் வினைச்சொற்கும் இடையே பிறசொற்கள் வருதலும் பொருந்தும் பொருந்துவன வரின். எ - று.

சாத்தனுண்டுவந்தான் அறத்தையரசன்விரும்பினன் வாளான் மருவாரைமாயவெட்டினன் தேவர்க்குச்செல்வம்வேண்டிச்சிறப் பெடுத்தான் மலையினனுருண்டுவீழ்ந்தான் சாத்தனதித்தடக்கையானை ஊர்க்கணுயர்ந்தவொளிமாடம் சாத்தாகூத்தர்க்குக்கூறை கொடு எனவும் உண்டானவ்தசாத்தன் "பாடினனீபேவகீதம் பண்ணினுக்கரசன்" "அழுதாட்டமாகவணங்கிழையே" எனவும் செவவியன்சான்மேர்மகன் எனவும் கொன்றகாட்டுள்யானை கொல்கின்ற காட்டுள்யானை கொல்லுங்காட்டுள்யானை கவளங்கொள்ளாக்களித்தயானை எனவும் உழுதுசாத்தன்வந்தான் உழுதேரொடுவந்தான் உழுதோடிவந்தான் எனவும் வரும். பிறவும் அனன.

ஏற்பன வருமெனவே ஏலாதன வரப்பெறுதென்பதாம். ஏலாதன ஆவன ஒருதலையாக எச்சத்தோடு இயைந்துநில்லாது நின்ற சொல்லொடுந் தாமே இயைந்து பொருட்படுப்பன என்க. உண்டுவிருந்தொடுவந்தான் "வல்லமெறிந்தநல்லிளங்கோசர்தந்தை—மல்லல்யானைப்பெருவழுதி" என்றவழி விருந்தொடு உண்டென வினையெச்சத்தோடு இயைதலிற் பொருள் கவர்க்கும; வல்லம் எறிதல் நல்லிளங்கோசர்க்கும் ஏற்குமாகலின் ஆண்டுப் பொருள் கவர்க்கும். அன்ன ஏலாதனவாம். பிறவும் அன்ன. (ந-ர்)

நஙo. இறுதி வயின்வரூஉ மெச்சப பெயர்வினை முதலவயின வருவன வருஅலு முறைமையே.

இது வழுவற்க எனக் காத்தலும் வழுவியமைக்க எனக்காத்தலுமாகிய முறைமைபற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது. என்னை? ஒன்றனது அவாய்நிலையை முடித்தற்கு வருஞ் சொல் பின்வருதல் மரபாகலின் வழுவற்க எனவும் முன்வருதல் மரபன்மையின் வழுவாயினும் முடித்தற்கு உரியன வரின் அமைவுடைய என வுங் கூறலின்.

இ - ள். உருபு ஏற்ற சொற்கும் முற்றுச்சொற்கும் பெயரெச்சவினையெச்சச்சொற்கும் எச்சமாய் அவற்றின் அவாய்நிலையை முடித்தற்கு வரும் பெயரும் வினையும் இறுதிக்கண்வரும். அவற்றது அவாய்நிலையை முடித்தற்கு உரியன முதற்கண்வருதலும் வழுவாகாது இலக்கணமாம். எ - று.

உ-ம். சாத்தன்வந்தான் நிலதைக்கடந்தான் சாத்தனெடுவக் தான் சாத்தற்குக்கொடுத்தான் சாத்தனின்வலியன் சாத்தனதாடை குன்றத்துக்கணிருந்தான் சாத்தாவா எனவும் வந்தான்வழுதி கரி யன்மால் எனவும் உணடசாத்தன் எனவும் உண்டுவந்தான் எனவும் வந்தான்சாத்தன் கடந்தானிலத்தை வந்தான்சாத்தனெடு கொடுத் தான்சாத்தற்கு வலியன்சாத்தனின் இருந்தான்குன்றத்து வாசாத்தா எனவும் வழுதிவந்தான் மால்கரியன் எனவும் வந்தானுண்டு "பன் னெடுங் காலமும் வாழியர்—பொன்னெடுத் தேரொடுத் தானையிற் பொலிந்தே" "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்— திண்ணிய ராகப் பெறின்" எனவும் முறையே இறுதிக்கண்ணும்

சாத்தனதாடை குன்றத்துக்கட்கூகை உண்டசாத்தன் என இறுதிக்கண் நின்றவழி அவற்றை முடித்துநின்றாற்போல ஆடை சாத்தனது கூகைகுன்றத்துக்கண் சாத்தனுண்ட என முதற்கண் ணின்றவழி அவற்றை முடித்துநில்லாமையின் இன்னோரன்ன மு தற்கண் நிற்றற்கு ஏலாமையான் 'வருவன வருதலு முறையே' என ரூர். ஆறனுருபு ஏற்ற பெயர் சாத்தனதாடையென முடிக்குஞ்சொற் பின்வந்துழிப் பெயராயும் ஆடைசாத்தனது என முடிக்குஞ்சொல் முன்வந்துழி வினைக்குறிப்பாயும் நிற்றலுடைமையும் உணர்க. (கூசு)

கூகக. ஐயுங் கண்ணு மல்லாப் பொருளவயின்
மெயயுருபு தொகா விறுதி யான.

இஃது உருபின்கண்ணதாகிய வழுவமைதிபற்றி நிகழ்வதோர் ஒழிபுகூறுகின்றது. என்னை? நாம் நின்று தம்பொருள் உணர்த்தற் பாலன தொக்குநிற்றல் இலக்கணமன்மையின் வழுவாயினும் தம் பொருள் உணர்த்தும் ஆற்றலுடையன அமைவுடையன என்றலின்.

இ - ள். ஐகாரவேற்றுமைப்பொருளுங் கண்ணென் வேற்று மைப்பொருளும் அல்லாத பிறபொருண்மேல் நின்ற உருபு தொடர் மொழியிறுதிக்கட் தொக்குநில்லா. எ - று.

எனவே ஏனைய இறுதிக்கட் தொகாது இடைக்கட் தொகு மென்பதூஉம் ஐயுங்கண்ணும் ஈரிடத்தும் தொகுமென்பதூஉம் பெற் றும். இடைக்கட் தொகும் இயல்பு மேற்கூறுப. அற்றேல் இவற் றையும் அவற்றினைச் சாரக் கூறுது ஈண்டுக் கூறியது என்னை யெனின், கடந்தானிலம் இருந்தான்குன்றத்து என்பன ஒருங்கி சைத்து உருபேற்றலும் பயனிலைகோடலும் எய்துமாறிலவாய்ப் பக்

கிசைத்தலின் அவற்றின் வேறென்பது உணர்த்துதற்கு ஈண்டுக் கூறினரென்க.

தாய்மூவர் அறங்கறக்கும் வரைபாய்தல் சாத்தன்புத்தகம் என இடைக்கட் தொக்குநின்ற மூன்றுவதுமுதலிய நான்கும் முறையே மூவர்தாய் கறக்குமறம் பாய்தல்வரை புத்தகஞ்சாத்தன் என இறுதிக்கட் தொகாமையுங் கடந்தானிலம் இருந்தான்குன்றத்து என முறையே ஐயுங் கண்ணும் இறுதிக்கட் தொக்கமையுங் காண்க. பிறவும் அன்ன. (கூஎ)

கூகூ. ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்
வருவன தாமே வழக்கென மொழிப.

இது பால்வகையான உளதாகிய வழுவமைதிபற்றி நிகழ்வ தோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். ஒருபாற்கு உரிய சொல்மேல் வைத்துக்கூறிய சொல் ஒழிந்தபாற்கண்ணும் வருதல் நெறியென்று கூறுவர் ஆசிரியர். எ - று.

வரலாறு;—நஞ்சுண்டான்சாம் என்பது ஒருபாற்கு உரிய சொல்லாயினும் நஞ்சுண்டான்சாம் நஞ்சுண்டாள்சாம் நஞ்சுண்டார் சாவர் நஞ்சுண்டதுசாம் நஞ்சுண்டனசாம் என ஏனைப்பாற்கும் உரித்தாய்வந்தவாறு காண்க. பார்ப்பான்கள்ளுண்ணுன் என்றவழிக் கள்ளுண்ணுமை சாதிபற்றிச் செல்வதொன்றுகவிற் பார்ப்பனிக்கும் பார்ப்பார்க்குமல்லது பிறசாதியார்க்கும் அஃறிணைக்குஞ் செல்லாமையான் இன்னோரன்ன ஐப்பாற்கண்ணுஞ் செல்லாது சிலபான் மேற் சேறலும் இவ்வாற்றுனன்றிப் பிறவாற்றுன் வருவன பிறவும் உரையிற்கொள்க. ஒருபாற்கிளவி ஏனைப்பாறகண்ணும் வருதல் வழுவாயினும் நஞ்சுண்டல் சாதற்குக் காரணமென்பான ஒருபால் மேல்வைத்து நஞ்சுண்டான்சாமென்றுங் கள்ளுண்ணுமை சாதி பற்றி வரையப்படுவதொன்றென்பான பார்ப்பான் கள்ளுண்ணுனென்றுங் கூறியதல்லது ஆண்டித் தோன்றும் ஆண்மையும் ஒருமையுஞ் சாதற்குங் கள்ளுண்ணுமைக்குங் காரணமென்னுங் கருத்தினன் அல்லன். அதனாற் சொல்லுவானகருத்தோடு கூடிய பொருளாற்றலாற் சாதலுங் கள்ளுண்ணுமையும் ஏனைப்பாற்கும் ஒத்தலின் வழுவமைதியாயிற்று. பொருளாற்றலால் ஏனைப்பாற்கண்ணுஞ் சேறலின் இவ்விலக்கணம் பொருளியலுட் கூறற்பாற்றேயாயினுஞ் சொல்லொடு பொருட்கு ஒற்றுமையுடைமையான் ராண்டுக் கூறினரெனக் கொள்க. (கூஅ)

இஃது ஏழாம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த்துகின்றது.

இ - ள். ஏழாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்றுமைக்கு உருபு கண்ணெனபதாம்; அதனது பொருள் வினைசெய்யாநிற்றலாகிய இடத்தின்கண்ணும் நிலமாகிய இடத்தின்கண்ணும் காலமாகிய இடத்தின்கண்ணுமென அம்மூவகைக்குறிப்பின்கண்ணுந் தோன்றலாம்; அன்றியுங் கண் முதலாக இடம் ஈறுகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவைபோல்வன பிறவும் ஏழாவதன் கிறத்தன என்றுகூறுவர் ஆசிரியர். எ - று.

எனவே, இடமாகக் குறிக்கப்படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றுதென்பதாம். தன்னினமுடித்தலென்பதனல் ஏனைவேற்றுமைச்சொற்களும் அவவப்பொருட்குறிப்பு இல்வழி அவவப்பெயர்க்கண் வாராமைகொள்க.

வரலாறு;—நட்டப்புடைக்கண்வந்தான் மாடத்தின்கணிருந்தான் கூதிர்க்கண்வந்தான் எனவரும்.

இனிக் கண்ணென்னும் பொருளாவது "கண்ணின்றுகூறுதலாற்றுனவனுயிஞன்" எனவும் "கண்ணகன்ஞாலம்" எனவும் கண்ணென்னும் இடைச்சொல்லான் உணர்த்தப்படும் இடப்பொருண்மை. தேவகையென்பது திசைக்கூறு. கண் கால் புறம் அகம் என்பவற்றது பொருள்வேற்றுமை வழக்குநோக்கி உணர்ந்துகொள்க. கண்ணின்றுசொல்லியானே என்கணின்றிவைசொல்லற்பாலையல்லே என்றும் ஊர்க்காற்செய்யை ஊர்க்கட்செய் என்றும் ஊர்ப்புறத்து நின்றமரத்தை ஊர்க்கண்மரமென்றும் எயிலகத்துப்புக்கானே எயிற்கட்புக்கான் என்றும் இல்லுளிருந்தானே இல்லின்கணிருந்தான் என்றும் அரசனுழையிருந்தானே அரசன்கணிருந்தான் எனறும் ஆலின் கீழ்க்கிடந்த ஆவை ஆலின்கட்கிடந்தது என்றும் மரத்தின்மேலிருந்த குரங்கை மரத்தின்கணிருந்தது என்றும் ஏர்ப்பின்சென்ருனே ஏர்க்கட்சென்ருன் என்றும் காட்டிச்சாரோடுவதனைக் காட்டிடின்கண்ணேடுவது என்றும் உறையூர்க்கயனின்ற சிராப்பள்ளிக்குன்றினை உறையூர்க்கட்குன்று என்றும் எயிற்புடைநின்ருரை எயிற்கணின ரூர் என்றும் வடபால்வேங்கடந் தென்பாற்குமரி என்பனவற்றை வடக்கண்வேங்கடந் தெற்கட்குமரி என்றும் புலிமுன்பட்டானைப் புலிக்கட்பட்டான் என்றும் நூலின் இடையுங் கடையுந் தலையும் நின்ற மங்கலத்தை நூற்கண்மங்கலம் என்றும் கைவலத்துள்ளதனைக் கைக்கண்ணுள்ளது என்றும் தன்னிடத்து நிகழ்வதனைத் தன்

கணிகழ்வது என்றும் அவ்விடப்பொருள்பற்றி ஏழாம்வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க. எனுவென்பது எண்ணிடைச்சொல்.

அன்னபிறவும் என்றதனாற் பொருட்கணுணர்வு என்கணன்பு டையன் மலர்க்கணூற்றம் ஆகாயத்துக்கட்பருந்து என்னுந் தொடக் கத்தன கொள்க.

இனிக் கண் கால் முதலியவற்றை உருபென்பாரும் உளரா லோவெனின், உருபாயின் ஊர்ப்புறத்திருந்தான் ஊரகத்திருந்தான் கைவலத்துள்ளதுகொடுக்கும் எனப் புறம் அகம் வலம என்பனவற் றுவழி அத்துச்சாரியைகொடுத்து உதாரணங்காட்டல் பொருந்தா மையானும் அவை வேறு வேறுபட்ட இடப்பொருளவாகிய பெய ராய்நிற்றலல்லது பெயர்ப்பொருளை ஐ ஒடு கு இன் அது போல வேறு படுத்துத் தன்மையவாய உருபுகளாய் நிற்றலின்மையானும் உருபா காவென்க. இவற்றைப் பொருளென்றலே ஆசிரியர் தொல்காப்பிய னுர்க்குங் கருத்தென்பது சேனுவரையருரையான் உணர்க. வாய் வயின் பாடு அளை முதலியன இடப்பொருளவாகிய பெயராய் நிற்ற லல்லது பெயர்ப்பொருளை வேறுபடுத்துத் தன்மையவாய் நிற்றலின் மையின் அவையும் ஏழனுருபாகாமையுங் கண் கால் முதலியனபோ லத் தம்முட் பொருள்வேறுபாடு உடைய அன்மையின் இவ்விடப் பொருள்பற்றிக் கண்ணென்னுருபு வாராமையும் உணர்க. (சசு)

உ0சு. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
றிரிபு குன்றன மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள படாக்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

இஃது எட்டாம்வேற்றுமையது உருபும் பொருளும் உணர்த் துகின்றது.

இ - ள். எட்டாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வேற்று மைக்கு உருபு விளியேற்கும் பெயரின் இறுதி திரிதலுங் கெடுதலும் பிறிதுவந்தடைதலும் இயல்பாதலும் சாற்றயல் நின்றதன் திரிபுமாம்; அதன்பொருள் படர்க்கையிடத்தாரை ஒருவன் தனக்கு எதிர்முக மாக விளித்தலாம். எ - று.

எய்துபெயரெனவே, எய்தாப்பெயரும் உளவென்பதாயிற்று. அவை மேற்கூறுப. படர்க்கையிடத்தாரெனவே ஏனையிடத்தார் சண்டே விலக்கப்பட்டாரென்பதூஉம் பெற்றும். படர்க்கையோ

ரை என்றாரேனும் "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்—வரு வன தாமே வழக்கென மொழிப" என்பவாகலின் அவவிடத்து ஐம் பாலுங்கொள்க. இயல்பாய விளியுருபிற்கும் பெயருருபிற்கும் வடி வான் வேற்றுமையின்றேனும் பொருளான் உளதெனக்கொள்க. தானென்பது சந்தவின்பப்பொருட்டு வந்தது. (சஎ)

உ0சு. இஉ ஊவோ டையோ னளரல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னுவீ றாகும் பொதுப்பெயர்
மெய்யுயி ரனைத்திற் றஃறிணை விளிப்பன
வொல்வழி யறிதல் வழக்கத் தான.

இது மேல் எய்துபெயரென்றார் அவை இவையெனத் தொ குத்து உணர்த்துகின்றது.

இ - ள். இகர உகர ஊகார ஐகார ஓகாரங்களும் ணகர ளகர ரகர லகர யகரங்களுமாகிய பத்து ஈற்று உயர்திணைப்பெயர்களும் இவற்றுள் ஓகாரமும் ரகாரமுமாகிய இரண்டனையும் ஒழித்துநின்ற எட்டொடனே ணகாரமும் ஆகாரமுமாகிய பத்து ஈற்று விரவுப்பெயர்க ளும் ஒற்றும் உயிருமாகிய எல்லா ஈற்று அஃறிணைப்பெயர்களும் விளியேற்பனவாம். அங்ஙனம் விளியேற்றற்குப் பொருந்தும் இடம் அறிக வழக்கிடத்து. எ - று.

முன்னிலையாக்கலுஞ் சொல்வழிப்படுத்தலும் வேண்டுழியென் பார் ஒல்வ்ழியென்றார். இன்னும் அதனானே உகரங் குற்றுகர மெனவும் முற்றுகரமுஞ் சிறுபான்மை விளியேற்குமெனவுங் கொள்க. ஏனை ஈற்றுப் பெயர்கள் விளிகொள்ளாவென்பது தானே போதருமென்க. (சக)

உ0எ. இம்முப் பெயர்க்க ணியல்பு மேயு
மிகர நீட்சியு முருபா மன்னே.

இது மூவகைப்பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு தொகுத்து உணர்த்துகின்றது.

இ - ள். மேல் விளியேற்பன இவையென வரைந்தோதப் பட்ட உயர்திணைப்பெயர் விரவுப்பெயர் அஃறிணைப்பெயரென்னும் மூவகைப்பெயர்க்கண்ணும் இயல்பாதலும் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிகுதலும் இகர ஈறு ஈகாரமாய்த் திரிதலும் விளிவேற்று மைக்கு உருபுகளாம். எ - று.

வரலாறு;—நம்பிவாழி வேந்துவாழி திருவாழி ஆஉவாழி நங்கைவாழி கோவாழி என உயிரீற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. கணி கணியே, வேந்து வேந்தே, திரு திருவே, ஆஉ ஆஉவே, கோ கோவே என உயிரீற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. நம்பி நம்பீ, தோழி தோழீ என இகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் ஈகாரமாய்த் திரிந்தன. னகர ஈற்று உயர்திணைப்பெயருள் "நம்பன்சிறி தேயிடைதந்திதுகேட்க" என அன்னீறுஞ் சேரமான் மலையமான் என ஆனீறும் அண்மைக்கண் இயல்பாயின. "படிவ வுண்டிப் பார்ப்பான் மகனே" என முறைமைசுட்டாமகனும் "தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்—மன்னவனே மார்பின் மறு" என அன்னீறுந் தம்முன் தம்முனே என உன்னீறும் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. கடவுள்வாழி அடிகள்கூறீர் கோமான்கூறுய் கடியாள்கூறுய் "ஆவுமானியற்பார்ப்பனமாக்களு***மெம்மம் புகடிது விடுது நும்மரண் சேர்மின்" என ளகர ஈற்றுயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. "அகவன்மகளேயகவனமகளே" என முறைமைசுட்டாமகளெனனும் ளகர ஈற்று உயர்திணைப்பெயர் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கது. மாந்தர்கூறீர் சான்றோர்கூறீர் கேளிர்வாழி "பெண்டிரும்பிணியுடையீரு*** நும்மரண்சேர்மின" என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. இறையவர் இறையவரே வந்தவர் வந்தவரே கரியவர் கரியவரே என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. குரிசில்கூறுய் தோன்றல் கூறுய் ஆண்பால்கூறுய் பெண்பால்கூறுய் என லகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. திருமாலே தோன்றலே "குருசிலேயெம்மையுள்ளாய்" என லகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. ஆய்வாழி என யகர ஈற்று உயர்திணைப்பெயர் அண்மைக்கண் இயல்பாயிற்று. ஆயேகூறுய் என யகர ஈற்று உயர்திணைப்பெயர் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கது. பிணவாராய் சாத்திகூறுய் பூண்டுகூறுய் அழிதூவாராய் தந்தைதாராய் அன்னையருளாய் என உயிரீற்று விரவுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. பிணவேகூறுய் பூண்டேகூறுய் என உயிரீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன. சாத்தி சாத்தீ எப்பி எப்பீ என இகர ஈற்று விரவுப்பெயர்கள் ஈகாரமாய்த் திரிந்தன. ஆண்வாழி பெண்வாழி சாத்தன்வாழி மகள்வாழி தூங்கல்வாழி தாய்வாழி என ஒற்றீற்று விரவுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின. ஆண் ஆணே பெண்

பெண்ணே மகன் மகனே மருமகன் மருமகனே மகள் மகளே மருமகள் மருமகளே தூங்கல் தூங்கலே கூந்தல் கூந்தலே தாய் தாயே என. ஒற்றீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் பிக்கன. கெஞ்சம்வருந்தினே வாழியகெஞ்சம் எனவும் "குருகு கருங்கால்வெண் குரு கொன்று கேண்மதி" எனவும் ஒற்றீற்று அஃறிணைப்பெயரும் உயிரீற்று அஃறிணைப்பெயரும் அண்மைக்கண் இயல்பாயின. இதண் இதணே புனம் புனமே மான் மானே வெய் வேயே கார் காரே குயில் குயிலே புள் புள்ளே எனவும் விள விளவே நிலா நிலாவே கிளி கிளியே வீ வீயே குருந்து குருந்தே பூ பூவே சே சேவே கழை கழையே எனவும் ஒற்றீற்று அஃறிணைப்பெயர்களும உயிரீற்று அஃறிணைப்பெயர்களும் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் பிக்கன. மந்தி மந்தீ தும்பி தும்பீ என இகர ஈற்று அஃறிணைப்பெயர்களின் ஈறு ஈகாரமாய்த் திரிந்தன. பிறவும் அனன.

மன்னென்ற பிகையானே ஐகார ஈற்று உயர்திணைப்பெயர் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் ஏலாதனவும் அஃறிணைப்பெயர் அன்மொழித்தொகையாய்த்தான் ஆருபெயராய்த்தான் உயர்திணைக்கண்வந்துழி உயர்திணைப்பெயராய்ச் சுடர்த்தொடி "சுடர்த் தொடீகேளாய்" என இகர ஈறு ஈகாரமாய்த் திரிந்துக் தாழ்குழல் தாழ்குழலே எனப் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் பிக்கும் வினையேற்றலுக் தோழீஇஇஇஇ தோழிஇஇஇஇஇ எனத் தொழில்செய்கின்றவளேயென்னும் பொருட்டாய் நிற்பதோர் இகர ஈற்று அளபெடைப்பெயரும் உழாஅன் கிழாஅன் என னகர ஈற்று அளபெடைப்பெயரும் கோஒள் என ளகர ஈற்று அளபெடைப்பெயருஞ் சிறுஅர் மகாஅர் என ரகர ஈற்று அளபெடைப்பெயரும் மாஅல் என லகர ஈற்று அளபெடைப்பெயரும் இயல்பாய் வினையேற்றலும் நம்முன் நம்முனு என உன்னீறு ஆகாரம் மிகுதலும் அம்மசாத்தா என்புழிச் சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும் அமம என்னும் இடைச்சொல்லும் எதிர்முகமாக்குதலே குறிதுநிற்றலின் அதுவும் அம்மாசாத்தா என இறுதி திரிந்து வினையேற்றலும் இவவாறுவருவன பிறவுங்கொள்க. இவ்வளபெடைப்பெயர்கள் செய்யுளுட் குறைந்துவந்தன சந்த இன்பநோக்கி விகாரத்தான் வந்தனவென்க. (சூக)

உ0அ. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவு
முருபா மல்லவற் றுயு மாகும்.

இஃது ஐகார ஈற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ஐகார ஈற்றுப்பொதுப்பெயர்க்கு அவ்வைகாரம் ஆயாயும் ஆவாயுந் திரிந்து விளியேற்றலும் உயர்திணை அஃறிணைப் பெயர்க்கு அஃது ஆயாய் ஈறுதிரிந்து விளியேற்றலும் உருபாம். எ - று.

வரலாறு;—அன்னைஅன்னாய் "அன்னை வன்னை வலந்தே னெழுந்திராய்" அத்தை அத்தாய் அத்தா எனவும் நங்கை நங்காய் மடந்தை மடந்தாய் எனவும் "சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்" "கொன்முரண் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்" எனவும் வரும்.()

உ0கூ. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்கள
ணளபீ றழிவய னீட்சி யதனெ
டூறு போத லவற்றே டோவுற
லீறழிந் தோவுற லிறுதியவ் வாத
லதனெ டயறிரிந் தேயுற லீறழிந
தயலே யாதலும் விளியுரு பாகும்.

இஃது னகர ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். னகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில சேரமான் சேரமாஅன் மலையமான் மலையமாஅன் அம்பர்கிழான் அம்பர்கிழாஅன் வல்லங்கிழான் வல்லங்கிழாஅன் எனச் சேய்மைக்கண் அளபெடித்தலுஞ், சில துறைவன் துறைவ ஊரன் ஊர எனஅண்ணீறு அண்மைக்கண் ஈறுகெடுதலுஞ், சில நம்பன் நம்பான் எம்பெருமன் எம்பெருமான் என அன்னீறு ஈற்றயல் நீடலுஞ், சில துறைவன் துறைவா ஊரன் ஊரா சோழன் சோழா என அன்னீறு அயல் நீண்டு ஈறுகெடுதலுஞ், (ஏடாவென்பது படர்க்கைப்பெயராகாது தோழன் முன்னிலைப்பெயராயே தோழாவென்னும் பொருட்டாய் நிற்பதொன்முகலின் ஈண்டைக்கு ஏலாதென்க.) சில ஐயன் ஐயாவோ அன்பன் அன்பாவோ என அன்னீறு புலம்பின்கண் ஈறழிந்து அயல் நீண்டு பிறிதுவந்தடைதலாய் ஓகாரம் மிகுதலுஞ், சில திரையன் திரையவோ ஐயன் ஐயவோ என அன்னீறு புலம்பின்கண் ஈறழிந்து பிறிதுவந்தடைதலாய் ஓகாரம் மிகுதலுஞ், சில வந்தான் வந்தாய் சென்முன் சென்முய் என ஆனீறு இறுதி யகாரவொற்முயுஞ், சில வாயிலான் வாயிலோயே என ஆனீறுங் கிழவன் "பெருங்கால்வைப்பிஞ

கிழவோயே" மாயன் மாயோயே என அன்னீறும் அயல் திரிந்து இறுதி யகரவொற்றுய் ஏகாரம் மிகுதலுஞ், சில ஐயன் "ஐயேயெ மக்கீங்கருள்" முருகன் "மடவைமன்ற வாழியமுருகே" என அன்னீறு ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாதலும் விளியுருபாம். எ-று.

பிறவும் அன்ன. 5

ஒருசாரென்பதனே விளியதிகாரமுடிவளவும் உய்த்துரைக்க.()

உக0. ளஃகா னுயர்பெயர்க் களபய னீட்சி
யிறுதி ளகரம் யவ்வொற் றுத
லயலி லகரமே யாதலும் விளித்தனு.

இது ளகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். ளகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில "மேவார்த் தொலைத்தவிறன்மிகுவேளள்" எனச் சேய்மைக்கண் அளபெடுத்த லுஞ், சில குழையள் குழையாள் அணியள் அணியாள் மக்கள் மக்காள் என அள்ளீற்று அயல் நிடலுஞ், சில குழையாள் குழையாய் உண்டாள் உண்டாய் என ஆளீற்று இறுதிளகரம் யகரவொற்றுய்த் திரிதலுஞ், சில "தலைமீதுகொள்வமடிகேள்" என ஈற்றயலில் அகரம ஏகாரமாதலும் விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன.

"துறந்துள்ளாரவரெனத்துணிகொள்ளலெல்லாந்" என ஈற 2
ழிந்தும் விளியேற்கும் என்பாரும் உளராலோவெனின் அது படர்க் கைப்பெயராகாது தோழிமுன்னிலைப்பெயராயே தோழீ என்னும் பொருட்டாய்நிற்பதொன்றுகலின் ஈண்டைக்கு ஏலாதெனக. (ங்உ)

உகக. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றய
லகர மிஈ யாதலாண் டையா 2ங.
வீயாத லதனெ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீட
லீற்றி னேவுற லிவையுமீண் டுருபே.

இது ரகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. 3

இ - ள். ரகார ஈற்று உயர்திணைப்பெயருட் சில உரூர் உரூஅர் செரூர் செரூஅர் எனச் சேய்மைக்கண் அளபெடித்தலுஞ், சில தெவவர் "எனனேமுன்னில்லன்மின்றெவவிர்" என ஈற்றயல் அகரம் இகரமாதலுஞ், சில வேந்தர் வேந்தீர் நாய்கர் நாய்கீர் என அஃது ஈகாரமாதலுஞ், சில பாரப்பார் பார்ப்பீர் சான்ரூர் சான்றீர் கரியார் கரியீர் என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலுஞ், சில பல்சான்ரூர் பல் சான்றீரே சீவகசாமியார் சீவகசாமியீரே என அதனுடனே ஏகாரம் மிகுதலுஞ், சில தோழியார் தோழீரே தொழும்பியார் தொழும்பீரே என ஈற்றயல் யாக்கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாய் ஏகாரம் மிகுதலுஞ், சில பெண்டிர் பெண்டிரோ என இர் ஈறு புலம்பின்கண் ஓகாரம் மிகுதலுமாகிய இவையும் விளியுருபாம். எ - று.

பிறவும அன்ன.

ஈண்டென்ற மிகையானே கடல் கழி சாத்தி கொற்றி என்றற் றொடக்கத்து ஒருசாரனவற்றைக் கடலார் கழியார் சாத்தியார் கொற்றியார் எனச் சிறப்பிதது உயர்திணைவாய்பாட்டான் வழங் குழி அவையுங் கடலீரே கழியீரே சாத்தீரே கொற்றீரே என்றற் றொடக்கத்துத் திரிபேற்றலும் பிறவாற்றான் வருந் திரிபுவேறுபாடுக ளுங் கொள்க. (நிஉ)

உகஉ. லகாரவீற் றுயாபெயர்க் கயனீ தெதலும்
யகார வீற்றிற் களபுமா மூருபே.

இது லகார யகார ஈற்று உயர்திணைப்பெயர்கட்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். லகார யகார ஈற்று உயர்திணைப்பெயர்களுட் சில முறையானே ஏந்தல் ஏந்தால் தோன்றல் தோன்றூல் குரிசில் குரிசீல் என லகார ஈறு ஈற்றயல் நீடலும் "விளங்கு மணிக்கொடும் பூணுஅய் நின்னுட்—டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மே" என யகார ஈறு சேய்மைக்கண் அளபெடித்தலும விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன. (நிச)

உகங. ரவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
ணீறுதி யழிவத னோடைய னீட்சி.

இது னகார ஈற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். னகார ஈற்று அஃறிணைப்பெயருள்ளும் விரவுப்பெய
ருள்ளுஞ் சில முறையானே அலவன் "கொடுந்தாளலவுமையாமீ
ரப்பம்" எனவும் சாத்தன் சாத்தகேள் எனவும் ஈறுகெடுதலும் இக
லன் "இகலுபுகுதிக்குமிகலா" அலவன் "கண்டல்சேரூர்சேரலவா"
கலுழன் "கடும்பறைக்கலுழா" எனவும் சாத்தன் சாத்தா கொற் 5
றன் கொற்ரு எனவும் ஈறுகெடுதலுடனே ஈற்றயல் நீடலும் விளியு
ருபாம். எ - று.

பிறவும் அன்ன. முன்னர் விளியுருபாமென்றதனே ணண்டும்
உய்த்துரைக்க. (நிரு)

உகச. லளவீற் றஃறிணைப் பெயாபொதுப் பெயாக்க 10
ணீற்றய னீடசியு முருபா கும்மே.

இது லகார ளகார ஈற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெ
யர்க்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள். லகார ளகார ஈற்று அஃறிணைப்பெயருள்ளும் விர
வுப்பெயருள்ளுஞ் சில முயல் "திங்களுட் டோன்றி யிருந்த குறுமு 15
யால்" கிளிகள் கிளிகாள் எனவும் கூந்தல் கூந்தால் மக்கள் மக்காள்
எனவும் ஈற்றயல் நீடலும் விளியுருபாம். எ - று.

பிறவும் அன்ன. (நிசு)

உகடு. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையி
னளவுமு புலம்பி னுவ்வு மாகும. 20

இது முன்னர்க் கூறிப்போந்த இயல்புமுதலாயின இன்னுழி
யாம் என்கின்றது.

இ - ள். அண்மைக்கண் இயல்பாதலும் ஈறுகெடுதலுஞ் சேய்
மைக்கண் அளபெழுதலும் புலம்பின்கண் ஓகாரம் மிகுதலும் விளியு
ருபாம். எ - று.

நம்பி நம்பீஇ சாத்தி சாத்தீஇ தும்பி தும்பீஇ என இகர ஈறு
சேய்மைக்கண் அளபெழுந்தன. ஒழிந்தவற்றிற்கு உதாரணம் மூன்
னர்க் காட்டினவேயாம். (நிஎ)

உகசு. தூரு எனெ னவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவெ னிறுதியும் 30

வினுச்சுட் டெனுமவை முதல வாகி
யெம்பால் குறித்த வைவகை யிறுதியு
மன்ன பிறவுந் தாமுந தானு
மின்மை வேண்டும் விளியொடு கொளலே.

இது மேல் விளியேற்குமெனக் கூறிப்போந்த இறுதியவற்றுள் ளும் இவ்வீற்றுப்பெயர்கள் விளியேலா என்கின்றது.

இ - ள். த ந து என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயி ரையும் முதலாகவுடையவாய் ஒருவனது இனமைப்பொருண்மை யைக் குறித்துநின்ற ன ள ர என்னும் முவகைப்புள்ளியையும் இறு தியாகவுடைய பெயர்களும் விளுவெழுத்துக்களுஞ் சுட்டெழுத் துக்களுயும் முதலாகவுடையவாகி ஐம்பாலையுங் குறித்துநின்ற ஐவ கை இறுதியையும் இறுதியாகவுடைய பெயர்களும் அவைபோல் வன பிறபெயர்களுந் தாம் தான் என்னும்பெயர்களும் மேல் விளி யேற்குமெனப் போந்த பெயரோடு கோடலையின்றிற்றலே வேண டும் ஆசிரியன். எ - று.

வரலாறு;—தமன் தமள் தமர் நமன் நமள் நமர் நுமன் நுமள் நுமர் எமன் எமள் எமர் தம்மான் தம்மாள் தம்மார் நம்மான் நம மாள் நம்மார் நும்மான் நும்மாள் நும்மார் எம்மான் எம்மாள் எம் மார் எனவும், எவன் எவள் எவர் எது எவை ஏவன் ஏவள் ஏவர் ஏது ஏவை யாவன் யாவள் யாவர் யாது யாவை எனவும், அவன் அவள் அவர் அது அவை இவன் இவள் இவர் இது இவை உவன் உவள உவர் உது உவை எனவும், தாம் தான் எனவும் வரும்.

அன்னபிறவும் என்றதனுனே மற்றையான் மற்றையாள் மற் றையார் மற்றையது மற்றையவை பிறன் பிறள் பிறர் என்பன போல்வனவுங் கொள்க.

வேண்டும் என்றதனுனே "எம்மானே தோன்றினு யெம்மை யொழித்தியோ" எனச் சிறுபான்மை விளியோடு கோடலுந் தமர் முதலாயின கள்ளென்னும் இடைச்சொல்லோடு கூடியவழி ளகர ரகுபோல ரகரயல் நீண்டு தமர்காள் எமர்காள் எனவும் நமரங்காள் எனவும் பெயர்த்திரிசொல்லாய்த் திரிந்துநின்று விளியோடு கோட லுங்கொள்க. (நி-அ)

உகள. பொருண்மயங் குதலு முருபுமயங் குதலு
தெரிநிலை யுடைய வேற்றுமைக் கண்ணே.

இ‌து மேற்கூறிப்போந்த வேற்றுமைகட்கு எய்தாதது எய்து விக்கின்றது.

இ - ள். பொருள்மயங்குதலும் உருபுமயங்குதலுமாகிய இரு கூற்று மயக்கமும் ஆராய்ந்தறியும் இடனுடைய வேற்றுமையி டத்து. எ - று.

உரியவை உரிய என்பார் தெரிநிலையுடைய என்றார். (நிக)

உகஅ. அவற்றுட், பொருளின் மயக்கம் பிறிதொன்றன் தன்பொருளவிடாதுதலேமயங்குதலே. [பொருளொடு

இது பொருள்மயக்கமாமாறு கூறுகின்றது.

இ - ள். அவவிருகூற்று மயக்கத்துட் பொருளின்மயக்கமா வது பிறிதோர் வேற்றுமையுருபின பொருளோடு பிறிதோர் வேற் றுமையுருபு தன்பொருளிற் நீராது அப்பொருணிலைக்களத்துச் சென்று மயங்குதலாம். எ - று. (சுo)

உகக. உருபின மயக்கமோ ருருபின் பொருளொடு தன்பொருள விடாதுத் தலேமயங் குதலே.

இ‌ஃது உருபு மயக்கமாமாறு கூறுகினறது.

இ - ள். உருபின்மயக்கமாவது பிறிதொரு வேற்றுமையுரு பின பொருளோடு பிறிதொரு வேற்றுமையுருபு தன்பொருளிற் நீர்ந்து அப்பொருணிலைக்களத்துச் சென்று மயங்குதலாம். எ - று.

உஉo. அவ்விரு திறனுஞ் செவ்விதி னுடி யிவ்வென வறித லியல்புணாந் தோரே.

இது மேலனவற்றிற்கு ஓர் புறனடை கூறுகின்றது.

இ - ள். அவவிருகூற்று மயக்கதையும் முறையானே ஆராய்ந்து இவையென அறிக இலக்கணங்களே அறிந்தோர். எ - று.

இவவென அறிதலாவது கோட்டைக்குறைத்தான் சூதினைக் கன்றினன் நெறியைச்சென்றான் என இரண்டாவதன் பொருளா கிய குறைத்தல் முதலாயின பொருட்கட் கோட்டின்கட்குறைத் தான் சூதின்கட்கன்றினன் நெறிக்கட்சென்றான் எனக் குறைத்தல் முதலியவற்றிற்குக் கோடுமுதலாயின இடனுமாகலிற் தன்பொரு

னிற் தீராது ஏழாவது மயங்கிற்றெனவும், "இவனோக்கொள்ளுமிவ் வணி" என இரண்டாவதன் பொருட்கண் 'இவட்குக்கொள்ளுமிவ் வணி' எனவும், அவளுற்செயத்தகுமக்காரியம் என வரும் மூன்றாவ தன்பொருட்கண் அவற்குச்செயத்தகுமக்காரியம் எனவும், கருவூரின் கிழக்கு சாத்தனினேடியன் மனைவாழ்க்கையிற்பற்றுவிட்டான் ஊ ரிற்றீர்ந்தான் என வரும் ஐந்தாவதன் பொருட்கட் கருவூர்க்குக்கி ழக்கு சாத்தற்குநெடியன் மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் ஊர்க்குத்தீர்ந்தான் எனவும், யானையதுகோடுகூரிது ஆவின்கன்றுக ரிது என வரும் ஆறாவதன் பொருட்கண் யானைக்குக்கோடுகூரிது ஆவிற்குக்கன்றுகரிது எனவும், காலைக்கண்வரும் என வரும் ஏழா வதன் பொருட்கட் காலைக்குவரும் எனவும், இதற்கு இதுவென் பது பட வரும் தன்பொருளிற்றீராது நான்காவது மயங்கிற்றெனவும், மணலுலீன்ற எனவரும் ஏழாவதன்பொருட்கட் "கிளையரிகாணற்கி ழங்குமணற்கீன்ற—முளையோ ரன்ன முள்ளெயிற் றுத்துவர் வாய்' எனவும், கொக்கினின்றும் ஒழிந்த எனவரும் ஐந்தாவதன் பொ ருட்கட் "கொக்கினுக்கொழிந்ததீம்பழங்கொக்கின்" எனவும் தம் பொருளிற்றீர்ந்து நான்காவது மயங்கிற்றெனவும் அறிதலாம். பிறவும் அன்ன.

தொக்குழி மயங்குவனவும் உள. அவை மேற்கூறுப.

பொருண்மயக்கந் தன்பொருளிற் றீராது மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இயை புடையனவாமாகலின் அத்தொடர்ப்பொருள் அவவேற்றுமையுரு பின் பொருளாவான் சேறலான் அதனைச் சார்ந்து அதன்பொருளா மென்பதூஉம் உருபுமயக்கந் தன்பொருளிற் றீர்ந்து மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இயைபு டையனவல்லவாமாகலின் அத்தொடர்ப்பொருள் அவவேற்றுமையு ருபின் பொருளாவான் செல்லாமையான் அதன் பொருளாகாது தான்செல்லும் பக்கத்து வேற்றுமையுருபினைச் சார்ந்து அதன்பொ ருளாமென்பதூஉந் தாமே விளங்குமென்று உணர்க. (சூ2)

உ உ க. முதன்முனை வரிற்கண் கினைமுன் வருதலு
மதுமுதற் காகிற் கினைக்கை யாதலு
மினையவை பிறவு நினைதல் வேண்டும்.

இது வேற்றுமையுருபு ஏற்புழிப் படுவதோர் வரையறையும் வேற்றுமைப்பகுதிக்கு ஏற்பதோர் புறனடையும் உணர்த்துகின்றது.

எறிந்த விளங்காய் என நான்குபொருள் மயங்கிய பன்மொழித்தொடர். பிறவும் வந்துழிக் காண்க. (இ0)

நசசு. மூற்றீ ரெச்ச மெழுவாய் விளிபே
யாறுரு பிடையுரி யதிக்கிலை தொகாநிலை.

இது மூற்கூறிப்போந்த தொகாநிலைத்தொடர்மொழி இலை யென்கின்றது.

இ - ள். தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியும் ஆறுருபுகளையும் ஏற்றசொற்களும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அடுக்குமொழியுந் தத்தமக்கு உரிய மொழிகளோடு தொடரும் இலை மூற்கூறிப்போந்த தொகாநிலைத்தொடர்மொழிகளாம். எ - று.

உ-ம். உண்டான்சாத்தன் குழையன்கொற்றன் உண்டசாத்தன் கரியகுரை உழுதுவந்தான் விருந்தின்றியுண்டபகலும் ஆவந்தது சாத்தாகேள் நிலத்தைக்கடந்தான் சாத்தலெறிவந்தான் சாத்தற்குக்கொடுத்தான் வரையினிழிந்தான் சாத்தனதாடை தட்டுப் படைக்கட்சென்றான் "அதுகொ ரேழி காம நோயே" எனிபே தையெ ரயனில்கூற்றம் பாப்புபாம்பு என முறையே காண்க. பிறவும் அன்ன. (ருக)

நசசு. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல
விரண்டி மூனலுநான் கெல்லைமுறை யடுக்கும்.

இது மேல் அடுக்கென்றதன் கூறுபாடும் அடுக்கும் வரம்புங் கூறுகின்றது.

இ - ள். அசைநிலைக்கண்ணும் விரைவுந் துணிவும் உடம்பாடும் ஒருதொழில் பலகால் நிகழ்தலும் வெகுளியும் உவகையும் அச்சமும் அவலமும் முதலிய பொருண்மைக்கண்ணும் இசைநிறைத்தற் பொருட்டும் ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லையாகவே அடுக்கி வரப்பெறும். எ - று.

அசைநிலை இருமுறை அடுக்கும் என்றலின் அதற்குப் பேரெல்லையின்றெனவும் பொருணிலை மும்முறை அடுக்கும் என்றலின் அதற்குச் சிற்றெல்லை இரண்டும் பேரெல்லை மூன்றும அடுக்குமெனவும் இசைநிறை நான்குமுறை அடுக்கும் என்றலின் அதற்குச் சிற்

றெல்லை இரண்டும் மூன்றும் பேரெல்லை நான்கும் அமிக்குமெனவுங் கொள்க.

உ-ம். மற்றேமற்றேமு அன்றேஅன்றேமு என்பன அசைகிலை. "வந்ததுவந்ததுகூற்று" என்பது விரைவு. அவன்அவன் என்பது துணிவு. வைதேன் வைதேன் என்பது உடம்பாடு. போம் போம் என்பது ஒருதொழில் பலகால் நிகழ்தல். ஏய் ஏய் என்பது வெகுளி. வருக வருக என்பது உவகை. படை படை என்பது அச்சம். உய்யேன் உய்யேன் என்பது அவலம். இவை பொருணிலை இருமுறை அடுக்கிவந்தன. நீ நீ நீ என்பது பொருணிலைக்கண் மும்முறை அடுக்கிவந்தது. இது விரைசொல்லடுக்கு. ஏனையவும் வந்துழிக் காண்க. "ஏஏஏ யம்பன் மொழிந்தனள் யாயே" "நல்குமே நல்குமே நல்குமே நாமகள்" "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" இவை இசைநிறை. பிறவும் அன்ன. (நுஉ)

நூசஎ. வாரா மரபின வரக்கூ றுதலு
மென்னு மரபின வெனக்கூ றுதலு
மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பி
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

இது மரபுவழுக் காப்பதாயதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். வாரா இயல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலும் என்னு இயல்பினவற்றை என்பனவாகக் கூறுதலுமாகிய அத்தன்மையன எல்லாம் அவ்வப்பொருள்களின் இயல்பான் இத்தன்மைய என்று சொல்லுங் குறிப்புமொழியாம். எ - று.

உ-ம். அந்நெறியீண்டுவந்துகிடந்தது அம்மலைவந்திதனோடு பொருந்திற்று எனவும் அவலவலென்கின்றனகெல் மழைமழையென்கின்றனபைங்கூழ் எனவும் வரும். இவை வரவுஞ் சொல்லுதலும் உணர்த்தாது இன்ன என்பதனைக் குறிப்பானுணர்த்திய வாறு காண்க.

அன்னவையெல்லாம் என்பதனுன் இக்நெறி ஆண்டுச்சென்று கிடக்கும், இக்குன்று அக்குன்றோடு சென்று அணுகும், கடல் இத்தூணை ஆழ்ந்து கிடக்கும், நிலம் இத்தூணை அகன்று கிடக்கும் என்றற் தொடக்கத்தனவும் "பகையுமுவகையுங் கண்ணுரைக்கும்" "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந்—தேய்தலு முடைமையைத் திங்கள் செப்புமால்" என்றற் தொடக்கத்தனவுங் கொள்க.

இன்னும் அதனானே "நண்ணீரைவாழி யனிச்சமே" "கரவல மென்றூரைக் கண்ட தில்லையே" "இரவெலா நின்றூயா லீர்ங்க திர்த் திங்காள்" எனக் கேளாமரபினவற்றைக் கேட்பனபோலவும், நிலம் வல்லென்றது நீர்தண்ணென்றது "தன்னெஞ் சறிவது பொய் யற்க பொய்த்தபின்—றன்னெஞ்சே தன்னைச் சுடும்" "வண்ணிறைப் பவளச் செவ்வாய்ப் பெடையன மடமை கூரத்—தண்கய நீருட் கண்டதன்னிழற் பிறிதென் றெண்ணிக்—கண்ட னங்கள்வ மற்றுன் காதலி தன்னை நீர்க்கீழ்ப்—பண்டைய மல்லம் வேண்டா படிக் கவென்றூடிற் றன்றே" "கருவிரற் செம்முக வெண்பற்சுன் மந்தி—பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூவிப்—பெருவரைமேற்—றேன்றே வர்க் கியுமலைநாட வாரலோ—வான்றெவர் கொட்கும் வழி" எனச் செய்யாமரபினவற்றைச் செய்வனபோலக் கூறலுங் கொள்க. பிறவும் அன்ன.

இனி வாராமரபினவற்றிற்கு முலைவந்தன தலைவந்தன என் பன காட்டின் ஆண்டு வருதல் வளர்தற் பொருட்டாகலான் அவை ஈண்டைக்கு ஆகாவென்க. (நிகூ)

கூசஅ. பெயர்வினை யெதிர்மறை பிரிப்பொழி பும்மை
யெனவெனுஞ் சொல்லொழி பேழோடுஞ் சொல்லிசை
குறிப்பெனுங் குறிப்பொழி புளப்படத் தொகைஇ
யெஞ்சுபொருட் கிளவி யீரைந் தாகும். ஐ ஐ

இது முற்கூறிப்போந்த எச்சச்சொற்களுக்கு முடிபு கூறுவான் அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துவதாயதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறையெச்ச மும் பிரிநிலையெச்சமும் ஒழியிசையெச்சமும் உம்மையெச்சமும் எனவெனைச்சமுமாகிய சொல்லெச்சம் ஏழோடுஞ் சொல்லெச்ச மும் இசையெச்சமுங் குறிப்பெச்சமுமாகிய குறிப்பெச்சம் மூன்றுங் கூடத் தொகுதலால் எஞ்சுபொருட்கிளவி பத்துவகைப்படும். எ-று.

சொல்லெச்சம் ஏழும் எஞ்சுபொருட்கிளவிகொண்டல்லது அமையாமையின் எச்சமாயின. குறிப்பெச்சம் மூன்றும் ஒருதொ டர்க்கு ஒழிபாய் எச்சமாயின.

எஞ்சுபொருட்கிளவியெனினும் எச்சமெனினும் ஒக்கும்.

பெயரெச்சமும் வினையெச்சமும் முறையானே பெயரானும் வினையானும் முடிதலின் ஆகுபெயரான் அவற்றைப் பெயர் வினை என்றார்.

எச்சமாவன ஒருசார் பெயரும் வினையும் இடைச்சொல்லுமா கலிற் பெயரியல் முதலாயினவற்றுட் பத்தும் ஒருங்கு உணர்த்து தற்கு ஏலாமையின் ராண்டுப் போதந்து கூறினார். (நூசு)

நகசுக. அவற்றுண்,
முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாகும்.

இஃது உரைத்தாமென்னும் உத்தி கூறுகின்றது.

இ - ள். முற்கூறிய எச்சங்களுட் பெயரெச்சமும் வினையெச்சமும் முன்னர் முடிபுகூறப்பட்டனவாம். எ - று.

அவையாவன "அவற்றுட், செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்—செய்வ தாதி வறுபொருட் பெயரொடு—முடியு முறையது பெயரெச் சம்மே" எனவும் "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு—நினையத் தோன்றிய முடிபா கும்மே—யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே" எனவும் முற்கூறிப்போந்தனவாமெனக் கொள்க. அற்றேல் ராண்டு எச்சங்களோடு கூட்டி ஓதினமையாற் போந்ததென்னையெனின், சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமென எச்சங்களைப் பகுத்தலின் ஆண்டுப்பெறப்படாத சொல்லெச்சமாதல் அவற்றிற்கும் எய்துவித்தலென்க.

நூசுO. எதிர்மறை யெச்ச மெதிர்மறை கோடலும்
பிரிநிலை யெசசம் பிரிநிலை கோடலு
மொழியிசை யெச்ச மொழியிசை கோடலு
மும்மை யெச்ச மிருவீற் றாதல
தன்வினை யொன்றிய முடிபா குதலு
மெனவெ னெச்சம் வினையொடு முடிதலு
மெஞ்சிய மூனறு மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவா யவைதாந
தத்தங் குறிப்பி னெசசஞ் செப்பலு
மியல்பென மொழிப வியல்புணர்ந தோரே.

இஃது ஏனையவற்றிற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள். மாறுகோளைச்சமெனப்பட்ட ஏகாரவெதிர்மறையும் ஓகாரவெதிர்மறையும் உம்மையெதிர்மறையுமாகிய எதிர்மறையெச்சம் மூன்றும் எதிர்மறைப்பொருளே உணர்த்துஞ் சொல்லேக்கொண்டு முடிதலும் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையுமென்னும் பிரிநிலையெச்சம் இரண்டும் பிரிக்கப்படாத பொருளே உணர்த்துஞ் சொல்லேக்கொண்டு முடிதலும் மன்னுந் தில்லும் ஓகாரமுமாகிய ஒழியிசையெச்சம் முன்றும் ஒழியிசைப்பொருளே உணர்த்துஞ் சொல்லேக்கொண்டு முடிதலும் எஞ்சுபொருட்கிளவியும் அஃதெஞ்சுபொருட்கிளவியான் முடிவதுமாகிய உம்மையெச்சம் அவ்வேறுபாடு இரண்டின்கண்ணுந் தன்வினையுமையோடு தொடர்ந்த சொற்குப் பொருந்திய முடிபாதலும் எனவெனைச்சம் வினையொடுமுடிதலும் ஒழிந்த சொல்லெச்சமும் இசையெச்சமுங் குறிப்பெச்சமுமாகிய குறிப்பெச்சம் முன்றும் ஒழிந்த எச்சங்கள்போலத் தமக்குமேல் ஓர்முற்றுவந்து தம்மை முடிக்கும் எஞ்சுபொருட்கிளவியையுடையவல்லவாய் அவைதாஞ் சொல்லுவார் குறிப்பான் எஞ்கின்றபொருளே உணர்த்துதலும் இலக்கணமென்று சொல்லுவா இலக்கணங்களே உணர்ந்தோர். எ - று.

வரலாறு;—யானேகொள்வேன் யானேகள்வன் வரலுமுரியன் என்னும் எதிர்மறையெச்சங்கள் முறையானே கொள்ளேன் கள்ளேன் வாரையுமுரியன் என்னும் எதிர்மறைப்பொருளே உணர்த்துஞ் சொல்லான்முடிந்தவாறு காண்க. தானேகொண்டான் தானேகொண்டான் என்னும் பிரிநிலையெச்சங்கள் பிறர்கொண்டிலரெனப் பிரிக்கப்பட்டபொருளே உணர்த்துஞ் சொல்லான் முடிந்தவாறு காண்க. அஃதேற் தானெனப்பட்டானன்றே ஆண்டுப் பிரிக்கப்பட்டான் பிறர்கொண்டிலரென்பது அவ்வே உணர்த்துஞ்சொல்லன்மையின் அவை பிரிநிலைகொண்டு முடிந்ததில்லையாலெனின், அற்றன்று; தானெனப்பட்டான் பிறரிற் பிரிக்கப்பட்ட பொருளே உணர்த்தும்வழிப் பிறரும் அவனிற் பிரிக்கப்பட்டமையான் அவை பிரிநிலைகொண்டனவேபாமென்க. தானேகொண்டான் தானேகொண்டான் என்றவழித் தானே தானே என்பன கொண்டானெனப் பிரிக்கப்பட்டபொருள் வினையினைக்கொண்டு முடிதலே பொருத்தமுடைத்தெனிற், தானேகொண்டான தானேகொண்டான் எனத் தானென்னும் எழுவாய்வேற்றுமை கொண்டானென்னும் பயனிலைகொண்டன, ஏகார ஓகாரங்கள் பிரிவு உணர்த்தின, ஆண்டு எச்சமும் அவவெச்சத்தை முடிக்குஞ்சொல்லும் இன்மையின் அது பொருத்தமுடைத்தன்றென்க. "கூரியதோர்வாண்மன்" "வருகதில்

லம்மவெஞ்சேரிசேர" கொளலோகொண்டான் என்னும் ஒழியிசை யெச்சங்கள் முறையானே திட்பமின்று, வந்தால் இன்னதுசெய் வல், கொண்டியப்போமாறு அறிந்திலன் என்னும் ஒழியிசையான் முடிந்தவாறு காண்க. பிறவும் முடித்தற்கு ஏற்கும் ஒழியிசையும் அறிந்துகொள்க. சாத்தனும்வந்தான் கொற்றனும்வந்தான் என்னும் உம்மையெச்சங்கள் இரண்டும் வந்தானென்னும் ஒருவினைகொண்ட வாறு காண்க. ஒன்றற்கு எய்தியதே ஏனையதற்கும் வருதலின் ஒருவி னையென்றார். சாத்தனும் வந்தான் கொற்றனும் உண்டான் என வேறுவினை கொண்டவழி உம்மையெச்சமும் எஞ்சுபொருட்கிளவி யும் இயையாமை உணர்க. அஃதேற்"பைம்புதல்வேங்கையுமொள்ளி ணர்விரிந்தன—நெடுவெண்டிங்களுமூர்கொண்டன்றே" என வினை வேறுபட்டிழியுந் தம்முள் இயைந்தனவாலெனின், இணர்விரிதலும் ஊர்கோடலும் இரண்டும் மணஞ்செய்காலம் இதுவென்று உணர்த் துதலாகிய ஒருபொருள்குறித்துநின்றமையின் அவை ஒருவினைப் பாற்படுமென்பது. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து ஒருவி னைப்பாற்படுத்துக.

எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயவழித் தன்வினைகோடல் ஈண்டு அடங்காமையான் அது தன்னினமுடித்தலாற்கொள்க. சாத் தன்வந்தான் கொற்றனும்வந்தான் எனவரும். உம்மையெச்சம் இரு வீற்றனும் என்றதனான் உம்மையெச்சத்திற்கு முடிபாகிய எஞ்சு பொருட்கிளவியும் உம்மையொடுவரின் எச்சமாமென்பதாம். அஃது எச்சமாங்கால் முன்னின்றது எஞ்சுபொருட்கிளவியாமென்பது. எதிர்மறையும்மை எதிர்மறையெச்சமாய் அடங்குதலின் ஈண்டு உம் மையெச்சமென்றது எச்சவும்மையேயாம்.

கொள்ளெனக்கொடுத்தான் துண்ணெனத்துடித்தான் ஒல் லென ஒலித்தது காரெனக்கறுத்தது என்னும் எனவெனெச்சங்கள் வினைகொண்டுமுடிந்தவாறு காண்க. செய்தென என்னும் வினை யெச்சவென வினைகோடல் முற்கூறினர். எண்ணெனவும் பெயரெ னவும் வினைகொள்ளா. இனி "என்றுமற்றே" என்பதனுன் என்றென்பதூஉம் எனவென்பதுபோல நன்றென்றுகொண்டான் தீதென்றிகழ்ந்தான் என வினைகொண்டுமுடிதல்கொள்க.

'எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கு—மெஞ்சுபொருட் கிளவி யிலவா யவைதாங்—தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்' என்றது அவவத்தொடர்க்குத் தாம் எச்சமாய்வந்து அவற்றது அவாய்நிலையை நீக்கலிற் பெயரெச்சமுதலாயின போலத் தம்மைமு

டிக்கும் பிறசொல்லேத் தாம் அவாய்நில்லா, அவை பிறசொல்லாகத் தாம் எச்சமாய் நிற்குமாகலின் என்பதாம்.

இவற்றிற்கு உதாரணங் காட்டுதும். அவற்றுட் சொல்லெச் சத்திற்கு உதாரணம் முன்னர்க்காட்டுதும். "தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள—வென்னே மறத்திரோ வென்று" என்புழியும் "அந் தாமரை யன்னமே நின்னே யானகன் ரூற்றுவனே" என்புழியும் முறையானே தும்மோடு யாதும் இயைபில்லாத என்னேயெனவும் உயிரினுஞ் சிறந்த நின்னேயெனவும் "இருதலேப் புள்ளி னேருயிரே ணுகிய யான்" என உவந்த தொடர்மொழிகள் எச்சமாய்நின்ற இசைப்பொருளே உணர்த்தலான் இசையெச்சமாயினவாறு காண்க. இவ் இசைவிகாரத்தை வடநூலார் காகு என்ப. "அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு" "அளித்தஞ்ச லென்றவர் கீப்பிற் றெளித்தசொற்—றேறியார்க் குண்டோ தவறு" என்ற வழியும் முறையானே அதுபோலவெனவும் கித்தார்க்கே தவறு எனவும் வருவன எஞ்சிய இசைப்பொருளே உணர்த்தலான் இசையெச்சமாம். பிறவும் அன்ன.

"உண்டார்க ணல்ல தடுநரூக் காமம்போற்—கண்டார் மகிழ் செய்த லின்று" என்புழியுங் "கண்ணுளார் காத லவராகக் கண்ணு—மெழுதேங் கரப்பாக் கறிந்து"என்புழியும் முறையானே மகிழ் செய்தற்கட் காமம் நவினுஞ் சிறந்ததேயெனினும் இவள்குறிப்பு ஆராய்ந்தறியாமையின் யான் அது பெற்றிலேனெனவும் யான் இடையீடின்றிக்காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னேயெனவும் வந்த தொடர்மொழிகள் எச்சமாய் நின்ற குறிப்புப் பொருளே வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சமாயினவாறு காண்க. "பசப்பித்துச் சென்ருருடை யையோ வன்ன—நிறத்தையாற் பீரமலர்" "இனேதாக மூண்மரங் கொல்க களேயுநர்—கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்புழியும் முறையானே பசப்பித்துச் சென்ரு ரையாமுடையேம் எனவும் தியாரைக்காலத்தாற்கனேக எனவும் வந்த தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளே வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சமாம். பிறவும் அன்ன.

அதுபோலவென்பதனுஉக் தியாரைக்காலத்தாற்கனேகவென்பதனுஉம் அணியியலுள் எடுத்துக்காட்டுவமமெனவும் பிறிதுமொழிதலெனவுங் கூறப்படுமாறும் உணர்க. குறிப்புப்பொருளேயன்றி எஞ்சிய பொருளுஞ் சொல்லுவான் குறிப்பொடுபடுத்து உணர்த்துதமக்கு ஏற்றசொல்லான் உணர்த்தப்படுதலிற் குறிப்பான் எச்சஞ் செப்பல் மூன்றற்கும் ஒத்தவாறு அறிக. "சொல்லள வல்ல தெஞ்

சுத லின்றே'' என்பதனைச் சொல்லெச்சம் ஒருசொல்லாதல் பெறப் படுதலின் இவை தொடர்ச்சொல்லாமென்பது பெற்றும். இசைப் பொருள் முதலிய குறிப்புப்பொருளைத் தும்முச்செறுத்தல் முதலிய தொடர்மொழிகளே உணர்த்தலான் எஞ்சுபொருள் எனப்படாவா யினும் அப்பொருள் பிறசொல்லானல்லது வெளிப்படாமை யின் அச்சொல் எச்சமாயின.

இனி இசையெச்சத்திற்கு ஒல்லென ஒலித்தது வயிறுமொடு மொடித்தது என்பனவுங் குறிப்பெச்சத்திற்கு விண்ணெனவிணைத் தது கற்கறிக்கஞன்கட்டாய் என்பனவுங் காட்டின் ஆகாது. என்னை? ஒல்லென ஒலித்தது விண்ணெனவிணைத்தது என இசையுங் குறிப் பும்பற்றி வருவனவற்றை எனவெனெச்சமென அடக்காது வேறு ஓதின், வெள்ளெனவெளுத்தது எனப்பண்புபற்றிவருவதனையும் வேறு ஓதல்வேண்டுதலானும் ஒலித்தது விணைத்தது என்பன தஞ் சொல்லெனபடா, படினும் ஒல்லெனவோடிற்று விண்ணெனவீங் கிற்று எனப் பிறசொல்லானும் முடிதலின் எஞ்சுபொருட்கிளவியி லவாமென்றல் பொருந்தாமையானும் உண்ணவேண்டா என்பதெஞ் ருவன் வயிறுமொடுமொடித்தென்றல் உற்றதுரைத்தலாகிய செப் புவழுவமையியாகலானுந் தீங்கட்டாயென்பது தொடர்ச்சொல்லன் மையாற் "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா—நிறைவ னடி சேராதார்'' என்புழிச் சேர்ந்தாரென்பதுபோலச் சொன்மாத்தி ரம் எஞ்சிநிற்குஞ் சொல்லெச்சமாவதல்லது குறிப்பெச்சமாகாமை யானுமென்க.

இக்குறிப்பெச்சங்கள் மேல் "வெளிப்படை குறிப்பு" என்ற வற்றுட் குறிப்பிற் தோன்றலாய் அடங்குமெனின், ஆண்டுச் சொற் பாருபாடு உணர்த்தினுர்; ஈண்டுக் குறிப்பிற் தோன்றும் பொருளை வெளிப்படுத்தும் எச்சமாதலுடைமையான் எச்சமென்றுராகவின் ஆண்டு அடங்கா என்க. (இசு)

நூறிக. சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ்
சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே.

இது சொல்லெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறு கின்றது.

இ - ள். சொல்லெச்சம் ஒருசொற்கு முன்னும் பின்னுஞ் சொல்மாத்திரம் எஞ்சுவதல்லது தொடராய் எஞ்சுதலின்று. எ - று.

வரலாறு;—"ஒருகண் சிறக்கணித் தாள்போல நகும்" என் புழி நோக்கியென்னுஞ் சொல்முன்னுங் "கல்கெழு கானவர் நல்கு றூஉ மகண்—மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே"என் புழி எமக்கு என்னுஞ் சொல் பின்னும் எஞ்நின்றவாறு காண்க. "உயர்திணையென்மனார்" என்புழி ஆசிரியரென்பதுஉம் "பிறவிப் பெருங்கட னீந்துவர்" என்புழிச் சேர்ந்தாரென்பதுஉம் அன்ன. அற்றேல் அவை முறையானே என்மனார் நீந்துவர் என்னும் முற் றிற்கு முடிபாகலின், "எஞ்சிய முன்றுமேல் வந்துமுடிக்கு மெஞ்சு பொருட் கிளவியில" என்பதனோடு மாறுகொள்ளுமெனின், அற் றன்று; அவை அவாய்நிலைக்கண் அவற்றோடு இயைவதல்லது அவாய்நிலையில்வழி இயையாமையின் எச்சமாய்வந்து இயைந்த வேயாம், முடிபுபாய்வந்து இயைந்தனவல்ல என்க; "மற்றுச்சொன் னேக்கா மரபின வினைத்து—மூற்றி நிற்பன முற்றியன் மொழியே" என்பவாகலின்.

இனி இச்சூத்திரத்தை கலிந்து வேறுவேறு பொருள் கூறுவா ரும் உளர். அது பொருளன்மை சூத்திரக்கிடக்கைமுறைமை நோக்கி உணர்க.

இனிக் குறிப்பெச்சத்திற்கு ஈண்டுக் காட்டிய செய்யுளுதார ணங்கள் செய்யுளியலுட் கூறிய குறிப்பெச்சத்திற்கே உரிமையுடை மையின் அவற்றைக் காட்டுதல் அமைவுடைத்தன்றெனின், ஈண்டுக் கூறிய இலக்கணங்களே எய்திநின்ற எச்சங்களேப் பொருந்திய செய் யுட்கள் ஆண்டு எச்சமென்னும் உறுப்புநிகழ வந்த செய்யுளாம் என் றதனையல்லது ஆண்டு எச்சங்களுக்கு வேறு இலக்கணங் கூறுமை யின் இவை அவற்றினின்றும் வேறனையவான் அமைவுடைத் தென்க. யாம் இங்ஙனங் கூறியதற்குச் "சொல்லொடுங் குறிப்பொடு முடிபுகொ ளியற்கை—புல்லிய கிளவி யெச்சமாகும" என்னுஞ் செய்யுளியற் சூத்திரமே சான்றுதல் அறிக.

இனி இவ்வாறன்றி ஈண்டுக் கூறிய பெயரெச்சம் முதலிய பத் தெச்சங்களுக்கும் பிறவாற்றான் இலக்கணங் கூறுவாரும் உளர். அவையும் பெரும்பாலும் இவற்றுள்ளே அடங்குமாறும் பிறபகுதிப் படுமாறும் ஓர்ந்து உணர்க. (இ)

கூடுஉ. தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமு
மிறந்த காலமொடு வாராக காலமு
மயங்குகல் வரையார் முறைநிலை யான.

இது மேல் உம்மையெச்சத்திற்கு முடிபாமென்ற தன்வினை காலம் வேறுபடுதலும் படாமையும் உடைமையான் இன்னுழி இன்னவாற்றானல்லது வேறுபடாதென வரையறுக்கின்றது.

இ - ள். உம்மையெச்சத்தின்முன் எஞ்சுபொருட்கிளவி உம்மையில்சொல்லாய் வருங்கால் நிகழ்காலத்தோடு எதிர்காலமும் இறந்தகாலத்தோடு எதிர்காலமும் மயங்குதலே நீக்கார் அவ்வாறு மயங்கும் முறைமையான். எ - று.

'முறைநிலையான' என்றதனாற் கூறியமுறையானல்லது எதிர்காலம் முன்னிற்ப ஏனைக்காலம் பின்வந்து மயங்குதலில்லை என்பதாம்.

வரலாறு;—கூழுண்ணுகின்றான் சோறுமுண்பன் எனவும் கூழுண்டான் சோறுமுண்பன் எனவும் அவை கூறியமுறையானே மயங்கியவாறு காண்க.

இவற்றோடு இதுமயங்குதல் வரையாரெனவே இறந்தகாலத்தோடு நிகழ்காலமும் நிகழ்காலத்தோடு இறந்தகாலமும் வந்து மயங்குதல் வரையப்படுமென்பதாம். 'தன்மேற் செஞ்சொல் வருஉங்காலே' என்றதனான் உம்மையடுத்தசொல் வருங்கால் வேறுபாடின்றி இரண்டுசொல்லும் ஒருகாலத்தான்வரும் என்பதாயிற்று. ()

நூஉ. செய்யா வென்னு முன்னிலை வினைச்சொற்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.

இஃது ஓசைவேறுபாட்டான் ஒருசொல் ஒருசொல்லாமென்பதோர் ஒழிபுகூறுகின்றது.

இ - ள். ஒருதொழிலினை மேற்செய்யாயென்னும் மறையாகிய முன்னிலைவினைச்சொல் அத்தொழிலினைச் செய்யென்னும் உடம்பாட்டு முன்னிலைவினைச்சொல்லாம் இடத்தினையுடைத்து. எ - று.

இடனுடைத்தென்றதனாற் பெரும்பான்மை மறையாய்வரும். உண்ணாய் ஓதாய் என்பன போல்வன வேண்டிக்கோடற்பொருண்மைக்கட் பிறந்தலோசையாற் சிறுபான்மை உடம்பாட்டின்கண்ணும் வருமென்பதாயிற்று.

வரலாறு;—"அறியாய் வாழி பொறிவரிப் பூதுதல் யானையொடு" என்னும் அகப்பாட்டினுள் அறியாய் என்றது "காமங்

கலந்த காதல ருண்டெனி—னன்று மன்னிது நாடாய் கூறி" என் றதனேடு இயையுங்கால் அவனேடு கூட்டமுண்டெனின் அது மிக வும் நன்று, அதனை ஆராயாமற் கூறுகின்றாய், அதனை நின்மனத் தான் ஆராய்ந்துபாராயென வேண்டிக்கோடற்பொருண்மைக்கட் படுத்தலோசையான் முன்னிலேயேவலுடன்பாட்டின்கண் வந்த வாறு காண்க. இனி வழக்கின்கண்ணும் இக்நாள் எம்மில்லத்து உண்ணாய், இப்பொழுதுசொல்லாய் எனவரும். பிறவும் அன்ன.

உண் தின் என்பன முதலிய முன்னிலேயேவல் உயர்ந்தான் இழிந்தானை ஏவுதற்கண் வருவனை, இவை அன்னவல்லவாமென்க, நீகலாய்த்திராது உண்ணுயென்ற பொருளை உண்ணென்றது தாராது ஏவற்பொருட்டாய் நின்றமையின். (நூ)

ஈருசு. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே யின்ன வென்னுஞ் சொன்முறை யான.

இஃது இன்னுழி இப்பொருள் இதனுற் றோன்றுமென்ப தோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். சொல்லானன்றிச் சொல்லுவான் குறிப்பாற் பொ ருள் உணரப்படுஞ் சொற்களும் உள. இப்பொருள் இத்தன்மைய என்று சொல்லுதற்கண். எ - று.

வரலாறு;—செஞ்செவி வெள்ளொக்கலர் என்புழி மணியும பொன்னும் அணிந்த செவியென்றும் வெள்ளியது உடுத்த சுற்ற மென்றுங் குறிப்பான் அறியப்பட்டவாறு காண்க. குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்புழி அன்ன பெருஞ்செல்வத் தாரென்பதூஉங் குறிப்பான் உணரப்படும். இது "வெளிப்படை குறிப்பின்" என்புழி அடங்குமெனின், ஆண்டுப் பொருணிலை இருவகைத்தென்பதல்லது இன்னுழி இப்பொருள் குறிப்பிற் தோன்றுமென்னும் வேறுபாடு பெறப்படாமையான் ஆண்டு அடங் காதென்க. (சுஐ)

ஈருடு. ஒருபொருட் பலபெயர் பிரிவில வரையார்.

இஃது ஒருசார் மரபுவழுவமைதி உணர்த்துவதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். ஒருபொருளைக் குறித்துவரும் பலபெயர்ப்பொருளின் நீங்காதனவாயினவற்றை ஒருபொருட்குப் பலபெயர்வந்தன என்று கடியார். எ - று.

உ-ம். "வையைக் கிழவன் வயங்குதார் மாணகலன்—தையலா யின்றுநீ கல்கினே கல்காயேற்—கூடலார் கோவொடு நீயும் படுதி யே—நாடறியக் கௌவை யொருங்கு" எனவும் "கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்—வைகலு மேறும் வயக்களி றே—கைதொழுவல்—காலேக வண்ணனைக் கண்ணுரக் காண வெஞ்—சாலேகஞ் சார நட." எனவும்வரும். இவற்றுள் வையைக் கிழவன் கூடலார்கோ என்பன ஒருபொருளே வரைந்து உணர்த்திநி ன்றுற்போலக் காலேகவண்ணனென்பது சாந்துபூசினுர்க்கெல்லாம் பொதுவாய்க் கூத்தப்பெருஞ்சேந்தனேயே வரைந்து உணர்த்தாமை யின் அது பிரிவுடைமையாற் கடியப்படுமாலோவெனின், அற்றன று;"நிலங்கினேயா—நாணி நின்றேணிலேகண்டியானும்—பேணினெ னல்லனே மகிழ்நவானத்—தணங்கருங் கடவு ளன்னேணின்—மகன்ரு யாதல் புரைவதா லெனவே" என்புழி "வானத் தணங் ருங் கடவு ளன்னேள்" என்பது மகளிர்க்கெல்லாம் பொதுவாய் நா ணிநின்றேனே வரைந்து உணர்த்தாதாயினுஞ் சொல்லுவான் குறிப் பான் அவனேயே உணர்த்தினுற்போலக் காலேகவண்ணனென்பதும பொதுவாயினுஞ் சொல்லுவான் குறிப்பாற் கூத்தப்பெருஞ்சேந்த னேயே உணர்த்திப் பிரிவிலவாய் நிற்றலிற் கடியப்படாதென்க. "பொற்பூண் சுமந்த புணர்மென்முலேக் கோடுபோழ—நற்பூங் கழலா னிருதிங்க ணயந்த வாறுங்—கற்பா டழிதத கனமாமணித் தூண் செய் தோளான்—வெற்பு டறுத்து விரைவின்னெறிக் கொண்ட வாறும்" என்பதும் அது. இவனேறே சான்ரேர்செய்யுளிற் பயின றுவருமாறும் உணர்க. (சுக)

கூடுசு. ஒருபொருட் பனமொழி சிறப்பினின் வழாஅ.

இதுவும் அது.

இ - ள். பொருள்வேறுபாடின்றி ஒருபொருளேக்குறித்து வ ரும் பலசொற்கள் அப்பொருளேச் சிறப்பித்தலின் வழுவென்று கடி யப்படா மரபென்று கொள்ளப்படும். எ - று.

உ-ம். "நிவந்தோங்கு பெருமலே" எனவும் "துறுகன்மீ.சையு றுகண்" எனவும் வரும். பிறவும் அன்ன. (சுஉ)

கூடுஎ. செயப்படு பொருளேச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும வழகியன மரபே.

இது வினேச்சொற்பற்றி மரபுவழு அமைப்பதாயதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். செயப்படுபொருளைச் செய்தவினைமுதல்போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலும் மரபு. எ - று.

வழக்கியன்மரபெனவே இலக்கணமன்று என்பதாயிற்று.

உ-ம். திண்ணெமெழுகிற்று கலங்கழீஇயிற்று எனவரும். திண்ணெமெழுகப்பட்டதென்று மன்னுகற்பாலது அவ்வாய்பாட்டானன்றி வினைமுதல்வாய்பாட்டான் வருதலும் வழக்கின் உண்மையான் அமைக்க என வினைச்சொற்பற்றி மரபுவழு அமைத்தவாறுகாண்க.

இங்ஙனம் வினைமுதல்வாய்பாட்டாற் கிளத்தலேயன்றி எளிதின் அடப்படுதல் நோக்கி அரிசி தானே அட்டதெனச் செயப்படுபொருளை வினைமுதலாகக் கூறுதலும் அடங்குதற்குத் 'தொழிற்படக்கிளத்தலும்' என்றார். இதனைக் கருமக்கருத்தனென்ப.

இனி ஒன்றெனமுடித்தலான் இவ்வாள்வெட்டும் எனக் கருவியைத்தானே செய்வதாகக் கூறுங் கருவிக்கருத்தனும் அரசன் எடுத்த ஆலயமென எவ்னைனைக் கருத்தனைக் கூறும் எவற்கருத்தனுங் கொள்க. (சூசு)

கூடுஅ. முன்னிலை யேவன்முன் னீயு மெயு
மந்நிலை மரபின் மெய்பூர்ந்து வருமே.

இது முன்னிலையேவல்வினைச்சொற்பற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். முன்னிலையேவல்வினைச்சொன்முன்வரும் ஈகாரமும் ஏகாரமும் முன்னிலைச்சொற்கு ஏற்றமெய் ஊர்ந்துவரும். எ - று.

வரலாறு;—"சென்றீபெரும நிற்றகைக்குரர்யாரே" "அட்டிலோலைதொட்டனை நின்மே" என இவை முன்னிலைக்கு ஏற்ற மெய் ஊர்ந்து வந்தவாறு கண்டுகொள்க.

ஈகாரம் ஒன்றேயாகப் புக்கீ உண்டீ உரைத்தீ சென்றீ என முன்னிலைவினையீற்று வேறுபாட்டிற்கு ஏற்ப மெய் வேறுபட்டு வருதலான் 'அந்நிலைமரபின்மெய்' என்றார். ஏகாரம் மகரமூர்ந்தல்லது வாராது.

இவ்வெழுத்துப்பேறு புணர்ச்சிவிகாரமாகலின் ஈண்டுக் கூறற்பாற்றன்றெனின், அற்றன்று; முன்னிலையேவன்முன் ஈயும் ஏயும்

அச்சொல்லொடு ஒற்றுமைப்பட்டு நிற்றலான் நிலைமொழி வரு மொழி செய்து புணர்க்கப்படாமையான் மெய்ப்புணர்ச்சிவிகாரம் எனப்படா என்க.

ஈ ஏ என்பது ஓர் இடைச்சொல்லென்பது அறிவித்தற்கு "இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே" என்பதனைச் சார ரூண்டுப் போதந்து கூறினர். (சூ)

நூசூ. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

இஃது இடைச்சொற்பற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். இடைச்சொல்லெல்லாம் பிறிதோர் சொல்லே வேறு படுக்குஞ் சொல்லாம். எ - று.

இஃது என்சொல்லியவாறுவெனின், பிறிதோர்சொல்லே வேறுபடுப்பனவும் பிறிதோர்சொல்லான் வேறுபடுக்கப்படுவனவும் எனச் சொல் இருவகைப்படும். பிறிதோர் சொல்லே வேறுபடுத்த லாவது விசேடித்தல். பிறிதோர்சொல்லான் வேறுபடுக்கப்படுதலா வது விசேடிக்கப்படுதல். இவை பொதுவகையான் எல்லாச்சொற் குங் கூறுமை எய்துமாகலின் இடைச்சொல்லெல்லாம் வேறுபடுக் குஞ் சொல்லாவதல்லது ஒருஞான்றும் வேறுபடுக்கப்படுஞ் சொல் லாகா என நியமித்ததாம். அவை அன்னவாதல் இடையியலுள் ஓதப்பட்ட இடைச்சொல்லெல்லாம் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள் ளும் வருவழிக் கண்டுகொள்க.

வேற்றுமைச்சொல் வேற்றுமை செய்யுஞ்சொல்லென விரி யும். வேற்றுமையெனினும் வேறுபாடெனினும் ஒக்கும்.

இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச்சொல்லாயினும் அவற் றுள் ஒருசாரனவற்றை வேற்றுமைச்சொல்லென்றூர், சேற்றுட் தோன்றுவனவற்றுள் ஒருசாரனவற்றைப் பங்கயமென்றூற்போல என்பது. இதுவும் ஓர் நயமென்க. (சூ)

நூசூ. உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

இஃது உரிச்சொற்பற்றி நிகழ்வதோர் ஒழிபு கூறுகின்றது.

இ - ள். உரிச்சொல்லிடத்தும் வேறுபடுத்துஞ் சொல்லாதற் கும் உரியன உரியவாம் எல்லாமுரியவாகா. எ - று.

ஏனவே, உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய் வருவன பெரும்பான்மையென்பதாம். வேறுபடுப்பன உறுதவ னனி என்னுந் தொடக்கத்தன. இருநிலைமையுமுடையன குரு கெழு செல்லல் இன்னல் என்னுந் தொடக்கத்தன. உறுபொருள் தவப்பல னனிசெய்தது ஏகலடுக்கம் என இவை ஒன்றனை விசேடித்தல்லது வாராமையுங் குருமணி விளங்குகுரு கேழ்கிளரகலம் செங்கேழ் செல்லலை அருஞ்செல்லல் இன்னற்குறிப்பு பேரின்னல் என இவை ஒன்றனை விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய் வருமாறும் வழக்குஞ் செய்யுளும் நோக்கிக் கண்டுகொள்க. குருவிளங்கிற்று செல்லதீர் எனத் தாமே நின்று வினைகொள்ளன விசேடிக்கப்படுத்தன்மையுடையவாகலின் விசேடிக்கப்படுஞ் சொல்லாம். பிறவும் விசேடித்தல்லது வாராதனவும் விசேடித்தும் விசேடியாதும் வருவனவும் வழக்குஞ் செய்யுளும் நோக்கி உணர்க.

வேறுபடுக்குஞ் சொல்லேயாவன இவையெனத் தொகுத்து உணர்த்துதற்கும் 'உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய' எனச் சூத்திரஞ் சுருங்குதற்கும் இடைச்சொல்லோத்தினுள்ளும் உரிச்சொல்லோத்தினுள்ளும் வையாது இரண்டுசூத்திரத்தையும் சண்டு வைத்தார். (சூசு)

நகூக. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
டாப்பிசை யளமறி பாப்புக்கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

இது முற்கூறிப்போந்த இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களானும் சட்டப்படுஞ் செய்யுட்கு உரிய பொருள்கோளின் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள். யாற்றுநீர்ப்பொருள்கோளும் மொழிமாற்றுப்பொருள்கோளும் நிரனிறைப்பொருள்கோளும் பூட்டுவிற்பொருள்கோளுந் தாப்பிசைப்பொருள்கோளும் அளைமறிபாப்புப்பொருள்கோளுங் கொண்டுகூட்டுப்பொருள்கோளும் அடிமறிமாற்றுப்பொருள் கோளுமெனப் பொருள்கோள் எட்டுவகைப்படும். எ - று.

இவையனைத்துங் காரணக்குறியென்று உணர்க. ஏனைய போல விகாரப்படாது இயல்பாகவே தம்முட்கூடிப் பொருள் அற்று வருதலின் யாற்றுநீர்ப்பொருள்கோள் முன்வைக்கப்பட்டது. ஏனையவற்றிற்குங் கிடக்கைமுறைமைக் காரணங் கண்டுகொள்க. (சூஎ)

நசூஉ. அவற்றுண்,
மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொரு
ளற்றற் றெழுகுமஃ தியாற்றுப் புனலே.

இது நிறுத்தமுறையானே யாற்றுநீர்ப்பொருள்கோளாமாறு உணர்த்துகின்றது.

இ - ள். மேற்கூறிய பொருள்கோள்வகை எட்டனுள் ஏனைய டிகளே நோக்காது அடிதொறும் பொருள் முடிபுபெற்று வருவது யாற்றுநீர்ப்பொருள்கோளாம். எ - று.

ஏனையபோல விகாரப்படாது இயல்பாகவே தம்முட்கூடிப் பொருள் அற்று வருதலின் வான்பொருளென்றார்.

உ-ம். "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்—வினைப் பாலிற் கொண்டே மிசைதலுங் குற்றஞ்—சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்—கொலைப்பாலுங் குற்றமே யாம்." (சூஅ)

நசூஈ. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளே
மாற்றியோ ரடியுள் வழங்கன் மொழிமாற்றே.

இது நிறுத்தமுறையானே மொழிமாற்றுப்பொருள்கோளா மாறு கூறுகின்றது.

இ - ள். தாங்குறித்த பொருளிற்குப் பொருந்திய மொழி களே ஓரடியுள்ளே மாற்றிச்சொல்லுதல் மொழிமாற்றுப்பொருள் கோளாம். எ - று.

உ-ம். "சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய—யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப—கானக நாடன் சுனை" இதனுள் நின்ற வழி நிற்ப இயையாமையிற் சுரைமிதப்ப அம்மியாழ எனவும் யானைக்குநிலை முயற்குநீத்து எனவும் ஓரடியுள்ளே மாற்றிக் கூட்ட இயைந்தவாறு காண்க.

இதனைச் சுண்ணமொழிமாற்றென்று ஈரடியிடத்தே கொள் ளின் ஏனையடிகளுள்ளும் ஏனைப்பாக்களுள்ளும் வரப்பெருமை யின் 'மாற்றி யோரடியுள் வழங்கன் மொழி மாற்று' என்றார். (சூசு)

ஈசூச. பெயரும் வினையுமாஞ் சொல்லையும்பொருளையும
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினு
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

இது நிறுத்தமுறையானே நிரனிறைப்பொருள்கோளாமாறு கூறுகின்றது. 5

இ - ள். பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமாகின்ற முடிக்கப்படுஞ் சொற்களையும் அவற்றை முடிக்குஞ்சொற்களையும் வேறு வேறு நிரல்பட நிறுத்தி முறையேயாதல் எதிரேயாதல் முடிக்கப்படுஞ் சொற்களையும் முடிக்குஞ் சொற்களையும் இயையுமாறுகூட்டிப் பொருள்கோடல் நிரனிறைப்பொருள்கோளாம். எ - று. 10

தொடர்மொழிப்பொருள் முடிக்குஞ்சொற்கண்ணதாகலான் அதனைப் பொருளென்றார்.

பெயரும் வினையுமென்றதனாற் பெயர்ச்சொல்லான் வருவதூஉம் வினைச்சொல்லான் வருவதூஉம் அவவிருசொல்லானும் வருவதூஉமென மூன்றாய், முறையினும் எதிரினும் என்றதனால் நிரல்பட நிற்கும் முறைநிரனிறையும் நிரல்படநில்லாது மயங்கிநிற்கும் எதிர்நிரனிறையுமென அவையே ஒரோவொன்று இரண்டிரண்டாபெனக் கொள்க. 15

உ-ம். "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி—மதி பவள முத்த முகம்வாய் முறுவல்—பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்—வடிவினளே வஞ்சி மகள்" என்புழி முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச்சொற்கள் நிரல்பட வேறுவேறு நிற்றலிற் பெயர்முறைநிரனிறை. "மாசு போகவுங் காய்பசி நீங்கவுங்—கடிபுனன் மூழ்கி யடிசில் கைதொட்டு" என்புழி முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொற்கள் நிரல்பட வேறுவேறு நிற்றலின் வினைமுறைநிரனிறை. "உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்—கடலிரு ளாம்பல் பாம்பென்ற—கெடலருஞ்சீர்த்—திங்கடிருமுகமாச் சேத்து" என்புழி முடிவனவாகிய பெயரும் முடிப்பனவாகிய வினையும் நிரல்பட வேறுவேறு நிற்றலிற் பொதுமுறைநிரனிறை "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப—போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்—மண்ணமிழ்த மங்கையர் தோண் மாற்றூரை யேற்றூர்க்கு—நுண்ணிய வாய பொருள்." இதுவும் அது. "களிறுங் கந்தும் போல களிகடற்—கூம்புங் கலனுங்

தோன்றும்" என்புழி முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச் சொற்கள் நிரல்பட நில்லாது மயங்கிநிற்றலிற் பெயரெதிர்நிரனிறை. வினையெதிர்நிரனிறை வந்துழிக்காண்க. "ஆடவர்க ளெவரா தகன் றிழிவார் வெஃகாவும்—பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமா னின்ரு னிருந்தான் கிடந்தா னினுவன்றே—மன்ரூர் கலிக்கச்சி மாண்பு" என்புழி நிரல்பட நில்லாது முடிவனவும் முடிப்பனவுமா கிய பெயர்ச்சொற்களும் வினைசசொற்களும் மயங்கிநிற்றலிற் பொது வெதிர்நிரனிறை. பிறவும் அன்ன.

இனி நெறியென்றதனானே "காமவிதி கண்முக மென்மருங் குல் செய்யவாய்—தோடு றுகடினி சொல்லம்தக்—தேமலர்க்—காந்தள் குருப்பை களப மடவாள்கை—யேந்திளங் கொங்கை யெழில்" என்ரூற்போலும் எழுத்துநிரனிறையும் "வெண்பா முத லாக வேதிய ராதியா—மண்பால் வருத்த வருணமா—மொண்பா—வினங்கட்கு மிவவாறே யென்பவாற் ரூன்னூன்—மனந்திட்பக் கற்ரூர் மகிழ்ந்து." என்ரூற்போலும் தொகைநிரணிறையும் பிற வாற்ரூன் வரும் நிரனிறைவிகற்பம் அனைத்துங் கொள்க. நிரனி றை நிரலேநிறுத்தும் வேறுபாடு உடைமையின் மொழிமாற்றின் வேறென்று உணர்க. (எ0)

நூ.ரு. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.

இது நிறுத்தமுறையானே பூட்டுவிற்பொருள்கோளாமாறு கூறுகின்றது.

இ - ள். செய்யுளின் முதலீறுகளில் நின்ற சொற்கள் தம்மிற் பொருள்குறித்து நிற்பது பூட்டுவிற்பொருள்கோளாம். எ - று.

உ-ம். "திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத—நிறந்து படிற் பெரிதா மேத—முறந்தையர்கோன்—றண்ணை மார்பிற் றமிழ்நர் பெருமானைக்—கண்ணுரக் காணக் கதவு" எனவரும். (எக)

நூ.ரூ. இடைநிலை மொழியே யேனையி ரிடத்து
நடந்து பொருளை நண்ணுத ருப்பிசை.

இது நிறுத்தமுறையானே தாப்பிசைப்பொருள்கோளாமாறு கூறுகின்றது.

இ - ள். செய்யுளினிடைகின்ற சொல் முதலினும் ஈற்றினுஞ் சென்று பொருளே ஒட்டிநிற்பது தாப்பிசைப்பொருள்கோளாம். எ - று.

உ-ம். "உண்ணுமை யுள்ள துயிர்நிலை யுணுண்ண—வண்ணுத்தல் செய்யா தளறு" என்புழி ஊனென்று இடைநின்ற சொல் ஏனயிரிடத்துஞ் சென்று ஒட்டியவாறு காண்க. (எஉ)

ஈஊ. செய்யு ளிறுதி மொழியிடை முதலினு
மெய்திய பொருள்கோ ளனோமறி பாப்பே.

இது நிறுத்தமுறையானே அனோமறிபாப்புப்பொருள்கோளாமாறு கூறுகின்றது.

இ - ள். செய்யுள் ஈற்றினில் நின்ற சொல் இடையினும் முதலினுஞ் சென்று இயைந்த பொருள்கோள் அனோமறிபாப்புப்பொருள்கோளாம். எ - று.

உ-ம். "தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைத்து தண்டேறித் தளர்வார் தாமுஞ்—சூழ்ந்த வினையாக்கை சுடவிழிந்து நாற்கதியிற் சுழல்வார் தாமு—மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்—வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே" எனவரும். (எஈ)

ஈஊஅ. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
யேற்புழி யியைப்பது கொண்டு கூட்டே.

இது நிறுத்தமுறையானே கொண்டுகூட்டுப்பொருள்கோளாமாறு கூறுகின்றது.

இ - ள். செய்யுளது பல அடிகளுள்ளுங் கோவைப்படநின்ற சொற்களைப் பொருள் தருதற்குப் பொருந்தும்படி முன்னின்ற சொல்லைப் பின்னே கொண்டுவந்தும் பின்னின்ற சொல்லை முன்னே கொண்டுபோந்துங் கொளுவிப் பொருள்கொள்வது கொண்டு கூட்டுப்பொருள்கோளாம். எ - று.

உ-ம். "ஆலத்து மேல குவளை குளத்துள—வாலி னெடிய குரங்கு" என்புழியுங் "தெங்கங்காய் போலத் திரண்டிருண்ட பைங்கூந்தல்—வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி—யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே—வங்கத்திற் சென்மூர், வரின்." என்

புழியும் "ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்—பாரி பறம்பின் மேற் றண்ணுமை—காரி—விறன்முள்ளூர் வேங்கைவீ. தாணுணுந் தொளா—ணிறனுள்ளூ ருள்ள தலர்." என்புழியும் முறையானே ஆலத்துமேலகுரங்கு குளத்துளகுவனே என ரடியுள்ளும் அஞ்ச னத்தன்னபெங்கூந்தல் தெங்கங்காய்போலத் திரண்டு உருண்ட வெண்கோழிமுட்டையுடைத்தன்ன பசலை எனவும் பாரிபறம்பின் மேற்றண்ணுமைதாணுணுந்தோளாள்நிறன் விறன்முள்ளூர்வேங்கை வீ உள்ளூருள்ளதாகிய அலர் ஆரியமன்னர் பறையின் எழுந்தியம் பும் என்னும் இரண்டிறந்த பல அடியினுள்ளும் நின்ற சொற்களைப் பொருள் தருதற்குப் பொருந்தும்படி முன்னும் பின்னும் கொள் வழியறிந்து கொளுவிப் பொருள்கொண்டவாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன.

இது பல அடிகளினும் வருதலின் மொழிமாற்றுப்பொருள் கோளின் வேறுயிற்று. (எச)

15 . ருசுக. அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இது நிறுத்தமுறையானே அடிமறிமாற்றுப்பொருள்கோளா மாறு கூறுகின்றது.

இ - ள். அடிமறிமாற்றுப்பொருள்கோளாவது சீர் நின்றுங்கு நிற்ப அடிகள் தத்தம் நிலையிற் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று நிற்கும். எ - று.

எனவே, எல்லா அடியும் யாண்டுஞ் செல்லுமென்பதாம்.

உ-ம். "மாறுக் காதலர் மலைமறந் தனரே—யாறுக் கட்பனி வரலா னுவே—வேறு மென்றூள் வளைநெகி ழும்மே—கூறுய் தோழியான் வாழு மாறே" எனவும் "சூரல் பம்மிய சிறுகான் யாறே—சூர மகளி ராரணங் கினரே—சார னுட நீவரலாறே—வார லெனினே யானஞ் சுவலே" எனவும் சீர் நின்றுங்குநிற்பப் பொருள் சிதையாமல் எல்லா அடியுந் தடுமாறியவாறு கண்டு கொள்க. பெரும்பான்மையும் நாலடிச்செய்யுட்கணல்லது இப்பொ ருள்கோள் வாராதென்க.

"வாரலெனினேயானஞ்சுவலே" என்புழி அஞ்சுவலேயான் என இறுதிச்சீர் சுற்றயற்சீர்வயிற்சென்று திரிதலிற் சீர்நிலைதிரியா

தென்றல் பொருந்தாதெனின், யான் அஞ்சுவலென நின்முருகு நிற்பவும்பொருள்செல்லுமாகலிற் திரிதலின்மையிற் பொருந்து மென்க.

இனி இவ்வாறன்றித் திரிந்துவருவன உளவேல் அவை புற னடையான் அமைத்துக்கொள்க, "பொருடெரி மருங்கி—னீற்றடி யிறுசீரெருத்து வயிற்றிரியும்—தோற்றமும் வரையா ரடிமறி யான" என்பவாகலின்.

அஃதேற் பெரும்பான்மையும் யாப்பிற்கே உரியபொருள் கோள்களே ஈண்டுச் சொல்லவேண்டியதென்னையெனின், தொடர் மொழி அடிமறிமாற்றெழுதித்த ஏனை ஏழுபொருள்கோளும் பட வருதலின் ஈண்டுக் கூறினெனக. "அறஞ்செய்தான் றுறக்கம் புகும்" "தாயைக்கொன்றனிரயப்புகும்" எனவும் அவர்தந்தசோ றுங்கூறையுமுண்டுத்திருந்தேம் இவளுடனுமையுமுருத்திர னும் எனவும் தந்தையைக்கண்டுதலையின்வணங்கினன் எனவும் முறையானே யாற்றுநீர்ப்பொருள்கோளும் கிரணிறைப்பொருள்கோ ளும் பூட்டுவிற்பொருள்கோளும்படத் தொடர்ந்தவாறு காண்க. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (எடு)

ஙஎ0. பெயர்நிலைக் கிளவியி ஞஅ குரவுந்
திசைநிலைக் கிளவியி ஞஅ குரவுந்
தொன்னெறி மொழிவயி ஞஅ குரவு
மெய்ந்நிலை மயக்கி ஞஅ குரவ
மந்திரப் பொருள்வயி ஞஅ குரவ
மன்றி யனைத்துங் கடப்பா டிலவே.

இதுவும் ஒருசார் வழுவமைதியாகிய ஒழிபு கூறுகின்றது.

இ - ள். பெயர்நிலைக்கிளவியி ஞஅருகுரவுமென்பது பெயர்க்கண் நிலைபெற்ற சொல்லிடத்து ஒருதிணைப்பெயர் ஒருதிணைக்காய் வருவ னவும் என்றவாறு.

அவை ஓரெருத்தை நம்பியென்றும் ஓருகிளியை நங்கை யென்றும் வழங்குதலாம்.

திசைநிலைக்கிளவியி ஞஅருகுரவும் என்பது திசைக்கண் நிலை பெற்றசொல்லிடத்துவாய்பாடு திரிந்து வருவனவும் என்றவாறு.

அவை புலியான் பூசையான் என்னுந் தொடக்கத்தனவாம்.

தொன்னெறிமொழிவயினஅகூஉவும் என்பது அடிப்பட்ட நெறியான் வழங்குதலுடைய முதுமொழியாகிய செய்யுள்வேறுபாட்டின்கண் இயையாதன இயைத்தனவாய் வருவனவும் என்றவாறு.

அவை "யாற்றுட் செத்த வெருமை யூர்க்குயவர்க் கிழுத்தல் கடன்" என்றது முதலாயின. குயவன்சுள்ளியின் எழுந்த புகையானுகிய மேகந் தந்த நீரான் எருமைசாதலிற் குயவற்கு இழுத்தல் கடனுயிற்றென்க. ஒருகாரணம் உள்ளதுபோலக் கூறுகின்றது உண்மைப்பொருளன்றி ஒருவன் இயைபின்றிக் கூறிய சொற்கு எடுத்துக்காட்டாகக்கூறப்படுதலின் இயையாதன இயைத்தனவாய் வருதலாயிற்று.

மெய்ந்நிலைமயக்கினஅகூஉவும் என்பது பொருண்மயக்காகிய பிரேளிகைச்செய்யுட்கட் தினைமுதலாயின திரிந்து வருவனவும் என்றவாறு.

அவை, "எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார்—தொழுதிமைக் கண்ணிணைந்த தோட்டார்—முழுதகலா—நாணிற் செறிந்தார் நலங்கின்னி நாடோறும்—பேணற் கமைந்தார் பெரிது." என்பது முதலாயினவாம். இச்செய்யுட்கட் புத்தகமென்னும்பொருண்மேற் தினைதிரிந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

பிரேளிகையெனினும் பிசியெனினும் ஒக்கும்.

மந்திரப்பொருள்வயினஅகூஉவும் என்பது மந்திரத்தையுடைய தெய்வங்களிடத்தே அதற்குரியவல்லாத சொற்களாய்வருவனவும் என்றவாறு.

இதற்கு உதாரணம் மந்திரநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க.

'அன்றி யனைத்துங் கடப்பா டிலவே' என்பது ஆகிய அவ்வனைத்தும் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவுடையவல்ல என்றவாறு.

இனி இரட்டுறமொழிதலென்பதனுற் டெயர்நிலைக்கிளவியினஅகூஉவுந் திசைநிலைக்கிளவியினஅகூஉவுமென்பனவற்றிற்குமுறையானே தத்தம்பொருளுணர்த்தாது பெயர்த்தநிலைமையையுடைய சொல்லான்வருஞ் செய்யுளும் திசைநிலையான் நிலைபெற்றபெயரான்

வருஞ் சொல்லுமெனப் பொருள்கூறி "ஞள்வாள் கறையடி யானைக் கல்ல—துறைகழிப் பறியா வேலோ ஞரே" என்புழி வேலோ னென்பதூஉஞ் "செழுந்தா மரையன்ன வாட்கண்ணன்" என்புழி வாட்கண்ணென்பதூஉம் வேலியுடையோனென்னும் பொருளும் வாளன்ன கண்ணென்னும் பொருளும் பெயர்ந்து ஒருபெயர்த்சன் மையவாய் நின்றனவுந் தென்னன் வடமன் எனத் திசையான் நீலம் பெற்றபெயரான் வருவனவுங் கடப்பாடிலவென்று சண்டே அமைத்துக்கொள்க. (எசு)

ஈஎக. பழையன கடிதலும் புதியன புணர்த்தலும்
வழுவல கால வகையி னானே.

இது நூல்பற்றி நிகழ்வதோர் வழுவமைதி கூறுகின்றது.

இ - ள். அக்காலத்து உண்மையாற் தொல்லாசிரியர் நூலுள் விதிக்கப்பட்டனவற்றுட் சில இக்காலத்து இன்மையான் அவற் றிற்கு யாம் இலக்கணங் கூறுது அவற்றை விடுதலும் அக்காலத்து இன்மையான் அந்நூலுள் விதிக்கப்படாதனவற்றுட் சில இக்கா லத்து உண்மையான் அவற்றிற்கு யாம் இலக்கணங கூறுதலும் முன்னோர் நூலின் முடிபுநோக்கி முறையானே குன்றக்கூறலும் மிகைபடக்கூறலுமாகிய குற்றமாகா, காலக்கூறுபாட்டான். எ - று.

உ-ம். கேட்டையென்ரு நின்றையென்ரு காத்தையென்ரு கண்டையென்ரு என்னுந் தொடக்கத்தன அக்காலத்து உண்மை யின் அவற்றிற்குத் தொல்லாசிரியர் இலக்கணங் கூறினராயினும் இக்காலத்து இன்மையான் விடுக்கப்பட்டன. சரி சமழ்ப்பு சட்டி சழக்கு என்னுந் தோடக்கத்தன அக்காலத்து இன்மையின் அவற் றிற்குத் தொல்லாசிரியர் இலக்கணங் கூறராயினும் இக்காலத்து உண்மையான் இலக்கணங் கூறப்பட்டன. பிறவும் இவ்வாறேகாண்க.

ஈஎஉ. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாகலிற்.
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுங
தெற்றென வுணர்த்த லெள்ளியோர் கடனே.

இஃது அதிகாரப்புறனடை கூறுகின்றது.

இ - ள். சொற்கடோறும் இத்தன்மையையுடைத்து இச்சொல் லினது இயல்பு என்று அவையமுழுதும் எஞ்சாமற் தனித்தனியே

எடுத்து இலக்கணங் கூறத் தொடங்கின் உறுகாண்டல் அரிதாகலின் சண்டு இலக்கணங் கூறிப்போந்த சொற்களது இயல்பானே இலக் கணங் கூறுத சொற்களையும் ஒப்பநோக்கி விளங்கி அறிதல் துணிவு டையோர் கடன். எ - று.

வரலாறு;—யானும் நீயும் அவனுஞ் செல்வேம் என ஏனையி டத்திற்கு உரிய சொற்களுந் தன்மையோடு இயைந்த வழித் தன் மையான் முடிந்தாற்போல அவனும் நீயுஞ் சென்மின் எனவும் "ஓண்டேவி நாராய்நின் சேவலு நீயுமாய்—வண்டேதும் பூங்கானல் வைகலுஞ் சேறிரால்" எனவும் படர்க்கைச்சொன் முன்னிலை யோடு இயைந்தவழி முன்னிலையான் முடிதலும் இந்நாழிக்கு இந் நாழி சிறிது பெரிது என உடனிற்கற்பாலவல்லாத சிறுபான்மை யும் பெரும்பான்மையும் உடனிற்றலும் வடகக்கண்ணினை வல் லொற்று அடுத்தவழி வடகநாட்டிற் பிறந்த கண்ணினைவும் வட கங்கண்ணினை மெல்லொற்று அடுத்தவழி வடகற்குமகனுகிய கண்ணினைவும் பொருள்படுதலும் "ரதா கொடுவெனு மூன்று முறையே—யிழிந்தோ ளெப்போன் கிக்கோ னிரப்புரை" ஆதற்கு உரிய மரபினுகலும் "இவன்யா ரென்குவை யாயி னிவனே" என்னும் புறப்பாட்டினுள் இவனென்பது முன்னிலைப்படர்க்கை யாய் நிற்றலும் இன்னேரன்ன பிறவும் இப்புறனடையானே அமைத்துக்கொள்க என்பதாம். (எஅ)

ஐந்தாவது பொதுவியல முற்றிற்று.

I. V. SWAMINATHAIYER LIBRARY
INUVANMIYUR, MADRAS-41

இரண்டாவது சொல்லதிகாரம் முற்றிற்று

அன்பளிப்பு

குற்றமென்னெனி? ஆன்றோர் ஆங்காங்குக் கூறிய கடவுள் வணக்கத்திற் கடவுளின தலைமை அனைத்தும ஒருங்கு சொலலாது இரணடொரு குணமாத்திரையே விதந்து தலை மை கூறுவது பெருவழக்கேயாம் முனிவரா இஃது உணரா தவரா! இதனற் "குற்றமே தெரிவா குறுமாமுனி— சொற்ற பாவினும ஓர்குறை சொலலுவா" என்பதற்குத் தம் மை இலக்கியமாக்கினரன்றே! நான்காவது "வணங்குதல சி "றபபுவினையாவதலலது பொதுவினையாகாமையின் வணங்கி "யென்பது" குற்றமெனறனா. "மனமொழிமெய்களின் வணங்குது மகிழ்ஙதே என்புழி ஓபபுமைபற்றிக் கூறியதே யாம" எனத் தாமே கூறும இவா "மனத்தாற் துணிவு "தோன்ற கினைத்தலும மொழியாற் பணிவுதோனற வாழ்த்த "லுங் தலையாற் தணிவு தோனற இறைஞ்சலும அடஙகப "பொதுப்படவணங்கி" என்று கூறிய ஆசிரியாமேற் குற்றஞ் சொல்வதென்னெனி? சிருஷ்டியுங திதியுஞ் சங்காரத்தில் ஒடுங் குவதாற் சங்காரத்திற்கு முதன்மை கூறுஞ் சுத்தசைவசித் தாந்த சாகரமாகிய யோகீஸ்வரா கினைத்தலுங் துதித்தலுஞ் சோந்து அநதாப்பித்து நடைபெறும் வணக்கத்திற்கு முதன் மைகொடுப்பதே முறையாகும். வில வணக்கந தீது குறிப பதுபோலச் சொல்வணக்கம நன்மை குறிக்குமே. ஆதி யில் வஸ்தற் பொருளிற் பிறநத வணக்கம் ஒப்புமை யால் இபபோது மனமவாக்குக்காயம மூனறற்குஞ் செலலு மென்று கொள்க.

நு. "எணபெயா முறைபிறபு" எனனுஞ் சூத்திரத்தில "எணணுதற்கும் பெயா கருவியாதலின அதனை முற்கூ "றுதது முறையன்று. எணணும முறையும போலவனவற் "றுல் ஒருபயனின்மையின, அவற்றை வகையுட் சேர்த்துக் "கருவிசெய்தல பயனில கூற்றுமாறறிக. போலியெழுத் "தென ஒன்றிலலியென்பது தொல்காப்பிய முதற்சூத்திர "விருத்தியுட் காணக" என்று மூன்று குற்றமேற்றினர். இஃது இலக்கணவிளக்கச்சூறாவளியன்று நன்னூ கருப் பபப்படையோடி சார்தற்பாலதென்றுவிடுக்க